Series:

புத்தகம் ~~16~~

16

இப்புத்தகத்திற்கு கெடு நாள். 8

10.00

S. JOSEPH'S
CHAMPION REEF
TAMIL NOVELS LIBRARY

S. JOSEPH'S
CHAMPION REEF
TAMIL NOVELS LIBRARY

10/-

# மனமோஹன மாணிக்கம்

என்னும்

## மஹா விந்தையான மாயக்கதை.

சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ் உயர்தரக் கலாசாலை வருப்புகளி ...ன்று விடாமல் தமிழ்ப்பாஷா நிபுணத்வ பரிசுபெற்றவரும், ஆங்கில ...த்துவசாஸ்திர பரிசுபெற்றவரும், யூநிவர்ஸிடி பி. ஏ. பரீக்ஷையில் தமிழ் ...முதல்வகுப்பு கௌரதா பட்டம்பெற்றவரும், பண்டிதராலும் பத்திரிகைக ...ாலும் மிகவும் சிலாகிக்கப்பட்டு சென்னை யூநிவர்ஸிடி பி. ஏ. பட்டப் பரீ ...க்ஷைக்குப் பாடபுத்தகமா யமைக்கப்பட்ட ஸ்ரீ கிருஷ்ணசைதன்ய சரித்திர ...லாசிரியரும் ஆங்கில "சேஜ் ஆப் நாராயணவரம்" என்னும் கிரந்தத்தை ...யெற்றினவரும், மதுரைத் தமிழ்ச்சங்க மஹா வித்வானும் ஆகிய

T. பக்தவத்ஸலம், பீ. ஏ., எம். பி. பீ. ஐ.

...அவர்களாலியற்றப்பட்டு,

மேண்டு. பத்மநாபநாயுடு அவர்களால்

பிரசுரிக்கப்பட்டது.

---

சென்னை: புரசை

ரா. விவேகானந்த அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

[...ll Rights Reserved.]

[~~விலை ரூபா 1-4-0~~]

TO

**T. CHELVAKESAVARAYA MUDALIAR, ESQ., M. A.,**

*Professor of Tamil Language and Literature,*
*Pachaiyappa's College, Madras,*
*Member of the Dravidian Board of Studies,*
*University of Madras,*
*and a Chief Examiner in Tamil*
*to the University of Madras,*

**THIS BOOK IS DEDICATED BY THE AUTHOR.**

என்னுடைய தமிழ் நடையை வியந்து, இத்தகைய நூல்களியற்றும்படி, பல்காலும் பல்விதத்தானும் என்னை ஊக்கிய ஸ்ரீமான். தி. செல்வக் கேசவராய முதலியார், எம்-ஏ,

(பச்சையப்பன் காலேஜ், தமிழ்ப்பாஷை உபாத்தியாயர், சென்னை யூநிவர்ஸிடி போர்ட் ஆப் ஸ்டடீஸ் அங்கத்தினர், தமிழ்ப்பாஷை முக்கிய பரீக்ஷகர்) அவர்களுக்கு,

என்னுடைய நன்றியறிதலுணர்ச்சியை அறிவிப்பதற்காகவும், அன்னோருடைய பெருங்கல்வி மாட்சி விஷயமாய் எனக்குண்டாகிய பெருமதிப்பைக் காட்டுதற்காகவும்,

இந்நூல்

கிரந்தகர்த்தாவாகிய என்னால்

அன்னோர்க்கு அர்ப்பணஞ் செய்யப்பட்டிருக்கின்றது.

T. B.

# முகவுரை.

ஸ்ரீமாந் செல்வக்கேசவராய முதலியாரவர்கள், எம். ஏ., இவ்வித நூல்களியற்றுதற்கு யான் அருகனென்று என்னைத் தூண்டினமையே இஃதயா னெழுதியதற்கு முக்கிய காரணம்.

இரண்டாவது,—ஸ்ரீமான் மெண்டு-பத்மநாபநாயுடு அவர்கள், என்னுடைய வேறு சில நூல்களைப்பார்த்து, அவைகளை மிகப்பெரிதும் பாராட்டி, தமக்காக ஒரு கதைப்புத்தகம் எழுதித்தரும்படி கேட்டுக்கொண்டனர். அவருடைய பெருந்தகைமையும், நல்வழியில் மனஞ் செலுத்துகையும், இலக்கிய அபிவிர்த்தி விஷயத்தில் ஊக்கம்வைத்து, தேசக்ஷேமத்தை விரும்புகையும், எல்லாராலும் பாராட்டத்தக்கன. அதுவிஷயத்தில், நான் மாத்திரமன்று, தமிழ் நாட்டாரனைவரும் பாஷாபிமானிகளோவ்வொருவரும், அவருக்கு வந்தனஞ் செலுத்த வேண்டி யிருக்கின்றது.

ஸ்ரீமாந்-நாயுடு அவர்கள் தம்முடைய வியாபாரத்தோடுங் கூட, இத்தகைய சற்காரியத்தை இதோடுவிடாது மேலும் மேலும் கைப்பற்றுவாரென்பதே எனது பிரார்த்தனை.

வெகு அவசரத்தில் எழுதி அச்சிடப்பட்ட நூலானமையின், இதன் கண் அங்கும் இங்கும் அரிதாய் ஏதேனும் பிழைகள் காணக்கூடும். அவைகள் வெகு அற்ப சொற்பமானவையாகிறபடியாலும், வாசிப்போர்க்கு ஆங்காங்கே விளங்கக் கூடுவனவாகிற படியாலும், தனியாக, பிழைதிருத்தமொன்று பதித்தல் அனுவசியமெனக் கருதப்பட்டது. ஆயினும் சில பிழைகளை மாத்திரம் இதில் காட்டுகிறேன்.

மிஸ்டர். A. ஸ்ரீநிவாஸலு நாயுடு என்பார் சென்னை யூநிவர்ஸிடி எல். எம். எஸ். வைத்ய வித்யாபட்ட பரீக்ஷையில் சென்னை ராஜதானியில் முதலாகத் தேறினவர். இதுவரையில் வெளியாகிய தமிழ் நாவல்களில் அனேகமாய் ஒன்றுகூட விடாமல் அவர் வாசித்திறிந்தவர்! அவ்வவற்றின் நுட்பங்களை அழகாயறிந்துள்ளவர், அவர்! இக்கதைப் புத்தகம் அச்சுவேலை முடிவுறுஞ் சமயத்தில் தாம் அதைப் பார்க்கவேண்டுமென்று கேட்டனர். அதற்கிணங்கி யான் அச்சான பாரங்களை அவரிடம் கொடுத்தேன். அவர் முழுதும் பார்

த்துவிட்டு, ஆனந்தத்தோடு திரும்பிவந்து, "எத்தனையோ கதைப் புத்தகங்களைப் பார்த்திருக்கிறேமே, இஃதென்ன அவ்வளவு விசேஷமாயிருக்குமா என்று உண்மையில் நான் உள்ளத்தில் சிறிது அவமதித்தேன்! படித்துப் பார்த்தபின் இதைப்போல் பாரகாவிய மில்லையென்று பண்புடன் அறிந்தேன்! சொல் நடையும் பொருளழகும் சொல்ல முடியாத வனப்புடன் சொகுஸாக விளங்குகின்றன! ஆங்கில கதாப்பிரசங்கங்களில் அரசுரிமைவாய்ந்த ஸர்வால்டர் ஸ்காட் என்பாரைப்போல் இயற்கை வனப்பும், நாடகப்புலவர்களில் சக்கரவர்த்தியார்போன்ற ஷேக்ஸ்பியர் என்பாரைப்போல் பாத்ரவர்ணனு விசேஷமும் இக்கதைப் புத்தகத்தில் அமைந்துள்ளன" என்று கூறித் தமது அருமையான நல்ல அபிப்பிராயத்தைத் தந்தனர். அஃது இதன்பின் ஆங்கிலத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது. ம-ா-ா-ஸ்ரீ நாயுடு அவர்களுடைய உண்மையான சிறந்த உதாரத்துவத்திற்கு யான் மனமார்ந்த வந்தனம் மகிழ்ச்சியோடு செலுத்துகின்றேன்.

இங்ஙனம்,

T. பக்தவத்ஸலம்,

பி. ஏ., எம். பி. பி. ஐ

S. JOSEPH'S
CHAMPION REEF
TAMIL NOVELS
LIBRARY

# An Eulogium.

It was with the deepest interest and the greatest joy that I went through **your literary work** (in a special sense) though termed a novel, titled "Manamohana-Manikkam." I cannot but be struck with wonder at the consummate skill exhibited in maintaining a sustained vigour throughout this complex plot. To my mind, the style, the figures of speech, the sequence of apt words and the unstrained fun, the mimicry of the **still** alive customs and observances of human life, the higher natures in relief on a background of low, debasing and degenerate life of the majority of populace, the impressive teachings against animal food and its concomitant effects, and finally the subtle lessons and morals taught go a long way to place the reader on a better platform than that he occupies at present. Yet, to crown all, the new departure of the plot from the old and stereotyped prominence of kings and kingdoms, and the free poetic imagination place the text of this book above all the present day novels; and I may add without flattery that there runs throughout this literary work a combined vein of Scott's lucid description of nature and Shakespeare's masterly delineation of character.

An inquisitive mind which plies into the causes and effects of every noteworthoy thing cannot fail to find a world of most useful information (though scattered) throughout this little book and cannot but be impressed with the real value of the book and the ability of the novelist.

On the whole, it will serve as a useful addition to a Tamil library and as a text book for a high school class.

A. Srinivasulu Naidu.

கிரந்தகர்த்தாவாகிய T. பக்தவத்ஸலம், பி. ஏ., அவர்களா லியற்றப்பட்டு இந்நூலின்கண்ணுள்ள இலக்கியப் பாட்டுகளின் குறிப்பு:

| | | |
|---|---|---|
| 82 | பக்கம் | 'வான்றுலங்கு' |
| 145-7 | ,, | 'பொன்னனைய்' முதல் பத்து செய்யுள்கள் |
| 149-151 | ,, | 'அருள் மழை' |
| 166-7 | ,, | 'மல்லிகையே' 'அண்ணாவோ' |
| 185 | ,, | 'பொங்குகின்ற' |
| 190-91 | ,, | 'நாமாவளி' 'இங்கிலீஷ் நோட்' |
| 203-4 | ,, | 'ஆசையெனும்' தொடங்கி மூன்று செய்யுள்கள் |
| 21[illegible]-20 | ,, | 'உன்னைவிட' முதல் ஏழு செய்யுள்கள் |
| 244 | ,, | 'நல்ல விந்த' 'சேமை,' 'ஊறுகாய்' |
| 254 | ,, | 'அஞ்சிறைய' |
| 254-5 | ,, | 'வாணாளின்' முதல் ஐந்து செய்யுள்கள். |
| 289-90 | ,, | 'என்னை' என்று தொடங்குவதும் அடுத்த தொரு செய்யுளும். |
| 318 | ,, | 'கண்டென' |

கடைசி பக்கத்தில் இரண்டு மங்களப்பாட்டுகள்.

இலக்கிய வழிவாராது கேவல பாத்திரங்கள் கூறும் பாட்டுகளை இங்குக்குறிக்க வில்லை. புத்தகத்தில் அவைகளை ஆங்காங்கே கண்டு கொள்க.

---

(1) 13-பக்கத்தில் 1-வரி 'ப்ரேஸர்' என்பது 'ப்ரேஸஸ்' என்றும், 'பென்னூலாகிய' ஒன்பது 'பொன்னூலாகிய' என்றும்

(2) 15-பக்கம் 27-வரி 'ஜவளி' என்பது 'ஜாவளி' என்றும்

(3) 31-பக்கத்தில் 27-வரியில் 'கேருடா' என்பது 'கேளுடா' என்றும்

(4) 43-பக்கத்தில் 17-வரி 'திந்து' என்பது 'திரிந்து' என்றும்

(5) 44-பக்கம் கடைசிவரி 'அளவிள' என்பது 'அளவின' என்றும்

(6) 169-பக்கத்தில் 'ஜாமீன்' என்பது 'ஜமீன்' என்றும்

(7) 172-பக்கத்தில் 24-வது வரியில் 'சிறுப்பாய்' என்பது 'சிறப்பாய்' என்றும்,

(8) 201-பக்கத்தில் 26-வது வரியில் 'உதுயர்' என்பது 'உறுதுயர்' என்றும்

(9) 207-பக்கத்தில், புட்நோட்டில் 'Hee' என்பது 'Tele' என்றும்

(10) 254-பக்கத்தில் 24-வது வரியில் 'அநதோ' என்பது 'அந்தோ' என்றும் இருத்தல் வேண்டும்.

உ

ஸ்ரீராமஜயம்

# PUBLISHER'S PREFACE.

நான் நடாத்திவரும் வர்த்தகத்தோடு நல்வழிப்பாட்டைக்கருதி உலோகோபகாரமாய் லௌகீக வைதீக நன்னெறிகளை சமயோசிதமாய், கதாலங்கார நடையாக வியற்றிப்பிரசுரித்தல், அவைகளை வாசிப்போரனைவருக்கும் எனக்கும் பொதுவில் நன்மைப்பயக்கக்கூடியதாகுமெனக்கருதி, தமிழ்ப்பண்டிதர்களைக்கொண்டு அம்பர்லினை, சாரசநேத்ரி, முதலான சிலசெந்தமிழ்நூற்களை எழுதுவித்து அச்சிட்டுப்பிரசுரிக்க முன் வந்த நாள்முதலாய் ஏனையோராலியற்றப்பட்டுலவும் பற்பல நாவல்களாகிய சிறந்த தமிழ்க்கதாபுத்தகங்களை வாங்கி வாசிப்பதே என் ஒழிவான நேரங்களின் வேலையாகக்கொண்டிருந்தேன். அது சமயங்களில் ஸ்ரீ கண்ணபிரானே இக்கலியுக அவதாரங்கொண்டதென எண்பிக்கும், "ஸ்ரீ கிருஷ்ணசைதன்யஸ்வாமிகள் சரிதம்" என மகுடம்பூண்ட, திவ்ய செந்தமிழ்க் கிரந்தமொன்றைக்கிடைக்கப்பெற்று ஆவலோடுமதனை வாசிக்கத்தொடங்குமுன் அக்கிரந்தமானது ஆங்கிலத்தில் சென்னை யூநிவர்சிடியில் பி. ஏ. எனும் வித்யார்த்தி பட்டம் பெற்றவரும், தமிழ்ப்பாஷையில் மஹா பாண்டித்யமுற்றவருமாகிய ஸ்ரீமான். T. பக்தவத்ஸலம்பிள்ளை, பி ஏ., எம், பி பி. ஐ., மதுரைத்தமிழ்ச்சங்கவித்துவான் அவர்களாலியற்றப்பட்டதெனக்கண்டு, அவ்வரிய கல்வியாளர் எமக்கும் அன்பராயிருப்பதை யுன்னி, மிக்க அவாவோடும் அக்கிரந்தத்தை வாசித்து அதன்கண்ணிகழும் இலக்கணவிலக்கியங்களாதி சொன்னயம் பொருணயம் சமயோசிதமான திவ்யவர்ணனைகணிறைந்த செந்தமிழ்நடையை வியந்து வியந்தின்புற்று, அன்னவரைக்கொண்டு யானுமோர் கிரந்தத்தை எழுதித்தரப்பெற்றுப் பிரசுரிக்கும்படியான பாக்கியத்தைப்பெறுவனோவென்று சிந்தித்தவனாக விருந்தேன். சில தினங்களுக்குப்பின் மேலவரை யான் றுணிபுகொண்டு சந்தித்து என் கருத்தை விண்ணப்பிக்க, அவர் பேரன்புபூண்டு அங்கிகாரஞ்செய்து, "தமிழ் மணங்குன்றியுள்ள இக்காலத்தில் தமிழைவளர்க்குந் தகையாளர் முன் வருதல் சந்தோஷிக்கத்தக்கதே" என்னுங்குறிப்பை விளக்கி மகிழ்ந்தவராய், தம்முடைய சுய அலுவல்களையும் தேக சிரமத்தையும் பெரிதும் பாராட்டாமல் **மனமோஹன மாணிக்கம் அல்லது மஹாவிந்தையான மாயக்கதை** என்னு மிவ்வரிய செந்தமிழ் நாவலை, கற்றோருங் கவிஞர்களும், கல்விகற்போரும் புகழ்கூறும்படியாகக் கல்விக்களஞ்சியமாக இயற்றி எமக்குதவி, "பூவோடுஞ்சேர்ந்த நாரும் மணம்பெறும்" என்னுமாறு அப்பெருந்தகையாளரது கல்விச் சிறப்போடு அதனை யச்சிட்டுப்பிரசுரித்த எனது பெயருக்கு மோர்சிறப்பைப் பெறச்செய்த அவருக்கு (ஸ்ரீமான் T. பக்தவத்ஸலம் பிள்ளை B. A., M. B. P. I., அவர்கட்கு) எனது மனவாக்குக் காயங்களானும் வந்தனஞ் செலுத்துகின்றேன்.

23-ஜெனரல் முத்தியா முதலி தெரு, இங்ஙனம்:

சென்னை 25-11-1911

**மேண்டு. பத்மநாபம்.**

# மனமோஹன மாணிக்கம்

அல்லது

## மஹா விந்தையான
## மாயச்செய்கை.

---

### முதலாவது அத்தியாயம்.

---

மன்மதபுரம். ஜகன்மோஹனசிங்காரம்.
மாரியாத்தாளென்கிற மாயக்கிழவி.

மாலைப்பொழுது மணியோ நான்காய் விட்டது! அன்று காலையிலிருந்து காய்ந்த காய்ச்சலும் 'தீய்ந்த' தீச்சலும், யாராலும் சொல்லமுடியாது! அப்பப்பா! அன்று சூரியன் மிகவும் கொடூரமுள்ளவனாயிருந்தான்! காலை ஐந்தரை மணிக்கெல்லாம் செவந்த முகத்தோடு எரிந்த உள்ளத்தைக் காட்டி வெளியேவந்த வீரச்சூரியன் சலிப்பு வெறுப்பில்லாமல் ஒரே எரிப்பாய் எரித்துப் பூவை வதக்கி, இலையைப்பொசுக்கி, உடலைவறுத்து மஹா உக்கிரமாக மாலை நான்கு மணியாயும் இன்னும் காய்கிறான்! இன்று வெய்யில்போல் இவ்வருடம் ஒருநாளும் இருந்ததே கிடையாது! ஆனாலும் இப்பொழுது தான் அந்த மூலையில் அழகாக மேகம்புறப்படுகிறது! ஆம்! கொண்டல் கொண்டலாக மேகம் ஒன்றின்மீ தொன்றாகக் குவிந்து கவிந்து மேலும்மேலும் வந்து கொண்டேயிருக்கின்றன. சரி, இப்போது மழை பெய்யுமெனத்தோன்றுகிறது! ஒத்தாசையாகக் காற்றும் உடனே புறப்படுகிறது! ஆயிற்று! மேகங்கள் வந்துவிட்டன;

சூரியனை மறைத்து விட்டன; ஆகாயத்தை மூடிவிட்டன! ஒரு தூற்றல்—இரண்டு, மூன்று நான்கு—படபடவெனத்தொடங்கிய மழை சடசடவெனப்பெய்து, தொளதொளவெனக் கொட்டிச் சளசளவெனப்பொழிகின்றது. பளிச்சென்ற ஒருமின்னலும், 'படக்' கென்ற ஒரு இடியும், மழையை முடித்துக்காற்றை நிறுத்தி வெய்யிலை வெளியே விட்டது! கரகரவென்று காலையிற் புறப்பட்ட சூரியன் ப்ரபரவென்று உச்சியில் வந்து வறுத்துக்கொளுத்தி வாயாட்டங் காட்டிய பின்னர் மழையினால் மதம் அடங்கியும், மீண்டும் கறுத்த மேகத்திடையில் முறுக்காய்ப் பிரகாசிக்கிறான்! ஹா! ஹா! அச்சமயம் அங்குதோன்றிய அழகும் பார்ப்பவர் கண்களைப் பறித்துப் போகும் பரவசமும் என்னவென்று கூறலாம்!

நாம் இப்போது சொல்லப்போகும் கதை மன்மதபுரம் என்னும் மஹா பட்டணத்தில் தொடக்கமாகின்றது. மழைவிட்டதும் மணியோ சுமார் நாலரையானதும், அவ்வூரில் ஒரு புறத்தில் அரிய பாதையொன்று அழகாய் விளங்கிற்று. அப்பாதையின் இருபுறத்திலும் அணியணியாகத் தென்னைமரங்கள் உன்னதமாய் வைக்கப்பட்டிருந்தன. அந்த சாலையும் இருபுறம் அழகியசோலையும் அனைவர் மனதையும் அப்படியே ஆனந்தத்தில் அழுத்தின. மேகமாகிற விமானத்தில் ஏக சக்கிராதிபதியாய் விளங்குஞ் சூரியனுக்கு இரண்டு புறமும் சாமரைகள் வீசுவதுபோல் இனிய தென்னைகள் கனிவுடன் விளங்கின. சுற்றியுள்ள மேகத்தின் சுந்தரக் கருமையும், சூரியன் நடுவே காரியங்கொண்டு செம்பொன் உருக்கிய சிவந்த வட்டமெனச் சிங்காரத்தோடே சிறந்து விளங்குவதும், மாலைப்போது மஞ்சள் வெய்யில் பச்சைமரத்தின்மீது பரந்து நாட்டியஞ்செய்வதும், மழையின் ஈரம் அனைத்திற்கும் 'வார்னிஷ்' பூசி வனப்பங் கொடுப்பதும், ஹா! ஹா! கண்கொண்டு பார்க்க முடியாதனவாயிருந்தன!

அந்த சிங்காரவேளையில், மன்மதபுரத்தின் அந்த சிங்காரப் பாதையில், அழகிய பூங்கொடியோ, அற்புத மின்னற்கொடியோ, அபரஞ்சி 'வார்ப்படமோ', ஆனந்தத் திருவுருவோ, அருள்மயமாம் பொருள்முடிவோ, அன்பே திரண்ட அவதாரத்தோற்றமோ என்று ஒவ்வொருவரும் புகழும்படி ஒய்யார நடையுடன் ஒரு மாது 'ஜல்'லென நடந்து மெல்லெனப் போகிறாள்! அவள் வயது பதினேழுக்குச் சிறிது அதிகப்பட்டதாய் காண்கினும், பதினெட்டு முடிந்ததென்று எவருமே சொல்லார்! அவள் நிறம் எலுமிச்சம்

பழத்தை நகைத்து, முகம் தாமரையைப் பகைத்து, கூந்தல் மேகத்தை யிகழ்ந்து, அதரம் கொவ்வையைச் சிரித்து, எல்லா விதத்தாலும் அழகிலே மிகுந்த பவழக்கொடியாய் அவள் பிரகாசிக்கிறாள்! இவ்வளவு சுந்தரரூப சுகிர்த மோகினியாய், ஏன் அவள் அந்த வழியே தனியாகப்போகவேண்டும்? அழகில் ஒப்புவமையில்லாத அபரஞ்சியாய் அவள் விளங்கியபோதிலும், ஆபரணம் அதிகமாய் அவள் பூட்டிக்கொள்ளவில்லை. கழுத்தில் ஒன்றும் காதில் ஒன்றும். கையில் ஒன்றும், காலில் ஒன்றுமாக நகைகள் காணப்பட்டனவே யன்றி, இக்காலத்தில், கணக்கு வழக்கில்லாமல் ஸ்திரீகள் நகைகளைச் சுமப்பதுபோல் அவள் செய்யவில்லை. காதில்போடும் கொப்பை தடைப்பக்கட்டையென்றும், முருகை பச்சை குளோப் என்றும், கொலுசை விலங்குச்சங்கிலி யென்றும், கத்திரிப்பாவலைக் கடைகெட்ட முறமென்றும், புலாக்கை ஏழக்குச்சலியென்றும், ஜிமிக்கையை அரைப்படியென்றும், அலக்ஷியமாகவே அவள் பாவித்ததாய் அவளுடைய முகச்சைகை முறையாகக்காட்டியது. மெல்லிய சல்லாத்துணியை உல்லாஸமாக அணிந்து அவள் போவதைக்கண்டால்; அந்த வேளையில் யாரும் நடைபாடாத அந்த பாதையில், ஈரத்தையும் கவனியாது, இனிமேல் ஒருவேளை மழைவருமோ என்பதையும் சிந்தியாது தன்னந்தனியாய்ச் சின்னஞ் சிறியவள் உன்னதமாய் நடப்பதை யாவரேனும் கவனித்தால், "ஹர ஹர! ஹரி ஹரி! இந்தப் பெண்ணுக்கு எனிந்தத் தலைவலி; திருவலி" என்று நினையாமலிரார்! என்னவோ ஒரு காரியம் வெகு முக்கியமானது, தள்ளமுடியாதது, அவசியம் செய்தே தீரவேண்டியது இருந்துதான் இவ்விதம் இவள் நடந்துபோகிறாள் என்று ஒவ்வொருவரும் நினைக்க நியாயமிருந்தபோதிலும், அது விசனமான சங்கதியாயிராது, சந்தோஷகரமானதாகவே யிருக்கவேண்டுமென்பது அவளுடைய உற்சாகப் போக்கினாலும், உன்னத நடையினாலும் நன்றாகவிளங்குகின்றது! தகாத நடக்கையை முன்னிட்டு, அகாதச் செயலில் ஆவல்பற்றித்தான் அவள் செல்கிறாள் என்று சொல்வதற்கும் அவளுடைய இயற்கைப் பெருந்தன்மையும், அறநெறிவழாத அமைதியுடைமையும் இடங்கொடுக்கவில்லை.

இப்படி அவள் சிறிதுதூரம் சென்றவுடனே அவளை யெதிர்நோக்கி ஒரு வயதுசென்ற கிழவி வெகு அவசரமாய் நடந்து வந்து,

"ஏன்! அம்மா! நீ இப்போது எங்கு செல்கின்றாய்? உன்னைத்தேடி ஊரெல்லாமலைந்து, இப்போதுதான் எதிரே கண்டேன்! என்ன சமாசாரம்?" என்று கேட்டனள்.

"என்ன சமாசாரம்?" என்று கேட்கும்போதே கிழவிக்குக் கண்சிவந்து உடல்நடுங்கி ஒருவித துடிதுடிப்பும் பதைபதைப்பும் அவள் தேகத்தில் காணப்பட்டன. சாதாரண விஷயமாயிருந்தால் அவ்வாறு அவள் ஆவேசங் கொள்ள வேண்டியிராது என்று அங்குயாவராயினு மிருந்திருந்தால் அவசியம் அறிந்திருப்பார்கள். கிழவிக்கு வயதோஎட்டும் எண்பதுமாக இருக்கலா மென்று யூகிக்கக் கூடும். உடல் திரைந்திருந்தாலும் உள்ளம் உறுதியாக இருந்தது. மயிர் நரைத்திருந்தாலும் கண் கல்மஷ மற்றிருந்தது. அவளுக்குக் கால் நடையும் தளரவில்லை, கைவலிமையும் குறையவில்லை. மன்மதபுரமென்னும் மஹாபட்டணமுழுமையும், "மலைவிழுங்கி மாரியாத்தாளுக்குக் கதவு சுண்டாங்கி" என்பதுபோல் அவளுக்கு வெகு சிறிதும் வரவு செலவில்லை. ஒரு நிமிஷத்தில் அவள் ஊரைச்சுற்றி ஊரெல்லாங்கண்டு, கலகம் மூட்டிக்கலைசெய்து விடுவாள்! ஆனாலுமோ, அவளுக்கு மனம் மாத்திரமிருந்தால் அவளைப்போல் நன்மை செய்யக் கூடியவர்கள் நானிலத்தில் கிடையார்! ஆவதும் அவளாலே; அவ்வூரிலே, அழிவதும் அவளாலே! ஆகையினாலே, மாரியாத்தாள் என்று பெயர்படைத்த அவளுக்கு எல்லாவீட்டிலும் வெல்கம் (நல்வரவு) கூறி, நாரதமுனிக்கு நாடெங்கும் மரியாதை செய்ததுபோல், அவளைப்போற்றிப் புகழ்ந்து, அவள் கோபத்திற்கும் வருத்தத்திற்கும் பாத்திரராகாமல், அவளிடம் 'நல்லதனம்' செய்துகொள்ள ஒவ்வொருவரும் முயலுவார்கள்! தப்பித் தவறியாவராயினும் 'அப்படி யிப்படி' நடந்து விடுவார்களானால், அவர்கள் கதி அதோகதிதான்! இப்படிப்பட்ட 'செப்படி'வித்தைக்காரிக்கு, எதிரேகண்ட இளவரசியிடம் பேசும்போது, ஏன்தேகம் நடுங்கவேண்டும், ஏன் நாக்குகுளறவேண்டும், ஏன் சுற்றுமுற்றும் பார்த்து, விளங்காய்ச்சண்டையில் தோற்ற விளையாட்டுப்பையனைப்போல் அவள் விழிக்கவேண்டும்? இவ்விததோற்றங்கள் அக்கிழவியிடம் காணப்பட்டபோதிலும், அவள் மனதை வெகுசீக்கிரத்தில் ஒருவழிப்படுத்தி, அலங்காரச் சிங்காரியாய் அவளுக்கெதிரில் நிற்கும் பெண்ணரசைநோக்கி,

"கண்ணரசே, என் பெண்ணரசே! நீ பிறந்த பெருமையும், நீ வளர்ந்த அருமையும், நீ தொட்டிலில் படுத்தநாள் முதலாய் கட்டி

யில் படுக்கும் நாள்வரைக்கும் எல்லாம் தெரிஞ்ச எனக்கல்லவா தெரியும்? ஜகன் மோஹன சிங்காரம் இன்னு உனக்கு பேர்வைச்சி ஊருக்கெல்லாஞ் சோறுபோட்டு உற்றார்க்கெல்லாம் உணவளிச்சி என்ன சந்தோசப்பட்டும் இப்படியா விதிச்சான்! உங்க அப்பா ராஜா ஆச்சே! ஐயோ, அம்மா அ அ அ”

“ஆயா! நீயேன் வருந்துகின்றாய்! இறைவன் விதித்ததில் இம்மியளவும் தவிர்ந்து நடக்குமா! நீகாலங்கண்ட ‘ஆயா’ ஆயிற்றே இங்கு இவ்வளவு அவசரமாய் எங்கு ஓடிவருகின்றாய்?” என்று ஜகன் மோஹன சிங்காரம் மெல்லிய குரலிற் சல்லாபம் பொருந்தப் பேசினாள்.

“உன்னைப் பார்க்கத் தாண்டியம்மா ஓடிவந்தேன்” என்று நடுக்கி நடுக்கிக் கிழவி முடுக்கைமாத்திரம் விடாமல் துடுக்காய்ப் பதில் கூறினாள்.

ஜகன். “என்ன விசேஷம்?”
கிழவி “காரியமிருந்து தான்”
ஜகன். “இவ்வளவு அவசரமாய் வருவதேன்?”
கிழவி “இவ்வளவு அவசரமாய்ப் போவதேன்?”
ஜகன். “வேலையாகத்தான் போகிறேன்”
கிழவி “வேலையாகத்தான் வருகிறேன்”
ஜகன். “ஆயா, சொல்லு சீக்கிரம்!”
கிழவி “குமரி! நில்லு பார்க்கலாம்!”
ஜகன். “வேலையிருக்கிறது!”
கிழவி “முடங்கியிருக்கிறது!”

இம்மாதிரியாக இவர்களிருவர்க்கும் எட்டிபோட்டியாகப் பேச்சு நடந்து கொண்டிருக்கும்போது, ஆகாயத்தில் பறந்து வட்டமிட்டுக்கொண்டிருந்த அழகிய கருடனொன்றிற்கும் எதிரே நேர்ந்த முரட்டுப்பருந்தொன்றிற்கும் சண்டைவிளைந்து கட்டியுருண்டு, கடித்துப்பிடித்துக் குத்திக்கிளறி மாரியாத்தாளுக்கும் ஜகன் மோஹன சிங்காரத்துக்கும் மத்தியில் அவைகள் விழுந்தன. விழுந்த பறவைகள் மூச்சு விடாமலும் கீச்சு என்னாமலும் மயக்கத்திலழுந்தி மாண்டனபோல் காணப்பட்டன. விழுந்த பறவைகளைக்கண்டதும், ஜகன்மோகன சிங்காரத்திற்கு அதிக பரிதாபமுண்டாய், “ஐயோ! அநியாயமாய் இப்பறவைகள் ஆபத்துக்குள்ளாயினவே,

கடல் வண்ணங்கிய கண்ணபிரானுக்கு வாகாய்நேர்ந்த வாகனமாய்,
அல்லல்பட்டார்க்கு ஆதிவாரந்தோறும் அரியதரிசனந்தந்து ஆபத்
தைப்போக்கும் ஆபத்பாந்தவனாய், ஆகாயத்திற் பறக்கும்போதே
அனைவோரும் கையைத்தூக்கிக் காலைச்சேர்த்து மெய்யை யொடுக்கி
மேல் நோக்கிக் கும்பிட்டுணரும் கொற்றநற்புள்ளாய், விளங்குகின்
ன்ற வைனதேயனாகிற கருடப்பிரானுக்கு, கவலையோடுகலகம் நேர்ந்
து, கலக்கம் கண்டு உணர்ச்சியொதுங்கி, மயக்கத்தோடு மண்மீது
கிடக்கும்போது, நாம், கண்ணைமூடிக் காதம்மூடிக் கவனியாதிருப்
பது காரியமாகுமா!" என்று கருதி, சாலையின்பக்கத்துள்ள சோலை
யொன்றிற் புகுந்து, தாமரைத்தடாகத்தில் தண்ணீர்மொண்டு, கரு
டன் முகத்தில் கருணையோடு தெளித்து, வாயில் சிறிது ஜலத்தை
வார்த்த மாத்திரத்தில், கருடனுக்கு உணர்ச்சியுண்டாய், கலபில
என்னத்தலைப்பட்டது. அசைந்தது, நகர்ந்தது, உருண்டது, புர
ண்டது, தலையைத்தூக்கியது, நாளை நீட்டியது; இப்படிப்பார்த்தது,
அப்படிப்பார்த்தது; படபடவென்று சிறகுகளைச் சடசடவென்னத்
தட்டியது! ஓங்காரக்கூச்சலொன்றிட்டுப் பாங்காய்ப்பறந்து விட்
டது! பிறகு இழிவானபருந்திற்கும் இழவுவரவொட்டாது, தாபம்
போக்கித் தாகம் நீக்கி, ஜகன்மோகன சிங்காரம், உயிருண்டாக்கி
விடவும், அதுவும் பறந்து விட்டது!

இதையெல்லாம் பார்த்திருந்த மாரியாத்தாளுக்கு மனம் பொ
றுக்கவில்லை. ஆத்திரத்தோடு கோபமும் அடங்காத பிடிவாதமும் அவ
ளுக்கு உண்டாய் விட்டன. நாம், காலங்கண்டகிழவி, வானத்தை
வில்லாய்வளைத்து மணலைக்கயிறாய்த்திரித்து நடவாத காரியத்தை
நடத்தியும், எண்ணாத செயல்களை ஈடேற்றிவித்தும், மாஜாலப்புரட்
டெல்லாம் செய்யும் மந்திரக்கிழவி, மாயக்கிழவி நாம் இங்கு வந்து
இந்த இளம்பெண் முன் எத்தனை நாழிகையாய்க் காத்திருந்தும்
இவள் 'ஏன்கிமா ?' என்னாமல் கவைக்குதவாத கருடனுக்கும் பா
ழாய்ப்போகும் பருந்துக்கும் உபசாரம்செய்து உள்ளபொழுதையும்
போக்கி என்னை உபேக்ஷைசெய்தனளே! நம்முடைய பெருமை
தெரிந்தும் நம்மைமதிக்க வில்லையல்லவா! இருக்கட்டும். பருந்து
பெற்றவிலை நாம் பெறாமற்போனோமா! இந்த ஜகன்மோகன சிங்காரத்
தினுடைய கர்வமே கர்வம், இவள் அகங்காரத்தை அளவிடயாரா
லும் முடியாதுபோலிருக்கிறதே! ஆனாலும் இவளை நான் ஒரு நொ
டியில் அடக்கிவிடுகிறேன் என்று பலவிதமாய்ச் சிந்தித்தாள். உள்
ளத்திலெழும்பியகோபம் உடலெல்லாம் பரவிற்று. கண்ணும் சிவந்

நது, கையும் பதைத்தது, காலும் துடித்தது, சொத்தை பிடித்த பல்லைமெத்த வேகமாய்க்கடித்தாள். இயற்கையிலே நடுங்கிய பேச்சும் ஆவேசத்தினால் ஒழுங்கடைந்து விட்டது. மந்திரக்கிழவியாகிற மாரியாத்தாள், மஹா உக்கிரத்தோடே, ஜகன்மோகன சிங்காரத்தை நோக்கி,

"ஏ, புத்திதெரியாத புதுமையான பெண்ணே, நான் வேலை மெனக்கிட்டு வெகு நேரமாய் இங்குகாத்திருந்தும் பாத்திருந்தும்; ஏ! அசட்டுச்சன்மமே, உன் உபயோகமற்ற வேலையையல்லோ கவனித்திருந்தே; செத்துப்போறகருடனை எட்டி உதைத்தாற்போச்சி! இறந்துபோகும் பருந்தை எடுத்தெறிந்தாற்போச்சி! அதையெல்லாம் விட்டு, அகங்காரமே ஒரு சொரூபமாய், என்னைக்கொஞ்சங்கூட மதிக்காது நான் வந்தது இன்னவேலைக்கெண்ணும் யோசியாது, ஹா! நீ என்னகர்வம் படைச்சே. ஹா! ஹூ" என்று பெருமூச்செறிந்து, சங்கநாதஞ் சிங்கநாதம் செய்து—ஹா ஹூ, ஹா ஹூ என்று கிழவி அலட்டிக்கொண்டிருந்தாள்.

இதைக்கேட்ட ஜகன்மோகன சிங்காரத்திற்குஒன்றுந்தோன்றவில்லை. இதென்ன! கிணறு வெட்டப்பூதம் புறப்பட்டதுபோலிருக்கிறதே! இந்தக்கிழவி மஹா பொல்லாதவளாயிற்றே! ராஜாவைக்கோஜாவாக்குவதிலும், கோயிலைக் குட்டிச்சுவராக்குவதிலும், மணல்மேட்டை மஹா உப்பரிகையாக்குவதிலும், வாழ்வாரைத்தாழச் செய்தும், தாழ்ந்தாரை வாழ்ச்செய்தும்—பலவித ஆலாகோலஞ் செய்யும் கோலாகலக்கிழவி—இவள் கையிற்சிக்கி இல்லாதபாடெல்லாம் பட்டு இன்று விழிக்க நேர்ந்ததே—ஏ! ப்ரம்ஹதேவா! இஃதென்ன கொடுமையென்று மனத்தில் நினைந்து, ஜகன் மோகன சிங்காரம்,

"ஆயா, நீ ஏன் வீணுகக் கோபிக்கிறாய்? நான் உன்னை அசட்டைசெய்யும்எண்ணதுடன் ஒன்றுஞ்செய்யவில்லை; ஆனால்..." சொல்வதற்குள் மந்திரிக்கிழவியாகிற மாரியாத்தாள், கோடையிடிபோற்குமுறியெழுந்து,

"ஆனா, கோனா, ஒநா, என்னா கதெசொல்றே! அயகிலே, கர்வம்படைச்சி, அலங்காரத்திலே ஆசைவைச்சி, பூச்சிக்கும் புழுவுக்கும், பச்சிக்கும் பறவைக்கும் எண்ணெதேச்சி தண்ணிவாத்து, என்னெ மதிச்சியா! ஹா! குமரி! கிழவி விருது பலிக்குதா, குமரி

விருது பலிக்குதா? நன்னாயிரு" என்று கட கட படபடவெனப் பேசினாள்.

"ஆயா! கொஞ்சம்பொறு. பொறுமைகடலினும்பெரிது" என்று ஜகன்மோகன சிங்காரம், மிருதுவான மொழியால் இதமாய்ச் சொன்னாள்.

"ஹாஹ்ஹா! ஹாஹ்ஹா, பொறுமை கடலுக்கும் பெரிச்சி, கர்வம் காட்டுக்கும் பெரிச்சோ! நன்னா சொன்னே, நன்னா சொன்னே" என்று மாரியாத்தாள் கோபச்சிரிப்போடு கொக்கரி கொட்டினாள்.

இப்படி மாரியாத்தாள் சொன்னதைக்கேட்ட இளவரசியாகிய ஜகன்மோஹன சிங்காரத்திற்கு எங்குமில்லாத கோபமும் வருத்தமும் உண்டாயிற்று. சாது மருண்டாற் காடுமிடங்கொள்ளாது என்பதுபோல், சாத்வீகசுபாவமும், சத்ஜனசகவாசமும் உண்டான ஜகன்மோகன சிங்காரத்திற்கு உள்ளம்பொங்கி ஒரே கொதிப்பாய்க் கொதித்தது. காசுக்கும் உதவாத கள்ள மனக்கிழவி, ஊரையடித்து உலையில்போட்டு, மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் மூன்று முடிகள் முடிச்சாய்ப்போட்டு, கலகமும் கற்பனையும் சதியும் சற்பனையும் உண்டாக்கிச் சண்டைவிளைத்து, அதனால் வயிற்றைவளர்த்து—வாகழிந்த கிழவிக்கும் யோகமென்ன நேர்ந்திருக்கிறது என்று நினைத்த மாத்திரத்தில் ஜகன்மோகன சிங்காரத்தின் மனதில் ஒருபுது எண்ணமும், ஒரு நூதனதைரியமும் உண்டாயிற்று. பண்பட்ட நிலத்தில் பக்குவமாய்ப் போடப்பட்ட ஒரு ஆலம் விதை எத்துணைச்சிறியதாயினும், அஃது முளைத்துத் துளிர்த்துக்கிளைவிட்டு, விழுதிறக்கி, கச்சேரிப்பந்தலினும் கண்ணுக்கு இனிமையளித்து, எவ்வளவு பரப்புடையதாயும் பெருமையுடையதாயும் நேர்ந்து விடுகின்றது! அதுபோல், மிகவும் தூய்மையடைந்து வாய்மையோடு விளங்குகிற ஜகன்மோகன சிங்காரத்தின் மனதில் இந்த நூதனமான எண்ணம் உண்டாகவும், அவள் முன்னிருந்த இயற்கைமாறி நூதன அவதாரமேயாய் விட்டாள். நாணத்தாலும் அச்சத்தாலும் நாகரீகமுற்று இதுகாறும் விளங்கிய அவள், மெய்மறந்து கோபம் மீறி கூளிகளையும் பயப்படுத்தும் காளிகாதேவிபோலவும், அகடுசெய்வாரை அடக்கும் மகிடாசுரமர்த்தனிபோலவும், ஆக்ரோஷங்கொண்டாள். கோரச்செயலுக்கு அஞ்சாத மாரியாத்தாளுக்கும் அப்போது கொஞ்சம் உள்ளுக்குள்ளே யோசனைதான். இவ்விதமான

ஆவேஸத்தோடு ஜகன்மோகன சிங்காரம், பொல்லாத கிழவியை நோக்கிப் பின்வருமாறு சொன்னான்:

"ஏடி! கிழப்பிணமே! இவ்வுலகவாழ்க்கையை நீ சதமென்று கருதினைபோலும்! உனக்கிருக்கும் கர்வமும் அகங்கார மமகாரமும் யாருக்கும் உலகத்தில் இராதென்றே எண்ணுகிறேன். இராப்பகலாய் நீ கோபக்குணமே காட்டிப் பாபத்தொழிலே புரிந்து, மந்திரமும் மாயமும் சூன்யமும் சுடுகொடுமொய்த்திரிகின்றனே! நீ இங்குவந்த காரியத்தைச் சொல்லுவதை விட்டு இடையேநேர்ந்த ஜீவகாருணியச்செயலைச் சிறிதும்பொறுக்காது, ஏதேதோ பேசித்தள்ளாடித் தலை கீழாய் விழுகின்றாய்! ஆ! அன்பும் கருணையும் யாதென உனக்குத்தெரியுமா? அன்பும் கருணையுமே அனைவரையும் கரையேற்றுவது! கொடுமையும் குரூரமுமே ஒருவர் குடியைக்கெடுப்பது! சின்னாள் வாழ்க்கையாகிய இந்நாள் வாழ்க்கையை மாத்திரமன்று, உன் கொடுமையும் குரூரமும், குடிகெடுத்தொழிப்பது. இந்நிலவுலகத்து இகவாழ்க்கையையும் பரலோகத்துப் பரசுகத்தையும், அன்பின்மையென்பது அறவே ஒழித்துவிடும். அன்பே அறிவாளர்க்கு அணிகலமாவது! அன்பென்பதே அந்தணாளர்வசிக்கும் நந்தவனம்! அன்பென்பதே ஐயனைக்காட்டும் அரியவழி! அன்பின் அழகைக்கண்டு, அரவிந்தம் அழகும் முகமூடித்தடுமாறும்! ஆதல்பற்றி, மயக்கம் கண்டு மண்ணில் விழுந்த பறவைகளுக்கு நான் சிரமம் போக்கினேனென்று, என்மீதில் நீ எரிந்துவிழுகின்றது ஏளனமானகாரியம். நீ வந்தகாரியத்தைச்சொல். இல்லாவிடில், சொந்தகாரியத்தைப்பார். நான் யாரென்பதையும், என்குணம் இன்னதென்பதையும், அந்தஸ்து இத்தன்மையானது என்பதையும் ஒரு சிறிதும் கவனியாது, நீ அதிகப்பிரசங்கித்தனமாய் ஏதேதோ பிதற்றினாய். இனிமேலாவது உன்னுடைய சகசமானதும் இழிவானதுமான நடக்கையை என்னிடம் காட்டாது, நீ எதைப்பற்றி என்னைத்தேடிவந்தா யென்பதைத்தெரிவி. இல்லாவிடில், 'குக்கு'போல் ஓடிப்போ!" என்று ஒரு பெரிய பிரசங்கம் ஜகன்மோகன சிங்காரம் செய்தானதும், மாரியாத்தாளுக்கு மஹாகோபம் வந்துவிட்டது. சொத்தைப்பல்லை மெத்தக் கடித்தாள். குட்டைக்காலால் தரையை எட்டியுதைத்தாள். கையைப்பிசைந்தாள், கண்ணைப்புகைத்தாள். நறநறவென்றாள், ஹா. ஹா வென்றாள். 'ஐயும்கிலியும் ஆவும் சாவும் சரஹணபவ, தலையரி செய' என்று மந்திர உச்சாடனம் மஹாமுடுக்காய்ச்செய்தாள்.

மிணமிணவென்றாள்; கணகணவென்றாள். விழுந்தாள் தரையில்; எழுந்தாள் உடனே. பிறகு சொல்லுகிறாள்:

"அடீ! பேதைப்பெண்ணே, நீ பசுத்தோலைப்போர்த்த புலிக்குட்டிபோலிருந்தாய். நல்லது! உன்கொட்டத்தை எட்டு நாளைக்குள் அல்லது எட்டுமாதத்திற்குள், அல்லது எட்டு வருஷத்திற்குள் அடக்கிவிடுகிறேன். மந்திரத்தாலோ, அல்லது தந்திரத்தாலோ, மாயத்தாலோ, அல்லது உபாயத்தாலோ எப்படியாவது உன்னை நாசப்படுத்தி மோசப்படுத்தி விடுகிறேன். அப்படிச் செய்யாவிட்டால், என் பேர் மாரியாத்தா அல்ல" என்று சொல்லிவிட்டு,

"ஆனாலும்; அடீ, கர்வம் பிடித்துத்தலைகால் தெரியாது தடுமாறிப்பேசும் உன்னை மொட்டையடித்துக்கழுதைமேலேற்ற ஏற்கவே அங்கு சித்தமாயிருக்கிறார்கள். உன் அண்ணன் மனைவி உனக்குச்சன்மானம் அங்கே வெகு தயாராய்வைத்துக்கொண்டிருக்கிறாள். உன் ஆம்படையான் ஊரை விட்டோடி ஒருவருஷமாயிற்று; உன் அப்பன் குடிமாண்டு ஒன்பது வருஷமாயிற்று. இப்போது நீ உன் அண்ணன் மகனுக்குக்கல்யாணஞ் செய்ய வெகு அவசரமாய்ப்போவது, வெகு அவசரமாய்முடியப்போகிறது! பார்க்கலாம்!" என்று கறுவிக்கொண்டே கிழவி நழுவிக்கொண்டாள்.

அந்தசமயம் ஜகன்மோகனசிங்காரத்திற்குச் சொல்லமுடியாத துக்கம் வந்துவிட்டது. "இஃதென்ன கொடுமையாயிருக்கின்றதே! உபசாரம்செய்ய உள்ளம்பரிந்ததுபோல் வந்த கிழவி 'திடும்' மெனத் திரும்பிக்கறுவிக்கொண்டுபோகிறாளே! கபடக்கிழவி வந்தகாரியமும் தெரியவில்லை, இப்போது முடுக்கிக்கொண்டு போகிறசங்கதியும் விளங்கவில்லை. எனக்கு அண்ணன் வீட்டில் அதோகதிதான் என்று ஆக்ஞாபித்துப்போகிறாளே! ஆகட்டும் பார்க்கலாம்! எல்லாம் அவன் விட்டசெயல்! அவனன்றி ஓரணுவு மசையாதென்றல்லவா அறிஞர் கூறுகின்றார்கள்! இருக்கட்டும்" என்று தனக்குள்ளேயே பேசிக்கொண்டு ஜகன்மோகனசிங்காரம் தன்வழியே தான் தளராது போய்க்கொண்டிருந்தாள்.

# இரண்டாம் அத்தியாயம்.

ஆடம்பராச்சாரி. ..... நல்லம்மாள்.
வனஜாலனன். ..... பாரிஜாதம்.

இப்பொழுது நாம் காண்கிற பட்டணத்திற்கு ஆனந்த நகரமென்று அரிய நாமஞ்சூட்டப் பட்டிருக்கிறது. அயோத்யா நகரமும் அதற்குச் சமானமன்றென்று அனைவோரும் சொல்கிறார்கள். அங்கேகாணும் மண்டபமும் ஆஸ்தானமும், சிங்காரமும் அலங்காரமும் எங்கேயும் காண்பதரிது! எற்றத்தாழ்வில்லாமல் ஆற்றோரத்தில் காணப்படும் அழகிய தோட்டங்களும் துறவுகளும், கண்ணுக்கெட்டாதபடி விண்ணைக்கவிந்த எண்ணில்லாத உப்பரிகைகளும் மச்சு மாளிகைகளும் கூடகோபுரங்களும் பாடசாலைகளும் ஆலைசாலைகளும் அலங்காரசாலைகளும் அற்புதம் விளைத்துப் பொற்பைத்தருகின்றது! அந்த ஆனந்த நகரமென்னும் அழகிய பட்டணத்தின் மேற்குமூலையில் கமுகும் தென்னையும் கலந்த தோட்டத்தின்மத்தியில் சிங்கார மாளிகையொன்று சிறப்பாய்விளங்குகின்றது! அங்கே இப்பொழுது ஏதோசந்தடியும் யாதோ தடபிடலும் காணப்படுகின்றன! அஃது யாதுமில்லை; அவ்வீட்டிலுள்ளோர் எவ்வூருக்கோ செல்கின்றார்கள் என்று ஏற்படுகின்றது! வாசற்படியண்டையில் வண்டியொன்று காத்திருக்கின்றது! மூட்டைகள் தாங்கிச்செல்ல முன்னே ஒரு வண்டியும் முடுக்காய் நிற்கின்றது! அப்படியிப்படி நால்வர் ஐவர்போகிறார்! மூட்டைகள் முடிச்சுகள் கொண்டுவந்து அங்கும்இங்கும் அடுக்குகிறார்கள், அமைக்கிறார்கள்! சற்றுநேரத்துக்கெல்லாம் உள்ளே இருந்து நால்வர் வந்தார்கள். ஒரு ஐம்பது வயது அரைக்கிழவரும், இருபதுவயது இளம்பிள்ளையும், நாற்பதுவயது நல்லம்மாளும் பதினைந்துவயது பாலகுமாரியும், ஆக நால்வர் அழகாய்வந்துநின்று அனைத்தும் சரியாயிருக்கின்றனவா என்று சுற்றுமுற்றும் உற்றுப்பார்த்து வண்டியில் ஏறினார்கள். வண்டியும் நகர்ந்து விட்டது. வண்டி ரயில்ஸ்டேஷனுக்குப் போவதற்குள் இந்நால்வரும் எத்தகையின ரென்பதைப்பற்றியோசிப்பாம்.

ஐம்பதுவயதுள்ள அரைக்கிழவர், வயதானபோதிலும், சிறுவயதினர்க்குள்ள அலங்கார ஆடம்பரங்கள்செய்துகொண்டு ஆனந்த சாகரத்தில் அமிழ்கிறவரென்பது நன்கு புலப்படுகின்றது. இடுப்பில்சாயவஸ்திரம்உடுத்து, மூக்கின் மீது கண்ணாடியை முறுக்காய் வைத்துக், கையில்தடியும் கக்ஷத்தில்புத்தகமும் ஏந்தி, வாய்நிறைய வெற்றிலைப்பாக்கும் துணியெல்லாம் வாசனைத்திரவியமும் வாகாய்க் கொண்டு டம்பாச்சாரிக்கும் ஜம்பாச்சாரியாய் விளங்கினார். அவர் முகம் செக்கச்செவேலென்று மிக்கஅழகாய்க் காட்டினபோதிலும், மூக்குமுனையில் கோபமும், கண்ணின் கடையில் கடுமையும் பகிரங்கமாய்த்தோன்றின! மீசைநரைத்திருந்தபோதிலும் கப்பு என்னவோ அதைக்கறுப்பாய்க்காட்டிற்று. இவர் பெயர் வேறென்னவோ இருந்தபோதிலும், இவரை ஆடம்பராசாரி யென்றே அனைவரும் அழைப்பார்கள். நாற்பதுவயதுள்ள நல்லம்மாள் இவருடைய மனைவி. பெயர் நல்லம்மாளாக இருந்தபோதிலும், நடக்கையில் இந்தம்மாள் கெட்டம்மாளென்றே ஞாலத்தாரனைவரும் சொல்லுவார்கள். உண்மையில் ஒருநாள், இந்தம்மாளுடைய குணாதிசயத்தைக் கண்ட ஒருவர், "மொட்டைத்தலையினளைக் கூந்தலழகி யென்பதுபோலிருக்கிறதே, அவலக்ஷணகுணங்களும் ஆகாதசெய்கையும் பொருந்திய பொல்லாத அம்மாளை நல்லம்மாளென்று கூறுவது" என்று சொல்லிப் போய் விட்டார். நல்லம்மாளுடைய நிறம் நல்லகறுப்பு. சிறியகண்ணும் பெரியமூக்கும், சொப்புவாயும் சுருட்டைமயிரும் அந்தம்மாளுடைய இழிவானகுணத்தை எடுத்துக்காட்டின. இடுப்பில் கொரணாட்டுப்புடவையொன்றும், சிற்சில நகைகள் மட்டுமே அந்தம்மாளிடம்விளங்கின. மற்றஇருவர்கள் இவர்களுடைய புதல்வனும் புதல்வியுமாவார்கள். சேற்றில்செங்கழுநீர் முளைத்ததுபோலவும், சிப்பி வயிற்றில் முத்தம்பிறந்ததுபோலவும், அவலக்ஷண குணங்களுடைய அப்பன் அம்மாளுக்கு அலங்காரகுணங்களுடைய அருமைப் புதல்வர்களாய் இவர்கள் அவதரித்தார்கள்! பெண்ணின்பெயர் பாரிஜாதம்; பிள்ளையின்பெயர் வனஜாஸனன். அழகென்பதே இவர்களிடம் அமைதியாய்க் குடிகொண்டது. பாரிஜாதத்தைப் பார்க்கப்பதினாயிரம் கண்வேண்டும்; வனஜாஸனனைப்பார்க்க வாசவனாலுமாகாது! பரந்தமுகமும் அலர்ந்தகண்ணும் பொன்னின்நிறமும் பூவின் மென்மையும்—ஹா ஹா! இவர்களழகே யழகென்று ஒவ்வொருவரும் மெச்சும்படியாயிருந்தது! வனஜாஸனன் தற்கால நடையுடை பாவனைகளை அனுசரித்து பூட்ஸ் ட்ரௌஸர், காப்காலர்

பெல்ட் ப்ரேஸர் இவைகளையணிந்து கழுத்தில் பொன்னுலாகிய பழுத்தசங்கிலியொன்றைப் போட்டுப் பொன்கடிகார மொன்றைத் தொடுத்துச் சொக்காய் ஜேபியில் ஸொகுசாய்ப் போட்டிருந்தான். காதில் தகதகவென்று வைரக்கடுக்கனும் கையில் பளபளவென்று கெம்புமோதிரமும் போட்டிருந்தான். இருந்திருந்து அவன் இப்படி யப்படிப் பார்ப்பதினுலும், உதட்டைச் சிறிதுகடித்து உயரநிமிர்வதாலும், கொஞ்சநேரம் குனிந்துகொண்டு பெருமூச்செறிவதாலும் ஏதோ, உள்ளத்துள்ளே, உயிருக்கு உட்புறத்தே, மெள்ள மெள்ள வருத்திய சள்ளைச்சங்கதி உள்ள துள்ளதே என்பது நன்கு புலப்படுகிறது. ஆம்! அவன்மனதில் வேதனை யாதோ வாதனை விளைக்கின்ற தென்பதை அவன் எதிரி லுட்கார்ந்திருந்த அவன் தங்கையாகிய பாரிஜாதம் அறிந்தவளாதலால், அண்ணனைப்பார்த்து அதிகயோசனையிலழுந்திவிட்டாள். உப்பாடைப் புடைவையை ஒய்யாரமா யணிந்து, காதில் கெம்புத்தோடும் கையில் வைரவளையலும் காலில் ஒரு கொலுசும் கழுத்தில் ஒரு ஹாரமுமே யணிந்திருந்த பாரிஜாதத்தை அப்போது யாவராயினும் பார்த்தால் சித்திரப்பதுமையா, சிங்கார வார்ப்படமா என்று சந்தேகிப்பார்களே யல்லாமல் அவள் ஒரு மானிடவுருவென்றும், அசைந்து பேசும் அழகு சுந்தரியென்றும் யாருமெண்ணியார்கள். அவள்புருவம் வில்லைப்போல் வளைந்திருந்தது. கண்விழிகறுத்திருந்தது. நீண்ட கூந்தல் இடையைத் தாண்டித் தாளைத்தீண்டினது. நிறம்மஞ்சள் வர்ணமான சிகப்பென்றே சொல்லவேண்டும். இயற்கையாகவே இனியசிரிப்பு அதரத்தில் தங்கி ஆனந்தம் விளைத்தது. பல்லினழகைச் சொல்லவும் வேண்டுமோ! முத்தையடுக்கி முலாம் கொடுத்ததுபோல் அவைகள் விளங்கின! ஆனந்தமேயுருவம், அற்புதமே அலங்காரம்! இவள் தனது அண்ணன் கவலையையே அதிகமாக மனதில் கொண்டதாய் இம்மாதரசியின் முகத்தோற்றம் இடைவிடாமற் காட்டியது.

சற்றுநேரத்திற் கெல்லாம் வண்டி ரெயில்வேஸ்டேஷனில் வெளிவாயிலுக்கருகில் இவர்களைக்கொண்டுபோய்ச்சேர்த்தது. அவ்விடத்திற்கு நூறுமைல்தூரத்துள்ள அலங்காரபட்டணத்திற்கு டிக்கட்டுகள்பெற்றுக்கொண்டு அனைவரும் புறப்பட்டார்கள். குப்குப் என்று ரெயில்வண்டியும்வேகமாய் ஓடத்தலைப்பட்டது.

ஆடம்பராசாரி, ஒருகால்மேல் மற்றொருகாலைப்போட்டுக் கொண்டு, மீசையை முறுக்கினவண்ணமாய், தன் மனைவியாகிற நல்லம்மாளைநோக்கி,

"நல்லு, நாம் அலங்கார பட்டணத்திற்கு வருகிற சமாசாரம் அங்குள்ள அனைவர்க்கும் தெரியுமல்லவா?" என்று வெகு சந்தோஷத்துடன் விளையாட்டுப் பேச்சாய்க்கேட்டார்.

நல்லம்மாளென்கிற பொல்லாத அம்மாள் பல்லையிளித்து முகத்தைச்சுளித்து,

"ஆம்! உங்களுக் கென்னவேலை! நல்லு, சொல்லு, கொல்லு என்று நாயாய்ப் பிடுங்குகிறதுதான் வேலை" என்று வெடுவெடுப்பாய்ப் பேசினாள்.

"இல்லை நல்லு! தெரியுமா தெரியாதா என்று கேட்டால் அதற்கு ஏன் புல்டாக் (Bull Dog) கைப்போல் பிடுங்குகிறாய்?" என்று ஆடம்பராசாரி அட்டகாசமாய்ச் சொன்னார்.

அதற்கு நல்லம்மாள் முகத்தைப் பின்னுங் கொஞ்சம் சுளித்துக் கொண்டு,

"நான் வெறும் நாயென்று உங்களைச் சென்னால் நீங்கள் என்னைப் புல்டாக் கென்று துடைப்பக் கட்டைக்குப் பட்டுகுச்சு கட்டுகிறீர்கள் போலிருக்கிறது! தெரியுமா, தெரியாதா, அந்த கட்டையிலே வைப்பான் அந்தப் பாடையிலே வைப்பான் எந்தக்கேடு கெட்டால் எனக்கென்ன! எத்தனை தரம் சொன்னாலும் அந்த குட்டிச்சுவரா போனவனுக்கு மட்டிப்புத்தியே தவிர மடப் புத்தி கிடையாது" என்று நல்லம்மாள் சுள்ளாப்பாய்ப் பேசினாள்.

"ஹா! பேஷ்!" என்று ஆடம்பராசாரி, 'ஹஹ்ஹ ஹஹ்ஹ' என்று கக்கிடகக்கிட நகைத்து, "ஹா! பேஷ்! நல்லு, நீ கல்லு, என்றல்லோ நினைத்திருந்தேன்! சாபாஷ்! நல்லு, உன் சொல்லு, வெகு நன்றாயிருக்கின்றது! மட்டிப் புத்தியே தவிர மடப்புத்தியாகிடையாது! நான் முட்டாள் நான் முட்டாள்! உன் அண்ணன் புத்திக்கும் உன் புத்திக்கும் என்புத்தி உலக்கைக்கொழுந்துதான் வெகு வெகு சரி" என்று மூக்கின்மேல் விரலைவைத்து ஆடம்பராசாரி ஆச்சரியத்தால் பேச்சு மூச்சில்லாமல் பிரம்மஹத்தி பிடித்ததுபோல் சற்று நேரம் மெத்த அமைதியாயிருந்தார்.

மறுபடியும் நல்லம்மாள் ஆடம்பராசாரியைநோக்கி "தலைவிதி எப்படியெப்படி நடக்கவேண்டுமோ அப்படி யப்படியெல்லாம் நடந்து தானே தீரும்? அதனதன் இஷ்டப்படி விடாவிட்டால் அது அது தலைவிரித்தாடுகிறது, என்னைக்கல்யாணம் பண்ணி நீங்கள்

என்ன சுகப்பட்டீர்கள்? மொரோவென்கிறவன் கழுத்தில் லிங்கத்தைக்கட்டுவதுபோல், என் நாம் தொந்தரை செய்யவேண்டும்? நேற்றுப்பையன் இந்த வனஜாஸனன் இவன் சொல்பேச்சுக்கேட்காமல்போய் விட்டான் பாருங்கள்! அந்தப்பாவிவீட்டுப் பெண்ணைக் கல்யாணஞ் செய்யாதிருந்தால் என்பாடு நிம்மதியேதவிர மறுபடியும் மறுபடியும் அந்தப்பாவிகள் இங்கே காலைவைத்துக்கொள்வது, நான் கட்டையேறும் வரைக்கும் நாய்படாத பாடு படுவதற்குத்தான்! அவர்களுக்கும் 'பத்த' மில்லை உங்களுக்கும் பவிஷில்லை" என்று கறுவினாள்.

"நல்லு! நீயேன் கோபித்துக்கொள்கிறாய்? எங்களுக்குப்பவிஷில்லாமல் தானே உன்னிடம் சக்கரபாணம்போல் அகப்பட்டுக்கொண்டு சதாசுழன்றுகொண்டிருக்கிறோம்! எப்படியோ, எல்லாம் ஈசன் செயல்! அலங்கார பட்டணத்தில் இத்தனை நேரத்திற்கெல்லாம் மட்டிப்புத்தியே தவிர மடப்புத்தியில்லாத மச்சான் வீட்டில் உச்சிதமான சிங்காரிப்பும் விவாகத்திற்கென்று உயர்வான ஏற்பாடும் நடந்துகொண்டிருக்கும். எல்லாங்கூடி கல்யாணத்திற்கு ஒரு வாரந்தானேயிருக்கிறது! சபாஷ்! அத்தான் தடபிடலை இப்போதானே பார்க்கப்போகிறது! வெகுஷோக்! வெகுஷோக்!!" என்று ஆடம்பராசாரி அட்டகாசஞ்செய்து கொண்டிருந்தார்.

"ஆமாம்! முதலாளிக்கு குணம் முசுடாக இருக்கிறதே!" என்று நல்லம்மாள் மெதுவாகச் சொன்னாள்.

"முசுட்டின் சுபாவம் முறைத்துக்கொண்டு நிற்கிறது! அதற்கென்ன செய்கிறது?" என்று ஆடம்பராசாரி அமைதியாகச் சொன்னார்.

"முசுடு என்ன செய்யும்?"

"தான் போகிறவழியில் தடையொன்று காணின், முசுட்டுக்குணம் விறைத்துக்கொண்டு நிற்கும்."

"அதெப்படி?"

"முசுடு போய்க்கொண்டிருக்குங்கால், சட்டென்று ஒரு துரும்பையாவது தட்டென்று நிறுத்தித் தடையுண்டாக்கினால் அப்படியிப்படித்திரும்பாமல் முசுடு விறைத்துக்கொண்டு மூர்க்கமாய் நிற்கும். அது முரட்டுப்பையன் தலையைக்குனிந்து முன்பின் யோசி

யாது மடப்பிடிவாதம் அடத்தோடு செய்வதுபோலிருக்கும்! அதை நன்ருய்ப்பார்த்த அறிஞர் முசுட்டுக்குணம் என்பது அசட்டுக்குணம் என்று சொன்ஞர்கள்.

இதைக்கேட்ட நல்லம்மாள் இளஞ்சிரிப்பாய்ச் சிறிது நகைத்து,

"இந்த முசுடை எந்தவழியில் திருப்புவது?" என்று வனஜாசனனைக்குறித்து சந்தடி தெரியாமல் சைகையைச்செய்து ஜாடையாய்க் கேட்டாள்.

ஆடம்:—மூன்று மாதம்போனுல் முசுடும் குணம் மாறும்.

நல்:—எப்படித்தெரியும்?

ஆடம்:—சொற்படி நடக்கும்.

நல்:—ஏக்கங்கொள்கிறது என் மனம்!

ஆடம்:—தூக்கம் வருகிறது தினம் தினம்!

இவ்வாறு சொல்லிவிட்டு ஆடம்பராசாரி அரிய நித்திரையில் அமிழ்ந்து விட்டார். நல்லம்மாளும் சற்றுநேரத்துக்கெல்லாம் மெத்தத்தூக்கங்கொண்டு சாய்ந்தவள் சாய்ந்தவண்ணமாய் உறங்கிவிட்டாள். ரயில்வண்டி அதே அறையில் இந்த ஓரத்தில் எதிர்க்கெதிரேயுட்கார்ந்திருந்த வனஜாஸனனும் பாரிஜாதமும், தமது தந்தைதாயார் பேசிக்கொண்டிருந்த வார்த்தைகள் சரியாய்க் காதிற்படாமையாலோ, அல்லது அவற்றைக் கவனியாமலிருந்ததாலோ, அவற்றில் வெகு சிறிதும் சிந்தை செலுத்தாதவராய், ரெயில்வண்டிப்பாதையின் இருபுறங்களிலுமுள்ள இனியவனப்புகளேப் பார்த்துக்கொண்டும் அவைகளேப்பற்றிப் பேசிக்கொண்டும் சென்ருர்கள். அந்தவழியோ அழகாகிய மலேப்பாதையாயிருந்தது. இருபுறங்களிலும், தேக்குமரங்களும் பாக்குமரங்களும் தென்னேமரங்களும் புன்னேமரங்களும் மெச்சத்தக்கும் பச்சை நிறந்தாங்கி அடர்ந்து படர்ந்து ஆனந்தம் விளேத்தன! ஜோ என்று பயங்காட்டி, ஹா என்று அச்சம் விளேத்து அங்குமிங்கும் அடவிகள் அனேகம் காணப்பட்டன. சூரியன் ஒளியைப் பூமியில் விடாது, ஒன்றை ஒன்றுபற்றித்தொடர்ந்து, சுற்றிவளேந்து எண்ணில்லாத கொடிகளும் செடிகளும் பந்தலிட்டுச் சிந்தை மகிழ்வித்தன. அதிக மழையால் ஆனந்தங்கொண்டு, க்ரோடன்களும் பெரன்களும் கஷ்டமென்பது கடுகளவுமில்லாமலே இஷ்டப்படி வளர்ந்து இன்பங்கொடுத்தன! மேகங்கள் சதா மலேகள்மீது வளேந்து சுற்றி பெய்தமழை பெய்தவண்ணமாயி

ருந்தது! சிவனுக்கு மாமனாகிய பர்வதராஜன் சூரியனால் மிகவும் உஷ்ணங்கொண்டா னென்று கருதி, அவனை ஸ்நாநஞ்செய்விக்க விரும்பி சமுத்திரம் புரண்டுவந்ததுபோல் மேகங்கள் பரந்தன என்னும்

பம்பி மேகம் பரந்தது பானுவால்
நம்பன் மாதுலன் வெம்மையை நண்ணினன்
அம்பி னாட்டுது மென்றகன் குன்றின்மேல்
இம்பர் வாரியெழுந்தது போன்றதே.

என்கிற கம்பநாடருடைய பாடலின் பொருளும் அதன் அழகும் அப்போதுதான் அவர்களுக்குப் புலப்பட்டது. இவ்விதமாக சுற்றியுள்ள அழகினால் மெத்த மனங்களித்து, ஆனந்த பரவசங் கொண்டு, அகம் மிகக்களித்துச் சென்றுகொண்டிருக்கவும், கானரசமும் துளைக்காத கல்மனத்தார்போன்று, ஆடம்பராசாரியும் நல்லம்மாளும் அதிக நித்திரையிலமுழ்ந்தியே விட்டனர்! க்ளோரொபாரம் கொடுத்ததுபோல் கோரத்தூக்கங்கொண்ட கொடியோரிருவரும், வழியின் அழகை ஒரு சிறிதும் காணாராய், வாட்டமுற்றதூக்கத்திலேயே ஓட்டம் பெற்றிருந்தனர்.

இச்சமயம், வனஜாஸனன், பாரிஜாதத்தை நோக்கி, "என் கண்மணியே, நமது தந்தை தாயர்க்குள்ள பிடிவாதத்தை எந்தை எப்போது இனிதின் ஒழிப்பாரோ! பெற்றோர்செய்யும் குற்றத்தைப் பிறந்தோர் எப்படி விளம்புவது!" என்று பெருமூச்செறிந்து பிரலாபிப்பதுபோல் பேசினான்.

பாரிஜாதம், முகத்தாமரையைச் சிறிது குவித்துக்கொண்டு, "அண்ணா! நல்லதும் கெட்டதும் நானிலத்தோர் சொல்வார்களான போதிலும், எந்த விதத்திலும் மாறாத இவர்கள் பிடிவாதத்தை எந்தவிதத்தில் போக்குவது என்பது எனக்குச்சிறிதும் விளங்கவில்லை. உன்னைக் கொண்டுபோய் உடைப்பில் தள்ளி, என்னைக்கொண்டு போய் ஏரியில் தள்ளப்பார்க்கிறார்களே! அம்மாளும் பிடிவாதம், அப்பாவும் பிடிவாதம்! கண்டார் நகைக்க, காசினியார் சீகொட்ட, இந்த ஏற்பாடுகள் எனக்குச்சிறிதும் பிடிக்கவில்லை" என்று பதில் கூறினாள்.

"ஆம்! என்னசெய்வது! அம்மாளுக்கு அண்ணன் மீதே ஆசை! அப்பாவுக்கு மனைவிமீதே ஆசை! நாம் அறியாதவர்களாயிரு

ந்தபோதிலும் நம்முடைய விருப்பத்தைக்கொஞ்சமேனும் கவனியாமலும் தாம்பிடித்த முசலுக்கு மூன்றேகால் என்று முன்னும் பின்னும் பாராமலும், ஆயிரங்காலத்துப் பயிரல்லவா விவாகம் என்பதைச்சிறிதும் கவனியாமலும் இவர்கள் இப்படிச்செய்வதை எப்படி நாம் தள்ளுவது!...ஐயோ, எப்படி நாம் தள்ளுவது! இந்த ஈனசந்தியில் இறைவன் நம்மை விட்டானே!" என்று சொல்லி வனஜாஸனன் சஞ்சலத்திலழுந்திச் சருகாய் வதங்கினன்.

"அண்ணா, உங்களுக்குக் கல்யாணம் உடனேவைத்துக்கொண்டாலும், எனக்கும் அதேமாதிரி இன்னும் சிலநாள் பொறுத்தாயினும் செய்யத்தானே தீர்மானித்திருக்கிறார்கள்! நாம் எவ்விதமாய்த்தடுத்து நலமாகச்சொன்னபோதிலும் அவர்களென்னமோ கேட்கப்போகிறது கிடையாது" என்று பாரிஜாதம் பரிதாபமாய்ச் சொன்னாள்.

இதைக்கேட்ட வனஜாஸனன் ஐயோவென்று கலங்கி யாதோ சொல்லவருந் தருணத்தில், குப்குப்பென்று வந்த புகைவண்டி இருந்தாற்போலிருந்து ஒரு மலைத்துவாரத்திற் புகுந்து ஒன்பது நிமிஷத்திற்குள் சரேலென வெளிவந்து விட்டது. சூரியன் வெளிப்படாத அப்புறப்பட்ட அந்தகாரப் பிரதேசத்தில் நுழைந்து விட்டதுபோல் முதலில் தோன்றிப்பின்னர் தாயின் கர்ப்பத்தினின்றும் வெளிவந்ததுபோல் மலைக்குகையினின்றும் ரெயில்வண்டி வெளிவந்ததும் அப்பா என்று அனைவரும் மூச்சுவிட்டுப் பேச்சைத்தொட்டார்கள்! வனஜாஸனனும், பாரிஜாதத்தை நோக்கி,

"குழந்தாய்! இந்த ரெயில்வண்டி மலையைத்துளைத்துச் செல்வதுபோல், நம் தந்தை தாயர் செய்யும் காரியம் என் மனதைத் துளைத்துச் செல்கின்றதே! ஞாயம் சொன்னால் அபாயம் நேருமேயன்றி நாம்தப்பும் உபாயமென்னமோ உள்ளத்தில் விளங்கவில்லை." என்று மனம்வருந்தி மஹாபரிதாபமாய்ச் சொன்னான். பாரிஜாதம் இதைக்கேட்டு மனம்சகியாதவளாய்,

"அண்ணா, நாம் தந்தை தாயர்க்கு யாதொரு அவமதிப்பும் செய்யவேண்டுமென்னும் எண்ணமுடையவர்களல்ல. அவர்களுக்கு யாதோ தப்பபிப்பிராயம் மனதில் நன்று யூன்றிவிட்டிருக்கிறது. அதைத் தவிர்க்க நம்மாலாகுமா?" என்று அண்ணனை நோக்கி ஆழ்ந்தசிந்தையுடையவளாய்க் கேட்டாள்.

இக்கேள்வி வனஜாஸனனுடைய மனதில் இத்தனை நாளாய் அடங்கியிருந்த ஒரு சக்கரச்சுழலுக்கு ஒத்தசாவி கொடுத்ததாயிருந்தது! சுற்றுது சுழலாது பெட்டகமாய்க் கிடந்த பேரெண்ணத் தொகுதிகள் இப்போது கரகர பரபா வெனச்சுற்றி, 'கலபை' யான அபிப்பிராயங்களைக் கடுகென விளைத்துவிட்டன. வனஜாஸனனும் பாரிஜாதமும் அறிவிற்பெரிய ஆனந்த சொரூபர்களாயும், நன்மையின்மிக்க நாகரீகர்களாயும் விளங்கியபோதிலும், எடுத்தகாரியத்தை இனிதின் முடிப்பதற்குப் பாரிஜாதமே தேர்ந்த பக்குவசாலி! இவர்களிருவரும் தீமையென்பதைச் சிந்தையிலும் நினையார்கள், கலகம் என்பதைக் கனவிலும் கருதார்கள்! அனுவஸ்யமாய் ஒருவர்க்கும் வருத்தம் உண்டாக்குவதே கூடாதெனக்கருதிச் சந்ததமும் நீதிமொழியே ஓதி, சதாகாலமும், தாய்தந்தையர்களையும் கடவுளர்களையும் குருமாரையும் பெரியோரையும் வந்தித்து வணங்கி நன்மையே அவதாரமான நளினசூதர்களாகிய இவர்களிருவரும் ஒத்த சிந்தையிலே யுறுதியானவர்களானபோதிலும், பாரிஜாதம் லௌகிக தந்திரத்திற் சிறந்து சாகஸ புத்தியையும் சமர்த்த நடையையுங் கைக்கொண்டு, சமயோசித யுக்திகளைக்கூறி சந்தர்ப்பத்திற் கேற்றபடி நன்மையை நிறைவேற்றும் நலம்மிகக் கொண்டவள்! வனஜாஸனனோ வென்றால், நேர்வழியறிவானேயன்றிக் குறுக்குவழியறியான்; வெல்லச் சொப்பில் நல்லமருந்தை வைத்துக்கொடுத்தால் கள்ளையில்லாமல் குழந்தைகள் உள்ளே விழுங்கிவிடுவார்களே யென்னும் உளவையே அறியாதவன் அவன்! இத்தகைய அவனுடையமனதில் இயையும்படிச் சக்கரச்சுழலை யுண்டாக்கி விடவும், உள்ளேயடங்கிய எண்ணங்கள் உருக்கொண்டு வெளியேகிளம்பின. உடனே வனஜாஸனன் பாரிஜாதத்தை நோக்கி,

"கண்ணுக்குக் காணாமல் கடுகி நடந்தாலென்ன?" என்று குறிப்பாகக் கேட்டான்.

**பாரிஜாதம்:** "செய்தாலென்ன"

**வனஜாஸனன்:**—"வைதாலெப்படி?"

**பாரிஜாதம்:**—"நழுகவேண்டும்?"

**வனஜாஸனன்:**—"பழகவேண்டும்"

**பாரிஜாதம்:**—"அடுத்த ஸ்டேஷனில் பிடிப்பது ஓட்டம்"

**வன:**—"எடுத்த காலை இழுப்பது வாட்டம்—திருடனென்று பழிப்பார்களோ?"

பாரி:—"ஆண்பிள்ளையாயும் விழிப்பார்களோ"

வன:—"துரோகியென்று கூறுவாரோ ?

பாரி:—"நல்லதைச் செய்யப் பால்மாறுவாரோ !

வன:—"நல்லது என்பது என்ன ? "

பாரி:—"குறை என்பது என்ன ?"

வன:—"மாமன் பெண்ணைக் கலியாணஞ் செய்யமனமில்லை"

பாரி:—"ஆனால், ஓடிப்போவதை விட்டு வேறேவழியில்லை"

வன:—"பெற்றோர்க்குத் துரோகியென்று சொல்லுவார்களோ"

பாரி:—"வழவழ குழகுழ என்று நில்லுவார்களோ"

வன:—"பின்னையெப்படி ?"

பாரி:—"நியாயமப்படி"

வன:—"அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வமல்லவா ? "

பாரி:—"மக்களும் மனைவியும் ஆயிரங்காலத்துப் பயிரல்லவா?"

வன:—"அவர்களைத்தக்கபடி தொழுவதும் கடமையல்லவா?"

பாரி:—"இவர்களை நல்லபடி காப்பதும் உரிமையல்லவா ? "

வன:—"நாழிகையாகப்போகிறது! "

பாரி:—"தூக்கம் போகப்போகிறது!"

வன:—"வண்டியும் நிற்கப்போகிறது"

பாரி:—"நான் தூங்குகிறேன்! "

வன:—"கம்பி வாங்குகிறேன்!"

# மூன்றாவது அத்தியாயம்.

பிரம்மராக்ஷதன். மாரியாத்தா.

அச்சம் என்னும் ஆற்றின் பக்கத்தில் பயங்கரம் என்னும் பர்வதம் ஒன்றிருக்கின்றது! அப்பர்வதம் மேகத்தைத்தாண்டி வானத்தைத்தீண்டி, பார்ப்பவர்கள் பகீரென்று பயப்படும்படிக்கும் கேட்பவர்கள் திகீரென்று கிலியடையும்படிக்கும் கல்லும் கரடும் முள்ளும் முரடும், மரங்களும் மிருகங்களுமாய்க் கோரரூபத்தோடு அகோரமாயிருக்கின்றது. அந்தமலையின் வடபுறத்தில் அதிபயங்கரமான குகையொன்றிருக்கின்றது. அவ்விடத்தில் ஆட்டுச்சதையும் மாட்டெலும்பும் மனிதரிறைச்சியும் மிருகங்களின சவங்களும் கணக்கு வழக்கில்லாமல் இறைந்தும் சிந்தியும் விழுந்தும் குவிந்தும் கிடக்கின்றன. ரத்தத்துளிகளின் நாற்றமோ, மெத்தத்தொந்தரை யுண்டுபண்ணுகின்றது! அக்குகையின் வாயிலண்டை மிருகங்களும் நாடுவதில்லை; மனிதர்களும் கூடுவதில்லை. புலிகளும்கண்டு கிலியடைந்து புதருக்காகச் சிதறியோடும், சிங்கங்களும் பார்த்துப் பங்கமடைந்து இங்குமங்குமாக ஓடிப் பதுங்கியே நிற்கும். இவ்வளவு பயங்கரமான குகைவாயிலண்டை இப்போதுதான் தள்ளித்தள்ளாடித் துள்ளித் துடித்து ஒரு கொள்ளிக்கிழவி மெள்ள மெள்ள வருகிறாள்! இவள் வேறு யாருமன்று, நாம் முன்கூறிய மாயக்கிழவியென்கிற மாரியாத்தாள்தான்! இவள் நகர்ந்து நகர்ந்து நாட்டியமாடி, பகையென்பதைத் தன்னுள்ளத்தில் பற்றவைத்துக் கொதித்துக் கொக்கரித்துக் குகைக்குளிருந்த ஒரு கோரமான மூலையில் வந்து சேர்ந்தாள். அங்கே ஒருபுறம் எலும்புக்குவியல், ஒருபுறம் நரம்புக்குவியல், ஒருபக்கம் பிணநாற்றம், ஒருபக்கம் ரத்தச்சேறு! இந்த ஆபாஸமான இடத்தில் அதியானந்தத்தோடு உட்கார்ந்து, கையைமூடி, மேலேநோக்கி, காலாலுதைத்து, "பகவதீ பாரதீ ஓம் மிணமிண ஆம் தகதக" என்று மந்திரஉச்சாடனம் செய்தாள். நரம்பொன்றைத் தூக்கிமாலையாயணிந்து, எலும்பொன்றைத் தூக்கி முத்தமிட்டு முகத்தோடே வைத்து, "ஓம்! ஓம்! ஜய ஜய கிங்கிலி சங்கிலி டமருக தகதக" என்று மறுபடி யொருதரம் மந்திரஉச்சாடனம் செய்தமாத்திரத்தில், படாலென்று பக்கத்திலுள்ள பாறை ஒன்று வெடித்தது. ஆக்ரோஷத்தோடு அக்கணமே மாயக்கிழவியாகிய மாரியாத்தாள், சுற்றிப்

பார்த்துச் சுறுக்கென வெழுந்து, உள்ளே சென்று சற்றே நின்றாள்! பார்த்தாளெதிரே, பாறையாகிய படுக்கையொன்றை! ஊரிலிருந்தால் நேரம் காணாதென்று, குகைக்குள் வந்து கும்பகர்னன் தூங்குவது போல், காலைநீட்டி மூச்சை யோட்டி பிரம்மஹராக்ஷஸனொருவன் பிரம்ஹானந்தமாய்த் தூங்குகிறான்! அவன் கால்விகளம் கால்மை யும், கைவிகளம் அரைமையும் என்று சொல்லும்படி, அகோரவீர பத்திரனைப்போல் ஆலாகோலமாய்த் தூங்குகிறான்! அவன் கோரப் பல்லும் கொடுமையான மூக்கும், கண்டோரஞ்சிக்காதவழி யோ டத்தக்கவையாயிருந்தன ! கடைவாயில் துண்டுச்சதையும் கன்ன மெல்லாம் ரத்தக்கறையும் அவன் உண்ட உணவின் உன்னத்தைக் காட்டின ! அவன் பக்கத்தில் மாயக்கிழவி 'மகிமையாய்' நடந்து, தன் கையிலிருந்த எலும்பால் அவன் தலையைக்குத்தி, தான் கொண்ட நரம்பு மாலையை அவன் முகத்தில் போடவும், பிரம்மஹ ராக்ஷஸன் அதிர் வெடிபோல் அதிர்ந்து ஆகாசபாணம்போல் எழுந்து, சுற்றும் முற்றும் விழித்து, எதிரே நிற்கும் கிழவியைப் பார்த்து, பீரங்கிக்குரலில் பேசத்தொடங்கினான்.

"ஹா! மாரியாத்தா! உன்னைப்பார்த்து எத்தனை நாளாச்சி! மந் திரத்தை மறவாமே வைச்சிருந்தியா! நீ கெட்டிக்காரியாச்சே! நீ கெட்டிக்காரியாச்சே! இப்போ என்ன சமாசாரம்? எங்கிருந்து வாரே! என்ன சொல்றே! குருவிக்குழம்பு ஒணுமா? கொக்குகறி ஒணுமா? சொல்லு சொல்லு" என்று மிகவும் நேசம் காட்டி பாசத் தோடு பேசினான்.

மந்திரக்கிழவியாகிய மாரியாத்தா அதிக சந்தோஷங்கொண்டு, ஆத்திரத்தோடு ஆவேசத்தைச்சேர்த்து,

"ஏன்டா அ· அப்பா! பிரம்மஅ ராக்ஷஸா அ! நான் மந்திரத் தையும் மறக்கலெ, மாயத்தையும் மறக்கலெ, உன்னைப்பார்த்து ரொம்ப நாளாச்சே, அத்தைத்தொட்டுதான் இங்கு வந்தேன், உனக்கு நல்ல 'ப்ரசென்ட்' (வெகுமதி) கொண்டுவந்தேன்" என்று மாரியாத்தா ஆசைமொழியை அவாவோடு சொன்னாள்.

"அப்படியா! அப்படியா!!"

"மாரியாத்தா! நீ மந்திரத்தை மறக்காமே யிருந்ததாலேதான் இங்குவந்தே! என்னை எழுப்பினே! இல்லாகிட்டிப்போனா இங்கு வர முடியுமா, என்னை எழுப்பமுடியுமா? போனதுபோவுது! என்ன சமா

சாரம்? ப்ரஜன்டா கொண்டுவந்தே! என்ன ப்ரஜன்ட்! என்ன ப்ரஜண்ட்! அடே! பசங்களே! கயனிகாத்தான், காரிமூஞ்சான், வேலைபாத்தான், விண்ணாணப்பேச்சான் அல்லாம் ஓடிவாங்கடா! ப்ரஜென்ட்! ப்ரஜென்ட்! மாரியாத்தாகொண்ணாந்தா வாங்கடா, வாங்கடா" என்று பிரம்ஹராக்ஷதன் பிரமாதமாய்த் தடபிடல் செய்து பேசினான்.

இப்படி பிரம்மராக்ஷஸன் கூப்பிட்டதும், சங்கிலிதரித்த கிங்கிலியர்களைப் போன்றும் தடதடாலென்று அனைவரும் கிடுகிடாய்த்துப்போக, நால்வர் ஓடிவந்து, காகூ ஆஊ என்று காகங்களாய்க் கத்தி பக்கத்தில் அகப்பட்ட ஆடுகளையும் மாடுகளையும் கழுகுகளாய்க் கொத்தி, "ராஸா எதுக்குக்கூப்பிட்டிங்கோ! எதுக்குக்கூப்பிட்டிங்கோ" என்று 'ஏகமாய்' கூச்சலிட்டுக் காலில் விழுந்தார்கள். விழுந்து எழுந்து, இப்புறம்பார்க்க மாரியாத்தா ஓதுப்புறமாய் நிற்கக்கண்டு,

"ஹா! ஹா! மாரியாத்தா கூழுவாத்தா! மாரியாத்தா கும்பம் போட்டா! மாரியாத்தா எப்போ வந்தாலும் ப்ரஜென்ட் இல்லரமல் வருகிறதில்லே! மந்திரம் கத்துக்கொடுத்தோம் மாரியாத்தாளுக்கு; அவ செய்யும் தந்திரம் அடேயப்பா என்னா வேடிக்கை!" என்று நாலுபேரும் கோலாகலமாய்க் கூவிக்கொக்கரித்தார்கள்.

உடனே, பிரம்மராக்ஷஸன், "அடே., பசங்களா பொல்லாப் பசங்க இவங்க என்னா சொன்னாலும் தெரியிறதில்லே சும்மா இருங்கடா சும்மா இருங்கடா சுடுமூஞ்சிப்பயகளா! மாரியாத்தா சொல்லட்டும் மாரியாத்தா சொல்லட்டும்." என்று நாலுபேரையும் நன்று யடக்கிவிட்டு, மாரியாத்தாளை நோக்கி, "ஆயா. நீ பேயா வியிக்காதே! ஆயா, நீ நாயா நண்ணா சொல்லு! நரி ஊளை யிடுறாப்போலே சொல்லு. மிய மிய குய குய இண்ணாதே! நண்ணா கொலைச்சி சொல்லு நண்ணா கனைச்சி சொல்லு" என்று பிரம்மராக்ஷதன் ஒரு கத்தாய் ஓரைந்து நிமிஷம் கத்தினான்.

இத்தனை கூச்சலுக்கும் பதிலொன்றும் சொல்லாது இளைப்பாறியிருந்த மாரியாத்தாள், மூச்சை ஒட்டிப் பேச்சை நீட்டி,

"பிரம்மராக்ஷஸா, அடே, பயங்களா, கயனிகாத்தான், காறிமூஞ்சான், வேலைபாத்தான், விண்ணாணப்பேச்சான் நீங்க எல்லாம் கூச்சபோடாதே யிருந்தா, நான் சொல்றேன்! நம்ம பிரம்மராக்ஷ

ஸ்னுக்கு நல்லகோஸ், நல்லகோஸ்.'' என்று ஆசைக்காட்டி ஆவேஸமாய் பேசவும், எல்லாரும் கிமாகம என்னமல் நிச்சப்தமாயிருந்தார்கள்.

பிறகு மாரியாத்தாள், "அடே பிரம்மராக்ஷஸா, நீ எனக்கு மந்திரம் கத்து கொடுத்தே, மாயம் கத்து குடுத்தே உனக்கு நான் உபகாரம் செய்யாமலிருந்தா ஊரார் நகைக்கமாட்டாரா? குருவிக் குழம்பு குடிப்பதிலும் கோவேறுகழுதையை தின்பதிலும், மனிசாள் ரத்தத்தை மணங்கு மணங்காய் குடிப்பதிலும் காலங்கழித்தேயே யல்லாமல் நீ என்னடா அறிவே! நல்ல பெண்ணை, அயகான பெண்ணைக் கல்யாணஞ் செய்துக்கொண்டு காலங்கழிப்பதைவிட்டு, சுகமடையுறதை வுட்டு குகையிலே பூந்துகுனு குருவியை புடிச்சுக்குனு இருக்கிறயே? உனக்கு வெக்கமில்லையா?'' என்று மஹா முடுக்காய்க் கேட்டாள்.

பிரம்மராக்ஷஸனுக்கு, அதனல் ஆசையும் பாசமும் அதிகமாக வுண்டாய் மாரியாத்தாளை நோக்கி,

"ஏ, மாரியாத்தா, என்னைப்பெத்த ஆத்தா, என்னை வளத்த தாதா, உனுக்கு நான் மந்திரம் கத்துக்கொடுத்தேன்தான்! ஆனலும் நீதான் எனுக்கு வாத்தியார், நீதான் எனுக்கு வயற்றெரிச்சலார். என்ன சமாசாரம் சீக்கிரம் சொல்லு, சீக்கிரம் சொல்லு'' என்று பிரம்மராக்ஷதன் பிரம்மாண்டமாய்க் கூச்சலிட்டான்.

"அடே! மந்திரங் கத்துக் கொடுத்த மாயாளி! தந்திரங்கத்துக் கொடுத்த தகல்பாசி! என்வித்தை உனக்குத் தெரியுமா! என் புத்தி உனக்கு வருமா? ஜகன்மோகன சிங்காரம் இண்ணு அவளுக்குப் பேரு. அப்பன் ராஜா அவன் செத்தான் ஒன்பது வருஷமாச்சி! ஆம்படையான் ஓடிப்போனன் ஒருவருஷமாச்சி! அவரொம்ப அயகு அவளைப்போல் நீ யெங்கும் பாத்திருக்கமாட்டே! அவளைத்தூக்கிக்குனு வந்துடு! அவளை நீ கலியாணம் பண்ணிக்கோ அமாவாசையின் பக்கத்திலே பர்வத்தை வைச்சாப் போலிருக்கும்! அவளைப் பொண்டாட்டியா வச்சிக்கினு இரு உனக்கு பசியெடுத்துகுனு, கொக்கு குருவி, புலி பூனை, மண்ணு மசானம் எதுவும் ஆப்படாகிட்டிபோனு அவளை நீ பலாப்பழமா முழுங்கிடு, பிஞ்சிகத்திரிக்காயா வறுத்து தின்னுடு, பொடலங்காயா பொரிச்சுமெண்ணுடு! பிரம்மராக்ஷஸா! என்ன சொல்றே?'' என்று மாரியாத்தா கொஞ்சம் சமாசாரம் வெளிவிட்டாள்.

இத்தனை சொல்லவும் பிரம்மராக்ஷஸனுக்கு நேத்திரம் தெரியாத ஆத்திரம் வந்துவிட்டது! "அடீ, மாரியாத்தா, தொவப்பன்சாமிபோலே, என்னிண்டே கத்துகுனு எனக்குமேலே கதைபண்ற கள்ளக்கியிவி! அவ, எங்கடீ இருக்கிறா, இப்பவே சொல்லேன்! நான் போய் பூனைவக்கிள்ளிகுனு வந்துடுறாப்போலே வந்துடுறேன்! ரோஜாப்பூ! மோந்தாலும் மோரலாம், தின்னாலும் தின்னலாம்!" என்று பிரம்மராக்ஷதன் அவசரமான குரலோடு அதி பர பரப்பாய்க் கேட்டான்.

இதைக்கேட்ட மாரியாத்தா சொன்னாள்:

"அடே பயலே! அவ அப்பன் பெரியாராஜா! அவனுக்கு பொல்லாகாலம் வந்து எதிராளி ஊரையெல்லாம் புடிச்சுகுனு இருக்கமாத்திரம் ஊடு கொடுத்தான்! கொஞ்சநாளைக்கெல்லாம் அவன் செத்துப்பூட்டான்! ஜகன்மோகன சிங்காரம், அவரொம்ப கொயந்தை பொண்ணு! அவபோனவருஷம் கண்ணாலம் பண்ணிகுனா! ஆம்படையான் ஒரு அவலக்ஷணம்புடிச்ச பொண்ணை யிழுத்துகுனு எங்கேயோ ஓடிப்பூட்டான்! ஜகன்மோகன சிங்காரத்து அண்ணன் கொஞ்சதூரத்திலே யிருக்கிற ஆனந்த நாரத்திலே ஒரு தோட்டம் ஒரு பங்களா வச்சிகினான். அவன் வாசனையும் மீசையும் அட்டகாசமும் ஆர்ப்பாட்டமுமா ஒண்ணுமில்லாத வறட்டோட்டி எரட்டெ எண்ணு வாங்களே அந்த மாதிரி காலங்கயிக்கிறான்! அவனுக்கு ஒரு பிள்ளை ஒரு பொண்ணு அந்த பையனுக்கு கண்ணாலம் பண்ணிவைக்கப்போறா! வயிலியே தூக்கிகினு வந்துடு! எப்படிண்ணாலும் தூக்கிகினு வந்துடு! சீக்கிரம் வந்துடு! அடே! அடே! அவகர்வம் புடிச்சவடா! அவளை அடக்கவேணும்! ஜாக்கிரதை பொறப்படறையா" என்று சாதாரண சமாசாரத்தை ராமாயணமாய்ப்பேசினாள்.

உடனே பிரம்மராக்ஷஸன் தகதக ஜகஜக என்று எழுந்துவிட்டான். "நான் அவளை எங்கிருந்துண்ணாலும் கொண்டுவந்துடுறேன்! அடே பயங்களா, கயனிகாத்தான், கருவாடு சுட்டான், காறிமுஞ்சான், எகிறிஉயுந்தான், வேலைபாத்தான், விண்ணாணப்பேச்சான் எல்லாம் வாங்கடா, ஒருத்தன் கொடை பிடிக்கணும், ஒருத்தன் கும்பிட்டு நிற்கணும், ஒருத்தன் தமுக்கடிக்கணும், ஒருத்தன் தாளம் தட்டணும் அல்லாம் வாங்கடா! மாரியாத்தா நீ போய்வா. காரியத்தை முடிச்சுகுனு அப்புறம் உன்னைப்பாக்கிறேன்" என்று பிரம்மராக்ஷஸன் பிருவாய்ப் புறப்பட்டுவிட்டான்.

தகதிகணும் தகதிகணும் தகதிகணும் தகதிகணும்
மாரியாத்தாவந்து மனசைக்கெடுத்தாளே,
தாரையூது பயங்களா தப்பட்டைகொட்டுபயங்களா
ஜகஜில் ஜகஜில் ஜகஜில் ஜகஜில்
ஆட்டைக்கடிங்கடா மாட்டைப்பிடிங்கடா
அல்ல விடுங்கடா தொல்லெ யொழிங்கடா
மத்தாப்பு போலே பொண்ணு மாரியாத்தா கெரண்ணுந்தாளே
ஓடிப்போவோம் வாங்கடா ஒளித்திருப்போம் வாங்கடா
தகதிகணும் தகதிகணும் தகதிகணும் தகதிகணும்
ஜகஜில் ஜகஜில் ஜகஜில் ஜகஜில்
மாரியாத்தா எனக்கு மனவிகொண்ணுந்தாளே
பசியில்லாப்போனுபத்தினி பசியெடுத்தா சட்னி
தம்பூரு மீட்டுங்கடா தமுக்கு போடுங்கடா
கொம்பு ஊதுங்கடா கோலம் வாருங்கடா
தகதிகணும் தகதிகணும் தகதிகணும் தகதிகணும்
ஜகஜில் ஜகஜில் ஜகஜில் ஜகஜில்
மாரியாத்தாவந்து மனசைக்கெடுத்தாளே
தாரையூதுபயகளா தப்பட்டை கொட்டுப்பயகளா!

# நான்காம் அத்தியாயம்.

பிரம்மராக்ஷதன். ஜகன்மோகன சிங்காரம்.

"ஹா ப்ரம்ஹதேவா! இதுவும் தலைவிதியா! கொடுமைவிளைத்துக் கோரஞ்செய்த கொடிய சண்டாளர் கோடிபெயரை நான் பார்த்திருக்கிறேன்! கல்யாணத்திற்கு வரவேண்டும் என்று கரூராய்ச்சொல்லியனுப்பி, நான்வந்து சேருவதற்குள் நாணயமில்லாது போய்விட்டார்களே! ஒப்புக்கு ஓலையனுப்பி, ஊருக்குப் பால்குடித்து, மனச்சாட்சியென்பது தினையளவு மில்லாது என் அண்ணனும் அண்ணியும் பிள்ளையையும் பெண்ணையும் அழைத்துக்கொண்டு சவாரிவிட்டார்களே! இவர்களை நம்பி கையில் காசுமில்லாமல் கூடவரத்துணையுமில்லாமல் இந்தகதியில்வந்து இடர்ப்பட்டு நின்றேனே! இஷ்டமில்லாத மகன்தலையில் கஷ்டத்தைக்கொண்டுவந்து வைக்கத் துஷ்டத்தனமாய்க் கருதுவது போலவே நஷ்டப்பட்ட என்னையும் கஷ்டத்தில்வைக்க இஷ்டப்பட்டார்களே! இஃதென்னஇடக்கு! தந்தையையுமிழந்து தலைவனையுமிழந்து, வாழ்ந்த பிழைப்பை நினைத்துச் சோர்ந்துபோகாத, எனக்கு மேலும்மேலும் துயரம் விளைத்துத் துன்பத்திலழுத்திப் போராட்டத்தோடு ஏழாட்டங்காட்டும் சண்டாள அண்ணனும் சதிகார அண்ணியும் மனிதர்களா, மிருகங்களா? ஹா! கடவுளே! காட்டிற் புலியிடத்தும் குகையிற் சிங்கத்திடத்தும் சங்கடப்படாதிருக்கலாம். மலையிற் பாம்பிடத்தும் ஆகாயத்திற் கழுகிடத்தும் அபாயமில்லாதிருக்கலாம்! யானையோடு ஸ்நேகம் பண்ணலாம், பூனையோடு பொருந்திவாழலாம்! மனிததேகத்தோடு மிருகத்தன்மையடைந்தவர்களிடம், அப்பப்பா, கொடிது கொடிது, அவர்கள் சேர்க்கையே ஆகாது, அவர்கள் கூட்டுறவேயுதவாது! குடிகாரனைநம்பினும் நம்பலாம், கோபக்காரனை நம்பவேதகாது! அவனிடம் சமயம்பார்த்துத் தப்பலாம், இவனிடம் புட்டிகள் இயற்கையிலேயே இருப்பதால் இவன் உள்ளுக்குள்ளேயே குடித்து உளர்ந்தடுமாறுஞ்சமயம் இப்போதென்றுசொல்ல எப்போதுஞ்சரிப்படாது. அதுபோல், நேராக, மிருகங்களாயிருப்பவைகளிடம் சீராக 'உஷார்'ாக நடக்கலாம், நடிக்கலாம்! பசப்பியபல்லினால் 'அசைப்பில்' பிடுங்குவதும், தட்டுகிறகையினால் வெட்டிச்சாய்ப்பதும், முத்தம் கொடுப்பதுபோல் கொந்திப்பிடுங்குவதும், மோசக்

கருத்தோடே நாசம்பண்ணுவதும், முன்னாலே போகப்பார்த்துப் பின்னாலே பள்ளந்தோண்டுவதும்-அப்பா! இத்தகையமனிதப்புலிகள், மனிதச்சிங்கங்கள், மனிதப்பூனைகள், மனிதயானைகள், மனிதநாய்கள், மனிதநரிகள், மனிதக்கழுதைகள், மனிதமிருகங்கள்—இவர்களிடம் தப்புவது ஈசனாலும் முடியாது, வாசவனாலும் ஆகாது, கேசவனாலும் இயலாது! அண்ணன் ஆடம்பரம் அளவிடமுடியாது; அண்ணிகலகம் சொல்லவேமுடியாது. முதலில் சமாசாரம் வந்துதானே நான்புறப்பட்டேன். (ஜன்டில்மென் இன் ராங்க் நதிங்க் இன்திபாங்க்—Gentleman in rank nothing in the bank) அந்தஸ்தில் ஐயா மஹாராஜர். ஆஸ்தியோ பாங்கியில் அணு அளவுமில்லை என்று சொல்லுவார்கள் அதுபோல் என்பெருமையும்போய், என்அருமையும் போய், வண்டிக்குக்கொடுக்கக் காசில்லாவிட்டாலும் சற்றுத்தூரம் போயாவது வண்டிவைத்துக்கொள்ளலாம்; இல்லாவிட்டால் நடந்தே தொலையலாம் என்று புறப்பட்டேன். எதிரில் பரசுராமன் வருவதுபோல் 'ஏடாகூட'க்கிழவி வாதிட ஆரம்பித்தாள். ஒருஆள் சென்னது போதாதென்று, இரண்டாவதாகக் கிழவியையும் ஏவிவிட்டார்கள் போலிருக்கிறது.

வந்தகாரியத்தைச் சொல்லாவிட்டாலும், கிழவி, சண்டையிட்டுச் சடுதியிலொழிந்தாள். இங்குவந்தால் இந்தக்கதியாயிருக்கின்றது. இருக்கிறது இருக்கட்டும். நடக்கிறது நடக்கட்டும். நம்கையிலோ காசில்லை. நடக்க என்னமோ சக்தியில்லை' ஆனாலும் மெதுவாகத்தினம் பத்து பதினைந்துமயில் விழுக்காடு நடந்து சென்றாலும் ஏறக்குறைய ஒருவாரத்தில் அலங்காரப்பட்டணம்போய்ச்சேரலாம். நடப்பதே சரி: அங்கும் கல்யாணம் பையன்பாட்டால் அலங்கோலமாய்த்தானிருக்கும், சரி! என்ன ஆனபோதிலும் இப்போதே புறப்படுவோம்"

மேற்சொன்னமாதிரி யெல்லாம் ஆனந்த நகரத்தில் ஜகன்மோஹன சிங்காரம் வெகு அமைதியாய்த் தனக்குத்தானே பேசிக்கொண்டு அவ்வூரைவிட்டு அலங்காரப் பட்டணத்திற்கு அவள் கால்நடையாகவே புறப்பட்டு விட்டாள். நாம் முன் சொன்னமாதிரி ஆனந்த நகரத்திற்கும் அலங்காரப்பட்டணத்திற்கும் ஏறக்குறைய நூறுமைல்தூர மிருக்கலாம். அஃதென்னவோ அதிக தூரமில்லாவிடினும், வழியோ மிகவும் இடக்கர்மடக்கரானது! ரெயில்வண்டியில் போகும்போதே காட்டில் அலைவதும் கணவாயைத்தாண்டி

வதும் ஆற்றைக்கடப்பதும் அருவியிலிடைவதும் மலையைத்தாண்டு மஹாகடினமான வழியில் புகுந்து சென்று வெளியே வருவதும் இவைகளெல்லாம் பார்க்க வேடிக்கையானவையாயிருந்தபோதிலும் பயங்கரச்செய்கைகள் என்பதை எவர்தாம் மறுக்கக்கூடும்? இந்த அசாத்தியமான வழியில் அச்சம் பயமில்லாமல் ஒரு சுந்தரரூப சுகிர்தமோகினிப்பெண் தன்னந்தனியாய் பென்னம் பெரியவள் போல் செல்வது என்ன தைரியத்தைக்காட்டுகின்றது, என்ன ஆச்சரியகரமானது என்பதை இதை வாசிப்பவர்கள் தெரிந்து கொள்ளலாம். ஜகன்மோகன சிங்காரம், பாரிஜாதத்தைவிடப் பதின் மடங்கு தைரியசாலி. பாரிஜாதத்தைப்போல் அவ்வளவு புத்திகோசரமும் சாகஸமும் சமயோசித நடையுடைமையும் அடைந்திருப்பதோடும் நடக்கையில் அவைகளைக்கொண்டுவருவதிலும் ஜகன்மோகனசிங்காரம் நல்லதைரியமும் மனவுறுதியு முடையவள்! இதனால் எப்படியும் அலங்காரப்பட்டணத்திற்குப்போய் என்னென்ன ஆலாகோலம் நடக்கிறதென்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்னும் எண்ணங்கொண்டவளாய் ஜகன்மோஹன சிங்காரம் ஆனந்த நகரத்தைவிட்டு அலங்கார நகரத்துக்குப் புறப்பட்டாள்.

ஓரடியெடுத்து ஒய்யாரமாய் வைத்ததும் ஜகன்மோகன சிங்காரத்திற்குக் காலில் சிறியமுள்ளொன்று தைத்துச் சிறிது ரத்தங் கண்டது. சற்றுநேரம் உட்கார்ந்து முள்ளைப்பிடுங்கிப் போட்டு முன்னே நடக்கவும் கல்லொன்று தடுக்கி அவள் கரணம்போட்டாள். 'இதென்ன என்றுமில்லாத சம்பவமாய் இன்று வந்து நேர்ந்ததே.' என்று ஜகன்மோகன சிங்காரம் உள்ளேக்குள்ளே யுருகி மெழுகானாள்! உருகியமெழுகு தயிரியத்தினால் உறைந்து இறுகவும், மறுபடியும் ஜகன்மோகன சிங்காரம் எழுந்து புறப்படத்தொடங்கி ஐந்தாறு அடி வைத்தமாத்திரத்தில், சுடு சுடுத்த கிழவி ஒருத்தி வெடுவெடென்று பேசிக்கொண்டு கடுகடுத்த முகத்தோடே எண்ணெய்ப் பானை ஒன்றை யெடுத்துக்கொண்டு எதிரே வந்தாள்! இப்படியாக துர்ச்சகுனங்களொன்றின்பின் னொன்றாகச் சம்பவிக்கவும், ஜகன்மோகனசிங்காரத்திற்குச் சித்தங்கலங்கிச் சிவன்பாலும் சிதரன்பாலும் மனமதுசென்று உயிரதுதுடித்து, உளமதுதுதித்து, 'எ! சுயம்பிரகாசமே, சுப்பிரதீபமே! ஏழையைக்காப்பது எந்தல் கடனல்லவா? நான் துயரமாகிறகடலில் துணையாகிற கப்பலை யிழந்து கலக்கமாகிற நீர்ச்சுழலில் *கங்குலும்பகலும் கவலைப்படுகிறேன்! எல்

* கங்குல் = இரவு

ல்லாவிதத்திலும் பொல்லாங்கே நேரிடுகிற ஏழையாகிய எனக்கு உன் திருவருள் துணையில்லாவிட்டால் உளமெப்படித்தேறுவது? அப்பன் மாண்டான், ஐயன் போனான்! அண்ணன் கொடுமை யாவரால் சொல்ல முடியும்! இவ்வித சங்கடத்திலும் எவ்விதமேனும் போய் வருவதே சரி யென்று உளந்தேறி உறுதிகொண்டு, வெளியேவந்து நடையைத்தொடங்கினல் இல்லாத சகுனமும் பொல்லாத குறிகளும் எண்ணில்லாமலும் எதிர் பாராமலும் வந்துகொண்டே யிருக்கின்றனவே! யான் உன்னையே நம்பி உன் அடியரையே வணங்கினேன்! 'அவை நல்ல நல்ல அடியா ரவர்க்கு மிகவே' என்று அடியாரொருவர் அருளிச்செய்த வண்ணம், கிரககுற்றங்களும், வார தோஷங்களும், சகுனப்பொல்லாங்குகளும், துர்த்தேவதைகளின் குரூரங்களும் உன் அருள் விசேஷத்தால், தீயிற்பட்ட தூசுபோலும் விலகியோடுமென்பதில் யாதுதடை! ஆகையினுல், ஏ, பரம்பொருளே, பக்தர் துணேயே, என்னைக்காப்பது உன் கடன்! என்ன கெடுதிகள் நேரிட்டாலும் நேரிடட்டும்! உன்னையே நம்பி இப்போது ஊருக்குப்புறப்படுகிறேன்" என்று தன் மனதிலேயே பகவானைத் துதித்து, பகவானிடம் விடைபெற்றுக்கொண்டு ஜகன்மோகனசிங்காரம் பர பர வெனப் புறப்பட்டுவிட்டாள்!

தினமொன்றுக்கு உத்தேசித்தபடி பத்துபதினைந்து மைல் வீதம் நடந்துகொண்டு மூன்றுநாள் சென்றனபிறகு, நான்காநாள் தான் தங்கியிருந்த கிராமத்தினின்றும் தயிர்சாதம்கட்டிக்கொண்டு தனியாகப்புறப்பட்டு மூன்றுமைல் வந்தஅளவில், ஒரு பயங்கரமானகாடும், மருட்சியுண்டாகும் மலையும் சம்பவித்தன! காட்டில் இப்படிப்போனல் சப்பாத்திமுள், அப்படிப்போனல் அகோரமான பள்ளம்! முள்ளும்கல்லும் முன்னும்பின்னும்! பாவங்கள்பெருத்து அக்கிரமங்கள்அதிகரித்து சன்னல் பின்னலாய் ஒன்றோடொன்று சுற்றித்தொற்றிப் பற்றிப்படர்ந்து, ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், லக்ஷம், கோடிக்கணக்காய்ப் பெருகிஅருகி தீமைவெளியேபோக இடமில்லாமலும் நன்மை உள்ளேநுழைய சந்துகாணுமலும் ஞான வெளிச்சம்பரவி நல்லறிவு உண்டாகச் சற்றேனுமிடம் சமாதானமாய்க் கொடாமலும் சதா துன்பங்கொடுப்பதுபோல், செடிகளும் கொடிகளும் மரங்களும் விருக்ஷங்களும் ஒப்பனை யென்பது செப்ப முடியாவண்ணம் 'ஜோ' என்றடர்ந்து, கண்ணை மறைத்தும் கருத்தை அழித்தும் ஜகன்மோஹன சிங்காரத்திற்குப் பெரியதுன்பம் விளைத்தது! இப்புறம் நரிக்கூச்சல், அப்புறம் நாய்க்குலைத்தல், இங்கே

புலியுறுமல், அங்கே சிங்ககர்ச்சனை, ஓரிடம் சாக்குரல், மற்றோரிடம் சங்கடக்குரல் இவ்விதமாகப் பல்விதத்தாலும் பயங்கரமென்பதே உருவெடுத்துவந்ததுபோல் உளக்கலக்கஞ்செய்யும் ஒப்பற்ற அந்த இடத்தில் ஜகன்மோஹன சிங்காரத்திற்கு இப்படிச்செல்லவும் கால் வரவில்லை, அப்படிப்போகவும் கண்தெரியவில்லை! கண்ணுமற்றுக் கருத்து மழிந்து, அச்சம் புகுந்து மயக்கம்மிகுந்து மனந்தடுமாறுதல் அதிகமாய்த்தோன்றி அகத்தை வருத்தினதால் ஜகன்மோஹன சிங்காரம், 'அப்பா' என்று ஆயாசப்பட்டு 'ஐயா' என்று தரையில் விழுந்தாள்.

இந்தத்தருணம், மந்தமாகிய கிடாமேல் மதோன்மத்தனாய் உட்கார்ந்து, காறி மூஞ்சான், கருவாடு சுட்டான், முதலிய ஏவலாளர் எக்காளம் ஊதவும், சிங்கங்கள் பயந்து சிதறியோடவும், புலிகள் நடுங்கிப் புதருள் நுழையவும் 'ஹா! ஹா' என்று தப்பட்டை கொட்டித்தலையை விரித்து, பிரம்மராக்ஷதன் பிரமாததடபிடலுடன் பிரசன்னமானான்! ஜகன்மோகன சிங்காரம் போகிறவழி முதலியவற்றை மாரியாத்தாள் மூலமாய்க் குறிப்பறிந்துகொண்ட கொடியோன், காட்டில் நுழைந்தும் மலையைச்சுற்றியும், கண்ணிலிருந்து மூக்கில் வந்து மூக்கிலிருந்து காதில் நுழைந்து காட்டையெல்லாம் கரத்தால் அரிப்பரித்துக்கொண்டு வரும்போது, ஓர் இருளடர்ந்த மூலையில் ஒப்புயர்வில்லாத மாணிக்கம் வைத்ததுபோன்று ஜகஜ்ஜோதியாய்ப் பிரகாசிக்கின்ற ஜகன்மோகன சிங்காரத்தைக்கண்டு—

### பாட்டு

இவதானோ அவசொன்னு

---

நெலாபோலே யிருக்குறாளே
நச்சத்திரம்போலே மின்னுறாளே (இவ)
கயனிகாத்தான் பாருடா!
கருவாடுசுட்டான் கேளுடா
இம்மாத்த மிந்தாலும்
எம்மாத்தம் வெளிச்சன்டா
இவதானோ அவசொன்னு

---

எரிஞ்சமூஞ்சி கேளடா
இளிச்சபல்லான் பாருடா

எளைச்சுபோயி தூங்கிறு
களைச்சுபோயி ஏங்கிறு
குருவிரத்தம் ஊத்தடா
குழம்புகொஞ்சம் சேத்தடா
இவதானோ அவசொன்னு

---

தகதகவெண்ணு மின்னபோலே
ஜிலுஜிலுவெண்ணு வைரம்போலே
ஆட்டுரத்தம்போலே ஓதடும்
கோட்டைசுவருபோலே மூக்கும்
இவதானோ அவசொன்னு

என்று ராக்ஷசப்பாட்டைரௌத்ராகாரமாய்ப்பாடினுன்! தலைகால் தெரியாது தத்தா பித்தா என்று தள்ளாடித்தரையில் விழுந்தான்.

“அடே! பயகளா! இவ என்னு நண்ணுயிக்குறுபாருங்கடா! களைச்சிபோய் வுயந்துட்டாடா! பசிச்சுபோயிபடுத்துட்டாடா! குருவிரத்தம் ஊத்தலாமா? கொரங்குக்கறிபோடலாமா? பாருறு! அடே! பயகளா! நெலாபோலே செவுப்பா வெளுப்பா அயகா இருக்குறுடா.” என்று பிரம்மராக்ஷதன் பிரமாதமாய் ஆச்சரியப்பட்டுப் பேசினுன்.

அதைக்கேட்ட அவன் வேலைக்காரர்களாகிய கழனிகாத்தான், கருவாடு சுட்டான் முதலான துஷ்டர்கள் கொக்கைப் பிடித்து ரத்தம் பிழிந்து குருவியைப்பிடித்து ரத்தம்பிழிந்து இரண்டையும் சேர்த்து ஜகன்மோகன சிங்காரத்திற்கு வார்க்கப்பிரயத்தனப்பட்ட போது மயக்கத்திலும் வாசனை பிடிக்காது, அவள் முகம்குவிந்து வாய்மூடிக்கொண்டது! இயற்கைப் பெருமையையும் இயற்கை வலிமையையும் அசைக்க யாவரால் முடியும்? இயற்கையென்பது யாது? இயற்கையென்பது இறைவன் வெளித்தோற்றம்! ஈசனை யசைத்தாலின்றி இயற்கையைப் புரட்டமுடியாது! நீரைநெருப்பாக்கி, நெருப்பை நிலாவாக்க யாவரால் தாம்! ‘ஜன்மத்திலே பிறந்தது செருப்பாலடித்தாலும் போகாது’ என்று மூதோர் முதுமொழி யிது பற்றித்தான்! சிங்கார இயல்போடு அலங்காரப்படுத்திக்கொள்ளும் அவாவினர்க்கு அஷ்டதரித்திரமும் அடுத்தடுத்து வந்தபோதிலும் அழுக்கைக்கண்டு வெறுப்படைவாரேயன்றி கந்தலையும் கடைகெட்டதையும் கண்டு சிந்தை மகிழார்கள்! அவர்கள் எண்ணத்தைக்கொண்டு உயர்வடையவும் கிடைத்ததைக்கொண்டு கடைத்தேறவும்

முயல்வாரேயன்றி, நாணயமில்லாதவற்றில் வீணவாவுறார்கள்! அது போலவே, சீர்கேட்டையும் சிங்காரக்குறைவையுமே இயற்கையாகக்கொண்டு, அழுக்கைப்பூசியும் கந்தலையுடுத்தும் சேற்றில்புரண்டும் சாணியிலுழன்றும்; அழுங்கும்புழுக்களுமே அன்னியோன்னியநேசர்களாகப்பெற்று ஆபாஸப்படுவோர்க்கு ஆயிரம்வந்தாலும் அழுக்கால் பெருக்குவார்களேயன்றி ஆனந்தத்தாலும் அழகின்மிகுதியாலும் அந்தமுறச்செய்து சிந்தைகளியார்கள்! கோடிரூபாய் வந்து வீடுகட்டுவதானாலும், இவர்கள் ஆடுகட்டும் கொட்டகைபோல் வீடுகட்டுவார்களேயன்றி, மனிதர்வாழும் மாளிகைபோல் ஒருநாளும் அமைக்கவே அமைக்கார்கள்! எட்டடிக்குச்சு என்னும்படி அறைகளும், குருவிக்கூண்டு என்னும்படி ஜன்னல்களும்அமைத்து மேஜைமேல் பீயும் புண்ணாக்கும் அலமாரிமேல் அழுக்கு அரையங்குலமுமாக ஆபாஸம் செய்வார்கள்! இவர்கள்உண்ணும் உணவும் உடுக்கும் துணியும் படுக்கும்பாயும் செய்யும்தொழிலும் இவ்வளவேதான்! சுத்தமென்பதிலேயே சித்தம்வைத்து, சுகம்என்பதிலேயே அகம் பொருத்தி அலங்காரஸ்ரேஷ்டர்களான சிங்காரபுருடர்கள், கட்டுவது குடிசையானாலும் கண்ணுக்கு அழகாயும் சுகத்திற்கு வாய்ந்ததாயும் * கவின்பெறக் கட்டுவார்கள். உடுப்பது வைகுண்ட சல்லாவானாலும் அழுக்கில்லாமலும் அலங்கோலமில்லாமலும் சிந்தைமகிழ்வுறச் சந்ததமும் தரிப்பார்கள்! இஃது சுயகாரியமென்பதன்று. சுயகாரியமாயிடின் அஃது கேவலம் இழிவைக்காட்டிப் பழியடைந்துவிடும். சுயகாரியமென்பதின்றி உயர்காரியமாய் இயற்கைப் பெருமை விளங்குங்கால்; அதற்குச் சரிசமானமாக் வேறெதைத்தான் சொல்லலாகும்? இயற்கைப் பெருமை எங்கு விளங்குகின்றதோ அங்கே இலக்குமியும் இயற்கையாகவே தங்குவாளேயன்றி வேறெங்கும்போக விருப்பமேகொள்ளாள். இயற்கைப் பெருமையே பெருமை, இயற்கைவன்மையே வன்மை! இயற்கைப் பெருமையிற் குறைந்தோரும் இயற்கை யறிவு சிறிதுடையவர்களாயின், இயற்கையாலே தமது இயற்கையைச் சித்திரித்துவிடுவார்கள்! இதுபற்றியேதான் கெட்டவர்கள் நல்லவர்களாவதும், இழிதொழிலாளவர் உயர் தொழிலை மேற்கொள்வதும் என்றுநினைக்க நியாயமிருக்கின்றது.

மேற்கூறியபடி ஜகன்மோஹன சிங்காரம் இயற்கையில் உன்னதமும் சுபாவத்திலே சுந்தரநடக்கையு முடையவளாதல்பற்றி, குரூரபதார்த்தமாகிய குருவிரத்தமும் ஹிம்சையுணவாகிய கொக்

* கவின் = அழகு

கிக்ர உதிரமும் சிறிதும் பிடிக்கவேயில்லை. அவளுக்கோ தியக்கத்தாலே மயக்கம்வந்து, ஸ்மரணையென்பது சிறிதுமின்றி, ப்ரக்ஞை என்பது பேருக்குமில்லாதிருக்கும் நிலைகுலைந்த நிலையிலுங்கூடா ராக்ஷஸ சேஷ்டைக்கு ரஞ்சிதமாய்விளங்கும் ராக்ஷஸபானம் வெகு சிறிதும் சரிப்படவில்லை. அஞ்சாநெஞ்சுபடைத்த பஞ்ஜாப்பயில்வானும் அருவருக்கத்தக்க ஆபாஸஉணவை, அடக்கமுடையாளும் அபாஞ்சி நிறத்தாளும் சுந்தரநடையாளும் சுகுணமனத்தாளும் ஆகிய ஜகன்மோஹன சிங்காரம் எப்படி விரும்பி எப்படி அருந்துவாள்? அதனால், ஐம்புலனும்ஒடுங்கி அறிவென்பதேயில்லாத காலத்திலுங்கூட, அவைகிட்டவந்ததும் முகமும் சுருங்கிற்று, வாசனையாலே வாயும் மூடிற்று!

காலாந்தப் பயல்களாகிய கடியகொடியோர்கள் இதைக்கண்டதும், "அடேஅண்ணே அடேதம்பி, அடேகுடியா, அடேமடையா வாசனெ புடிக்கலடா, வாயி மூடிச்சுடா, என்ன செய்யலான்டா எதுசெய்யலான்டா?" என்று கசமுசஎன்று பேசிக்கொண்டிருந்த சமயம், பிரம்மராக்ஷதன், ஹாஹாஎன்று கூச்சலிட்டு,

"அடே, பயங்களா! இப்போதே இவளைத் தூக்கிக்கொண்டு போக வேண்டுமேயல்லாமே முயிப்பதிலே என்னகாரியம்?" என்று ஓரே இரைச்சலாய் ஒரு நிமிஷம் இரைந்தான்.

"என்னசெய்வது சாமீஇ? எது செய்வது சாமீஇ?" என்று கழனிகாத்தான் முதலானவர்கள் மூச்சைப்பிடித்துக் கூச்சலிட்டார்கள்.

"அடே! பல்லக்கில்லேயேடா, பாடையில்லேயேடா! மூங்கிலையொடிச்சி பல்லக்கைக்கட்டி எலைங்களைக்கிள்ளித் தெரையாபோட்டு எடுங்கடா இப்பவே, பிடிங்கடா வேலை! ஊட்டுக்குப்போனா ஒடம்பு நண்ணாபூடும்! முயிக்கா தீங்கோ, பயிக்காதீங்கோ! ஆவட்டும் சீக்கிரம், நடக்கட்டும் வேலை" என்று பிரம்மராக்ஷதன் அவசரப்பட்டான்.

உடனே, கழனிகாத்தான், காறிமூஞ்சான், கருவாடுசுட்டான், எகிறிவிழுந்தான், வேலை பார்த்தான், விண்ணுணப்பேச்சான் முதலிய வேலையாட்கள் கிளையையொடித்து, மரத்தை முறித்து இலையைப்பிடுங்கித் தழையை யிழுத்துப் பத்து நிமிஷத்தில் பல்லக்குக் கட்டி விட்டார்கள். பல்லக்கானதும், ஜகன்மோஹன சிங்காரத்தைத்தூக்கிப் பக்குவமாய் அதில் வளர்த்தி,

## பாட்டு

ஏலங்குடி ஏலங்குடி ஏலம்
ஒடிச்சோம் கிளெயெ முறிச்சோம் மரத்தெ
முடிச்சோம் பல்லக்கெ பிடிச்சோம் நடையெ (ஏலங்)

எங்க எஜமான் கண்ணாலம் எப்பொ நடக்கப்போவுதோ
எங்கவவுறு நெறெஞ்சி எப்பெர் வெடியப்போவுதோ
ஏலங்குடி ஏலங்குடி ஏலம்.

எங்க எஜமான் என்னுதாட்டி எம்மா பெரியுங்க
இந்தம்மா சின்ன சின்ன மணித்தக்காளி காயுங்க
ஏலங்குடி ஏலங்குடி ஏலம்

மாரியாத்தா கெட்டிக்காரி மந்திரக்காரியே
ஆனைக்கு கண்ணாலம் பூஜையைப்பண்ணுளே
தகதெந்தினு தகதெந்தினு தகதெந்தினு

பொன்னுபோலே நிறெத்தைதப்பாத்து பூரா மயங்கினுன்
மின்னெபோலே ஒளியெப்பாத்து மேனிவாடுறுன்
ஏலங்குடி ஏலங்குடி ஏலம்

எங்க எஜமான் பயித்தியக்காரன் பாடுபடுவானே
மூஞ்சூறைக்கட்டி மூளியிவன் முன்னேபோவானே
தகதெந்தினு தகதெந்தினு தகதெந்தினு

எங்க பேச்செகேட்டா எகிறி ஓதைப்பானே
பொம்மெ கண்ணாலம் பண்ணி பவுஷு கொலெவானே
ஏலங்குடி ஏலங்குடி ஏலம்

என்று பாடிக்கொண்டே பல்லக்கைத் தூக்கிப் பரபரப்பாய்ச் சென்றார்கள். பிரம்மராக்ஷஸனும் முன்னாகவே குகையே நோக்கி முடுக்காகப்போய் விட்டான்.

# ஐந்தாம் அத்தியாயம்.

அற்புதமுதலியார். முத்தம்மாள்.
பிரபுதாஸ். கண்மணி.

அலங்காரப்பட்டணம் என்பது அழகிய பெரியநகரம்! அங்கு அல்லாசாமித்தெருவில் குல்லாசாமிகளாகிய துலுக்கர் வீடல்லாது தமிழர்வீடு ஒன்றேவிளங்கிற்று! அந்த வீட்டுடையோர் அற்புத முதலியாரென்பவர். அவர் நல்லம்மாளுடைய சகோதரர். அவருக்கு வயது இரண்டும் நாற்பதுமாயிருக்கலாம். அவர் கறுப்புநிறமா யிருந்தபோதிலும் கம்பீரத்திலென்னவோ குறைவில்லை. அவர் ஒரு காலத்தில் நல்ல அந்தஸ்திலிருந்தவரென்பது ஆக்ஷேபணையில்லாமல் ஏற்படுகிறது. மூக்கின்மேல்கண்ணாடி முறுக்காய்வைத்து அவர் முன்னும்பின்னும் பார்க்கும்போது அங்குள்ள சில வேடிக்கைப் பிள்ளைகள் "மூத்தராஜாவந்தார்! திருத்ராஷ்டிர ராஜாவந்தார்! மஹா ராஜாவந்தார் பராக், மஹாத்தாயிவந்தார் பராக்" என்றுகட்டியங்கூறி அட்டகாசஞ்செய்து அளவற்றுச் சிரிப்பார்கள். வேறுசில விளை யாட்டுப்பிள்ளைகள், "நாலு கண்ணர்வந்தார் ப்ராக், சாமிக்குமூனு கண்ணு, இவருக்கு நாலுகண்ணுபராக்" என்று இவர் மூக்குக்கண் ணாடி போட்டிருப்பதைப்பார்த்துக் கேலிசெய்து மூலைக்கு மூலை பேசிக்கொண்டிருப்பார்கள். ஆனால் இதனாலெல்லாம் அவருக்கு என்னவோ கோபமென்பதுகிடையாது. அவருக்குவேண்டியதெல் லாங்கூடி சதாஆச்சரியமும் சதாஅற்புதமுமே யல்லாமல் வேறன்று. ஆதல்பற்றி, பிள்ளைகள் மிகவும் சள்ளைகள்செய்து பேயாட்டமாடி வாயாட்டங்காட்டினாலும் அவருக்கு உன்னதமாகிய பன்னீர்தெ ளித்தது போலிருந்ததேயன்றி ஒருசிறிதும் உளம் வருந்தவில்லை. இவர் நல்லஉயரமும் தாட்டியுமாய் விளங்கி, மல் குடுத்தாபோட்டு இடையில் மல் அங்கவஸ்திரம் கட்டிக்கொண்டு உலாவிக்கொண் டிருப்பார். அவர்வீடு மிகவும் பெரியமெத்தைவீடு. வெள்ளைக்காரர் வீடுபோன்று, போகும்போதே முன்ஹாலொன்று முறையாய்க்கட் டப்பட்டிருந்தது. எட்டுநாற்காலியும், இரண்டுசோபாவும், ரவுண்டு மேஜையொன்றும் ரம்யமாகஅங்குபோடப்பட்டிருந்தன! சுவர்நிறை ய ரவிவர்மாப்படங்களும் மணிகாட்டக் கடிகாரமொன்றும் மாட்டப் பட்டிருந்தன. உயர்ந்த துணிகளால் ஜன்னல்களுக்குப் படுதாக்கள்

போடப்பட்டிருந்தன. சாமான்கள் அங்கே* சதுரமாய்வைக்கப்பட்டிருந்தனவேயன்றி சாதாரணமாய் ஹிந்துக்கள்வீட்டில் வைத்திருப்பதுபோல் சங்கடப்படும்படி வைக்கப்பட்டிருக்கவில்லை! மேஜை நாற்காலிகளுக்கு நன்றாய் 'வார்னிஷ்' பூசி, அழுக்கென்பது அணுவளவுமில்லாமல் அலங்காரமாகவே அவைகள் வைக்கப்பட்டிருந்தன.

மேற்சொல்லியபடி அற்புத முதலியாருக்கு அற்புதத்திலும் அலங்காரத்திலும் அவாவென்பது அதிகமிருந்தபோதிலும், அவர் சகோதரியாகிய நல்லம்மாளுடைய பொல்லாத குணங்களும் அவரிடம் இல்லாது போகவில்லை. சிலவேளைகளில் கோபத்தாலே பாபம் செய்து, குரூரத்தாலே குடிகெடுப்பதுமுண்டு. நல்லது என்றும் பாராமல் கெட்டதென்றும் நினையாமல் கொட்டமென்பதையே சட்டமாய்க் கொண்டு தீரத்தோடே கோரம் விளைத்துக் கொக்கரி கொட்டுவதுமுண்டு. ஆனால் சாதாரணமாய் எதையும் சட்டைசெய்யாமல் ஏளனத்தையுங் கவனியாமல், அற்புதஞ்செய்வதும் ஆனந்தப்படுவதும் விளையாட்டுபுரிவதும் வேடிக்கை பேசுவதும்,பையல்கள் பராக்கில் மெய்யிற் புளகங்கொள்ளுவதும் இவருடைய இயற்கையாயிருந்தது.

இவர் சங்கதியிவ்வாறாக, இவருடைய மனைவி முத்தம்மாள் என்பவள் மொத்தம்மாளா யிருந்தாளே யன்றி யாதொன்றுக்கும் பிரயோசனமில்லை. அவள் மூசுண்டை மொக்குவதும், முள்ளம் பன்றிபோல உடலைச்சிலிர்ப்பதும், தன் காரியம் மாத்திரம் பார்த்துக் கொண்டு, சுயகாரியம் பரபர பரகாரியம் வழவழ என்கிறபடி அதற்குமாத்திரம் சிறிது சுருசுருப்பைக்காட்டி வந்தாள். இவள் மொத்துத்தன்மையைப் பார்த்து அற்புதமுதலியார் சித்தஞ்சலித்தவாயினும், சுயகாரிய நடத்தையில்மாத்திரம் மிகநேசங்கொண்டு, தன் சுயகாரியபோதனையைத் தாராளமாய்க் கொடுத்துக்கொண்டு வந்தார். மொத்துச் சுயகாரியத்தோடு தனது மெல்லிய சுயகாரியத்தன்மையைச் சேர்த்துத் தைலந்தடவி, ஆடிக்கொருதரம் அமாவாசைக்கொருதரம், நாலுபேர் உட்கார்ந்து நன்றாய் வார்த்தை சொல்லும் போதாயினும் அல்லது தமக்குயாவர் அபிப்பிராயம் அவசியமாய் வேண்டியிருக்கிறதோ அவரிடம் அவர் தனியாயிருக்கும் போதாயினும் உச்சிதமாய் ஒன்றைக்காட்டி மெச்சும்படி செய்து ஒன்பதை மறைத்து உளம் மகிழ்ந்துவிடுவார்! 'ஐயோ, என்னநேசம், எத்தகை

---

* சதுரம்-அழகு-ஒழுங்கு

யுபாசம்! கர்னப்பிரவுக்குப் பின்னால் இந்தத் தர்மப்பிரபு தான் அவ தரித்தாற்போலிருக்கிறது.' என்று அறியார் அவரை மெச்சும்படிக் கிருந்தபோதிலும், மொத்தம்மாளுக்கு அவ்வளவுதந்திரம் சுத்த மாய்த்தெரியாது. எல்லாக்காரியத்திலும் அந்தம்மாள் மொத்தா யிருப்பதுபோலவே சுயகாரியத்திலும் அந்தம்மாள் மொத்தம்மாள் 'மத்தம்மாள்'தான். நிறம் சிவப்பும் கறுப்புமல்லாத மாநிற மாயிருந்த போதிலும் ஆபரணங்கள் காதிற்கு எட்டும் கழுத்திற்குப் பத்துமா யணிந்து, ஒருமுழத்துக்குமேல் இரண்டுமுழம் சரிகைபோட்ட கோமுட்டி டல்டம்பர் கொட்டடிப் புடவையை அட்டகாசமாய்க் கட்டி, எச்சிற்கையாலும் காக்கையோட்டாது, ஏழுநாள் பட்டினி யானாலும் கூழுதண்ணியாயினும் கொஞ்சமேனும் கொடாது, சுய காரியதுரந்தர சுகிர்தாஞ்சனியாய் விளங்கினாள். இவர்களிருவர்க்கும் மூன்றுபிள்ளை இரண்டுபெண்ணானாலும் நாம் இங்குபேசவேண்டி யது ஒருபெண் ஒருபிள்ளையைப்பற்றிதான். பெண்ணின்பெயர் 'கண்மணி'. பிள்ளையின்பெயர் 'ப்ரபுதாஸ்'.

'கண்மணி' என்பவள் கறுத்திருண்ட உடலோடும் வெளுத் தடர்ந்த கூந்தலுடையவள்! மயிர்கறுத்து உடல்வெளுத்திருப்பது அழகிற்கு அறிகுறியென்று உலகத்தோர் பாவிப்பதற்குமாறாக, அவளுக்கு உடல்கறுத்து மயிர்வெளுத்திருந்தது. 'ஆனாலும் என்ன பாதகமில்லை! அது பித்தநரை, பாலநரை, காலக்கடையில் கறுத்தே விடும்' என்று முத்தம்மாளென்கிற மொத்தம்மாளும், நல்லம்மாளா கிற பொல்லாதஅம்மாளும் ஆணும் பெண்ணும் 'அடங்கலும்' அப் படியேகூறி ஒப்படைத்து விடுவார்கள். அஃதல்லாமலும், 'ஆனை கறுத்தால் ஆயிரம்பொன்னல்லவா! கறுப்பிலழகாயிற்றேகண்மணி!. கண்மணிக்கு நிகர்பெண்மணி காசினியில்வேறே காணக்கிடைக்கு மோ' என்று நாணமில்லாத 'நாத்தனார்' ஆகிற நல்லம்மாளும், உற்ற அண்ணியாகிய முத்தம்மாளும், ஒருமிக்கப்பேசி ஊராரைப்பேச வொட்டாது, ஒரே கத்தாய்க்கத்தி, வாயடிகையடியடித்து வாயாட் டங்காட்டிவருவார்போவாரைப் பேயாட்டமாட்டிவிடுவார்கள். கண் மணிக்கு உடலம்மாத்திரமா கறுப்பு, உள்ளக்கறுபை ஒழிவிலொ டுக்கத்தாலும் ஓட்டமுடியாது என்று சிலர்நினைப்பார்கள்.

ஹா! அஃதென்ன கறுப்பு! உள்ளக்கறுப்பு ஒருமிக்கப்பெருகி ஒரே ஒரு கறுப்பாய் அமாவாசைக்கறுப்பும், அதிக மழைக்கறுப் பும் ஒன்றாய்த்திரண்டு உள்ளே புகுந்து கள்ளம் விளைப்பது—

மேல் சிறிது 'டால்' விசுவதல்லவா, உடலைக்கறுப்பாய் ஊரார் பார்ப்பது! உள்ளம்தான் அதிக கறுப்பு, அதன் ஒளித்தோற்றந்தான் உடலின் கறுப்பு. 'அகத்தினழகு முகத்திற்றெரியும்' என்பதும் 'அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சம் கடுத்தது காட்டுமுகம்' என்பதும் கண்மணியினிடமே கரதலாமலகமாய் விளங்குவது! கலகம் என்பது அவளுக்குக் கட்டுச்சாதம்! இப்படி யிருப்பாள் அப்படிப்போவாள்! ஒருத்தியிடம் ஒன்று சொல்லுவாள், மற்றொருத்தியிடம் வேறொன்று சொல்லுவாள்! மூட்டுவாள் நெருப்பை, எழுப்புவாள் புகையை!

இத்தகைய பெண்ணின் வயதென்னவோ பதினாறுக்கு மேலில்லை. உள்ளக்கறுப்பை மறைக்க மெள்ளச்சிரிப்பதுபோல் உடலக்கறுப்பை ஒளிக்க வெள்ளைச்சல்லா விநோதமாயணிந்து, தருக்குக் காட்டி மினுக்கு செய்வாள். கையில் அழகிய காப்பும் அபராஞ்சிக் கொலுசும், கழுத்தில் பொன்சரட்டில் புஷ்பராகப் பூக்களைத்தொடுத்தபுதுமாதிரியான மாலையொன்றும், காலில் பட்டைக்கொலுசும், காதில் வைரக்கம்மலும், இன்னும் வேறுசில நகைகளும் ஆபரணமாய் அணிந்திருந்தாள். முகமல் ரவிக்கையை வெகு ஸொகுசாயணிந்து, தலையின் நரையைத் தைலத்தால் மறைத்து, இப்படியும் அப்படியும் போய்க்கொண்டிருப்பாள்! ஏற்கவே, இப்போது கல்யாணம் என்று ஏற்பாடாயிருக்க, காலையும் மாலையும் கறுப்பை மறைக்கும் வேலையேதவிர வேறொருவேலையும் கிடையாது! கண்மணிக்கு நிறம் கறுப்பாயிருந்த போதிலும் முகமென்னமோ மோசமில்லை, புத்திகூர்மையைக் காட்டும் மூக்கின்கூர்மையும் கோணலில்லாத முகத்தின் நேர்மையும், கண்ணின் அழகும் மூக்கின் உயரமும், எல்லாம் அழகாகவே யிருந்தன. இவற்றை நோக்கும்போது, கண்மணியின் குணக்கருமை அனேகமாய்ச் சேர்க்கை வாசனையினால் அதிகப்பட்டதாய்க் காணுமேயன்றி, தக்கபடி செய்யும் உத்தமப் போதனையினால் ஒடி மறையாது என்று சொல்வதற்கு நியாயமேயிராது. எப்படியானபோதிலும், கண்மணியின் தாயாராகிய முத்தம்மாளுடைய நடையாலும் துர்ப்போதனையினாலும், நல்லம்மாள் காலாகாலங்களில் செய்யும் கதாப்பிரசங்கத்தினாலுமே கண்மணியின் குணம் கருமணியாய் விட்டதென்று சொல்வதற்குஹேது உண்டாவதோடும், வனஜாஸனன் அவளைக் கலியாணஞ் செய்ய அருவருத்ததற்கும் அதுவே காரணமென்று தோன்றுகிறது. வனஜாஸனன்

உள்ள அழகுக்குக் கண்மணியின் நிறம் கண்ணைக்கவராததாயிருந்தது என்றும் அனேகர் சொல்லிக்கொண்டார்கள்.

அற்புதமுதலியார் முத்தம்மாள் இவர்களுடைய புதல்வனாகிய ப்ரபுதாஸ் என்பவன் உண்மையாகப் பிரபுவினுடைய குணங்களை மிகவும் பொருந்தினவன். ரூபலாவண்யத்திலும் நடையுடைபாவனையிலும் மிகச்சிறந்து, கெட்டகுணங்களை ஓட்டவும் அகற்றி, கல்வி கேள்விகளிலும் சங்கீத சாமர்த்தியங்களிலும் இங்கிதம் மிகவும் கொண்டு எல்லாராலும் நல்லவனென்று கொண்டாடப்பட்டுப்பேரும் புகழும் சீரும் சிறப்பும் செம்மையாயடைந்திருந்தான். அக்கம் பக்கத்திலுள்ளோர் அவனை வியவாதாரொருவருமிலர்.

ப்ரபுதாஸ், ஆங்கிலேயக்கலாசாலையிற் பயின்று, எப். ஏ. பரீக்ஷைபாஸ் செய்ததுமன்றி, ஆங்கிலேயருடன் அருமையாய்ப்பழகி, அவர்கள் பேசும் வண்ணமாகவே பேசி, அவர்கள் நடக்கும் விதமாகவே நடந்து. அவர்கள் நடையுடைபாவனைகளையே கைப்பற்றியிருந்தான். அவன் சாதாரணமாய் முக்கியமான காலங்களில் வெளியேபோகும்போதெல்லாம் கறுப்புக்கம்பிளி சூட்டும் விநோதமான ஷர்ட்டும், காலர் நெக்டைகளும், பூட்ஸ் ஸ்டாக்கிங்குகளும் அணிந்து கையில் குடையல்லது நடைத்தடியைப்பிடித்து வெகு முடுக்காயும் படபடப்பாயும் செல்வது வழக்கம். ப்ரபுதாஸ் நிறம் சுமாரான செகப்பு. அவன் முகம் பால் வடிந்து, பேச்சில் அமிர்தம் படிந்து, நடக்கையில் நன்னெறிபமைந்து அனைவரையும் வசீகரிக்கும் அதிர்ஷ்டமுடையவனாயிருந்தான். அவனுக்கு தகப்பன் தாயார் நடவடிக்கை வெகு சிறிதும் சரிப்படாததோடும், அத்தை மாமனாகிய நல்லம்மாள் ஆடம்பராசாரியிவர்களுடைய நடத்தையும் அணுவளவேனும் பிடிக்கிறதில்லை. ஆகையால் இந்நால்வர்களிலெவரேனும் அக்கிரமச் செய்கைசெய்யத் துணியும்போதும். அநியாயப் பேச்சைப் பேசத்தலைப்படும்போதும், பிரபுதாஸ் தனது அழகிய தாமரை முகத்தை அவலக்ஷணமாக்கிக்கொண்டு வாய்ப்பேச்சு பேசாமலே கால் நடையை நீட்டிவிடுவான். இவன் இவ்வளவு நல்லவனாயிருந்தபோதிலும், இவன் குணம் சுகுணமாயும், ஒழுக்கம் நல்லபடியாயும், அழகு அற்புதமானதாயுமிருந்தபோதிலும் இவனை வெறுத்த வெகு சிலரில் பாரிஜாதமும் ஒருத்தி. இவளுக்கு அவன் விஷயத்தில் வெறுப்புண்டாவதற்குக் காரணமெல்லாங்கூடி, தன் தந்தைதாயார் மாமன்மாமி இவர்களுடைய ஒழுங்கீனமும் அறி

வன்மையையும் கோரக்கொடுமையையும் பிரபுதாஸனுடைய எண்ணத்தையும் ஏறுமாறாக்கியிருக்கக்கூடுமென்பதுவேதான். அதாவது,பிள்ளையென்னவோ உள்ளபடியே கள்ளத்தன மில்லாதவனானபோதிலும் கெட்டபெரியோர்களின் கடைகெட்ட உபதேசத்தாலே, நல்லவனும் கெட்டவனாயிருக்கக் கூடுமென்பதே. இந்த காரணத்தாலேயே, பாரிஜாத முதலிய சிலர் அவனையும் அருவருத்து, அவனையும் மிகவெறுத்து, 'பன்றிக்குட்டியோடே சேர்ந்த கன்றுக்குட்டியாயிற்றே அவன்' என்று சொல்லும்படியிருந்தது.

கல்யாணத்திற்கு ஏற்பாடுகள் மேற்கூறிய நால்வராலும் வெகு சுருசுருப்பாய் நடத்தப்பட்டுவந்தன. "ஆடம்பராசாரிவருவாரே, எல்லாம் ஆடம்பரமாயிருக்கவேண்டுமே! அத்தானவர்களுக்கு ஏற்பாடுகள் சிறப்பாயிருந்தால் தவிர சிந்தைமகிழாது. நல்லம்மாளுக்கு ஊசலன்றைக்கு ஏசலும்வரும் இளிச்சவாய்ப்பட்டமும்வரும். பையன்வீணாக கையைமுறித்துக்கொண்டு ஜம்பமென்பதில்லாவிடினும் வம்புமாத்திரம் செய்துகொண்டிருக்கிறனென்று தெரிகிறதே! நாம் இந்தசந்தர்ப்பத்தில் கல்யாணம் நன்றாய்ச்செய்யாவிட்டால், காத வழிவரைக்கும் நம்மைக்காறியுமிழ்வார்கள்! கல்யாணம், சக்கரபாணம், ஆகாசபாணம், அந்தரபாணம், இந்திரபாணம் இவைகளோடும், 'ஆட்டம்பாட்டம்,' வெகுஜனக்கூட்டம், பிராமணர் நாட்டம் முதலியவைகளோடும், ஆர்ப்பாட்டம் படோபம் செய்வதேசரி" என்று அற்புதமுதலியார் பொற்புடன் எல்லாக்காரியமும் சிறப்புடன் செய்துவந்தார். ஓர்நாள் காலையிலெழுந்தவுடன், தன் மனைவியாகிய முத்தம்மாள் மொத்தம்மாளைப் பல்லிளித்து முகஞ்சுளித்துநோக்கி, அவர்,

"முத்து, இன்று அத்தான்வருவாரே, கல்யாணப்பிள்ளை, நல்லம்மாள் அனைவரும் வருகிறார்களே! கல்யாணம் இன்னும் ஒரு வாரந்தானேயிருக்கிறது" என்றார்.

மொத்தம்மாள், முகஞ்சுளித்து, முக்கால் ரூபாயை யாருக்குந் தெரியாமல் முன்தானையில் முடிபோட்டு,

"ஆமாம்! உங்களுக்கென்னவேலை! பொழுது விடிந்ததும் ஆரம்பித்துவிட்டீர்கள்போலிருக்கிறது! அம்மாயிவந்து பெருக்குகிறேன் என்றாள் அவளைக்காணோம். பெத்தாயிவந்து 'பெரட்டு'கிறேனென்றாள் அவளைக்காணோம். பண்டமில்லை, பலகாரமில்லை. பொழுது விடிந்து மணிஏழாய்விட்டது. நான் ஒரேதரம்தான் பலகாரம்சாப்

பிட்டிருக்கிறேன். உங்களைப்போல் சும்மாவிருந்துவிட்டாலும் பாதகமில்லை. ஓரேநரம்மாத்திரம் சாப்பிடுவது மஹாதப்பு. உள்ளபசியையும் மெள்ளக்கிளப்பிவிடுகிறது!" என்று வேண்டா வெறுப்பாய் ஏண்டாஅப்பா என்பதுபோல் நீண்டாச் சூத்திரமாய் திருட்டுப் பேச்சுப்பேசினுள்.

இதுகேட்ட அற்புதமுதலியார், அப்படி, இப்படி, அதைக் கொடு, இதையெடு என்று, ஆவேஸமாய் வேலைகளை அவசரமாய்ச் செய்து,

"முத்து, நீ வெகுமொத்து! ஒருவீசை பலகாரத்தை ஒரு நிமிஷத்தில் கக்காமலே மொக்கிவிட்டு, வீண்வார்த்தைபேசி ஜாண் வேலையாவது நடத்தவில்லையே! அத்தான் வருவாரே! அமர்க்களம்செய்வாரே! பையன்வருவானே! தைய தைய என்று குதித்துத் தடபிடல் செய்வானே! ஆச்சே மணியாச்சே! வெய்யிலாச்சே! சமையலாச்சே! வேலையாச்சே! ரெயிலாச்சே! அடே பையா, ப்ரபுதாஸ், பலேபேஷ், வெகுகோஸ், சீக்கிரம்வாடா! ரெயிலுக்குப்போகவேண்டும்! மொத்தாலே சுத்தமாய் வேலையாகாது. பலகாரம் ஆகுமேதவிர காரியம்ஆகாது. பந்தற்கால் இன்னும்மூன்று நாளிருக்கிறது. பலகாரம் என்னமோ இதற்குள் பத்துவராகன் ஆய்விட்டது. மொத்துக்கே பத்துவராகன் ஆய்விட்டால், மற்றவர்களுக்கெல்லாம் எத்தனை வாராகன்ஆகுமோ, மஹாதேவனுக்கே பிரீதி!" என்று அற்புதமுதலியார் அரைச்சிரிப்பாய்ச் சொன்னார்.

"ஏன் அப்பா! மற்றவர்களுக்கெல்லாம் சேர்த்துப்பத்துவராகனுக்குமேல் செல்லாது" என்று ப்ரபுதாஸ் பிரபுடீகமாய்ச்சொன்னுன்.

"பாவிங்க, பறப்பாங்க நான்திண்ணுதான் கண்ணுநாலாவெடிச்சுபோறது! அரைப்பட்டினி கால்பட்டினியிருந்துகொண்டே ஆடுகிறபம்பரம்போலேயும் பறக்கிறகாற்றுடிபோலேயும், நான்உழைத்து ஓடாளுலும், இந்தப்பாவிகளுக்கென்னமோ பரிதாபமென்பதே கிடையாது! எக்கேடாளுலும் கெட்டுப்போகட்டும், எந்தவழியாளுலும் நடந்துபோகட்டும்! அப்பா, எனக்குத் தலைஉடைத்துக்கொண்டுபோகின்றது!" என்றுசொல்லி, "அடேபையா, கோவிந்தா, இங்குவாடா! இட்டலியாவது இந்தக்காலணுவுக்கு இப்பவே வாங்கிக்கொண்டுவா! இல்லாவிட்டால் என்பிராணன் இப்பவே எகிறிப் போய்விடும்" என்று வேலைக்காரனுக்கு ஆக்ஜாபித்தாள்.

"அடே அப்பா, பிரபுதாஸ், பத்துவராகனுடன் இப்போது காலணுவும் சேர்ந்தது! அவள் நின்றுகொண்டே நகர்ந்துகொண்டிருக்கட்டும்! நீ சீக்கிரம்புறப்படு. நாலுபெயர்ஆட்களை ஏற்பாடுசெய்துவிடு. அவர்களை ரெயில்ஸ்டேஷனுக்கு நேராப்வந்துவிடச்சொல். ஐந்துவண்டியும் நாமும்இப்போதே அவசரமாய்ப் புறப்படவேண்டும்" என்று அற்புதமுதலியார் பிரபுதாஸைநோக்கி அவசரச்சைகையுடன் அவசரப்பேச்சாலே சொன்னார்.

உடனே ஐந்து ஆட்களும் ஐந்து வண்டிகளும் வந்துவிட்டன. அற்புத முதலியாரும் பிரபுதாஸும் ஒருவண்டியிலேறிக்கொண்டு வண்டிவருவதற்கு இரண்டுமணி முன்னதாக ரெயில்வேஸ்டேஷனுக்குப்போய் விட்டார்கள். அங்கே லக்கேஜ்ரூமில் இதைப்பார்ப்பதும் வெயிடிங்ரூமில் அதைப்பார்ப்பதும் ஸ்டேஷன் மாஸ்டரிடம் ஒன்று சொல்வதும் புக்கிங்கிளர்க்கிடத்தில் மற்றொன்று சொல்வதும், ஓடுவதும் திரிவதும் ஆடுவதும் அலைவதுமாய் அற்புத முதலியார் ஆர்ப்பாடம் செய்துகொண்டிருந்தார். பிரபுதாஸ் வண்டிக்காரர்களை ஒருபுறமாய் வண்டிகளைவைத்துக்கொண்டிருக்கும் படிக்கும், வேலைக்காரர்களை இப்படியப்படித்திந்து தப்படிவைத்துச் சமயத்தில் தடுமாறிப்போகாதிருக்கும்படிக்கும் கட்டளைசெய்துகொண்டு சட்டதிட்டமாய் உலாவிக்கொண்டிருந்தார். ஸ்டேஷன் மாஸ்டர் முதலிய ரயில்வே உத்யோகஸ்தர்கள் அற்புத முதலியார் செய்யும் ஆர்ப்பாடத்தைக்கண்டு, "அற்புத முதலியார் செய்கையும் பேச்சும் எப்போதும் அற்புதந்தான். இவர் பெண்ணுக்குக் கல்யாணமும் வைத்துக்கொண்டார்! இப்போது இவர் செய்யும் அட்டகாசமும் பகல்வேஷமும், அப்பப்பா, என்ன தடபிடல்! இவர்சம்பந்தி ஆடம்பராசாரிக்கு ஏற்றவர் தான் இவர். இப்போது இந்த வண்டியில் கல்யாணப்பிள்ளைவருகிறாராம்! அதற்காக வண்டிகளும் வாத்தியங்களும் ஏற்பாடுசெய்து அழைத்துக்கொண்டுபோக வந்திருக்கிறார்போலிருக்கிறது. கல்யாணம் வெகுஜோராய் நடக்கப்போகிறது! கச்சேரிக்கென்று கனபாடகர்கள் ஐவருக்குச் சொல்லியிருக்கிறது. தாளத்தில் பெயர்பெற்ற தங்கவேலும், ராகத்தில் புகழடைந்த ராஜம் ஐயரும் வருகிறார்களென்று தெரிந்து அனேகர் சங்கீதம்கேட்க ஆவல் கொண்டிருக்கிறார்கள்! நமக்கும் கல்யாணடிக்கட்டுகள் வரும். இந்தப்பாழும் ஆபீஸில் லீவுகொடுப்பது பரம சங்கடமாயிற்றே! எப்படியாயினும் லீவுபெற்றுக்கொண்டு இரண்டு மணி நேரமாயினும் மனங்குளிர இரண்டு கண்களாலும் மகிழ்வுறப்

ப்பார்க்கவேண்டும்" என்று ஒருவர்க்கொருவர் ஓயாது பேசிக்கொண்டிருந்தார்கள்.

இதோ! கணகணவென்று மணியடித்தார்கள்! அடுத்த ஸ்டேஷனிலிருந்துவண்டி ஆவேஸமாய்ப் புறப்பட்டு விட்டதுபோலும்! டிக்கட்டுவாங்க இக்கட்டுபட்டு, நசுங்கி இடிபட்டு நாற்புறமும் உதைபட்டு எத்தனையோ பேரும் மூட்டைகளைத்தாங்கி வாட்டங்கொண்டு ஓட்டம் பிடிக்கத்தாட்டியின்றி முட்டிக்கொண்டு முன்னே செல்லுவாரும், டிக்கட்டு சோதனைசெய்யும் முக்கட்டுவாசலில் நெருக்குண்டுதவிப்புண்டு அப்பாவென்று அப்புறமாயினும் இப்புறமாயினும் அகன்றொழிந்துபோவாரும் இவற்றினிடையில் இளநீர் விற்பாரும், தயிர் நீர்விற்பாரும், பாலை நீராக்கிப் பரபரவென்று பாத்திரத்தில் ஊற்றிப் பணம் ஆக்கிப் பறந்துபோவோரும், மசால்வடை முறுக்கு, பீடிசுருட்டு, வெற்றிலை பாக்கு கற்கண்டுகாபி கண்டதை விற்றுக் காசாக்கிக்காற்றாய்ப்பறந்து கடுகெனச்செல்வாருமாக ஸ்டேஷன் முழுமையும் கோஷ்டமிருந்தது சொல்லமுடியாது. அற்புத முதலியார் அவ்வூர் பெரிய மிராசுதாரரானபடியால், அந்நகரத்திருக்கும் பெரியபெரிய உத்யோகஸ்தர்களும், பிரபுக்களும், ஜமீன்தாரர்களும் மிராசுதாரர்களும் கணக்கு வழக்கில்லாமல் கோச்சுவண்டிகளும் பெட்டிவண்டிகளும் பீடன்வண்டிகளும் மோடார் வண்டிகளும் ஐந்து நிமிஷத்தில் ஐந்நூறு வண்டிகளுக்குமேல் ஸ்டேஷனில் தயாராய் விட்டன. ரெயில்வண்டியும் வெகு சமீபத்தில் வந்து விட்டது என்று கைகாட்டிமரமும் சாய்ந்தது, பச்சைக்கொடிகளும் பறந்து கொண்டிருக்கின்றன. ஸ்டேஷனில் வந்து சேர்ந்த பெரிய மனிதர்களையெல்லாம் டிக்கட்டில்லாமலே ப்ளாட்பாரத்தில் விட்டு விட்டார்கள்! அலங்கார முதலியார் இப்படிப்போய் ஒருவரிடத்தில் ஒருபேச்சுப் பேசி * 'ஷேக்ஹான்ட்' கொடுத்து, மற்றொருவரிடம் ஒருநகை நகைத்து ஒய்யாரமாய் முதுகைத்தட்டி, அனைவோரிடமும் போய்ப்போய்ப் பேசிப்பேசி குறுக்கும் நெடுக்கும் நெடுக்கும் குறுக்குமாய்ப் ஓடியாடிக்கொண்டிருந்தார்.

இதோ! மறுபடியும் ஒருதரம் மணியடித்தார்கள்! அதோ ரெயில் வண்டியும் வருகிறது! கண்ணுக்குத்தென்பட்டபோதிலும், அஃது இப்போது சிறிய அளவினதாய்க் காணப்படுகிறது. ஆடோ

* அங்கிலேய நடையிற் படிந்தோர், மரியாதைக்குறியாக ஒருவர்கையை ஒருவர் பிடித்தாட்டுதல்.

அல்லது மாடோ என்னும்படி அவ்வளவு சிறியதாகவே அது காணப்படுவதால், இரண்டு மூன்றுமைலுக் கப்பாலாகவே யிருக்கிற தென்று அதிக நன்றாய்த்தெரிகிறது. ஆனபோதிலும் கொண்டை கட்டிப்புறாப்போலே, குப்குப் என்று மேலேபுகை கிளம்புவதால் அஃது புகைவண்டியென்று சந்தேகமில்லாமலே சடுதியிலேற்படு கிறது.

ரெயில்வே வேலையாட்கள், கொடியைப் பிடிப்பதிலும் மூட்டையையெழுப்பதிலும் அதிக வேலையாயிருந்ததோடு, ப்ளாட்பாரம் ஓரத்தில் ஒருவரும் வரலாகாதென்று ஒதுக்கிக்கொண்டிருந்தார்கள். வண்டியும் கிட்டகிட்ட நெருங்குகிறது. கல்யாணப் பிள்ளையைப் பார்க்கலாமென்று அனைவரும் கன ஆவல் கொண்டிருக்கிறார்கள். "அதிக அழகாம், கல்யாணப்பிள்ளை" என்கிறார் ஒருவர். "அதிருக்கட்டும் ஐயா, பையன் மிகவும் புத்திசாலி" என்கிறார் மற்றொருவர். "எல்லாச் சல்லாபகுணங்களும் உல்லாஸமாய் அவனிடம் பொருந்தியிருக்கிறது" என்கிறார் வேறொருவர். "கல்வியில் அவனுக்கிணையில்லையாம்! அழகில் அவனுக்கெதிரில்லையாம்! அமைதியில் அவனுக்கு ஒப்பென்பது ஒருவரும் கிடையாதாம்" என்கிறார் பின்னொருவர். "ஆராத்தா செத்தாலும் பொதுவிடிந்தால் தெரிகிறது. எல்லாங் கூடி இன்னும் இரண்டு நிமிஷம் தானேயிக்கிறது" என்று கள்ளத்தனமாய் மெள்ளச் சொல்கிறார் வேறொருவர். கண்ணை மூடிக்கண்ணைத்திறப்பதற்குள், கனவேகமாய் வண்டியும் வந்து சட்டென நின்று விட்டது. மல்லிகைப்பூக்களாலும் ரோஜாப்பூக்களாலும் மஹாவினோதமாய்ச் செய்யப்பட்ட மாலைகளைக்கையிற்றாங்கி இருவர் கூடவர இணையில்லாத அற்புத முதலியார் முதல்வகுப்பு வண்டியைத்தேடி முன்னே செல்லுகிறார்! அச்சமயத்திற்கென்றே இச்சையோடே அமைத்த இனியபான்ட்வாத்தியம், வானங்கிழிய ஆனந்த பைரவிராகத்தில் ஜவளியொன்றை ஆவலோடே வாசித்துக் கொண்டிருந்தது! ஜனப்பெருக்கம் வெகு நெருக்கம்! தாம்பூலம் வழங்குகிறாரொருவர், பூக்களைக்கொடுக்கிறாரொருவர், பன்னீர்தெளிக்கிறார் மற்றொருவர். எல்லாம் ஆனந்தம், எல்லாம் வைபோகம்! அற்புதமுதலியார் முன்னும் பின்னுமாயோடி முதல் கிளாஸ்வண்டியில் தலையை நீட்டினார், ஆடம்பராசாரியும் தமது தூங்கு மூஞ்சியைக் காட்டினார்!

"ஹா! பேஷ்! அத்தான்! பொத்தான், பெருமொத்தான் வெகு சரிதான்! வெகு நன்றாயிருக்கின்றது! மிக அழகாயிருக்கின்றது

கும்பகர்னன் சேவிக்கிறீர்களே, கும்பு கும்பாய்த்திரண்டு தங்களைப் பார்க்கக் கோடிபேர் வந்திருக்கிறார்கள். எழுந்திருங்கள், எழுந்திருங்கள்" என்று கையைத்தட்டிக் கதவைத்தட்டினர், ஆத்திரத்தோடே நேத்திரம் பொங்கும் அற்புத முதலியார்!

"ஹோ! ஹோ! ஸ்டேஷன் வந்து விட்டது! அத்தான்! அவர், இவர், அடே! அடே! எல்லாம்' நல்லு, சொல்லு, எழுந்திரு, அம்மா! மூட்டை முடிச்சு துணி, மணி, அடே! அங்கே முதலியார், இதோ பிள்ளை, அதோநாயுடு. ஹோஹோ! ஜமின்தார், தாசில்தார் எல்லாம் உம் உம் உம்" என்று பைத்தியக்காரனைப்போல் ஆடம்பராசாரி, தூக்கம்நீங்கி ஏக்கம் தாங்கி வாயில் வந்ததெல்லாம் உளறிக்குளறிப் படபடவென்றும் தடதடவென்றும் தடுமாறிக்கொண்டிருந்தார்.

இதற்குள் வரவழைக்கப்பட்டு வந்த பெரிய மனிதர்களும், ஏராளமாய்த் திரண்டுவேடிக்கை பார்க்கவந்த விநோதக்கூட்டமும் ஆடம்பராசாரியிருந்த வண்டியண்டை அதிக நெருக்கமாய் நெருங்கி, கல்யாணப் பிள்ளையைப்பார்க்கக் கண்ணைத்திறந்துகொண்டிருந்தார்கள்.

அற்புத முதலியார், அதிக அவசரமாய், மாலையெடுத்து மணவாளனுக்குப்போட, "அத்தான்! அத்தான்! எங்கே? பிள்ளையெங்கே?" என்று அவசரமாய்க் கேட்டார்.

'எங்கே?'
'இங்கே'
'அங்கே'
'பாருங்க'
'வாருங்க'
'கூப்பிடுங்க'
'அவனோ'
'இவனோ'
'என்னடா'
'ஏதுடா'
'காணோமே'
'இல்லையே'
'வல்லையே'
'போனானோ'

'போய்விட்டான்' கல்யாணப்பிள்ளை எங்கேயோபோய்விட்டார் என்று எங்கு பார்த்தாலும் அனைவரும் ஆச்சரியப்படும்படி சங்கதி பரவிவிட்டது! மேளம் நின்றுவிட்டது, தாளம் தடுமாறி விட்டது. பூவும் இறைந்துவிட்டது, சந்தனம்ஊற்றிக்கொண்டது! வெற்றிலைப் பாக்குவேறெங்கேயே போய்விட்டது! வந்தவர்கள் விழித்தார்கள், ஒருவரையொருவர் பழித்தார்கள்! கூட்டம் கூட்டமாய் நின்று ஜனங்கள் வாட்டமுள்ளபேச்சை வகைவகையாய்ப் பேசிக்கொண்டிருந்தார்கள்! ரெயில் வண்டியும் நகர்ந்து விட்டது. வந்தவண்டிகளும் ஒவ்வொன்ருய்ப்போய்க்கொண்டேயிருந்தது. மோடார்வண்டிகளும் பறந்து விட்டன, கோச்சுவண்டிகளும் பெட்டிவண்டிகளும், பீடன் வண்டிகளும் ப்ரூம்வண்டிகளும் நாளுபக்கங்களில் 'ஏனோதானோ' வென்று எப்படி யெப்படியோ பறந்து விட்டன!

அற்புத முதலியாரும் ஆடம்பராசாரியும் மற்றுமுள்ள உற்றோரும் மூன்ரும் பேஸ்து வாங்கினதுபோல் முகஞ் சுளித்து அகம் வருந்தி அல்லாசாமித்தெருவில் அற்புதமுதலியார் வீட்டுக்கு ஆயாசத்துடன்போய்ச் சேர்ந்தார்கள்.

# ஆறும் அத்தியாயம்.

---

| | |
|---|---|
| வனஜாஸனன். | நந்தவனம். |
| கோங்கு தேசத்தரசன். | மனைவிமக்கள். |

தந்தை தாயார் தூங்கிக்கொண்டிருக்கும்போதே, ஒரு சிறிய ஸ்டேஷனில் அரைநிமிஷம் வண்டிநின்ற காலை, வனஜாஸனன் கம்பி வாங்கிக்கடுக நடந்து விட்டான். அவ்வூர் இன்னதென்றும் பார்க்க வில்லை, அங்கு என்ன விசேஷம் என்று தெரிந்துகொள்ளவும் இல்லை. எப்படியானாலும் கண் தெரியாத தூரம் கனவேகமாய் நடந்து சென்று இடந்தெரியாமலும் இடர்ப்படாமலும் கொஞ்ச நாள் காலங்கழித்து, பின்னர் சங்கதிகள் ஒழுங்கடைந்த பிறகே தந்தை தாயரையும் உற்றோரையும் மற்றோரையும் பார்ப்பது சரியென்று பரமவுறுதி பூண்ட வனஜாஸனன், வடதிசையாகவே இருபதுமைல் நடந்து, உடல் வியர்த்து, உளங்கலங்குகிறவரைக்கும் ஆகாரமொன் றுந் தேடாமலும் தாகசாந்தி செய்யாமலும், கடைசியாக, ஒரு பூந் தோட்டத்தை நெருங்கினான்.

அந்தப் பூந்தோட்டத்தின் அருகிற் செல்லும்போதே, வன ஜஸனனுக்கு உண்டான வாசனைச்சுகத்தாலும் மனரம்யத்தாலும் சற்று நின்று மெத்தமகிழ்ந்து இன்றைக்கும் நாளைக்கும் இந்தத் தோட்டத்திலேயே காலங்கழித்துப் பிறகு யோசிக்கலாமென்று அதனுட் பிரவேசித்தான். அங்கே அவன் கண்டகாட்சிக்கும் அனுப வித்த சுகத்திற்கும் அளவில்லை. அஃது கொங்குதேசத்தரசன் குளி ர்ச்சிக் கென்றுவைத்த தோட்டமென்றும் வசந்தகாலத்தில் அயூர் ந்த வேளையில் அரசனும் அரசியும் தம்புதல்வர்களோடும் புதல் விகளோடும் அங்குவந்து ஆனந்த முறுவதற்கென்றே யமைக்கப் பட்டதென்னும் காவலாளியால் யாவற்றையும் வனஜாஸனன் அறிந் துகொண்டான்.

தோட்டத்தினுட் புகுந்து பார்க்கையில், மல்லிகைக்கொடி யோடு முல்லைக்கொடி படர்ந்து மணமான சமாசாரம் குணமாகப் பேசவும், ரோஜாப்பூ அவ்வூர் ராஜாப்பூ என்று தன் பெருமையைக் காட்டி முகமலர்ந்து அகங்களிப்பிக்கவும், வேறு அனேகம் இலைக ளும் பூக்களும் செடிகளும் கொடிகளும் உள்ளக்குளிர்ச்சியை அள்

ளிக்கொடுக்கவும் வனஜாஸனன் கண்டு, "ஹா! ஆச்சர்யம்! வேகமாக நடந்ததாலே தாகமெடுத்துத் தவிக்கும் எனக்குக் களையைப் போக்கிக் கவலைநீக்கி உளத்தில் மகிழ்வை யுண்டாக்குவதற்கு இந்த நந்தவனத்திற்கு என்னை யிழுத்துவந்தான்போற் றோன்றுகின்றது. கடவுள் கருணையே கருணை! கடவுளில்லையாயின் காசினியேது? ஒருவழிப்பட்டிருக்கும் உத்தமவுலகம் பலவழிப்பட்டன்றோபாழாய் விடும்!" எனப்பலவாறு சிந்தித்தான். மஞ்சள் சாமந்தியும் வெள்ளைச் சாமந்தியும் கள்ளமில்லாது உள்ளக்கலப்போடு ஒன்றை ஒன்று தொத்திப்படரவும், ஆங்கே அலரியும் ஆத்தியும் இடையே பூத்து இன்பம் விளைக்கவும், ரோஜாவும் ஜாஜியும் அழகாகத்தமது அழகைக்காட்டி அரிய உபந்யாஸஞ் செய்யவும் அமைந்த அழகான பந்தலின்கீழ் அழகாகச்சாய்ந்து வனஜாஸனன் ஆகாசத்தைப்பார்த்தான்! அப்போது இரவுமணி எழுக்குமேல் பத்து அல்லது பதினைந்து நிமிஷமாயிருக்கலாம். அவனுடைய இளைப்பும் களைப்பும் ஆதவனைக்கண்ட பனிபோலே அப்போதே அகன்றோடிற்று! யாதொரு மாசுமறுவுமின்றி யாதவர்கள் நடுவில் யதுகுலதிலகனாகிய கண்ணபிரான் தோன்றினதுபோல், நக்ஷத்திரங்களினடுவில் நகைமுகங்காட்டி, அந்தரந்தன்னில் சந்திரன் பிரகாசிக்கிறான்! அன்று பூர்ணிமை நாளாதலாலும், மாதமோ வைகாசியாதலாலும், பதினாறு கலைகளையும் பட்டப்பகலெனப் பரப்பி நீலவானத்திற்கு வெள்ளிப் பட்டம் கட்டினதுபோல் ஒள்ளியசுடர் விட்டுத்தெள்ளிதின் விளங்கினான். பூப்பந்தலின் கீழ் புதுமையைப்பார்த்தே இளைப்பாறிக் கொண்டிருந்த வனஜாஸனனுக்கு இயற்கைப்பெருமை இனிதாக மனதிற்குப் பட்டுக்கொண்டேயிருந்தது. கடவுளில்லவேயில்லை, மூட இயற்கையே இப்படி ஆடம்பரம் செய்துகொண்டிருக்கிறதென்று முறைப்பாடு செய்பவர்கள் குறைப்பாட்டைப்பற்றி அவன் சிந்தித்துச் சித்தம் நொந்து, "ஐயோ! இவ்வளவு அழகும் இவ்வளவு அமைதியும் இவ்வளவு பொருத்தமும் இவ்வளவு திருத்தமும் பொருந்திய இந்தப்பிரபஞ்சம், கடவுளில்லாது தோன்றினதென்பது மலடி பிள்ளைபெற்றாளென்பது போலன்றோ விருக்கின்றது? இங்கு நாலுபக்கங்களிலும் பூத்துப்புளகாங்கிதம் விளைக்கும் புஷ்பராசிகளின் மணத்தையும் குணத்தையும் நிறத்தையும் நீர்மையையும் பார்த்துப் பார்த்துப் பரமானந்த மடையவனெவன், பகவானில்லையென்று சொல்லுவான்! அதோ! ஆகாயத்தில் வாகாய் ஒளிர்ந்து மிளிர்ந்து பளபள தகதகவென்று 'டால்' விட்டு, ஜிலு ஜிலுவென்று

கடலைக்கல்லும் காதவழிபோட பச்சை நீலம் செகப்பு ஊதா மஞ்சள் முதலிய வர்னங்களை இச்சைப்படிதோற்றி அச்சுதன் பெருமைகளை அளவற்றுப் பாடிக்கொண்டிருக்க, ஐயனில்லையென்றுபொய்ப் பேச்சை யாவன்தான் சொல்லிமேவுதல் செய்யக்கூடும்? அடுப்பங்கரையில் சமையல் செய்வதற்குமேல், சிறிது 'ஸைன்ஸ்' என்னும் விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சி செய்வதனாலேயே, "கடவுளைக் கண்டாயா, *ககனத்தை விண்டாயா?" என்று குதர்க்கம் பேசிக்குறைபட்டொழிபவர்கள், தமது விஞ்ஞானசாஸ்திர ஆராய்ச்சிகளிலும் உத்தேசத்தைக்கொண்டு உறுதி அடைவன எத்தனையிருக்கின்றவென்றும், தாங்களும் ககனத்தை விண்டு காரணங்கள் உண்டு என்று காட்ட முடியுமாவென்றும் கவனிப்பார்களாக!" என்று பற்பல விதமாய் வனஜாஸனன் தத்துவ எண்ணத்தில் தலையமிழ்ந்திருந்தான்.

மணி, அப்பொழுது இரவு எட்டாய் இருக்கலாம்! சந்தடியென்பது எந்தத்திக்கிலும் காணோம்! பரப்ரம்ஹ ஸ்வரூபத்திற்குப் பாலபிஷேகஞ் செய்வதுபோல் மேலமைந்த சந்திரன் பாலைப்போல் நிலாவைப்பரபரவென்று கொட்டுகிறான்! மந்தமாருதம் மலையமாருதாகத்தைத் தாங்கிச் சிந்தைகளிக்கச் சில்லென்று வீசுகின்றது! குந்தலவராளிராகம் நொந்தயர்ந்துபோம்படி குயிலினங்கள் தம்குரலைக்காட்டுவதும், அங்கு மிங்கும் கிளிகள் அக்கக்க என்று பேசுவதும், மாடப்புறாக்கள் 'மகிமையாய்க்' கத்துவதும், மயிலினங்கள் இறகை விரித்து மன்மதனுக்குத் திருஷ்டிசுழற்றுவதும்,— அங்கே எல்லாம் ஆனந்தம்! இந்த இனிய நாதமேதவிரவேறெந்த இடர்ப்படும் சந்தடியும் கிடையாது.

அந்த வேளையில், வனஜாஸனனுக்கு அயர்ந்து நித்திரைவரும் சமயத்தில், தள்ளித் தள்ளாடி மெள்ள மெள்ள ஒரு கிழவன் சள்ளைப்பட்டுக்கொண்டும் சங்கடப்பட்டுக்கொண்டும், கோலூன்றிக் கூனிக்குறுகிப் பெருமூச்செறிந்து, பின்னங்கால் பின்னிப் பெருந்துன்பம் விளைக்க, முன்னங்கால் மடங்கி முக்கரணத்திற்கு எத்தனம் செய்ய ஹஸ் உஸ் என்று வனஜாஸனன் அருகில் வந்து வக்கணையோடே வார்த்தைகள் பேசி,

"அப்பா! நீயாரப்பா, எந்தவூரப்பா, என்னபேரப்பா, சும்மா கூறப்பா" என்று மூச்சுக்கு முக்கலாடிப் பேச்சுக்குப் பிக்கலாடி அடுக்கி அடுக்கி அழகாய்க்கேட்டான்.

---

* ஆகாயத்தைப் பிளந்தாயா ?

அப்போது தான் கும்பகர்னன் அழுகிய வல்லையை அப்பன் மீது வீசினபடியால். தன்னைமறந்து, உணர்வைத்துறந்து வனஜாஸனன் கையைப்போட்டுக் கண்ணை மூடினான்.

அப்பா அப்பா என்று ஐந்நூறுதரம் கிழவன் அடுக்கிப்பேசியதால், திடுக்கெனவெழுந்து வனஜாஸனன்.

"தாதா! என்னவேண்டும் தாதா என்ன கேட்டாய் தாதா" என்று இரக்கம் வரும்படி எளியமொழியால் இரங்கிக் கேட்டான்.

"அப்பா, அப்பா, நீ, வந்தாயே, படுத்தாயே, முழித்தாயே, பழித்தாயே, யாரு என்னா ஊரு, என்னாபேரு, அதைக்கூறு என்று சொன்னேனே தவிர வேறொன்றுமில்லை" யென்று வினயக்குரலால் கிழவன் விண்ணப்பத்தோடு மொழிந்தான்.

"தாதா, நான் ஒருரத்தின வியாபாரி! என் ஊர் இங்கிருந்தும் ஐந்நூறுமைலுக்குக் குறையாமலிருக்கிறது. நான் கையில் பதினாயிரம் வராகனெடுத்துக்கொண்டு வியாபாரத்திற்காகப் புறப்பட்டேன். என்னுடன் கூடவந்த ஏவலாளரும் காவலாளரும் காட்டில் வழிதப்பி, திகைதப்பி எங்கேயோபோய் விட்டார்கள். நான் திருடரிடம் அகப்பட்டுத்திகைப்புண்டு, சற்று உதைப்புண்டு, கையில் இருந்தபொருளைக் களவுண்டு, முன்னும்போக வழிதெரியாமல் பின்னும்போக மனமில்லாமல் தலைவிதியை நினைந்து வருந்தி, தைரியத்தால் மனவுறுதி பொருந்தி, இங்குவந்து சற்று இளைப்பாறிப் போகலாமென்றுவந்தேன். வந்த இடம் மிகுந்த அந்த சந்தத்தோடு சுந்தரத்தோற்றம் சொகுசாய்க் காட்டியதால், இளைப்பு நீங்கிக் களைப்பு வாங்க இங்கு படுத்தேன். எனக்குப்படித்த வைத்தியம் பிடித்த பிடிவிடாததால், அந்தரத்திலே விளங்கும் சந்திரனைப்பார்த்து என்னென்னமோயோசனை எங்கெங்கேயோபோய் விட்டது! எனக்கும் தெரியாமல் தூக்கம் எப்படியோ வந்து விட்டது! தாதா, இதுதான் என்சமாச்சாரம்" என்று வனஜாஸனன் பாகானமொழிகளாலே பக்குவமாய்ப் பதில் கூறினான். இதுகேட்ட கிழவன் இளமுறுவல் செய்து, பின்னால் பீரங்கி நகைபோல் பெருக்கச்சிரித்து,

"அப்பா, என்னப்பா, பொன்னப்பா, சின்னப்பா, நீவியாபாரியாப்பா, வாணாம்பா, கதையப்பா, மெய்ய சொல்லப்பா" என்று கிழவன் பழகினவனைப்போல் பரபரக்கப் பேசினான்.

"இல்லை தாதா; நான் சொல்வது மெய்யே தாதா நீயார் தாதா, இங்கு என்னவேலை செய்கிறது தாதா?" என்று வனஜாஸனன் கிழ

வின் பேசுகிற நடையிலேயே பேசி, மெதுவாய் அவனை நம்பவைப் பதற்குச் சாகஸவார்த்தையால் சமத்காரம் பண்ணப்பார்த்தான்.

"போடாபோ! அடேபையா! நீ முந்தாநாள் பையன் முளைக்கலை மூளையிலே வெடிக்கலை! பழுத்தோலையைப் பார்த்துக் குருத்தோலை பரிஹாசம் பண்ணிப்பார்க்கிறபடி. வெகு சபாஸ்! சபாஸ்! நல்லவேடிக்கை" என்று அந்த நரைப்பெருந்தலையும் திரைப் பெருமுடலும் பெற்ற கிழவன் திருத்தமாய்க் கூறினன்.

கிழவன் இப்படிச்சொல்லவும், வனஜாஸனனுக்கு வயிற்றில் பகீர் என்று மனத்தில் திகீர் என்று அச்சமும் திகிலும் அடுத்தடுத்துத்தோன்றி, வியர்வையாலே தேகம் வருந்தி, திடுக்கிடலாலே நெஞ்சம் நடுங்கி இன்னது செய்வது எனத்தோன்றாது, இரண்டு நிமிஷம் இடுக்கண்பட்டுப் பிறகு தைரியங்கொண்டு,

"தாதா, நீயார் தெரியவில்லையே, உன்வரலாறு என்ன? நீ இங்கு தோட்டவேலை செய்கிறதல்லவா? என்னைப்பற்றி உனக்கு ஏன் இவ்வளவு கவலை? எனக்காக நீ ஏன் இத்தனை கஷ்டமெடுத்துக்கொள்ளவேண்டும். நான் இங்கு சற்றுநேரம் தங்கியிருப்பது உனக்கு இஷ்டமில்லையாயின், இப்போதே சொன்னால் கூடினபோதே நான் எடுப்பேனே ஓட்டம்!" என்று தணிந்த நெஞ்சோடு பணிந்தமாதிரி வனஜாஸனன் பழுத்த கிழவனைநோக்கிப் பரிந்து கூறினன்.

கிழவன் கிண்ணாரங்கொட்டிக் கொண்டே,

"அப்பா, உன்பெயர் என்ன அப்பா?" என்று ஆவலாய்க் கேட்டான்.

வனஜா:—"என்பெயர் ராமநாதன்"
கிழவன்:—"என்பெயர் வனஜாஸனன்"
வனஜா:—"என்னூர் அவந்திகாபுரி ஐயா"
கிழவன்:—"என்னூர் ஆனந்தநகரம், பையா"
வனஜா:—"இதென்ன அவஸ்தையாயிருக்கிறதே!"
கிழவன்:—"அப்பா பேரும் தெரிந்திருக்கிறதே"
வனஜா:—"ராமசாமி முதலியார் எங்கள் அப்பா பேர்"
கிழவன்:—"ஆடம்பராசாரி எங்கள் அப்பா பேர்"
வனஜா:—"என் தாயார்பேர் செல்லம்மாள்"
கிழவன்:—"என் அம்மாபேர் நல்லம்மாள்"

வனஜா:—"என்ன தாதா விளையாடுகிறாயே"
கிழவன்:—"என்ன பாபா களவாடுகிறாயே"

இவ்விதமாக இவர்களிருவருக்கும் பேச்சு நடந்து கொண்டிருக்கும்போதே, வனஜாஸனனுடைய மனமானது தேனில் விழுந்த ஈயைப்போலேயும் சமனன் கையிலகப்பட்ட பேனைப்போலேயும், தவித்துத்தடுமாறித் துடித்துத் துள்ளிக்கொண்டிருந்தது. "எந்த ஊரிலேயோ எதிரேவந்த கிழவன் என்னென்னவோ சமாசாரம் எப்படியெப்படியோ சொல்லுகிறானே! இஃதென்ன சங்கடம்! இஃதென்ன அவஸ்தை! எல்லா விவரமும் எல்லா உறவினமும் தன்மேலேற்றித்தந்திரமாய்ச் சொல்லுகிறானே! தந்திரமாய் வந்த நாமும் கிழவன் யந்திரத்திலகப்பட்டுச் சிந்தைகலங்கிச் சீர்கெடலாயிற்றே! இப்போது எப்படிக் கணப்போதாயினும் கழிப்பது!" என்று பலவாறு வனஜாஸனன் கவலைப்பட்டான்.

அரை நிமிஷத்திற்குள் மனதை ஒருவழிப்படுத்திக்கொண்டு வனஜாஸனன் கிழவனை நோக்கி,

"தாதா! நீயார்யார் பேரையோ சொல்லுகிறாயே! என்ன தாதா உன்னதமாயிருக்கிறதே உன் சமாசாரம்" என்று ஒருபுரட்டு விட்டு மெதுவாய் உருட்டிப்பார்த்தான்.

"ஆமாம்! என்னிடமா நீ கதை பண்ணுறே. புறப்படப்பா சீக்கிரம், கண்ணாலர் அங்கே காத்துக்கொண்டிருக்குதே. எழுந்திரு. வண்டி தெருவில் கொண்டிமாடு பூட்டி. ஜண்டித்தனம் செய்து ஜடுதியில் போகத்தயாராயிருக்கிறது! எழுந்திரப்பா, எழுந்திரு, புறப்படப்பா, புறப்படு" என்று கிழவன் எளனஞ் செய்வதுபோலவே எத்துசெய்து பேசினான்.

அந்தச்சமயம் அழகிய வனஜாஸனனுக்கு அகத்தில் ஒன்றுந் தோற்றவில்லை. விழித்தான், திகைத்தான், ஆகாயத்திலிருந்து இடி அகஸ்மாத்தாய் விழுந்ததுபோல், திப்பிரமைகொண்டு திடுக்கெனப்பயந்து சுற்றும் முற்றும் உற்றுப்பார்த்து, அங்கு யாருமில்லாதது கண்டு, இடையில் மறைவாய் வைத்திருந்த உடைவாளை யுருவி,

'அடே! தத்துபித்தென்று உளறிக்குற்றும் 'தகல்பாச்சி'க் கிழவா, நீ என்னிடம் வீண்கதை பேசி விண்ணாணம் பேசுகிறாயா? நீயார் என்பதை இப்போதே சொல், இல்லாவிட்டால் முனைமுகத்தில்

நில்' என்று ஆக்ரோஷத்தோடே அகோரருத்திரனைப்போல் பேசவே, கிழவன், நாக்குளறி வாய்தடுமாறி,

"அப்பா, நான் சொல்வது தப்பா, உனக்கு நான் ஒரு ஒப்பா? என்னைக்கொல்லாதே, யான்செத்த போதிலும் இப்போதான ஏற்பாட்டை உன்கத்தி வெல்லாதே" என்று கிழவன் நையாண்டிப் பாட்டை நாலு நாழி பாடினான்.

"ஹோ! அதொன்றும் எனக்கு அவசியமில்லை. நீ யாரென்பதையிப்பவே சொல் வீண்கதை பேசாது நில், சக்தியிருந்தாலென்னைக்கொல்" என்று வனஜாஸனன் வக்கணையாக வயிறு குலுங்கப்பேசினான்.

"என்னப்பா, கொல், சொல், வெல், நில் என்று கோபாவேசத்தாலே கோடிசொல்லைக்கொட்டி விடுகிறாயே! 'சல்! பகவதி சடுதியில் சுகவதி' என்று மந்திரம் செய்வேன்!" என்று கிழவன் சிறிது பயமுறுத்துவதுபோல் பேசினான்.

வனஜா:—ஜல்! என்ன மந்திரம்?

கிழவன்:—அது வெகு வெகு தந்திரம்.

வனஜா:—உன் மந்திரத்தால் மாங்காய் விழுமா?

கிழவன்:—வயிறு நிறந்த குழந்தை வாயார அழுமா?

வனஜா:—வீண்கதை பேசாதே நில்.

கிழவன்:—ஜாண்மாத்திரம் அசையாதே ஜல்.

வனஜா:—அப்படியா சமாசாரம் குத்துகிறேன்பார் தாதா.

கிழவன்:—இல்லையப்பா இல்லையப்பா நான் மாரியாத்தா.

உடுத்த உடையை வெடுக்கெனக் களைந்தான், கிழவன், கடுத்த முகத்துக் காளிகாதேவிபாய் நின்றுள் மாரியாத்தா ளென்கிற மந்திரக்கிழவி.

இப்போது வனஜாஸனனுக்கு உண்டான ஆச்சரியத்திற்கும் அதிசயத்திற்கும் அளவென்பதேயில்லை. இதென்ன ஆச்சர்யமாயிக்கிறதே! சற்றுநேரம் இங்கே களைப்பு வாங்கவும் இளைப்பு நீங்கவும் வந்த இடத்திலும் கூடவலிய வழக்கு வந்து நேர்ந்ததே! ஏ! ஜகதீசா! பிள்ளையார் பிடிக்கக்குரங்கான கதைப்படி, முரட்டுக் கிழவனாயிருந்த திருட்டு உருவம் இப்போது மாயக்கிழவியாக மாறிவிட்டதே! இவள் மஹா பொல்லாதவளாயிற்றே! இவளிடமிருந்து எப்படித்தப்புவோம்! இவளிடமிருந்து எப்படிப் பிழைப்போம்!" என்று மனம் நொந்து,

"மாரியாத்தா! நீயா! நீயிங்கு எப்படிவந்தாய்? என்ன ஆச்சரிய மாயிருக்கிறதே" என்று வனஜாஸனன் 'மெதுவாய்க்' கேட்டான்.

"அடே! பையாஅ நீ நேஎஎற்றுப் பைஐயனுச்சேஎ நீஇஇ என்னுஅ இந்திர அஜிஇத்து, மஹே எந்திர ஜித்து பண்றே! உன் அப்பன் ஆத்தா அஅங்கேஎ அயுது கினு இருஉக்க, வந்தவுங்க எல்லாஅம் சிஇந்துஉக் கொஒருவிளா அங்காயா சிதஅறிகு உனு இருக்க, நீ இங்கேஎ ஓஓடிவந் தூட்டாயே! கண்ணுஅலம் எப்படி யாவுறது! இப்பவேஎ பொரஅப்பஅடு நாஅம்பபோவலாஅம்வா அஅ" என்று மாரியாத்தா மஹா ஜோராய்க்கேட்கவும், பையன் பாடுதையதைய என்று தலைப்புரட்டலானது.

ஆனபோதிலும், ஒருவாறு மனதையுறுதி செய்துகொண்டு, "ஆயா, நான் அங்கு வரமாட்டேன்! உனக்கு எப்படி நானிங்கிருக்கும் சங்கதி உதயமானதோ எனக்குத் தெரியவில்லை. காசிக்குப் போனாலும் கர்மம் தொலையாததுபோல், நான் இங்குவந்த இடத்திலும் கூட என்னைத்தேடி எதிர்ப்பட்டாயே நீ. மந்திரம் செய், நீ மாயம்செய், நீ தந்திரம் செய், நீ தடபிடல் செய், எனக்கு அவைகளைப்பற்றி யாதொரு அவசியமுமில்லை. நான் அங்கு வரவும்மாட்டேன். அந்தக்கல்யாணம் செய்துகொள்ளவுமாட்டேன்" என்று வனஜாஸனன் ஒரே பிடிவாதமாய் ஒரே பேச்சைப் பேசிக்கொண்டிருந்தான்.

இதைக்கேட்ட மாரியாத்தா, "அடே! பையா! உனக்கு இந்த புடிவாஅதம்ம் ஆஅவவேயாவாது. நான் என்னு சொன்னாலும் நீ கேக்கமாட்டேன் என்கிறாயே! நீ பொறப்படறாயா என்ன சொல்றே?" என்று கேட்டாள்.

"வரவேமாட்டேன்"

"வர மாட்டாயா?"

"வர் மாட்டேன்"

இப்படிச் சொன்னதும், வனஜாஸனன் முகத்தில் பனிநீர் போன்ற ஒரு வாசனைத்திராவகத்தை மாரியாத்தாள் தெளித்தாள்! க்ளோரோபாரம்போன்ற திராவகம் முகத்தில் பட்டமாத்திரத்தில் மூச்சுமில்லாமல் பேச்சுமில்லாமல் மூர்ச்சையானான் வனஜாஸனன்! மூர்ச்சையான வனஜாஸனன் முகம் பூரண சந்திரன்போல் பொலிவுற்று ஒளிவிட்டது! மாரியாத்தாள், அந்த அழகிய முகத்தை அமைமேவாடே நோக்கி "ஹாஹா! என்ன அயகு! பையன் அய

ளிசப்பாத்து நானே அப்புதமுதலியார் மகளுக்கேற்ற மணவாளனென்னு மெச்சி பண்ணுறார். அப்படி சொல்லி அவர் ஆனந்தப்பட்டாலும், அவ என்னமோ வெள்ளை தலைச்சி, இவன் என்னமோ கறுப்புதலையன்." என்று இரண்டொரு நிமிஷம் ஆலோசனை செய்துவிட்டு, "ஹா! ஹூ! காளி, கூளி, கபோதி, காவடி ஓடி வாங்கடா, பாடிவாங்கடா சீக்கிரம் வாங்கடா. சிறுத்தை மூஞ்சிப்பயகளா" என்று கத்தினாள். தக்ஷணமே, அக்ஷயர் என்று சொல்வதுபோல் சிறுத்தை மூஞ்சிப்பயல்களாகிய காளி, கூளி, கபோதி, காவடி என்னும் நால்வரும் 'ஏரோப்ளேன்' (Æroplane) என்கிற ஆகாயவாகானத்தை அங்கே கொண்டுவந்து,

"மாரியாத்தா! மண்ணைபோனு வந்தூட்டோம்! வவுறுநெறைய சோறுபோடு, வாநெறைய தண்ணிவாரு. பசிக்குது! பசிக்குது!" என்று கத்தாமல் கத்தி கிழவி சதையைக் கொத்தாய் பிடுங்கி விட்டார்கள்.

'அவசரப்படாதிங்கடா அறுதலைப்பயங்களா! தலைகால் தெரியாதே ஆடாதிங்கடா தறிதலைப்பயங்களா! நானு சொன்னபடியே கேட்டங்கண்ணு உங்களுக்கு நரமாமிசம் அப்புடும். இல்லாகிட்டிபோனு ஒண்ணும் அப்புடாது. இப்போ இங்கே மந்தரம் பண்ணி இவனை எயுத்துக்கொண்டுபோனு தான் அங்கே மன்னார்சாமிக்கு பலி ஏற்தும். ரத்தக்காட்டேரி மெத்த இஸ்டமா பூஜை வாங்கிக்கும். எண்ணு சொல்றேங்கா' என்று மாரியாத்தா 'ஏக' தடபிடலாய் 'ஆகாஹா' என்று அவர்களைக் கேட்டாள்.

"அப்படியே மாரியாத்தா அப்படியே கூழுவாத்தா அப்படியே கொட்டமடைச்சா அப்படியே கும்பம்போட்டா உன்னு இஷ்டப்படிசெய். நரமாம்மிசம் மாத்துரம் மறக்காதே. பொலிபோட்டானதும் எங்களுக்கு தான் மொதல் கொடுக்கணும். இவன் தான் அயகா இக்குறான் இவனை தான்தேவம் தேவாதி எக்கும். அயகா ஒணும் அயகா ஒணும் எண்ணு ஆறுமாசம் அலெஞ்சி அத்தமிச்சியே! அயகா இல்லாகிட்டிப்போனா மன்னாருசாமி தின்னமாட்டான். மயிரா போனவன் உண்ணமாட்டான், காட்டேரி உறியாது, முனீசுரன் முழுங்காது இண்ணு சொல்லிகினு இருந்தியே இவன் நண்ணாயிக்குறான். இவனைவுடாதே வுடாதே" என்று காளி கூளி கபோதி காவடி நால்வரும் 'கார்மச்' என்று கூச்சலிட்டார்கள்.

மாரியாத்தாளுக்கு அதிக சந்தோஷம் உண்டாய் விட்டது. சிரித்தாள் கொக்கரித்தாள் எகிறிக்குதித்தாள் கிண்ணாரம் கொட்டினாள். கிழமூஞ்சியில் களைபோடிற்று! தக்கபையன் மிக்க அழகோடு பக்குவமாயிங்கே பதைபதைக்க அகப்பட்டானே என்று அவளுக்குண்டான சந்தோஷம் அவ்வளவிவ்வளவன்று.

பிறகு, காலாந்தப்பாவிகளாகிய காளிகூளி கபோதி காவடி இந்நால்வர்களையும் பார்த்து, கோரக்கழுதையாகிற மாயக்கிழவி, பின்வருமாறு சொன்னாள்:

"அடே! பபகளா! நீங்க நாலுபேரும் இந்தப்பையன் ரெண்டு கைங்களையும் ரெண்டு காலுங்களையும் இந்த பந்தக்காபோலே நிக்கிற நாலுமரங்களையும் கவுற்றைப்போட்டு நன்னாகட்டிடுங்க. புடலங்காபதினாறு, பீர்க்கங்கா பதினாறு கொண்டுகுனு வாங்க. மரத்துக்கு நாலாகட்டிடுங்கோ. கண்ணாலப் பூசினிக்கா ரெண்டு கொண்டுகுனு வந்து தலெமாட்டிலெ ஒண்ணு காமாட்டிலெ ஒண்ணு வைச்சிடுங்கோ! மந்துரம்பண்ணியானதும், தேங்கா ஒடெச்சி கப்பூரம் கொளுத்தி இந்தப்பையன் கட்டெ அவுத்து காத்துவண்டிலெவச்சி பறந்து பூடுவோம். எல்லாம் தயார்பண்ணுங்கொ".

இந்தமாதிரி மாரியாத்தா சொல்லவும் அப்படியே ஐந்து நிமிஷத்திற்குள் எல்லா ஏற்பாடுகளையும் பொல்லாப்பயல்கள் செய்து முடித்தார்கள். கல்யாணவாசலின் உல்லாஸக்கால்கள் போன்று வனஜாஸனன் படுத்த வென்னப் பூப்பந்தலின் கால்களாய் விளங்கிய நான்கு கமுகுமரங்களிலும் அவன் கையையும் காலையும் கயிற்றால் கட்டி, அக்கால்களிலேயே புடலங்காய்களையும் பீர்க்கங்காய்களையும் சிங்காரமாய்க்கட்டி, பூசணிக்காய் இரண்டையும் தலைமாடுகால்மாடுகளில் தனித்தனிவைத்துக் கையைக்கட்டி வாயைப்பொத்தி, விளக்கையேற்றி வினயமாய் அவர்கள் வீறோடே நின்றார்கள்.

மாரியாத்தா மிணமிண கணகணவென்று மந்திரம் உச்சரித்தும் மணியடித்தும், "அடே பயகளா! பயப்படாதிங்கோ! இங்கே ஒருத்தரும் இல்லே! இது காடு மாதிரி. காவல்காரன் ஒருத்தன். அவன் கண்ணிலே மண்ணெத்தூவனேன். அவன் மயக்கம் நாளை வரைக்கும் எழுந்திருக்கவே மாட்டான். வேலைக்காரன் ஒருத்தன் அவன் காலெ ஒடிச்சு மூலையிலே போட்டுட்டான் காளி தம்பியாகிய காட்டேரி! நீங்க ஒண்ணுத்துக்கும் பயப்படாதிங்க! நான் மந்துரம் பண்ணுறேன். நீங்களும் மந்துரம் பண்ணுங்க! நான்கத்து

றேன். நீங்களும் கத்துங்க" என்று சட்டதிட்டத்துடன் கட்டளை கொடுத்தாள். உடனே எல்லோருமாக நின்று,

### பாட்டு.

ஐயும் கிலியும் ஹர ஹர சங்கர
பையன் பலியும் பரபர சரசர

---

மொண மொண கணகண மணியடி பகவதி
தொண தொண மந்திரம் ஸுண ஸுண மந்திரம்

---

அசியுசி மசிமுசி உசிரொழி மந்திரம்
கசுமுசு கொசுகடி கழுத்தரிமந்திரம்.

என்று மந்திரஞ்செய்துகொண்டு, முதற்பூஜை யிங்குபோட்டு, மறுநாள் முழுப்பூஜை பலிப்பூஜை போடலாமென்று கற்பூரங்கொளுத்திக்கொண்டும் கையைக்கட்டிக்கொண்டும் நின்று கொண்டிருக்கின்றார்கள்.

வரவர இவ்வைந்து பேர்களுக்கும் ஆவேசமிகுதியாலே அறிவும் மறைய அனைத்தும் மந்திர மயமாய் நின்றார்கள். அக்கம் பக்கத்திலென்ன நடக்கின்றதென்பதை அணுவளவேனும் நினையாதவர்களாய், தாங்கள் மந்திரம் செய்கிற பெருமையும் தங்களுக்கு மறுநாள் நரமாம்சம் கிடைக்கப்போகிற அதிர்ஷ்டமும் தங்கள் கண்களை மறைத்து அறிவையே அவித்து அனர்த்தஞ்செய்ய, அவர்கள் ஆனந்த பரவசத்திலாழ்ந்து அனைத்தையும் மறந்தார்கள். இப்படி இவர்கள் மந்திரமும் மாயமும் செய்து கொண்டே மனதுலயப்பட்டிருக்குங்கால், மாரியாத்தாளுக்குப் 'பட்' டென்று ஒரு அடி மொட்டைத்தலைமேல் சட்டென்று சடுதியில் விழுந்தது. அதே நிமிஷம் பாசக்கயிற்றைப் பரபரப்பாய் வீசிக் காலாந்தப்பயல்களைக் கட்டவந்து எட்டிப்பிடித்தார்கள் கொட்டடிவித்தையிற் பழகிய கெட்டிக்காரர் நால்வர்! திடுக்கிட்ட மந்திரக்காரர் வெடுக்கென்று திமிறிக்கொண்டு, ஆகாச வாகனத்தைத்தட்டி மேலாகக்கிளம்பிவிட்டார்கள். மந்திர மோய்ந்து தந்திரம் சாய்ந்து காற்று வாகனத்திலுட்கார்ந்து அவர்கள் காற்றாய்ப்பறக்கவே, கொடிகற்ற கெட்டிக்காரர் அங்கிருந்த ஆலாகோலத்தைகண்டு, "ஐயோ பாவம்! அழகிய பையனொருவன் ஆவிதுறக்கும் ஆபத்துக்குள்ளாயினனே! நாமே

இங்கு வந்தது நல்ல சந்தர்ப்பமாய்விட்டது. அரசரும் அரசியும் இங்குவர இன்னும் ஐந்து நிமிஷந்தானே யிருக்கிறது! இன்று இங்கு அரசன் வரப்போகிறதில்லை யென்று முதலில் இருந்த ஏற் பாட்டை யனுசரித்து, 'ஈ காக்காய் நாடாது' இங்கே என்று இந்த காரியத்தைச்செய்ய வந்து விட்டார்கள்போலிருக்கிறது. என்ன மோ, பையன் தலைவிதி நல்ல திருவிதியாயிருந்தபடியினாலே, நாம் இங்கு வந்தோம். நல்ல ஜலத்தை முகத்திலிறைத்தோம் என்று நினைத்து பனிநீரையும் குளிர்நீரையும் வனஜாஸனன் முகத்திலி றைத்தும் வாயில் சிறிது ஜலம் ஊற்றியும் மயக்கத்தைத் தெளி விக்க மஹாபிரயத்தனம் செய்துகொண்டிருந்தார்கள். அந்தசமயம்

"அங்கே என்ன? ஏது?" என்று கொண்டே அரசர் வந்து விட்டார்.

"ஐயோ பாவம் யாரோ பிள்ளை" என்று பின்னாலேயே அரசி யார் வந்து விட்டார்.

"ஆ! அதென்ன அப்படி கட்டி யிருக்கிறதே!" என்றது ஒரு பிள்ளை.

"புடலங்கா பீர்க்கங்காய்! அடே அடே வேடிக்கை!" என் றது ஒரு குழந்தை.

"அங்கே பார்த்தாயடா பூசனிக்காய்!" என்றது மற்றொரு குழந்தை.

ஒன்றுஞ் சொல்லாது பின்னே நின்றாள், ஒய்யார நிலையுடன் ஒப்பற்ற ஒருமாது! தினகானைப்பழிக்கும் திவ்யதேஜஸும், சந்திர னைப்பழிக்கும் சல்லாபமுகமும், கெண்டையை யிகழும் உருண்ட கண்களும், கொவ்வையையிகழும் செவ்விய உதடும், மானைப்பார்த் து, ஏனோவென்னும் மருண்டதோற்றமும், யானையைக்கண்டால் பூனையென்று ஈனப்படுத்தி யிகழ்ச்சி கூறும் கண்ணிய நடையும் கம்பீரச்செய்கையும் அவளிடம் மிகுதியாய்க் காணப்பட்டன. மின் னல் வந்து இந்நிலத்திழிந்ததோ! என்று சிலர் அவளைப்பற்றி ஆச் சரியமாய்க் கூறுவர். மேகம் வந்து கூந்தலாய் மேலே படிந்ததோ! என்பவர் வேறு சிலர். சிதறுண்ட மேகங்கள் சில, வில்லைப்போல வளைந்து நல்ல புருவமாயிற்றோ, கண்ணுக்குள்ளே கருமணியாயிற் றோ! என்று, கம்பனைக்காணோமே எனத்தினம் வருந்தித் துன்பம் பொருந்திக்கவலைபாலே கலக்கங்கொள்பவர் பின்னுஞ்சிலர்.

இத்தகைய் அபரஞ்சிக்கொடி, மனோரஞ்சிதப்பூ, அழகே அவ் தாரமான அரசகுமாரி—இவளுக்கு வயது எட்டும் பத்தும். உலகத்தை விலைமதித்த வைரக்கம்மல் காதிலும், இருட்டு வீட்டில் குருட்டு மனிதரும் காணும்பொருள்களைக்கண்டுபிடிக்க, மத்தாப்பு கொளுத்தினாற்போல் மஹாஜோதியுடன் விளங்கித் துலங்கும் மாணிக்கம்பதித்து ஆணிப்பொன்னாலாகிய அழகிய அட்டிகைகழுத்திலும், பச்சைக்கல்லும் நீலக்கல்லும் பார்த்தோர் மெச்சும்படி பூணைக்கண்ணும் புஷ்பராகமும் மாற்றி மாற்றி வைத்து ஏற்றங்கொண்ட இணையில்லா இரண்டு வளையல்கள் கையிலும், ஜல்லெனவொலித்தும் மெல்லிதாகிய நல்ல கொலுசுகள் காலிலுமாக அவள் இயற்கையழகோடு செயற்கையழகிற் சிறந்து விளங்கினாள். இடுப்பில் கட்டிய சேலை இரண்டாயிர ரூபாய்க்கு ஒரு சிறிதும் குறையாது. அவள் ஒரு பேச்சுப்பேசுவதன் முன்னமே அமிர்தவாடை அலங்காரமாய் வீசிக்கொண்டிருக்க, அவள் பேசத்தொடங்கினால் அமிர்தப்பிரவாகம் அமோகமாய் உண்டாகுமென்று அங்கிருந்தோர் யாவராயினும் அறிந்திருக்கக்கூடும். பட்டும் சரிகையும் பள பளவென்றும் மினு மினுவென்றும் இரவைப் பகலாக்கிய இரவிக்கை யொன்று பூண்டு, ரஞ்சித வஞ்சிக்கொடியோ, தங்கப்பிரகாச தாவள்ய ரூபமோ, ஸ்ருங்கார ஸேவித அலங்காரப்ரபாவமோ, ஆனந்தாம்ருத அற்புதவடிவமோ, கவிதா சாதுர்ய கம்பீரஸ்வரூபமோ, ஜகஜ்ஜோதியோ, ஜோதியின் ஜோதியோ, இகபரஸாம்ப்ராஜ்ய இஷ்டதெய்வமோ, சங்கீத வித்யாபுளகாங்கித சமர்த்தியோ என்று பற்பலரும் புகழ்ந்து பரவசமாகும்படியான பாலசுந்தரியாய் அவள் விளங்கினாள்.

இவள்தான் இக்கதையின் முக்கிய அதிகாரியாகிய மனமோஹன மாணிக்கம் என்பவள். கரிக்குச்சுகளுக்கும் உலகத்தில் மாணிக்கம் என்று பெயர் வைப்பது வழக்கமாயிருக்க, இந்த மாணிக்கத்திற்கு வெறும் மாணிக்கம் என்று பெயரிருப்பது விசேடமாகாதெனக்கருதி, இவள் அழகையும் அமைதியையும், அறிவையும் அற்புதத்தையும் கண்ட அரசசபையின் அறிஞர், 'மனமோஹன மாணிக்கம்' என்று மஹத்தான பெயரை மாண்புடன் சூட்டினார்கள்.

அத்தகைய அற்புதவதிக்குக் குணமும் மணம் பெற்றிருந்தது. ஆனந்தமாகும் ஆரமிர் துண்டு, கல்வியாகும் கற்கண்டைக் காலையிலும் மாலையிலும் சுவைத்துத் தத்துவ எண்ணத்தில் அவள் தலையமிழ்ந்திருந்தபடியால், அவள் முகத்தோற்றமும் பார்வையின்

ஏற்றமும் வெறும் உலகநடையிலேயே அவள் படிந்தவளல்லளென்றும், கடவுளைப்பணிந்து பெரியோரை வணங்கி நல்லதையே செய்து எல்லாவற்றாலும் அவள் இணையற்றிருந்தாளென்றும் நன்றாகக் காட்டுகின்றன. அவள் அதரத்தில் படிந்த அழகிய புன்னகையும், அறிவு பதிந்த அழகியகண்களில் ஆடித்ததும்பும் அன்பின்நிறைவும் அவள் சிங்கார வேடிக்கைகளிலும் சித்தம் செலுத்தி அலங்காரப் போக்குகளிலும் * ஆர்வம் வைத்தவளென்று அதிகமாய்க்காட்டுகின்றன.

மனமோஹன மாணிக்கம், அரசரின் அரும்புதல்வியாய் அவள் மனமெல்லாம் அவர் வாழ்க்கையிலேயே அமையப் பெற்றவளாய், அவர் பின்னாலேயே நடந்து அன்னம் போலே அழகாய் வந்தவள் எதிரே தோன்றிய இருப்பைக்கண்டு திட்டெனப்பயந்துப் பொட்டென நின்றாள்! பூரணச்சந்திரனைப் பொல்லாத பாம்புகவிந்தது போல், மன்மதாகார மஹாபுருஷனை மாயைதீண்டிப் பேயாட்டமாட்டியதோ என்று மனம்மிக நொந்து, 'ஐயோ!' என்று அப்படியே நின்றாள்; உள்ளத்தில் கண்டநோய் உணர்வை மறைத்து விட்டது. அகத்தில் தோன்றிய ஆனந்தம் பேச்சை மறைத்து விட்டது! 'அழகில் மிகுந்த அரசகுமாரர்க்கு ஆவிமாத்திரமிருந்தால் அதிர்ஷ்டத்தில் என்னை விட யாரே மிகுந்தவர்?' என்று தானேகூறிப் பின்னர் விழித்துக்கொண்டு பேசாது நின்று பிரார்த்தனை செய்து கொண்டிருந்தாள்.

அரசர்: "என்னடா அது?"

கேரடியாட்கள்: "இன்ன திண்ணு தெரியலிங்கோ. இது என்னமோ, இவனைப்பிடிச்சுக் கட்டிவைச்சிருக்குது."

அரசர்: "பூசனிக்காயென்ன? புடலங்காயென்ன? பீர்க்கங்கா என்ன? என்ன இது? சமாசாரம் தெரியவில்லையே"

கேரிடிக்காரர்: "ஆம்! மஹாராஜா! மஹாப்ரபோ! இது என்னமோ மந்திரம் பண்ணிவிட்டாங்க போலிருக்கிறது. பையன் மயக்கத்திலே யிருக்கிறான்! கையையுங் காலையும் கட்டிவச்சி யிருக்குது. கட்டானு கொஞ்சத்திலே அவுக்கமுடியலெ."

ராஜா: "பையனுக்கு உயிரிருக்கிறதா? இவன் பாவம் யாரோ ராஜா வீட்டுப்பிள்ளைபோலிருக்கிறதே!" என்று மனைவியை நோக்கி "இவன் முகம் இந்த மயக்கத்திலும் என்ன காந்தி வீசுகிறதுபார்!

---

* ஆர்வம் = ஆசை

காளிதாஸன் இப்போதிருந்தால் கவிபாடி விடுவானே! இவ்வளவு அழகு எங்கேயும் நான் பார்த்ததேயில்லை. பாவம், உயிர் மாத்திரமிருந்தால்"

ராணி: "உயிர்மாத்திரமிருந்தால், நம் குழந்தை மனமோஹன மாணிக்கத்திற்கு ஒத்த புருஷன் இவனே யாவான்"

ராஜா: "என்னமோ! ஸ்வாமிகிருபை! பார்க்கலாம்!"

இப்படி இவர்கள் பேசிக்கொண்டிருக்கும் போதே, கொடிக்காரர்கள் கட்டையவிழ்த்து * சோடாவும், லெமனேட்டும் சுருக்காகக் கொண்டுவந்து, † டம்ளரில் ஊற்றி வனஜாஸனன் வாயில் ஊற்றினார்கள். முகத்தில் தண்ணீர் சிலர் இறைத்தார்கள். வைத்தியருக்காகச் சிலர் வழியே ஓடினார்கள். என்ன செய்தும் மயக்கம் சிறிது தெளிந்ததே தவிர, நன்றாய்த்தீர நாழிகைபிடிக்கும் போலிருந்தது.

அரசர்: "பல்லக்கில் வைத்து அரண்மனைக்கு மெள்ளக் கொண்டுவாருங்கள். அங்கு போனதும் வைத்தியம் அமைதியாகப் பார்க்கலாம்."

கொடிக்காரர்: "அப்படியே, மஹாப்பிரபோ!" இவ்வாறு சொல்லிவிட்டு, அரசரும் அவர் புதல்வரும் புதல்வியும் அரசியும் தங் கரதத்தில் ஏறித்தம்மிடம் சென்றார்கள். உடனே கொடிக்காரரும் பல்லக்கொன்று கொண்டுவந்து வனஜாஸனனை அதில் வளர்த்தி அரசன் அரண்மனைக்குச் சுருக்காய்க் கொண்டுபோகிறார்கள்.

அவர்களுள் ஒருவன் மற்றொருவனைப்பார்த்து,

"எண்டா! அண்ணே! இன்னு நாம் எந்ததுர்த்தேவதை மூஞ்சியில் முழித்தோண்டா? அப்படியும் இப்படியும் போயிகினு வந்துகுனு கதெபண்றதை வுட்டு பல்லக்கு தூக்கிப் பாடுபடறமே! என்னடா தலைவிதியிது!" என்று அவஸ்தைப் பட்டுக்கொண்டே அழுதுதீர்த்தான்.

மற்றொருவன் அவனைப்பார்த்து,

---

* சோடா லெமனேட்—இருவகைப்பானங்கள்.

† டம்ளர்=கண்ணாடித் தாகபாத்திரம்.

"அடே நீ பயப்படாதிரு! இன்னைக்குக் கொஞ்ஜம் கஸ்டம் பட்டாலும், இருக்குடா கோஸ்ப"

"என்னடா, அது?"

"கண்ணாலம் டா"

"யாருக்குடா?"

"ராஜா பொண்ணு இவனைக்கண்ணாலம் பண்ணிக்கொபோறு பாருடா"

"எப்படிறு தெரியும்?"

"பாருடா!"

# ஏழாம் அத்தியாயம்.

ஜகன்மோஹன சிங்காரம். பிரம்மராக்ஷதன்.

பயங்கர மலையில் பரதவிக்கிறாள் ஜகன்மோஹன சிங்காரம்! மயக்கம் தெளிந்தாள், எழுந்துபார்த்தாள்! மலையும் காடும் குகையும் கோரமுமாயிருக்கின்றன. அச்சமும்பயமும் அதிகமாய்த்தோன்றி, அவளை அலக்கழித்தது அவ்வளவிவ்வளவன்று. 'அங்கு இருந்தநாம் இங்குவந்ததெப்படி?' என்று தனக்குள்ளேயே கேட்டுக்கொண்டாள்; கையையூன்றி எழுந்து உட்கார்ந்தாள்! சுற்றிப்பார்த்தாள் சுந்தரமாது! எலும்பும் இறைச்சியும், பிணமும் பிடுங்கலும், ரத்தமும் நாற்றமுமாய் எங்குபார்த்தாலும் இப்படியப்படி யென்று சொல்லமுடியாத இடர்ப்பாடாயிருந்தது! உன்னத நிலையில் உயர் வாய்ப்பிறந்து, சிங்காரத்தில் சித்தம் தழைத்து, சுத்தமாக எதையும் மெத்த அமைதியாக வைத்திருப்பதிலேயே மனத்தைப்பதித்த மஹா உத்தமியாகிய அவளுக்கு கோரம் பொருந்திய குகையில் கொடுமை யென்பதையே பார்த்து, வந்ததும் தெரியாது வாய்ந்ததும் தெரியாது, முன்னுமறியாதுபின்னுங்குறியாது என்ன சமாசாரம் என்பதை ஏதுமேயறியாது தன்னந்தனியாய்த் தவிக்கவேண்டியிருந்தது என்னபரிதாபம்! ஆகாசத்தைப்பார்த்தாள் அப்படியே யோசித்தாள். கண்ணினின்றும் ஒரு துளி மண்ணில் விழுந்தது. நீரும் நெருப்பாய்க் கொதித்தது! புலியிழுத்து மலையில் கொண்டுவந்ததோ என்று கிலிதாங்கினாள்! மற்றொரு நீர்த்துளி சுட்டுக்கொண்டே விழுந்தது; கண்ணும் சிவந்தது! பகைவர் கொண்டுவந்து குகையிற் போட்டாரோ என்று பரதவித்தாள். ஐந்தும் ஆறுமாய்க்கண்ணீர் அருவியாயோடத்தலைப்பட்டது. பேய் கொண்டு வந்து பிலத்திற் புகுத்தினதோ, பூதம் கொண்டுவந்து புதரில் போட்டதோ என்று சித்தம் நொந்து மெத்தக் கலங்கினாள்! ஆறுதுளி கண்ணீர் போராறுய்ப்பெருகிக்கன்னத்தை நனைத்து கவலையைப்பெருக்கிற்று! கண் ஊற்றுப்பெருக்காய் நீர் ஆற்றுப் பெருக்காய், 'மொரோ' என்று ஜகன்மோஹனசிங்காரம் ஹரோ என்று ஆத்திரத்தோடே குரலை யெடுக்காமலே குற்றுயிராய்க்கதறினாள். உடலம் நீரால்நனைந்து நெருப்பால்வெந்ததுபோலாயிற்று. உள்ளம் வருந்தி ஊசியால் குத்தப்பட்டதுபோல் வருத்தம் துளைக்கவாதனை

யுற்றது. ஜகன்மோஹன சிங்காரம் நினைக்காததும் நினைத்தாள், எண்ணாததுமெண்ணினள்! 'ஈசா' என்றாள், இன்னொருதரம் ஏகிறிற்று! உயிர் போய் விட்டாலும் உத்தமம்! பொருந்தி நின்றாலும் பொறுத்தல் கூடும்! அறுந்த தலை எழுந்து விழுவதுபோல், அவஸ்தைப்பட்ட உயிர் துள்ளித்துள்ளி விழுந்தது!

ஜகன்மோஹன சிங்காரம் எழுந்த சமயம் ராக்ஷதப்பயல்கள் அங்கு யாரும் அருகில் இல்லை. மயக்கம் தெளிய மருந்தைக்கொடுத்து களைப்புதீரக்கஞ்சி வார்த்து, அவர்கள் சற்றுப்பொறுத்து வரலாமென்று மற்ற வேலைகளைப்பார்க்கப்போன சமயம் மயக்கம் தெளிந்து மாதரசி கவலைப்பட்டும் கண்ணீர் விட்டும் உட்கார்ந்திருந்தாள்!

அந்தவேளையில் பிரம்மராக்ஷதன் குருவியை வாயில் கடித்துக்கொண்டு, கோரரூபமாய் அங்கே ஆரவாரஞ்செய்து, ஜகன்மோஹன சிங்காரத்தின் எதிரே வந்து ஏப்பம் விட்டு,

"கண்ணே, பொண்ணே, எண்ணு உடம்பு நண்ணு பூட்டுதா? பசிக்குதா? கொக்கு ஒணுமா குருவி ஒணுமா? வெக்கப்படாதே, சொல்லு, சொல்லு. நீ யாருக்கும் பயப்படாதே என்னைப்பார்த்தா அல்லாரும் பயப்படுவாங்க, திகிபடுவாங்க. நீ மாத்திரம் பயப்படாதே என்னெ கட்டிக்கோ, எத்தினை குருவி ஒணுமுண்ணாலும் கொண்ணாந்து தாறேன். எத்தினை கொக்கு ஒணுமுண்ணாலும் கொண்ணாந்து தாறேன். சொல்லு சொல்லு என்னே கட்டிக் குறெயா சொல்லு, காறியுமிறியா சொல்லு" என்று பிரம்மராக்ஷதன் சும்மாப்பேசினன்.

"உன் மேலேயே காறியுமியவா சொல்லுகிறாய்" என்று ஜகன்மோகனசிங்காரம் தைரியமாய்க் கேட்டாள்.

"காறியுமிண்ணு காறியுமிண்ணு" என்று பிரம்மராக்ஷதன் கலபில என்றுகழுதைபோல் பேசினன்.

ஜகன்மோஹன சிங்காரம், அவன்மீது தன் வஞ்சம்தீர நன்றாய்த்துப்பி, "போதுமா? போதுமா?" என்று புளகாங்கிதம் கொண்டாள்.

பிரம்மராக்ஷதன் எச்சிலை 'மூஞ்சி முகமெல்லாம்'பூசிக்கொண்டு "அதல்லாண்ணு அதல்லாண்ணு நண்ணு காறிசொல்லு, நண்ணு கனைச்சி சொல்லு" என்று கோஷ்டம் போட்டான்.

ஜகன்மோஹன சிங்காரம், 'என்ன சொல்ல' என்று ஏளனமாய்க் கேட்டாள்.

ராக்ஷதன், "கொக்கு ஒணுமா? குருவி ஒணுமா? என்னெ கட்டிக்குறெயா சொல்லு. கண்ணாலம் எண்ணெக்கிவைச்சிக்க? சொல்லு" என்று ஓயாது கேட்டுப் பேயாய்க்கத்தினன்.

"எண்ணெய்க்குக்கல்யாணம் பாணுவிலே; எண்ணெய்க்குக்கலியாணம் தீபாவளியன்று சீயக்காயோடே" என்று புன்னகை புரிந்து நன்னயமாக ஜகன்மோஹன சிங்காரம் தைரியத்தோடே தாராளமாய்ப்பேசினள்.

பிரம்மராக்ஷதன், ஹா ஹா ஹூ ஹூ எனக்கத்தி "தீவாளியா! கோழியெ முறிச்சு மனுசாள் ஆட்டெ அறெக்கிறுங்களே அண்ணெக்கா?" என்று ஆச்சரியமாய்க் கேட்டான்.

"அது தான் சரி! அது தான் சரி! நீ மிகவும் புத்திசாலியாயிற்றே! நீ மிகவும் அதிர்ஷ்டசாலியாயிற்றே! நீ எனக்கு மணவாளனாய் வாய்த்தது எனது மஹா பாக்கியமல்லவா! எனக்கு உண்டான மயக்கத்தினலே இன்னும் எனக்கு அதிகமாகத் தூக்கம்வருகிறது. நீ சற்று நாழி பொறுத்துவா. அப்போது என்னுடைய சமாசாரத்தை ஆதியோடந்தமாகச் சொல்லுகிறேன். நான் சாப்பிடுவது வெறும் பாலும் பழமும் தான். ஆதலால் அவைகளை மாத்திரம்கொண்டு வந்துவைக்கும்படி ஏற்பாடு செய்வாயானல் அஃதேயெனக்குப் போதுமானது" என்று ஜகன்மோஹன சிங்காரம் பக்குவமாய்ப் பேசிப் பாவியையனுப்பி விட்டாள்!

இப்போது ஜகன்மோஹன சிங்காரத்திற்கு எல்லாம் புலப்பட்டது. மாரியாத்தாள் கறுவிக்கொண்டுபோன மகிமை இதுதான் என்று அவள் மனத்துட் கொண்டாள். தான் தனியாய்ப் புறப்பட்டது தைரியத்தைக் காட்டினபோதிலும் தகாத நடக்கையென்று அவளுக்கு இப்போது நன்கு விளங்கியது. என்றாலும், ஜகன்மோஹன சிங்காரம் தைரியத்திற்குத் தலைமகள் போன்றிருந்தாள். யாவரும் நம்பத்தகாத விதமாய் இடக்கர் மடக்கரான வழியில் இயற்கையழகுபொருந்திய இன்பப் பெண்ணரசி தன்னந் தனியாய்ப் புறப்பட்டுபோவதென்றால், எவ்வளவு தைரியமில்லாமல் அஃது சாத்தியமாகும்? தைரியம் பூண்டதோடும் தர்மம் விடாத தங்கமனத்தையுடைய தையலானபடியால் அவள் இப்போது எப்படியாயினும்

உபாயம்செய்து உபத்திரவத்தினின்றும் தப்பிக்கொண்டு, மாரியாத் தாளையும் பிரம்ம ராக்ஷஸனையும் கொலைசெய்துவிடவேண்டுமென்று கோரிக்கைகொண்டாள்! தர்மத்திற்காக அதர்மத்தையோட்டுவதும் கிரமத்திற்காக அக்கிரமத்தை வாட்டுவதும் தர்மத்திற்கும் அழகு, தைர்யத்திற்கும் அலங்காரம்! ராமன்ராவணனைவதைத்ததும், கிருஷ்ணன் கம்ஸனைக்கொன்றதும் இதற்காக வல்லவென்று எவர் தாம் சொல்லக்கூடும்? தேளைத் திருநாட்டுக்கனுப்பிப் பாம்பைப் பரமபதத்திற்குச் செலுத்தாவிடின், ஐயறிவுயிர்களாகிய மெய்யறிவுயிர்களுக்கு ஆபத்தும் அனர்த்தமும் ஆயிரமாயிரமாயன்றே உண்டாய் விடும். விஷத்தையும் கொட்டையும் உலகத்தில் நிலை நிறுத்தி நன்மையையும் உண்மையையும் நாட்டைவிட்டன்றே ஓட்டி விடநேரும்! பாபத்திற்கு ஆஸ்தானமளித்துப் புண்ணியத்தைப் பூமியினின்று மோட்டுவதா? கோரம் புரியும் குரூரக்கிழவியும் பாவம் செய்யும் பாவிராக்ஷதப்பயலும் எத்தனைபேருக்கு இதுவரைக்கும் கொடுமைகள் செய்தாரோ, எத்தனைபேரை இத்தரையினின்றும் இயமனுலகுக் கனுப்பினரோ, இறைவனுக்கன்றே தெரியும்! ஆதல் பற்றி, அவர்களிருவரையும் ஆட்டிப்பம்பரம்போல் சுழற்றி ஆவி துறந்து பூமியிலிருந்தும் ஓடச்செய்யாவிடின் மூடப்பெண்ணைத் தான் திருவன் என்றென்னென்னவோ யோசனை புரிந்து ஆலோசனை செய்தாள் ஜகன்மோஹன சிங்காரம்! ஆனால் இஃது இன்று நாளையில் ஆகிறகாரியமா? என்றாலும், உலகச்சுழலில் சங்கதிகள் உண்டாய்க்கொண்டிருப்பவைக்கேற்ப, தானும் நடந்து தன் கோரிக்கையும் அதுவாய், தருமமில்லாப் பயிர்களைத்தரையோடேதேய்த்து விடவேண்டும் என்று தைரியஞ்செய்து அதற்குத்தக்கபடி நடக்கலாமென்று அவள் தீர்மானஞ்செய்து கொண்டாள்.

சற்று நேரத்திற் கெல்லாம்! ஆட்கள் வந்து அரியபழமும் இனியபாலும் கொண்டுவந்து ஜகன்மோஹன சிங்காரத்திற்கு ஜம்பமாய்க்கொடுத்தார்கள். உண்டான இளைப்பாலும் உடம்பின்களைப்பாலும், உளங்களிக்க அவற்றை உண்டு விட்டாள் ஜகன்மோஹன சிங்காரம். பாவிகள் தொலைந்தார்கள், பரபரப்பாய் ராக்ஷதனும் வந்தான், 'ஆக்ஷ¬தா துண்ணு, போக்ஷ¬தா எளெப்பு' என்று அட்டகாசம்செய்து ஆர்ப்பாடம் பண்ணுன்!

'ஆக்ஷ¬தது சாப்புட்டு, போக்ஷ¬தது எளெப்பு' என்று அதே மாதிரி ஜகன்மோஹன சிங்காரம் 'அழகுகாட்டி' அன்பாய்ப்பேசுவதுபோலேயே ஆனந்தமாய்ப் பேசினாள்.

'ஹோ! ஹோ! எங்கபேச்சு புடிச்சுபோச்சு! ராச்சசியாய் பூட்டே நீயும் ஹஹ்ஹ ஹஹ்ஹ ஹஹ்ஹ ஹஹ்ஹ' என்று கக்கிடகக்கிட நகைத்துக் கவுரவம் பண்ணிக்கொண்டான், கள்ள நெஞ்சையுடைய கபட மனக்கொடியோன்.

"ஆமாம்! என் அதுஸ்டமே அதுஸ்டம்! கோட்டையைப்புடிக்கும் ராசாவுங்களெவுட்டு, குருவி புடிக்கும் ராச்சசன் ஆப்புட்டது என்ன அதுஸ்டம்! என்பாக்கியம் எவருக்குக் கிடைக்கும்?" என்று ஜகன்மோஹன சிங்காரம் ராக்ஷதபாஷையிலேயே ரம்யமாய்ப் பேசினாள்.

"நான் என்னுலேசா ஆப்புடறவினு! நான் ஆப்புட நீ என்னு தவம்பண்ணெயோ முன்ஜெம்மத்திலே. இல்லாகிட்டிபோனு நான் ஆப்புடுறவனு எப்போகண்ணாலம் பண்ணிக்குறே! மோளத்துக்கு சொல்லியனுப்புறேன்! தாளத்துக்குச் சொல்லியனுப்புறேன்! பந்த போட சொல்றேன்! பாவக்கா கிள்ளச்சொல்றேன்!" என்று ராக்ஷதன் ஆசைமீறி நேசங்காட்டி அவசரமாய்க்கேட்டு அமர்க்களம் செய்தான்.

"ஆமாம் ஆமாம்! அதுதான்சரி அது தான்சரி. பாவக்கா தான் மொதல்லே, படையல்போடணும் எலெயிலே! பாவக்காகிள்ளச் சொல்லு! அவுத்திக்கிரே அறுக்கச்சொல்லு கொழம்புபண்ண! பச்செபருப்பு பண்ணசொல்லு அமாவாசெ கும்பிட! அது தான் சரி! அது தான் சரி." என்று கொக்கரிகொட்டியும் கேலியென்பதைக் காட்டாது கெட்டிக்காரத்தனமாய்ப்பேசினாள், * கிள்ளையையும் பழிக்கும் கிளர்மொழிமாது.

இதையுணராது, மட்டிப்புத்தியும் கட்டிமூளையுமுடைய காலாந்தப்பயலாகிய கழுதையரக்கன், ஆனந்தப்பட்டு, ஆத்திரத்தைத் தொட்டு,

"பொண்ணே! எண்ணெக்குக் கண்ணாலம் எனுக்கு இப்பவே சொல்லு" என்று அவசரப்பட்டான்.

"இன்னெக்கு சரியா ஐஞ்சுமாசம் இருக்குது!"

"என்னுது அது! என்னுது! சொல்லேன்! சொல்லேன்!"

"ஐப்பசி மாசம்"

---

* கிள்ளையையும் பழிக்கும் கிளர்மொழிமாது=கிளிகளும் வெட்கியோடும்படியான இனியபேச்சைப் பேசும்பெண்.

"ஐப்பசி மாசத்திலே எண்ணெக்கு எண்ணெக்கு?"

"எண்ணெக்கு சீக்காபோட!"

"அப்படியிண்ணு தெரியுலேயே! தெரியுலேயே, தெரியுலேயே!"

"மின்னே சொன்னெனே தீவாளி"

"தீவாளிவந்தா என்ணு' ஆட்டுக்கழுத்தெ அறுக்குறோம் மாட்டுச்சதையெ உரிக்குறோம்! கோழிகழுத்தெயறுக்குறோம்! கொக்கெ புடிச்சு லபுக்கிண்ணு முயுங்கிடுறோம்! நீ சொல்லுறது, பொண்ணே எனக்கு ஒண்ணும் தெரியுலே! ராச்சசாள் பேச்சிலே சொல்லு, மனுசாள் பேச்சிலே சொல்லாதே!"

"அது தாண்டா! குட்டிச்செவராபோனவனே! தீவாளிவருதே! அண்ணெக்கு மறு நாள்!"

"உம் உம்! மறுநாளு என்ணு?"

"மறுநாளு! அமாவாசெ!"

"சரி! அண்ணெக்கு கண்ணாலம் வச்சிக சொல்லு!"

"சந்தோசம்! சந்தோசம்! ஐஞ்சுமாசம் கணக்கு வச்சியே!"

"அண்ணெக்கு எண்ண செய்யுணும் தெரியுமா!"

"எண்ண சொல்லு, சொல்லு"

"பச்செபருப்பு மசிச்சி, பாவக்கா பொரிச்சி, அவுத்திக்கீரெ கொயும்புபண்ணி, பணிச்சவனே கூப்புட்டு பானெ ஒடெக்கச் சொல்லி, பாடெகட்டி ஊக்கோலம் வந்து நெருப்பெவச்சி ஓமம் கொளுத்தி சாம்பலாக்கி கருமாந்தரம் பண்ணிடுறது தெரியுமா தெரியுமா!"

"கண்ணாலத்து பேரு கருமாந்துரம் பண்றது—எனக்கு ஒண்ணும் தெரியாது அதெல்லாம்! மனுசாள் வயக்கம் எப்புடி எப்புடியெப்புடியோ அப்புடி அப்புடி அப்புடி யெல்லாம், செய்துடு! இண்ணும் அஞ்சுமாசம் இருக்குதே உனுக்கு பாலும் பயமுமா ஒணும்! பயங்ககிட்ட சொல்லுடுறேன்! பண்ணிகறிதுண்ண ஒடம்பு நண்ணயிக்கும்! நீ! யென்னுமோபாலு குடிக்குணும் பாபாவாட்டம் இண்ணுறெயே! பத்திரமாயிங்கேயே இருக்குணும்! காவல் வச்சுட்டேன் தெரியுமா! ஓடிப்போனெயுண்ண ஒரே முயுங்கா முயுங்கிடுவேன் தெரியுமா! பத்துரம் பத்துரம்" என்று சொல்லி ஓட்டம் பிடித்தான் கோஷ்டம் செய்த கொடியராக்ஷதன்.

# எட்டாம் அத்தியாயம்.

---

## அற்புத முதலியார் வீடு

காலமணி நான்கரையானது! பஞ்சாபீஸ் வேலைக்காரர் பரபரப்பாய்ப் புறப்படுவதற்குச் சங்காபீஸ் சப்தம் எங்கு பார்த்தாலும் சிங்காரமாய்க்கேட்கின்றது! வெள்ளி முளைத்தது, வியாழமுறங்கிற்று! கீழவானம் வெளுத்துக் கிளிகள் பேசுவதும், சில்லென்ற காற்று மெல்லென்று வீசுவதும், காகமும் குருவியும் கூண்டுகளினின்றும் தாண்டத்தலைப்படுவதும், கோழிகள் கூவப் பொழுது முற்படுவதும், இயற்கைச் சமாதானமாகிற இனிய நற்சுருதியில் பட்சிகளின் பாட்டு பண்ணுடன் பயில்வதும்,—ஹா! ஹா! இப்பொழுதுதான் வெளுத்தவானம் சிவத்து வருகின்றது. நக்ஷத்திரங்கள் வெட்கி நாகலோகம் புகுகின்றன. பனிநீர்க்குளிர்ச்சியால் இலைபூநனைந்த பண்பான மரங்கள் நண்பான அமிர்தத்தை நலமாகக்காற்றில் பலமாகச்சேர்க்கின்றது.

இந்த சந்தர்ப்பத்தில் வந்தார் வெளியில் அகம் வருந்திய ஆடம்பராசாரி. இரவெல்லாம் தூக்கம் இல்லவேயில்லை! வந்த அலுப்பும், பையன் சலிப்பும், நல்லம்மாளுடைய நச்சுப்பேச்சும், அற்புத முதலியார் அவஸ்தைப்படுவதும், முத்தம்மாளுடைய மொத்தைச் சோறும், ஆடம்பராசாரிக்கு அளவற்ற கவலை யுண்டாக்கி விட்டன! திருக்கல்யாணம் தெருக்கல்யாணமாய்விட்ட அன்று, படுக்கைக்குப் போகும் வரைக்கும் பாரதமாய்விட்டது! நல்லம்மாள் தொணப்பைச்சொல்லி முடியாது! முத்தம்மாள் தன்மட்டும் மூசுண்டை பர்த்துவிட்டு, சோற்றைக்களியாக்கிப் பண்டத்தைப்பாழாக்கி வந்தவர்கள் மூஞ்சில் வெந்த மூஞ்சியோடு தீரமாக வாரிக்கொட்டி வார்த்தை பேசாமலே தீர்த்தங்கொடுத்து விட்டாள்!

பாரிஜாதமோ யாதொன்றும் பேசாது பரமமௌனமாயிருந்தாள்! அண்ணன்போன கவலை அகத்தை வருத்தவும், அப்பன் படும்பாடு சித்தத்தைத்துளைக்கவும், கல்யாண வீடு களையழிந்திருக்கவும், அவளுக்குத்துன்பம் அதிகமாய் நேர்ந்தது. இவையெல்லாவற்றிற்கும் மிக அதிகமாய், அண்ணன் எங்கே போனானோ அவஸ்தை யெங்கே பட்டானோ என்னும் ஏக்கத்தால் அவள் பட்டபாடு பஞ்சுபடாத பாடாயிருந்தது.

கண்மணி யென்னவோ கல்யாணத்தைச் சட்டை செய்யவில்லை. கறுப்பைமறக்கவில்லை! தைலமும் சீப்பும், தாவணியும் சல்லாவும், நகையும் பகையுமாயிருந்தாளேயன்றி வந்த மனிதர்களோடே சிந்தை குளிர்ந்து பேசவுமில்லை, கணவன் போனானே, கல்யாணம் நின்றதே என்று கவலைப்படவுமில்லை. பாரிஜாதத்தோடே பராமுகமாய் ஒரு பேச்சைப்பேசுவதும், அத்தையோடே மாத்திரம் சற்று நேரம் * அளவளாவுவதும், மாமாவோடே காரியமிருந்தால் மகிழ்ச்சியாய்ப்பேசுவதும் இவ்விதமான பொல்லாத குணங்களைப் பூரணமாய்க்காட்டி வந்தாள்.

அற்புத முதலியாருக்கு ஆத்திரமிருந்தது அவ்வள விவ்வளவன்று! முத்தம்மாள் என்கிற மொத்தம்மாள் மூசுண்டையடிப்பதிலேயே முக்கால் வாசிப்பணம் † எக்காலேர கொண்டு இறைந்து போனபோதிலும் கல்யாணச் சாக்காலேயே எல்லாம் நேர்ந்தது என்று அவருக்கு இடைவிடாது கவலை நேர்ந்துகொண்டிருந்தது. பூக்காரனுக்குக் கொடுத்த பணம், மேளக்காரனுக்குத்தந்த பொருள், பந்தல்காரருக்குப் பகிர்ந்த தொகை எந்தக்காலத்தில் வந்து தவப்போகின்றது என்று சிந்தை வருந்தினார் அற்புத முதலியார். மேலும் ஏராளமாய்ப்பொருள் செலவிட்டு எங்கிருந்தும் வாங்கி வந்த உணவுப்பொருள்களையெல்லாம், மொத்தம்மாள் சற்றுநேரத்தில் (மூசுண்டையாக்கி) வருவாளே! கோதுமை ரவையைக்கொட்டி உப்புமா அல்வாவாக்கித்தானே போக வர தயவுடன் சாப்பிட்டுக் கொண்டு, இஷ்டப்பட்டவர்களுக்குக் கொடுத்து, இஷ்டமில்லாதவர்க்கு எடுத்திறைத்துத் தயிரை மோராக்கியும், பாலை நீராக்கியும் பாழாய்ப்போகுமே என்று பரதவித்து அற்புத முதலியார் உளம் வருந்திக்கொண்டிருந்தார். இதற்கெல்லாம் அதிகமாக அழகிலே மிகுத்து அறிவிலே பெருத்த நல்ல பிள்ளையை மெல்லத் தம் பெண்ணுக்குக் கல்யாணம் செய்து களிப்படைந்து விடலாமென்று பார்த்தால், என்ன தொல்லையோ இடையில் வந்து இந்த கதியானதே— எல்லாரும் சிரித்தாரே! ரெயில் வண்டியிலென்னைப்பார்த்து நகைத்தாரே, ஊரார் பழித்தாரே! தெருவில் தலையைக்காட்டினால், தெரிந்தவர்கள் வந்து, தெரியுமா? சமாசாரம், என்ன நடந்தது, ஏது நடந்தது என்று வாது புரிகின்றாரே—என்று பலவாறு சிந்தித்து அற்புத முதலியார் உளந்தடுமாறிக் கொண்டிருந்தார்.

---

* அளவளாவுதல்=கலந்து மகிழ்ந்து பேசுதல்
† எக்காலோ=எந்தக்காலோ

இவற்றை யெல்லாம் பார்த்து செவத்த வானத்தின்முன் சிந்தை யிட்டுக்கொண்டிருந்தார், செவத்த முகத்துச் சிங்காரபுருடராகிய ஆடம்பராசாரி யென்பார். ஆடம்பரமும் ஒய்ந்தது, அகம் மிகச்சாய்ந்தது. மனைவி பேச்சைக்கேட்டோமே, மக்கள் மனிதர் என்று மகிழ்ந்தோமே—மகன் பேச்சைக்கவனியாது, சீருமாறு பட்டுப்பேருங்கெட்டுப் பிரதாபமும் கெட்டுப்போயிற்றே! இப்போதும் விடேனென்று நல்லு என்னைக்கொல்லுகிறாளே! என்ன செய்வோம் என்று ஏக்கம்பிடித்து மூச்சைப்பிடித்துக்கொண்டிருந்தார்.

நல்லம்மாளுக்குச் சொல்ல முடியாத சுள்ளாப்பாய் விட்டது! என்னடா இது! நானென்று நினைக்கத் தெய்வந்தானென்று நினைத்து விட்டதே! கல்யாணம் இப்பொழுது 'கடைப்பிறந்து' விட்டதே; கண்மணிக்கு எப்போது கல்யாணம் நடக்கும், நாம் எப்போது சுகப்படலாம் என்று எதிர்பார்த்திருந்தால், ஏறுமாறாக இப்போது தாறுமாறுகள் நடந்து விட்டனவே என்று என்னென்னவோ நினைந்து 'ஏக்கமிட்டுக்' கொண்டிருந்தாள்! இந்தப்பெண் பாரிஜாதம் ஏனோ தூங்கினாள்! வனஜாஸனன் போனபடியே வழிதுறை தெரியாது தகப்பன் விட்டபடியாலன்றோ இப்படியாய் இடர்ப்பட்டு நிற்பது என்று கடுகடுத்த முகத்தோடே வெடுவெடுக்கப் பேசிக்கொண்டு, இப்படிப்போவதும் அப்படி விழிப்பதும், முத்தம்மாளிடம் மெத்த ரகசியமாய்ப் பேசுவதும், கண்மணிக்குக் சீப்பிட்டுக் கறுப்பாக்குவதும், முகத்திற்குச் *சோப்பிட்டு மினுக்காக்குவதும், விழிப்பதும் திகைப்பதும் பழிப்பதும் உறங்குவதுமாயிருந்தாள். ஆடம்பராசாரி சாக்கிரதை அதிகமெடுத்துக் கொள்ளாததாலேயே அனர்த்தம் வந்து அபரிமிதமாய் நேர்ந்தது என்று கோபங்கொண்டு குளறிக்கொண்டிருந்தாள், நல்லம்மாள். சூரியன் புறப்படுகிற சமயம், சுருக்கென வெழுந்து அற்புதமுதலியார்,

"அத்தான்! வாருங்கள்! காபிசாப்பிடலாம். நேற்று கோட்டைவிட்டு, இன்று ஜுரமாயிருக்கிறுப்போலிருக்கிறதே! என்ன இது! அதிகாலையிலெழுந்த அவதார புருஷர்போல் வெளிக்குக் காட்டினாலும் பைத்தியம் பிடித்த பண்டார ஸ்வாமிகள்போல் ஆய்விட்டீர்களே! ஏன்! உடம்புக்கென்ன? மனக்கவலையா? தூக்கம் பிடிக்காது துக்கப் படுகிறீர்களா—மூச்சைப்பிடித்து உலகை வெறுக்கிறீர்களா? என்ன சமாசாரம்? ஒன்றும் பேசாது யோசனைசெய்கிறீர்

---

* சோப்பு=உடம்பு தேய்த்துக்கொள்ளும் ஒருவகைக் கெட்டியான வஸ்து

களே! வாருங்கள், அதோ காபி பாருங்கள்." என்று வலுக்கட்டாயம் செய்து வாகாக அத்தானை அடுப்பங்கரைக்கு அழைத்துக் கொண்டு போனார்.

தட்டில் பலகாரம் 'செட்டாய்' வைத்து, டம்ளரில் காபி தயாராய் வைத்து, முத்தம்மாள் எதிரே வந்து, "அண்ணாத்தை, சாப்பிடுங்கோ." என்று அருமையாய்ச் சொன்னாள். அந்த சமயம் நல்லம்மாளும் வந்து நன்றாய் உட்கார்ந்தாள்.

"அத்தான்! நீங்கள் மொத்தான்தான்! என்ன அத்தான் இது! எதிரே காபியை வைத்தால் என்னென்னமோ யோசிக்கிறீர்களே! நேற்றுப்போல் இன்றும் நிலையை மறந்து தூங்குகிறீர்களா, பையனைப்பற்றி ஏங்குகிறீர்களா, அல்லது நீங்களும் கம்பிவாங்குகிறீர்களா?" என்று அற்புதமுதலியார் அவஸ்தையோடே அவஸ்தை * ஹாஸ்யத்தை மாத்திரம் விடாது ஜோஸ்யம் சொல்பவர்போல் சுருக்காகப்பேசினார்.

"முதல் கோணல் முற்றும் கோணல். தான்போனபடி அவனைத் தம்பிராணுக்கிவிட்டு இப்போது விழித்தால் எப்போது முடிகிறது! நான் அப்போதிருந்தே நன்றாய் தலைப்பாடாய் அடித்துக்கொண்டிருந்தேன். பிள்ளையைப் பெற்றுவிட்டால், ஆய்விட்டதா! அவன் பாட்டுக்கு அவன் ஆடி, இவர் பாட்டுக்கு இவர் ஆடம்பரம் செய்து கொண்டிருந்தால், ஆய்விட்டதா? விளையாட்டும் கதையும், டம்பமும் தடபிடலும், வாசனையும் 'வல்லக்காடும்,' ஜோரும் சொகுசும் இதெல்லாம் குடித்தனம் செய்பவர்களுக்கு அழகா?" என்று புண்ணில் கோலிட்டுப் புளியை வார்த்தாப்போல் நல்லம்மாள் முகஞ் சுளித்து நாலுநிமிஷம் பேசினாள்.

"நான்தான் தடபிடல்!" என்று, பேசமுடியாது ஆடம்பராசாரி ஒன்றிரண்டு வார்த்தை ஒருமிக்கச் சொல்வதற்குள், நல்லம்மாளெழுந்து நாயாய்க்குலைத்து,

"அதனாலேதான் ஆடம்பராசாரி என்று பட்டம் சூட்டினார்கள்! இல்லாமே பிறக்காது அள்ளாதே குறையாது!" என்று கொத்துச் சதையைக் குறுணிரத்தத்தோடு பிடுங்கினாள்.

"ஒழிகிறது! உன்பேர்தான் நல்லம்மாளென்றிருக்கிறதே! நீதான் நல்லபடியா யிருக்கிறதுதானே! நாயாயேன் பிடுங்குகிறாய்?"

---

* ஹாஸ்யம்=கேலி

என்று ஆடம்பராசாரி, கண்ணில் அழுகை நன்றாய்த்தோன்ற நாலே வார்த்தை சொன்னார். இதற்குள் ஆத்திரத்தாலே நேத்திரம் மழுங்கி, "ஆமாம்! உங்கள் தலையிலுள்ள ஒட்டுப்பேனைக் கேளுங்கள்! நல்லம்மாள் என்பேர், நல்லம்மாள்தான் நான். இல்லாவிட்டால் எனக்கு வேறு பெயரிட்டு ஏளனஞ்செய்ய மாட்டார்களா? வீணை ஏன் பேசி வாணாளழிந்து போகிறீர்கள்! ஆதிமுதல் உங்கள் ஆடம்பரத்தால் இவைகள் வந்தனவே யல்லாது, வேறு யாராலே வினை நேர்ந்து விட்டது! பாவியுங்களைக் கல்யாணம் செய்து பட்டபாடு யாருக்குத்தெரியும், பகவானுக்கேதெரியும். அந்தக் 'கன்றாவிக்'கதை இப்போது என்னத்திற்கு?" என்று நல்லம்மாள் எரிவந்தத்தை அதிகப்படுத்திக் கொண்டு 'ஏகமாய்ப்' பேசினாள்.

இதற்குள்ளாக, அற்புதமுதலியார், முகம் வியர்த்து மூக்கு முனையில் கோபம் முறுக்காய் வந்து, பேச்சுக்குளற, நாக்குத்தடுமாற,

"நல்லம்மா, நீசும்மா இரம்மா, அந்த சமாசாரம் எல்லாம் இப்போதென்னத்திற்கு? குடும்பம் என்றால் கவனமுமில்லை, பிள்ளைகள் என்றால், கவலையுமில்லை. ஜம்பம் செய்து அத்தான் ஜல்பில் என்று திரிந்து கொண்டிருந்தால் அறியாப்பிள்ளைகள் நினைத்ததெல்லாம் போக்குதான், எடுத்ததெல்லாம் பிடிவாதம் தான்! இந்த அத்தானுக்கு எந்தக்காலத்திலும் சொந்தப்புத்தி யென்பதே கிடையாது! விருதுக்கு வேட்டையாடி, வீணுக்குப் பணமிறைத்து, ஊருக்குப் பால் குடித்து, உற்றாரெல்லாம் நகைப்பதற்கு, இவர் அஜாக்கிரதையே காரணமல்லாமல் வேறென்ன? அப்பன் ஆத்தாளை வைக்குமிடத்தில் அடக்கிக்கொண்டுபோகத் திறமையில்லாது, நல்லம்மாள் பட்டபாடு நாலுபேர் சொல்லிவிட்டுப் போவார்களே! சின்ன வயதிலிருந்து என்ன செல்வத்திலே வளர்ந்து, இவர்கள் வீட்டில் வந்து நல்லம்மாள் சீர்குலைய நேர்ந்து விட்டது! நான் எவ்வளவோ ஜாக்கிரதையாய்க் கொண்டுபோவதால் தான், முத்து என்கிற மொத்து மாதம் முப்பது ரூபாய் பலகாரத்தோடே காலந்தள்ளுவதும், கண்மணி கண்மணி யாகவே இருப்பதும். ஐதர்காலத்தில் அந்தரதர்பார் செய்து பின்னே ஏழைகளாய் விட்டபோதிலும், எங்கள் நல்லம்மாளுடைய நல்லநடக்கையாலும், அமரிக்கையாலும், தடுத்துப்பேசாது தர்மமே நினைப்பதாலும், புத்திசாலித் தனத்தாலும்தான் அத்தான், கோபித்துக் கொள்ளாதீர்கள், உங்கள் குடும்பம் குடும்பமாய் நிலைத்

திருக்கிறது" என்று மூச்சு விடாமல் சரசரவென்று பேச்சைச்சர மாரியாய்ப் பொழிந்தார்.

உடனே முத்தம்மாளாகிற மொத்தம்மாளைப்பார்த்து அற்புத முதலியார், "மொத்து, உனக்குப் பலகாரம் எத்தனை தரம் ஆயிற்று?" என்று வேடிக்கையாய்ப் பேச்சைத்திருப்புவது போல் விளையாட்டாய்க் கேட்டார். "ஆம் உங்களுக் கென்னவேலை! இத்தனை நாழி அத்தானை இளைப்பாறச் செய்தீர்கள்! இப்போது என்னைக்களைப் பாறச் செய்கிறீர்கள் போலிருக்கிறது" என்று ஒருபேச்சுப் பேசி விட்டு, ஒரு சொம்பு நீர்மோர் உட்கொண்டு விட்டாள்.

பின்னுல் நல்லம்மாள், அண்ணனையும் கணவனையும் அலர விழித்து நோக்கி,

"சரி! பேசிப்பொழுதாகிறது! இனி நடக்கவேண்டிய வேலை யென்ன? இனி நடக்க வேண்டியதைப் பற்றி யிப்போது ஆலோசிக்க வேண்டுமேயன்றி போனதைப்பற்றிப் பேசியாவதென்ன?" என்று சமாதானப் பேச்சைப்பேசிச்சங்கடமில்லாக் கேள்வியைக்கேட்டாள்.

இயற்கையிலேயே ஆடம்பரத்தையுடையவராதல் பற்றி ஆடம் பராசாரியெனப் பேர் வாய்ந்த அலங்கார புருஷர்,

"நல்லு என்னை நன்றாகத்திட்டினுள்; அத்தான் அழகாகக் கொட்டினுர்! அருமையாய் வளர்த்த அழகிய கண்மணி, அறிவில் அற்புதன், அழகில் மன்மதன், அத்தகைய பிள்ளையை இழந்து இத்தரையில் உயிர்வாழ்வதற்கா என்று சிந்தை கலங்கிச் சிரமப் பட்டதால், பேசாதிருந்து பேதைபோல் விழித்தேன். ஆடம்பரத் துக்காக எனக்கு நேரே ஆடம்பராசாரி யென்று கூப்பிடுவதுபோல் நல்லவளாயிருத்தலாலே உனக்கு நல்லவளென்று பெயர் வந்திருக் கிறது என்று நினைத்து விட்டாய்போலிருக்கிறது! அஃது ஒருக் காலுமில்லை. என்னிடம் ஆடம்பரம் என்னமோ இருந்தாலும், அகங் காரம் கிடையாது, அதர்மம் நெருங்காது. சுடுகாட்டை நன்காடென் பது போலவும், தாலியறுந்தது என்பதைத்தாலி பெருகிற்று என்று சொல்வது போலவும், உனக்கு வைத்த பெயர் ஒரு சிறிதும் பொருந்தாது. உலக வழக்காய் உனக்கு நல்லம்மாளென்று பெயர் வந்ததேதவிர உண்மையில் அவ்வாறு எவரும் சொல்லவே முடியா து. அத்தான் என்னமோ மொத்தான பேச்சைப் பேசுகிறுரே தவிர முறையான பேச்சைப்பேசுவது கிடையவேகிடையாது. நல்லம்மாள் பேச்சை நான் கேட்டதனுல் தான் பையனையிழந்து பாதவிக்கின்

றேன்! என்னமோ! எதுவும் ஸ்வாமி செய்யும்படி நடக்குமேயன்றி வேறு விதமாய் நடவாது" என்று பேசினதும் ஆடம்பராசாரிக்கு மறுபடியும் ஆலோசனை வந்துவிட்டது.

இதற்குள்ளாக நல்லம்மாள், "இருக்கட்டும், இருக்கட்டும், இனி நடக்கவேண்டியது எப்படி யென்றால் பாட்டன் கதையைப் பரபரக்கப் பேசுகிறீர்களே" என்று ஆரவாரத்தோடே அசட்டையாய்க் கேட்டாள்.

"அத்தானுக்குப் பையன் ஞாபகம் அதிகமாயிருக்கிறதுபோலிருக்கிறது!" என்று அற்புத முதலியார் சிறிது நகைத்துக்கொண்டே சொன்னார்.

இந்த சமயத்தில் வதனசந்திரன் போன்ற முகத்தில், அண்ணன் * பிரிவாற்றாமையாகிற மாசுபடிந்து, பாரிஜாதம் ஜல்லென நடந்து மெல்லென உட்கார்ந்தாள். கிரஹணம் வந்து கிட்டப் பிடிப்பதுபோல், அமாவாசைக் கறுப்பாய்க் கண்மணிவந்து கூடக் கருமணியாய் உட்கார்ந்தாள்.

"அகத்தில் திட்டிக்கொண்டே அரைக்காசும் கொடாது, ஆசாரிய ஸ்வாமிகளுக்கு நீட்டான நமஸ்காரம் நெடுங்காடாகச் சில சிஷ்யர்கள் செய்வதுண்டு. அதுபோல மாமாவும் அப்பாவைத்திட்டிவிட்டு அத்தான் முறையை மாத்திரம் மெத்த வுறுதியாய்ப் பிடித்துக்கொண்டார்களே!" என்று பாரிஜாதம் வேடிக்கையாகப்பேச்சை விநோதமாகச் சொல்லிவிட்டாள்.

கண்மணி, முகத்தின் கறுப்பை முன்தானையால் துடைத்துக் கொண்டு

"அத்தானும் அத்தானும் விளையாடிக்கொண்டிருந்தால், அவஸ்தை நீ யேன் படுகிறாயே" என்று கண்மணி சிறிது கடுமையாகவே கேட்டாள்.

"வாயைமூடு! விளையாட்டென்றும் வினையாய் முடிவதென்றும் உனக்கென்ன தெரியும்? அண்ணாத்தைபோய் எங்கே அவதிப்படுகிறார்களோ! அதற்காக மனம் வருந்தி அப்பா அவஸ்தைப்படும்போது, மாமா பேசுவதும் நன்றாயிருக்கிறது அம்மா சொல்லு

---

* பிரிவாற்றாமை = பிரிந்திருக்கலைச் சகியாமை.

வதும் அழகாயிருக்கிறது!" என்று பாரிஜாதம் கோபக்குறிகாட்டிக் குரூரப்பேச்சாய்ப் பேசினுள்.

இதற்குள்ளாகச்சற்று விழித்து, "பசங்களே நீங்கள் ஏன் வந்திருக்கிறீர்கள், உங்களுக்கு ஏன் இந்த உயர்ந்த சங்கதிகளெல்லாம்? அறியாத பிள்ளைகளாய் விளையாட்டு வேடிக்கைகளிலிருப்பதை விட்டுவீணுன சங்கதிகளிலெல்லாம் கோணுமாணு என்று ஏன் தலையிட்டுக்கொள்ளுகிறீர்கள்? வனஜாஸனன் சிறிய போது இப்படித்தான் தான்தோன்றித்தம்பிராணுயிருந்து இப்பொழுது தலைவிரித்தாட நேர்ந்தது! ஆனுலும் அவன் கெட்டான் நாலு நாளைக்குச் சோறு தண்ணீரில்லாது பேயாயலைந்து ஐந்துநாளானதும் தாணுய் வந்து சேருகிருன்! அவன் வந்தாலென்ன வராவிட்டாலென்ன? எப்படியாவது ஒழிந்து எங்கேயாவது சாகிருன்! அப்பன் ஆத்தாளுக்கு அடங்காத பிள்ளை, செத்தாலென்ன பிழைத்தாலென்ன? இந்த பாரிஜாதத்தையாவது பிரபு தாஸனுக்குக்கல்யாணம் பண்ணிவிட்டால் நன்ருயிருக்கும்" என்று நகைமுகத்தோடே நல்லம்மாள் சொன்னுள்.

பாரிஜாதம் முகத்தைச்சுளித்துக்கொண்டு, "அம்மாளுக்கு என்னவேலை? கல்யாணஞ் செய்கிறதைத்தவிர வேறு வேலை கிடையாது, மற்றக்கவலையும் கிடையாது. ஆம்படையான் செத்தாலும் சரி, பிள்ளைகள் மடிந்தாலும் சரி, அண்ணன் வீட்டுச்சார்பாகவே ஆயுள் வரைக்கும் பேசவேண்டும் நடக்கவேண்டுமென்பதே அவர்கள் கோட்பாடு" என்று அப்புறம்போய் இப்புறம்போய் அறையொன்றில் அமர்ந்து விட்டாள்.

"நீங்களேன் அத்தை கெட்டபெயரெடுக்கிறீர்கள்? அண்ணன் வீட்டுக்கு அனேகம் சாதித்துவிடுகிறீர்களென்று ஆண்பிள்ளை பெண்பிள்ளை குட்டிகுழந்தைகளெல்லாங் கூச்சலிடுகிருர்களே! நீங்களேன் நிந்தைக்காளாகிறீர்கள்?" என்று கண்மணி சொல்லிவிட்டு, கதவொன்றைத்திறந்து வேறே அறையொன்றில் அமர்ந்து விட்டாள்.

"என் கண்ணே, என் கண்ணே" என்று நல்லம்மாள் கண்மணியைப் புகழ்ந்து திருஷ்டி கழித்துக்கொண்டாள்.

உடனே, கோபாவேசம் வந்து உள்ளம்பதற கணவனுகிய ஆடம்பராசாரியைக்கடுத்த முகத்தோடே கனைத்துப்பார்த்து,

"ஒன்றுஞ் சொல்லாமல் உட்கார்ந்து கொண்டு. ஒரு சொம்பு காபியையும் எதிரே வைத்து, 'ஊமைமூஞ்சியைப்போலும்' 'ஆம்படையான் செத்தவளைப்போலும்' பேசாதிருந்தால் காரியம் எப்படியாகிறது? கல்யாணத்திற்கென்று வாங்கின சாமான் வகைதொகையற்று, பழாய்ப்போய்ப் பறைச்சேரியாகிறது! அன்றுதினமே பாரிஜாதத்திற்கும் பிரபுதாஸுக்கும் கல்யாணம் செய்து கண்குளிரப்பார்த்து விடவேண்டும். பண்டமும் பாழாகாது காரியமும் வீணாகாது! என்ன சொல்கிறீர்கள்! அப்படிச்சும்மா இருந்தால் செருப்படி யடித்து விடுவேன்!" என்றாள்.

ஆடம்பராசாரிக்கு இதைக்கேட்டதும் ஆக்ரோஷம் வந்து விட்டது. பல்லை நற நற வென்று கடித்து, கையையுதறிக் காலையுதறி இப்படியும் அப்படியும் திரிந்து, அகப்பட்ட செருப்பொன்றை * அங்கையிற்றூங்கி, ஆவேஸமாய் வந்து 'தப் திப்' என்று நல்லம்மாளை நல்ல மொத்து மொத்தி விட்டார். "அச்சம் பயமில்லாமல் என்னைக்கண்டபடி திட்டுகிறாயா? உன் திட்டைக்கேட்டு தீவர்த்தி சலாம்போட்டு எத்தனை நாள்தான் காலம் கழிப்பேன்? சும்மா இருக்க இருக்கச் சிம்மாளங் கொட்டுகிறாப்போலிருக்கிறது!" என்று அதிகோபமாய் ஆடம்பராசாரி ஒரு புறம் கூவிக்கொண்டிருக்க,

"பாடையிலே வைப்பான் இந்தக்குடிக்காரப்பாவிக்கு என்னைக்கல்யாணம் பண்ணிக்கொடுத்தார்களே! அடே! நாசக்காலப் பாவி, நீ நாசமாய்ப்போக! உன்னை நாளைக்கு மண்ணுக்கு போட்டு வைக்கிறேன் ஆகட்டும்! 'அவா,'" என்று நல்லம்மாள் ஒரு புறம் ஆர்ப்பாடம் செய்து கொண்டிருந்தாள்!

இதற்குள்ளாக, அங்கே ஏராளமான சனக்கூட்டம் கூடிவிட்டது! ஆடம்பராசாரியைத் தடுத்தார்கள் சிலர். நல்லம்மாளுக்குச் சமாதானம் சொன்னார்கள் வேறு சிலர். என்றுமில்லாத சண்டை இன்று ஏன் உண்டாக வேண்டுமென்று கேட்டார்கள் சிலபேர். அவர் என்ன செய்வார் பாவம்! அருமைப்பிள்ளை போய்விட்டு அலங்கோலமாய்க் கல்யாணம் முடிந்த சமயத்திலுங்கூட அவரைப்பிடித்து ஆட்டிப்படைத்தால், அவருக்குப்பொறுக்க முடியாது போயிற்று என்றார்கள் சிலர். ஆனாலும் என்ன அந்த வருத்தம் அம்மாளுக்கில்லாது போயிற்று; இந்த சமயத்தில் அடித்தது பெரியதப்பு என்றார்கள் பின்னுஞ் சிலபேர். இல்லை ஐயா உனக்கென்ன

---

* அங்கை = அழகியகை

தெரியும் இந்தம்மாள் கண்டபடி அவரைத்திட்டினுள் போலிருக் கிறது. அதனுல்தான் அவருக்குக் கோபம் வந்து விட்டது; ஆனுலும் அப்படி ஒரு பெண்பிள்ளை பேசுவது அடுக்கவே யடுக்காது என்ருர் மற்றுஞ் சிலர்.

இப்படி நானுவிதமாய் ஜனங்கள் பேசிக்கொண்டிருக்கும் போது இப்படியப்படிப்போவது போல் எப்படியோ போய்விட்டார் ஆடம்பராசாரி. 'ஆ' என்று பார்த்திருந்த ஜனங்கள் 'ஐயோ' என்று போய்விட்டார்கள்.



# ஒன்பதாம் அத்தியாயம்.

கொங்கு தேசத்தரசன் கோலுவமர்ந்திருக்கை

கொங்கு தேசம் வெகு இங்கிதமானது! அவ்வூருக்கரசன் அற நெறிவழாத குலசேகரனென்னும் *கொடையாளி. அவனைப்போலே அரசன் வேறுயாரும் † அவனியில் காணக்கிடையார் என்று கவீஸ்வரர்கள் அவனைப் புகழ்ந்து கவிகள் சதா பாடிக்கொண்டிருப்பார்கள். அவனுக்கு ஞானத்தில் அதிக நம்பிக்கை. கானத்தில் அதிக பிரியம், கவிபாடுதலில் காதல் விசேஷம். அவனுக்கு வயது ஆறும் நாற்பதும் ஆகின்றது! அவனுடைய மேனி அபாஞ்சியை நகைத்துக் கண் கடலைப் பழித்து, கைகர்னனை யிகழ்ந்து, மார்பும் தோளும் மலையைப் பகைத்துப் பலவிதத்திலும் நலம் மிகப் பூண்டவன் குலசேகரன். கூத்தாடிகள் போல் இவன் உடையணிவதில்லை. நல்ல நாகரீக நடையுடையவனாய், கல்வியில் தேர்ச்சியடைந்து, கவிதையில் மாட்சிபெற்று குணத்தில் தர்மராஜாவையும் கொடையில் கர்னப்பிரபுவையும், அழகில் மன்மதனையும் சம்பத்தில் குபேரனையும் நிகர்த்து குறைவென்பது யாதேனு மின்றி நிறைவென்பதையே எவ்விதத்தானு மடைந்து நீண்டகாலம் அரசு நெறியாகப்புரிகிறான்.

இவன்மனைவி கோமளவல்லி. இவளுக்கு வயது ஏறக்குறைய நாற்பதாயிருக்கலாம். இவள் அழகில் இணையில்லாதவளென்று எங்கெங்கும் புகழ்ந்து கொள்வார்கள். கணவனுக்கேற்ற மனைவியாய், நற்குண நற்செய்கைகளில் மிகச்சிறந்து விளங்கி, எல்லாராலும் கொண்டாடப்பட்டு, அனைவராலும் அகிலமாதாவைப்போல் பூசிக்கப்பட்டு, கணவனோடே ராஜ்யத்தைக் கவனித்து வந்தாள்.

கோமளவல்லிக்குக் கோபமென்பதே கிடையாது. நற்குணத்தின் மிகுந்த சுனினவதியாய் அவள் விளங்கினதோடும், நாகரீகத்திற் பெருத்த நலம் வாய்ந்தவளாயுமிருந்தாள். சதாதேவதா பூசனையும் கணவன் உபாசனையும் செய்து குடிகளின் க்ஷேமத்தைக்கோரி, மன்னுயிரையும் தன்னுயிர்போற்காத்த மஹா உத்தமியாக அவள்

*கொடையாளி = தருமங்கொடுப்போன்
† அவனி = பூமி

விளங்கினுள். அழகிய பூமாலையணிந்த சிரமும், கடகமணிந்த கற்பகக்கையும், தாமரையைப்பழித்த தருமத்திருமுகமும், ஆதரம் கூறும் அழகிய * அதரமும், நல்லதே சொல்லும் நலுமுறு நாக்கும், புத்திகோசரமும் புலவர்சகவாசமும் அவளிடம் காணப்பட்டன.

ஆம்! அந்த அரசசபை செல்வத்தில் குபேரன் சபையையும் †அந்தசந்தத்தில் இந்திரன் திருச்சபையையும் வித்யாவினோதத்தில் போஜன் புகழ்ச்சபையையும் ஒத்திருந்தது. காவடிபாட்டுக் கவிராயர்களுக்கு யாதொருகாசும் கொடாது, கௌரவமும் செய்யாது, உண்மைப் புலவர்களுக்கு உளமுவந்த சன்மானம் அங்கே, உறுதியாகத்தருவார்கள். நீதியென்பதற்கு நித்தியவாசஸ்தலமாயும், வித்தையென்பது வீற்றிருக்கும் ஆஸ்தானமாயும், ராஜதந்த்ரம் நிறைந்து, ரம்யமென்பது பரவி, எல்லோர்க்கும் நல்லதே விளைந்து, அனைவோர்க்கும் ஆனந்தமேபெருகி அற்புதமாய் விளங்கும் அழகிய கொங்கு தேசத்தின் கொற்றமன்னனுகிய குலசேகரப்பிரான், ஓர் நாள் காலை பூஜைமுடித்துப் புஷ்பங்கைக்கொண்டு, தன் பத்தினியாகிய கோமளவல்லி தர்மங்காத்த தயாபரஸ்வரூபியாய்த் தன்னுடன் கூடவர, ஆஸ்தான மண்டபத்தில் அழகாய்வந்து சேர்ந்தான். அவ்விடத்தில் இருந்த அமைச்சரும் அனைவோரும்,

'ராஜமார்த்தாண்ட ஜய ராஜகம்பீரஜய' என்று கட்டியங்கள் கூறிக் கவுரவஞ்செய்ய ஏவலாளர் எதிரே நிற்பக் காவலாளர் கைகட்டிக்காக்கப் பேரிகையறைய வெண்சங்கம் நின்றாத, எல்லாம் அங்கே இனிமையாயிருந்தன. சிம்மாதனத்தில் அரசன் சிறப்புடன் வீற்றிருக்க, ஒரு கழுத்தரிப்புலவன் ஒய்யாரமாய் வந்து நின்று,

> கலேகும் வெலேகும் பலேறலையானவே
> கலேகும் வெலேகும் பலேறலையானவே
> கலேகும் வெலேகும் பலேறலையானவே
> கலேகும் வெலேகும் பலேறலையானவே

என்று கரடுமுருடான ஒரு பாட்டைக்காகமாய்க்கத்திப்பாடி அசாதாரணமாகப் பதங்களைப்பிரித்து அர்த்தஞ்சொல்லி அனைவருக்கும் பொறுக்கமுடியாத அருவருப்பையுண்டாக்கி விட்டான். "அப்பா உன்பாட்டு அழகிலே சிறந்து வெகு அற்புதமாயிருக்கின்றது! தலை

* அதரம்=உதடு. † அந்தசந்தம்=மிக்க அழகு

நோயையுண்டாக்கியும் தத்துவந் தோன்றுதிருப்பது மெத்த அதிச யந்தான்! நீ ஒரு புறம் நின்றிரு. உனக்கு இலக்கணவன்மை அதிக மாய் இடருண்டாக்குவதேயொழிய இலக்கியப்பெருமை இம்மியள வும் காணேம்" என்று அரசர் கூறினர்.

இதற்குள்ளாக, அங்கே, இன்னுமொரு கவிதாசாதுர்ய கம்பீர புருஷர், அரசர் முன்னே வந்து அமைதியாய் நின்று,

வான்றுலங்கு பன்னிறத்த வரிவில்லே நின்சீர்த்திப்
பல்புகழை வடிவாய்க் காட்டத்
தான்றுலங்கு வன்னவன்னத் தனிப்படிக மொளிதன்னைத்
தனித்தனியாய்த் தகைக்கு மாபோல்
தோன்றுலங்கு பெரியோன்றன் குணப்பொதியைவேறுவேருய்க்
குறிப்புடனே குலவிக் காட்டி
என்றுலங்கு மொழியதனை யேந்தல்பிறர்க் கிசைத்தனையே
யெக்காலு மிசையின் மிக்கோய்

என்று தான்பாடிய பாட்டை எல்லோரும் மெச்சும்படி எதுகுல காம்போதிராகத்தில் பாடி அதன்பொருளை அழகாகப் பிரசங்கித் தான். "இஃதன்றே பாட்டும் பயனும்!" என்று அரசர் அகம்மிகக் களித்து ஆயிரம் வராகன் பரிசளித்தார்.

இஃதானதும் வேறு சில்ராஜ்யவிவகாரங்களைப் பார்த்துக் கொண்டிருக்கும் சமயத்தில் ஒரு வேலைக்காரன் ஓடி வந்து,

"மஹாராஜா! ராஜராஜேஜஸ்வரா! நேற்று நாம் கொண்டுவந்த பிள்ளைக்கு மயக்கம் நன்ருய்த் தெளிந்து ஸ்மரணைவந்து விட்டது. போகவேண்டுமென்று பிடிவாதம் செய்கிறுன்; அதைத் தங்களி டம் தெரிவிக்கவந்தேன்" என்றுன்.

"அப்படியா! ராஜா பார்க்கவேண்டுமென்று சொல்கிறுர். சற்று நேரம் இருக்கும்படியாகத் தெரிவித்தார் என்று போய்ச்சொல்"என அரசர் ஆக்ஞாபித்தார்.

இதற்குள்ளாக எங்கோ கவனஞ்செலுத்தியிருந்த இறைவியார் அரசனைநோக்கி,

"காவலாளன் என்ன சொல்லிவிட்டுப்போகிறுன்? யாருக்கு என்ன உடம்பு? யாருக்கு என்ன ஆபத்து?" என்று அதிக ஆவ லோடும் கவலையோடும் அவசரமாய்க் கேட்டாள்.

அதற்கு அரசர் "வேறொன்றுமில்லை. நேற்று நாம் பார்த்து வந்த பிள்ளைக்கு ஸ்மரணை வந்து விட்டதாம். போகவேண்டுமென்று சொல்லுகிறாராம்." என்று சிறிது சுருக்கமாய்ச் சொன்னார்.

அரசியார், இளநகை பூத்து "அப்படியா! நாம் இப்பொழுது போய் எப்படியாவது நிறுத்தி விடவேண்டும். இல்லாவிட்டால் நம் எண்ணம் பலியாதுபோகும். புறப்படுங்கள், புறப்படுங்கள்" என்று அவசரப்படுத்தினாள்.

உடனே அரசர் அங்கிருந்தவேலைகளையெல்லாம் ஒருவாறு முடித்து விட்டு புறப்பட்டுத்தன் பரிஜனங்கள் சூழ்ந்துவர, உள்ளே அரண்மனைக்குச்சென்றார். அங்கே தயாராய் வைக்கப்பட்டிருந்த சிற்றுண்டியைத்தானும் அரசியாருமாக உண்டு வனஜாஸனன் இருந்த அழகிய அறைக்கு அவசரமாய் வந்து சேர்ந்தார்.

வனஜாஸனன் அரசரையும் அரசியையும் கண்டு வணக்கமாக எழுந்து அடிபணிந்து,

"பெற்றோரே! பெரியோரே! தாங்கள் ஏழைமீதுவைத்த கருணையாலும், அளவற்ற ஆதரிப்பாலும் அன்பாலும் நான் உயிர் பெற்றெழுந்தேன். நான் சீக்கிரம் செல்லவேண்டியிருப்பதால் எனக்கு விடை கொடுத்தருள்க" என்று மிகப்பெரிதும் வேண்டிக் கொண்டான்.

அதுகேட்ட அரசர், "அப்பா, உன்னைப்பார்த்தால் ஊராளும் அரசகுமாரன்போலிருக்கிறதே! நீ யெங்கிருந்து வருகிறாய்? என்னென்னமோ கஷ்டப்பட்டு என்னென்னமோ இடரிலகப்பட்டதால் இளைத்த உடம்பில் இன்னும் களைப்புவாங்க வில்லையே. நீயார்? உன் சமாசாரம் என்ன? எல்லாவற்றையும் விவரமாய்ச்சொல்" என்று அப்பனைக்காட்டிலும் ஆயிரமடங்கு அன்புடன் கேட்டார்.

"நான் ராஜகுமாரனுமல்லன்; ராஜசபையைக் கண்டோனுமல்லன். நான் ஒரு ரத்தினவியாபாரி. கையிலெடுத்து வந்த பொருளைக் களவர் வழியில் உளவறிந்து களவாடிக் காணமலே யோடிவிட்டார். நான் வழிதெரியாது வாய்க்கால் தெரியாது தள்ளித்தள்ளாடி அன்ன ஆகாரமில்லாமல் அவஸ்தைப்பட்டு உன்னதமான தங்கள் உத்யானவனத்தில் வந்து சேர்ந்தேன். அங்கு மந்திரம்கற்ற மாயக் கிழவி யொருத்தி மாறுவேஷம் போட்டுவந்து என்னைத்தூக்கி யெங்கேயோ கொண்டுபோக என்னென்னமோ பிரயத்தனங்கள் செய்து

என்னை மாயைக்குள்ளாக்கி மயக்கத்திலழுத்தி மாயமாய் எப்படியோ மறைந்துபோயினள். தாங்கள் வந்து என்னைத் தக்க சமயத்தில் காப்பாற்றிக் கரையேற்ருதுபோயிருப்பின், முதலை வாயிலகப்பட்ட முயலைப்போலாயிருப்பேன். தாங்கள் எனக்குச்செய்த உதவிக்கும் தாங்கள் எனக்குக்காட்டிய தருமப்பெருந்தகைக்கும் நான் தங்களுக்கு நன்றி தக்கப்படிகாட்டப் போகின்றேனே என்னமோ தெரியவில்லை" என்று வனஜாஸனன் மிகவும் வண்மையாகச் சொன்ஞன்.

"அப்பா! நான் செய்தகாரியத்திற்குத்தக்கபடி நீ நன்றி காட்டாமற்போவாயென்று ஒரு சிறிதும் நான் சந்தேகிக்கவேயில்லை. ஆனல் நீ ஒருவியாபாரியென்று சொல்வதில் தான் எனக்கு நம்பிக்கையில்லை. நீயாதோ ராஜவம்சத்தைச் சேர்ந்தவனென்றும் காலகதியால் கவலைமேற்கொண்டு நீ இந்த வண்ணமாக இளைத்துவிட்டனை என்றும் என் புத்தியில் படுகின்றது. அஃதெப்படியாயினும் ஆகுக! நீ இங்கு சின்னாள் இருந்தே போகவேண்டும்." என்று அரசர் மிக்க ஆர்வத்தோடே வற்புறுத்தி வார்த்தையாடினர்.

இதைக்கேட்ட வனஜாஸனனுக்குத் தடுத்துச்சொல்ல வாய் வரவில்லை. அகிலத்தையாளும் அரசர்பிரான், செங்கோல் நடத்திச் செம்மையாய்க் குடிகளைக்காக்கும் சிங்காரச்செல்வர், நன்னெறி பிடித்த நாகரீகர்—அவ்வளவு தூரம் தடுத்துச்சொல்லும்போது, அசட்டைசெய்து அதை யெவ்வண்ணம் மீறிப்போவது என்று வனஜாஸனன் என்னென்னவோ சிந்தித்து, அரசரைநோக்கி,

"பெருமானே! தாங்கள் ஏழையேன்மீது இவ்வளவு கிருபை பாராட்டித் தடுத்துச்சொல்லும்போது விடுத்துப்போவது எவ்வாறு கூடும்? ஆனல் நான் வியாபார விஷயத்தில் அங்கங்கே போட்டது போட்டபடி விட்டுவந்திருக்கின்றேனென்பதை மாத்திரம் விண்ணப்பஞ்செய்து கொள்ளுகிறேன்." என்று கூறினன்.

"ஆனலுமென்ன? நீயிங்கே சின்னளிருந்துபோகும் பக்ஷத்தில் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் பிறகு செய்துகொள்ளலாம். நீ எதற்கும் அஞ்சவேண்டாம்" என்று அரசரும் அரசியும் எழுந்துபோய் விட்டார்கள்.

வனஜாஸனன் சௌக்கியத்திற்கென்று வகை வகையான ஏற்பாடுகள் அரசியாரின் உத்தரவினல் அலங்காரமாக நடத்தப்பட்டு வந்தன. அரசகுமாரிக்குத்தக்க மணவாளன் அத்தனை நாளாய்த்

தேடியும் ஒருவனும் அகப்படாதிருந்து, இப்போது தான் கோடி சூர்யப்பிரகாசம்போல் குமாரதேவன் எதிரேவந்திருக்க, இந்தச் சந்தர்ப்பத்தையும் விடலாகுமாவென்று அரசருக்கும் அரசிக்கும் மனதில் அளவற்ற ஆசையுண்டாயிருந்தது. இந்த எண்ணத்தைக் கொண்டே, அவர்கள் எப்படியாவது அவனை நிறுத்திவிடவேண்டுமென்று தீர்மானஞ்செய்து எவ்விதத்திலும் அவனுக்கு மனக்கிளர்ச்சியுண்டாம்படிக்கும் தேகவிளைப்பு நீங்கும்படிக்கும், திருத்தமான ஏற்பாடுகளைப் பொருத்தமாய்ச்செய்து வந்தார்கள். காலையிலெழுந்ததும், கைகட்டி நால்வர் காவலாளரும் ஏவலாளருமாக வனஜாஸனன் சொன்னபடி நடக்க வரிசை வரிசையாய் நின்றுகொண்டிருப்பார்கள். சாப்பாட்டு வேளைகளில் அரசியாரே அருகிலிருந்து உபசாரம்செய்து உற்சாகஞ்செய்து கொண்டிருப்பார்கள். வனஜாஸனனுக்கென்றே தனியாக வண்டிகளும், தரித்தற்கென்று உரித்தான அழகிய உடைத்தொகுதிகளும் எல்லாம் தயாராய் விட்டன.

வனஜாஸனன் இவ்வாறு நிறுத்தப்பட்டபோதிலும் இன்ன காரணத்திற்காக இஃதாயிற்று என்பது அரசன்அரசியிருவர் மனத்திற்கு மாத்திரம் தெரியுமேயன்றி வேறொருவர்க்கும் தெரியாது. ஒருவர் இருவர் புத்திகோசரமுடையவர்களாயிருந்தவர்கள், யூகையினால் அதை ஒருவாறு அனுமானித்தார்களேயொழிய, மற்றப்படி எத்தகையினர்க்கும் அது சுத்தமாய்த்தெரியாது. அரசிளங்குமாரியாகிய அற்புத ரூபலாவண்ய மனமோஹன மாணிக்கத்திற்கும் தந்தை தாயர்க்கு இந்த எண்ணம் சிந்தையிலுதித்ததென்று சிறிதும் தெரியாது! வனஜாஸனனுக்கு இந்த சங்கதி கனவிலுங்கூடத் தோற்றவில்லை.

*　　　*　　　*

ஒருநாள் மாலை ஐந்தரை மணியானதும் உன்னதமான அரசனது உத்யானவனத்தில், சுகுணசுந்தரியும் சொகுஸாரஞ்சனியுமான மனமோஹன மாணிக்கம், சற்று உலாவிப் பந்தாடி ராகம்பாடி விளையாடிப் போகலாமென்று தோழியரைத்துணைக்கொண்டு தோகையன்னம் வருவதுபோல் மெள்ள மெள்ள வருகிறாள்! தோட்டத்திற்கு வெளிப்புறமே, அன்று, வாட்டம்போக்கப் பூக்களின் மணம் ஓட்டம் பெற்றிருந்ததால், காற்றும் கம்மென்று வாசனையும் கும்மென்று துன்மதியோட்டி மன்மதராஜ்யமாய் மஹா சொகுஸாய்

விளங்கிற்று! இயற்கைமாதாசி இணையில்லாப் பெண்ணரசிக்குத் திருஷ்டி சுழற்றுவதற்கு உருட்டியெடுத்த குடவிளக்குபோல, வட்டமிட்டு மிகத்திட்டத்தோடு தோன்றிய சட்டமான நிலா இரவைப் பட்டப்பகலாக்க இனிதாக முயல, அன்று பூர்ணிமை நாளாதலாலும், அழகே மிகுத்த ஆனிமாதமாதலாலும், வானத்தில் மேகம் பெருக்கு மில்லாதிருந்ததாலும் எல்லாம் அழகே, எல்லாம் அலங்காரமே, எல்லாம் உல்லாஸமே, எல்லாம் சல்லாபமேயாயிருந்தது. கீதமினிய குயில்கள் நாதமினிய கோகிலத்வனிபாடவும், உருவமினிய மயில்கள் சிறகைவிரித்து சிங்காரமான நர்த்தனம் அலங்காரமாகச்செய்யவும், * அழலையாக நீங்கள் மழலைபேசுகிறீர்களே யென்று பிள்ளைகளைப்பழித்துக் கிள்ளைகள் மதுரச்சொல்லைச்† சதுரமாய்ப்பேசவும், புறுக்கள் புதுமைசெய்யவும், மைனுக்கள் 'மகிமை' செய்யவும், தாமரை நிறைந்த தடாகங்களில் அழகு நிறைந்த அன்னங்கள் சிம்மாதனமிட்டுச் சிறப்பாய் வீற்றிருக்கவும், ஹா ஹா! அத்தோட்டம் என்ன அழகு பெற்றது, அப் ‡ பூங்கா என்ன அமைதியுடையது! அங்கே வன்ன வன்னமான பூச்செடிகள் வகை வகையாக வைக்கப்பட்டிருந்தன. மரகதப்பச்சையும், மாணிக்கச் சிகப்பும், பொன்னின் மஞ்சளும், முத்தின் வெளுப்பும் கலந்து கலந்து மனதைக்கவரத் தக்க க்ரோடன்களும் பெரன்களும் பற்பல விதமாய், பார்க்கும் கண்களுக்கு நேர்த்திதோன்றும்படியாக நேர் நேராகவும் நிரை நிரையாகவும் குவியல்களாகவும் கோபுரங்களாகவும் பந்தல்களாகவும் சிந்தைகளிக்கும்படிச் செம்மையாய்வைக்கப் பட்டிருந்தன. மல்லிகைச்செடியின் சல்லாபவாசனை சொல்ல முடியாத சுகத்தைக்கொடுக்கவும், முல்லைப்பூக்களின் உல்லாசமணம் எல்லையில்லா இன்பம் விளைக்கவும், தாமரை முகத்தைக்காட்ட, ரோஜா ஆங்கதன் சொகுசைக்காட்ட, குவளைகண்ணைக்காட்டக் குமுதம் வாயைக்காட்ட, மஞ்சள் சாமந்தி மங்களகரத்தையும், வெள்ளைச்சாமந்தி உள்ளத்தூய்மையையும் நன்ருய்ப்புகட்ட, மருவும் தவனமும் அலரியும் சண்பகமும் மனோரஞ்சிதமும் மன்மத பாணமும் ஓத்தாசையாகவந்து உள்ளமணத்தை அள்ளித்தெள்ளி அலங்காரமாய்வீச அழகாய் அமைந்த நந்தனவனத்தே அடுத்தடுத்து ஏற்படுத்திய அற்புதச் சுற்றுகளில் மின்சார விளக்குகள் பொன்போல ஒளியை அன்போடு கொடுத்துக்கொண்டிருந்தன.

---

* அழலையாக = சுகமில்லாமல் † சதுரம் = அழகு

‡ பூங்கா = பூந்தோட்டம்

சிகப்பு விளக்குகளும் வெள்ளைவிளக்குகளும் நீலவிளக்குகளும் பச்சை விளக்குகளும் உச்சிதம்செய்து பரமானந்தம் கொடுக்க, மேலேசந்திரன் மினுக்கைக்கண்டு சிரித்துச்செல்ல, அலங்காரமென் பதே அவதாரமான அந்தத்தோட்டத்தில், பூக்களைப்போலும் புது மையான சித்திரங்களைப்போலும் ஸ்த்ரீகள்போடும் மொக்குகளை யும் சீயென்றிகழ்ந்து பெருமையால் மேலெழும்பி செடிகள் மேலே இறைத்து நிற்கும் இன்பக்குழாய்களின் அன்பு நீர்ப்பாய்ச்சலின் அழகிய தன்மை அமைந்த விதத்தை யாவரால் சொல்லத்தரம்! மின்சார விளக்குகள் வன்மைகுறைந்து வெளிச்சங் காட்டா இடத் திலெல்லாம், வந்தேனுதவிக்கென்று சந்திரன் தன் அடங்கிய ஒளி யை அமைதியாய்க் கொட்டவும், பனிநீர் தெளிப்பதுபோல் மாலைக் காலத்தில் குழாய் நீர் விளைக்கும் குளிர்ச்சிப்பெருக்கால், உளம் மகிழ்ந்து செடிகள் முகம் மலரவும், ஹா! ஹா! அந்த வேளையில் அங்கு தோன்றியவினோதம், கம்பனும் சொல்ல முடியாது, காளி தாசனும் பகரலாகாது!

அத்தகைய சுந்தரவனத்தில் அழகுமிஞ்சிய அந்த நந்தன வனத்தில், மாலையில் நன்றாக மனங்கவரும் வேளையில் மனமோ ஹன மாணிக்கம், நேசமுகத்தோடு வாசம்பூண்டு, தோழியரும் தாதியரும் இன்னிசைபயில்வாரும் இருமருங்கும் இசைந்துவர, நன்னயமாகச்சென்று நந்தனவனம் புகுந்தாள்!

உள்ளே சென்றதும் ஒரு மல்லிகைச் செடியருகேபோய் குட மல்லி குவிந்திருப்பதைக் கண்டு,

"எடி! தோழி! இந்தக்குடமல்லி என்ன அழகாகக் குவிந்திருக் கின்றது பார்! அந்தப்புறம் தாமரை சந்திரனைக்கண்டு குவிந்திருக்க, அதைக்கண்ட குடமல்லி மனம்தாளாது தானும் குவிந்ததுபோ லன்றோ இருக்கின்றது!" என்று மனமோஹன மாணிக்கம் இதமாகச் சொன்னாள்.

அதுகேட்ட தோழி, அரவிந்தமென்பாள், "ஆம்! அம்மா! அந்த சந்திரன் அந்தரத்தில் விளங்குகின்றானே! அவனைவிடக் கொ டியோர் அவனியில் யாவரிருக்கின்றார்கள்! அந்தப் பாவியைப் பார் த்து முகம்கூம்பாது யாவர் தானிருக்கக்கூடும்!" என்றாள்.

எடி! அரவிந்தம்! உன் வார்த்தைமெத்தவும் சரிதான் "வெங் காரம் வெய்தெனினும் நோய்தீர்க்கும் மெய்பொடிப்பச் * சிங்கி

* சிங்கி = விஷம்.

குளிர்ந்துங்கொளும்" என்றுபெரியோர் முதுமொழிபேசியிருப்பதன் படி நீர்க்கோலமாக வேடம்பூண்டு நெருப்புக்கோலமாக இந்தப் பாவிதகித்துக்கொளுத்துகிறனே, என்செய்வது!" என்று மன மோஹன மாணிக்கம் வெகு பரிதாபமாய்ச் சொன்னாள்.

"ஆம்! என் அருமந்தக் கண்ணே, இந்தவேளை எல்லாம் அப் படித்தானிருக்கும். இன்னுஞ் சிறிது நாள்போனாலவ்வாறிராது" என்றுதோழி அரவிந்தம் குறிப்பாகச் சொன்னாள்.

"ஆமாம்! அரவிந்தம், நீ சொல்வதில் வெகு சிறிதும் எனக்குக் கோபமேயில்லை! தென்றலென்கிறார்களே, அது தீக்காற்று. நெருப் பில்வெந்து நீறானாலும் ஆகலாம், தென்றலிற்பட்டுத்திகைப்பது மாத்திரம் ஆகாது! பாலைவனத்தில் பாதம்வெந்து ஆவிதுடித்துப் பரமபதம் போனாலும்போகலாம், நிலவில் அகப்பட்டுத்தவிப்பது மாத்திரம் ஆகாது." என்று மனமோஹன மாணிக்கம், உளம் நொந்து மனம்வெந்து உள்ளதைச்சொன்னாள்.

"இல்லாமலா தென்றலை மன்மதனுடைய தேரா கவும், புஷ் பங்களெந்தையும் மன்மதனுடைய இஷ்டபாணங்களாகவும் புல வோர்கள் வர்ணித்துப் புகழுற்றிருக்கின்றார்கள்!" என்று அரவிந்தம் சிரித்துக்கொண்டே அழகாகச் சொன்னாள்.

"ஏடி! தோழி, இஃதிருக்கட்டும்! அங்கேபார்! நன்றாகக்கேள்! காதுக்கினிய கானரசத்தை ஈனமில்லாமல் பக்ஷிகள் இன்பமாய்ப் பாடுவதைக்கேள். அன்னப்பறவைகள் ஹம்ஸத்வனிராகம் பாடு வதும், அதைக்கேட்டு மேலேசெல்லும் கருடன் யாரும் மெச்சக்கரு டத்வனிராகம் கௌரவத்தோடேபாடுவதும், குயில்கள் நல்லகோகி லத்வனியும் மயில்கள் சிறந்த மயூரத்வனியும் இச்சையோடே இசைத்துச்செல்வதும் மெச்சும்படிக்கன்றோ இருக்கின்றது!" என் று மனமோஹன மாணிக்கம் மனமுருகப்பேசினாள்.

"என் அருமைக்கண்ணே! நீ எல்லாக்கலைகளிலும் ஏற்ற முற் றிருப்பதால் சிங்காரத்தோற்றங்களில் உன்மனம் சீராகலயித்திருக் கின்றது. பூக்களைப்பார்த்துப் புளகாங்கிதங்கொள்ளவும், ராகத் தைக்கேட்டு மோகங்கொள்ளவும் நீ செய்திருக்கும் பாக்கியம் அநுபவிக்கிறதற்கு யாவர்தாம்வரப்போகிறார்களென்பது எனக்குத் தெரியவில்லை! அரசகுமரிகளெல்லாம் உன்னுடைய அழகைக்கண்டு ஆனந்தமடையவும், உன்னுடைய அறிவைக்கண்டு அஞ்சிவிழிக்க

வும் அதிஷ்டம் உனக்கு அமைந்திருக்க, இவைகட்கெல்லாம் ஏற்ற படி கணவன் எங்கிருந்து வருகின்றானென்பது மாத்திரம் எனக்குத்தெரியவில்லை" என்று அரவிந்தம் சிறிது அமைதியாகச் சொல்லிக்கண்ணிலிருந்தும் அழைத்துளி ஆறும் ஏழும் ஆறாய்ப்பெருக்கி விட்டாள்.

இதைப்பார்த்த மனமோஹன மாணிக்கம், "அரவிந்தம் நீயேன் அழுகிறாய்? வேடிக்கைக்காகவும் விளையாட்டுக்காகவும் தோட்டத்திற்கு வந்தும் துயரப்படுவது எதற்காக?" என்று சொன்னாள் மாத்திரமேதவிர அவள் கண்ணினின்றும் பத்துப்பதினைந்து துளி * கான்யாறாய்ப்பெருகி விட்டன.

இப்படி மனமொத்து இருவரும் பேசிக்கொண்டிருக்கும் வேளையில், சற்றுதூரத்தில் மன்மதவடிவம்பெற்ற வாலிபகுமாரன் செடிகளின் நடுவில் திடும்மெனத்தோன்றினான். இருந்தாற்போலிருந்து எதிரேவந்த இளவரசன்போல்வானைப்பார்த்த மாத்திரத்தில், மனமோஹன மாணிக்கத்திற்கு மறதியென்பது வெகு அதிகமாய் விட்டது. கண்ணும் கண்ணும் நேசம் என்னும் ஊசியால் நிமிஷநேரம் தான் தைக்கப்பட்டிருந்தன. ஆனாலும், நிமிஷநேரமே நெடுநேரம்போலாயிற்று. அந்தோ! நிமிஷமென்பதும் நெடுநேரமென்பதும் மனதை விட்டு வேறெங்குமில்லையென்று மானஸதத்துவ சாஸ்திரிகள் கூறுகின்றார்களன்றோ! அபினிதின்ற ஆசிரியர் ஒருவர் † ஒரு நிமிஷமே ஒருயுகமாகவும், ஒருநாள் முழுதுமே ஒரு கணப்பொழுதாயும் தோன்றுமென்றார். அதுபோலக் கண்ணும் கண்ணும் தைத்தலால் மனத்துடன் மனம்பொருந்திய மாண்புடையோர்கள் இருவரும் மற்றவையெல்லாவற்றையும் சுத்தமாய் மறந்தேவிட்டார்கள். கண்ணுடன் கண்பொருந்திற்று, கல்யாணமும் அப்போதே கம்பீரமாய் நடந்தது என்று ‡ ககனத்துப்பறவைகள் கனதாளம் போட்டுப் பெரும்ராகம்பாடின. மற்றத்தோழியர் சற்றுப்புறம்பேயிருக்க, மனமோஹன மாணிக்கத்துடன் மனம்பொருந்திய ஒரே தோழியும், ஆகாயத்திற்சென்று கொண்டிருந்த அழகான சந்திரனும், தாளம்தட்டி மேளம்கொட்டி ராகம்பாடிய வாகானபறவைகளும் இந்தத் திருக்கல்யாணத்திற்கு இயைந்த சாக்ஷிகளாய் இருந்

* கான்யாறு=காட்டாறு.

† ஆங்கில டிக்வின்ஸி ஆசிரியர்.

‡ ககனம்=ஆகாயம்.

தன. உண்மைக்கல்யாணம் ஒரு நிமிஷத்தில் நடந்து விட்டது! வண்ணமைக்கல்யாணம் வருஷம் வரைக்கும் நடந்தாலும் அஃது ஊருக்குக்கல்யாணமேயன்றி உளத்திற்குக்கல்யாணம் ஒருபோதும் ஆகாது.

கண்பார்வையாற் கல்யாணம் முடிந்துவிடுமா என்று சந்தேகத்தினுல் சிலர் சிந்தைகலங்கக்கூடும். கண்பார்வையாற் காரியமாவது போல், வேறெஃதாலும் காரியம் வெகு சிறிதும் நடவாது. கண்ணலன்றோ அரசனும் ராஜகாரியம் கடுகென நடத்துவது * கண்ணிற் சொலிச் செவியினேக்கு மிறைமாட்சி, எண்ணிற்கும்மீறி எழுத்திற்கும் புறம்பாய் எல்லாவிதத்திலும் மேன்மையடைந்ததென்றல்லவா உண்மைப்புலவர் உறுதியாகக் கருதுகின்றனர்! அதுபோலவே கண்ணல் நடந்தேறும் கல்யாணமே, உண்மைக்கல்யாணம் உளம் நிறைந்த கல்யாணம் என்று நினைக்க எல்லாவிதத்தாலும் நியாயமிருக்கின்றது. கடலினுழத்தைக் கணக்கிலடக்கினும் அடக்கலாம், கண்ணின் ஆழத்தை எண்ணல் நினைப்பது எவ்வளவும் ஆகாது. கண்ணென்பது கடவுளின் எல்லாப்படைப்புகளிலும் † ஏற்றமுற்ற உல்லாஸ அவயவம்! கண்ணென்பது ‡ மனக்கடலின் திசைக்கருவி! உலகக்கண்ணுகிய சூரியனைக்காட்டிலும் உளத்தின் கண்ணுகிய நேத்திரமென்னும் நின்மலக்கருவி தோத்திரஞ் செயத்தகும் § தூய்மையடைந்ததென்று வாய்மையாகக் கூறலாம். 'அகத்திலழகு முகத்திற்றெரியும்' என்றும், 'அடுத்ததுகாட்டும் பளிங்குபோல் நெஞ்சம் கடுத்தது காட்டுமுகம்' என்றும் பழமொழியும் குறள் மொழியும் 'பட்டப்பகலாக' உண்மையை 'வெட்டவெளிச்சமாகக்' கூறியிருப்பினும், முகத்திற்கு முதல் ஏஜண்டு கண்ணென்பதற்குக் கடுகளவும் சந்தேகமேயில்லை. முகம்காட்டுவதென்றால் கண் காட்டுவதென்றே முறையாகச் சொல்லலாம். அகங்காட்டுவதை முகங் காட்டுவது, என்பது, ¶ எண்ணைக்காட்டும் கண்ணென்றே உண்மையாக நாம் உறுதியாய்ச் சொல்லக்கூடும்.

---

* கண்ணலே சொல்லி, செவியினலே கேட்கும் அரசனது மாண்பு.

† ஏற்றம்=உயர்வு

‡ கப்பலிலுள்ள திசையறிகருவியால் எப்படித் திசைகளைக்கண்டறிய முடிகிறதோ, அதுபோல, கண்ணினுல் மனமாகிற கடலில் திசைகளை அதாவது அதன் போக்குகளை அறியலாம்.

§ தூய்மை=பரிசுத்தம். வாய்மை=உண்மை.

¶ எண்=எண்ணுதல்=எண்ணம்.

இவ்விதமாக, வனஜாஸனன் மனமோஹன மாணிக்கம் என்கிற இருவர்களுடைய மனம் ஒத்தது என்பதைக் கண்கள் காட்டிவிட்டன. ஆலோசித்து ஒரு விஷயத்தை ஆராய்ந்தறிபவர்களும், *நுண்ணியபொருள்களை எண்ணுவதற்கு முன்னே எடுத்துரைப்பவர்களும் அங்கே யாவராயினும் இருந்திருப்பின், அழகின் மிக்க அலங்காரபுருஷர்களிருவர்க்கும் கல்யாணம் அப்போதே கடுக நடந்துவிட்டதென்று நன்றாகத்தெரிந்து கொண்டிருப்பார்கள்.

அரசகுமாரி வருகிறாளென்று அறிந்தவுடனே வனஜாஸனன் அப்படித்திரும்பிப்போய் விட்டான்; மனமோஹன மாணிக்கம் இப்படித்திரும்பி புருஷர்கள் வருகிறாப்போலிருக்கிறதேயென்று வந்த வழியே நடக்கத்தொடங்கி விட்டாள்.

**அரவிந்தம்:** "ஏன் அம்மா? தோட்டம் பார்த்தாயிற்றா? பூப்பறித்தாயிற்றா? பந்து விளையாடினையா? வந்தவழியே நீ திரும்பி விட்டது என்றனக்கு எப்போதுமில்லாத ஆச்சரியத்தை இப்போது உண்டாக்கி விட்டதே!"

**மனமோஹன மாணிக்கம்:** "எல்லாம் பார்த்தாயிற்று! வாடி போகலாம் வீட்டுக்கு: இதென்ன என்றுமில்லாதபடி உடம்புஇன்று வருந்துகின்றதே தலையைச்சுற்றுகிறது, தாபம் வருகிறது, மயக்கமாயிருக்கின்றது, மனங்கலங்குகின்றது."

**அரவிந்தம்:** "மனம் வருந்துகின்றது, அதனால் தலைசுற்றுதலும் மயக்கம் தோன்றலும் உண்டாயினவா? அல்லது தலைச்சுற்றலும் மயக்கம் காணலும் ஏற்பட்டதால் மனதுவருந்துகின்றதா?"

**மனமோஹன மாணிக்கம்:** "அதென்னமோ அம்மா! அந்த தர்க்கசாஸ்திரமெல்லாம் எனக்குத்தெரியாது. எதுகாரணம், எது காரியம் என்று பூராயமாய் ஆராய ஆரம்பித்து விட்டாய் போலிருக்கிறது! தொன்னைக்கு நெய் ஆதாரமா, நெய்க்குத்தொன்னை ஆதாரமா என்று எந்தப்பைத்தியக்காரனோ அதிக தத்துவம்பேசி ஆயாசப்பட்டானமே அதுபோல் நீ எதுகாரணம், எதுகாரியம் அதாவது, எதனால் எது உண்டாகிறது, என்று என்னென்னமோ சிந்திக்கின்றாய்! பூனைசெய்கிற வேலை பூனைதான் செய்யும், புலிசெய்கிற வேலை புலிதான் செய்யும். அந்தந்தக்காலத்தில் அது அது எப்படியெப்படி ஆகவேண்டுமோ அப்படியப்படி ஆய்தான் தீரும்"

* நுண்ணிய = நுட்பமான

அரவிந்தம்: "அதுதானம்மா கேட்டேன்! அதுதானம்மா கேட்டேன்!"

மனமோ: "கேட்கவாவது, பார்க்கவாவது!"

அரவிந்தம்: "அம்மா நானென்றும் கேட்கவில்லை. நீ அவரைத் தான் கல்யாணஞ் செய்துகொள். நான் வேண்டாமென்று சொல்லுகிறேன்."

மனமோ: "அவரையையாவது கல்யாணஞ் செய்துகொள்ளுகிறேன் துவரையையாவது கல்யாணஞ் செய்துகொள்ளுகிறேன். நீ யேன் வீண் புரளியெல்லாம் செய்கிறாய்? கல்யாணத்தைப்பற்றி இப்போது யார் பேசினார்கள்?"

அரவிந்தம்: "கல்யாணத்தைப்பற்றிக் கண்கள் தாம்பேசின. இப்போது ஏன் என்மீது கோபித்துக்கொள்ளுகிறாய்? நாளைக்குச் சொல்லுகிறேன் நாணயப்பேச்சை! நீவா! வீட்டுக்குப்போகலாம். உனக்கு உடம்பும் சரியாயில்லை, மனதும் சரியாயில்லை."

இவ்வாறு பேசிக்கொண்டே, அரவிந்தமும் மனமோஹன மாணிக்கமும் அரண்மனைக்குச் சென்றார்கள்.

## பத்தாவது அத்தியாயம்.

ஜகன்மோஹனசிங்காரம். மாரியாத்தாள் பிரசங்கம்.

தாரகங்களின் நடுவில் அன்னப்பக்ஷியைப்போலேயும், கழுதைக ளின் நடுவில் உத்தமமான பசுவைப்போலேயும் உளந்தடுமாறிக் கொண்டிருந்த உத்தமியான ஜகன்மோஹன சிங்காரம் எண்ணாததது மெண்ணினாள், ஏக்கத்தாலே தூக்கம்மாறி இளைத்ததேகமும் களை த்த உள்ளமும், ஹறி ஹறி, அவள்படும் பாடு ஐயனுக்குத் தான் தெரியும்! பாலைக்குடித்துக் காலந்தள்ளிப் பாவிப்பயல்களாகிய கோ வப்பயல்களிடம் ஏவல்செய்து அவள் நாளைக்கழித்தது மிகவும் பரிதாபகரமானது!

பிரம்மராக்ஷதனை எப்படிப் பிராணன் நீங்கும்படிச்செய்வது என்று இராப்பகலாய் அவள் ஒரே எண்ணங்கொண்டிருந்தாள். ராக்ஷதப்பாவியையும், சூன்யக்கிழவியையும் சுருக்காக இயமனுல கத்திற்கு இரதமேற்றியனுப்பி விடவேண்டுமென்று இடைவிடாமல் அவள்நோன்பு நோற்றுக்கொண்டிருந்தாள். கடவுளைநோக்கிக் காலை யும் மாலையும் கையெடுத்துக்கும்பிட்டு, "என்னை இந்தவழியாக்கிய இரும்புமன விராக்கதனும் இருண்டமனக்கிழவியும் உருண்டுபோம் படி அருண்மாரிபொழிய வேண்டு" மென்று அல்லும் பகலும் அன வரதமும் அதே பிரார்த்தனையாயிருந்தாள்.

ஒருநாள் காலை நாலு நாலரையிருக்கும்! வெளியிலேயே யிரு ட்டு விலகாமலிருக்க, மலைக்குகையினுள்ளே வெளிச்சம் எப்படித் தோன்றும்! ஆனால் அப்போது பொழுதுவிடிவதற்கு வேண்டியகுறி கள் தோன்றிக்கொண்டிருந்தன. பறவைகளினொலி சர சரவென்று மேலே கிளம்புவதும், மிருகங்களின் சந்தடி மெதுவாய் அடங்கிவரு வதும், குகையின் சந்துவழியாக வெள்ளிமுளைத்தது விமரிசையா கத்தெரியவும் உல்லாசக்காலையின் சல்லாபக்காற்று மெல்லிய வே கத்தோடேமேலே வீசவும், பொழுதுவிடியும் சமயமாகிறதென்று பழுதில்லாது எவர்தாம் சொல்லமாட்டார்கள்? ஏற்கவே, மனம் வருந்தி எண்ணமிட்டுக்கொண்டிருந்த ஜகன்மோஹன சிங்காரத்திற் குத் தூக்கமென்பது சீக்கிரம் தொலைந்து விட்டபடியால், விழித் துக்கொண்டும் தன் தலைவிதியைப் பழித்துக்கொண்டும் மௌனத் தோடே படுத்துக்கொண்டிருந்தாள்.

இப்போது ஒருபக்கம் சல சல கலகலவென்றது! அஃது யா தாயிருக்கலாமென்று அரை நிமிஷம் யோசித்தாள் அழகியமாது! சற்றுநேரத்திற்கெல்லாம் சல சல கல கலவென்றது தடதட படபடவென்றனது. வேறெங்கும் கூச்சல் பிறிதொன்றும் காணு திருக்க, மூலையிலிருந்து சந்தடி முளைத்தது எப்படி என்று முன் னும பின்னும் சுற்றுமுற்றும் உடம்பை அசைக்காமலே உற்று நோக்கினள், மெத்த தைரியமுடைய ஜெகன்மோஹன சிங்காரம். சற்றுநேரத்திற் கெல்லாம் சந்தடியதிகரித்தது, கல்லும் பெயர்ந் தது, கையில் விளக்கோடே கிழவியும் தோன்றினள்!

வந்த மாரியாத்தாள், வயிற்றைத் தடவிக்கொண்டே, வாயைக் குளறிக்கொண்டே,

"பொண்ணே, என் கண்ணே, வந்தியா இங்கே, ஹஹ்ற ஹஹ்ற, ஹஹ்ற ஹஹ்ற! கர்வம்போச்சா, கருடன் போச்சா, பருந்துபோச்சா பாயாபோச்சா? எயுந்திரு, எயுந்திரு" என்று ஜகன்மோன சிங்கார த்தைத்தட்டி எழுப்பினள்.

தூங்குவதுபோலே பாசாங்குசெய்து கொண்டிருந்த ஜகன் மோஹன சிங்காரம் அப்போது தான் கண் விழிப்பதுபோல் கள் ளத்தனம் செய்து,

"யாஅஅர் அஅங்கேஎஎ! ஆங்! பேயா ஆயா நீயா? எப்போது வந்தாய் என்னசமாசாரம்? இந்த அர்த்த ராத்திரியில் என்ன விசே ஷம்? மணி பன்னிரண்டிருக்கும் போலிருக்கிறதே! புலியிருக்குமே, பூதமிருக்குமே, பேயிருக்குமே, பிசாசுதோன்றுமே. இந்த அர்த்த ராத்திரியில் எப்படி நீ வந்தாய்?" என்று பரிதாபம் காட்டும் குர லில் பக்குவமாகக் கேட்டாள்.

"ஆமாண்டியம்மா! பிலி புடுங்கவந்துச்சி, நரிகடிக்க வந்துச்சி! பேய் அறையவந்துச்சி, பிசாசு முயுங்கவந்துச்சி! நான்யென்ன இதுக்குல்லாம் ஆப்புடறவிளா! அது இருக்கட்டும், நீயேன் இங்கே வந்தே! ஏண்டிமகளே! என்னாத்துக்கு இங்கேவந்தே! பயமில்லாதே எப்படி தூங்கிறே! நீ ரொம்ப ரொம்ப கிருவம், அதான்கெருவம், அதான் கருவம் படைச்சியே! அதுனாலேயாவந்துட்டே இங்கே! என்னாசமாசாரம் சொல்லு" என்று நீட்டி நீட்டி நெடுநேரம் பேசி னள்.

"இல்லே ஆயா! எனக்கு வழிதெரியாமல் காட்டுவழியே அகப் பட்டுக்கொண்டேன். களைவந்து கண்ணைக்கவிந்து கொண்டது,

மபக்கம்வந்து ஸ்மரணைபோய் விட்டது. இங்கே தூக்கிவந்து விட்டான் இந்த மலையிலேவசிக்கும் மஹாத்மாவான ராக்ஷஸப்பிரபு. எனக்கு இனிமேல் என்ன குறைவு?" என்று ஜகன்மோஹன சிங்காரம் ஜடுதியில் கூறினாள்.

"நாம் இங்கு இவள் நாசமாய்ப்போகவேண்டுமென்று மோசக் கருத்தோடே யோசனைசெய்தால், இவள் சந்தோஷத்தில் முழுகி சாம்ப்ராஜ்யம் பெற்றதுபோல் பேசுகிறுளே! இதென்ன விந்தையாயிருக்கின்றதே" என்று மாயக்கிழவியாகிற மாரியாத்தாள் மனதிற்குள்ளே நினைத்து, ஜகன்மோன சிங்காரத்தை நோக்கி,

"என் அருமையான கண்ணே, பெருமையான பொண்ணே, நீ பொறந்த அருமையும் வளந்த பெருமையும் எனுக்கல்லோ தெரியும்! நான் அண்ணைக்குக் கோவத்திலே என்னுமோ சொல்லிட்டு வந்துட்டேன் இண்ணுமாத்தரம் நீ மனசிலேவைக்காதே. உனுக்கு இங்கே சரிப்புடுமா? இந்த பிரம்மராக்ஷதன் குருவியைப்புடிச்சி, கோவேறுகழுதையைத் திண்ணுறவன் ஆச்சே! சமயம்வந்து பசியெடுத்துகுனு உன்னையும் முழுங்கி ஓரே ஏப்பம் வுட்டுடுவானே! நீ பொறப்பட்டு என்னேடுகூட இப்பொவே வந்துடு. ஆருக்கும் தெரியாதே, உன்னெ வெளியுலேகொண்டு பூடுறேன். காவகாரர் கண்ணிலே மண்ணெ தூவிடுறேன். வேலைக்காரர் முழியிலே பொடியைப்போட்டுடுறேன். நீ பொறப்படு நீ பொறப்படு" என்று பலவாறு வற்புறுத்திப் பாசாங்காய்க் கூப்பிட்டுப் பார்த்தாள்.

ஜகன்மோஹன சிங்காரம், இதற்கெல்லாம் அசையாத இரும்பு மனம் படைத்தவளாதலாலும், இருக்கிற நடவடிக்கையைக்கொண்டு இன்னது தான் உண்மையென்று இரண்டு நிமிஷத்திலேயே கண்டறியும் இணையற்ற மதியூகியாதலாலும், மாரியாத்தாள் சொல்லும் மாயப்பேச்சில் நம்பிக்கையென்பது வெகு சிறிதும் வைக்காமல், முன்பின்பார்த்துப் பின் வருமாறு பேசினாள்:

"ஆயா! நீ ஏன் பேயாகக்கத்துகிறாய்? நீ என்னமோ அன்று கோபத்தாலே ஏதேதோ பேசினபோதிலும், நீ அதையெல்லாம் மனதிலே வைத்துக்கொண்டு மாயாளிதனஞ் செய்கிறவளல்லவென்று எனக்கு நன்றாய்த்தெரியுமே! ஆனாலும் எனக்கு என்னமோ இங்கு மனது ஒருவாறு பிடித்து விட்டது. கல்யாணஞ்செய்த கணவன் கண்தெரியாது ஓடி விட்டான், அண்ணன் ஒருபுறம் ஆகாவழி நடத்தையில் அளர்த்தப்பட்டுக் கொண்டிருக்கிறான். நான் மனு

ஷாளிடத்தில் வந்து தான் நல்லகதி என்ன அடையப்போகிறேன்! பிரம்மராக்ஷத னென்னமோ பிணம் பிடுங்கி வழக்கமானவனுயிருந்த போதிலும், அவனுடைய யோசனையும் அவனுடைய நிதானமும் வெகு சாவதானமாகவேயிருக்கின்றது! ஆதலால் நான் அவனுக்கு இணங்கி நல்ல நாளில் அவனைக் கல்யாணஞ்செய்து கொள்ளுகிற தென்று தீர்மானித்து விட்டேன். இப்பொழுது நான் புறப்பட்டு வருவதென்ருல் எவ்வளவும் அது சரியாய்த் தோன்றவில்லை" என்று ஜகன்மோஹன சிங்காரம் வெகு தந்திரமாய் மிகப்பக்குவமாய்ப் பேசினுள்.

இதைக்கேட்ட மாரியாத்தாளுக்கு எதுவும் தோன்றவில்லை. ஜகன்மோஹன சிங்காரத்திற்கு இவ்வளவு பேசத்தெரியுமென்னும் எண்ணம் கிழவிமனதில் நுழையவேயில்லை. ஜகன்மோஹன சிங்காரம் உண்மையாகவே இவ்வாறு பேசுகிருளா அல்லது பாசாங்கு செய்கிருளா என்று இருந்திருந்து கிழவிக்கு என்னென்னவோ மனதில் எதெதுவோ தோற்றம் நேரிட்டபோதிலும், அவள் காலத்திற்கேற்றபடி கபடநாடகஞ் செய்பவளென்று மாயக்கிழவி மனதில் பெருக்கும் புலப்படவில்லை. அதனுல் ஜகன்மோஹன சிங்காரம் சொல்வதெல்லாம் மிகச்சரிதான் என்று சிந்தையில் நினைந்து,

"அப்படியா அம்மா ஆனு அது சரிதான். நீ ரொம்ப ரொம்ப அதுஸ்டக் காரிதான்! உன்னெதேடி ஊரெல்லாம் அலெஞ்சிகிட்டு வந்தேன். அண்ணெக்கிபாத்தெனே அதானே! எங்கெங்கே தேடுவேன் எங்கெங்கே அலெவேன் என்னென்ன பாடுபடுவேன்! கண்ணெ காணெமே கண்ணுமணியெ காணுமே எண்ணு தூக்கம் புடிக்கலெ சோறு கொள்ளலே சுற்றி சுற்றி வந்து சுனையிலே தண்ணிகுடிச்சுட்டு போலாம் இண்ணுவந்தேன்! இங்கே தண்ணியெக் காணேம், கண்ணு இருக்குது" என்று கிழவி கதையாகப்பேசிவிட்டு, மறுபடியும் வருவதாய்ச்சொல்லி வழியைப்பார்த்துச் செலவு வாங்கிக் கொண்டாள்.

*                *                *

வேதனை படுவாளென்று வாதனைசெய்தால், சந்தோஷத்தில் மூழ்கித்தலைகால் தெரியாது பேசுகிருளேயென்று கிழவிக்கு இருந்த ஆச்சரியம் இவ்வளவவ்வளவன்று. இதனுல் மெய்மறந்து மதிமறந்து மலைமேலே வழிதப்பி வானம்பார்த்துச்செல்லும் பேன்றலைக்கிழவியை, திடீரென்று நால்வர் கைப்பிடித்து,

“ஹா ஹா ஹூ ஹூ! எங்கே எங்கே கிழவி, எங்கேபோறே
எங்கே ஓடுறே! ஹா ஹா! மாரியாத்தா கூழுவாத்தா, மாரியாத்தா
கும்பம்போட்டா, வந்தெயா வந்தெயா ஆயா, நாயா, பேயா ஓடியா.
எங்களோடவேவா ஹா ஹூ” என்று கத்தாமற் கத்தி கழுதை
யாய்க் கத்தினார்கள்.

மந்திரம் செய்யும் கிழவிக்குத் தடாரென்று இடிதலைமேல்
விழுந்த மாதிரி நாலுபக்கமும் வந்து மூலைக்கு மூலை இழுக்கவும்
நைந்தகைகள் ‘பிஞ்சி’ப்போம் வண்ணமிருந்தது. திடுக்கிட்டு, கிழ
விக்கு உடம்பும் குரலும் நடுக்கிட்டு,

“அடே பயகளா, காறி மூஞ்சான், கருவாடு சுட்டான், வேலை
யெத்தான், விண்ணாணப்பேச்சான், எங்கடா வந்தெங்க என்னடா
சமாசாரம்! சாவுறகெழிவியெ காலுவாரப் பண்ணுறீங்களே, என்
னடா சமாசாரம் சொல்லுங்கடா, பாவிங்க சும்மா நில்லுங்கடா”
என்று மாரியாத்தாள் அவர்களுக்குமேல் ‘காச்மூச்’ என்று காக
மாய்க்கதறினாள்.

“எங்க ராச்சசன், பும்மராச்சசன் புடிச்சுகினு வரச்சொன்னான்
உன்னெகையோட! வாவா! குருவி கொயம்பு இருக்குது, கொக்கு
கறி இருக்குது, பூனைபொரியலும் புலி தொவட்டலும், நரி பச்சடி
யும் நாகூட்டுகெறியும் ரொம்ப ரொம்ப இருக்குது. ரொம்ப நண்ணா
இருக்குது! அப்படியே வச்சி இருக்குறோம்! ஆனைரத்தம் பானை
யிலே ஊத்திவைச்சி இருக்கிறோம், காபியாகுடிக்கலாம் காஞ்ச
மூஞ்சிக்கெயிவி! ஓடியா ஓடியா பொழுதுவெடிஞ்சுது, பாடிவா
பாடிவா, காபிகுடிக்கணுமே, நீ மனுசியாச்சே! பாதிராச்சசி, பாதி
மனுசியாச்சே! காபிக்கு என்ன ஒணும்! கரடிரத்தம் ஒணுமா கழு
தைபாலு ஒணுமா? பொயுது வெடிஞ்சுது! வெய்யில் காகா எண்ணு
றான். குருவிங்க கூவுது குயிலுங்கபாடுது! கெயிவி நீ கொஞ்சம்
பாடுபாக்கலாம், கொஞ்சம் ஓடு பாக்கலாம்! பாடிக்குனே ஓடு பாக்
கலாம், ஓடிக்குனே பாடு பாக்கலாம்!” என்று வாயாடும் பேயாட்டக்
கழுதைகளாகிய பிரம்மராக்ஷஸனுடைய * பிடுங்குணி வேலைக்காரர்
கள் பிரமாதமாய்ப் பேசினார்கள்.

உடனே அனைவரும் புறப்பட்டு, தாளம் தட்டிக்கொண்டும்
தப்பட்டையைக் கொட்டிக்கொண்டும்,

---

* பிடுங்குணி=பிடுங்கித் தின்பவர்கள்

ஜாம் ஜாம் ஜாம் ஜக ஜாம் ஜாம் ஜாம்
ஜக ஜாம் ஜாம் ஜாம் ஜக ஜெணு ஜாம்
பொழுது வெடிஞ்சுது பொருவெ புடிக்கணும்
செயுவி வந்துச்சி கண்ணுலமுடிக்கணும்
ஜாம் ஜாம் ஜாம் ஜக ஜாம் ஜாம் ஜாம்
ஜக ஜாம் ஜாம் ஜாம் ஜக ஜெணு ஜாம்
மாரியாத்தாவந்தா கண்ணுலம் எண்ணெக்கு கைகூடுமோ
மாரியாத்தாவந்தா கண்ணுலம் மண்ணு பூடுமோ
மலெமுழுங்கி மாரியாத்தாளுக்குக் கதவு சுண்டாங்கி
தலெமுழுங்கி ராச்சசனுக்கு உயிரு சுண்டாங்கி
ஜாம் ஜாம் ஜாம் ஜகஜாம் ஜாம் ஜாம் ஜகஜாம் ஜாம் ஜாம் ஜாம் ஜகஜாம் ஜாம்.
நடுக்கி பேசினுலும் மாரியாத்தாவேலே முடுக்கிச்செய்வாளே
அடுக்கி பேசினுலும் கெயிவி அநியாயம் ரொம்ப செய்வாளே
பேனுதலெகெயிவிக்கு மானுதலெகறியெ போடுவோம்
கூனுமுதுகு கெயிவிக்கு குதிரெ கொயம்பு ஊத்துவோம்
ஜாம் ஜாம் ஜாம் ஜகஜாம் ஜாம் ஜாம் ஜகஜாம் ஜாம் ஜாம் ஜக ஜாம் ஜாம்.

இவ்விதமாக அக்கிரமம் மிகுந்த அநியாயச் செய்கையோர், தாளம் தட்டி மேளம் கொட்டி வழியிலே வந்தவர்கள் தலையைத் தட்டி, ஆட்டமாடிக்கொண்டும் பாட்டைப்பாடிக்கொண்டும், கிழவியை அழைத்துக்கொண்டு மெதுவாகக் கெட்ட ராக்ஷதனிடம் கொண்டுபோய்ச் சேர்த்தார்கள்.

பிரம்மராக்ஷதன் மாயக்கிழவியை ஓயாதுபார்த்து, பிரம்மானந்தங்கொண்டு,

“ஆயா, கெயவி, இல்லே இல்லே கோவிச்சுக்காதே கொமரி, இங்கே மறுபடியும் வாறேன் வாறேன் இன்னு சொல்லிட்டு, எங்கேயோ மானம்பாத்துக்குனு போனுயே! என்னு சமாசாரம் அவ என்னு சொன்னு, அவ ஏது சொன்னு?” என்று ஆத்திரத்தோடே அவசரமாய்க்கேட்டான்.

இதைக்கேட்ட மாரியாத்தாள் “அடே ராச்சசா, ராத்திரி இங்கே வந்தேனேடா! பத்தப்பச்சடியும் கொயுப்பு மொத்தையும் எலெயிலேவைச்சி சோறு படையலு போட்டாங்க! அத்தாலே எனக்கு பித்தம் சூடு மெத்த ஆய்போயி, தூக்கம் புடிக்கலெ, எளெப்பு

வாங்கலெ அத்தொட்டு நானு பொயுது வெடியுறத்துக்கு முன்னியே எயுந்துபோயி கல்லெ பேத்து வளெயெத்தோண்டி கொயைக்குள்ளோ நொயஞ்சி சித்திராங்கி நாரியை மெத்த சீக்கிரத்திலே கண்டு புடிச்சனே! ஆனாலும் அடே ராச்சசா, நீ அவளெ மெத்த பத்திரமா வச்சிருக்குனு இருக்குறெயே! நீ கெட்டிக்காரன்" என்று எட்டுத்தரம் மாரியாத்தாள் இடைவிடாமல் சொன்னாள்.

"கண்ணாலத்துக்கு என்ன சொன்ன?" என்று ராக்ஷதன் கிழவியை காபராவோடு கேட்டான்.

"அடே, ராச்சசா, அதிஸ்டக்காரன்டா நீ! நான் நெனக்கலெடா அப்படியிண்ணு! அவரொம்ப இஷ்டமாயிருக்குறாடா உன்னெ கட்டிக்கணும் இண்ணு!" என்று மாரியாத்தாள் ஆச்சரியக்குரலோடு ஆவேசமாய்ச் சொன்னாள்.

"அப்படியா, அப்படியா! மாரியாத்தா நீ தானேடீ எனக்கு மத்தாப்பைக்கொண்டாந்து கொடுத்தே! அவ என்ன மின்னுறாடீ, அவ என்ன ஜொலிக்குறாடீ! மாரியாத்தா, நீ பண்ண தயவுதானே! உனுக்கு நண்ணா கூழுவாக்குறேன், உனக்கு நண்ணா கும்பம்போடுறேன். கண்ணாலத்துக்கு நீதான் வந்து கொடம் ஒடெக்கணும்" என்று பிரம்மராக்ஷதன் பிரமாதயாய்ப்பேசினான்.

"அது என்னடா அது! கண்ணாலத்துக்குக் கொடம் ஒடெக்குறது! அது நானு எங்கேயும் கேக்கவேயில்லெயே செத்தா அல்லாடா கொடம் ஒடெக்குறது மடப்பயலே" என்று மாரியாத்தாள் பேச்சாலே சவுக்கடி கொடுத்துப்பெருமையாகப்பேசினாள்!

"பின்னெ சொன்னாளே அவ" என்றான் பிரம்மராக்ஷதன்.

"இன்னம் என்னடா சொன்ன?" என்றாள் மாரியாத்தா.

"பச்செ பருப்பு மசிச்சி, அவுத்திக்கீரெ கொயம்பு பண்ணி"

"இன்னம் என்னடா சொன்ன?"

"பாடையிலே வளத்தி ஊருகோலம் வந்து உம் உம் உம்"

"இன்னெம் என்னடா குட்டிசொவுரா போனவனே?"

"பாடையிலே வைச்சி ஊக்கோலம் வந்து பணிச்சவனெ கூப்பிட்டு பானெ ஒடெச்சி நெருப்பு வைச்சிஇஇஇ"

"சொல்லுடா சீக்கிரம், சொரணெ கெட்ட சோணங்கிநாயே"

"கருமாந்திரம் பண்ணுறதாம்."

"அதுதானேடா! அறிவு கெட்டவனே"

"கருமாந்திரம் தான் கண்ணாலத்தின்பேரு"

"கண்ணாலம் இண்ணு ஆருருசொன்னது கயுதை மவனே?"

"அவதான் சொன்னு"

"நீதான் கேட்டே"

"மனுசாள் வயக்கம் எனுக்கென்ன தெரியும்?" என்று மயக்கத்தோடு பேசினான் தியக்கங்கொண்ட ராக்ஷதன்.

"மட்டிப்பயலே உன்னெ ஏமாத்தப்பாக்கிறுப்போலே யிருக்குதுரு. குட்டிச்செவுருப்போனவுனே உன் குடியெக்கெடுக்கபாக்கிறுப்போலே,யிருக்குதுரு! அவ கெட்டிக்காரிடா, நான்மந்துரக்காரியானா அவ பெரிய தந்துரக்காரிடா, நீ யேமாந்துபோவ போலேயிருக்குதுரு!" என்று மாரியாத்தாள் கிழவி சாக்கிரதைப்பார்வையோடு ஜம்பமாய்ச்சொன்னாள்.

"போடீபோ, கெயிவி என்னே ஏமாத்த உன்னாலேதான் முடியுமா அவளாலேதான் முடியுமா? கெவிக்குள்ளேவந்து கொயைக்குள்ளே நொயஞ்சி, அவளுக்கு ஓதவி ஓத்தாசெ யெவங்கதான் பண்ணப்போறுங்க! அவ எப்படிதான் தப்புச்சிகினு வெளியே போவ முடியும்! என்னு ஆயா நீயென்னுமோ ஓயாதே பேசுறுயே?" என்று பிரம்மராக்ஷதன் பெருமை காட்டிப் பேசினான்.

"அப்படியா! அது சரிதான், அது சரிதான் ஆனு உனதுபுத்தி ஓலக்கெ கொயுந்து! காவ என்னுமோபலந்தான், அவயோசனே யுக்தியும் வெகுபெரிசுதான்! அது இருக்கட்டும் அது இருக்கட்டும், அவுளுக்கு இஸ்டம் இருக்குறுப்போலேதான் என்னண்டை சொன்னு. ஆனு நீ சொல்வதைப்பாத்தா கவடு பண்ணுவாப்போலே இருக்குதெ. கண்ணுலம் எண்ணெக்கு இன்னுதான் சொன்னு? அத்தெயாவது சொல்லித்தொலயே" என்று மாரியாத்தா ஆக்ரோஷத்தோடே கேட்டாள்.

"எண்ணெக்கு தீவாளியண்ணெக்கு கண்ணாலம் என்று சொன்னு. தீவாளி சேந்தாபோலே அமாவாசெ வருதே அண்ணெக்குக் கண்ணாலம் இண்ணு சொன்னு' மாரியாத்தா, அண்ணெக்கு நீ வந்துடு நீ வந்துடு ஆனேக்கறி சொல்லியிருக்கிறேன், பூனே பொறிய பண்ணுவாங்க. பொருபச்சடி செய்யுவாங்க நீ வந்துடு மாரியாத்தா, கொடம் ஓடைக்க வந்துடுறி மயிமெயாத்தா. மறுந்துருதே மாரியாத்தா மறந்துருதே மயிமையாத்தா" என்று கல்யாணம் அப்போதுதான் ஆய்விட்டதுபோல் தலைவிரிகோலமாய்த் தடபிடல் செய்தான், தலைகால் தெரியாத தறிதலைராக்ஷதன்.

"குட்டிச்சொவுரா போனவுனே, கொடம் ஒடெக்க, கொடம் ஒடெக்க இன்னு மறுபடியும் மறுபடியும் மட்டிப்பேச்செப்பேசுறெயே மடப்பயலே! இன்னம் என்னடா சொன்னு? அல்லாத்தேயும் சொல்லிடு. அயகு என்னமா இருக்குது இண்ணு அறிஞ்சு சொல்லுறேன்" என்று மாரியாத்தாள் உதடுதுடிக்க உடம்பு பதற ஒரே பேச்சுப் பேசினுள்.

"ஆர் அயகை நீ அறிஞ்சு சொல்லப்போறே! அவ அயகையா, என்னு அயகையா, உன்னு அயகையா?" என்று பிரம்மராக்ஷதன் பிரமாதமாய்க் கேட்டான்.

"அயகு இருக்கட்டுண்டா அறிதலேப்பயலே, இன்னும் என்னுத்தெடா சொன்னு? சொன்னத்தெயெல்லாம் சொல்லிடுரு சுடுமூஞ்சிப்பயலே" என்று மாரியாத்தாள் மஹாகடூரமாய்க் கேட்டாள்.

"எல்லான் தான் சொல்லிட்டேனே! இன்னம் என்னுத்தெ சொல்லுறது! ஒண்ணெ மாத்திரம் மறந்துட்டேன். அது என்னு இண்ணு பாவக்கா பொரிச்சி இண்ணு பச்செபருப்போடே சேத்துச் சொன்னு. அது தான் மறுந்துட்டேன். வேறே ஒண்ணும் இல்லெ, வேறே ஒண்ணும் இல்லெ" என்று பிரம்மராக்ஷதன் மறந்ததைக் கியாபகப்படுத்தி வெகுபக்குவமாய்ச் சொன்னுன்.

இதைக்கேட்ட கிழவிக்கு ஆச்சரியம் மிகுத்துப் பேச்சு மூச்சில்லாமல் அரை நிமிஷம் திகில் பிடித்ததுபோல் நின்ருள்! இப்படிப் பார்த்தாள், அப்படிப்பார்த்தாள், தப்பிலிக்கிழவி! ஆகாயத்தை நோக்கி அரை நிமிஷம் யோசித்தாள்; அவள், தலேயைக்குனிந்து பூமியைப்பார்த்துப் பூராயமாய்ச் சிந்தித்தாள். என்ன செய்வதென்றும் அவளுக்கு விளங்க வில்லே, ஏது செய்வதென்றும் அவளுக்குத் தோன்றவில்லே. சுற்றி வந்தாள், கிழவி, திகைத்து விழுந்தாள்! ஓம் மிண மிண என்ருள், ஆம் தகதக என்ருள்! மந்திரத்தால் மாங்காய் விழுமோ தந்திரத்தால் தலேயறுமோ பார்க்கலா" மென்று மெத்தச் சலித்துச் சித்தம் நொந்தாள், முற்றும் மோசம்செய்த மூதேவிக் கிழவி! பின்னர் எழுந்து, சூரியனேப்பார்த்துத் தரையில் விழுந்து,

"ஆகாஷக்கண்ணே என்னு மந்தரத்துக்குப் பலம் பண்ணே" என்று கும்பிட்டாள் கொடும் நீலி. மடியிலிருந்து ஒரு பொம்மையையெடுத்து மண் மீதுவைத்து,

"மந்திரக்காளி மாயக்காளி,
தந்துரத்தைப்போக்கு தயவாளி" என்றும்
"மலையாள பகவதி மலையாளபாரதி
தலைபத்துரம் காத்துவிடுதயாநிதி"

என்றும்,

"கறுப்பண்ணசாமி என்னெக் காப்பாயே
கடுவத்தனை பொண்ணின் தந்திரம் நீ பாப்பாயே"

என்றும் பலவிதமாய் மந்திரங்கள் செய்து பிரம்மராக்ஷதனுக்குத் திருஷ்டி சுழற்றி, அவன் தலையில் எச்சிலை மஹாப் பிரசாதமாய்த் துப்பி, மாரியாத்தாள், குரலைக்கனைத்துக்கொண்டு, மகிமையான பிரசங்கத்தை மனோ வேகமாய்ச்செய்யத் தொடங்கினாள்:

"பிரம்ம ராக்ஷஸா, அடே இன்னும் இங்கு வந்துருக்கும் காறி மூஞ்சான், கருவாடு சுட்டான், வேலையெத்தான், விண்ணாணப் பேச்சான், எச்சிதுப்பினான், எகிறி உயுந்தான் முதலானவுங்களே, நானு இங்கே உங்களுக்குப் பெரசங்கம் ஒண்ணு செய்யப்போறேன். அங்கே அங்கே மனுசாள் செய்யுறப் பெரசங்கத்தைக்கேட்டு, நானும் கொஞ்சம் கத்துகுனு வந்துருக்குறேன். என்னதப்பு இருந்தபோதுலும், கோவிச்சுக்காதே மன்னிச்சுடுங்க. நான் மந்துரத்திலே பெரிய மலைமுழுங்கி இண்ணு உங்களுக்கு நண்ணுதெரியும்! இந்த எரிமூஞ்சி ராச்சசன் எனுக்கு மந்துரம் கத்து குடுத்தாலும் அவனுக்குக் கள்ளம் கவடுதெரியாது தந்துரம் பண்ண ஒண்ணுமே தெரியாது! தந்துரம் இல்லாகிட்டிப்போனா மந்துரம் என்னா ஆவுறது! கொக்கு கொயும்பை குருவி ரத்தத்தாலே தாளிக்கணும். கோவேறு கயுதைக்கறியெ குதிரெ ரத்தத்திலே ஊறவைக்கணும்! அப்போதான் அது அது அயகா இருக்கும் நண்ணா இருக்கும். உப்பு போடாபோனா ஊறுகா நண்ணாயிருக்குமா, பெருங்காயம் போடாபோனா ரசம் நண்ணாயிருக்குமா? அதெப்போலவே, மந்துரம் பண்ணணும் அதோடே தந்துரம் கலக்கணும், கள்ளத்தனம் பண்ணணும் காரியத்தை முடிக்கணும்! நம்ம ராச்சசனுக்கு ஒண்ணும் தெரியாது. அத்தாலே தான் அவன் மந்துரம் பலிக்கலெ, அத்தாலே தான் என் மந்துரம் பலிக்குது!

கனவாங்களே, காறி மூஞ்சாங்களே, நான் சொல்லுவதெ கவனத்தோடே கேளுங்க! அப்புடி பாக்காதிங்க இப்புடிப் பாக்காதிங்க மறந்துபோயி மண்ணுபோவாதிங்க. அந்த பொம்மனாட்டி, தித்த

ணைவுண்டு பொம்மனாட்டி, ஜாண் நீளம், விரபருமன் அவ என்னா என்னா இந்திரஜித்து மயேந்திரஜித்து பண்ணாரு பாருங்க கனவாங்களே, கருவாடு சுட்டாங்களே! கேளுங்க! இந்த நம்மராச்சசன் எப்படியோ ஏமாந்து விட்டான் அவபேச்சே கேட்டு. அவசிரிப்பை பாத்து! இன்னும் அவசொல்லுற மாதிரியெல்லாம் நம்பிகினு நம்பிகினு இருந்தா நாமெல்லாம் நாசமாய் தான் பூடணும் அல்லார்தலெக்கும் அவ வச்சுடுவா பெரிய தாம்பூலம்! ஆதலாலே, கனவாங்களே, வேலையெத்தாங்களே, நீங்களெல்லாம் இதெகவனிச்சு இப்பொவே அவகண்ணாலம் முடிக்கணும் (பேஷ்பேஷ் சபாஷ் என்று அனைவரும் கரகோஷம் செய்தார்கள்) நான் சொல்லுறேன், இப்பொவே அவகண்ணாலம் முடிக்கணும் இல்லாகிட்டிப்போனா அவளையாவது இப்போவேயெடுத்து முயுங்கிடனும். இது செய்தாதான், ராச்சசனே, கனவாங்களே, நீங்களும் பொயெப்பிங்க, நானும்பொயப்பேன். ஆனாபடியுனாலே, கனவாங்களே, ராச்சசனே, நீங்களெல்லாம் இதெப்பத்தி ஒசனைபண்ணா நண்ணா இருக்கும். இதோடே என் பொரசங்கத்தெ நிறுத்துகிறேன்".

இவ்விதமாக மாரியாத்தாள் பேசியானதும் "நான் முடிச்சுடுறேன் கண்ணாலம்" என்று எங்கேபார்த்தாலும் ஒரே கோஷ்டமாய் எல்லாரும் கூச்சலிட்டு மலைச்சந்தில் * ஒலியெழச்செய்து விட்டார்கள். கல்யாணம் தீபாவளிவரைக்கும் நிறுத்திவைக்காது, உடனே செய்துவிடுவதற்கு ஏற்பாட்டை உறுதியாகச் செய்யவேண்டுமென்று அனைவரும் ஒரேபேச்சாய்ப்பேசி மாமிசக்காபியை தாமஸமில்லாது குடித்துத் தம்தம் இடங்களுக்குத் தடபிடலாய்ச் சென்றுவிட்டார்கள்.

---

* ஒலி=சந்தடி.

# பதிஞேராவது அத்தியாயம்.



ஆடம்பராசாரி உள்ளத்தில் அழுதுக்கொண்டே உதட்டில் சிரித்துக்கொண்டே அடுத்தவூரில் அழகியமடத்தில் அமைந்த தெருத்திண்ணையில் ஆயாசந்தீர அப்பாஎன்று உள்ளம்பொங்கி உட்கார்ந்துவிட்டார்! இடுப்பில்கட்டிய தோவத்தி ஒன்றும் மேலேபோட்ட அங்கவஸ்திரம் ஒன்றும் துணியில் சொருகிய மணிபர்ஸில் தப்பில்லாமல் முப்பதுரூபாய் நோட்டும் தவிர வேறொன்றும் அந்தச்சமயம் அகப்படாது. மகன்போனசங்கதி மனதை வருத்தவும், மனைவியினுடைய ராக்ஷசத்தன்மை மரணத்துக் கொத்ததுன்பத்தை இருதயத்துக்குள்ளே யிருந்திருந்து உண்டாக்கவும், எண்ணுத எண்ணமெல்லாம் எண்ணி யெண்ணி அவர் ஏக்கமுற்றிருந்தார். அலங்காரபட்டணத்திலேயே அவர்சரியாய்ச் சாப்பிடாது, தாகத்தால் இளைப்புநேரவும் பசியினுல் களைப்புநேரவும், மடத்துத் திண்ணைமேல் 'மல்லாந்து' கொண்டார்! சற்று கண்ணயரும் சமயத்தில் மடத்துள்ளிருந்து, ஒரு பிராமணக்கிழவர் வெளியேவந்து, உரத்தகுரலுடன் ஓயாதுகத்தி,

"யாரைபா, அங்கே பூஜைசெய்கிற மடத்திலே மீசைவைத்துப் படுத்தாயே! குட்டைத் திண்ணையிலே ஒட்டிக்கொண்டு நீண்ட ஆண்பிள்ளை நெடுகப்படுத்துக்கொண்டால், திண்ணையைப் பெருக்குவது எப்படி? தரையை மெழுகுவது எப்படி? கோலம்எப்படிப் போடுவது? குருக்கள் எப்படிகும்பிட்டுத்தொலைவது? இவன் மீசையும் இவன்கிருதாவும், இவன்தோவத்தியும் இவன் 'வல்லவாட்டும்' பார்த்தால் இவன் ஒருநாளும் திண்ணையிலே படுத்தறியான், தெருவிலே தூங்கறியான்போலேயிருக்கிறது! பட்டுக்கிடப்பான் எக்கேடுகெட்டால்நமக்கென்ன? யாராயிருந்தால் நமக்கென்ள? அவன் போத்துராஜாவானுலும்சரி 'டல்டம்பர்,' அவரண்ணன் டிஸ்கவுன்ட் மாஸ்டர், அவரண்ணன் இன்சால்வென்ட் மாஸ்டர், எவரானுலும்சரி! எனக்கவசியமில்லை. யாரடா அது? எழுந்திரு இங்கே படுக்கக்கூடாது. என்ன, சொல்லச் சொல்லப் பேசாதிருக்கிருயே! இவன் இங்கே குடித்துவிட்டுக் கும்பகர்னன் சேவிக்கிருப் போலிருக்கிறது. எழுந்திரு எழுந்திரு! எழுந்திராவிட்டால், கோமயத்தால் அலங்கரித்து

விடுவேன், இல்லாவிட்டால் சாணத்தால் அபிஷேகம் செய்துவிடுவேன்" என்று பிரமாதக்கூச்சலைப் பிரமாண்டமாய்ச்செய்து, கையைத்தட்டி ஆடம்பராசாரி முதுகைத்தட்டி அரைநாழிகை அட்டகாசம் செய்தார்.

இந்தக் கூச்சலிலும் தட்டலிலும், இளைப்பும் ஒடுங்கிக் களைப்பும் வாங்கி ஆடம்பராசாரியெழுந்து உட்கார்ந்து ஐந்து நிமிஷம் வரைக்கும் இன்னதென்று பிடிபடாது, ஆகாயத்தையும் பூமியையும் அலரவிழித்து நோக்கிப் பிறகு ஒருவாறு நிதானித்து, ஐயரைப் பார்த்து, "ஏன் ஐயரே! எரிந்த மூஞ்சியைகாட்டி என்னென்னமோ உளறிக்குளறுகிறீரே! ஒரு நிமிஷமாவது ஹரி சிந்தனை செய்யாமல், இளைத்துவந்த என்னை இடுப்பொடியப் பேசுகிறீரே! உமது பூஜை வயிற்றுப்பூஜை தான் போலிருக்கிறது! சித்த சுத்தியில்லாமல் சிவபூஜை யென்னத்திற்கு என்று தெலுங்கர் ஒரு பாட்டைத்தெளிவாய்ப் பாடுவார்கள்! அதுபோல், ஆபத்தில் வந்தவனை அடுத்துக் காவாமலும், கோபத்தையடக்கிக் குருபூஜை செய்யாமலும் பொங்கலைச்செய்து மொத்தையடித்து விபூதியெடுத்து மேனியெல்லாம் பூசி, கற்பூரம் கொளுத்தி மணியடித்து, ஜீவகாருண்யம் சிறிதேனுங் காட்டாது, பேருக்குமாத்திரம் மடம், பிரதாபத்திற்கு மாத்திரம் பிராமணுள் என்று படாடோபம் செய்து பாழாய்ப்போவதில் என்ன பயன்? தேகம் இளைத்து மனது வருந்தி தீர்த்தயாத்திரை செய்யப் புறப்பட்டு நேத்திர மிழந்தவனைப்போல் வியர்த்து விதிர்விதிர்த்துத் திண்ணையில் வந்து படுத்தால் தண்ணீரை ஊற்றி, கோமயத்தைத் தெளித்துச் சாணத்தால் அபிஷேகம்செய்து ஜாடித்து விடுகிறேனென்கிறீரே! இதென்ன பிராமணத்துவமா போம் ஐயாபோம்" என்று மூச்சைப்பிடித்து முக்கால் மணிநேரம் பேச்சைப்பேசி இளைப்புவந்து மறுபடியும் படுத்து விட்டார்.

இதற்குள்ளாக மடாதிபதிஸ்வாமிகள், பூஜைசெய்யும் குருக்கள், சமயல்செய்யும் மொட்டைப்பார்ப்பாத்தி, சங்கடப்படும் புரோகிதர், எல்லோரும் வந்து கூட்டமாய்ச்சேர்ந்து, வேதகோஷ்டம்போல், பூதகோஷ்டமிட்டு,

"அடே! அவனே, இவனே, கட்டையிலேவைப்பான், பாடையிலேவைப்பான், சூத்திரப்பயல், குடிகாரப்பயல், மடம் கெட்டுப்போச்சு, தீட்டுபட்டுப்போச்சு, கும்பாபிஷேகம் பண்ணணும், புண்யாவசனம் பண்ணணும், இண்ணைக்கு ஏகாதசியன்னே! இந்த தூர்த்

தஷ்டை பய எங்கே இருந்து வந்து சேந்தான். இவன் நாசமாப் போவ, தளிகையாவ பிம்மாலெக்கு என்ன பண்றது? அடே எழுந்திருரு, ஏளிடுரு" என்று பெருங்கூச்சல்போட்டு, ஆடம்பராசாரியை அதட்டி மறுபடியும் எழுப்பி விட்டார்கள்.

ஆடம்பராசாரி எழுந்ததும், "ஏ! முட்டாள் பயல்களே! எதற்காக அப்படி இரைந்து அல்லல் படுத்துகிறீர்கள்! ஒருவன் படும் கஷ்டம் உங்கள் மனதில் உறைக்காது போனதென்ன? இவ்வித குணம் பொருந்திய நீங்கள் பிராம்மணர்களென்றும் உபயவேதாந்தப்ரவர்த்தகாசாரியர்களென்றும் என்னென்னமோ பெயர்வைத்துக்கொண்டு அட்டகாசம் செய்கிறீர்களேயல்லது உண்மையில் உங்களிடத்தில் உள்ளத்தூய்மை யென்பதேகிடையாது. நீங்கள் மடாதிபதிகளாக மாட்டீர்கள்! உங்களுக்குள் கெட்டவர்கள் மடைப்பள்ளிப்பூனைகள், நல்லவர்கள் மடைப்பள்ளிராயர்கள்! நான் இங்கு வந்து சற்றுநேரம் களை நீங்குவதற்குள், எத்தனை பெத்தனை தொந்தரைசெய்து விட்டீர்கள், எத்தனை யெத்தனை விபரீதம் விளைத்து விட்டீர்கள்! நீங்கள், ஹா, மஹா பொல்லாதவர்கள், தத்துவம் ஒரு சிறிதும் கல்லாதவர்கள், தர்மத்தில் அரை நிமிஷமேனும் நில்லாதவர்கள்" என்று ஆத்திரத்தால் பேசிவிட்டு அப்புறஞ் சென்றார்.

ஆடம்பராசாரி பேசும் 'அமர்க்களத்தில்' ஐயர்களெல்லாரும் தைய தையவென்று கையைப்பிசைந்து கொண்டும் தலையைத்திருப்பிக்கொண்டும், முகத்தை முறுக்கிக்கொண்டும் முன்னங்காலைப் பின்னிக்கொண்டும் கடு கடு வெடு வெடென்று சுடு சுடுப்பேச்சைச் சுள்ளாப்பாய் பேசிக்கொண்டிருந்தார்கள். இவர்களுள் 'அப்பளாசாரி,' 'ஆமவடையாசாரி' என்கிற இருவர் மாத்திரம் 'திண்டி' பெருத்த தீவிர பசியுடையவர்களானபோதிலும், உள்ளத்தில் கொஞ்சம் உத்தம சிந்தையுடையவர்கள், நல்லவை நாடி ஞானம் பெற வேண்டும், தொல்லைபோக்கித் * தூய்மையடைய வேண்டும் என்னும் எண்ணம் மாத்திரம் அல்லும் பகலும் அவர்கள் மனத்தில் அகலாக் குடிகொண்டிருந்தது. ஆதலால், அப்பளாசாரி, ஆமவடையாசாரி என்ற இருவர்களுக்குமாத்திரம் ஆடம்பராசாரியிடத்தில் சிறிது அபிமான முண்டாயிருந்தது.

மேலும் ஆடம்பராசாரியைப் பார்க்கும்போதே அரசகுமாரனய்த்தான் இருக்கவேண்டும், காலகதியால் அவ்வாறு கவலையடைந்

* தூய்மை=பரிசுத்தம்.

தானென்று நன்றாய் அவர்கள் மனதில் தெளிவாய்ப் புலப்பட்டது. உடம்பில் களை வந்து மனதில் துயர்புகுந்து மாறுடுஞ் சமயத்தில் காலோடச்செய்வது ஏலாதகாரியமென்று பண்டியில் பெருத்த போதிலும் உள்ளத்தில் மிகுத்த உத்தமர்களான அப்பளாசாரி ஆமவடை ஆசாரி இருவரும் ஆடம்பராசாரிக்காக அவர் பின்னே அவசரமாய் ஓடத்தலைப்பட்டார்கள். மூச்சுவாங்கவும் பேச்சு புரளவும், ஓட்டமென்பது ஓட்டம் பிடித்ததுபோல், ஒரே ஓட்டமாய் ஓடி ஐந்து நிமிஷத்தில் ஆடம்பராசாரியைப் போய்ப் பிடித்தார்கள்.

"அங்கே படுத்தின பாடு ஐயனுக்கே பிரீதி! இங்கும் ஏன் ஐயா நீங்கள் இப்படி ஓடி வருகிறீர்கள்?" என்று ஆடம்பராசாரி சிறிது ஆச்சரியக்குரலாலே அதட்டிக்கேட்டார்.

"ஐயா, பெரியவரே, நீங்கள் யாதொன்னுக்கும் அஞ்சவேண்டாம்! எங்களையும் அவர்களைப்போ லெண்ணி ஏளனஞ் செய்யவும் வேண்டாம். உங்களுக்கு உடம்பு என்னமாயிருக்கிறது?" என்று அந்தணர்களிருவரும் சிந்தை பொருந்தச் சீராட்டிக் கேட்டார்கள்.

"உடம்பு இருக்கிறதாவது? உண்டியில்லாமல் திண்டாடுஞ் சமயத்தில் உடம்பு இருப்பதைப்பற்றி உருகியுருகிக் கேட்பானேன்?" என்று ஆடம்பராசாரி அரைக்கோபத்தோடு அமைதியாகச் சொன்னார்.

இதைக்கேட்ட அப்பளாசாரி ஆமவடை ஆசாரியிருவரும்,

"நோக்கென்ன! அவாளைப்பற்றி நோக்கு ஒருகவலையும் வேண்டாம். எங்காளாற்றுக்கு ஏள்ளிவிடு. தளிகை பெருமாளமுசை செய்தானதும் நோக்கு சாதிச்சுடுறோம். நீயாதொன்னுக்கும் அஞ்சாமே நம்ம ஆத்துக்கு வந்துடு. தளிகை அமிசைசெய்தானதும் வேணுமென்னு ஏள்ளிப்போடலாம்" என்று அப்பளாசாரியும் ஆமவடையாசாரியும் மிகவும் ஆசைநேசத்தோடு அருமையாய் அழைத்தார்கள்.

ஆடம்பராசாரி, இந்த சமயம், அவர்களுக்குயாதொன்றும் பதில் சொல்லாமலும் அவர்கள் கூப்பிடுவதைப்பற்றி வெகு சிறிதும் சிந்தியாமலும், ஆகாயத்தைப்பார்த்தார், பூமியைப்பார்த்தார், சுற்றிப்பார்த்தார், விழித்துப்பார்த்தார், இடுப்புச்சொருகலை இழுத்துப்பார்த்தார். விழிக்கிறார், திகைக்கிறார், ஒன்றுஞ் சொல்லாமலே அவர் துடிதுடிக்கிறார்! முடிவு என்னவென்றால், முப்பதுரூபாய்

எப்படியோ போயிற்று, எவனோ திருடிக்கொண்டுபோய் விட்டான் என்பது தான். ஐயோ! கையிலிருந்த காசையும் காகம் பறித்துக் கொண்டுபோய் விட்டதே யென்று ஆடம்பராசாரி மனதில் அதிக கவலைப்பட்டு, "உள்ளதும்போச்சே நொள்ளைக்கண்ணு என்று உம் மிடம் அவஸ்தைப்படவேண்டியாயிற்றே" என்று ஐயர்களை நோக்கி அவதிப்பட்டார்.

"என்னுங்காணும் எழவு கொடுக்கிறீர்?" என்றார்கள் ஏதும் தெரியாத ஏழைப்பார்ப்பார்.

"என்ன ஸ்வாமிகளே, நீங்களென்னமோ நல்ல மனதுடைய வர்கள். நான் படும் இளைப்பைக்கண்டு நாய் படும் பாடு பட்டு என்னைத்தேடியிழுத்துப்போக இங்கு வந்தீர்கள். கையிலிருந்த காசும் எப்படியோ காற்றாய்ப்பறந்து விட்டது! எனக்குச் சாப்பாடுபோட்டால் ஏதாவது செலவுக்கு எப்படியாவது கொடுத்திருப்பேன்! என் அதிர்ஷ்டத்துக்குமேல் உங்கள் அதிர்ஷ்டம் குபேரசம்பத்தாய்க் குடிவிளங்குகிறதே! என்ன செய்வேன்! எங்குபோயிற்று! எப்படிப் போயிற்று! வானம்பாடிக் குருவி தூக்கிக்கொண்டு வானத்தில் பறந்துவிட்டதா? மஞ்சள் குருவி தூக்கிக்கொண்டு மறைந்து போய் விட்டதா? அல்லது மடத்திலிருந்து வடைப்பொறுக்கிகளாகிய மடப்பார்ப்பார் (ஸ்வாமிகளே, என்னை மன்னியுங்கள், நீங்கள் புண்ணியாத்துமாக்கள்! நான் உங்களைச் சொல்ல வரவில்லை.) அங்கே நின்றுகொண்டு ஆயிரம் ஏப்பம் விட்ட, மடத்தில் வாசம் செய்யும் வடைப்பொறுக்கிகளாகிய மடப்பார்ப்பார் அடித்துக்கொண்டுபோனார்களா, வேடிக்கைபார்த்துக்கொண்டிருந்த சோம்பேறிப்பையல்கள் ஜாடையைக்கண்டு ஜரூராய்க்கொண்டேகினரா! எங்கே, எப்படி, யார், எவர்கள், என்னமாய், ஏதாய், ஐயரே, பையனே, சொல்லுங்கள், நில்லுங்கள், பார்க்கலாம், பிடிக்கலாம் அடிக்கலாம்" என்று பைத்தியக்காரனைப்போல் ஆடம்பராசாரி பர பரவென்று கூவிக் கொண்டிருந்தார்.

இந்த சமயம் வழியே சென்றுகொண்டிருந்த இரண்டு சிறுவர்கள், "மடியில்வைத்து மணிபர்ஸை இழுத்து முடிந்துகொண்டு இரண்டுபெயர் வேகமாய்ப்போகிறார்களே! அவர்களா?" என்று கேட்டார்கள்.

"அவர்களா?"
"இவர்களா?" ம்.

"எந்தவீதி?"
"இந்த தெருவா?"
"அந்த சந்தா?"
"அவனா?"
"இவனா?"
"ஓடுங்கள்"
"பாருங்கள்"
"அடே ராமா"
"அடே பீமா"
"வாங்கடா"
"போங்கடா"
"பிடிங்கடா"
"அடிங்கடா"
"கட்டுங்கடா"
"வெட்டுங்கடா"
"அதோ பாரு"
"இதோ பாரு"
"டாணாக்காரன்"
"தலைப்பாமாற்றிக்காரன்"
"என்ன"
"ஏது"
"திருடன்"

இப்படிப்பலவாறு ஜனங்கள் கொக்கரிகொட்டிக் கூவிக்கொண்டே செல்ல ஆடம்பராசாரியும், அவருக்குத்துணையாக அப்பளாசாரியும் ஆமவடையாசாரியும் உயிரைப்பிடித்துக்கொண்டு ஓடத்தலைப்பட்டார்கள். ஆடம்பராசாரிக்கு வயிற்றில் சோறில்லாமல் மூச்சு திணறி ஓடமுடியாது ஓடுகிறார்! அப்பளாசாரியும் ஆமவடையாசாரியும் வயிறுநிறையப் பலகாரம் போட்டு வாய்நிறைய வெற்றிலை போட்டு, வயிறு நிறைய, மார்பும் கையும் நன்றாய் மறையச் சந்தனம்பூசி, பெருமழை பெய்தான பின்னும் ஐப்பசி மாதத்தில் அழுகைத்தூற்றல் விடாது தெளிப்பதுபோல், பெருந்திண்டியான பின்னும் சிற்றுண்டி பலகாரம் சிறுகச்சிறுக உட்கொண்டு, ரத்தம் உறிந்துதடித்த அட்டையைப்போல் ஓய்ந்தும் எழுந்தும் நகர்ந்தும் விழுந்தும் ஓடிச்சென்றார்கள்! உலகத்தில் சரியாக உணவில்லாது ஒண்டியடித்தான் மூலையிலே சண்டிப்பரதேசிபோல, சாதம்

காணுமல் கால்வாரிக்கொண்டிருந்தாலும் காரியம் செய்ய முடியாது; பகாசூரனைப்போல் அகாதமாய் உண்டு கல்லானைபோல் நகரமுடியாது கனத்துப்போயிருந்தாலும் வேலை செய்வது எளிதிலாகாது. இந்த உண்மைக்குதாரணமாக, உண்டியேயில்லாது இளைத்துக்களைத்த ஆடம்பராசாரியும், பெருந்திண்டி விழுங்கிய ஐயங்கார் ஸ்வாமிகளிருவரும் முன்னும் பின்னும், வாடியும் வதங்கியும் ஓடிக்கொண்டிருந்தார்கள்.

'அதோ போகிறுர்கள் இதோ போகிறுர்கள்' என்று சொல்லிக்கொண்டே ஆற்றைக்கடந்து ஆறுமைல் போய்விட்டார்கள், மூன்று ஆசாரிகளும். பட்ட கஷ்டம் பட்டு ஆயிற்றே யொழியப்பலனென்றும் அவர்கள் கண்டிலர். கானலை நீரெனக் கருதி மான்கள் வந்து மருண்டு போவதுபோல், அங்கும் இங்கும் கேட்கிற ஜனங்களின் சந்தடி திருடர் வைக்கும் திருட்டடி யென்று சிந்தையிலெண்ணி ஓடியோடி ஓடாயிளைத்து, தாமரைத்தடாகத்தின் அழகிய கரையொன்றில், மூன்று ஆசாரிகளும் முக்காடிட்டு அப்பா என்று ஆயாசமாயுட்கார்ந்தார்கள்.

அப்பளாசாரி ஆடம்பராசாரியைப்பார்த்துச் சிறிது நகைத்து, ஏன் நோக்கு ரொம்பகஷ்டமாயிருக்கிறதோ இவ்வளவு தூரம் எப்போதும் நடந்தே யிருக்கமாட்டீர் போலிருக்கிறது! பாவம்! திருடனையும் காணும் குருடனையும் காணும்" என்று தீவிரப் பேச்சைத் திருத்தமாய்ச்சொன்னுர்.

இதைக்கேட்ட ஆமவடைஆசாரி "ஏன் குருடனு இல்லை! நாம்தாம் குருடராயிற்றே! யாரோ சொன்னுர்கள், எவர்களோ கேட்டார்கள்! நாமும் ஓடினேம், தேகமும் வாடினேம்; கண்ணும் மழுங்கிற்று, கவலையும் எழும்பிற்று. காரிபம்மாத்திரம் காணும். ஒன்னையும் காணும். ஏன், அப்பளாசாரி நோக்கு அப்பளம் கிடைக்காது. தீர்த்தஞ்சாப்பிட்டு நேத்திரம் மூடவேண்டியதுதான்!" என்று சிறிது ஏளனமாய்ப்பேசி ஏப்பமொன்று விட்டார்.

"ஹா! பேஷ்! சபாஷ்! ஆமவடைஆசாரி, நீர் சாப்பிட்ட ஆமவடை ஜீரணமாய்க்கொண்டிருக்கிறது போலிருக்கிறது. அப்பளமில்லாதிருந்தாலும் நானிருக்கக்கூடும். ஆமவடையில்லாமல் நீரிருக்க முடியுமா? ஏப்பம் வந்து இடம் உண்டாய் விட்டதே! இனி ஏப்பம் விட்டுக்கொண்டே மோப்பம் பிடிக்கும் நாய்போல் ஆப்பத்தையும் ஆமவடையையும் தேடிக்கொண்டு புறப்படும். நம் கதி

இன்று அதோகதிதான். இவ்விடத்தில் அப்பளமும் அகப்படாது ஆமவடையும் அகப்படாது," என்று ஆயாசப்பட்டுக்கொண்டு ஆஸ்யப்பேச்சை அப்பளாசாரி பேசினர்.

எங்கேயோ நினைவை யிருத்தி அது வரைக்கும் ஏதோ மனத்தில் யோசித்துக்கொண்டிருந்த ஆடம்பராசாரி, .

"ஐயங்கார்ஸ்வாமிகளே. உங்கள் பேர் அப்பளாசாரியும் ஆமவடை ஆசாரியுமா? மிகவும் அழகான பெயர்கள் தாம்! இந்த திருநாமங்களை வந்தனையோடு உங்களுக்கு எந்தப்பெரியவர் தெரிந்து கொடுத்தார்? மிக நன்றாயிருக்கின்றது, வெகு அழகாயிருக்கின்றது! எத்தனை அப்பளம் சாப்பிடுவீர்கள்? எத்தனை ஆமவடை சாப்பிடுவீர்கள்? அப்பளம் சாப்பிடுகிறவர் ஆமவடை சாப்பிடுவார்களா? ஆமவடை சாப்பிடுகிறவர் அப்பளம் சாப்பிடுவார்களா? உங்கள் பெயரைக் கேட்டமாத்திரத்தில் என் இளைப்பும்போயிற்று. உங்கள் பெருமையையும், பிரசாதத்தின் அருமையையும், சாப்பாட்டில் உங்களுக்குள்ள ஆண்மையையும் தெரிந்த மாத்திரத்தில் என் களைப்பும் காதவழி யோடிற்று, மடத்தில் இருந்த இளைப்பும் மாயமாய்ப் போயிற்று, வழியில் தோன்றிய பசிதாகமும் பறந்தோடிப் போயிற்று! ஹா ஹா அப்பளாசாரி ஆமவடை ஆசாரியா? ஹஹ்ஹஹ்ஹா என் நாமதேயம் தேவாளுக்குத் தெரியுமோ" என்று தன்னுடைய கவலையையும் அப்போது கணநேரத்திலே மறந்து விட்டு நிஜஸ்வரூப ஆடம்பரப்பேச்சில் அட்டகாசமாய்க்கேட்டார்.

"தேவாள் திருநாமமென்ன?" என்று பிராமண ஆசாரிகள் பிரமாதமாய்க்கேட்க, "என் பெயர் 'ஆடம்பராசாரி' யென்று அகிலத்தோர்கள் சொல்வார்களென்று ஆடம்பராசாரி அப்போதே பதில் கூறினர்.

"ஹா ஹா! ஆடம்பராசாரியா தேவா நாமம். ஹா ஹா! நன்னாயிருக்கு வெகு நன்னாயிருக்கு! நாம் மூவரும் ஒன்னாகத்தான் சேர்ந்தோம். அப்பளாசாரி, ஆமவடை ஆசாரி, ஆடம்பராசாரி! பேஷ்! திருநாமங்கள் போக்யமாயிருக்கு, வெகு சிலாக்கியமாயிருக்கு. பாட்டுக்கு மன்னே எம்மிடவா சிலர் "அப்பனருளிச்செயலே அந்தணர்கள் காமிப்பர், அப்பமொடு தோசைவடையாய்" என்னு, பாட்டுகூட அப்பம் தோசை அப்பளம் ஆமவடைபோல ருசிக்கும் இன்னுசாம்யம் சொல்லியிருக்கா. அதுபோல, அடியேன்களுக்கே போக்யத் திரு நாமமாகிய அப்பளம் ஆமவடை முதலான போகபோக்ய

வஸ்துக்கள் திருநாமமே கிடைத்திருக்க, அவற்றின் காரியமாகிய 'ஆடம்பர'மாகிய விலக்ஷணத்திருநாமம் கிடைத்தது ரொம்ப விசேஷமே! ஹாஹாஹா! அப்பளாசாரி, ஆமவடை ஆசாரி, ஆடம்பராசாரி—வெகு நன்னாயிருக்கு, வெகு ஸ்லாக்கியமா யிருக்கு, வெகுபோக்யமா யிருக்கு. பூர்வகாலத்திலே, ஒருமுற்றத்திலே ஒன்னரைசாணிடத்திலே ஆழ்வார்கள் மூன்னுபேர் அடுத்தடுத்து நின்னார்களாம் * வர்ஷம் அபாரமாக வர்ஷிக்கிறதாம்! ஸ்தலம் வெகு நெருக்கமானதாலே, ஒருவர் படுக்கலாம், இருவர் இருக்கலாம், மூவர்நிற்கலாம் என்னு முறையே சொல்லி முட்டிக்கொண்டு நின்னார்களாம். † ததனந்தரம், அங்கே தயாநிதியாகிய தாசரதிபிரஸன்னமாய்த் திருநாட்டுக்கு எள்ளப்பண்ணிக்கொண்டு போனானும். அதுபோலே, இந்தத்தடாகத்திலே நாம் ஆழ்வார்கள் மூவர் பசிதாகத்தோடே வந்து சேர்ந்தோம். தீர்த்தாமோ கிஞ்சித்தும் காணோம். சூர்யவேகத்தாலே தீர்த்தாம் சுண்டிப்போய் வறண்டுப்போயிற்று. ஒருவர் தீர்த்தாமாடலாம், இருவர் தாகசாந்தி செய்யலாம், மூவர் ஆசமன்யம் செய்துகொள்ளலாம். வேறொன்னும் இங்கே செய்ய சாத்தியப்படாது. இருந்தாலும், நாம் ‡ யாத்ராபராளாய் § பாதசாரிகளாய் வந்தபடியால் ¶ ஸ்ரம பீடிதராஞேம். ஸ்வல்பகாலம் இங்கே தங்கி ஸ்ரமபரிகாரம் செய்துகொண்டு, பிம்மாலெக்காவது தளிகை செய்து பெருமாளுக்கமிசைசெய்து நாமும் அமிசை செய்வோம்" என்று அப்பளாசாரியும் ஆமவடை ஆசாரியும் பிராமணவார்த்தையில் தத்துவ சாஸ்திரம்பேசித் தடுமாறிக்கொண்டிருந்தார்கள்.

ஆடம்பராசாரிக்கோ ஆயாசம் சற்றே அகன்றொழிந்தது. பசி மறுத்துப்போய்விட்டது, அலுப்பும் ஓய்ந்தொழிந்து விட்டது! குளிர்ந்த மாலைக்காற்று குளு குளு என்று சஞ்சீவிக்காற்றாய்ச் சமயத்தில் வீசவும், தேகாரோக்யம் உண்டாய் தெளிவுப்பேச்சைச் சிறிது பேசுவாராயினார்:

"ஸ்வாமிகளே, ஐயங்கார்களே, எனக்கு உங்களுடைய பரிபாஷை ஒன்றும் தெரியாது. ஒன்றிரண்டு சொன்னாலும் உங்களுக்கு அது உளறுபடியாய்த்தோன்றும். அதை தேவாள்மன்னித்து நான்

---

* வர்ஷம்=மழை  † ததனந்தரம்=அதன் பிறகு

‡ யாத்ராபராளாய்=பிரயாணஞ்செய்பவர்களாய்

§ பாதசாரிகளாய்= கால்நடையிற் செல்வோராய்

¶ ஸ்ரமபீடிதர்=அலுப்பால் கஷ்டப்பட்டவர்.

சொல்வதில் வேறு பிழை எதிருந்தாலும் அதை க்ஷமித்து விட வேண்டும். நான்தான் என் தலைவிதிப்படி நடக்கட்டுமென்று ஊரை வெறுத்து, உற்றுரை வெறுத்து, எங்கெங்கோ அலைந்து என்னென்னமோ கஷ்டப்படுகிறேன். தேவாள் என்னோடு ஏன் ஸ்ரமப்படவேண்டும்? ஆதலால், தேவாள் இடத்துக்குத் தேவாள் போய்விட்டால், தேவாளுக்காவது ஸ்ரமமில்லாதிருக்கும்." என்று ஆடம்பராசாரி அழகாகச்சொல்லி உபசாரம் செய்தார்.

அதற்கு அப்பளாசாரியும் ஆமவடை ஆசாரியும் வெகு சிறிதும் சம்மதியாதவராய்,

"நன்றுயிருக்கிறது தேவா வார்த்தை! அப்படியின்னு அடியோங்களை நினைக்க வேண்டாம்! பிராம்மண குலத்தைக்கெடுக்க வந்த அந்தப்பாவிப்பசக, நோக்கு வருத்தம் வரும்படி ஏதேதோ வார்த்தையாடிட்டாங்கோ * தத்வது அனேகர் செய்வதாலேயே பிராம்மணர் என்கிற † நாமாவைக் கேட்டமாத்திரத்தில் அனேகருக்குக் ‡ குக்ஷியில் அக்னிப்ராரம்பமாகின்றது! அந்த நாமாவாலே இந்தக் § கர்மாவை அனுபவித்தே தீரவேண்டியிருக்கின்றது. அதற்காகவே, அதாவது, அந்த நாமா நிர்த்தோஷ நாமா ஆவதற்கென்னே அடியோம் தேவா சகிதம் ஏள்ளிட்டோம். தேவாகஷ்ட நிவர்த்தி பரியந்தம், தேவாளோடு கூடவேயிருந்து தேவா சுகிர்த ரூபேண க்ருஹம் போய்ச்சேருகிற பரியந்தம் தேவாளுடைய உதவிக்கே அடியோங்கள் பரிசரணை செய்துகொண்டிருப்பதாய் துவஜம் கட்டிக்கொண்டோம். தேவா, அதற்கு ஆக்ஷேபிக்கக்கூடாது. எங்களுடைய ஜாதிகௌரவத்துக்கென்னும் பாபிகளுடைய துஷ்கிர்த்தியபரிகாரத்துக்கென்னும் நாங்கள் இவ்விதமாக நடப்பது என்னு தீர்மானஞ் செய்துகொண்டால் தேவா ஆக்ஷேபமே செய்யக்கூடாது. எங்களுடைய அபீஷ்டத்தைப் பூர்த்திசெய்விக்க வேண்டுமென்று ஸ்ரீயःபதி சாக்ஷியாய்ப் பிரார்த்தனை செய்து கொள்ளுகிறோம்" என்று வற்புறுத்திப்பேசினர்கள்.

ஆடம்பராசாரி பார்த்தார்! "இதேதடா இது! அரசமரத்தைப் பிடித்தசனி பிள்ளையாரையும் பிடித்தாற் போலிருக்கிறதே! நாம் தான் இந்தக்கஷ்டப்பட நாள் போதாதது போலிருக்கிறது! இந்தப்

* தத்துவது=அது மாதிரி † நாமா=நாமம், பெயர்
‡ குட்சியில் அக்னிப்ராரம்பமாகிறது=வயிற்றில் நெருப்பு உண்டாகி [றது
§ கர்மா=கர்மம்.

பாபம் மொத்தையடிக்கிற பிராம்மணுளுங்கூட இந்த அவஸ்தைப் பட்டு இழவு என்படவேண்டும்! இவர்களுக்கும் ஏழரை நாட் டுச்சனி ஆட்டுவிக்கிறுப் போலிருக்கிறது! ஆனுலும் அந்தப் பார்ப்பாரப் பையல்கள் அதிகப்பிரசங்கித் தனத்திற்கும் இந்தப் பிராமணுளுடைய இனியவார்த்தைக்கும் சுகுண நடத்தைக்கும் எவ்வளவு ஏற்றத் தாழ்விருக்கின்றது! அப்பளம் ஆமவடை அதிக மாய்த்தின்றுலும் உண்மையாக இவர்களைப் பிராமணர்களென்று உறுதியாகச் சொல்லலாம். அந்தப் பார்ப்பார் சந்தியா வந்தனத் திற்சிறந்து ஜபதபத்திற் பறந்து, பூஜைசெய்து புஷ்பம் போட்டா லும் பூனைகளிலும் பூனைகள், புலியிலுங் கொடிய கெண்டுப் பூனை கள், சீசீ! பூனைகளா அவர்கள்! பூனைகள்மாத்திர மல்லர், கூவிக் குலைக்கும் நாய்கள், பிடுங்கித்தின்னும் நரிகள்! அவர்கள் மந்திரம் பண்ணுவதும் நரிஊளையிடுவதும் ஒன்றேதான். அவர்கள் பணம் பிடுங்குவதும் நாய்நரி பிணம் பிடுங்குவதும் ஒன்றேதான்! தாக்ஷணி யமின்றி இரக்கமென்பதேயில்லாது, ஈகைக்குணமென்பதே காட் டாது இனிய வார்த்தை யென்பதே பேசாது, குத்திக்கிளறிக் கொத்திப்பிடுங்கி வேஷம் போடும் மணியாட்டிப் பூஜாரிப்பிராம ணர்கள் பிராம்மணரா! இல்லவே யில்லை. மடைப்பள்ளியிலிருந் தும் வயிறு நிறைய வுண்டும் விலாப்புடைக்க விழுங்கியும் இந்தப் பிராம்மணர்கள் எந்த அபூர்வகுணத்தைக்காட்டினுர்கள்! ஹா! இவர்களல்லவா பிராம்மணர்கள்! இவர்களைப்பற்றித்தான், பிராம்ம ணு மம தேவதா என்று சொல்லலாகும், மற்றையோர்களைப்பற்றிப் பிராம்மணு எமகாதகா என்றுதான் சொல்லக்கூடும்" என்று ஆடம் பராசாரி பலவாறு சிந்தித்தார். சிந்தித்து அவர்களை நோக்கி "ஸ்வா மிகளே, தாங்கள் தீர்மானஞ் செய்து கொண்டதை மாற்றும்படி மனம் வந்து ஒரு காலத்திலும் வற்புறுத்த எனக்கு வெகு சிறிதும் எண்ணமில்லை. ஆதலால், தங்களிஷ்டப்படி என்னுடன் கஷ்டப்பட்டு என்னைக்கரையேற்றப் பிரயத்தனப்படலாம். ஆனுல், தங்களுக்குத் தக்கவாறு எப்படி நான் நன்றிகாட்டப்போகின்றேன், எத்தகைய பிரதியுபகாரஞ் செய்யப்போகின்றேனென்பதுதான் என் மனத் தை வருத்துகின்றது" என்று ஆடம்பராசாரி அமைதியாகச் சொன்னுர்.

உடனே அப்பளாசாரியும் ஆமவடையாசாரியும், "அதெல் லாம் இருக்கட்டும். நோக்கு இரண்டு தினம் உபவாசமாயிற்று! எங்களுக்கு ததியாராதனம் இல்லாமல் ஒரு நாளும் காலக்ஷேபம்

செய்யச் சாத்தியப்படாது. ஏகாதசி யன்னைக்கும் கூட தோசை வடை அமிசைசெய்தால்தான் ஆத்மா தேகத்தில் பிரவர்த்திப்பானே யன்றி, இல்லாவிட்டால் பரமபதப்ரவேஸம் ஆகவேண்டியதுதான். ஆடம்பராசாரியாரே, தேவா விர்த்தாந்தத்தை யெல்லாம் நாளைக் கூத் தெரிந்து கொள்ளலாம். பிம்மாலே துவாதசி பாரணை செய்து விட்டு, மற்ற சமாசாரங்கள் பேசிக்கொள்ளலாம். நோக்கு இரண்டு நாள் உபவாசம் லக்ஷியமில்லாமலிருக்கிறது. எங்களுக்கு ஒரு ராத்திரி உபவாசம் உருக்கி விடுகிறது தேகத்தை * அமுதிறிக்கு எங்கே எத்தனம் செய்கிறது? கைங்சர்யபராள் இங்கே யார் அகப்படப்போகிறுர்கள்! என்ன ஆனுலும் ஆகட்டும். பெருமாளென்னமோ கைவிடமாட்டார். அந்தப்புறம் ஒரு ராமாநுஜ கூடாமிருக்கிறது. நாலு திருமாளிகைக்கு போய் பிக்ஷையெடுத்து பிம்மாலெ தளிகைக்குத்தயார் செய்து விடுகிறோம்" என்று சொல்லி ஆடம்பராசாரியை அங்கிருந்த ராமானுஜ கூடமொன்றில் அமர்த்தி விட்டு, பிச்சை யெடுக்க இரண்டு பிராமணர்களும் இச்சையோடே போனார்கள். பிராம்மணர்கள் கையேந்தினுல், யாவர்தாம் பிச்சையிடார்கள்! ஒன்பது நாளைக்கு வேண்டிய அரிசி முதலிய பதார்த்தங்கள் அபரிமிதமாய்க் கிடைத்தன. அவைகளைச்சுமந்து கொண்டு வந்து, அப்பளாசாரியும் ஆமவடை ஆசாரியும், பொழுது விடியுமுன் சாப்பாடு தயார் செய்து விட்டார்கள். தாங்கள் இரவு தோசை வடைக்கும் இருந்திருந்து உட்கொள்ளும் சிற்றுண்டிக்கும் எல்லாவற்றிற்கும் சேர்த்து, மாட்டை விழுங்கும் மலைப்பாம்புகள்போல், மரக்கால் சாதம் மனதாரவுண்டு, ஆடம்பராசாரிக்கும் சாப்பாடு பரிமாறி, உபவாஸமிருந்த இளைப்புதீர ஒரு மணி நேரம் தூங்கிவிட்டார்கள். பின்னர் விழித்தெழுந்து ஆடம்பராசாரியினுடைய சரித்திரத்தை ஆதியோடந்தமாய்க் கேட்டறிந்து, அப்பளாசாரியும் ஆமவடையாசாரியும் மிகவும் துக்கப்பட்டார்கள். "தேவா ராஜவம்சத்தைச்சேர்ந்தவர்களாயிருந்தும், காலகதியால் இவ்வாறு கவலை வந்து சேர, ஒன்னும் தெரியா உளறுவாய்ப்பார்ப்பார், குலத்தைக் கெடுக்கவந்த கோடாலிக்காம்புகள், தேவாளை வீணுவருத்தி பாபத்தை மூட்டைக்கட்டிக்கொண்டார்களே! அடியோம் தீர்மானித்தபடி தேவாளோடேயே வனஜாஸனன் அகப்பட்டு வழியாகிற வரைக்கும் ஸ்ரமப்படுவெதில் சந்தேகமில்லை" யென்று அப்பளாசாரியும் ஆமவடை ஆசாரியும் உறுதியாக மறுபடியும் சொன்னுர்கள்.

---

* அமுதிறி = அரிசி

## பன்னிரண்டாவது அத்தியாயம்.

ப்ரபுதாஸ். பெருங்கோஷ்டம்.

அற்புத முதலியார் வீட்டில் அல்லோல கல்லோலமாயிருக்கின்றது! அப்பாவைக்காணேமே யென்று தவித்துக்கொண்டிருந்தாள் மேலான குணத்தையுடைய பாரிஜாதம்! அவளுடைய இருதய ஓட்டத்தை அப்போது கவனித்திருந்தால், படபடக்குதிரை துடிதுடித்து ஓடுவதுபோலிருக்கும்! நூறுக்குமேல் ஐந்தோ பத்தோ வாகத்தாது* ஓட்டம் தாண்டிக்கொண்டு தாறுமாருகக் காட்டியிருக்கலாம். இப்படிப்போவாள், அப்படி வருவாள், எத்திக்கையும் பார்த்து, ஏக்கமுற்றிருப்பாள்! உள்ளம் நொந்து உயிரும் பறந்து, ஊணைவெறுத்து, ஊக்கம் குலைந்து, ஏக்கம் மிகுந்து, தூக்கம் தொலைந்து, அப்பப்பா, அவள் படும் துயரம் யாராலும் சொல்லி முடியாது!

நல்லம்மாள் பொல்லாப்பு நாடெங்கும் பிரபலமாயிற்று! ஆகாத்தியம் விளைத்த ஏகாத்தாள் அவள் என்று அங்கு மிங்கும் பேசி ஆச்சரியப் பட்டுக்கொண் டிருந்தார்கள். அகமுடையானைத் துரத்திவிட்டு அரசாட்சி செய்கிறுளே இவளைப்போலே யாவர் 'ஈவிரக்க' மில்லாதவரென்று ஊரெல்லாம் தூற்றி நாடெல்லாம் நகைத்து அவளைச்சீ கொட்டினது அவ்வளவிவ்வளவன்று. நல்லம்மாளுக்கென்னவோ, இவை யெல்லாம் எவ்வளவேனும் இலக்ஷிய மில்லை! அன்றைக்குக் கோபம் அவளுக்கு ஏற்பட்டது என்றைக்கும் நேரா எரிவந்தத்தைக் காட்டியது. எடுத்த முறத்தை எடுத்துக் 'கிடாசினுள்', பிடித்த பேச்சைப் பிடிவாதமாய்ப்பேசினுள். சட்டியுடைந்ததும் அன்று அடுப்பங்கரையில் பானை யுடைந்து, பண்டங்கள் இறைந்ததும் அடுப்பங்கரையில் ஆவாஹனமாயிருந்த அக்கினி பகவானுக்குத்தெரியும், முத்தம்மாள் பாரிஜாதம் கண்மணியாகிற கருமணி யிவர்களுக்குத் தெரியும். வெளியேயுள்ள வேறே யாருக்கும் உள்ளே நடக்கும் சங்கதி எள்ளளவும் தெரியாது! துடைப்பம் பட்டபாடும், கூடையும் சட்டியும் குலாவியழுததும், பருப்பும் குழம்பும் 'சுவற்றில்' படிந்ததும், பொரியலும் கூட்டும் தரையில் தவித்ததும், காயும் கறியும் சாக்கடை சேர்ந்ததும், அங்

* தாது = கைநாடி

கே சிக்ஷை ஆடம்பராசாரிக்கு எங்கு மில்லாதபடி என்னென்ன வோ நடந்துகொண்டிருந்தது! இதற்கெல்லாம் மேலாக நல்லம் மாள் வாயை மெல்லத்திறந்து விட்டாள். 'கத்தரி'காலத்தில் கானல் வீசுவது போல இந்த கஷ்ட‍காலத்தில் கரேமுண்டாய் விட்டது! 'புத்திகெட்டுப் பவிஷுகெட்டவனுக்குக்கட்டிக்கொடுத்தது மட்டித் தனமென்பதை யாவர்தாம் மறுக்கக்கூடும்! அப்பன் புத்தி பிள் ளைக்கு வருமா, வேறு யோசனையாதாயினும் தோன்றுமா? அப் பன் ஓடுகாலி, பிள்ளை அதற்குமேல்பிரயாணக்காலி. சொல்லவேண்டு வதில்லை சோம்பேறிப்பயல்களின் சொகுசு நடத்தை!' என்று நல்லம் மாள் வெகுவாய்ச்சொல்லி மூச்சை விடாது கூச்சலிட்டுக்கொண் டிருந்தாள்.

வீடு கிடந்த மூடத்தனத்தில் மூசுண்டை அதிகமாய்க்கிட் டாது முத்தம்மாள் வருத்தம் மெத்தப்பெரிதாகவே யிருந்தது. கல்யாணம் எக்கேடு கெட்டாலும் முத்தம்மாளுக்குக் கடுகளவும் வருத்தமேயில்லை! கல்யாணம் இல்லாததால் கவலையதிகமாய் அற் புத முதலியார் பணத்தை அறையில் வைத்துப்பூட்டி விட்டு, ஊர் சுற்றிவர ஓடிவிட்டார்! கொஞ்சம் 'நஞ்சம்' பானையிலும்பேழையிலும் மறைத்து வைத்ததுபோக கல்யாணம் பார்க்கவந்தவர்கள் பாதியும் சண்டைபார்க்க வந்தவர்கள் பாதியுமாக கைப்பிடி கைப்பிடியாய் எப்படி யெப்படியோ இறைந்துபோயிற்று என்று முத்தம்மாளுக் குச் சித்தம் நொந்து சிவனை நினைந்தாள்! "இது! சிவனுக்குத் தான் பிரீதி! கல்யாணம் ஆகாவிட்டாலும் பண்டம் ஆய்விட்டதே! நான் ஒன்று மறியேன் நான் ஏதுமறியேன்! வருவாரும் போவா ரும் வீணரும் விழலரும் அகப்பட்டதை யெல்லாம் அடித்துக் கொண்டு போனர்களே யொழிய நான் ஒரு பதர்கூட மனதாரத் தின்னவில்லை! என்னதான் ஆம்படையான்போனலும், என்னதான் பிள்ளை எங்கேயோ போனலும் பண்டத்தைக் கவனியாது பாழாக் குவது பகவானுக்குச் சமாதானமாகுமா? வருத்தம் மாத்திர மிருந் தால் இப்படி வாதனை விளையாது. நாத்தனரம்மாளுக்குக் கோபம் பூர்த்தியாயிருப்பதால்தான் ஏறு மாருகத் தாறுமாறுகள் விதவித மாய் விளைகின்றன!" என்று முத்தம்மாள் முணுமுணுத்துக்கொண் டிருந்தாள்.

இந்த சமயம் வந்தான் ப்ரபுதாஸ்! ப்ரபுதாஸ் ஏற்கவே வெகு நல்லகுணமும் மிக அமரிக்கையான நடையும் இனிய சொல்லும்

இன்பத்தோற்றமும் உடையவனானபோதிலும் வீட்டில் நடந்து கொண்டிருக்கும் வினையான சமாசாரங்கள் கேட்டை விளைத்துக் குடியைக் கெடுத்துவிடும் என்கிற எண்ணம் அவனுக்குத்தோன் றினபடியால், அவனுக்கு உண்டாகிய கோபம் அவ்வளவிவ்வள வன்று. பல்லைக்கடித்துக் கண்ணைப்புகைத்துத் 'தட்' டென வெழுந் துத் 'திடும்' மென வுதைத்துச் சரமாரியாய்ப் பேச்சைப் பெருமா ரியாய்ப் பொழிந்தான்.

"யாராயினு மெனக்கென்ன ; உண்மை யென்பதை ஒழித்து உளறுபடி யென்பதைப்படைத்து, வாக்கு வயண மில்லாமல் நீக்கு நிலையற்ற பேச்சை நிமிஷமாவது விடாமல் * அமிதமாகப் பேசி ஞல் ஒரு சமயம்போலிருக்குமா? ஆடம்பராசாரி மாமா ஆடம் பரத்திற்காக ஐம்பது ரூபாய் அதிகமாகச் செலவு செய்யக்கூடும். அதுதான் ஒரு குறை அவரிடத்தில் சொல்லக்கூடுமே தவிர வேறு செய்யக்கூடாத அதர்மத்தை விரும்பி அவர்யாது செய்தார்? அத் தை பேச்சைக்கேட்டு அனர்த்தப்பட்டு, பிள்ளையை யிழந்து சள் ளைப்படுஞ் சமயத்திலும் பானையை யெடுத்துத் தலைமேலுடைக் கிற மாதிரி அப்பாவும் அத்தையும் சாப்பிடவருகிறவனை விழுங்க வொட்டாததுபோல் ஜாடித்துத்திட்டினல், அவருக்குக் கோபம் பிறந்து பொறிகலங்கி, எங்கேயோ புறப்பட்டு எப்படியோ போய் விட்டார்!

ஐயோ, இந்த அத்தை இப்போதும் வருத்தமென்பதே காட் டாது எரிந்த முகத்தோடு மாமாவையும் அத்தான் வனஜாசனனை யும் வாயாரவைது மனதாரத்திட்டி குற்றங்கூறுகிறுர்களே தவிர உத்தமமான செய்கைக்கும் உயர்வான பேச்சுக்கும் ஒரு சிறிதும் இடங்கொடாது ஓரே பிடிவாதம் செய்து ஊரைக்கலக்குகிறுர்களே! கண்டார் சிரிக்கவும், கேட்டார் பழிக்கவும், வந்தார் இழிவுகூறி வா யில் வழியே போய்விடவும் இவை ஒரு சிறிதும் நன்றுயில்லை.

வனஜாஸனன் குற்றமற்ற சந்திரன்போல் மெத்த அமைதி யாய்ப் பிரகாசிக்கும் உத்தமகுண முடையவன்! அவனையும் அலக் கழித்து ஓடச்செய்து நாடகம் விளைத்து விட்டார்கள், அத்தையும் அத்தைப்பேச்சைக்கேட்ட மாமாவும்! கண்மணியை விரும்பிக் கல் யாணஞ்செய்து கொள்ளவில்லை யென்று வனஜாஸனன்மீது எல் லோரும் சேர்ந்து இடுப்பொடிக்கும் பேச்சை எந்நேரமும் பேசி

* அமிதம்=மிதமில்லாமை.

'எடுத்த எடுப்பிலேயே முடித்துவிடு விவாகம்' என்ருல் என்னவாகிறது? நம் வீட்டு விளக்கென்று முத்தம் கொடுப்பாருமுளரோ! கண்மணி நம் குழந்தைதான். கறுத்த உடலும் வெளுத்த கூந்தலும் எடுப்புப்பல்லும் ஏகாந்த நெற்றியும் 'கிர்த்திகை' நட்சத்திரங்கள் எத்தனையோ சேர்ந்ததுபோல் அம்மை வடுக்கள் அடுத்தடுத்து விளங்குவதும், குடவிளக் கேற்றியதுபோல் கொப்புளங்கண்டு, ஆர்த்தியானதும் அடங்கி விட்டதுபோல், அவலக்ஷணஸ்வரூபம் அமாவாசையாய் நின்று விட்டதும்—நம் கண்ணுக்குத் தெரியவில்லை, நம்மனதுக்கு விளங்கவில்லை. இவற்றிற்கெல்லாம் மேலாக, வாயாடி அத்தையும், மொத்தை தின்னும் முத்தம்மாளும், பூச்சி காட்டிப்புதுமை விளைத்துக் காரமென்பதையே கருத்திற் பதித்துக் கோரம் விளைத்துக் கொடுமையே நினைத்து ஆச்சரியத்தாலே அற்புதம் விளைக்கும் அப்பாவும்—ஊரிலிருந்துவரும் ஊமத்தை யம்மாளும் தெருவிலிருந்துவரும் எருக்கிலையம்மாளும் எல்லாரும் சேர்ந்து, "எங்கள் குழந்தை சிங்கார வடிவம், கறுத்த முகத்துக் கண்ணம்மாள், காயம்பூ நிறமும், கனக ஒளிப்பல்லும், * கைலாசகிரி மயிரும்—ஹா, அகப்படுமோ, ஹ பெறப்படுமோ" என்றுகட்டு கட்டிப்பேசினும் மட்டுப்படாத உண்மை எட்டப்படாதுபோமா? உலைவாயை மூடலாம். ஊர்வாயை மூடிமுடியுமா? எல்லாரும் கண்டுபிடித்த பொல்லாத உண்மையை எவர் தாம் மறைக்கமுடியும்! அவரவர்களுக்கு ஏற்றபடிக்கும் அவரவர்கள் இஷ்டப்படிக்கும் விட்டுவிடாது கஷ்டத்தில் கொண்டுவந்து நஷ்டமடைந்தால், யாவர் அதற்கு யாது செய்வது? நான் இப்போதே புறப்படவேண்டும், இந்த நிமிஷமே எந்ததிக்கும்போய் எங்கிருந்தாயினும் அங்கே சென்று கண்டுபிடித்து அத்தானையும் மாமாவையும் அழைத்துத்தான் மறுபடியும் இங்கு வருவேனேயன்றி அதுவரையிலும் யார் முகத்திலும் விழிக்கேன், எவர்கள் சொல்லையும் கேளேன், திரும்பிப்பாரேன், யார் செத்தாலும் வாரேன்! இதோ இக்கணமே புறப்படுகிறேன்! இந்த நிமிஷமே போகிறேன். எங்கே துணி, எதோ சொக்காய், பெட்டியெங்கே, பேழையெங்கே, சூட் எங்கே, ப்ரேஸெஸ் எங்கே, கடியாரம் எங்கே, கைகுட்டை எங்கே? மணியாகிறது, வெயில் வரும் சமயமாகிறது! போகவேணும், புறப்படவேணும்" என்று ப்ரபுதாஸ் அவசரப்பேச்சை ஆத்திரத்தோடு சொல்லிக்கொண்டிருந்தான்.

---

* கைலாசகிரி வெள்ளிமலை யாதலால் வெள்ளைமயி ரென்று பொருள்.

அப்படி 'போகவேண்டும், போகவேண்டும்,' என்றுப்ரபுதாஸ் சொல்லிக்கொண்டிருக்கும்போதே, அது வரைக்கும் அடுப்பங்கரையில் யாருக்கும் தெரியாது ஒளித்துக் கேட்டுக்கொண்டிருந்த அற்புத முதலியார் அவசரமாயோடிவந்து,

"அடேயடே! அதிகப்பிரசங்கிப் பையனு யிருக்ருேயே! பயணமென்ன, வயணமென்ன, பைத்தியக்கார டர்டினுன்ஸென்ஸ் Dirty nonsense என்ன? தடபிடல் செய்து தலையெகிறிப்போகிருனே! இவன் அழகுக்குக் கண்மணி யழகு குறைந்து போய்விட்டாற்போலிருக்கிறது! நல்லது நல்லது! 'வறட்டோட்டு எரட்டல்' இந்த பிரபுதாஸ் தலையில் எவர் கூழைக்கரைத்து ஊற்றினது! தலைவிரிகோலமாய்த் தடுமாறிப்போகாதே! பிரயாணம் வேண்டாம். மொத்து இப்படிவா, அந்த துணியைப்பிடுங்கிவை, இந்த மூட்டையை இழுத்துவை, ஜோடும் வேண்டாம் குடையும் வேண்டாம், பையனுக்குக்காசுகையிலெட்ட விடாதே" என்று கோபம் பறக்கும் குரலோடும், புகைபெடுக்கும் கண்ணோடும், துடிதுடிக்கும் உதடோடும், துயரெடுக்கும் மனதோடும், அற்புத முதலியார் கூச்சலிட்டுக் கொண்டிருந்தார்.

"யார் என்ன சொன்னுலும் நான் நிற்கமாட்டேன்" என்றுன் பிரபுதாஸ். "அத்தான், நீங்கள் எப்படியாவது அப்பாவையும்அழைத்துக்கொண்டு வந்தால் தான் நான் சாப்பிடுவேன்" என்று அறைக்குள்ளிருந்து அரைத்தலையை நீட்டிப்பல்லைச் சிறிது மெல்லக்காட்டிப் பாரிஜாதம் வெகு பக்குவமாய்ச் சொன்னுள்.

"நீ பயப்படாதே அம்மா, நான் அவர்களை யெப்படியாவது நல்ல நிலைமையில் அழைத்துவந்து நலமாகவந்து சேருகிறேன்" என்றுன் ப்ரபுதாஸ்.

நல்லம்மாள்:—போனவர்களுக்கு மறுபடியும் வர வழி தெரியாதோ! இந்தப்பிள்ளை ஏன் இப்போது வீணுக அலைந்து ஓடவேண்டும்?

முத்தம்மாள்:—அவன் அதிகப் பிரசங்கிக் கழுதையாயிற்றே! சொன்னுல் கேட்கிற சுபாவம் அவனிடத்தில் இல்லை.

அற்புதமுதலியார்:—ப்ரபுதாஸ், நீ இப்போது புறப்படக்கூடாது. வீணுப்த்தலைகால் தெரியாது தடுமாறிப்போகாதே!

ப்ரபுதாஸ்.—அப்பா, தாங்கள் இப்படி என்னைக் கட்டுசெய்தல் எப்படியும் பொருந்தாது, நான் போய்தான் தீரவேண்டும்.

**அற்புதமுதலியார்:**—உனக்கு ஏன் அவ்வளவு பிடிவாதம்?

**ப்ரபுதாஸ்:**—அப்பா, தாங்கள் சொல்வது வெகு நன்றாயிருக்கின்றதே! நம் வீட்டுக்கென்று நாணயமாய் வந்து இந்த அல்லோல கல்லோலம் இடையில் நேரிட்டால் எந்த வண்ணம் நாம் சும்மா இருக்கக்கூடும்?

இப்படிப் பிரபுதாஸ் எடுத்துரைக்கும்போது, அவனுடைய நற்குணமும் பெருந்தகைமையும் பாரிஜாதத்திற்கு நன்கு விளங்கின. கண்மணிக்குத் தமையனாயிருந்த போதிலும் கண்ணிறைந்த அழகுடையவனாயும், மெய்படிந்த பேச்சுடையவனாயும் தருமம் தழைத்த சிந்தையுடையவனாயும், பாரிஜாதத்திற்கு இப்போது பட்டப்பகலாய்ப் பிரபுதாஸ் 'வெட்ட வெளிச்சமாய்' விளங்கினான். இப்போது பாரிஜாதம் இளமுறுவல்பூத்து இனிய பார்வையோடு பார்த்து, "நீ எப்படியாவது அவர்களைச் சொற்படி அழைத்துக் கொண்டுவந்து விடுவாயானால், உன்னையே நான் கல்யாணம் உளமுவந்து செய்து கொள்ளுகிறேன்" என்று வாக்களித்ததுபோலிருந்தது! கம்பியில்லாத தந்திபோல இந்த அன்பு மொழி ப்ரபுதாஸ் அகத்திலூன்றவும், 'அப்படியே யாகட்டும்' என்று அபயாஸ்தம் கொடுத்ததுபோல் அரை நிமிஷத்தில் பல சைகை செய்து விட்டான். இப்படி யிவர்களுக்குள் நடந்த பேச்சு வேறு யாருக்கும் அப்போது விளங்கவே யில்லை.

**அற்புதமுதலியார்:**—என்னடா அது, ப்ரபுதாஸ், நான் சொல்லச்சொல்ல மறுபடியும் புறப்படவே எத்தனம் செய்கிறாயே!

**ப்ரபுதாஸ்:**—புறப்பட்டுத்தான் தீரவேண்டும். வனஜாஸனன் எந்த வழியிலே திகைக்கின்றானோ! மாமா எந்தப்புறம் திசைமறந்து மதிகலங்கினரோ! நாம் இப்போது அதைப்பற்றி யாதொரு கவலையும் எடுத்துக்கொள்ளாதிருந்தால் நால்வர் நம்மை நகைத்து நடுத்தெருவிற் பழிக்கமாட்டாரா! வனஜாஸனனைப்போல் பிள்ளை பதினுலகத்திலும் அகப்படானே! ஆடம்பரம் என்பது தவிர, ஆனந்த ஸ்வரூபத்தில் மாமாவைப்போல் வேறே யாவர் மகிதலத்தில் காணக்கூடும்? நான் எப்படியும் புறப்படவேண்டும். உங்கள் வருத்தம் வந்தாலும் எனக்கு ஒருபோதும் அது அவசியமில்லை. ஞாயத்தில் நிற்கவேண்டும்; நடுநிலைமை பார்க்க வேண்டும். இன்னும் ஐந்து நிமிஷந்தான் இருக்கிறது நான் புறப்பட.

**அற்புதமுதலியார்:**—அப்பா, அரைமணி நேரமாவது எனக்கு 'டயம்' கொடு; நானும் புறப்படுகிறேன் உன்னோடு.

அற்புத முதலியாருக்குப் பிள்ளையைப் பிரிந்திருக்க மனது வரவில்லை. ப்ரபுதாஸ் செய்யும் பிடிவாதத்திற்கு முன் அற்புதமுதலியார் ஜபம் அணுவளவும் சாயவில்லை. அதனால் தானும் அவனுடைய எண்ணத்திற் கிணங்கிக் கூட வருவதாய் ஒப்புக்கொண்டார். ஒரு வேளை தான் அவ்வாறு இணங்கி நடவாத பக்ஷத்தில் அறிவுக்களஞ்சியமும் அழகின் அவதாரமுமாகிய அருமைக்குமாரன் ப்ரபுதாஸ் அவசரப்பட்டு எங்கே கண்மறைய எழுந்தருளிவிடுகிறானோ என்று அற்புதமுதலியார் அகத்திற்குள்ளே அச்சமிருந்தது!

ஆதலால், மேற்சொன்னபடி இருவரும் புறப்படுவதாய்த் தீர்மானித்து, வீட்டில் மற்றவர்கள் இருக்கும்படி சொல்லி அதற்கு வேண்டிய அமைப்புகளை ஏற்பாடு செய்து தந்தையும் தனயனும் பிரயாணத்திற்குச் சித்தமானார்கள்.

## பதின் மூன்ருவது அத்தியாயம்.

---

மனமோஹனமாணிக்கம். திருக்கல்யாணம்

கோசங்குமதேசத்தில் சந்தோஷம் பெருகிக்கொண்டிருக்கின்றது! குலசேகரமன்னனுக்கும் அவன் மனைவி கோமளவல்லிக்கும், மகளுக்கேற்ற மணவாளன் வெகு சுலபத்தில் கிடைத்தானே என்று ஒரு புஜம் இருபுஜமாக உடல் பெருத்து உள்ளம் பூரித்தது! ஜோஸ்யர்களோடும் வேதியர்களோடும், மந்திரிகளோடும் ராஜதந்திரிகளோடும் இந்த விஷயத்தைப்பற்றி மிகுந்த யோசனை செய்து வனஜாஸனனுக்கே மனமோஹனமாணிக்கத்தைக் கல்யாணஞ்செய்விக்கிறதென்று முடிவுக்கு வந்து, அந்த விஷயத்தை வனஜாஸனுக்குத் தெரிவித்து, அவன் சம்மதத்தையும் அழகாகப்பெற்று, ஊரெங்கும் முரசம் ஓயாது அறைவித்து, கல்யாணத்திற்கு நாளும் கடுகென வைத்துக்கொண்டார்கள்!

திருமணத்திற்கு வேண்டிய பெருமித அலங்காரங்கள் நகரெங்கும் செய்து நாணயம் விளக்க நலமாகத்தொடங்கிப் பலமாக நடத்தி வந்தார்கள். இலையுமில்லாது செடியுமில்லாது, மரமுமில்லாது பூவுமில்லாது, பொன்போலுங் கள்ளி பொறிபறக்குங்கானலிலே, காக்கைப்பொன்னால் ‘ஜாலர்’ கட்டி, உலர்ந்த ஓலையால் உச்சிதம் செய்து, புகை விளக்காலும் மறைவிளக்காகும் குடவிளக்காலும், வீட்டின் * பழுதையும் சுவரின் அழுக்கையும் வெகுவாக மிகச்சொகுசாகக்காட்டிப் பந்தலலங்கரித்துப் பல்லை யிளிப்பது போல் அந்த கல்யாணத்திற்கு அமைதிசெய்யவில்லை. எத்தனை கோடி ரூபாய் எண்ணில்லாத ‘பாங்க்’ களில், வைத்திருந்துவாழ்ந்த போதிலும், அலங்கார சாஸ்திரத்தின் அறிவு என்பதே கணக்குக்காகிலும் காணக்கிடையாராய், முன் ஆடு செய்வதுபோல் பின் ஆடு போகிறது என்னும்படி, கண்ணேயெடுக்கும் சுபோதிச்சிங்காரிப்பே எக்காலத்தும் நடத்தி எத்தனைபேர் இழிவான புத்திகாட்டிப் பழியான சொல்லை யடைகிருர்கள்! இவ்விதமில்லாது சிங்கார அரசனின் சிறப்புவாய்ந்த திருமகள் கல்யாணத்திற்கு அலங்காரம் நடத்திய அழகு இந்திரனும் கண்டு சிந்தை களிக்கும்படியா யிருந்தது!

---

* பழுது = நிலைமைக்குறைவு.

உத்தமமான அரசனின் உயர்வான தோட்டத்தில், உலகத்திலுள்ள பச்சை யெல்லாம் ஒருமிக்கத் திரண்டு வந்ததுபோல், எண்ணில்லாத மரங்களும், கணக்கில்லாத செடிகளும், பேரே தெரியாத பெரும் பெரும் பூக்களும், இனிமைதருவதில் இணையில்லாத பழங்களும், தளிர்களும் துளிர்களும், பல்லவப்பந்தரும், பங்கயத் தடாகமும், வாவியும் கூபமும், வரிசை வரிசையாய் விளங்கி வகை வகையாய்த் துலங்கின. மஞ்சள் நிறத்தை மங்களகரமாய்க் காட்டிக் கொத்துக் கொத்தாய்த் தொங்கும் உத்தமமான எலுமிச்சை யென்ன, அதற்கும் பெரிதாய் அடுத்துத் தோன்றும் கிச்சிலியும் நாரத்தையும், கடாரமும் பம்பிளிமாஸு மென்ன, கமலா மணிலா சோட்டா திராக்ஷா என்ன, இலந்தை யென்ன பேரியென்ன, மா என்ன பலா என்ன, செவ்வாழை பச்சைவாழை சிங்காரமான மஞ்சள்வாழை, மாதுளை வில்வம் அத்திப்பழம் ஆப்பில்பழமென்ன, கொவ்வைப் பழமென்ன கொய்யாப்பழமென்ன, நாவற்பழம் பிரப்பம் பழம், களாப்பழம் விளாம்பழ மென்ன—இவ்விதமாக அந்தத் தோட்டத்தில் எவ்விதமான சிங்காரமும் இணையில்லாமல் குடிகொண்டிருந்தது! மல்லிகை முல்லை, சண்பகம் சாமந்தி, தாமரை தவனம், அலரி ஆத்தி, கொன்றை வெட்சி, சம்பங்கி மருவு, செவ்வல்லி நீலோத்பலம், இவைகளும் இன்னும் நவநவமான கௌஸ்லிப்புகளும், டாப்பொடில்களும், லிலிக்களும் ரோஜாக்களும் எங்குபார்த்தாலும் இங்கிதம் செய்யவும், அந்தச் சிங்காரவனம் அந்தத்தில் மிகுந்த அமராவதியை யொத்திருந்தது!

இவ்விதமாக எவ்விதத்திலும் இணையில்லாத நந்தவனத்தில் எதிரில்லாமற் கட்டியிருந்த ஏகாந்த மாளிகை, பளிக்குச்சுவரும், சலவைத்தரையு முடைய ஒப்புயர்வற்ற உயர்தரப் பங்களாவில், திருமணம் நடத்துவதென்று தீர்மானித்து விட்டார்கள்.

பந்தலுக்கென்றும் அலங்கரிப்புக்கென்றும் சாமான்கள் சேகரிப்புக்காக இதர நாட்டின் உதவியை வெகு சிறிதும் அவர்கள் நாடவில்லை. பற்பல கைத்தொழிலும் பலப்பட நம் நாட்டில் செய்தாலொழிய சொற்பமேனும் தரித்திரம் அற்பமேனும் அகலாதென்று, அவ்வூர் வாழ்ந்த அரசனும் குடிகளும் அறிந்துள்ளவர்களானபடியால், குண்டூசிசெய்யும் குற்றமற்ற சாலையும், நெருப்புக்குச்சிகள் செய்யும் நிகரற்ற சாலையும், கண்ணுடி வேலையும் கருமான் வேலையும், நெய்தல் வேலையும் யந்திரங்களியற்றும் தந்நா வேலையும்,

ம்ற்றுமுள்ள உத்தமவேலை யொவ்வொன்றும் யந்திரங்களைக்கொண்டு தந்திரமாய் நடத்தும் கைத்தொழிற் சாலைகளும் அவ்வூரில் கணக்கில்லாம லேற்பட்டிருந்தன. கைவேலையைவிட யந்திரவேலை பதினாயிர மடங்கு வெகு சீக்கிரத்தில் நடந்து விடுமாதலால் இரண்டு காசுக்கு எண்ணற்ற குண்டூசிகளும், நாலுகாசுக்கு நாலாயிரம் நெருப்புகுச்சுகளும் ஏராளமாய் அங்கு தாராளமாய்க் கிடைத்து வந்தன.

மேலும் எல்லாவித மேன்மையும் உல்லாஸத்தோடும் சல்லாபமாய் உண்டாவதற்கு அறிவுவிர்த்தியடைவது அதிக அவசியமென்று அவ்வூரார் லக்ஷக்கணக்காய் லக்ஷணம் பொருந்திய உத்தம நூல்கள் •கோடிக்கணக்காய் நாடெங்கும் பரவச்செய்தார்கள். தற்காலம் நம் நாட்டார் புஸ்தகம் என்றால் விளக்கெண்ணெய் குடிப்பது என்று நினைப்பதுபோல் அவ்வூரார் அலக்ஷியஞ் செய்யாது, புஸ்தகம் கண்டமாத்திரத்தில் ஹஸ்த பூஷணமென்று அப்போதே வாங்கி விடுவார்கள். இதனால் அறிவு அபிவிர்த்தியாகி உணர்வு பெருத்து, நன்மை விளைந்து நாடெங்கும் செழிக்க நேர்ந்தது. புகை வண்டிகள் கண்டு பிடிப்பதிலும், உருவத்தைப் படத்திலிடும் பொடக்ராப்பு முறைகளைப் புதுமை புதுமையாய்ச் செய்து அவரவர்கள் நிறத்தை யப்படி யப்படியே காட்டுவதிலும், பேசுவதையும் பாடுவதையும் அவ்வவ்விதமாகவே, பொனக்ராப், க்ராமபோன் முதலிய யந்திரங்களிலடைத்து, ஆயிரம் வருஷமாயினும் அழியாது ஆச்சரியமடையும்படி அந்த சந்தத்தோடே பாடவும் பேசவும் செய்வதிலும், தந்தி சமாசாரம் இந்தக்கணத்திலேயே எங்கெந்த ஊரிலும் செல்லும்படிச் சிறந்த முறைகள் செய்வதிலும், அதற்கும்மேலாக, கம்பியில்லாது தந்தி கனவேகமாய்ச்செல்லும் கருத்துக்கும் கடந்து உருத்தெரியா வேலைகள் உவப்போடு செய்வதிலும், தண்ணீரிற் கப்பல் செலுத்தும் தன்மை போலவே, ஆகாயத்திலும் கப்பல் செலுத்தும் அழகிய தொழிலியற்றுவதிலும், இன்னும் இவைகட்கும் மேலான எத்தனையோ அற்புதங்கள் எப்படி எப்படியோ செய்ய எத்தனை எத்தனையோ பெயர்கள் எவ்வெவ்விதமாகவோ எந்நேரம் பார்த்தாலும் உன்னிப்போடு மனம் பதித்து மாட்சிபெற்று வந்தார்கள். இதனால் அந்தத்தேசத்தில் எந்தச்சாமானும் உள்ளூர்ச்சாமானாகவே உயர்ச்சி பெற்று வந்தது. நம் நாட்டில் கைத்தொழிலும் யந்திரச்சாலைகளும் மிகக்குறைந்திருப்ப

தை மேன்மைக்குக்கொண்டுவர ஒரு சிறிதும் முயலாது* திருவாளர் நிலந்திருத்துவதிலும் கடன் கொடுப்பதிலும் வாங்கி விற்பதிலும் காலங்கழிப்பதுபோல் அவ்வூர்த்தனவான்கள் அறியாது நடக்கவில்லை. கல்வி பெருக்குவதிலும் † நூற்கள் எழுதுவதிலும் கணக்கில்லாது அவைகளை வாங்கிக் கனப்படுத்துவதிலும் கைத்தொழிற் சாலைகளும் கரும்பு முதலியவற்றிற்கு ஆலைகளும் ‡ விஞ்ஞானசாஸ்திர விநோதப்புது வேலைகளும் மேன்மேலும் பெருகி மேன்மையடையச்செய்வதிலும் அந்நாட்டார் ஆசைவைத்ததால், வெகு சிலர் நிலவேலையில் மனம் வைத்துப் பயிர் வேலையைப் பக்குவமாய்ச் செய்ய, மிகப்பலர் பற்பல தொழில்களில் அற்புதம் விளைத்துக்கொண்டிருந்தார்கள். இதனால், அவ்வூரில் இணையற்ற செல்வம் எங்கெங்கும் பெருகி, எல்லாப்பொருள்களும் உள்ளூர்ப்பொருள்களாகவும் அவைகளும் சரசம் அதிகமாய்க்கிடைத்தும் வந்தன. இந்த வளப்ப மிகுதியால் இந்தச்சமயம் எந்த வீட்டிலும் மணக்கோலமாயிருந்தது !

ஊரெங்கும் அலங்கரித்தார்கள், நாடெங்கும் சிங்காரித்தார்கள் ! தோரணங்களும் த்வஜஸ்தம்பங்களும், பூப்பந்தல்களும் புதுமையான வேடிக்கைகளும் எங்கெங்கும் நிறைந்து சிங்காரம் விளைத்துக்கொண்டிருந்தன ! மச்சுகளும் மாளிகைகளும், கூடங்களும் மாடங்களும் வர்ன விளக்குகள் வைக்கப்பெற்று, நவரத்தின கசிதமாய் நகரம் விளங்குகின்றது !

கல்யாண மாளிகை கண்யமாய் அமையப்பெற்ற உத்யான வனத்தின் உள்ளெங்கும், செடிகளிலும் மரங்களிலும், இலைகள் பக்கத்திலும் பூக்கள் பக்கத்திலும், காய்கள் பக்கத்திலும் கனிகள் பக்கத்திலும் உச்சிதமான பச்சை விளக்குகளும் உவப்புண்டாக்கும் சிகப்புவிளக்குகளும் கோலம் காட்டும் நீல விளக்குகளும், போதாததற்கு உதவும் ஊதா விளக்குகளும், ஆரஞ்சு நிறத்து அருமையான விளக்குகளும், மங்களகரம் காட்டும் மஞ்சள் விளக்குகளும், கள்ளம்போக்கும் வெள்ளை விளக்குகளும் மாட்டப்பெற்று மாட்சி விளைத்தன. பூக்கள் மரமா விளக்கு மரமா என்று நாட்டுப்புறத்தார் கோட்டுவாய் விட்டு ஏமாந்து பார்த்து இளித்துக்கொண்டு நின்றார்கள்!

---

* திருவாளர்=பணக்காரர் † நூற்கள்=புஸ்தகங்கள்

‡ விஞ்ஞானசாஸ்திரம்=ஸைன்ஸ்

மனமோஹன மாணிக்கம் சங்கீதத்தில் வல்ல சரஸ்வதியவதார மென்று எங்குமுள்ள சங்கீத வித்வான்களும் அங்கு வந்து சேர்ந்தார்கள். அபஸ்வரம்பாடும் ஆபாஸ வித்வான்களும், உருச்சுரம்போடும் உளறுபடிப் புலவர்களும் ஒற்றைச் சால்வையோடு ஓடிப்போனார்கள்! அகார சாதகத்தாலும் சாரீர சுகத்தாலும் அதன் ஒப்பற்ற வளத்தாலும் கங்குகரை காணாது தங்கு தடையின்றிப் பொங்கி வரும் கற்பனா சக்தியாலும் அனந்தராமையர் போன்று ஆகாசத்தினின்றும் பாதாளத்திற்குக் குதித்துப் பாதாளத்தினின்றும் ஆகாயத்திற்குக் கிளம்பி மனம் வைத்தால் ஏழுலகத்தையும் மனோவேகத்தால் தாண்டியுலாவும் தைரிய வித்வான்கள் கை நிறையப்பொன்னைப் பை நிறையப்போட்டு மனம் நிறைய மகிழ்ந்துகொண்டிருந்தார்கள்!

நாககரம் வாசிப்பவர்களில் நாணயக்காரர்கள் சிவக்கொழுந்து போன்றவர்கள் அனேகர் வந்து ஆனந்தம் விளைத்துக் கொண்டிருந்தார்கள். இருவரும் நாகசுரம் ஏககாலத்திலே யெடுத்து, 'கற்' எனக்கத்தி அபஸ்வரக் காக்கைகளாய் அனர்த்தப் படுபவர்கள் அங்கே வந்தால், தேவர்கள் ஓடிப்போவார்கள் பாவர்கள் சேருவார்கள் என்று அத்தகையினரை வெளியே அப்படி யப்படியே யிருத்திச் சொற்பபரிசு கொடுத்துச் சொந்த ஊருக்கு அனுப்பி விட்டார்கள்.

கல்யாணத்திற்கென்று கணக்கில்லாத அரசர்களும் பிரபுக்களும் அணியணியாக வந்து சேர்ந்தார்கள்! வண்டிகளின் பெருக்கம் ஜனங்களின் நெருக்கம் இவ்வளவென்று சொல்ல எவ்வளவும் முடியாது. குலசேகர மன்னனும் குணசாலிகளான மதிமந்திரிகளும் வருவாரையுபசரித்து அவரவர்களுக்கென்றமைத்த * அரியாசனத்தில் இன்மொழிகூறி இருத்திக்கொண்டிருந்தார்கள்!

குறித்த நேரத்தில் குண்டுகள் நூறுவெடி வீறுடன் வெடித்தன! எட்டுப்புரவி பூட்டிய இணையில்லா வண்டியில் நவரத்ன ஆடை தரித்து நளினவதியாகிய மனமோஹன மாணிக்கம் தோழியர்களோடும் தாதியர்களோடும் சுந்தர மாளிகைக்குச் சொகுசாய் வந்து சேர்ந்தாள்! நீலவானத்தில் கோலத் † தாரகைகள் கண்ணைக்காட்டி மினுக்கைக்காட்டி விளக்குக்காட்டித் தளுக்குக்காட்டுவதுபோல், அவள் அணிந்திருந்த மெல்லிய நீலவர்னச் சல்லாச்சேலையில் உல்லாஸரத்னங்கள் ஒளிமுகங் காட்டிச் சுடர் முகங்காட்டி, வழியே

* அரியாசனம்=சிம்மாசனம். † தாரகை=நக்ஷத்திரம்.

நின்று வந்தனை செய்வோர்க்கெல்லாம் நகை முகங்காட்டிநன்மொழி மின்மொழி நல்முறக்காட்டி வந்தன.

மனமோஹன மாணிக்கத்தின் அதிரூபசௌந்தர்யத்தைப்பற்றி ஏற்கவே நாம் கூறியுள்ளபடியால் அதைப்பற்றி மறுபடியும் அதிகமாகச் சொல்லவேண்டுவதில்லை! வானத்துச் சந்திரனை வண்டியிற் பிடித்துவைத்தார்களோ என்னும்படி இணையற்று அவள் எதிரற்று விளங்கினாள். நல்ல நகையாய் நாலைந்து மாத்திரம் அவள் அணிந்திருந்தாளேயன்றி, அவளைக் கரகம் சிங்காரிப்பதுபோல் அலங்காரம் செய்து அவலக்ஷணப் படுத்தவில்லை. அறுபத்து நாலுமுழம் துணியை அடக்காமலே கட்டி, குருவிக்காரர்போலவும், நாட்டுப் புறத்துக் கூத்தாடிகள்போலவும், அல்லாசாமிப் பண்டிகை வேஷக்காரர் போலவும், தலைசாமானையும் ஜம்புலையும் தலையிலே சுமத்தி, உலக்கைக்குப் பூண்போடுவதுபோல் கடகமொன்றைக் கையிலிட்டு, தலையின் சுற்றளவு பனிரண்டங்குலமானால் புடவையின் சுற்றளவு பூமியின் சுற்றளவுக்கும் அதிகப்படுத்தி, அறிவென்பதே யொழிந்ததுபோல் அகண்டவுருவாக்கி, கல்லானையோ, கஸ்தூரி மிருகமோ, மாட்டுப் பொங்கலன்று சிங்காரித்த மாட்டுச்சொரூபமோ, பாண்டு ரோகங் கண்ட பாரவடிவமோ என்னும்படி அவளுக்குச் செய்யவில்லை. ராக்ஷதஸ்திரீகளின் நடுவில் சிறையிருந்த சீதாப்பிராட்டியைப்போல், பழைய காலத்து ஸ்திரீகளின் நடுவில் நகை விலங்கு பூண்ட கல்யாணப்பெண்கள் இக்காலத்தில் படுவது எப்பாடென்பது உற்று நோக்குவார்கள் உணராது போகார்கள்! கையையும் மடக்கலாகாது, காலையும் நீட்டலாகாது! பேசலாகாது, அசையலாகாது, திரும்பலாகாது, இருமலாகாது, தும்மலாகாது, மரம்போலத் தரையில் உரம் பெற்றுப்போகவேண்டும். காலை மடக்கவேண்டுவதானால், ஒருவர் வந்துதான் மடக்கவேண்டும், மூக்குச்சளி சிந்தவேண்டுமானால் ஒருவர் வந்துதான் சிந்தவேண்டும், இல்லாவிட்டால் பூமிக்கும் மூக்குக்கும் ஒரே கம்பியாய்த்தான் தொங்கவேண்டும்! எழுந்து நடப்பதானால் தொம்பைக்கூண்டை அசைத்துப்போவதுபோல், ஒருவர் அசைத்துச்சென்றால் தான் கரகம் அசையும், சங்கிராந்தி மாடு நகரும்.

இவ்வித அலங்கோலமும் கொடுங்கோலமும், இப்பொழுது கல்யாண வீடுகளில் காணக்கிடைப்பவை, மனமோஹன மாணிக்கத்தின் கிட்டேயும் நாடாது விட்டே ஓடிவிட்டன. ஆதலால் இயற்

கை யழகிலேயே இணையற்று விளங்கிய அவள் செயற்கைக் கெடுதி யொன்றுமில்லாமல், ஞானானந்த நளினவதியாய் நன்கு விளங்கினாள்.

இப்படி மனமோஹன மாணிக்கம் வந்திறங்கினவுடனே, மற்றோர்வண்டியில் வனஜாஸனன் கோடிசூர்யப்ரகாஸன்போல், வந்தோரெல்லாம் வாழ்த்தெடுப்பக் கண்டோரெல்லாம் கைகட்டி நிற்க, அழகைக்கண்டோர் அயர்ந்துமே நிற்க, புராதனராமன் பூமியில் மீண்டும் வந்தானென்று, பார்த்தோர் நின்றோர் பற்பல விதமாய்ப் புகழ்ச்சிப் பேச்சைப் புதுமையாய்ப்பேச, நல்ல உடையை நலமுற வுடுத்துப் பவனி வந்து அவனும் இறங்கினான்.

தற்காலத்தில், *வாமனாவதாரங்களையும் உலகளந்த பெருமான் போலாக்கும், ஒருகஜம் குல்லாவைத் தலையிலேபோட்டு, துலுக்கப் பாகையை இடையிடையேமாற்றி, யானையைப்போல் துணியைக் கட்டி அவஸ்தைப்படுவதுபோல் அவனுக்குச்செய்யவில்லை.

கல்யாணப்பிள்ளையும் கல்யாணப்பெண்ணும் வந்ததும் அனைவரும் ஆசிகூறித் திருமணம் முடித்தார்கள். சங்கீதம் பாடினார்கள், மங்களம் பாடினார்கள், எல்லாம் மங்களகரமாய் முடிந்தது.

---

* வாமனாவதாரம்=விஷ்ணு எடுத்த குள்ள அவதாரம்; இங்கே குள்ளர்களைக்குறிக்கின்றது. உலகளந்த பெருமாள் என்பது பின்னர் விஷ்ணு எடுத்த உயரமான உருவம்.

# பதினான்காவது அத்தியாயம்.

மனமோஹனமாணிக்கம் மாரியாத்தாள்
வனஜாஸனன் தூக்கிப்போதல்

திருவிளங்க மேன்மையான திருக்கல்யாணம் நடந்தான பின்னர், மனமோஹன மாணிக்கமும் வனஜாஸனனும் தங்களுக்கென்றமைத்த தனியான தோட்டத்தில் மனமகிழ்ந்து வசித்துக்கொண்டிருந்தார்கள்! மனமோஹன மாணிக்கத்திற்கு அழகுப்பெருமை அந்தஸ்துப்பெருமை மாத்திரமேயல்லாது அவளிடம் கல்விமகிமையும் கானத்திறமையும் * வானளாவி வதிந்து கொண்டிருந்ததென்று வனஜாஸனனுக்கு இப்போது நன்கு புலப்பட்டது! வனஜாஸனனுடைய நல்லகுணமும் கூரிய அறிவும் சிங்காரச்செல்வமும் சங்கீதப்புலமையும் சாஸ்திர ஞானமும் சகல கலா வல்லமையும் மனமோஹன மாணிக்கத்திற்கு நன்றாய் விளங்கி வந்தன!

ஓர் நாளிரவு மணி ஒன்பதரை யிருக்கலாம்! சந்தடி யென்பது சற்றேனுமின்றி, அங்கொரு பறவை ஆ என்று கத்துவதும் இங்கொரு பக்ஷி 'இக்கிக்' கென்று இருந்திருந்து கூவுவதும் தவிர வேறொரு சப்தமும் அங்கே பேருக்கென்றாலும் காணக்கிடையாது! பூரணச்சந்திரன் வெள்ளிப்பெருக்கை மெள்ள உருக்கி மெதுவாய் ஊற்றுவதுபோல், நிலாவைக்கொட்டி உலாவி வருகிறான்! தேகத்தைக்காக்கும் காவற்கணங்கள் போலச் சந்திரனைச்சுற்றிச் சுந்தர நக்ஷத்திரங்கள் சுடர்விட்டெரிகின்றன! நமது சந்திரன் அழகா, இந்தப்பூலோக சுந்தரர்கள் அழகா என்று சந்ததமும் பேசிச் சதாகாலமும் ஒன்றை யொன்று நோக்கிக் கண்சிமிட்டுவதுபோல் மினுக்மினுக் கென்று தளுக்கிக்கொண்டிருந்தன † தாரகைக்கணங்கள்! சில்லெனுங்காற்று மெல்லென வீசவும், உல்லாஸவேளையில் உற்சாக முண்டாகவும், எல்லாம் அப்போது சல்லாபமாகவேயிருந்தது.

"அத்தான், நாம் அப்படித்தோட்டஞ்சென்று உலாவி வரலாம் வாருங்கள்! இயற்கை யழகு இப்போது என்ன இன்பமாய் விளங்குகின்றது பாருங்கள்" என்று மனமோஹன மாணிக்கம் மனதிற்குகந்த மணவாளனைக் கூப்பிட்டாள்.

---

* வானளாவி = ஆகாயத்தையளாவி

† தாரகைக்கணங்கள் = நக்ஷத்திரக்கூட்டங்கள்.

"ஆம்! ஆண்டவன் புகழை யாவரால் சொல்லத்தரம்! மண்ணுங்கல்லும் நிலாவானும் கண்ணுங்கருத்தும் மகிழும்படி உண்ணும் அமிர்தத்துக்கும் ஒன்பது பங்கு உருசிக்குமாறு நீலத்தட்டில் பாலடை வைத்ததுபோன்று ஆனந்தம் நமக்கு அழகாய்க் கொடுக்கின்றதே, அஃது யாருடைய சக்தி!" என்று வனஜாஸனன் தத்துவப்பேச்சோடு அலங்காரப்பேச்சை அழகாகப் பேசினன்.

"அத்தான், அது சரிதான், இறைவன் செயலே எல்லாமான போதிலும் இளந்தென்றல் மன்மதனை எடுத்து வரும் சொகுசு என்ன அழகா யிருக்கின்றது!" என்று மனமோஹன மாணிக்கம் சிங்காரப்பேச்சைச் சிறப்பாய்ப் பேசினள்.

"ஏடி, பிரியநாயகி, சந்திரன் மேலே அந்தரந்தன்னில் சுந்தரக் குடையைச் சொகுசாய்ப் பிடிக்கவும், தென்றல் ஆகிய தேரிலேறி மன்மதன் இந்த மல்லிகைப் பாணத்தையும் மஹா சொகுசாய் விடுவது என்ன மனோரம்யமாயிருக்கின்றது பார்" என்று வனஜாஸனன் மிருதுவாகக்கூறினன்.

"ஆம், பிராணநாதா, அதோ பாருங்கள், ஆகாயத்தில் இன்னும் காகமும் பருந்தும், கருடனும் ஆந்தையும், வட்டமிட்டுப் பறந்து கொண்டிருக்கின்றனவே! கூண்டிலடையாது கொக்கும் குருவியும் இப்பொழுது தானு பறப்பதற்கு இயைந்தகாலம்! இஃதென்ன ஆச்சரியமாயிருக்கிறதே" என்று மனமோஹன மாணிக்கம் ஆச்சரியத்தோடு அமைதியாய்க் கேட்டாள்.

"ஏடீ பிராணசகி, இந்தப்புறம் போகும் காக்கைகளும் பருந்துகளும் இயற்கையாகவே நிலா வெளிச்சத்தில் எங்கெங்கோ பறந்து செல்பவை! அதோ பார் அந்தப் பக்கத்தில் எந்தக் காரணத்திற்காகவோ, ஏழெட்டு பருந்துகள் சட்ட மடித்ததுபோல் வட்டமிட்டு வருகின்றனவே! அவையாவையா யிருக்கலாம்?" என்று வனஜாஸனன் ஆலோசனைக் குறிப்பு அதரத்தின் அசைவால் அழகாகத் தோன்ற ஆச்சரியத்தோடு நிதானித்துக் கேட்டான்.

"ஆம்! தாங்கள் சொல்வது அதோ தெரிகிறதே அதுதானே! அஃது என்னவா யிருக்கலாம்! வட்டமிட்டுச் சுழன்றுகொண்டே பட்டப்பரக்க நம் பக்கமே வருகிறது போலவே திட்டமாய்த் தெரிகிறதே" என்று மனமோஹன மாணிக்கம் மனமஞ்சி மணவாளனைக் கேட்டாள்.

"நிதானித்துப் பார்க்கலாம்" என்று ஓரே மொழி கூறினன் வனஜாஸனன்.

இப்படி பேசிக்கொண்டிருக்கும் போதே, கண்மூடிக் கண் திறப்பதற்குள், எட்டுரதங்கள், ஏரோப்ளேன் (Æroplane) எனப் பெயர் பெற்றவை திட்டென வந்து திடும்மென நின்றன. இப்படி யப்படித் திரும்புவதற்குள், எட்டுப் பெயர்கள் அவற்றினின்று மிறங்கி எடுத்தெறிந்தார் முகத்தில் ஏதோ வொன்றை! கூச்சல் போடத் தொடங்கினவர்கள் மூச்சுமில்லாமல் பேச்சுமில்லாமல் மண்ணில் விழுந்தார்கள் மயக்கங்கண்டு!

எட்டுப்பேர் நடுவில் குட்டிச்சுவராய் நின்றாள் மட்டிக்கழுதை யாகிற மாரியாத்தாள் கிழவி.

"அடே, காளி, கூளி கபோதி, காவடி, எல்லாம் வாங்கடா இந்தப் பையனேயும் இந்தச் சிறுக்கியையும் இப்போவே எடுத்து குனு பூடணும்டா! பூஜை திண்ணு மூணு மாசமாச்சே! பலியுமில் லாதே பட்டினிகிடக்குதேபாயாபோனசாமி! அண்ணைக்கே கொண் டுகுனு பூடலாம் இன்னுபாத்தா, தப்பிலிப் பயங்க வந்து தலையைத் தட்டிக்குனு தடுமாட்டம் பண்ணிட்டாங்க! சீக்குராம் சீக்குராம்! ஒரு பலிக்கு இரண்டு பலியாப்புட்டுது எடுங்கடா! எடுங்கடா! சீக்குராம் சீக்குராம்" என்று மாரியாத்தாள் அவசரப்படுத்தி ஆர்ப்பாட்டம் செய்தாள்.

"என்ன சொல்றே கெயுவி! என்ன செய்யச் சொல்றே" என்று காகமாப்க்கத்தினர்கள் காளி கூளி கபோதி யாதியோர்.

"அடே பயங்களா! இங்கே பூஜையும் வாணுண்டா, புனஸ்கார மும் வாணுண்டா! பொடலங்கா கட்டி அங்கே பூஜைபண்ணப்போ யுதானே மொட்டெப் பசங்கவந்து தட்டிவிட்டுப் போனுங்கோ, தடெப்பட்டுப்போச்சி! இங்கேயும் தெரிஞ்சா எங்கே யுண்ணு ஓடி ஏயாட்டங் காட்டிடுவாங்கோ, பாயா பூடுண்டா, பூஜெயு மில்லாதே, பலியுமில்லாதே" என்று மாரியாத்தாகிழவி மஹா ஜாக்கிரதை யாய்ச் சொன்னள்.

"ஆமாம் கெயுவி ஆமாம் கெயுவி! வேறே யாரும் கூடாதோ? இவன் மாமுசம் தான் நண்ணுயிருக்குமோ?" என்றார்கள் காளி கூளி யாதியோர்.

"அடே அடே முட்டா பயகளா, அப்புடி சொல்லாதிங்கடா! அயுகா யிறுக்கணும் பயுதா யிருக்கக் கூடாது! முப்பத்து ரெண்டு அயுகும் முறுக்காயிருந்தாதான் முனீசுரன்சாமி மூக்கு வடிஞ்சான் சாமி பூஜெயேக்குண்டா ஒரு பலிக்கு ரெண்டு பலியாச்சுடா! ஒங்க பாடு ரொம்ப கோஸாடா!" என்று மாரியாத்தாள் கிழவி மகிழ்ச்சி யுண்டாக்கிப் பேசினுள்.

"எங்கப்பாடு ரொம்ப கோஸா! எங்க பங்கு ரெட்டெ பங்கு" என்று எகிறி யெகிறிக் குதித்தார்கள், எரிமூஞ்சிக் கழுதைகள்!

அடே காளி, அடே கூளி! ரொம்பநாயி இங்கே நிக்கக்கூடாது டா! மொன்னே ஏமாந்தோண்டா! சீக்கிரம் தூக்கி றெக்கையிலே வைச்சி பறக்கனுண்டா நாம்ப! ஆவுட்டும் ஆவுட்டும்" என்றுள் மாரியாத்தாள்.

"இதோ ஆச்சி! இதோ ஆச்சி! இதுக்கு மாரியாத்தா எத்தினெ நாளா நீ ஏமாருதே மோப்பம் புடிச்சே! இதோ தூக்கிட்டோம் இதோ தூக்கிட்டோம்! ஏனுபலி, ஏனுபலி!" என்று காளி கூளி யெல்லோரும் கா கூ என்று பெருங்கோஷ்டமிட்டு எருமைக் கிடாபோல் எல்லோரும் கத்தினுர்கள்.

## பாட்டு.

ஏனுபலி ஏனுபலி ஏனுபலி ஏனு
பூசினிபூபோலே நாங்க புடிச்சுகுனு வந்தோமே
பூஜெ யேத்துகோ முனீசுரா
மீசெ முறுக்கிக்கோ முனீசுரா

ஏனுபலி ஏனுபலி ஏனுபலி ஏனு
பீக்கம்பூ போலே யிவுங்க பாக்க நண்ணு யிக்குறுங்கோ,
நாக்கிலே வைச்சி நல்லண்ணேன் நண்ணு திண்ணு யிவுங்க
ஏனுபலி ஏனுபலி ஏனுபலி ஏனு [ளோயே

இவ்விதமாய்ப்பாடிக்கொண்டு, காளி கூளி கபோதி காவடி முதலியவர்கள் மனமோஹன மரணிக்கத்தையும் வனஜாஸனனை

யும் எடுத்து ஆகாயத்தில் வளர்த்திக்கொண்டு வாகாய்ப்பறந்துவிட்டார்கள்.

அடுத்த நாள் பொழுது விடிந்ததும், வனஜாஸனன் மனமோஹன மாணிக்கம், இருவரையும் காணாது, அரசனும் அரசியரும் ஏக்கங்கொண்டு, காவலாளர்களை நாற்றிசைக்கும் அனுப்பி அவர்களைக்கண்டுபிடித்து வரும்படிக் கண்டிப்பான உத்தரவிட்டுக் கவலையென்கிற கடலில் கணநேரமும் விடாமல் முழுகிக்கொண்டு வருத்தமுற்றிருந்தார்கள்.

## பதினைந்தாம் அத்தியாயம்.

ஜகன்மோஹனசிங்காரம் தவமுனிவருகை

பயங்கரக்குகையில் பல நாட்களாகப் பாலைச்சாப்பிட்டுப் பாதைப் பட்டுக்கொண்டிருக்கிற ஜகன்மோஹன சிங்காரம், எப்படி ராக்ஷதனிடத்தினின்றும் தப்பிச்செல்வது என்று எப்பொழுதும் சிந்தையிட்டு இடுக்கண்பட்டுக் கொண்டிருந்தாள்! கடவுளை அவள் கணநேரமாயினும் மறவாமல், "ஏ! கால காலா, ஹே, கம்ஸ சம்ஹாரா, ஏழையேன் படுந்துயர் ஏந்தலுனக்குத் தெரியவில்லையே! நல்லவர்களை,உன்பதம் நாடி வந்தவர்களைக் கடைக்கண்பாராமலும் கவலையையொழிக்காமலும், ஆபத்தைப் போக்காமலும் அல்லலை நீக்காமலும், ஏனோ தானோவென்று இப்படி யடஞ்சாதிப்பது எப்படிப் பொருந்தும்? நன்மையென்பதற்கே நாயகமாய், கருணையென்பதற்கேகளஞ்சியமாய், காத்தலென்பதற்கே கங்கணம் பூண்டவனாய், பாவத்தையொழித்துக் கோரத்தைத் தொலைத்துத் தீமையையறுத்துக் கொடுமையைக் கொல்லுகிற உனக்கு ஏன் இப்போது கருணை வரவில்லை, ஏன் இப்போது கிருபை தோன்றவில்லை! நான் உன்னையே நம்பி, உன் பாதமே பணிந்து, உன் புகழையேபாடி, உன் திருவருளையே கொண்டாடி, பாமாலையாலும் பூமாலையாலும் அகத்தும் புறத்தும் அலங்காரஞ்செய்து ஆனந்தமடைந்த எனக்கு அல்லல் ஏன் இப்படி அதிகமாக விளைக்கின்றனை? உன் அருள் ஓடியெங்கே ஒளித்துப்போயிற்றோ? ஏழைகளைக் காப்பவனென்னும் இணையில்லா விருது எங்கே பறந்துபோயிற்றோ? துஷ்ட சம்ஹாரமும் சிஷ்ட பரிபாலனமும் செய்பவனென்கிற கீர்த்தி எங்கே மறைந்து எவ்வாறாயிற்றோ? அருட் பெருங்கடலே, ஆனந்த வாரிதியே, அடியாரையாதரிக்கும் அன்புநிறை யண்ணலே, பேரொளிவள்ளலே, எம்மானே பெம்மானே, என்னைக்காப்பது உன்னுடைய கடனேயாம்" என்று சிந்தித்து வந்தித்துக் காலம் செல்லச் செல்லக் கதிமோக்ஷமும் மெல்ல மெல்ல வந்து சேரும் என்று தைரியங்கொண்டு அதைரியத்தை விண்டு, பற்பல யோசனைகளைப் பற்பல விதமாய்ச்செய்து கொண்டிருந்தாள்.

ஒருநாள் காலை ஒன்பது மணிக்கு அருவி நீரில் தலையை மூழ்கி ஈரத்துணியை இடுப்பிலே யுடுத்து, எங்கும் வியாபித்த இறைவனை மனத்திலே இருத்தி,

"தயாநிதியாகிய என்னப்பா, தன்னந்தனியளாய் யானிங்ககப் பட்டுத் தவிப்பது உன் கருணைக்கழகா, உன் பெருமைக்குப்புகழா? நீ எள்ளுக்குளெண்ணெய் போலவும், பூவினுள்ளே மணத்தைப் போலவும் எங்கும் பரந்து நீதிக்குச்சாதகமாய் அநீதிக்குப்பாதக மாய், ஆபத்பாந்தவனாய், அனாதரக்ஷகனாய், உள்ளுவாருள்ளத் துள்ளே யுறைந்தருள் சோதியாய், கள்ளத்தனமாய் நல்லதைச்செய் யும் ஒள்ளருள் வடிவனாய், எல்லாவற்றையும் காத்து எல்லாவற் றிற்கும் கருணை புரியும் கடவுட் சொரூபனாய் நீ எனக்குக் கடைக் கண்பாலித்தருளல் வேண்டும்! என்னால் இத்துன்பம் இனிமேற் பட முடியாது! நாளை மாலைக்குள், என் துன்பமொழியவும் எனக் குநன்மை விளையவும் யாதொரு வழியும் ஏற்படாது, நெஞ்சம் புண்ணாகி நினைந்தேங்க வேண்டியிருப்பின், நான் உயிர் துறப்பது நிச்சயம்! பாறையிலாவது தலையுடைத்து, நீரிலாவது விழுந்தொழி ந்து, கழுத்திற்குச் சுருக்கிட்டுக் கணத்திலுயிரொழிந்து எப்படியா வது பிராணனொழிந்து தப்புவேன் இதனினின்றும்" என்று பற்பல வாறு ஜகன்மோஹன சிங்காரம் பகவானை நினைந்து மனனஞ்செய்து கொண்டிருந்தாள்.

குகைக்குள்ளே தானிருக்கு மிடத்திற்கு உடனே வந்து, ஜகன்மோஹன சிங்காரம், தனக்கென்று வைத்திருந்த பாலை வேண் டாவெறுப்பா யுட்கொண்டு, சற்று மறந்து சயனஞ்செய்து விட் டாள். கால் மணி நேரமானது, அரைமணி நேரமானது, முக்கால் மணி நேரமாய் முழுமணியாகிற ஒரு மணி நேரமும் நெருங்கி விட் டது! இத்தனை நாளும் மெத்த அலண்டு, தூக்கம்பிடிக்காது துயரம் மேற்கொண்டு, கண்ணைமூடிக் கணத்தில் விழிப்பவள், அன்று நாள் ஒன்றுந் தெரியாது ஓரே தூக்கமாய் ஒரு மணி நேரந் தூங்கினாள்!

பெரிய தூக்கத்தில் ஜகன்மோஹன சிங்காரம் அரிய கன வொன்றை அழகாய்க்கண்டனள்! சிறகுகளிரண்டைச் சிறப்பாய்ப் பூண்ட கந்தர்வர்களிருவர் மலைப்பாம்பொன்றைத் தலையிலடித்துக் கொன்று, விமானத்தில் தன்னை விமரிசையாய்க் கொண்டு போவது போல் சுந்தரக்கனவைச் சுகமுறக்கண்டு, திடுக்கென விழித்துச் சடுக்கெனப்பார்த்தாள்!

கையிற் கமண்டலமும் கக்ஷத்தில் தண்டமும், பூதிபடிந்த மேனியும், ஊர்த்துவ புண்டரம் நேர்த்தியாம் நெற்றியும், பிரம்ம

ஞானம் பெருமையாய் விளங்கும் திருமுகமண்டலத் திவ்யதேஜஸும் பொருந்திய பெரிய அருந்தவரொருவர்,

ஸர்வம் ப்ரம்ஹமயம் ஜகது
ஸகலம் விக்ஞானமயம்
பரபகிர்த்தியா பரிகார ஜயம்
மோக்ஷசாம் ப்ராஜ்ய முக்தி ஜயம்
ஸர்வம் பிரம்ஹமயம் ஜகது
ஸகலம் விக்ஞானமயம்
கேவலசிந்தா விமோசன தீரம்
கர்மாவஸ்தா நிவாரணஸாரம்
ஸர்வம் பிரம்ஹமயம் ஜகது
ஸகலம் விக்ஞானமயம்.

என்று தத்வரகஸ்யங்களை உத்தமமாய்ப் பாடிக்கொண்டு ஜகன்மோஹன சிங்காரத்தினெதிரில் மஹாருஷியொருவர் மஹா சாந்தஸ்வரூபமாய் சிந்தைகளித்து வந்து நின்றார்.

இருந்தாற் போலிருந்து எதிரே ஒருவர், தாடிவைத்துத் தத்துவம் பாடிக்கொண்டு நின்றதால், இன்னதெனத்தெரியாது சற்று நேரம் மெத்த நிதானித்து, "இவர் மோசம் நாசம் கம்பிளிவேஷம் செய்பவரல்லர்! அருந்தவ மிகச் செய்த பெருந்தவர்போல் தோன்றுகின்றனர். நாம் செய்ததவமோ, நம்பெரியோர் செய்த நற்றவமோ, தாமஸப் பயல்களாகிய ராக்ஷதாள்குகையில் சாந்தஸ்வரூபியாய் சமயத்தில் வந்து சேர்ந்தனரே!" என்று உள்ளத்தில் நினைத்து உறுதிகொண்டு, அவர் பாதத்தில் விழுந்து நமஸ்கரித்து,

"தபோஸ்ரேஷ்டரே! இந்தக் குகைக்குள் தாங்கள் எப்படி வந்தீர்கள்! கேவலம் துன்மார்க்க நடத்தையும், தமோ குண சேஷ்டையும் பெருத்த இந்த ராக்ஷதர்கள் வாசஞ்செய்யும் இழிவான இடத்தில் உயர்வான திருவடித்தாமரைகள் உவந்து திரும்பினது ஏழையேன் தவமோ, மூதாதையோர் செய்த முற்பிறப்புயர்வோ?" என்று கைகட்டி எதிரே நின்றனள்.

"அம்மா, குழந்தாய், நீயாதொன்றுக்கும் பயப்படாதே, நான் ஊணைவெறுத்து உலகத்தைப்பழித்து, நற்கதி பெறுவதை நலமுற நாடித் தவஞ்செய்வதே தகுந்தொழிலாக் கொண்டவன்! எனக்கு நிலையான இடமென்பது எப்போதும் கிடையாது! கைலாஸகிரியென்ன, ஹிமாசல மென்னும் மஹாசலமென்ன, சேதுராமேஸ்வர

மென்ன, ஜகந்நாதம் கோகரணமென்ன, எங்கும் திரிந்து இறைவனேயே நினைந்து நினைந்து இந்த ஜன்மத்தை இந்தப்படி போக்கிக்கொண்டிருப்பவன். எனக்குத் தாகம் வந்ததால், இந்தச்சுனையில் நீரகப்படுமா என்றுநிதானித்துக் கொண்டே வந்து விட்டேன்! நான் ஆச்சரியப்படும்படி நீ இங்கிருந்தது என்னைத்தூக்கிப் போட்டது! உன்வரலாறு என்ன? நீ தன்னந்தனியாய் இங்கிருக்க நேர்ந்தது என்ன அகாதமோ, எனக்குத் தெரியவில்லையே!" என்று தபோஸ்ரேஷ்டர் பரிதாபங்காட்டி நிதானமாய்க் கேட்டார்.

இதன் மீது ஜகன்மோஹன சிங்காரத்திற்கு என்னென்னவோ சந்தேகங்கள் எப்படி யெப்படியோ வுண்டாய் விட்டன! 'இவர் உண்மையில் மஹாரிஷியா அல்லது மாயவேடங்கொண்ட தீயராக்கதனு? அல்லது மெய்யே வுருவு கொண்ட பொய்யா மொழிப் பெரியரா?' என்று சந்தேகம் சிறிது போது ஜகன்மோஹன சிங்காரத்தின் மனதைச் சிரமப்படுத்திக் கொண்டிருந்தது! ஆனாலும் அவருடைய முகத்தில் அருமையாய்ப் பிரகாசித்த தேஜஸும், அவர் சதா தேவதா சிந்தனை செய்து கொண்டிருந்த சீர்மையும் தனக்குத் தோன்றிய கனவின் பொருத்தமும் மேற்கூறிய ஐயத்தை அடியோடே விலக்கியது! தன் தோத்திரத்திற்கும் பிரார்த்தனைக்கும் பகவான் பெரிதும் மனமிரங்கி அடியாரி லொருவரை அனுப்பினுர் போலும் என்று அகம் மிகக்களித்து ஆனந்தங் கொண்டு அவர் பாததாமரையை அன்போடு பணிந்து,

"ஸ்வாமி, குருடனுக்குக் கோலகப்பட்டது போலும், தரித்திரனுக்குப் பணங் கிடைத்தது போலும், தலைகால் தெரியாது தன் நிலைமையும் அறியாது, அகம்பாவத்தாலே அல்லல் படுவோனுக்கு நல்லறிவு வந்து எதிர் பாராமலே நாணயமும் அடக்கமும் நலமாய்ச் சேர்ந்தது போலும் ஏழையாகிய எனக்கு, அதோகதியாய் ஆருயிர் விடவேண்டிய அரிய சமயத்தில் ஆபத்தைப் போக்கிப் பாபத்தை நீக்கி அருள் செய்ய வந்த அற்புதராகும் தங்களுக்கு நன்றி தக்கபடி நானெப்படி நடத்தப்போகின்றேன்! எங்களுடைய நன்றி தங்களுக்கு எள்ளளவும் வேண்டியிராது. தாங்கள் மாயவுலகைத் தீயெனமதித்துத் தர்மப்பயிரைத் தாறுமாறுக்கக் கர்மம் தோன்றிக் களையாய் முளைத்ததை அடியோடே போக்க உலகில் வந்த உத்தமர் தாம் என்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. என்னைத் தாங்கள் எப்படியாவது இந்த ராக்ஷதனிடத்திருந்து காப்பாற்றிக்

கரையேற்ற வேண்டும்" என்று ஜகன்மோஹன சிங்காரம் மிகப்பெரிதும் வேண்டிக்கொண்டாள்.

இதைக்கேட்ட மஹாரிஷி, கண்ணையேறக் ககனத்திற் செலுத்தி, வாயில் மிண மிண வென்று மந்திரம் செபித்து ஜபமணியை ஒருசுற்று எண்ணிக்கை செய்து, வானத்தை நோக்கித் தரையைப்பார்த்துச் சொல்வாராயினர்:

"அம்மா, நீ சொன்னதெல்லாம் ஆவாஹனமாய் விட்டது என் மனத்தில்! இந்த ராக்ஷதனைப்பற்றிய இரண்டொரு சங்கதிகள் என் மனதில் இப்போதுதான் புலப்படுகின்றன. Clairvoyance என்கிற த்ரிகால ஞானத்தால் அவனுடைய மன நிலைமையையும் கொடிய குணத்தையும் ஆராயுமிடத்து, எனக்கே பகீரென்கிறது, திகிரென்கிறது! நீ இங்குவந்து அகப்பட்டுக் கொண்டது மிகவும் பரிதாபகரமானது! உன்னைத் தப்புவிப்பேனென்று உறுதியாய்ச் சொல்ல என்னாலாகாது! ஆனாலும், என்னுடைய தபத்தையும் ஒருபுறம் வைத்து, ஜபத்தையும் தூங்கவைத்துத் தாலாட்டி விட்டு, உன்னை எப்படியாவது உய்யச் செய்வதே பெரியதபம், அதுவே பெரிய ஜபம், அதுவே தானம், அதுவே மோனம் என்று இன்றே, இப்போதே, விரதம் கைக்கொள்ளுகிறேன், உபவாஸம் தொடங்குகின்றேன்! தருமமும் தயாளமும் ஈகையும் இரக்கமும் இல்லாவிட்டால் தபமும் ஜபமும், உபவாஸமும் ஒருபொழுதும் ஒருக்காலும் உருப்படவே படாது! தருமமில்லாவிட்டால், அன்பு இல்லாவிட்டால், அருளில்லாவிட்டால், கடினசித்தம் போகாவிட்டால், மனிதர்கள் மனிதர்களல்லர், காட்டில் வாழும் மிருகங்கள், வீட்டில் சஞ்சரிக்கும் வேங்கைகள்!

நல்லதைவிட்டுப் பொல்லாததை நாடி, அல்லல்பட்டு, *அல்லனதொட்டு தாமும் கெட்டுப் பிறரையும் கெடுத்துப் †பீடழிந்து போமவர்கள் பன்னடைகள், அதிலும் கெட்ட பாவிப் பதர்கள்! குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொள்பவர்கள்போலும், பிழைக்கப் போய்க் கிணற்றில் விழுபவர்களைப் போலும், நல்ல ஜன்மமெடுத்து நல்லபடியாய் அதில் நடந்துகொள்வதைவிட்டு, ஈனசிந்தையும் இழிவான எண்ணமும், சுயகாரியப்பெருக்கமும், அகங்காரவிருப்பமும், அதிகமாய் வெள்ளமிட்டு, அந்தகாரமனதில் அலையெறிந்து

* அல்லன = தகாதவை

† பீடழிந்து = பெருமை குலைந்து.

ஆர்ப்பரிக்கத், தவம் பண்ணுவதுபோலும், மணியடிப்பதுபோலும், பூதிபூசுவதுபோலும், வேதம் பாடுவது போலும், அல்லது ஆகாசத்தைப் பார்த்து யோகானுபவம் செய்வது போலும், எதையும் கவனியாது ஏதோ சாம்ப்ராஜ்யத்தில் வாழ்வதுபோலும் திருக்குண்டு செருக்குண்டு அகங்காரக் கொழுந்துகளாய் அல்லல் படுபவர்களுக்கு அடுத்த ஜன்மம் ஆந்தை, அதிலும் கெட்ட திருட்டு மாடு, முரட்டுக்குதிரை, அடிபட்டுச்சாகும் இழிவான மிருகங்கள், இந்த ஜன்மம் நேரிடுவதோடும் இந்தச்சன்மத்திலும் திண்டாட்டம், அடுத்த ஜன்மத்திலும் அல்லாட்டம்! கள்ளநெஞ்சு உள்ளே யுருக்க, அகப்பட்ட காலையில் அனைவரும் பகைக்க, ஊரார் நகைக்கத் திருப்பாட்டும் உதைப்பாட்டும் அவர்கள் பாட்டு பெரும்பாட்டு தான்! இவைகள் கிட்டுமேயன்றி அத்தகைய மோசக் கருத்தினர்க்கு, அவ்விதமான காதக எண்ணத்தினர்க்கு, அடக்க முடியாத அகங்கார மனத்தினர்க்கு, நற்கதியேது, நல்ல முடிவேது, நல்ல பயனேது? நல்லவர்க்கு முற்பலத்தால் கெட்டது வந்த போதும், நல்லவற்றிற்காகச் சன்மானம் எல்லாம் வல்லவன் கொடுத்தே தீருவானென்னும் கொள்கையாவது உண்டு. கெட்டவர்களுக்கு இங்கும் கெடுதியாய், எங்கும் கெடுதியாய், மனிதர்களும் திட்டிக் கடவுளும் கடிந்து இகலோகத்திலும் கொடுமை, பரலோகத்திலும் வறுமை! ஆதலால், அருமருந்தன்ன அம்மணி, கெட்டதை ஒழிக்க வேண்டும், நல்லதைப் பிடிக்கவேண்டும். பொய்வேஷம் பயனில்லை, வீண்வேஷம் குணமில்லை! தர்மமில்லாமல், தானமில்லாமல், ஈகையில்லாமல், இரக்கமில்லாமல் தபமென்ன செய்யும் ஜபமென்ன செய்யும்? அதுபற்றி, நான் முதலில் கருணைச்செயலும் பின்னர் மனனச் செயலும் செய்வதென்று உறுதி கொண்டேன். இது நிற்க,

அம்மணி, உன்னுடைய மனிதர்கள் எங்கெங்கே என்னென்ன கதியாய் உலாவிக்கொண்டிருக்கிறார்களோ, நான் அதைப்பற்றிச் செய்யவேண்டிய எல்லா வேலைகளையும் செய்கிறேன்" என்று முனிவர் கூறினர். தாம் தம்மாலாவதற்கு யாதொரு சந்தேகமுமில்லாது சிந்தைமகிழ்ந்து உதவி புரிவதாய் முனிவர் உறுதி வாக்களித்ததனால், ஜகன்மோஹன சிங்காரம், சிறிது தைரியமடைந்து,

"பெரியவரே, என்னைப்பெற்றவரே, தாங்கள் உளமுவந்து உதவி புரிவதற்கென்றும் ஒத்தாசை செய்வதற்கென்றும் மெத்த தயாளத்தோடும் எடுத்த தபத்தையும் பிடித்த ஜபத்தையும், விடு

த்து எனக்காகவே வேலைமேற்கொள்ளமுனைந்தது, என்னுடைய தவப்பலனே யன்றிவேறன்று. என்னுடைய தோத்திரத்திற்கு இரங்கி, வருத்தத்திற்காக வருந்தி, எங்கும் நிறைந்த இறைவன் திருவருட் பெருக்கால் திருவடித்தாமரை திரும்பினதே யொழிய வேறன்று. தாங்கள் கைக்கொண்ட காரியம் தடையில்லாது முடிவதற்கு யாதுதடை! நான் பிழைத்துத்தப்பி நல்ல வழியடைவதற்கும் என்ன சந்தேகம்!" என்று ஆனந்தப்பெருக்கால் அகம்மிகக்களித்துப்பேசினுள்.

"அம்மா, குழந்தாய், நான் வெளியில் வந்து,
ஸர்வம் பிரம்ஹ மயம் ஜகது
ஸகலம் விக்ஞான மயம்
கேவல சிந்தா நிவாரண தீரம்
தபஜப ஹோமம் தர்மகம் பீரம்

என்றுபாடிக்கொண்டு உலாவிவருவேன். இந்தத்துன்மார்க்கப் பயல்கள் உள்ளே ஒருவரும் இல்லா விட்டால், நீயும்,

'ஸர்வம் பிரம்ஹ மயம் ஜகது'

என்று சிறிது பாடுவாய். அப்பொழுது உள்ளே வருவதற்கு உற்றசமயம் என்று நான் உள்ளேவந்து உனக்கு எல்லாச்சமாசாரத்தையும் எப்படி யெப்படி நடக்கவேண்டுமோ அதையும் தெரிவிக்கிறேன். நீயாதொன்றுக்கும் அஞ்சவேண்டாம். ஐயன் என்னையும் கைவிடான்; உன்னையும் கைவிடான்!" என்று மஹாரிஷி மனமுவந்து கூறினர்.

"ஏன் இப்போதே நாம் அப்புறப் படலாகாதோ!" என்றாள் ஜகன்மோஹன சிங்காரம்.

"குழந்தாய், நாம் இப்போது வெளியேபோக முயல்வது, நலமான காரியமன்று. இந்த ராக்ஷதர்கள் மஹா துன்மார்க்காள்! இந்த எல்லையைக்கடந்து எப்படிப் போனுலும் இந்த ராக்ஷதர்களிடத்தினின்றும் தப்புவது முடியாது! ஆதலால் இவர்களை அடியோடே அழித்துக் காட்டிற் கனலைவைத்துத் தீயாக்கித் திருத்தி விடுவது போல், முற்றிலும் மாய்த்துப் பூண்டென்பதையே புவனத்தில் வைக்காது அகற்றிய பின்னரே அடிபெயரவேண்டும்." என்று முனிபுங்கவர் முற்று முணர்ந்து முடிவான பேச்சைச் சொன்னர்.

"தாங்கள் இங்குவந்தது அவர்களுக்குத்தெரியாதோ?" என்று முகத்தில் சிறிது அச்சம்தோன்ற, ஜகன்மோஹன சிங்காரம் மிக மெதுவாய்க் கேட்டாள்.

"நான் இந்தக்காட்டிலும் இந்த மலையிலும் திரிந்து வருவது தெளிவாய்த்தெரியும், ஆனாலும் இவன் 'என்னமோ பிச்சைக்காரன்; தபஜபம்செய்து தலைவனை நாடித் தனியாய்த் திரிபவனென்பது அவர்களுக்கு நன்றாய்ப் புலப்படுகிறபடியால், என்ஜோலிக்கு அவர்கள் வருகிறதில்லை! ஆகையினால் என்னைப்பற்றி உனக்கு யாதொரு பயமும் வேண்டுவதில்லை. நான் இங்கு வருகிறசமாசாரம் மாத்திரம் அவர்களுக்குத் தெரியக்கூடாது என்பது என்னுடைய கோரிக்கை. அதைப்பற்றியே நான் வெளியே பாடும்போது, உள்ளே யாருமில்லையென்பதைத் தெரிவிக்க நீயும் பாட்டாய்ப் பதில் கூறவேண்டுமென்று சொன்னது! நாழிகையாகிறது. நான் போய்வருகிறேன். நீ யாதொன்றுக்கும் அஞ்சக்கூடாதென்பதே நான் கேட்டுக்கொள்வது. சித்தத்தைக் கடவுள்பால் செம்மையாய்ப் பொருத்தித் தைரியமென்பதைச் சிறிதும் விடாமல் காலந்தள்ளிக் கொண்டிருப்பாயானால் கடவுளுன்னைக் கைவிடமாட்டார். நான் போய்வருகிறேன்." என்று சொல்லி முனிபுங்கவர் சர சரவென்று நடந்து விட்டார்.

# பதினாறும் அத்தியாயம்

வனஜாஸனன் காட்டினின்றும்
மனமோஹனமாணிக்கம் கண்தெரியாதேகுதல்

ஆகாயவாகனத்தில் மேலாகக்கிளம்பி, மனமோஹன மாணிக்கம் வனஜாஸனன் இருவரையும் தூக்கிக்கொண்டு, வாயுவேகம் மனோ வேகமாகச் சென்று கண்தெரியாப் பெரிய காட்டிற்கு மாரியாத்தாளும் அவள் ஏவலாளரும் போய்ச் சேர்ந்தார்கள். வழி முழுதும் மயக்கம் கணமளவும் ஓயாமல் அவர்கள் கொடுத்துக் கொண்டே அதி ஜாக்கிரதையாய்ச் சென்றார்கள். புலிகளும் ஓநாய்களும், யானைகளும் சிங்கங்களும், கரடிகளும் சிறுத்தைகளும் இன்னும் சொல்ல முடியாத எத்தனையோ வித கொடூர மிருகங்களும் எங்கெங்கும் நெருங்கிய * இடர் நிறைந்த † அடவியில் அர்த்தராத்திரிப்போதில் ஆகாயவாகனங்களை ஆகாவழிப்பாவிகள் அவசர அவசரமாய் இறக்கினார்கள்!

அங்கே சமீபத்தில் அழகிய காளிகோயிலும் அடுத்தடுத்து 'அண்ணன்மார்' கோயில்களும் விளங்கிக் கொண்டிருந்தன! மனமோஹன மாணிக்கமும் வனஜாஸனனும் மயக்கத்திலேயே இன்னுந்தியக்கங் கொண்டிருக்கிறார்கள்!

"இங்கே கொண்டா அவுங்களை" என்றான் காளி.

"இதோ வந்தேன்" என்றான் கூளி.

"அதோபார், இடிந்தவீடு, ஒண்ணுதெரியுதே, அதிலே கொண்டுபோய் சாக்குரதையாய் வை அவளை! வைச்சுட்டு பத்துரமாய் கதவெசாத்தி தாப்பாளு போட்டுடு" என்றாள் மாரியாத்தாள்.

"ஆச்சி, மாரியாத்தா" என்றார்கள் காளி கூளி முதலானவர்கள்.

"இந்த பையனெ தூக்கிகுனு போய் ரெண்டு மைலுக்கப்பாலே இன்னொரு ஊடு இருக்குது. அங்கே இதேமாதிரி வைச்சுட்டு வா" என்றாள் மாரியாத்தாள்!

இப்படிச் சொல்லி விட்டு மறுபடியும் சந்தேகம் வர, மாரியாத்தாள்,

* இடர்=துன்பம் † அடவி=காடு.

"அடே! நானும் வரணுமோ, இவுங்களும் வரணுமோ, சரியா செய்வயாடா, நம்பலாமா நம்பலாமா?" என்று மாரியாத்தாள் மஹா ஜாக்கிரதையாய்க் கேட்டாள்.

"நீ ஒண்ணுக்கும் பயப்படாதே!" என்று கத்தினன் காளி.

"என்னடா இவன் ஒண்ணுக்கும் ரெண்டுக்கும் என்றுனே! சாக்குரதை! சாக்குரதை சாக்குரதை!" என்றுள் மாரியாத்தாள்!

"சாக்குரதை! சாக்குரதை!" என்று கத்தினர்கள் மற்றவர்களும்.

"தெரியும் தெரியும்" என்று வேகமாய்ப் போனன் காளி.

வழியில் மயக்கம் தெளிந்து விட்டது, வனஜாஸனனுக்கு! ஹா ஹாம் ஹா என்று அலறினன் வனஜாஸனன்! ஒருகுதி குதித்தான், உதைத்தான் காளியை! அப்பா என்று அயர்ந்து விட்டான் அகோரப்பாவி! அரையில் தரித்திருந்த உடைவாளை யெடுத்துக் காளியை ஓரே குத்து குத்தி உயிரைப்போக்கினன் உத்தமனன வனஜாஸனன். உண்மை யென்னவென்றுல், வனஜாஸனனை ஜாக்கிரதைப் படுத்துவதிலேயே கவனமெல்லாம் வைத்திருந்த மாரியாத்தாள் முதலானவர்களுக்கு அவன் மயக்கம் தெளிந்து விடுமோ என்னவோ என்பதைப்பற்றி மாத்திரம் ஆலோசனை யென்பது அகத்திற் படவேயில்லை யென்பதுதான்.

விடுபட்ட வனஜாஸனன் கிலிபட்டது அவ்வள விவ்வளவன்று. "எந்த பக்கம் பார்த்தாலும், ஈசனே, அந்தகாரமே பெருத்து, பயங்கரமே மிகுத்து அல்லலே விளைந்து அவஸ்தையே நேரிட்டுவிட்டதே! எங்கிருந்த நாம் இங்குவந்தோமே! தூக்கிவந்து செத்தவிந்த இவன் மெத்தக் கரிமூஞ்சியாய் சித்தங்கறுத்த சிறுத்தைப் பயலாய்த்தோன்றுகின்றுனே! என்னவோ ஆகாயரதங்கள் எப்படியோ பறந்துவந்தன என்று நினைத்தது தான் தெரியும், இப்போது வந்து இவனைப் பார்த்ததுதான் தெரியும்! இது எந்த இடம் என்றும் விளங்கவில்லை; வழி யெதுவென்றும் தெரியவில்லை—நான் என்ன செய்வேன் ஈசனே, அடியார் நேசனே" என்று சற்று நின்றுன்!

அந்தப்பக்கம் புலியுறுமுகிற சப்தம் கிலியுண்டாகும் படிக் கேட்டு விட்டது! "ஐயோ! இஃதென்ன சங்கடம்! வீட்டை விட்டு வெளியே போயறியாத நாம் காட்டில் வந்து கவலைகொள்ளலாயிற்றே! புலியடித்துவிட் டொழிந்தாலும் கிலியில்லாதாவது போயொழியும்! பிராணனை வைத்துப் பீதிபடும்படிச் செய்தானே!" என்று

சிறிதுபோது சிந்தித்தான்;—சிங்கம் ஒன்று சினம் பொருந்தியகர்ச்சனை மனமாரச்செய்தது: "அப்பா! இந்தக் காட்டில் ஆவி இப்போதே போய்விடும் போலிருக்கிறதே! பயமென்பதை நான் வெகு வெகு சிறிதும் அறியேனே! திண்ணையை விட்டுத் தெருவிலுமிறங்காத நான் காட்டில் வந்து கவலைப்படலாயிற்றே! இங்கிருந்தும் எங்கேயாவது போகவேண்டுமென்றால் எந்தவழியும் எனக்குச் சிந்தையிலேற்படவில்லையே! என்ன செய்வேன்" என்று வனஜாஸனன் மனம் நொந்து மணி நேரம் இப்படியப்படித் திகைத்துக்கொண்டிருந்தான்.

மறுபடியும் ஒரு பக்கம் நின்று, சிறிதுபோது நிதானித்து, ஈசனை நோக்கி இணையடி பணிந்து,

"எல்லாம் வல்ல இறைவா, என் கவலையை நீ இக்கணமே ஒழிக்கவேண்டும்! சிந்தை வாயில் தப்பப்பார்த்த ஏழையேனைச் சிங்கத்தின் வாயிலகப்படச் செய்வாய்போலிருக்கின்றதே! இப்படித் திரும்பினால் முள்ளும அப்படித்திரும்பினால் புதரும் எப்பக்கம் போனாலும் இடருமாக, என்னை யேமாட்டங்காட்டும் தலைவிதி எப்படி என்னை விட்டு விலகப்போகின்றது என்று என் மனம் வருந்துவதை எவர்தாம் அறிவர்! நீ அறிவாய், உன் அருள் அறியும்! உன் கருணைக்கு, உள்ளபடி நான் பாத்திரனானாலொழிய இந்தத்துயரத்தினின்றும் எந்த வழியிலும் தப்புவது இந்தச் சன்மத்திலாகாது." என்று ஏக்கங்கொண்டு, நிற்க இடமும் படுக்க விடுதியுமில்லாது பகவானை நோக்கிப் பதிகம்பாடினான்:

பொன்னானாய் மணியானாய்ப் புவன மானாய்
  பூவினுள்ள மணமு மானாய்
மின்னானாய் மன்னானாய் மீதண்ட
  கோடிக்கு மீதே யானாய்
என்னானா யெங்கானா யென்பார்க்கு
  மெல்லார்க்கு மிறையே யானாய்
முன்னானாய் முதலானாய் நடுவானாய்க்
  கடையானாய் முற்று மானாய் (1)

வாகான புணையின்றி வளியாலும்
  நீராலும் வருந்து வேற்குப்
பாகான மொழிகூறிப் பதமான
  நாவாய்தான் பரிந்து காட்டி

யோகான தத்துவமும் போகானு
பவத்திறனும் யுக்தி யோடே
மாகான மாக மன்ன மாகானஞ்
செயவேண்டும் மன்னு நின்சீர் (2)

வார்த்தையிலோ குறையில்லை வழியான
சேர்க்கையிலோ குறைதா னில்லை
தீர்ந்தமனத் தெளிவாலோ குறையில்லை
திருத்தமெனுஞ் செயலே யாகும்
ஊர்த்துவமாம் நிலையாலோ குறையில்லை
உளக்கலக்க மில்லா தென்றும்
ஆர்த்தியுறும் நிலையோவென் றுலது நீதா
னளித்தலாகு மருளின் மிக்கோய் (3)

போதாந்தப் பெருவெளியே வேதாந்தத்
தனிமுடிவே புலவோ ரெல்லாம்
நாதாந்த விசைத்தமிழின் னளினுந்தப்
பாமொழியால் நவின்றுங் காணுச்
சூதாந்தப் பரம்பொருளே சூழல்விளைத்
தெளியேனைச் சூழ்ச்சி கண்டும்
மீதாந்தந் தெளிவிக்கு மெய்யன்பே
மெய்யன்பு மிக்கோப் தக்கோய் (4)

திருப்பெருக்கச் செருக்குண்டு தெருத்தெருவாய்த்
திரிவோர்தாந் திளைத்தே யோடிக்
கருப்பெருக்க வழிதேடிக் காலனவன்
காற்றேயத் தேய்ந்தே போவார்
உருப்பெருக்க வுளங்கொண்டே யூர்திருத்தக்
கரங்கொண்ட வுற்றோர்க் கெல்லாம்
பருப்பெருக்க வைத்ததுதான் பண்பேயோ
பகர்வாய் நீ பரிசு வேண்டாய் (5)

முத்திநெறி விளையாட்டு மூன்றேகா ளுழிகையு
முறையாய்ச் செய்யா
தெத்திவந்துங் குத்திவந்து மேராள
மானபொரு ளிறைவா நின்மேற்
பத்திசெய்தோர் பதம்பணியா திறைத்தொழிந்தா
ரன்னவர்தாம் பதரே யாவர்

சத்தியந்தா னெனவுரைத்தாய் சத்தியத்தி
னுட்பொருளாய்த் தழைத்து நிற்பாய் (6)

புலிநுழையுங் கடுங்காடு புதர்நிறையும்
பெருங்காடு பூத லத்தில்
கிலிநுழையும் கொடுங்காடு கெடுநரிகள்
சிங்கநிறை கின்ற காடு
பலிநுழையும் மலைப்பாம்பு மிதிநுழையும்
பெரும் யானை பகர லாகா
வலிநுழையும் முள்நுழையும் வறியகாடு
வனம் நிறைய மரமாங் காடு (7)

சொலைபெருக்க வொலிபெருக்கு மிருள்பெருக்க
மருள்பெருக்கும் கொடிய காடு
நிலைசிறுக்க மனமறுக்கும் நீண்ட காடு
நின்மலர்கள் காணாக் காடு
உலைகொதிக்கு மூர்விட்டேன் உயிர்கொதிக்க
வீண்டுவந்தே னுழலுங் காடு
அலைகொதிக்குங் கடலேனு முடன்கொல்லும்
அதுசெய்யா வடவிக் காடு (8)

மதநிறைந்த மாடுநிறை கின்றகாடு
முட்பன்றி வயங்கு காடு
அதநிறைந்த சிறுத்தையொடே யாங்கார
மனநிறைந்த யானைக் காடு
புதர் நிறைந்த முள் நிறைந்த புலிநிறைந்த
கொலைநிறைந்த பூதக் காடு
சதநிறைந்த வாண்டேனுஞ் சுகநிறைந்த
வழிகாணேன் சாதல் போக்க (9)

வாக்குமனக் கெட்டாத வைபவனை
வழிப்பட்டோர் நெஞ்சந் தன்னில்
போக்குவர வில்லாது புதைபொருள்போ
லெஞ்ஞான்றும் பொருந்தி னானைத்
தேக்கெறிந்து தேன்பாயும் தெளிமதுர
கவிப்பாடற் றெரியல் சூடி
நீக்கருபே ரானந்த நிகழ்த்தி னானை
யெம்மனத்தே நிகழ்த்து வேமால் (10)

என்று பற்பலவாறு மனமுருகப் பதிகம்பாடி ஐயனை மனத்தில் அரைநிமிஷமேனும் விடாது அழகாய்ப் பதித்து எப்படியாயினும் சென்று இடரின் நீங்கலாமென்று வனஜாஸனன் நடந்துகொண்டிருந்தான்.

* * *

இங்கு இப்படியாக, மனமோஹன மாணிக்கம் விழித்தெழுந்து, "ஐயோ, நாம் எங்கிருக்கின்றோம்! இங்கு எப்படி வந்திளைப்புற்றோம்! ஒன்றுந் தோன்றவில்லையே! ஏதும் தெரியவில்லையே! கறுப்பாய்வந்த காற்றுடிகள் மறைப்பாய்த் தூக்கிவந்து மாயஞ்செய்து விட்டனபோ லிருக்கின்றதே! இது ஏதோ இடிந்த வீடும் குழிந்த தரையுமா யிருக்கின்றதே! மாயமாய் வந்த மனோவேகக்காற்றுடி அபாயத்தோடு நம்மை அழைத்து வந்ததுபோலிருக்கின்றதே!" என்று மனமோஹனமாணிக்கம் வெகுநேரம் மனம்வருந்திக்கொண்டிருந்தாள். கணவன் எங்கேபோனானோ என்று கவலைபெருகினதாலும், வெளிச்சமில்லாத காரணத்தாலே வழிதெரியாதபடியாலும், மனம்வருந்தி "ஐயோ, தெய்வமே, ஆருயிர்க்கடவுளே, என்னை இந்தகதியிற் கொண்டுவந்தா ஈடழியச்செய்தனை! எல்லாம் இருந்தும் காலகதி எப்படி யெப்படியோ வந்து சேருகின்றதே! நேற்று மணம்செய்த மஹானுபாவர் இன்று எங்கேசென்று எப்படியானாரோ, உயிர்தானிருக்கின்றதோ, ஆவிதான் பறந்துபோயிற்றோ! முதலில் அவரைப்பார்க்கும்போதே மந்திரக்காரர் சிலர் தந்திரம் செய்துகொண்டிருந்தார்களே! அவர்கள் தாம் மறுபடியும் மறுபடியும் மோப்பம்பிடித்து மோசம்செய்ய நேர்ந்தனரோ! அப்படித்தானிருக்கும், வேறெப்படி யிருக்கக்கூடும்!" என்று வெகுநேரம் மனமோஹனமாணிக்கம் மிகதூரம் சிந்தித்தாள். மறுபடியும், கண்ணில் அருவி கணக்குவழக்கில்லாமல் பெருகிக்கொண்டேயிருக்க, அவள் கடவுளைச்சிந்தித்து அழத் தொடங்கினாள்:

"அற்புதம்விளைக்கும் அன்புமிக்குடையோய், அன்பர்நெஞ்சில் ஆனந்தத் தாண்டவமும் காளிங்கன் தலையில் கூரநடனமும் புரியும் அண்ணல், நீதான், ஏழைகளைக்காத்துப் பாவிகளைக்கடியவேண்டும். உலகமெல்லாம் பரந்து உள்ளமெல்லாம் பரவிய உன்னைவிட்டால் என்னைக்காப்பவர் எங்கிருக்கின்றார்கள்! இங்கு நினைத்தேன், இங்கிருப்பாய், அங்கு நினைத்தேன், அங்கிருப்பாய், எங்கு நினைத்தேனாகிலும் எங்கு மிருப்பாய்!

அருள்மழை பொழியும் ஆருயிர்ச்செல்வா
ஆனந்தத்தாண்டவா அன்புமிக்குடையோய்
இருள்துயர்போக்கும் இன்பமாம் விளக்கே
ஈனர் தங்களை வேரறுப் பவனே
உண்மைக் குறுதி யுகந்தளிப் பவனே
ஊனமாம் கொள்கையை யூரைவிட் டோட்டி
எங்கும் நிறைந்தருள் இணையிலாப் பெரியோய்
ஏக்கம் போக்கிடும் ஏந்தலே இறைவா
ஐயம் புகுந்தோர்க் காதர மளிப்போய்
ஒருவழி காணார்க் கிருவிழி தருவோய்
ஓரக மில்லார்க்கு ஊரகங் காட்டி
ஔவிய மவித்தோர்க்கு அவரே யானோய்
அவரே யானோய் அன்பே யானோய்
ஆசையு மானோய் ஆதர மானோய்
இன்பே யானோய் இசையே யானோய்
ஈசனே யானோய் ஈடிலா யானோய்
உளமே யானோய் உளையே யானோய்
உண்மையே யானோய் உத்தம னானோய்
ஊக்கமே யானோய் உறுதியே யானோய்
எங்குமே யானோய் எல்லா மானோய்
எண்ணே யானோய் எழுத்தே யானோய்
ஏற்றமே யானோய் ஏந்தலே யானோய்
ஒருவனே யானோய் ஒருபொரு ளானோய்
ஓங்கார மானோய் ஓமெனப் படுவோய்
கவலையால் நொந்தவென் கலக்கம தொழித்து
ஙப்போ லென்னை நலமுற வளைத்துச்
சஞ்சலம் போக்கிச் சங்கடம் போக்கி
ஞயம்பட வருளும் ஞானிக ளருளை
டம்பர்க ளொழியும் தனிப்பெரும் நிலையைத்
தமியேன் பெற்றுத் தரையினில் விளங்க
நல்லருள் நீதான் நல்கவே வேண்டும்
பாவியர் சாகப் பாவமும் நீங்க
மன்னவா நீதான் மனம்பொருத் தாள்வையே
யாவையும் நீயே யனைவரும் நீயே
ரத்தினக் குணமும் ரம்யமா மருளும்

லவங்கம் ஏலம் லயித்திடு மணமும்
வழிவழி வந்தது வண்மைநின் சீர்த்தி
மூகரம் விளங்கிய தமிழ்ப்பெரும் தெய்வக்
கடவுணீ யாதலின் கவின்பெறு பாட்டிற்
கிரங்கிநீ யென்னை ஈடேற்றல் வேண்டும்
வேறுநான் செயத்தகும் வினையொன் றில்லை
அன்பா கைவிடேல் ஐயா கைவிடேல்
வந்தே னிங்கே நொந்தே னிங்கே
ஒன்றுந் தெரியே னொருவழி காணேன்
காடோ வீடோ மரமோ செடியோ
ஏதோ எதுவோ என்னவோ எங்கோ
புலியோ நரியோ பூதமோ பேயோ
சிங்கமோ யானையோ சிறுத்தையோ காடியோ
காப்பா யென்னைக் கைவிடே லென்னைக்
கடவுளே போற்றி கருணையே போற்றி
அப்பனே போற்றி அன்பனே போற்றி
அண்ணலே போற்றி அமிர்தமே போற்றி
ஐயா போற்றி மெய்யா போற்றி
அருளே போற்றி பொருளே போற்றி
புண்ணியா போற்றி புராதனா போற்றி
ஈசா போற்றி இறைவா போற்றி
நேசா போற்றி நின்மலா போற்றி
திருவடி போற்றி திருப்புகழ் போற்றி
நகைமுகம் போற்றி நன்னயம் போற்றி
கடைக்கண் போற்றி காதலம் போற்றி
ஆதரம் போற்றி ஆர்வம் போற்றி
புன்னகை போற்றி புனிதமும் போற்றி
வீரம் போற்றி விஜயம் போற்றி
பாட்டிற் கிரங்கும் பரிசும் போற்றி
கீதத்திற் குருகும் கீர்த்தியும் போற்றி
பக்திக்கு விளங்கும் சக்தியும் போற்றி
ஞான விளக்கின் நடுவே போற்றி
பக்திப் பூவின் மணமே போற்றி
நல்ல தொழிலின் நயமே போற்றி
பாங்கா மதன்றன் பயனே போற்றி

பக்குவப் பட்டோர் பழமே போற்றி
பரமனே போற்றி பெரியனே போற்றி
போற்றி போற்றி போற்றி போற்றி.

இவ்வாறு மனமோஹனமாணிக்கம் ஈசனை நினைத்து என்னென்னவோ தோத்திரங்கள் செய்துகொண்டும் மானஸ பூஜையாலே மனதார அர்ச்சித்துக்கொண்டும் இருட்டுவீட்டில் குருட்டுக்கிழவிபோல் சுருட்டுப்பாயொன்றின்மீது படுத்துக்கொண்டிருக்கும் சமயம், 'சடுக்' கென ஒருசப்தம் 'படுக்' கென அவள்காதில்பட்டது! அக்கோ! அஃதுயாதெனச் சற்று அருண்டு நிதானித்தாள்! 'கடுக்' 'முடுக்' என்று பூட்டைத்திறக்கப் புதுப்பிரயத்தனம் வேறேசாவிகொண்டு வேறேயாரோ செய்துகொண்டிருப்பதாய் மனமோஹனமாணிக்கத்திற்கு வெகுநன்றாய்ப் புத்தியில்பட்டது.

மந்திரக்காரரைச்சேர்ந்த மாயக்காரர் யாராவதாயிருக்கலாமாவென்று மாணிக்கத்திற்குச் சற்றே மனதுகலங்கியது. எழுந்த பயத்தை எப்படியோ அடக்கிக்கொண்டு, உடலெல்லாம்வியர்த்து உற்பாதம் விளைந்தாலும், உள்ளத்தை உள்ளத்தாலேயே உறுதியாய்ப்பிடித்துக்கொண்டு, சற்றுநேரம் மாணிக்கம் உற்றுநிதானித்தாள். சாவிக்கும் பூட்டுக்கும் சரிப்படாததாலே, 'கடுக்'கென்றும் 'முடுக்'கென்றும் 'திடுக்'கென்றும் 'கிடுக்'கென்றும் சுற்றிச்சுழற்றி மெத்தப்பிரயத்தனம் செய்தபோதிலும் பூட்டுதிறக்காது வாட்டம்விளைக்கவே, வீட்டுவெளியே நிற்பவன் கோபம்கொண்டு கொட்டினான் பேச்சை!

"ஹா! இதென்ன ஆச்சர்யம்! நான் என்னதான் மலெக்குறவனாயிருந்தாலும் ஒடம்பா இரும்பா! மாரியாத்தாளும் இந்த மந்தரக்காரன்களும் எப்பவும்பண்றது இப்படிதான்! நான்செவனேயிண்ணு செடியெதிண்ணு கொடியெமெண்ணு மலெயிலேதிரிஞ்சி, காட்டிலே அலெஞ்சி இங்கெவந்து கொஞ்சநாழியிண்ணும் எளெப்பு ஆறி களெப்புமாறி, அல்லெ தொலெச்சி, தொல்லெவிட்டு, தூக்கம் புடிச்சி தொலெஞ்சிபோலாம் இன்னுவந்தா இண்ணுஎன்னமோ ஏடாகூடப் பூட்டெ எப்புடியெப்புடியோ போட்டுவைச்சாங்களே! பொலிக்கு ஏதுண்ணும் சாமான் பொக்குஷம் தேடிவைச்சாங்களோ! ஒணுமுண்ணே பூட்டெ இப்புடியெல்லாம் போட்டுவைச்சாங்களோ! ஏது எப்படியானு எனுக்கென்ன! நான் தூங்கிட்டு கோயிகூவுச்சே எயுந்து பூடப்போறேன்! இந்தஎயவு பூட்டுதொறக்கமாட்டேன் இண்ணுதே" என்று 'வற்வற்' என்று வாயில் 'வைது' க்கொண்

டே கல்லொன்றெடுத்துப் பூட்டைக் கடுக உடைத்துவிட்டான்! உள்ளேவந்தான், மலைக்குறவன்; ஒருபுறம் முடங்கினான்! 'ஆ' என்பதற்குள்ளே 'கோ'என்று கோட்டுவாய்காட்டிக் குறட்டைவிட்டு முரட்டுத்தூக்கம் மூன்று நிமிஷத்தில் தூங்கிவிட்டான்!

தூக்கத்தில் எத்தனையோவிதம்உண்டு. எல்லாத்தூக்கத்திற்கும் கும்பகர்னன்தான் அதிதேவதை! மட்டித்தூக்கம் ஒன்று, மயானத்தூக்கம் ஒன்று, வீட்டுத்தூக்கம் ஒன்று, மாட்டுத்தூக்கம் ஒன்று, கோழித்தூக்கம் ஒன்று, குதிரைத்தூக்கம் ஒன்று, தேவத்தூக்கம் ஒன்று, திகைப்புத்தூக்கம் ஒன்று—இப்படித் தூக்கங்களில் எத்தனையோவிதம் காண்கின்றன.

மட்டி தூக்கமென்பது தட்டிஎழுப்பினாலும் ஏனென்று கேளாதது.

மயானத்தூக்கமென்பது திண்ணையோ தெருவோ மரமோ காடோ எங்கேயாயினும் உறங்குவது.

வீட்டுத்தூக்கமென்பது மிக அதிகமாயில்லாமலும் மிகக் குறைவாயில்லாமலும், குடும்பத்திற்குக் கோணல் வராத அளவான தூக்கம்.

மாட்டுத்தூக்கம் என்பது அடிப்பதுகூடத் தோன்றாமல் கூவுவதுகூடக் கேளாமல் கும்பகர்னனுக்கு மிகவும் கொண்டாட்டமான தூக்கம்.

கோழித்தூக்கமென்பது கொஞ்சம்சந்தடி கேட்டாலும், கண்ணைத்திறந்து கடுக விழிப்பது!

குதிரைத்தூக்கமென்பது,—சற்றுப்புரண்டு எழுந்து விடுவதும், உட்கார்ந்துகொண்டேயிருக்கும்போதும் நின்று கொண்டேயிருக்கும்போதும் தன்னைத்தெரியாமல் கண்ணயர்ந்து விடுவதும்.

தேவத்தூக்கமென்பது, கண்ணைச்சிறிது விழித்துக்கொண்டே மெல்லிய தூக்கம் உல்லாஸமாய்ச்செய்வது.

தியக்கத்தூக்கமென்பது—தூங்க மனம் வந்து படுத்தும் புரண்டும் தூக்கம்பிடிக்காமலும் அரட்டல் புரட்டலா லவஸ்தைப் பட்டும் பைத்தியம்பிடித்தோர் பாதவிப்பது போலும் தூங்கா நோய் (Insomnia) கொண்டோர் துக்கப்படுவது போலும் தோன்றுவது!

இவற்று ளெல்லாவற்றிலும் கும்பகர்ணத்தூக்க மென்பதே கொடியதூக்கம்! கோடையிடி விழுந்தாலும் கோவிந்தா, சமுத்திரம் பொங்கிவந்தாலும் சம்போ சதாசிவா, பூகம்பம்தோன்றி பூமி வெடித்தாலும் பாதாளபொன்னியம்மா—என்று—அவர்கள் எதையும் காதிற்கொள்வதில்லை, அவர்கள் தூக்கம், கொள்ளவும் விடுவதில்லை.

ஒருசமயம் ஒருவீடு பற்றிக்கொண்டதாம்! எல்லாச் சோம்பேறிகளும் எழுந்தோடி விட்டார்களாம்! வீட்டைத் தீபற்றி வெந்து கொண்டிருக்க, அக்கினிச்சுவாலை அதிகமாய் வீச, கால் சோம்பேறியானவன், 'அம்பலம் தீப்பற்றி வேகுதடா' என்றானும். 'அத்தைத் தான் சொல்வானேன், வாயைத்தான் நோவானேன்' என்றானும் அரைச்சோம்பேறி. நெருப்பு பிடித்தாலும் பாதகமில்லை, இவர்களிருவரும் பேசுகிறபேச்சு பெருஞ்சந்தடி யுண்டாக்குகிறதென்று, முக்கால்சோம்பேறி, கும்பகர்ணத்தூக்கத்திற் பழகுகிற குடிகேடனாதலால், கோபங்கொண்டு குரைத்துக்கத்தி 'சந்தை யிரைச்சலிலே குடியிருந்து கெட்டேனே' என்று அவஸ்தைப்பட்டானும். முழுச் சோம்பேறி அதுவும் சொல்லாது ஆனந்த நிஷ்டையில் அமர்ந்திருந்து விட்டானும். இந்த முழுச்சோம்பேறிதான் சரியான கும்பகர்ணத்தூக்கம் தூங்குகிறவன்.

இந்த நிலைமையில் மலைக்குறவன் இருந்ததைக்கண்ட மனமோஹன மாணிக்கம் வந்தாள் வெளியில், பார்த்தாள் சுற்றி. கோரமான மலையும் கொடுமையான காடும், மரமும் செடியும் பள்ளமும் பாம்பும் புலியும் கிலியும் எல்லாம் ஏற்படும்போலிருந்தன! பாழான மந்திரக்காரர்களிடம் அகப்பட்டுப் பலியாகிச்சாவதைவிட, புலியின் வாயிலகப்பட்டுக் கிலிபட்டுச்சாவதே மேன்மை என்று மனமோஹனமாணிக்கம் வெகுவேகமாய் காட்டு வழியே நடந்து கடுகெனச் செல்கிறாள்!

## பதினேழாவது அத்தியாயம்.



வழிதெரியாமல் அலைந்துகொண்டும் மனம்நிலைபாமல் வருந்திக்கொண்டும் மனமோஹனமாணிக்கம் காட்டிலேயே இரவெல்லாம் வாட்டமுற்று நடந்துகொண்டிருந்தாள். பனிநீர்தோய்ந்த ரோஜாப்பூப்போல், பாக்கியத்தில் மலர்ந்த பாக்கியவதியாகிய அவளுக்கு, கஷ்டப்படுவதென்றால் கஷ்டம்சொல்லமுடியுமா! வேலமுள்பாதத்தைத் தைக்கவும், மூங்கில்பொந்து முன்னேநிற்கவும், கல்லும்கரடும் முள்ளும்முருடுமாய் எங்குபார்த்தாலும் சங்கடம்உண்டாகவும் இப்படியப்படியென்று சொல்லமுடியாத இடர்விளைத்த காட்டின்வழியே, தாமரையில்வளர்ந்த அன்னம் அடுப்புநெருப்பில் அகப்பட்டுக்கொண்டு அவஸ்தைப்படுவதுபோல், வருந்திவருந்திப் பயந்துப்பயந்து இரவெல்லாம்நடந்து எப்படியெப்படியோ சென்றுகொண்டிருக்கிறாள்! காலில்வடிந்த உதிரம் காற்படியானால், மனதில்விளைந்த வருத்தம் மணங்குக்குமேலிருக்கும்! எல்லா வருத்தத்துக்கும்மேல் ஏந்தல்போன வருத்தத்திற்கு இணைசொல்லமுடியாது! பிறவிக்குருடனுக்குக் கண்ணைத்தந்து பின்னுகவே பிடுங்கிக்கொண்டது போலும், தின்னப்போம்போது கையைப்பிடித்துக் கொண்டது போலும், பெரியசமாசாரம் உரிமையாய்ச் சொல்லுங்கால், மரணப்படுக்கையில் ஸ்மரணைநீங்கச் சைத்தியம்வந்து சட்டெனப்பிடித்துச் சன்னிதோன்றி ஜடுதியில் கப்பிக்கொண்டது போலும், அறிவில் மிகுந்த ஆனந்தன், அழகில் பெருத்த அற்புதன், தனக்குக்கிடைத்தும் கடாரென்று பிரிந்துவிட நேர்ந்ததேயென்று தாபப்பட்டு மனம் அதனால் வேகப்பட்டு மெள்ளமெள்ளநடந்து தள்ளாடிக்கொண்டு போகிறாள். இவள் துன்பம் பார்க்கச் சகியாது, வானத்துச் சந்திரன் மேகத்தில் மறைந்து, ஒளிகுன்றி மேற்கடலில் புகுந்துவிட்டான். இவளுடைய பரிதாபநிலைமையை விசாரிக்க வருவான்போன்று, அருணன்உதயமாய் சூரிய உதயத்தைச் சொகுசாய் அறிவித்தான். நக்ஷத்திரங்கள் மறையத்தொடங்கின, தாமரைகள் மலரத்தொடங்கின, சில்லெனக் காற்று மெல்லென வீச ஆரம்பித்தது! மந்திரக்காரர்கள் மாயத்தடியால் காணும் ஜாலவித்தை போல, நக்ஷத்திரங்கள் மறைய, இருள்குறைய, தாமரைமலர, கீழ்வானம் வெளுத்துக் கீர்த்

தியைக்காட்ட, வெள்ளி முளைக்கப் பின்னர் சூரியன் முளைத்தான்! இருட்டின் கொடுமைபோயிற்றே; வெளிச்சத்தின்உதவி விளையநேர்ந்ததே என்று சற்று சந்தோஷம் சித்தத்தில் அடைந்தாள் மனமோஹனமாணிக்கம்!

இப்போது சமீபத்தில் குதிரையொன்று ஓடிவரும் காலடி உரத்துஉரத்துக் கேட்கிறது! ஆயிற்று! வரவர அஃது மனமோஹன மாணிக்கம் நடக்கும் பக்கமாகவே நாடிவருகிறது என்று நன்றாய்த் தெரிகிறது! டாக்டாக் என்று டம்பாசாரி நடையில் 'டல்டம்பர்' தேர்ச்சிபெற்றது போல் டம்பீகரமாய் ஒருவெள்ளைக் குதிரை மெள்ளமெள்ள வருகிறது! கண்டாள் அதைக் கௌரவமாது!"இஃதென்ன அவஸ்தை! எவர் இங்கே என்னை நோக்கி வருகின்றவர் தெரியவில்லையே! புலியைப் பார்த்தாலும் பார்க்கலாம், புருஷனைப் பார்க்க எனக்குச் சரிப்பட வில்லையே! உதவிக்குத்தான் வருகிறார்களோ, அல்லது உபத்திரவத்திற்குத் தான் வருகிறார்களோ! இஃதென்ன சங்கடமாயிருக்கின்றதே! பார்க்கலாம், சற்று யோசிக்கலாம்! சிறிதுநிதானிக்கலாம்!" என்று மனமோஹனமாணிக்கம் எண்ணுததுமெண்ணி ஏக்கங்கொண்டிருந்தாள்!

ஆயிற்று! குதிரையும் வெகு வெகு சமீபத்தில் மிக மிக அழகாய் வருகின்றது! குதிரைமேலே ஒருவன் மதுரை வீரனைப்போல் குந்திக்கொண்டு வந்துக்கொண் டிருக்கிறான்! குதிரை என்னவோ அல்ப சொல்பமான தன்று! தென்னலு ராமன் குதிரைபோ லல்லாது; ஜட்காவண்டியில் ஜாமமோயாமல் வேலை வாங்கப்பட்டும், கூலிக்குக்கூட போதாமல் கொஞ்சம் கொள்ளே காட்டப்பட்டு, வாய்க்குக்கூட போதாமல் வெற்றிலைப் பாக்கைப்போல் கொஞ்சம் புல்லே கொடுக்கப்பெற்று, க்ஷயரோகம் கண்டவன் போல் எலும்பைத் தூக்கி நரம்பைக்காட்டி, மூச்சுவாங்கி காலைத்தாங்கி, காளமேகம்,

> "முன்னே கடிவாள மூன்றுபேர் போட்டிழுக்கப்
> பின்னே யிருந்திரண்டு பேர்தள்ள—எந்நேரம்
> வேதம் போம் வாயான் விகடராமன் குதிரை
> மாதம்போங் காத வழி"

என்று பாடினவாறு நொண்டிச்செல்லும் ஜண்டிக்குதிரை, ஜட்காவண்டிக் குதிரை போலல்லாது; தெற்கே போகச்சொன்னால் வடக்கேயும் வடக்கே செல்லச் சொன்னால் தெற்கேயும்,

திருவொற்றியூருக்குப் போகவேண்டுமானால் திருவான்மியூருக்கும், சதுரங்கபட்டணம் போகவேண்டுமென்றால் கலிங்கப் பட்டணத்திற்கும் போகப் புறப்படுவதும், போகச்சொன்னால் நிற்பதும், நிற்கச்சொன்னால் இழுப்பதும், தப்பித்தவறி அடித்தால் தரையே படுப்பதும், தெருவிலே ஜனங்களைச் சேர்த்துத் தேரும் திருநாளுமாக்குவதும் போன்ற வம்பு செய்யும் வழிதுறைபற்ற குதிரை, 'அக்கரகுரானி' என்ற பாட்டில் தெலுங்கர் சொன்ன திருட்டுக் குதிரைபோ லல்லாது;—எதிரே தோன்றும் இந்தக்குதிரை, நல்ல குதிரை, நாணயக்குதிரை, பார்க்கப் பதினாயிரங்கண் கேட்கும் பாரிஜாதக் குதிரை, நினைக்க நினைக்க ரம்யம்விளைக்கும் நீலவேணிக்குதிரை, ஆயிரம் வராகன் விலை பெற்ற அராபிக்குதிரை, அழகான குதிரை, அற்புதமானகுதிரை! கடலின் அலையைப்போலே பிடரிமயிர் ஆனந்தக்காட்சியை அழகாய் விளைக்கவும், நாட்டியஞ் செய்வதுபோல் நாலுகாலும் நாகரீகம் கொடுக்கவும், வெள்ளிச் சாமான் தங்கச்சாமானால் வித விதமாய் அலங்கரிக்கப்பட்ட உயர்ந்த அந்த உத்தமமான குதிரையைப் பார்க்கும்போதே குதிரை வித்தையில் தேர்ச்சிபெற்ற அதிரூப சௌந்தர்ய முடைய மனமோஹன மாணிக்கத்திற்கு அதன்பால் மனது அதிகமாய் லயித்து விட்டது!

ஆனாலும், உடனே, அவள் சற்றுமேலே உற்றுப்பார்த்தாள்! மதுரைவீரனைப்பழித்த மன்னாருசாமியைப்போல் கத்தி ஒன்றைக் கச்சையில் தொடுத்து, கோணக்குல்லாவைக் குரங்காய் மாட்டி, அங்கிபோட்டு, புஜக்கிருதுகட்டி, ராஜாவானாலும் ராக்ஷதனைப்போல் தோன்றி, குதிரையின்மேல் உட்கார்ந்து, மதுரமில்லாத முகத்தை மஹா சொகுசாய்க்காட்டி, பரசவீணை பல்லில் பேசாமலும், நாவில் கொஞ்சமேனும் நக்ஷத்திரமில்லாமலும், ஒருவன்மிக்க † ஒழுங்குடன் காணப்பட்டான். மன்னாருசாமியைக் கண்டமாத்திரத்தில் மனமோஹன மாணிக்கத்திற்குச் சொல்லமுடியாத மனோவேதனை வெல்லமுடியாமல் உண்டாய்விட்டது.

குதிரைமேல் வந்த கோவேறு கழுதை போல்பவன், மத்தாப்பு போலே மனமோஹன மாணிக்கம் மின்னக்கண்டு, வெகு வெகு ஆசை கொண்டு, குதிரையைக் கொண்டுவந்து குறுக்கே நிறுத்தினான்! அழகைக்கண்டு ஆச்சரியங்கொண்டு, மேனியைக்கண்டு மேன்மேலும் ஆசைகொண்டு, அவன் ஒரு குதி குதித்தான், இறங்கினான்

† ஒழுங்கு— இங்கு ஒழுங்கீன மென்பது பொருள்.

கேழ்! அரசிளங்குமரியாகிய மனமோஹன மாணிக்கம் நடப்பதை நிறுத்தி, என்னவென்று கேட்பவள்போல் எதிரே நின்முள்! உள்ளே அச்சம் உயிரைப்பிடித்திருந்த போதிலும், பட்டதிகில் கரைபுரண்டு பாரவெள்ளமாய் மனதை முழுத்தி மயக்கம் விளைத்திருந்த போதிலும், அரசகுமாரியானதால் அதைரியத்தை வெளியிலே அணுவளவும் காட்டாமல், தைரிய லக்ஷ்மிக்குத் தானமளிப்பவள் போல், "நீயாவன்? எங்கிருந்து வருகின்றனை?" என்று கேட்குமாறு நிதானித்து மனமோஹன மாணிக்கம் நிமிஷநேரம் நின்றமாத்திரத்தில் குதிரை வீரன், நாக்குக்குளற, பேச்சுதடுமாற, பித்தம் தலைக்கேறத் தத்தாபித்தாவென்று தடுமாறுபவர்போல,

"அன்னமே, அபரஞ்சிச் சொர்னமே! எங்கிருந்து நீ இங்கு வருகின்முய்? புலியிருக்குமே, பூதமிருக்குமே, ராசபுத்திரிபோல் நேசரூபத்தோடு விஸ்வாச எண்ணங்கொள்பவள், ஏன் இந்தக் காட்டில், துணையில்லாது இடருற்று வருந்துகின்முய்?" என்று கேட்டான்.

"ஐயா, தாங்கள் இன்னுரென்று எனக்கு விளங்கவில்லை. நான் ராசபுத்திரியல்லள். நான் சாதாரண ஓர் வியாபாரியின் மகள். என்பெயர் மரகதவல்லி. நான் உலகை வெறுத்துப் பணத்தைப் பகைத்துச் சுகத்தைப்பழித்து, வீடுவாசலை யொழித்துத் தவஞ்செய்யலாம், கடைத்தேறலாம் என்று காட்டுக்கு வந்து விட்டேன்; காட்டுக்கு வந்து கண்தெரியா தலைகின்றேன். காட்டிற்கு வந்து கண்ணைமூடித் தவஞ்செய்தால் கடவுள் வந்து உடனே கொண்டுபோவார் என்று புராணம் ஒருவர் பிரசங்கம் செய்து கொண்டிருந்தார். இங்நவந்தேன், இடர்ப்பட்டேன்! கடவுளைக்காணேன், கஷ்டத்தைக் கண்டேன்! பொருளைக் காணேன், புலியைக் கண்டேன்! நல்லது காணேன், நரகமே கண்டேன்!" என்று மனமோஹன மாணிக்கம் பதில் கூறினுள். மறுபடியும்,

"காயிலை தின்றுங் கானி லுறைந்துங் கதிதேடித்
தீயிடை நின்றும் பூவலம் வந்தும் திரிவீர்காள்
தாயினு மன்பன் பூமக ணன்பன் றடநாகப்
பாயன் முகுந்தன் கோயி லரங்கம் பணிவீரே."

என்று பெரியோர் உண்மைசொன்ன பெரியமொழிகளைக் கவனியாது ஊரைச்சுற்றி ஓடியலைந்து, காட்டிற்புகுந்து, கடவுளைக்கா

ணூது கஷ்டமேகண்டு விழிக்கின்றேன்!" என்றுதைரியமாய் மனமோஹனமாணிக்கம் தடபுடலாய்ப்பேசினாள்.

மனமோஹன மாணிக்கத்திற்குக் குதிரைவீரனைக் கண்டமாத்திரத்தில், அவன் தன்னை எப்படியும் விடமாட்டானென்றும், அவன் கோரஸ்வரூபத்தையும், கோணியவாயையும், ஆழ்ந்தகண்ணையும் அகன்றமுகத்தையும், பெரியபற்களையும், பேதாளமூக்கையும் உற்று நோக்கின ஒரு நிமிஷத்தில் அவன் மிக்க அகாதநடையுடையவனென்றும், கள்ளனாயிருந்து ராஜனாயிருக்கக் கூடுமென்றும் அகப்பட்ட ஸ்த்ரீகளை அடித்துக்கொண்டு போகுமவனென்றும் நன்றாய் மனதில் நலமான ஆணிபோல் பலமாகப் படிந்துவிட்டது! மனமோஹனமாணிக்கம் அற்பசொற்பமானவளல்லள்! ஆழ்ந்தயோசனையும் அபாரபுத்தியு முடையவளாய், சமயோசித தந்திரம்செய்து பிரமாத கஷ்டங்களிலெல்லாம் தப்பிச்சென்று தைரியங்காட்டுபவளாய் விளங்கினபடியால், இந்தச்சமயம் எந்த வேஷமாவதுபோட்டு எப்படியாவது தப்பி நற்படியாய்ப் போகவேண்டுமென்று தீர்மானங்கொண்டே, மனமோஹனமாணிக்கம் மாயவேடப் பேச்சை மனதாரப்பேசினாள்.

இதைக்கேட்ட குதிரைவீரன், ஹா ஹா என்று நகைத்து, ஹோ ஹோ வென்று குலுங்கி,

"பைத்தியம் பிடித்த பெண்ணே, இப்படியும் உனக்கு யோகம் எப்படி ஒருவன் சொன்னானோ ஒன்றும் எனக்கு விளங்கவில்லை! அறிவில்லாத முட்டாள்கள், விவேகமில்லாத விழலர்கள், சம்பாதிக்கத் தெரியாத சோம்பேறிகள், சுகம் அறியாத சுக்குமாந்தடிகள், மூச்சைப் பிடித்து பேச்சை யொடுக்கி, சூரியனைப் பார்த்து சுண்டெலிகள் பேசுவதுபோல், கடவுளைப் பார்க்கக் கண்மூடி யுழலுவார்கள்! அந்த மடையர்கள் பேச்சைக் கேட்டு அழகில் மிகுத்தநீ அவதிப்படுவானேன்! உனக்குக் கல்யாணமா யிருக்கின்றதா?" என்று என்னென்னவோ பேசி முடிவுக்குவந்து முட்டாள்தனமாய்க் கேட்டான்.

"எனக்குக் கல்யாணமா யிருக்கின்றது" என்று வெகு சுருக்கமாய் மனமோஹனமாணிக்கம் மிகவுருக்கமாய்ச் சொன்னாள்.

"அடீ! அழகி, சந்திரனைப் பழிக்கும் சுந்தரவதி! பொன்னையிகழும் மின்னொளி! உன்னைக் கொண்டுபோய் உப்பளத்தில் வேலைசெய்யும் உப்புறவனுக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுத்தார்கள்போ

யிருக்கிறது. என்னைப்போல் ஏக சக்ராதிபதிக்குக்கொடுத்திருந்தால் ஏதும் குறைவந்திருக்காது" என்று கூறிவிட்டு, மறுபடியும் "அடீ! ஏந்திழையே! பூந்துளிரே! உன்னைக்கொண்டுபோக உள்ளம் நாடுகிறது. நீ மறுத்தாலும் நான் தரிக்கேன். உன்கணவன் மறுபடியும் வந்தால் உப்பளத்திற்கு அனுப்பிவிடு. இல்லாவிட்டால் சுண்ணும்பு காளவாயில் சுட்டுத் தொலைத்துவிடு. உப்பளத்தில் வேலை செய்யா விட்டால் அப்பளம் செய்து விற்று அகங்களித்து வாழட்டும்! நீ என்னுடன் வந்துவிடு! இல்லாவிட்டால் இருந்து படு என்ன சொல்கிறாய்?" என்று குதிரைவீரன் குசாலாய்க் கேட்டான்.

"அன்பா, அதற்கென்ன தடை? அந்த கணவன், அடுப்பங்கரை வேலைசெய்யும் அற்பன்! வர்த்தகம் செய்த போதிலும் புத்தகம் என்னமோ அவன் கையிலெடுப்பதில்லை! தங்களைப்போல் மஹாராஜா எனக்கு அகப்பட்டிருந்தால், தபம் என்னத்திற்கு, ஜபம் என்னத்திற்கு, ஹர ஹர என்னத்திற்கு, சிவ சிவ என்னத்திற்கு, மொண மொண என்னத்திற்கு, கண கண என்னத்திற்கு? அடுப்பு வேலைக்கே அதிகாரியாகிய அறிவில்லாப் பையல் அவனுக்குமேலே அழகேயில்லாத" என்று சொல்வதற்குள்ளே, ஒரு கோபம் வந்து உள்ளத்தை நடுக்கிவிட்டது ஒய்யாரக்காரனுக்கு! ஆதலாலே அந்தப் பேச்சைச் சட்டென நிறுத்தி "ஹா! ஹா! என்ன சொன்னாய்! அழகிலே அவனுக்கு மேலே யில்லையா?" என்று ஆத்திரத்தோடு குதிரை வீரன் ஆர்ப்பரித்துக் கேட்டான்.

"அப்படிச் சொல்லவில்லை! அவனுக்குமேலே, அதாவது, அவன் உடம்புக்குமேலே அழகு மினுக்கு செய்யவில்லை என்று * * *

"இன்னும் தெரியவில்லை!"

"அவன் உடம்புக்குமேலே அழகில்லை என்று சொன்னேனே தவிர வேறொன்றுமில்லை"

"அவன் உடம்புக்குமேலே நான் அழகில்லையா?"

"அப்படியன்று, மஹாராஜா, நான்சொன்னது!"

"அவனுக்கு மேலே அழகில்லை யென்றால்,—நகையின்மேலே மெருகில்லை; நாற்காலியின் மேலே வார்னிஷ் இல்லை; துணியின் மேலே பளபளப் பில்லை என்று சொல்லுவதுபோல் அவன் உடம்பின்மேலே அழகில்லை என்று சொன்னேன்"

"அப்படியானால்"

"அது தான், ஐயா"

"உடம்பின் மேல் அழகில்லை, அவன் மேலே, அழகில்லை, அவனுக்கு மேலே அழகில்லை. நாற்காலியின் மேலே வார்னிஷ் இல்லை. நகையின் மேலே மெருகில்லை, அவன் மேலே அழகில்லை—ஹோ ஹோ சரி சரி தெரிந்தது! சரி சரி அப்படியா, ஹா ஹா ஹா! நகையின் மேலே மெருகில்லை! நாற்காலியின் மேலே வார்னிஷ் இல்லை. அது போல, அவனுக்கு, மேலே அழகில்லை! துணியின் மேலே பளபளப்பில்லை, அப்படியே அவனுக்கு மேலே அழகில்லை! சரி சரி தெரிந்தது தெரிந்தது! அப்பொழுது அவனுக்கு மேலே (அதாவது அவனை விட) நான் அழகு என்று ஒத்துக் கொள்ளுகிறு யல்லவா?" என்று குதிரை வீரனுகிய குரங்குப் பயல் கொக்கரித்துக் கேட்டான்.

"பேஷ்! அதற்கென்ன சந்தேகம்? அவனுக்கு மேலே அழகில்லை, உங்களுக்கு மேலே அழகு எவ்வளவு இருக்கிறது? சிங்கார கிருதாவும் அலங்காரக் குல்லாவும், அதிகாரச் சொக்காயும் வதைகாரக் கத்தியும்-ஹா! ஹா! இந்த ஆஸ்தான மெங்கே! இந்த ஆர்ப்பாட மெங்கே! அந்த அமரிக்கை யெங்கே அந்த அழகு எங்கே! ஆமாம்! தாங்கள் பார்த்திருக்க மாட்டீர்கள் அந்த முட்டாள் பையனை! அவன் அழகுக்குப் பிச்சையெடுக்கத் தேவையில்லையா?" என்று மனமோஹன மாணிக்கம் மஹாசிலேடையாய்ப் பேசினுள்.

"ஹா ஹா! அந்த அழகுக்கு நானு பிச்சையெடுக்கிறது!" என்று அலறினுன் குதிரைவீரன்.

"எங்காயினு முண்டா? அப்படி யாராயினுஞ் சொல்லுவார்களா? தாங்கள் ராஜா, அவன் தரித்திரன். இயற்கையிலேயே அழகு தங்களுக்கு எவ்வளவோ இருக்கும்! அவனிடம் தாங்கள் போய்ப் பிச்சை கேட்கவாவது!" என்று சாகஸஞ்செய்தாள் சகலகலாவல்லியாகிய மனமோஹன மாணிக்கம்.

"வெல்!* மற்றப்படி அதற்கு வேறு என்ன அர்த்தம் இருக்கக் கூடும்?" என்று ஆவேஸமாய்க் கேட்டான் அதிகப்பிரசங்கி யாகிய அவன்.

"மஹாராஜா, அவனுடைய அழகுக்கு மற்றவர்கள் பிச்சையெடுக்கவேண்டு மென்று நான் சொல்ல வரவில்லை. 'அவன் அழகுக்

* வெல்=நல்லது—ஓர் ஆங்கிலப்பதம்.

குப் பிச்சையெடுக்கத் தேவையில்லையா' என்றால் அவன் அழகுடை யவனாதற்குத் தங்களிடம் பிச்சையெடுக்கவேண்டியதென்று பொருள்கொண்டு சொன்னேனே தவிர வேறில்லை" என்று புன்சிரிப்பு காட்டி புரட்டுப்பேச்சு பேசினாள், மனமோஹன மாணிக்கம்.

"அப்படியா! சரி சரி. 'அவன் அழக்குக்குப் பிச்சையெடுக்கத் தேவையில்லையா?—அவன்—அழகாவதற்கு—என்னிடம் பிச்சை யெடுக்கத் தேவையில்லையா! ஹா! என்ன! மறுபடியும் சந்தேகமா யிருக்கின்றதே! அவன் அழகுக்குப் பிச்சையெடுக்கத் தேவை யில்லையா! எப்படி? அவன் அழகுக்கு—யார் பிச்சையெடுக்கிறது! நானா? ஹோ ஹோ! அப்படியல்லவோ! இல்லை இல்லை! இப்படியோ! அவன்ன்ன்.........அழகுக்கு, அதாவது அவன், தான் அழகுடைய வனாவதற்கு, பிச்சையெடுக்க, என்னிடம் பிச்சையெடுக்கத்—தே வையில்லையோ என்று அர்த்தமோ? பேஷ்! சரிதான்! எப்படி? என்ன! மறுபடியும் சந்தேகம் வருகிறதே! சரி சரி! அவன் அழகுடைய வனாவதற்கு என்னிடம் பிச்சையெடுக்கத் தேவையில்லையோ என்று அர்த்தமோ! தெரிகிறது, தெரிகிறது. எனக்குப் பண்டிதர்களிடத் தில் எள்ளளவும் பழக்கமேயில்லை. இரண்டு பண்டிதர்கள் ஒன் றாய்ச்சேர்ந்தால், என்னென்னமோ பேசுகிறார்கள்! என்னென்ன மோ அர்த்தஞ்சொல்லுகிறார்கள்! வானத்தை வழுதலங்காயாக்கிப் பானத்தைப் பருப்புக் குழம்பாக்கி, தேனைத் திருநாளாக்கி, பேனைப் பெருமாளாக்கி, மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிபோடுகிறார்கள்! அது எனக்குப் பிடிக்கிறதில்லை, சரிப்படுகிறதில்லை, கொஞ்சத்தில் அர்த்தம் பிடிபடுகிறதில்லை! சில க்ளாவர் ராஜாக்கள், இஸ்பேட்ராஜாக்கள் அவர்களை யெல்லாம் சேர்த்து வைத்துக் கொண்டு வீண்வார்த்தை யாடிக்கொண்டிருக்கிறது வழக்கம்! முட் டாள் பயல்கள்! எனக்கு அது சரிப்படுகிறதில்லை. வேலை மெனக் கிட்டவர்கள் என்று அவர்களை யிகழ்ந்து நான் சென்று விடுகிறதே தவிர அவர்கள் கிட்டகூட நெருங்குகிறதில்லை. அதனால் உன் அர்த் தம் எனக்குத்தெரியவில்லை. எனக்குவேண்டியதெல்லாங்கூடி, பைநிறைந்த பொன்னும், வயிறு நிறைந்த சோறும், அழகுநிறைந்த பெண்ணுந்தான்! நீ என்ன சொல்லுகிறாய் பெண்ணே, நீ என்னு டன்கூட வந்துவிடு. என்ன சொல்கிறாய்? சொல்வதென்ன? வந்து விடவேண்டுந்தான்! என்னுடன் வராவிட்டால் உன்னையார் விடு கிறார்கள்?" என்று போர்வீரன் பிடிவாதக்குரல் காட்டிப் பேசினான்.

"நான் தங்களோடுகூட வருவதற்கென்ன ஆக்ஷேபனை? என்னைவிட அழகான பெண்கள் எத்தனையோபேர் தங்களுக்குக்கிடைக்கக்கூடியதாயிருக்க, என்னை யேன் தாங்கள் விரும்புகிறீர்கள்?" என்று மனமோஹன மாணிக்கம் வெகுபக்குவமாய்ச் சொன்னாள்.

"இல்லை, நீ வந்துதான் தீரவேண்டும்!"

"ஆக்ஷேபனை யில்லை! என் அழகு தங்களுக்குப்போதுமா?"

"உன்னைவிட அழகு ஒருவருமில்லை! உன்னையே நான் பட்டபஸ்திரீ யாக்கிக்கொள்ளுவேன்!"

"மெய்தானா?"

"சந்தேகமென்ன?"

"என் அழகு தங்களுக்குப்போதுமா என்பதுதான் சந்தேகம்"

"உன்னைப்போல் அழகு ஒருவருமில்லை யென்று தான் சொல்கிறேனே! இன்னும் என்ன ஆலோசனை!"

"தாங்கள் சும்மா சொல்லுகிறீர்கள். தங்கள் குல்லா அழகுக்கும் கொறுக்குவலி சொகுசுக்கும், புஜகிருது பெருமைக்கும் மதுரைவீர மஹாப்பிரபுத்துவத்துக்கும் என் அழகு எம்மாத்திரம்? தாங்கள் சும்மா அவசரத்தில் சொல்லுகிறீர்கள்! ஆறுநாளாய் விட்டால் ஆரையாவது வேறே அழகாகப் பார்ப்பீர்கள்"

"இல்லை யில்லை! நீயே என் ராஜாத்தி! நீயே என் பட்டபஸ்திரீ! நீயே என் ஆசைக்குகந்த அன்பான மனைவி!நம்பமாட்டாயா?"

"நான் எப்படி நம்புவேன்! முன்னே துஷ்யந்த மஹாராஜன் சகுந்தலையை ஏமாற்ற வில்லையா?"

அப்படி செய்யமாட்டேன். கைபோடவா? சத்தியஞ்செய்யவா? நெய்யில் கைதோய்க்கவா? நெருப்பை எடுத்து நிமிஷத்தில் விழுங்கவா? நீரில் விழுந்து தலை முழுகவா?"

"சரிதான்! நான் தங்கள் வார்த்தையை முற்றிலும் நம்புகிறேன். என்ன செய்யச்சொல்லுகிறீர்கள்?"

"குதிரை மீதேறி என் பின்னால் உட்கார். நாம் ஊர்போய்ச் சேரலாம், காட்டைவிட்டு நாட்டையடையலாம், ஊரை யாளலாம் ஒருமித்திருக்கலாம்." என்று போர்வீரன் ஆர்ப்பரித்துப் பேசினான்.

"அப்படியா, அதற்கென்ன ஆக்ஷேபனை!" என்றாள் மனமோஹன மாணிக்கம்.

"ஆனால், குதிரைமீதேறி யுட்காரு, என்பிறகே யுட்காரு. நாம் இன்னும் நாற்பதுமைல் கடந்தால் தான் நாட்டையடைவோம்" என்றான் போர்வீரன்.

வேறு வழி யில்லாதது கண்டு, மறுத்தாலும் விடமாட்டான் மஹாபாபி யென்பதை நன்றாய் உணர்ந்து மனமோஹன மாணிக்கம், ஒருகுதி குதித்துக் குதிரைமீ தூட்கார்ந்தாள்!

குதிரையேறிய சொகுசைக்கண்டு, குதிரைவீரன் ஆச்சரியப் பட்டது அவ்வள விவ்வளவன்று! அதிரூப சௌந்தரியாகிய அற்புதப்பெண் சாதாரண ஒரு வர்த்தக குடும்பத்தைச் சேர்ந்தவளாயிருந்தபோதிலும் கொற்றமன்னர் குதிரையேறும் உத்தம லக்ஷணத்தோடு ஒரு தோற்றங் காட்டினளே யென்று ஆச்சரியத்தாலே அகம் மிகக்களித்து, போர்வீரனாகிய * புதுக்காலரசன், காட்டின் வழியே வேட்டை போவதுபோல் குதிரையை நடத்திக் குசாலாய்ச் சென்றுகொண் டிருக்கிறான்.

"மரகதவல்லி, இதோபார்! மான்கூட்டங்கள் மருண்டு ஓடுகின்றன! கிளிகளும் குயில்களும் கீதம்பாடுகின்ற அருமையும், வானம் பாடியும் நாகணவாய்ப் புள்ளும் வகை வகையான குரலால் நய நயமான பாஷைபேசும் நாணயப் பெருமையும், மயில்கள் அந்தப்புறம் இறகை விரித்து மாநடமாடி மனதைக் களிப்பிப்பதும் என்ன வேடிக்கையாயிருக்கிறது பார்" என்றான் போர்வீரனாகிய புது அரசன்.

"ஆம்! அன்பரே பாருங்கள், அந்தப்புறம் சுந்தரமாக மந்திகள் எழும்பி மரந்தாண்டிப் போவதும், இந்தப்புறம் நாயும் பூனையும் பல்லையிளித்துப் பார்த்துக் கொண்டிருப்பதும், அதோ அந்த தடாகத்தில் தாமரைகள் மலர்ந்து, குமுதங்கள் படிந்து, செவ்வல்லிகள் சிறந்து, பாலையும் பறக்கடிக்கும் நீர் மிக நிறைந்து என்ன ரம்யமாக என்ன மனோஹரமாக விளங்குகின்றது பாருங்கள்!" என்று மனமோஹன மாணிக்கம் சிங்காரப் பேச்சைச் சிறப்பாய்ப் பேசினாள்.

"ஆம், கண்மணி, அந்தத் தடாகம் கண்ணுக்கு வெகு அழகாயிருக்கின்றது! காட்டில் நான் வந்து கணக்கற்ற மூலைகளில் அளவற்ற நாள் அலைந்து கொண்டிருந்தும், இத்தகைய அழகிய இன்பமான

* புதுக்காலரசன்=புதிதாக அரசனானவன்.

தடாகம் ஜென்மநாள் முதல் கண்டது மில்லை, கேட்டது மில்லை. ஆஹா! என்ன அழகாயிருக்கின்றது!" என்றான் போர்வீரன்.

"அழகு மாத்திரமா! எவ்வளவு குளிர்ச்சியாயும் எவ்வளவு குதூகல முண்டாக்கத் தக்கதாகியும் விளங்குகின்றது பாருங்கள்! இதற்குத் தான் 'திருக்குளம்' என்று பெயரிடவேண்டும். மற்றவற்றை யெல்லாம் 'சாணிக்குளம்' என்றே சொல்லவேண்டும். அதோ பாருங்கள்! கொக்குகள் எவ்வளவு பக்குவத்தோடே கண்ணைமூடி மௌனஞ்சாதித்துக் காரியத்தை முடித்துக் கண்ணைமூடிக் கொள்கின்றன! ஓடுமீ னோடி யுறுமீன் வருமளவும் வாடியிருக்குமாங் கொக்கு' என்று பாட்டியார் சொன்ன பாட்டுக்கிணங்க, மௌனஞ் சாதித்துக் காரிய முடித்தலில் மஹா சாமர்த்திய முள்ளவைகள் அந்தக் கொக்குகள்! இதோ பாருங்கள்! * அரவிந்தங்களுக்கு மேலே அன்னங்கள் உட்கார்ந் திருப்பது, கோயிலிலே லக்ஷ்மி குடிபுகுந் திருப்பதுபோ லிருக்கின்றது! அந்தப்பக்கம் பாருங்கள்! அகப்பட்ட உணவை வகைப்பட்டுத் தின்னாது குரைத்துப் பகைத்துக் கோபத்தோடே நாய்கள் குடிகெட்டுப் போகின்றன! இந்தப் பக்கம் பாருங்கள், காகங்கள் கிடைத்த உணவைப் பெருத்த உதாரத்தோடே, உற்றாரைக் கத்தி யழைத்து ஒருசேரத்தின்று, மனங்களித்து மகிழ்கின்றன! "காகமுறவு கலந்துண்ணக் கண்டீர்" என்று † ஆயுமுள்ள முடைய தாயுமானார் அறைகூவிப் பாடினது அதனாலேயே யென்பதை யாவர்தாம் மறுக்கக்கூடும்." என்று அலங்காரப்பேச்சில் அதிகமாய்ப் பேசினாள் அறிவு மிகப் படைத்த மனமோஹன மாணிக்கம்.

"புத்திசாலிப் பெண்ணே, நீ யென்னமோ வெகு வெகு சிங்காரமாய் மிக மிக அலங்காரமாய்ப் பேசுகிறாயே! எனக்கு ஒன்றும் இவ்வளவுதூரம் தெரியாதே! நீ இவற்றையெல்லாம் எங்கிருந்து கற்றாய்? அழகுக்கேற்றபடி அறிவும் விசேஷமாயிருக்கிறதே! அதிர்ஷ்டம்தா னில்லை, இது வரையிலும், பணம்தான் உன்கையில் அகப்படவில்லைபோ லிருக்கிறது. உனக்கு இப்பொழுது நல்ல காலம் திரும்பிவிட்டது. ஏராளமான பணம் எவ்வளவு வேண்டுமானாலும் நான் தருகிறேன்!" என்று உற்சாகப் பேச்சை உறுதியாய்க் கூறினான், கண்மூடித் தனமாய்க் கௌரவம் வாய்ந்த கழுதைப் பயலாகிய கள்ள அரசன்!

---

* அரவிந்தம்=தாமரை.

† ஆயுமுள்ளம்=ஆராய்ச்சி செய்கிற மனம்.

"உன் பணத்தைக்கொண்டுபோய் உடைப்பில் போட்டுக்கொள். பணம் பெரிதா, மனம் பெரிதா! என் மனச்செயல் எப்போதும் என்னுடன் கூடவே வரும். உன் பணப்பொதி உன்னுடன் அப்படி வருமா? செத்தபின் ஆத்துமாவோடு சிந்தைநிலை எந்த நாளிலும் வந்தேதீரும். நீ செத்தால் உன்பணம் யாரெடுத்தோ போகப்போகிறார்கள்! பணமே பெரிதென்பது வேசியே பெரிதென்பதுபோலாகும்! பத்தாயிரம் ஒருவன் சம்பாதிப்பதாலேயே எத்தாலும் அவன் பெரியவனாய் விட்டானென்று எண்ணினால், இருபதுலக்ஷமும் ஒரே நாளில் சம்பாதிக்கும் இருண்டமன வேசியே எல்லாரைவிட* ஏற்றமுடையவளென்று எண்ணுவது எல்லாவிதத்தாலும் சரியானதாகுமல்லவா? அந்ததத்துவ விஷயம் இந்த சமயத்திலென்னத்திற்கு? சற்றுநேரம் இங்குதங்கி சுத்த ஜலம் பருகி அப்புறம் புறப்பட்டு அகன்று போகலாமென்று தோன்றுகின்றது" என்று மனமோஹன மாணிக்கம் மனவிருப்பத்தைத் தெரிவித்தாள்.

"ஆம்! என் அன்பிற்குகந்த பெண்ணே! அப்படியே செய்து அப்புறம் போனாற் போயிற்று! நீ மாத்திரம் தப்பிப்போகலாமென்று சித்தத்திலும் நினைக்காதே. எங்குபோனாலும் உன்னை எவ்வாற்றானும் விடமாட்டேன். வானலோகத்திற் சென்று மேகத்தோடே மறைந்தாலும், நாகலோகத்திற் புகுந்து பாம்புகளோடேயிருந்தாலும், எங்கிருந்தாலும் சரி, யார்உனக்கு ஒத்தாசை வந்தாலும் சரி, உன்னைநான் ஒருக்காலும் விடமாட்டேன். அதை மனதில் அழகாய்ப் பதித்துக்கொள். கெட்டஎண்ணத்தினால், தானாக வந்த சீதேவியைக் காலாலுதைத்துத் தள்ளாதே, ஆபத்துக்குள்ளாகி அனர்த்தப்பட்டுப் போகாதே!" என்று ஜாக்கிரதைகூறிப் பராக்கிரமப் பேச்சை, போர்வீரன், பலபடியாலும் பேசினான்.

"எங்காயினு முண்டா! அழகில்பெருத்த அறிவாளன்! பணத்தில் மிகுந்த பார்வேந்தன்! உன்னைவிட்டு நான் உளறுவாயன் எவனிடத்தில் எங்கிருந்து வாழப்போகிறேன், நான் உன்மனைவி, நீ உறுதிகூறிய பிரகாரம் உன் பட்டபஸ்த்ரீ, உன் ஆஸ்திக்கெல்லாம் உளமுவந்த † வார்ஸு! நான் எண்ணம் மாறுவேனென்று இமைப்பொழுதும் நினைக்கவேண்டாம்! அதைப்பற்றிக் கனவிலும் தாங்கள்

---

* ஏற்றம்=உயர்வு

† வார்ஸு=பாத்தியக்காரர்

கவலைகொள்ளவேண்டாம்" என்று கள்ளப்பேச்சை மனமோஹன மாணிக்கம் மெள்ளச் சொன்னாள்.

"வெகு சரி, மிகச்சந்தோஷம்! என்னைப்போல் பாக்கியசாலி எவரிருக்கிறார்கள்! என்னைப்போல் யோகசாலி எவரிருக்கிறார்கள்! வெகு நாழிகையாய்க் குதிரைமேல் வந்ததால் வியர்வை மிகுத்து வேதனையா யிருக்கின்றது! இந்தத்தடாகம் என்ன சுந்தரமா யிருக்கின்றது, என்ன சுகமா யிருக்கின்றது, எவ்வளவு குளிர்ச்சியா யிருக்கின்றது, எவ்வளவு குதூகலத்தை யுண்டாக்குகின்றது! மரகதவல்லி, நீ இங்கே கரையிலேயே ஜாக்கிரதையாயிரு. நான் ஒரு நாழிகை நீராடி நன்றாகக் குளிர்ச்சியடைந்து நலமாக வருகின்றேன்" என்று சொல்லிவிட்டு, போர்வீரன் குளத்திலிறங்கிக் குளித்துக் கொண்டிருந்தான்.

மனமோஹன மாணிக்கம், பக்கத்திலிருந்த பூஞ்செடிகளில் பூக்களைப்பறித்து, இஷ்ட தேவதையை யிதயத்திலிருத்தி, "பீடை யகற்றும் பெருமானே, உன் பாதத்திற்கு உளமுவந்த அர்ச்சனை, நான் அகம் மகிழ்ந்து செய்கின்றேன்! எனக்கு வந்த கஷ்டத்தை எப்படியாவது தொலைக்கவேண்டும்! இடரைப்போக்குவதில் இறைவன் உனையன்றி எவரை நான் ஏற்றித்தொழுவேன்! ஆபத்தினின்றும் அடியாரைத் தப்புவிப்பதனால் உனக்கு ஆபத் பாந்தவனென்று பெயராயிருக்கிறது! ஆதலால் என்னைக்காப்பது அன்பா உன்னுடைய கருணையேயாகும்! ஆகாதபாவி, அதர்மப்பாவி, சண்டாளப் பாவி சனீஸ்வரப்பாவி—இவன் கையிற்சிக்கி இழவுபட நேர்ந்ததே —என்ன செய்வேன், எப்படி யுய்வேன்!

மல்லிகையே நின்பதத்தில் மனதாரச்
　　செலுத்துகின்றேன் மன்னா என்றன்
நல்லமனத் தோத்திரமும் நளினமனப்
　　பாட்டாலே நவிலு கின்றேன்
புல்லுகின்றேன் நின்சீரைப் புகலுகின்றேன்
　　நின்புகழைப் புத்தி யென்னும்
வல்லகருப் பூரமதால் வாழ்த்துகின்றேன்
　　தாழ்த்துகின்றேன் வணங்கு வேனால்
அண்ணாவோ ஐயாவோ ஆரமிர்தே
　　அருமருந்தே அடிபு குந்தார்க்
கெண்ணாத நலமளித்து மெதிராத
　　பலமளித்து மெவ்வாற் றானு

நண்ணாத பயனெல்லா நயமாக
நயந்தனை நீ நடுவே வந்து
ஒண்ணாத செயல்துணிந்த ஒருபாவி
யிவன்சாக வுளங்கொ ளாயோ"

என்று பக்தி மிகுந்து பரவச மடைந்து மனத்தாலே பாடி மல்லிகையாலே அர்ச்சித்துக் கொண்டிருந்தாள்.

குளத்திற் புகுந்த கொடியோன், கொஞ்சத்தில் வெளிவராது ஆடியும் பாடியும் நீராழங்காண நீந்திச்சென்று நெடுநேரம் குளித்துக்கொண்டும் வெகுநேரம் வளர்த்திக்கொண்டிருந்தான். இருந்தாற்போலிருந்து ஹாஹோ என்றும் ஐயோ ஐயோ அப்பா அப்பா என்றும் லபோதிபோ என்றும் ஓ என்றகோஷ்டம் மொரோ என்று போட்டும் நீரில் மறைந்துவிட்டான், போர்வீரன்! லடாபிடா என்கிற சப்தம் தடாபிடா என்று கேட்கிறதேதவிர வேறொன்றும் அங்கே விளங்கவேயில்லை. மனமோஹன மாணிக்கம் கூச்சலைக்கேட்டுத் திடுக்கென்றெழுந்து, சுற்றும் முற்றும் சோதிக்கும்போது, நீரிலிருந்து ரத்தம் மேலேபெழுந்து குப்குப்பென்றுதோன்றி சதையும் ஜவ்வும் தோலும் நரம்பும் அங்கு மிங்கும் அடுத்தடுத்துக் காணப்பட்டன. சற்று நாழிகைக்கெல்லாம் அதம்செய்துகொண்டு முதலையொன்று நீரின்மேலே நிலைத்துத்தோன்றிற்று! இப்பொழுது மனமோஹன மாணிக்கத்திற்கு நடந்த உண்மை நன்றாக விளங்கிற்று. அகாதச்செயல் செய்தோனை, ஆகாத முதலை ஆகாரமாய்க்கொண்டது என்று அவளுக்குத் தீர்மானமாய் அப்போது தெரிந்து விட்டது. மனதில் பரிதாபம் மிகவாய் விளைந்தபோதிலும், தர்மம் நிலைக்கத் தயாபரன் அருளினனென்று தைரியங்கொண்டு, மனமோஹன மாணிக்கம், அவனுடைய மூட்டைப் பையை வாட்டமில்லாது அவிழ்த்துப்பார்க்கவும் நல்ல உடைகள் நலமாக அங்கு காணப்பட்டன. அவைகளைத் தான் தரித்து ஆண்பிள்ளையாக அழகாய்த்தோன்றி, கத்தியொன்றைக் கச்சையில் தரித்து, குதிரையை மீண்டும் வெகுவாய் அலங்கரித்து, அதன்மீதே ஆரோகணித்து, நிமிஷமேனும் அங்கே நின்றிராமல், வாயுவேகம் மனோவேகமாக மனமோஹன மாணிக்கம் காட்டைத்தாண்டக் கருத்தில்வைத்து வாட்டம் நீங்கி ஓட்டமாய்ச் சென்றுகொண்டிருக்கிறாள்!

## பதினெட்டாவது அத்தியாயம்.

ஆடம்பராசாரி ஓதனபுரம்.

ஊரெல்லாஞ்சுற்றி உடலம் இளைத்து உள்ளம் அயர்ந்து, ஆடம் பராசாரியும் அப்பளாசாரியும் ஆமவடையாசாரியும் ஓதன புரத் தின் நூதன ஓர் தெருவில் நடுவீதி நாராயணர்கள்போல் நகர்ந்து கொண்டே போகிறார்கள்! இருந்தாற்போலிருந்து பச பச வென்று தூற்றல் ஆரம்பித்து, பட பட வென்று மழை பலமாகத்தொடங்கி விட்டது. துணியும் நனைந்து உடம்பும் நனைந்து, இப்படியும் அப் படியும் பார்த்து, தக்கபடி வீடு நிற்கும்படிகிடைக்காதுபோக, அவர்கள் கடைசியாக எதிரே கண்ணியமான மாளிகை யொன்றைக் கண்டு பிடித்தார்கள்.

அந்த வீடு அழகிய மெத்தைவீடாய் மூன்றடுக்குகள் கட்டப் பட்டு, தெருவே திண்ணை வெகுவாய் அகன்று கிராதியால் சூழப் பட்டு, தரை சலவைக்கல்லால் தளவரிசை செய்யப்பட்டு வெகு பந்தோபஸ்தாய் மிக அந்த அமைதியோடு வெகு சுந்தரமாய் விளங்கிற்று. அதிக மழை ஆரம்பிக்கும்போல் தோற்றினமையால் அங்கே சற்று நாழிகை தங்கிவிட்டுப் போகலாமென்று மூன்று ஆசாரிகளும் முடிவு செய்துகொண்டு, அங்கே வந்து அரை நாழி கை யாவதற்குள், உள்ளே பெரிய கூச்சல் ஓ வென்று ஆரம்பமாய் விட்டது!

"அடே, முட்டாள் பயலே, மூதேவி வாகனமே! ஆயிரம் கொ டுத்தேன், ஐந்நூறு கொடுத்தேன் என்கிறாயே! உன்னை யாரடா கொண்டுவந்து கொடுக்கச்சொன்னார்கள்? கோடி ரூபாய் கொட்டிக் கொடுத்தவர்களெல்லாம் ஓடிப்போய் தலைகாட்டாதிருக்க, பிச்சைக் காரனைப்போல் லச்சை யில்லாமல், ஆயிரம் கொடுத்தேன், ஐந்நூறு கொடுத்தேன் எனறு அலறுகிறாயே! ஓடிப்போ! மறுபடியும் இங்கு வந்தால் மண்டலாபிஷேகம் கிடைக்கும்!" என்று ஒருத்தி ஹா ஹா எனக் கத்தினாள்.

"அப்படியா சமாசாரம், அடி முண்டை, நன்றி யென்பது ஒரு சிறிதும் நன்மை யென்பது வெகு சிறிதும் மனதில் பதிக்காது, உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்வதுபோல் காதகப்பேச்சைக்

கபடமாய்ப் பேசுகிறாயே! அடி பாதகி! என்னிடமிருந்த இரண்டு லக்ஷ ரூபாயையும் இரண்டே நிமிஷத்தில் பைசலாக்கிவிட்டு, வீணாக என்னைத் திட்டிக் 'கோணமாணா' என்று கொக்கரித்துக் கொட்டுகிறாயே! உனக்கு இது நியாயமா! உப்பிட்டவரை உள்ளளவும் நினை என்று ஊரார் சொல்வதையும் காதால் கேட்கவில்லையோ!" என்று பரிதாபக்குரலில் ஒருவன் பட்டப்பரக்கப் பேசினான்.

"அடே! சோம்பேறி! காசுக்குதவாத கழுதை, துப்புகெட்ட துடைப்பக்கட்டை, மூர்க்கம்கொண்ட முறமே! நீ ஆண்பிள்ளையாயிருந்தும், கையில் ஒன்றும் கிட்டவில்லையென்றும் இருந்த காசை இறைத்து விட்டாயென்றும் ஏங்கியழுகிறாயே! பறையனைப்போலப் பாடுபட்டுப் பார்ப்பானைப்போலத் தின்னவேண்டும் என்கிற பழமொழியைத் தெரிந்ததுமில்லையோ, கேட்டதுமில்லையோ! இங்கே எண்டா இழவுகொடுக்கிறாய்! 'லக்ஷம் கொடுத்தேன், கோடி கொடுத்தேன்' என்று குட்டிச்சுவராய்ப் போனவனே, கொட்டிக்குலைக்கிறாயே! உன்னால் ஒரு காசுக்கும் உபயோகமில்லாதிருக்கக் 'கொடுத்தேன் கொடுத்தேன்' என்று கூவிக்கொண்டிருப்பதில் என்ன பலன்! ஒரு காசு இரண்டுகாசு கொடுத்தாலும் ஒன்றும் காரணமில்லாமலா கொடுத்தாய் ஓடிப்போ, நீ இங்கே ஒருநிமிஷம்கூட நிற்கக்கூடாது! கஞ்சியும் வார்க்கமாட்டேன், தண்ணீரும் வார்க்கமாட்டேன், பிண்டப் பிரதானம் * சபண்டீகரணத்தில் தான் கிடைக்கும்! ஓடிப்போகிறாயா, இல்லை ஒருகுடம் சாணியைத்தலையிலூற்றி ஒருபணம் துடைப்பத்தால் ஒரு மண்டலம் பொத்தட்டுமா! நடநட! சும்மா இங்கிருப்பதில் பிரயோசனமில்லை, போபோ!" என்று சண்டைக்காக்கூச்சலிட்டு வம்புத்தனம் செய்துகொண்டிருந்தாள்!

இதற்குள்ளாக, இளவயதுப்பெண் ஒருத்தி இனிய குரலுடன் நடுவே வந்து!

"அம்மா! ஏன் நாம் அடிப்பானேன் திட்டுவானேன்! கஞ்சியொன்றும் இங்கே கெஞ்சினாலும் அகப்படாது! உன்னுடன் பேசிக்கொண்டு ஒரு பொழுதிருக்கவும் ஆகாது! போஎன்றால் போகிறான். அதைவிட்டு வீணாக அவனிடத்தில் நாம் ஏன் எதையும் பேசவேண்டும்! கோவிந்தசாமி செட்டியார் கோடிரூபாயும் பெட்டி நகையும் கொடுக்கிறேனென்றார். இவனால் அதுவும் 'போயிற்று' ராமசாமி முதலியார் ஜாமீனையே யெழுதிவைத்து விடுகிறேனென்றார், அது

* சபண்டீகரணம் = கருமாந்திரத்தில் ஓர் சடங்கு.

வும் இவனால் அத்தமித்துப்போயிற்று! இவ்வளவு நஷ்டம் இவனாலேவந்தும் லக்ஷம் கொடுத்தேன் கோடி கொடுத்தேன் என்று வெட்கமில்லாமல் பேசுகிறானே! சும்மாபோகச்சொல்! இத்தனை நாள் இங்கேதின்றும் இவனால் நஷ்டங்கள் வந்தும், எழுந்துபடியாகும் சமயத்தில் ஏளனமான பேச்சு நமக்கென்னத்திற்கு!" என்று நியாயம்பேசுவதுபோல் அநியாயம் கூறினாள்.

"நல்ல பேச்சுப்பேசினால் நியாயமாய் நடப்பவனா அவன்! அடி செருப்பாலே, போடு முறத்தாலே என்று ஜாடினால் தான் அவன் சம்மதிப்படுவான் வெளியே போக! எந்நேரம் பார்த்தாலும் இவன் இழவு பெரிய இழவாய்ப்போய்விட்டதே!" என்று கிழக்குரலுடன் ஒருத்தி 'சீச்' எனக்கத்திக்கொண்டு உள்ளே போய் ஒரு முறத்தையும் இரண்டு செருப்பையும் எடுத்துக்கொண்டு வந்தாள்.

இதற்குள்ளாக இந்த திருப்பாட்டை யெல்லாம் வாங்கிக் கொண்டிருந்த வாலிபன், தன்னை மறந்து கோபத்தில் மிகுத்து, ஒரு குதி குதித்து, "அடீ, சண்டாள முண்டைகளா! நீங்கள் என் பணத்தை யெல்லாம் அபகரித்துப் போதும் போதாததற்கு வாயில் வந்தபடி வைது அடிக்கவும் பார்க்கிறீர்களா! நான் கெட்டது கெட்டேன்! நன்றாய்க்கெட்டுப்போகிறேன்!" என்று கூச்சலிட்டு, அவள் கொண்டு வந்த முறத்தாலே மூன்று பெயரையும் வேண்டு மட்டும் பூசை மனமாரச் செய்து விட்டான்! பக்கத்தில் வைத்திருந்த சாணிக்குடத்தை யெடுத்து மூன்று பேருக்கும் முகமெல்லாம் அலங்கரிக்கவே, அனைவரும் பொங்கி ஆர்ப்பரித்துக் கட்டியுருண்டு தெருவில் வந்து, லபோதிபோ, சீச் மாச் என்று கூச்சலிட்டுக்கொக்கரித்தார்கள்! அது ஒரு அரிய பெரிய பட்டணமாயிருந்ததால் அரை நிமிஷத்தில் ஆயிரம் பெயர் சேர்ந்துகொண்டார்கள்.

இந்த சமயம் 'இதேதடா! எங்கு போனாலும் சங்கடம் இருந்துகொண்டே யிருக்கிறதே' என்று ஒன்றுந்தோன்றாமல் ஏக்கங்கொண்டு தெருவே வந்து கும்பில் நுழைந்து சண்டை விலக்கிச் சமாதானஞ்செய்யலாம் என்னும் அபிப்பிராயத்தோடே ஆடம்பராசாரியும் அப்பளாசாரியும் ஆமவடையாசாரியும் (கட்டி யுருண்டு கொத்திப்பிடுங்கி, மொத்தி வருந்தும்) மூவரையும் பிடித்து வேறு வேறாய்க்கொண்டு வந்தார்கள்! இதற்குள்ளாக அந்த மூன்று ஸ்திரீகளும் மூர்க்க மனிதனும் சாணியபிஷேகத்தால் சர்வாங்கமும் மறையப்பட்டு, உடம்பு கீறிக்கொண்டதால் உதிரம் அங்கங்கே காணப்

பெற்று, உடல் நடுங்க, வாய் குளற, கண்ணில் நீர் பெருக, மழை விட்டாலும் தூ வானம் விடாததுபோல், சண்டை யோய்ந்தபோதிலும் சண்டித்தனம்மாத்திரம் காட்டிக்கொண்டு மறுபடியும் சண்டை துவக்கச் சர்வசித்தமாய் நின்றுகொண் டிருந்தார்கள்! இதற்குள்ளாக போலீஸ்காரர்கள் ஓடி வந்து யாவர் சண்டையிட்டதென்று சமாசாரம் விசாரித்து, சண்டையிட்ட மூன்றுஸ்த்ரீகளும் ஒரு புருஷனும் கோர்ட்டில் ஆஜராகவேண்டுமென்றும், அதற்காக சம்மன் வருமென்றும், சொல்லிஅவர்கள் பெயர்களை யெழுதிக்கொண்டதோடும், ஆடம்பராசாரியையும் அப்பளாசாரியையும் ஆமவடை யாசாரியையும் சாக்ஷிகளாகப் போட்டுக்கொண்டு தமதிடம் சென்றார்கள்.

சண்டை ஆவேஸம் சற்று அடங்கினவுடன், சாணி உடம்பெல்லாம் சங்கடப்படுத்துவது ஒவ்வொருவர் மனத்திலும் உணர்ச்சி யுண்டாக்கி விட்டது! குளத்திற்குப்போனார்கள், குழாயண்டை போனார்கள்! தலைமுழுகி உடம்புகுளித்து கட்டிய துணியை அவிழ்த்துப்போட்டு வேறே துணியைச் சீராயுடுத்து, இப்படி வந்தார்கள் அப்படிச்சென்றார்கள்! நிதானம் ஏற்பட்டு, கோபமாகிற கிரஹணம் விடுபட்டு அவர்களுக்குக் கண்தெரிந்து அப்போது தான் அறிவு புலப்பட்டது!

ஸ்த்ரீகளுடன் சண்டையிட்ட சீகொட்டிய மனிதன் 'ஹா' என்று ஓடிவந்து ஆடம்பராசாரியை நெருங்கி 'அத்தான்' என்று கட்டிக்கொண்டு 'ஐயோ!' என்று அழத்தொடங்கினான்! ஆடம்பராசாரிக்கும் மறைவு அப்போது தான் நீங்கி,

"அடே அடே! அத்தானா' தெரியாமலே போயிற்றே திருமுக விலாஸம்! ஐயோ, அத்தான், உங்கள் கதி அப்படி, என்கதி இப்படி! ஆனாலும் என்ன சுத்தமாய் அடையாளமென்பதே தெரியாமலேபோய் விட்டதே!" என்று கூறி மறுபடியும் ஆடம்பராசாரி பேசுவதற்கு ஆச்சரியத்தால் சாத்தியப்படாமல், விழித்துத் திகைத்து,

'ஐயோ அப்படியா! ஆ! இப்படியா! என்ன ஆச்சர்யம்! என்ன விந்தை! ஏது! எப்படி! என்னமாய்!' என்று ஆச்சரியச் சொற்களை அடுக்கிக்கொண் டிருந்தார்.

'அத்தான்! நான் தான் கோபத்தில் மறந்து குரைத்துக்கொண் டிருந்தபடியால் உங்களை எனக்குத் தெரியாமற்போயிற்று! நான்

அபிஷேகாலங்க்ருதனும் நாடகக்காரன்போ லிருந்தபடியால் உங்களுக்கு என்னைத் தெரியாமற்போயிற்று! வேறு என்ன ஆச்சரியம்! நான் தான் புத்திகெட்டு தகாத நடக்கையில் ஆழ்ந்து தரித்திரமடைந்தவனானேன். தாங்கள் கையிலுள்ளதை வைத்துக்கொண்டு ஆடம்பரம் செய்தாலும் அளவிற்கு மிஞ்சிப்போகாது காலங்கழித்துக் கண்ணியம் விடாம லிருந்தவர்களாயிற்றே! தங்களுக்கு இப்படித் தலைவிதி நேருவானேன்? அதைக்கேட்க எனக்கு ஆவலாயிருக்கின்றது" என்று ஆடம்பராசாரியை நோக்கி அத்தான் வெகுவான ஆச்சரியத்தோடு வினயமாய்க் கேட்டார்.

"அது இருக்கட்டும்! சாப்பிட்டாயிற்றா?" என்றார் ஆடம்பராசாரி.

"அது இருக்கட்டும்! சமாசாரமென்ன?" என்றார் அத்தான்.

இந்த அத்தான் பெயர் இங்கிதமுதலியார்! இவர் தாம் ஜகன்மோஹன சிங்காரத்தின் கணவர்! எல்லையில்லாத பொருளைப்படைத்தும் தொல்லையில்லாத நிலையிலிருந்தும், தாசிகளுடைய மோசநடக்கையிலும் வேசிகளுடைய விபரீதச்செயல்களிலும் சிக்குண்டு, மனைவியைத்துறந்து, மற்றோரையும் மறந்து கையிலிருந்த காசைக் கணநேரத்தி லொழித்து, அவர், அன்னமோ ராமச்சந்திரா என்று வானத்தை நோக்கி வயிற்றைத்தட்டுகிற சமயத்தில், ஆடம்பராசாரியும் ஐயங்கார் இருவருமாக அங்கு சம்பவித்தது, அப்போது இங்கித முதலியாருக்கு இருந்த பசியையும் மறைத்து பரிதாபத்தையும் குறைத்தது!

இங்கித முதலியாரைப் பார்க்கும்போதே சிங்கார புருஷர் என்று சிறப்பாய்க்கூறுதவர்கள் மறைப்பிலு மிருக்கமாட்டார்கள்! சாணியபிஷேகம் வேணுமான வரையில் நடந்திருக்கும்போதும், அவர் நடப்பதும் அவர் திருப்புவதும் பார்த்தால், ஆச்சரியப்படாமல் யாவரிருப்பார்கள்! ஒய்யாரத்திரும்பலும், படாடோபப் பார்வையும், ✻ கார்க்கைப்போலே கஷ்டத்தில் மிதப்பதும், ஆழத்திலழுந்தாது அபாயத்தில் தப்புவதும், கூடியவரையில், அகப்படும் வரையில் சிற்றின்பச்சேர்க்கையில் சிந்தை செலுத்துவதும், சற்று ஆலோசனை சித்தத்தில் செய்யக்கூடியவர்கள் முதற் பார்வையிலேயே முறையாய்க் கூறி விடுவார்கள்.

---

✻ கார்க்=தக்கை.

சாணி யபிஷேகத்திற்குப் பிறகு ஜல அபிஷேகஞ் செய்து கொண்டு, இங்கித முதலியார் தமது இணையில்லாத உருவத்தை அனைவோருக்கும் காட்டினார். எலுமிச்சம் பழத்தைத் தோற்கடிக்கும் எதிரில்லாத அவரது சிகப்பு நிறமும், வளைந்த புருவமும், நீண்டமூக்கும், வாயின் அழகும், கருடன் கழுத்தும், உருண்டு திரண்ட தோளின் மாட்சியும், அகன்று பரந்த மார்பின் காட்சியும் அனைவரும் மெச்சத்தக்கவையாயிருந்தன! கஷ்ட தசையில் கஞ்சியகப்படாத காலத்திலும் சம்பிரமென்னவோ கடுகளவும் குறையவில்லை. ஆனால் இவ்வளவு அழகு இலக்கணமாயமைந்த இவர்க்குப் புத்தி ஏன் தடுமாறிக் கஷ்டத்தில் விழவேண்டும்! சாமுத்திரிகா சாஸ்திரம் பொய்யா, அல்லது, உருவம்பார்த்துப் பெருமை கூறுவோர் உளறுபடி செய்கின்றனரா என்று சந்தேகம் நம்மனதில் சங்கடம் விளைக்கின்றது!

சாஸ்திரம் தப்பில்லை, கூறுவோரும் பிழையில்லை! எல்லாவற்றையும் சொன்னோம், உல்லாஸக்கண்ணை உற்று நோக்குங்கள்! தேவதா சிந்தனையை ஏறெடுத்து நோக்காமலும், உயர்தர வித்தையை உள்ளத்தில் விரும்பாமலும், கர்மம் என்பது சுழன்று, கண்ணுய் வந்து திரண்டதுபோல் கண்கள் இரண்டும் காட்சி கொடுக்கின்றன கண்களின் போக்கே காமத்தை காட்டுகின்றது! கள்ளக்கண்ணும் காமக்கண்ணும் தம்மைத்தாமே காட்டிக்கொடுக்கும்! ராஜதீரனுகவும், ரஸிக கம்பீரனுகவும் இருக்க வேண்டிய இங்கித முதலியார், * காணு உலகத்தின் கர்மச்சேர்க்கையாலும் † காணும் உலகத்தின் கண்களிரண்டாலும், கவலையிலகப்பட்டுக் கலக்கங்கொண்டு கடலிலகப்பட்ட துரும்புபோல தினம் தினம் வருந்தி உடலம் நொந்து உள்ளங் கலங்கி உருக்குலைந்த நிலையில் உருக்குலைந்து நிற்க நேரிட்டது. "தாங்கள் இந்த ஸ்திதியில் வந்ததைப்பற்றித் 'தகவல்' எனக்கொன்றும் புரியவில்லை. ஆகையால் ஆதியோடந்தமாய் எனக்குத் தெரிவிக்க வேண்டுகிறேன்," என்று இங்கித முதலியார் ஆடம்பாசாரியை இனிமையாய்க் கேட்டார்.

அதன்மீது ஆடம்பராசாரி நடந்த விஷயங்களை யெல்லாம் இங்கித முதலியாருக்கு இம்மியளவும் விடாமல் எடுத்துக்கூறி,

---

* காணு உலகம்=கண்ணுக்குப் புலப்படாத மனம் முதலிய சூக்ஷ்ம தேசம்.

† காணும் உலகம்=கண்ணுக்கு வெளியே தெரியும் பஞ்சபூத ப்ரதேஸம்.

இங்கித முதலியார் கதையை இயம்பும்படியாக, அவரைக்கேட்டு ஆவலோடு காத்துக்கொண்டிருந்தார்.

இங்கித முதலியார் இளைப்பாறுவதற்கும் கவலை மாறுதற்கும் இரண்டுதரம் பெருமூச்சை இருந்திருந்துவிட்டு, ஒரு நிமிஷம் உயர ஆகாயத்தைப்பார்த்து இரண்டு நிமிஷம் தலையிறங்கிப் பூமியை நோக்கி, மறுபடி ஒருதரம் பெருமூச்செறிந்து, பின் வருமாறு பெருமையுங்காட்டிப் பெருங்கதையாய்ச்சொல்வாராயினர்:

"அத்தான், என் கதையை என்னவென்று கேட்கிறீர்கள்! என்னுடைய மனம்போன போக்கும் பணம்போன போக்கும் என்னகாலக்கேடு, என்ன புத்திக்குறைவு என்று நான் எடுத்துச்சொல்லுவேன்! உங்களுடைய தங்கை என்னுடைய மனைவி, இனிய குணம்படைத்த ஜகன்மோஹன சிங்காரம்,........................

'ஜகன்மோஹன சிங்காரம்' என்றும் பெயர் சொல்லும்பொழுதே, 'கோடு கோடு' என்று ஆறுய்க் கண்ணில் நீராய்ப் பெருக்கி, 'ஐயோ' ஒஓஓஓஓ என்று ஐந்து நிமிஷம் கத்தினர் ஆடம்பராசாரி.

இதைக்கண்ட இங்கித முதலியார், தன்னையும் மறந்து தன் ஆர்ப்பாட அமர்த்தலையும் முற்றிலும் துறந்து, 'ஐயோ அப்பா குய்யோ முறையோ' என்று ஒரு நாழிகை பரியந்தம் ஓரே கத்தாய்க் கத்தினர்.

சற்று நேரத்திற்கெல்லாம், இங்கித முதலியார் ஸ்வாதீனத்திற்கு வந்து, சித்தம் நிலைத்து உற்றுப்பார்த்தார் ஆடம்பராசாரியை! அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக சுவரில் சாய்ந்து முகத்தைத்துடைத்து ஆடம்பராசாரி * ஆழாழியிலழுந்தி நீராழங்காண்கிறார்! உலகத்தை மறந்து உணர்வையுந்துறந்து நாணமும் பறக்க நாகரீகமும் இறக்க, தெருவில் கும்பு சேர்ந்துகொண்டிருப்பார் கேலியும் சிறக்க, பட்டாணி கொடாததால் அழும் முட்டாள் பையனைப்போல், ஆடம்பராசாரி, 'ஐயோ தெய்வமே, குய்யோ முறையோ' என்று மூச்சுவாங்கி மூன்றே பேச்சை முக்கால் மணி நேரம் இழுத்துக்கொண்டு விக்கி விக்கி யழுது முக்கி முக்கித் தேம்பிக்கொண்டிருக்கிறார்!

---

* ஆழாழி யென்றால் சமுத்திரம். அழுத கண்ணீர் சமுத்திரம்போல் நின்றது என்று அலங்காரப்பொருள்.

இதைப்பார்த்த இங்கித முதலியார், ஆடம்பராசாரியை நோக்கி,

"அத்தான்! ஜகன்மோஹன சிங்காரம் என்று பெயர் சொன்ன மாத்திரத்தில் ஏன் இப்படி அழுகிறீர்கள்? அவள் இறந்து விட்டாளா? அல்லது வேறென்ன சமாசாரம்? எல்லாம் தெரிந்த தாங்கள் இப்படி அழுதுகொண்டிருந்தால், எப்படியாவது மற்ற சமாசாரம்? என்ன விசேஷம், ஏது சமாசாரம்? எங்கிருக்கிறுள்? எப்படியானுள்? இருக்கிறுளா? இல்லையா? பார்ப்பேனு? பார்க்கமாட்டேனு? இறந்து விட்டாளோ? நோயானுளோ? வருத்தத்தாலே பேயானுளோ? இல்லாமையாலே நாயானுளோ? ஒன்றுந் தெரியவில்லையே, எதுவும் சொல்லவில்லையே! அத்தான், இதோ, என்னைப்பாருங்கள், இப்படித்திரும்புங்கள், ஏதாவது கூறுங்கள், என்ன மயக்கமா, ஏது தியக்கமா? அத்தான் அத்தான்!" என்று அரைமணி நேரம் செல்லாய்த்தின்று கரையானுய் அரித்து விட்டார்.

அதன் மீது ஆடம்பராசாரியார், மறுபடி ஒருதரம் வானத்தைப்பார்த்துத் திரும்பவும் ஒருதரம் பூமியைப்பார்த்து, "அத்தான், நீங்கள் தான் அவளைவெறுத்து நெடுக முக்காடிட்டுக்கொண்டு வந்து விட்டீர்களே! இப்பொழுது அவளைப்பற்றி இல்லாத கவலை ஏன் எடுத்துக்கொள்ளுகிறீர்கள்! கூடப்பிறந்த குறைக்கு நானுங் கவனியாது நலங்கெட்ட சண்டாளனானேனே!" என்று மீண்டும் ஒருமுறை குலுங்கிக் குலுங்கிக் குரல்விட்டு வெட்கம் விட்டுக் கோவென்று கதறினுர்.

"அத்தான், நீங்கள் சொல்வது எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. நான் தான் மதிகெட்டுச் சதிகாரனுய்த் திரிந்தேன். தாங்களும் உங்கள் தங்கை விஷயத்தில் என்ன குறைசெய்தீர்கள்? அதைச் சொன்னுல் தான் அப்புறமாவது சாப்பிட எனக்கு மனம் வரும்" என்று இங்கித முதலியார் இதயம் வருந்தி என்னென்னவோ தொந்தரை செய்துகொண்டிருந்தார்.

இதன் மீது ஆடம்பராசாரியார், தாம் கலியாணத்திற்குத் தங்கையை வரச்சொன்னதும், மனைவி பேச்சைக்கேட்டு மதிக்காமற் சென்றதும், கையில் காசில்லாது, கூடவரத் துணையில்லாது ஜகன்மோஹன சிங்காரம் எங்கேவருந்தி எக்கதியா யிருக்கிறுளோ என்று தம்மனம் வருந்துவதும், பிறகு கல்யாணம் தடுமாறி அலங்கோலமானதும், தாம் சண்டைபோட்டு இந்த விதமாய் வந்ததும் ஆகிய

எல்லா சமாசாரங்களையும் இங்கித முதலியாருக்கு எடுத்துக் கொட்டினார்.

இவற்றை யெல்லாம் கேட்டிருந்த இங்கித முதலியார், "அத்தான், என் விஷயத்தை அமைதியாய்க் கேளுங்கள்" என்று வினய விண்ணப்பஞ் செய்து பின்வருமாறு சொல்வாராயினர்:

"அத்தான், நான் சிறியபோதிலிருந்தே துன்மார்க்க சகவாஸத்தினால் சன்மார்க்க நடைவிட்டு, தாசிகள் வீட்டிற்கும் வேசிகள் வீட்டிற்கும் தாராளமாய் நடந்து கொண்டிருந்தேன். எனது கல்யாணம் நடந்தபிறகும் அதே நடையில் ஆசைவைத்து, அழகான மனைவியை அந்தரத்தில் அலையவிட்டு, ஆகாசத்தில் பறக்கவிட்டு, அவலக்ஷணம் பிடித்த பெண்ணொருத்திமேல் ஆசைவைத்து, அவளை யிழுத்துக்கொண்டு அங்குமிங்கும் திரிந்துவரும் நாளில் அகஸ்மாத்தாய் ஒரு நாள் அஷ்டமச்சனி பிடித்ததுபோல் ஆகாத சுரம்கண்டு அவள் மாண்டுவிட்டாள்! அத்தான், இப்போது அழுகிறீர்களே நீங்கள், அதற்குமேல் ஆயிரம் பங்கு அதிகமாக அப்பொழுது நான் அழுது தொலைத்தேன். அப்புறம் நான் அங்கிருந்தும் புறப்பட்டு, இந்த ஊர் கடைத்தெருவாக வந்து, எந்தவீதி தாசி வீதியாயிருக்கும், எந்த வீடு வேசி வீடாயிருக்கும் என்று எதிர்பார்த்துக் கொண்டே இந்த வீட்டுக் கெதிரில் ஏங்கிநின்றபோது, இந்த சன்னலிலே இப்பொழுது பார்த்தீர்களே, அந்தப்பெண் குந்திக்கொண்டு, "சுந்தர ரூபனே சொகுசுள்ள மாரனே" என்று சிங்கார ஜாவளி யொன்றைச் சிறப்புடன் பாடிக்கொண்டிருந்தாள்! நானும் ஆவென்று நடுத்தெருவில் நின்றேன்! அவளும் வா என்று ஆதரித் தெழுந்தாள்! உள்ளே சென்றேன், இன்று, உதைபட்டு நின்றேன்! இன்று கூடவந்து சண்டைபோட்ட கிழவிகள் அன்று என்னென்ன அருமையான உபசாரம் அன்பாகச் செய்தார்கள்! எனக்கு மருந்திட்டார்களோ, என்னென்ன மாயம் செய்தார்களோ, எனக்கு ஒன்றும் தெரியாது! அது முதல் அவர்கள் சொன்னபடி கேட்கிறதும், அவர்கள் இட்டஏவலை அணுவளவும் தாமதமில்லாமல் அப்போதேசெய்து முடிக்கிறதுமாக நான் அவர்களையே நல்ல சாம்ப்ராஜ்யமாக நம்பியிருந்து விட்டேன். என்னுடைய இணையற்ற பங்களாக்களையும் தோட்டத்தையும் துறவையும் வீட்டையும் வாசலையும் ஆனைத்தையும் விற்று ஆயிரம் ஆயிரமாக ரூபாய்களை அவர்களுக்கே நான் அர்ப்பணஞ் செய்துவிட்டேன். மொத்தத்தில் ரூபா லக்ஷத்திற்குமேல், இரண்டு

லக்ஷத்திற்குமேல் ஆகிறது! மனைவியை மறந்தேன், மக்களை மறந்தேன், உங்களை மறந்தேன், உற்றாரை மறந்தேன்! இப்போது நான் இந்தக் கதியானேன். கையில்பணம் காற்றாய்ப் பறந்ததும், வயிற்றிற்குச் சோறும் வழியாய்ப் போடாது வாயிற்கு வந்தபடி திட்டி.... நீங்கள்தான் இப்போது நிதரிசனமாய்ப் பார்த்தீர்களே, இந்தக் கதியாய்ச் சந்தியில் நின்று சஞ்சலப்பட லானேன்!

ஹா ஹா! நான் மஹாபாபி! நல்ல மனைவியை வருந்த விட்டு நலங்கெட்ட முண்டைகளிடம் வகைகெட்டு நின்றேனே! நான் இனிமேல் நம்பவே மாட்டேன், ஈனத்தொழில் புரியும் இந்தத் தாசிகளை! எனக்கு புத்தி இப்போது தான் வந்தது! கண்கெட்ட பிறகு சூர்ய நமஸ்காரஞ் செய்வதுபோலேயும், 'மொகடு சச்சின வெனக முண்டகு புத்தி' வந்ததுபோலேயும் பிச்சைக்கார னானபின் எனக்குப் பிடரியில் புத்திவந்தது!

* வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தால்
பெருந்துய ரிடும்பையிற் பிறந்து
கூடினேன் கூடி யிளையவர் தம்மோ
டவர்தருங் கலவியே கருதி
ஓடினே னோடி யுய்வதோர் பொருளா
லுணர்வெனும் பெரும்பதந் தெரிந்து
நாடினேன் நாடி நான் கண்டு கொண்டேன்
நாராயணா வென்னும் நாமம்.

போனது போயிற்று, அத்தான், எழுந்திருங்கள்! ஐயங்கார் ஸ்வாமிகளே எழுந்திருங்கள்! அடுத்த தெருவில் அழகான சத்திரமொன்றிருக்கின்றது! அங்கே சென்று சாப்பிட்ட பிறகு ஆலோசனை செய்யலாம் மற்றவைகளைப்பற்றி. எழுந்திருங்கள், எழுந்திருங்கள்!"—இவ்வாறாக அவசரப்படுத்தி இங்கித முதலியார் எல்லாரையும் உடனே எழுந்திருக்கச்சொல்ல, ஒவ்வொருவராய் வேண்டா வெறுப்புடன் மெள்ள மெள்ள எழுந்திருந்து, ஆலஸ்யத்தோடே அடிமே லடி வைத்து ஐயங்கார் சத்திரத்திற்கு அமைதியாய்ப் போய்க்கொண் டிருக்கிறார்கள்!

---

* திருமங்கையாழ்வார் பெரிய திருமொழி.

## பத்தொன்பதாவது அத்தியாயம்.

எதிர் பாராத அகாத விளைவு.

ஓர் நாள் பகல் மூன்றுமணியிருக்கும்! வெய்யில் அதிகமாதலால் வியர்வை மிகுத்து, சொல்லமுடியாத 'சுள்ளாப்பு' வெல்லமுடியாமல் விளைந்துகொண்டிருக்கும் சமயத்தில், ஐந்து போலீஸ் சேவகர்களும் அவர்களுக்குத் தலைமையாய் ஒரு இன்ஸ்பெக்டரும் வந்துகொண்டிருக்கிறார்கள்! பூனை எலிகளை மூலை மூலையாய்த்தேடி முகர்ந்து நோக்குவதுபோல், சந்தும் பொந்தும் மூலையும் முடுக்குமாகிய எல்லா இடங்களிலும் ஏதோ ஒன்றை எப்படி யெப்படியோ தேடி இளைத்துக் களைத்து ஓரிடத்தில் அவர்கள் ஒதுங்கி நின்று யோகஞ் செய்வதுபோல் மெள்ள மெள்ள யோசனைசெய்து பேசத் தொடங்கினார்கள். முதலில் அவர்களுள், கொட்டாப்புளி யென்பவன் மட்டப்பலகையைப் பார்த்து,

"அடே, மட்டப்பலகை, என்னடா மௌனஞ் சாதிக்கிறாயே! உனக்கு எல்லாம் ஒன்றுதான்! 'எல்லப்ப செட்டிலக்க ஏகலக்க' என்று திருடனும் யோக்கியனும், மடையனும் * மாந்தாதாவும், நல்லவனும் பொல்லாதவனும், சாணிச்சட்டியும் சரிகைச்சட்டியும் எல்லாம் ஒன்று, எல்லாம் பிரம்ஹமயம் எனப்பாவித்து ஏக்கமற்று எங்கெங்கேயோ பார்த்துக்கொண்டும் ஏதேதோ நினைத்துக்கொண்டுமிருந்தால், திருடனைப் பிடித்துத் தீரங்காட்டுவது எப்படி?" என்று உதட்டில் ஏளனச்சிரிப்பும் கண்ணில் கடூரப்பார்வையும் காட்டிக் காரப்பேச்சைத் தீரமாய்ப்பேசினான். இதைக்கேட்ட மட்டப்பலகை, கொட்டாப் புளியைநோக்கி,

"அடே, கொட்டாப்புளியே! † எட்டாப் புளியையும் இழுத்துப்போட்டுக் கொட்டாப்புளியாலே முட்டாள் தனமாய் மோதியடித்து விட்டால், எல்லாக் காரியமும் சல்லாபமாய் முடிந்து விட்டதென்று உல்லாஸப் பேச்சை உறுதியாய்ப் பேசி விடலாமா! எல்லாவற்றையும் ஒன்றாய்ப் பொல்லாப்பில்லாமல் நினைத்து விடுகிறேனென்று, மட்டப்பலகை யென்னும் பெயரைத் திட்டமா யெனக்குத்

---

* மாந்தாதா = முன்காலத் திருந்த ஒரு மஹாராஜா.

† குற்றமேற்படாதபோதும் வலுவில் குற்றஞ் சாட்டித் தண்டித்தல்.

திருத்தமாய்க் கொடுத்து விட்டீர்கள்! குற்றம் ஏற்படாத வரைக்கும் * நற்றவனென்றே எவனையும் நினைக்கவேண்டும். உன்னைப்போலே, பார்த்த மாத்திரத்தில் உதை, கேட்டமாத்திரத்தில் அறை, சொன்னமாத்திரத்தில் வதை என்று தர்மத்தைப் பாராமலும் தயாளமென்பதைக் கொள்ளாமலும், தடியடிக்காரனுயிருப்பது மாத்திரம் சரியா? போடாபோ, பேயா, அதைப்பற்றித்தான் உனக்கு ஆருக்குமஞ்சாத கொட்டாப்புளி, மந்திரத்துக்கும் அடங்காத மரமேறிப் பாம்பு, என்று பற்பல பெயரைப் பாரதமாய்க் கொடுத்திருக்கிறார்கள்!" என்று அதிக ஏளனப் பேச்சை † அதரக்கோணலால் காட்டி அகங்காரத்தோடே கூறினன்.

"ஆனல், என்னடா! நாம் வந்தவேலை என்ன? நீயிருக்கும் பராமுக முன்ன? இது நியாயமா? நாம் செய்யும் வேலையை நலமுற நடத்தினலன்றே நமக்கு ‡ ப்ரமோஷன் கிடைக்கும், நாமும் அதிக சந்தோஷமாய் ஆர்ப்பாடம் செய்யலாம்" என்றான் கொட்டாப்புளி.

"ஆனல் அக்கிரமஞ் செய்யச்சொல்லுகிறாயா?" என்றான் மட்டப்பலகை.

"எல்லாரையும் ஒன்றாய் நினைத்துப் பொல்லாதவரையும் போகவிட்டுத் தூங்கிவிழுந்து தூபம் போட்டுக்கொண்டிருந்தால் எப்படித் திருடனைப் பிடிப்பது, எப்படித் திண்டாடிப்போவது?" என்றான் கொட்டாப்புளி.

"பிடித்தாலும் பிடிக்கா விட்டாலும் அக்கிரமஞ் செய்யக்கூடாது என்பது அடியேனுடைய கக்ஷி" என்றான் மட்டப்பலகை.

"மீனம் மேஷம் பார்த்துக்கொண்டிருந்தால், யாதொரு காரியமும் பேருக்கேனும் நடவாது"

"நடவாதுபோனாலும் தகாதகாரியம் நான் செய்யமாட்டேன்"

"செய்யா விட்டால் வேலைபோய் விழிக்கவேண்டும், சோறில்லாமல் தவிக்கவேண்டும்"

"என்ன, ஏது?" என்று வந்தார்கள் எல்லாச் சேவகர்களும் இன்ஸ்பெக்டர் துரையும்.

---

* நற்றவன்=நல்ல தவஞ் செய்யும் பெரியவன்.

† அதரக்கோணல்=உதட்டின் கோணல்.

‡ ப்ரமோஷன்=உத்யோக விருத்தி சம்பளம் அதிகம்.

நடந்ததைக்கேட்டு, நகைத்துவிட்டு, இன்ஸ்பெக்டர்,

"அடே! மட்டப்பலகை, நீ இந்த டிபார்ட்மென்டுக்கு உதவமாட்டாய், எல்லாரையும் நல்லவர்களென்று இளித்துக்கொண்டிருந்தாராமே, ஏழை நெஞ்சுடைய தர்மராஜா ஒருவர்! அவரிடத்தில் போய் நீ அதிகாரம் செலுத்தி ஆபாஸப்பட்டு அகன்று போகவேண்டுமே தவிர, உண்மையைக் கண்டுபிடிக்கவும் உன்னாலாகாது, சம்பளம் அதிகப்படுத்திக் கொள்ளவும் சாகஸம் கிடையாது; திருடனைப் பார்த்தாலும கிருஷ்ணனு யிருக்கக் கூடுமென்று 'தீவட்டிசலாம்' போட்டுப் போக விட்டு விடுபவன் நீ! அந்த கொட்டாப்புளியே சரி! இந்தப்புறம் நிற்கும், 'ஈட்டியெழுபது' என்பவனும் 'எடுத்து விழுங்கு' என்பவனும் 'குத்திக்கிளறு' என்பவனும் மெத்தப்புத்திசாலிகள்! அவன் ஈட்டியால் குத்த, இவன் முதலே பிஸ்மல்லா செய்ய, அவன் பிள்ளைப் பூச்சியை மெள்ளவிட்டுத் தொளைத்துத்தோண்ட, எல்லாருமாயிருந்து இயலாத வேதனை விளைக்க—அப்போதல்லவா உண்மை அப்பா என்று வெளிவரும்! அதைவிட்டு, தும்மினால் 'ஹர' என்றும் இருமினால் 'சிவ' என்றும் பல்லிபேசினால் பல்லையிளித்து, 'கோவிந்த கோவிந்த' என்றும், திருடனைக்கண்டால் 'கிருஷ்ண' 'கிருஷ்ண' என்றும் நீ தீரம் நீங்கிய வானம்பாடிக் குருவியாயிருந்தால் திருட்டை யெப்படி கண்டுபிடித்து நீ உருப்படப்போகிறாய்." என்று சுருக்கென் னும்படி கருக்காய்ப்பேசினார்.

"எஜமானே, நீங்கள் என்னைக் கோபிக்கக்கூடாது. ராஜாங்கத்தார் என்ன இப்படியா செய்யச்சொல்லுகிறார்கள்! சித்திரவேதனை செய்யாமல் உத்தமவழியில் உண்மை கண்டு பிடிக்கவேண்டு மென்று சட்டங்கள் வெகு திட்டமாய்க் கூறுகின்றன! தாங்கள் சொல்வது தர்மமாய் எனக்குத்தோன்ற வில்லை!" என்று மட்டப்பலகை விளக்கமாய்க் கூறினான்.

"அடே நீ * 'அன்பிட் பெல்லோ'( Unfit fellow)! கோவிலுக்குப் போய்க் கும்பிட்டுக்கொண்டிரு! நாதமுனி ஹாழ்வாரை வேதம் சொல்லி ஹேள்ளப் பண்ணிக்கொண் டிரு! போடாபோ பைத்தியக்காரா, தைரியம்வேணும், துணிச்சல்வேணும், வீரம் வேணும், பராக்கிரமம் வேணும், அதையெல்லாம் விட்டு அடுப்பங்கரையில் கும்மட்டிதத்துவம் குமரிகள் பேசிக்கொண் டிருப்பது போல, வெட்கம்

---

* அன்பிட்பெல்லோ=தகுதியற்ற மனிதன்.

கெட்டு, நாணம் விட்டு, பெட்டைப்பேச்சைச் சட்டமாய்ப் பேசிக் கொண்டிருக்கிறாயே" என்று கோபத்தோடே இன்ஸ்பெக்டர் குரைத்துக்கொண் டிருந்தார்.

"ஹா! ஹா! சபாஷ்! ஐயா, எஜமானே, நியாயம் சொன்னால் அநியாயமாய் வைத்துக் கொள்ளுகிறீர்களே! சட்டத்தின் விருப்பம் நியாயத்திற் கொத்ததென்றும், ராஜாங்கத்தின் நோக்கம் தர்மத் திற்கென்றும், அவற்றைக்கடந்து அதர்மவழிகளில் நாம் பிரவேசிக் கக்கூடாதென்றும் என்னமோ நான் சொன்னால் எதையோ தாங் கள் வைத்துக்கொள்ளுகிறீர்களே! அதற்கு என்ன அடியேன் செய் யக்கூடும்" என்று * விநயச்சிரிப்போடு நயமாய்ப்பேசினான் மட்டப் பலகை.

"அடே! இவன் அதிகப்பிரசங்கி! இவன் பெயரை எழுதிவை! இவனை † டிஸ்மிஸ் செய்து விடவேண்டும். ஊருக்குப் போனதும் பேரையெடுத்து விடவேண்டும், பெரிய துரைக்குச்சொல்லவேண் டும்!" என்று இன்ஸ்பெக்டர் ஏதேதோ கோபம் செய்து கொண் டார்.

"இதற்குள்ளாக, மற்றவர்கள் வந்து, "ஆமாம்! இவனால் நம் காரியம் கெடுகிறதே தவிர, கடுகளவும் பிரயோசனமில்லை! இவன் நல்லவன் கெட்டவன், யோக்கியன் அயோக்கியன் என்னும் பகுத் தறிவுடையவனென்றும் தராதரம் தெரிந்து தக்கபடி நடப்பதால் தான் மட்டப்பலகையென்று காரணப்பெயர் வந்ததென்றும் மதி யற்றவர்கள் சொல்லுகிறார்கள்! எது எப்படியானாலும் இவனைக் கேலிக்காக நாம் மட்டப்பலகையென்று சொல்வதால் மட்டப்பல கையல்ல என்று அர்த்தம் ஆகிறதல்லவா! என்னமோ ஓழிகிறான்! இந்த தர்மப்பேச்சும் மனச்சாட்சியும் வைத்துக்கொண்டிருந்தால் சித்தம் எப்படித் துணியும்? ஆம் ஊம் என்றால், சட்டம் அப்படிச் சொல்லுகிறது, ஞாயம் இப்படிப்பேசுகிறது, துரைத்தனக் கொள் கை இப்படியாயிருக்கிறது என்று தத்துவம் பேசிவிட்டால் காரியம் ஆய்விட்டதா! எழுத்தில் சொல்வது இருக்கிறதுதான் ஒருபக்கம்! நடத்தையில் காட்டும்பொழுது நாமல்லவா செய்யவேண்டும்! அதை விட்டு ஆகமமும் சாஸ்திரமும் அடிக்கடி பார்த்துக்கொண்டு காலம் போக்குவதில் யாதுபயன்? ஆதலால், எஜமானே, தாங்கள் சொன்

* விநயம்=வணக்கம்.

† டிஸ்மிஸ்=வேலையினின்றும் நீக்கல்.

னபடி இவன் பெயரை எட்டில் தாக்கல் செய்துகொண்டு ஊருக்குப்போய் நீக்கல் செய்து விடுவது தான் உத்தமம்!" என்று இன்ஸ்பெக்டர் பக்கம் இச்சகம் பேசினர்கள்.

இப்போது இருந்தாற்போ லிருந்து, "இருங்கள் சப்பா! உஸ் உஸ்! பேசாதிர்கள், சும்மா கவனித்துக்கேளுங்கள்!" என்றன் சட்டியெழுபது.

"ஆமாம்! உஸ்"
"அதோ பாருங்கள்"
"இதோ கேளுங்கள்"
"என்ன?"
"ஏது?"
"சந்தடி"
"மனுஷன்"
"உஸ் உஸ்"
"அங்கே மறையுங்கள்"
"இங்கே பதுங்குங்கள்"
"அங்கே போங்கள்"
"எங்கே"
"அங்கே"
"சிக்கிரம்"
"போங்க"
"வாங்க"
"மரத்தின் பின்னலே"
"செடியின் உள்ளாலே"
"புதரின் பக்கத்தாலே"
"மேட்டின் மறைவாலே"
"பேசாதிங்க"
"சிரிக்காதிங்க"
"கப்சிப்"
"அஸ்உஸ்"
"தலையைக்காட்டாதிங்க"
"மூச்சு விடாதிங்க"
"ஜாக்கிரதை!"
"கபர்தார்!"

இவ்வாறு போலீஸ் வீரர்கள் அனைவரும் ஓடி ஒதுங்கி நாளுபக்கங்களிலும் பதுங்கி மோப்பம் பிடித்துக்கொண்டு காத்தல் செய்து கொண்டிருக்கிறார்கள்.

* * *

வருகிறாள் மனமோஹன மாணிக்கம் குதிரைமீதில் வாயுவேகம் மனோவேகமாய்! "மனதை ஒருவழிப் படுத்திக்கொள், விநோதங்கள் கணக்கிலாதன விளையாட்டாய்ச் செய்யலாம்; உள்ளத்தை உறுதிபடுத்திக்கொள், ஒன்றும் உனக்குக் குறையில்லை; நல்ல வழியில் மனதை நல்ல நிலையில் நிறுத்திக்கொள்வாய், எல்லையில்லாத நன்மைகள் சொல்ல முடியாத சீக்கிரத்தில் தொல்லையில்லாதபடி துயரகற்ற வந்தே சேரும்" என்னும் நூதன * வில்பவர் (Will power) வித்தியாப்யாசத்திலும், மனவசீகர மஹாதத்துவங்களி (Mesmerism and Hypnotism)லும் அதிக தேர்ச்சிபெற்ற அறிவானந்தப் பெருஞ் செல்வியாய் மனமோஹன மாணிக்கம் † தினகர ஸ்வரூபத்தோடு விளங்குபவ ளானபடியால் உள்ளத்தை அவள் உறுதியாய்ப் பிடித்தாள், கள்ளத்தனத்தைக் கட்டோடே போக்கினாள்! இந்தியா தேசத்தின் இணையில்லாச் சாம்ப்ராஜ்யமாகிய சொந்த யோகப்பயிற்சிகள் 'நந்தமக்கு ஸைன்ஸ் உடையுடைத்து நலமாகவந்து சேர்ந்தனவே' யென்று பலமாக மனதில் பதித்து, மனமோஹன மாணிக்கம், ஆசையோடும் நேசத்தோடும் அவைகளை யிடை விடாமல் அனுஷ்டித்து வந்தவள்!

கள்ளத்தை யொழித்து உள்ளத்தை உறுதியாய்ப்பிடித்தால் கோபம் நீங்கிச் சாந்தம் உண்டாகும், கொடுமை நீங்கி நன்மை விளையும். சுண்ணும்பி லிருக்கிறது சூக்ஷ்மம் என்கிறபடி மனதை வஸ்யப்படுத்தினோர்க்கு மலையும் நடுங்கும், கடலும் கலங்கும்! மனதின் வன்மையை மஹாரிஷிகள் கண்டிருந்தார்கள், தபோதனர்கள் தெரிந்திருந்தார்கள்! இப்போது, மனதின் வன்மையையும் அதனாலுண்டாகும் நன்மையையும் ஆங்கிலர் முதலிய மேற்றிசையோர் அருமையாய்த் தெரிந்து ஸைன்ஸ் பாலாடையின் வழியாகச் சங்கட மில்லாமல் புகட்டுகிறார்கள்! அப்பன் சொத்தும் பாட்டன் சொத்தும் போன பொருள் புதையலி லிருந்து எடுத்தாற்போலேயும், காணாது போன பிள்ளை பூணாரம் பூண்டு வந்தது போலேயும்,

---

* வில்பவர் = திடச்சித்தம். † தினகரன் = சூரியன்.

ஊரிலிருந்த * பலசைரவை சீமையிற் சென்று சிறந்த † கமலமானது போலேயும், பழைய நமது பயிற்சிகள் மறுபடியும் தோற்றித் ‡ தகத்தகாயமாய் விளங்குவதை மிகச் சாக்கிரதையாய்ப் பெற்றுக்கொள்ளப் போகின்றீர்களா, அல்லது தூங்கி விழுந்து § ஜடப் பொருளை விட்டது போலேயே படப்பொருளாக மனதையும் மாற்றப்போகிறீர்களா? இது பெரிய கேள்வி, அரிய விஷயம்! மனதை நீங்கள் மாட்சி யடையும்படிச் செய்தால், யானையை மேய்க்கலாம், புலியைப் பூனை யாக்கலாம், சிங்கத்தை நாயாக்கலாம், கடல்மேல் நடக்கலாம், காற்றில் பறக்கலாம், சித்துகள் செய்யலாம், அனைத்திற்கும்மேல், முத்தியை யடையலாம். இல்லாவிட்டால், "நாளுக்கு நாள் நகர்ந்ததுகா ணம்மானே" என்று இன்னும் வர வர ஈனக்கதிக்கு நேராய்ப்போகலாம்! இதை ஒவ்வொருவரும் நன்குய் யோசிக்கவேண்டும!

மனதை நிலை நிறுத்தும் யோகப்பயிற்சி செய்தவர்கள் 'ஏக' பைத்தியம் பிடித்து எத்தனையோ பேர் கெட்டுப்போனார்கள்! மனதை உறுதிப்படுத்துவோன் மனதை யாள முதலில் தெரிந்துகொள்ளவேண்டும்! ஆத்திச்சூடி தருமத்தை அகத்தில் பதிக்கமுடியாதவன் ஆகாய தருமத்தை வாகாய் எப்படிப் பெறுவான்? சோற்றிலுள்ள கல்லெடுக்க முடியாதவன் மோஹனக்கல் எடுக்கக்கூடுமோ? கூரையேறிக் கோணச்சுரைக்காய் அறுக்க முடியாத அந்தகக் குருக்கள் வானத்தைக் கீறி வைகுண்டத்தை எப்படிக் காட்டுவான்! அதுபோல், மனதை ஒருநிலைப் படுத்தி மஹாயோகம் பெறவேண்டுவோர், சாதாரண தருமத்தைச் சங்கடமில்லாது செய்யவேண்டும்: கெட்ட எண்ணத்தை ஒழிக்கவேண்டும், கேடுகெட்ட மனத்தை அடக்கவேண்டும்! கோபம் பறக்கவேண்டும், குரூரம் அகலவேண்டும்! பாபம் செய்தல் தகாது, மோசம் செய்தல் உதவாது! சாத்தியமானுல், ஒரு கன்னத்தில் அடித்தவர்க்கு மற்ருெரு கன்னத்தையும் காட்டவேண்டும்! இவ்விதமாய் உள்ளத்தையாள வல்லவனுக்கு எல்

---

* பலசை=பட்டை தீராத வைரக்கல்.

† கமலம்=பட்டை தீர்ந்து அதிக ஒளி விடும் வைரம்.

‡ தகத்தகாயம்=மிகப்பிரகாசம்.

§ மனதுக்கு வெளியே காணப்படும் வஸ்துக்களின் பயிற்சி விட்டு யந்திரம் முதலிய தந்திரம் செய்ய முடியாது போனதுபோலேயே—என்று பொருள்.

லாம் கைகூடும், நினைத்தது எதிரே நிற்கும். அத்தருணம், ஒன்று வேண்டுமென்று உறுதிகொள்ளுவாய், அந்த நிமிஷத்தில் வந்தே அது வாகாய் நிற்கும். உள்ளத்தை நல்வழிப்படுத்தாது உறுதிமாத்திரம் படித்துவையேல், ஏ, மனிதா, நீ சூனியக்காரனேயாவாய், நீசரில் உன்னைவிட நீசஸ்ரேஷ்டன் வேறெவனுமே காணுன்! மனதை நல்வழிப்படுத்தாது ஒருவன் மஹாகோரம் விளைப்பானேல், அஃது பைத்தியமாய்த் திரும்பும், அதினும் பத்துப்பங்கு கெட்டதாய்ப் பாரதுன்பம் விளைக்கும்.

இந்த தத்துவ சாஸ்திர உண்மைகளை மெத்த நேர்த்தியாய்ப் படித்தறிந்த பாக்கியவதி மனமோஹன மாணிக்கம்! ஆதலால் உடலம் அவளுக்கு ஊர் சுற்றி வந்த போதிலும் உள்ளம் என்னவோ உறுதி பெற்றுச் சள்ளை விளையாத வகை மெள்ள மனனஞ்செய்து மந்திரம் செய்துகொண்டிருந்தது. "எனக்கொன்றும் கஷ்டம் வராது, நல்லதே வந்து தீரும்! கடவுள் என்னிடமிருக்கிறார்: கஷ்டம் வரவே வராது! ஐயன் என்பால் மெய்யன்பு கொண்டிருக்கிறார்: பாவமும் வராது, ஆபத்தும் நேராது, பழியும் நேராது, பகையும் ஒன்றும் செய்யாது! நல்லதே வருக, நலமுள்ளதே வருக, இனிமையே தருக, இன்பமே பெருக, நன்மையே விளைக, நாணயமே சிறக்க!

பொங்குகின்ற கடலுலகில் புண்ணியமே பெருக்க
புண்ணியமே பெருக்கவெங்கும் கண்ணியமே சிறக்க
தங்குகின்ற நல்லபெரும் தருமமுமே தழைக்க
தருமமுமே தழைக்கவெங்கும் தயாளமுமே செழிக்க
மங்குகின்ற கொடுமையெலாம் மண்மூடிப் போக
மண்மூடிப் போய்ப்பாவர் கண்மூடிப் போக
நங்குகின்ற இழிதொழில்போய் நலமுளதே யோங்க
நலமுளதே யோங்கநாளும் நலம்பெறவே யோங்க—"

என்று பாட்டை மனதில் பாடி, நல்லதே வரும், கெடுதி ஒன்றும் சேராது என்று அகத்தை நிறுத்தி மந்திரத்தைச் செபித்துக் கொண்டு வருகிறுள்!

ஆயிற்று: ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு: வந்து விட்டாள் மனமோஹன மாணிக்கம் மஹா வேகமான பாரிஜாதக் குதிரை மேல்!

"ஹா, ஹா! யார்! யார்! நில்-ஜல், நில், ஹா ஹா! நில், நில், அதோ! குதிரை! மனிதன்! யார்? நில் நில்!" என்று புதரினின்றும் புலிகளைப்போல் போலீஸ் வீரர்கள் கிளம்பினார்கள்!

"யார் அது! நில் ஐயா என்றால், பறந்துகொண் டிருக்கிறாயே! குதிரை யென்ன, சவாரி யென்ன? உன்மேல் சம்மனிருக்கிறது, வாரண்டு பறக்கிறது, எங்கே ஓடுகிறாய்! நின்று பேசு; நிதானித்துப்பேசு" என்று இன்ஸ்பெக்டர் துரை சுளித்த முகத்தைக் காட்டிச் சூரத்தனமாய்க் கேட்டார்.

"நான் ஒரு வியாபாரி, நான் வழியை விட்டு நீங்கிக் காட்டைக் கடந்த பின் நாட்டைத் தேடலாமென்று ஓட்டமாக நான் போய்க் கொண்டிருந்தால், என் மீது சம்மன் என்ன, வாரண்டு என்ன? ஏன் என்னை நிற்கச்சொல்லுகிறீர்கள்?" என்று மனமோஹன மாணிக்கம் திடமாய்க்கேட்டாள்!

"நீ அடுத்தநாட் டரசன் கோட்டையிற் புகுந்து பணத்தைத் திருடிப் பறந்து வந்து விட்டு கதை செய்கிறாயா இப்போது! குதிரைவிட்டிறங்கு! மூட்டையைச் சோதனை செய்ய வேண்டும், முறைப்பு செய்யாதே" என்று முரட்டுத்தனமாய் இன்ஸ்பெக்டர் அதிக இரைச்சல் போட்டு ஆர்ப்பாட்டமாய்ப் பேசினார்.

"ஆகட்டும்! அதைப்பற்றி எனக்கொன்றும் ஆக்ஷேபனையில்லை. நீங்கள், அந்த மூட்டை, இந்தப்பை எல்லாவற்றையும் நன்றாய்ச் சோதித்துக்கொள்ளுங்கள். நான் சற்று மரத்தடியில் குந்தி இளைப் பாறுகின்றேன்" என்று மனமோஹன மாணிக்கம் மரத்தடிக்குச் சென்றாள்.

"அடே! என்ன அழகுடா அவன்" என்றான் ஒரு போலீஸ் காரன்.

"அடே! என்ன சொகுஸடா" என்றான் மற்றொருவன்.

"இவனா திருடன்! நான் நினைக்கவில்லை" என்றான் வேறொருவன்!

"வம்பாய் வருமோ என்னமோ" என்றான் பின்னொருவன்!

"அடே முட்டாள்பயல்களே, கெட்டியாய்ப்பேசாதேயுங்கள். பேசினால் கெட்டே போகும் காரியம்! கெட்டுப்போன பின் முட்டிக்கொண்டாலும் ஒன்றும் சரிப்படாது" என்று ஜாக்கிரதைப்படுத்தினார் ஜரூரான இன்ஸ்பெக்டர்.

இந்த சமயம் மனமோஹன மாணிக்கத்திற்கு இல்லாத யோசனை வந்து விட்டது. பெண்ணாயிருந்தும் ஆண்வேடம் தான் அணிந்து கொண்டிருப்பது, அவர்களுக்கு எங்கே தெரிந்து விடுகிறதோ என்கிற ஏக்கமே அவளுக்குப் பெருத்து விட்டது! ஆன போதிலும், அவள் மனவஸ்ய வித்தைப்பிரகாரம் மனனஞ்செய்து கொண்டு, "நீச எண்ணமுடையோர், நாசமாய்ப்போவார்கள்! கெடுதி செய்யக்கூடியவர்கள் கேடு கெட்டுப் போடுவார்கள்! எனக்கு நல்லதே வரும்! ஏதும் கெடுதி நேரவே நேராது" என்று எண்ணிக் கொண்டும் இறைவனை நம்பிக்கொண்டும் இருந்தாள்!

இதற்குள்ளாக, மனமோஹன மாணிக்கம், புல்லில் ஏதோ போட்டுவிட்டாளென்று கலவரப்பட்டு, மட்டப்பலகை நீங்கலான மற்ற போலீஸ்வீரர்கள், புல்லில் நடந்து 'சல்லித்து'க்கொண்டிருந் தார்கள். அங்கே ஒருபுறம் ஆனந்தமாயிருந்த சாரையும் சர்ப்பமும் இவர்கள் நால்வருடைய கால் மிதிபட்டு சீறி எழுந்து நால்வரையும் சினத்தோடே தீண்டி விட்டன! நோய் பொறுக்கமுடியாமல், அவர்கள், 'ஐயோ' என்று அலறினார்கள், 'அப்பா' என்று கதறினார்கள், துடித்தார்கள், பதைத்தார்கள், எழுந்தார்கள் விழுந்தார்கள், விழுந்தார்கள் எழுந்தார்கள், உருண்டார்கள், புரண்டார்கள், மயக்கம் வந்து மண்மிசை யானார்கள்!

மட்டப்பலகை மஹாயோக்கியன் மனமோஹன மாணிக்கத்தைப் பார்த்து, "ஐயா, தாங்கள் குதிரைமீதே மெதுவாய் வாருங்கள்! அரசனிடம் தங்களை யழைத்துப்போக வேண்டியிருக்கிறதே! இவர்கள் கதியும் சொல்லவேண்டும்! தங்கள் பெயர் என்ன?" என்று மட்டப்பலகை கேட்டான்.

"என் பெயர் மதுரேசன். அப்படியே வருகிறேன்" என்று மனமோஹன மாணிக்கம் குதிரைமீது ஆரோஹணித்து, பின்னால் மட்டப்பலகை நடந்துவர, இருவருமாக மெதுவே இளைப்பில்லாமல் போய்க்கொண்டிருக்கிறார்கள்.

---

# இருபதாவது அத்தியாயம்.

வனஜாஸனன். மனக்கலக்கம்.

**வ**னத்தின் நடுவில் வனஜாஸனன் கலங்கிக்கொண்டிருக்கிறான்! புலி போகிறது ஒருபக்கம், கரடி காண்கிறது மற்றொருபக்கம்! புலியைக் கொன்றாலும் கொல்லலாம், கிலியைக்கொல்ல யாவராலாகும்! தவித்துக்கொண்டே, அவன், தண்ணீராய்க் கரைந்துகொண்டே, காலம் ஏற ஏறக் கவலையும்மிகுந்து ஓடிப்போய் ஒரு மரத்தின் கீழ் நின்று யோசிக்கத் தொடங்கினான்:

"என்ன இது பெரிய காலக்கேடா யிருக்கின்றதே! நமக்கு ஏன் இந்தத்துன்பம் எல்லையில்லாமல் தொல்லை விளைக்க வேண்டும்? இதற்கெல்லாம் யாவர் காரணமா யிசைந்திருக்கின்றார்களோ ஒன்றும் எனக்கு ஒருவழியாய்ப் புலப்படவில்லையே! யாராயிருக்கலாம், ஓயாது வந்து உறுநுயர் செய்பவர்கள்! மறுபடியும் அந்தக்கிழவி மாயம் விளைத்து மந்திரம் செய்யும் மாஜாலக்கிழவி, மாரியாத்தாளென்னும் மஹா நீலி, கொடு நீலி, படு நீலி, அந்தப்பாவிதான் வந்து அடிக்கடி என்னை ஆபத்துக்காளாக்குகிறாப்போலிருக்கிறது! அன்று வந்து தோட்டத்தில் அனர்த்தம் விளைத்துப்போனாள். அஃது எனக்கு ஆண்டவனருளால் நல்ல வழியாய்த்திரும்பிக் கல்யாணத்தில் கொண்டு வந்து முடித்தது! கல்யாணம் ஆயிற்றோ இல்லையோ, அன்றே பிடித்தது அஷ்டமத்துச்சனி. நாம் மாத்திரம் தனித்திருந்தால் செத்தாலும் சாகலாம் பிழைத்தாலும் பிழைக்கலாம். குறை கூறுபவர் யாரும் குவலயத்தி லிருக்கவே மாட்டார். இப்பொழுது சனீஸ்வரன் என்னைப் பிடித்ததோடும் அவளையும் பிடித்தானே! இதற்கெல்லாம் காரணம் இருண்டமனக் கிழவியாகிய குரங்குமனப் பாவியே யாகும்! எங்கள் தாதா ஆடம்பராசாரிக்கும் ஜகன்மோஹன சிங்காரத்திற்கும் அரிய தந்தையானவர், கேட்டபடி பொருளை வாட்டமின்றிக் கொடுக்கவில்லை யென்று உள்ளே யெழுந்த உக்ராவேஸம், இப்படியெல்லாம் செய்து இடர்விளைக்க அவளைப் பிடர் பிடித்துத் தள்ளுகிறது! ஹா! கிழவி, நீபொல்லாதவள்! நீ செய்த அக்கிரமங்களையெல்லாம் நெஞ்சிலேயே வையாது, மேலும்மேலும் உன்னிடம் மேன்மைக் குணமே காட்டிக் கொண்டிருந்த போதிலும், உன்காதக எண்ணத்தையே உறுதியாய்ப் பிடித்து, ஊர்ப்பட்ட மந்திரங்களையும் ஒருமிக்கக் சற்று,

ஊரையும் அழித்து எங்களையும் ஒழித்துப் பூண்டு என்பதே பூலோகத்தில் காணவொட்டாது அனர்த்தம்செய்து ஆர்ப்பாட்டம் செய்யத்தோன்றினையே! இருக்கட்டும், அசத்தியம் என்னும் ஆயுதத்தைப்பிடித்துக் குரூரம் என்னும் தொழிலை இயற்றிய உன்னைச் சத்தியம் என்னும் ஆயுதத்தாலே சல்லடைக்கண்களாகத் தொளைத்து விடுகிறேன்.'' என்று ஆவேஸத்தாலே மிக்க ஆத்திரமாய்ப்பேசினன். பிறகு மனமோஹன மாணிக்கத்தை நினைத்து, "ஐயோ, பூப்போல் விளங்கிப் பூமியிலேயே கால்வைத் தறியாத அரசிளங்குமரி எங்கு அகப்பட்டு என்ன பாடுபடுகிருளோ, ஒன்றும் எனக்கு ஒரு சிறிதும் விளங்க வில்லையே! யாரைவிட்டது காண் தலைவிதி என்று ஆறவேண்டியதே தவிர ஆகும்வழி யாதொன்றும் தெரியவில்லையே! நல்லது!" என்று ஒருவாறு மனந்தேறினன்.

சற்று நேரம் வனஜாஸனன் உற்று விழித்து திசைகளை ஓயாது நோக்கி, ஒருவழியாகச் சென்றுகொண்டிருந்தால் * உறுவது வரட்டும், உயிர் போனலும் போகட்டும் என்று ஒருவாறு மனந்தேறி, ஒரு பக்கமாய் ஓயாது நடந்துகொண்டிருந்தான்!

இப்பொழுது விடியற்காலை மணி மூன்று அல்லது மூன்றரையா யிருக்கலாம்! அங்கே புலி யுறுமுகிற சந்தடியும், இங்கே சிங்கம் கர்ச்சிப்பதும், புதர்களில் பாம்புகள் சல சலவென்று ஓடிச் சந்தடி விளைப்பதும், நாய்குரைத்தலும், நரி ஊளையிடுதலும் மனதிற்கு மிக்க பயங்கரம் விளைக்கின்றது! அடிமேலடிவைத்து அதிசாக்கிரதையாய் நடந்துகொண்டிருக்கிறுன் வனஜாஸனன். மெல்லியதாய் வீசும் சல்லாபக்காற்று, உடல்மேல் வீசும் உல்லாஸக்காற்று, உளத்தில் படிந்து சிறிது ஊக்கம் கொடுத்து, மயக்கம் போக்கிற்று! அதோ! இப்போது, அரைமைல் தூரத்தில் பொன்போன்ற சிறிய விளக்கு மின்போல விளங்கிக்கொண் டிருக்கின்றது! இந்தக் காட்டில் இந்த ராத்திரியில் எந்த இடத்தில் இந்த விளக்கு பிரகாசிக்கக்கூடும்! அஃதென்ன வீடா, குடிசையா, பன்னகசாலையா, பாவிகள் வேலையா? யாதென்று நாம் இப்போது சொல்லக்கூடும்! ஒருவேளை, கொள்ளிவாய்ப்பிசாசா, மின்மினிப் பூச்சியா? உள்ளம் அயர்ந்து, உடலம் வருந்தியதால், கண்ணே அப்படிக் கபடஞ்செய்து † நண்ணுந் தோற்றம் நலமாக விளைக்கின்றதா! எதாணுலுமிருக்கட்டும்! எதையும்

* உறுவது = நடப்பது.

† நண்ணும் = உண்டாகும்.

தெரிந்துகொள்ளலாமென்று எங்குமில்லாத ஊக்கத்தோடும் எதிரில்லாதபடி நாமாவளிபாடி நடந்துகொண்டிருக்கிறான் வனஜாஸனன்!

நாமாவளி.

அகிலம் படைத்தரு ளற்புதனே
ஆர்வம் விளைத்தரு ளன்பினனே
இன்பம் தந்தரு ளினியவனே
ஈசா நேசா இறையவனே
உள்ளம் வதிந்தரு ளுத்தமனே
ஊக்கம் கொடுத்தரு ளுரியவனே
எங்கும் நிறைந்திடு புங்கவனே
ஏற்றம் காட்டிடு மூத்தவனே
ஐயம் கொடுத்தரு ளருமருந்தே
ஒப்பனை மீறிய வுறுபொருளே
ஓமென் பதிலாம் திருவருளே
ஔவிய மறுத்திடு நல்லருளே
மல்லிகை முல்லை மணமாமே
தாமரை ரோஜா குணமாமே
அல்லியுங் குவளையு நிறமாமே
ஐயன் தண்புக ழருளாமே
வானமு மீனமும் வழியாமே
சூரியர் சந்திரர் துறையாமே
நன்மையுங் கொடுமையு நலமாமே
நோயும் துன்பமும் சலமாமே
அன்பன் பெரும்புக ழுறைவாமே
ஆனந்த நாட்டினி லுறைவாமே
முத்தும் பவளமு முறையாமே
அத்தன் பதமல ரன்பாமே
வைரமும் கெம்பும் மொளியாமே
பச்சையு நீலமும் பண்பாமே
செடியும் கொடியும் சிறப்பாமே
பூவும் பழமும் புகழாமே

எல்லா மீசன் திருவருளே
எல்லா மையன் திருவருளே
எல்லா மவன்றன் இன்புகழே
எல்லா மவன்றன் பெரும்புகழே

(இங்கிலீஷ் நோட்)

ஏது துன்ப மெந்தையே
எல்லா மின்பந் தந்தையே
சொல்லச் சொல்ல இனிக்குதே
துதிக்கத் துதிக்கக் கனிக்குதே
பாடப் பாட மணக்குதே
பரவப் பரவ ருசிக்குதே
தேனைப் பாலை வெல்லுதே
தெவிட்டல் தன்னைக் கொல்லுதே
பழத்தை ரசத்தைப் பகைக்குதே
குமட்ட லென்பதை நகைக்குதே
தின்னத் தின்ன வினிக்குதே
தீரமும் தெளிவும் பிறக்குதே
ஐய னப்ப னல்லவா
அன்னை தந்தை யல்லவா
கருணை வடிவ னல்லவா
கனமும் புகழும் சொல்லவா
அருளை யன்பைப் புல்லவா
ஆபத்தென்பதை வெல்லவா

இவ்வாறு வனஜாஸனன் இணையில்லாதபடி நாமாவளியை இசைத்துக்கொண்டே விளக்கைநோக்கி விளையாட்டாய்ச் செல்கிறுன்!

கிட்ட இருப்பதுபோல்தோன்றிய விளக்கு எட்ட எட்டப்போய் எவ்வளவோ தூரம் வனஜாஸனனை இருட்டு வேளையில் இழுத்துச் செல்கின்றது! நடக்கிறுன் நகர்கிறுன்: தள்ளித்தள்ளாடி இப்போது வனஜாஸனன் விளக்குக்கருகில் விரைந்து வருகிறுன். அரைமைல் இருக்குமென்று ஆய்ந்து பாராது நினைத்தது பிசகு என்று வனஜாஸனனுக்கு மனதில் நன்ருய் மஹா வேகத்துடன் பட்டது. குறைந்தது இரண்டு மைல் தூரமிருக்கலாமாதலால் வனஜாஸனனுக்கு எற்

பட்ட துன்பம் வாயாற் சொல்ல முடியாது! எப்படியோ வந்து சேர்ந்துவிட்ட சந்தோஷம் நடந்த துன்பத்தை நான்கு என்பதற்குள் நன்றாய் மறைத்து விட்டது!

உடனே, எதிரில் ஒரு சிறிய பாழடைந்த உப்பரிகை வீடும், உள்ளே ஒரு மினுக்கென்கிற விளக்கு எரிவதும், அங்கே நால்வர் எமகிங்கரர்கள் போல், நன்றாய்க் குடித்துவிட்டு நலமற்ற பேச்சைப் பேசிக்கொண்டிருப்பதும் வனஜாஸனன் கண்டான்

இந்தக்காட்டில் எந்தக்காரணத்தால் இந்த வேளையில் இவர்கள் சந்தித்திருக்கிறார்களென்பதைச் சிந்தையிலறியவேண்டி வனஜாஸனன் குட்டிச்சுவரின் கோணல் மூலை யொன்றில் ஒட்டி நின்றுகொண்டு அவர்கள் ஏது பேசுகிறார்களென்று சூதாய்க் கேட்டுக்கொண்டிருந்தான்.

அங்கு படுத்திருந்த நால்வர் அதிகமாய்க் குடித்துத் தலைகால் தெரியாது பித்தம் தலைக்கேறி, பின் வருமாறு பேசலானார்கள்:

"அப்படியா, சமாசாரம், குண்டுணிக்கழுதெ, பீப்பா சாராயம் வாப்பாடா மாரியாத்தா நாளெக்கு! ஒண்ணுக்கும் பயப்படாதே!" என்றான் ஒருவன்.

இதற்குள்ளாக, 'ஹா ஹீ,' என்று கத்தி, மற்றொருவன் வாந்தியெடுத்து, 'தாங் திமிதிமி தந்தக்கோனாரே' என்று கூத்தாடிக் குதித்தாடி,

"அடே, அண்ணே, நாளெக்கு என்னடா விசேஷம்? இண்ணெக்கு ஆழாக்கு ஈச்சங்கள்ளுதானே மாரியாத்தா நமக்கெல்லாம் மனம் வந்து குடுத்தா! நாளெக்கு மாத்திரம் எப்படிரு பீப்பா சாராயம் வாக்கப்போறா!" என்று சந்தேகத்தால் சிறிது சிந்தை கலங்கிக்கொண்டிருந்தான்.

"அடே! தூங்குமூஞ்சி! நாளெக்குப்பலிடா!" என்றான் வேறொருவன்.

"அதென்னடா பலி?" என்றான் பின்னொருவன்.

இதற்குள், முதலில் பேசிய மூதேவிக்குடியன்,

"அடே! அண்ணே, குடிகேடப்பிரபுவுங்களே, மாரியாத்தா காளிகோவுலுண்டே மந்திரம் பண்ணப்போறா! நரபலி குடுத்தாதானேடா மந்திரம் நண்ணு பலிக்கும்? அத்தொட்டுதான், ஒரு ராஜா பிள்ளை ஒரு ராஜா பெண்ணு—ரெண்டு பேரும் கண்ணாலம் பண்

க்ணிகினாவுங்களாம்! கண்ணாலப்பிள்ளையும் கண்ணாலப்பொண்ணும் ரெண்டு பேரெயும் புடிச்சி, காற்றுவண்டியிலே வைச்சி கொண்ணாந்துடப்போறாங்கோ! இங்கே இப்பொ வரப்போவுதுறா கண்ணாலப்பிள்ளெ!" என்று ஆனந்தக்களிப்பால் அகமகிழ்ந்து பேசினான்.

"எப்போடா?" என்றான் ஒருவன்.

"என்னடா?" என்றான் மற்றொருவன்.

"கண்ணாலப்பிள்ளெடா."

"எங்கேடா?"

"இங்கேடா."

"என்னத்துக்குடா?"

"பொலிக்குடா."

"கண்ணாலப்பிள்ளையை மாத்திரமா?"

"கண்ணாலப்பிள்ளையும் கண்ணாலப்பொண்ணும்—ரெண்டு பேரெயும் தாண்டா."

"எங்கேடா?"

"காளிகோவிலுண்டையாடா?"

"ஆமாண்டா."

"என்னடா?"

"பொலிடா."

"ஆருறா கொடுக்கப்போறது?"

"காளிகோவுலண்டெ மாரியாத்தா கொடுக்கப்போறாடா."

"நமக்கெல்லாம் ஆப்புடுமோடா?"

"என்னதுடா?"

"நரமாமிசம்டா."

"நரமாமிசமும், பீப்பாசாராயமும்டா."

"நம்பபாடு ரொம்ப கோசுடா!"

"இப்போ வருமோடா கண்ணாலப்பிள்ளை?"

"ஆமாண்டா"

"கண்ணாலப்பொண்ணு?"

"கண்ணாலப்பொண்ணு, அந்த இடுஞ்சு வூட்டிலே வெடிஞ்சுகுனு இருக்குது!"

"மாரியாத்தா இப்போ வருவாளோ?"

"ஆமாண்டா. முன்னே கண்ணாலப்பிள்ளே வரும், அப்பாலே மாரியாத்தா, கூளி எல்லாம் வருவாங்கோ."

நாம்ப எல்லாம் என்னடா செய்யுறது?"

"நாம்ப எல்லாம் இப்போ வேடிக்கை பாத்துகுனு இருக்கணும்!"

"அடே! அடே! அதோ வருறுடா மாரியாத்தா கூளி காவடி கபோதி எல்லாரும்!"

"வந்தாடா மாரியாத்தா!!"

"ஹா ஹா செத்தாடா மாரியாத்தா!!!"

"அடே அடே அடே ஹா ஹீ ஹோ ஹோ எவனோ வந்து இருட்டிலே குத்திட்டு ஓடிட்டான்டா!!!"

"அடி பிடி கடி, சொல்லு மெண்ணு திண்ணு ஹா ஹா எவனோ வந்தான், இருட்டிலே குத்திட்டான், எங்கேயோ ஒளிச்சுட்டான்டா!! ஹா ஹீ ஹோ ஹோ !!"

* * *

குத்தினவன் வனஜாஸனன் எத்திசையிலோ மறைந்து எப்படியோ போய்விட்டான்!!!

# இருபத்தோராவது அத்தியாயம்.

மதுரேசன் கம்பியில்லாத் தந்தி.

**ஊரா**ருக்கெல்லாம் பேர்பெற்ற கேரளதேசத்தின் கீர்த்திவாய்ந்த அரசன், கொலுமண்டபத்தில் வீற்றிருந்து குறைகளை விசாரித்துக் கொண்டிருக்கிறான்! சுற்றிலும் மந்திரிகள் மெத்தகாரியங்களை உற்று நிதானித்துக்கொண் டிருக்கவும், சேனைத்தலைவர்கள் சிறப்புடனே தங்கள் காரியத்தை மிக்க கவனத்துடனே நோக்கிக்கொண் டிருக்கவும்,பிரதானிகளென்ன, அவதானிகளென்ன,கவீஸ்வரர்களென்ன, புவீஸ்வரர்களென்ன, நெருப்பை விழுங்கி நிமிஷத்திலே கக்கும் மந்திரக்காரர்களென்ன, தந்திரக்காரர்களென்ன, வியாச்சியமென்ன, வில்லங்கங்களென்ன—இப்படி சபை ஏகபோக வைபோகமாயிருக்கிறது!

இருந்தாற் போலிருந்து, 'ஒற்று, ஒதுங்கு, எட்டநில், கிட்ட இராதே' என்று கூச்சலும் கோஷ்டமும் ஓய்ச்சலின்றி உண்டாகின்றது! கூத்தின் நடுவில், பாம்பு ஓடினாலும் தேள் தோன்றினாலும், கலக்கம் உண்டாய் 'காபரா' உண்டாவதுபோல், கொலுவின் நடுவில் கொக்கரிப்பு உண்டாகவே, என்னது, ஏது என்று சுற்றிப்பார்த்து விழித்துக்கலங்கி, நிறைந்த சமுத்திரத்தில் நீர்த்திவலை கிளம்பிக் குழம்பிப் பொங்கியடங்கி, அங்கேயே தணிந்து அங்கேயே கொதிக்குமாறு, கலக்கமும் குழப்பமும் தவிப்பும் தத்தளிப்பும் மிக அதிகமாக, ஜனங்கள் அலக்கழிந்து உள்ளுக்குள்ளேயே அவஸ்தைப் பட்டு விட்டார்கள்!

"சன்னிதி விடுங்கள்! குறுக்கே நில்லாதேயுங்கள்! மறைத்துக் கொள்ளாதேயுங்கள்! ஒற்று, ஒதுங்கு, ஓடு, விலகு" என்று கூச்சல் இப்போது மூச்சுவிட நேரமுமிலாது முப்பதுபேர் கத்துவதுபோற் காண்கின்றது!

"ஹா!" என்று அனைவரும், நாட்டுப்புறத்தார் நகரத்து மிட்டாயை வாயைத்திறந்து பார்ப்பதுபோல், ஓயாது பார்த்திருந்தார்கள்!

"அகப்பட்டுவிட்டான், அகப்பட்டுவிட்டான்!" என்றான் ஜனங்களில் ஒருவன்!

"ஹா ஹா! யார்? யார்?" என்றான் மற்றொருவன்.

"அகப்பட்டுவிட்டான் ஆகாத்தியத்திருடன்" என்றான் மூன்றாம் பேர்வழி.

"மதுரேசன் என்கிற மாயத்திருடன் அகப்பட்டுவிட்டான்! இந்த மாதிரி திருடு எந்த லோகத்திலுங் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை! அரண்மனையிற் புகுந்து, யாருமில்லாத வேளையில் ஆயிரமாயிரமாய்ப் பொன்னையும் பொருளையும் வெள்ளியையும் சாமானையும் வேண்டியமட்டும் களவாடித் தாண்டியோடிய தலைப்பாகை மாற்றி இவன் தான்! இதுவரையிலும் இப்படிப்பட்ட தைரியத்தோடும் எப்படிப்பட்டவரும் திருடக் கண்ணாலே கண்டது மில்லை, காதாரக் கேட்டதுமில்லை! கடைசியாக அகப்பட்டான்! என்ன இருந்தாலும் கெட்டிக்காரன் திருடு எட்டு நாளையிலே தெரிந்துபோகாதா!" என்று வழியில் நின்றுகொண்டிருந்த வாயாடி ஒருவன் வளவளவென்று பேசிக்கொண்டிருந்தான்.

இப்படி நாலுபேர் எப்படியெப்படியோ பேசிக்கொண்டிருக்கும்போது இரண்டு போலீஸ்வீரர்கள் மருண்ட கண்களோடும் உருவிப்பிடித்த கத்திகளோடும், மட்டப்பலகை, பக்கத்தில் சட்டத்தையும் தருமத்தையும் போதித்துவர, மதுரேசனைக்கொண்டுவந்து * நகரேசன் முன்னே நிறுத்தினார்கள்.

"மட்டப்பலகை! யாரடா அவன்?" என்று ஆவேஸமாய்க்கேட்டான், அரசர் பிரான்!

"ஸ்வாமி, மஹாப்பிரபோ! அரண்மனையில் திருடிய ஆகாத்தியக்கள்ளன் இவனென்று இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறான்!" என்று, உண்மையில் வெகு சிறிதும் ஒளித்தலாகாது எனத் திருத்தமாய்க்கூறினான் தீரனான மட்டப்பலகை!

"அடே பயலே! நீதானடா, அச்சம் பயமில்லாமல், அடங்கிப் பயந்து நில்லாமல், சட்ட மென்கிற மட்டுகள் தாண்டி, அரண்மனையிற் புகுந்து ஆயிரம் ஆயிரமாய்ப் பொருளை அடித்துக்கொண்டு போனவன்!" என்று அரசன் மருட்டி உருட்டி மதுரேசனைக்கேட்டுச் சற்று நிதானித்து, முத்தனைய பற்களையும், சந்திரன் போன்ற சுந்தரத்தையும் ஏற நிமிர்ந்து எதிரிட்டுப்பார்த்தான்! "அடடா! செம்பில் ஓடும் நீரோட்டம்போன்று முகத்தில் ஓடும் பாலோட்டம் திருடனுக்கா வரும்! நீர்க்குழாயி லகப்பட்டு மேலுங்கீழும் குதித்துக் குலாவும் எலுமிச்சம்பழம்போல, ஆனந்த முகத்தில்

* நகரேசன் = நகரத்துக்கு ராஜா.

அறிவு தளும்பி அற்புதப்பிரகாசத்தோடு அழகு நர்த்தன மாடுகின் றதே! இவன் திருடன் என்று எவன்தான் சொல்லத்துணிவான்!" என்று அரசனுக்கு என்னென்னவோ யோசனைகள் மனதில் தோன்றி இடர் விளைத்து விட்டது!

உடனே, ஆச்சரியமாகிற தாம்புக் கயிற்றினின்றும் அவிழ்க்கப் பட்டு, மட்டப்பலகையை நோக்கி மஹாராஜா கூறினான்:

"ஏடா! மட்டப்பலகை! எங்கிருந்தடா இந்த கேஸை இவ்வளவு சாமர்த்தியமாய்க் கொண்டுவந்தாய்! அதுவுமல்லாமல், 'திருடனென்று கொண்டுவரப்பட் டிருக்கின்றான், எண்ணப்பட்டிருக்கிறான், கருதப்பட்டிருக்கிறான்' என்று என்னென்னமோ மாவில் படாமலும் மரத்தில் படாமலும், சாவு சமயத்தில் ஜாதகம் சொல்வதுபோல் சங்கடப்பட்டு விழிக்கிறாயே! திருடனென்று கொண்டு வரப்பட்டிருக்கிறானென்றால், யார் கொண்டு வருகிறது? நீதானே கொண்டுவந்தாய்? உனக்கே என்ன சந்தேகம்?" என்று அரசன் மட்டப்பலகையை அதிகாரமாய்க் கேட்டான்.

இதன்மீது, மட்டப்பலகை, "மஹாராஜா! தங்களுக்குத்தெரியாதது என்ன இருக்கின்றது! இன்ஸ்பெக்டரும் நானும் இன்னும் சிலரும் திருடனைக்கண்டு தீரமாய்ப் பிடித்துவருவது என்று நாலு பக்கங்களிலும் அல்லாடிக் கடைசியாகக் காட்டுக்குச்சென்று வாட்டமில்லாமல் வழியே பார்த்துக்கொண்டிருந்தோம் என் அபிப்பிராயங்கள் (மஹாராஜா தாங்கள் என்னை வேலையிலிருந்து நீக்கிவிட்டாலும் சரிதான்) இன்ஸ்பெக்டர் துரைக்கும், ஈட்டி யெழுபது, எடுத்து விழுங்கு, குத்திக்கிளறு என்னும் போலீஸ்வீரர்களுக்கும் சரிப்படவில்லை! நான் பைத்தியக்காரனென்றும், இந்த உத்யோகத்திற்கு லாயக்கானவனல்லனென்றும் கூறி, 'போடா போ பைத்தியக்காரா,' வேதம் சொல்லிக்கொண்டு நாதமுனி ஹாழ்வாரை ஹேள்ளப்பண்ணிக்கொண்டிரு' என்று பற்பலவாறு என்னைப் பரிஹாசம் செய்தார்கள். என்னை டிஸ்மிஸ் செய்வதாயும் பயமுறுத்தினார் இன்ஸ்பெக்டர்! அந்த வழியில் அலங்காரக்குதிரைமேல், சுந்தர முகத்தைச் சொகுஸாய்க் காட்டி வந்தாரிந்த * வாசவப்பிரான்! இவர் பட்ட அலுப்பாலும் இளைக்காது, இவர் பட்டினியிருந்த பரிதாபத்தாலும் களைக்காது, அமிர்ததாரை மேலும்மேலும் அழகு விளைக்கின்ற அற்புதத்தை யாவர் சொல்லத்தரம்! அழகான புலி ஆக்ர

* வாசவப்பிரான் = தேவேந்திரனைப்போன்ற அழகுடையவன்.

மித்து வருவது போல் சொகுஸான மனிதன் † சைஸாய்த்திருடமாட்டான் என்று இன்ஸ்பெக்டர் முதலிய வேலைத்திறத்தார் ஏளனமாய்ச்சொல்லக்கூடும்! எல்லாம், மஹாப்பிரபோ, தங்களிடம் தெரிவித்துவிட்டேன்! தங்களுக்குத் தெரியாதது தாரணியில் யாதுளது?" என்று வினய விஸ்வாஸத்தோடு மனதை விட்டு மாண்புடன் பேசினான்.

மட்டப்பலகை இவ்வாறு சொன்னதும் மஹாராஜா நிதானித்து, "ஏடா! மட்டப்பலகை! இன்ஸ்பெக்டர் எங்கே, ஈட்டி யெழுபது எங்கே, எடுத்து விழுங்கு எங்கே, குத்திக்கிளறு எங்கே? அவர்களைக்காணோமே! இவனை மாத்திரம் இழுத்துக்கொண்டு வந்தாயே! என்ன சமாசாரம்?" என்று ஆச்சரியத்தை அபிநயமாய்க்காட்டி அவசரத்தைப் பேச்சினால் நீட்டி ஆத்திரத்தோடே ஆர்ப்பரித்துக்கேட்டான்!

"மஹாராஜா! அவர்களைப் பாம்புகடித்தது! மயக்கமாய் விழுந்தார்கள் மண்மீதில்!" என்றான் மட்டப்பலகை.

"எங்கே பாம்பு கடித்தது? செத்தார்களா, உயிரோடிருக்கிறார்களா? அவர்களை யேன்விட்டு அவசரமாய் வந்தாய்?" என்றான் அரசன்.

"தனிக்காட்டில் தடுமாறுவது எங்கே என்று கனவேகமாய் ஓடிவந்து, ஆட்களையனுப்பி அவர்களை யெடுத்துவரச் சொன்னேன். ஈசனுக்குத் தெரியும் இனிமேல் தெரியும்! செத்தாரோ பிழைத்தாரோ சிவனுக்குத்தான் தெரியும்!" என்றான் மட்டப்பலகை.

"அப்படியா, அப்படியா! ஆனால் அவர்களெல்லாரும், உன்னெதிரிலேயே இவனைத் திருடனென்று பிடித்தார்களா?" என்று அரசன் ஆக்ரோஷத்தோடே கேட்டான்.

ஆம்! மஹாராஜா! அப்படிதான் நடந்தது! நான் செய்யக்கூடிய வழி வேறொன்றும் விளங்காததால், இவரையழைத்துக் கொண்டு இப்படியே வந்தேன். ஆனால்........" என்று மட்டப்பலகை வாக்கியத்தை முடிப்பதற்குள், தெருவில் "லபோ திபோ, ஐயோ, ஹா ஹா, போச்சே! குடிமுழுகிப் போச்சே, குட்டிச் சுவராயிப் போச்சே, கூகூ கோவிந்தா, வெண்ணெ திரளச்சே தாழியுடைந்து போச்சே, திண்ண வரச்சே சட்டியுடைந்து சாம்பாறெல்

† சைவாய் = சாமர்த்தியமாய் என்று இங்கே பொருள்.

லாம் தரையாருய்ப் போய்விட்டதே! தாலி கட்டச்சே கைமுறுக்கிக் கொள்வது போலும், பேசப் போவச்சே நாக்கு இழுத்துக்கொள் வதுபோலும், என்னையா, என்னப்பா, போச்சே, குடிபோச்சே, கோடையிடி விழுந்து கோபுரம் பத்திக்கிச்சே, போச்சே, பணம்போச்சே, சோறுபோச்சே, உயிர்போச்சே, பிள்ளை குட்டியை காப்பாற்றுற வங்கபோச்சே, போச்சே, தெருவிலே நிக்க ஆச்சே, பொல்லாதகாலம் சொல்லாதே வரலாச்சே! என்ன செய்வோம், ஏதுசெய்வோம்! ஹா ஹா!" என்று பெருங்கூச்சல்போட்டு ஒரு கிழவியும் ஒரு குமரியும் ஒரு பிள்ளையும் ஒருபெண்ணும் கும்பும் கூட்டமுமாக அதிக அமளிகுமளியாய் விட்டது! என்னவென்று விசாரிக்க, இன்ஸ்பெக்டரும் மூன்று கான்ஸ்டேபில்களும் இறந்துவிட்டார்க ளென்று அனைவருக்கும் தெரியவந்தது. அதன்மீது அரசன் பரிதாபப்பட்டு, அழுதுகொண்டு நின்ற அனைவருக்கும் ஆறுதல் சொல்லித் தேறுதல் செய்து தக்க உதவிகொடுத்து, தகுமான உபகாரச்சம்பளம் ஏற்படுத் திஅவர்களெல்லாரையும்அ வரவர்கள் இல்லரத்திற்கு அனுப்பினன்.

*　　　*　　　*

"ஹா! இவனு திருடன்! இவனு மோசக்காரன்! இவனு காதக எண்ணமுடைய கள்ளப்பயல்! முகத்தைப் பார்க்கும்போதே அகமெல்லாம் களித்து ஆனந்த முறுகின்றதே! எட்டுத்தினமாய்ப் பட்டினி கிடக்கும் மாதிரி களைப்பு வந்து இளைப்பு செய்த போதினும், இவனுடைய ரூபலாவண்யமும், பாற்கடலில் அமிர்தம் எழுந்ததே போல் முகவசிகரத்தில் புத்தித்தோற்றம் சற்றேனும் நீங்காது சித்திரம் விளக்கும் சிங்காரமும், ஆ ஹா! இவனுடைய சொகுசும் சுகுமாரமும், அழகும் அமரிக்கையும், அந்த சந்தமும் அறிவுச்சொந்தமும், ஒருவன் நினைத்து உற்று நோக்குவானுனல், இவனைத்திருடனென்று சொல்ல எவன்தான் துணிவான்! ரோஜாவோடே முள்ளும், பாம்பின் தலையில் மாணிக்கமும், உத்தமனிடத்தில் உக்கிர குணமும், சாந்தஸ்வரூபியிடத்தில் சங்கடமனமும் கள்ளத்தனமும் பற்பலவாறு ஜகத்தில் உற்பவங்கள் காணப்படுவனபோல், அழகோடுகூடவே அற்பத்தனமும் தோன்றியிருக்கலாமென்று எவர் சொல்லினும் பலர் நினைக்கினும், எனக்கென்னமோ அது ஏற்கவேயில்லை! இவனுடைய அழகு, நிறத்தினுல் மாத்திரமா உண்டாயிருக்கின்றது? அல்லது, முன்னேனும் பின்னேனும், கீழேனும் மேலேனும், உயர்தல் தாழ்தல், பருத்தல்சிறுத்தல், நீளல் குறுகல், வளைதல் குழிதல் முத

லிய அவயவ வேறுபாடுகளாகும் அவலக்ஷணமில்லாமல், வில்லைப் போன்ற புருவமும் * செல்லைப்போன்ற கூந்தலும் அஷ்டமச் சந்திரனைப்போன்ற அரிய நெற்றியும், கண்டையைப்போன்ற கண்ணும், சங்கைப்போன்ற கழுத்தும், வைரம்போன்ற பல்லும், விளங்கிக் காட்டி வெளிச்சந் தரலால் மாத்திரமா இந்த அழகு எடுத்துக்காட்டுகின்றது! ஈசா! இல்லவேயில்லை! இவைகளெல்லாவற்றோடும் ஆத்துமாவின் விலக்ஷணமும் அறிவின் மேன்மையும் தத்துவத்தின் ஆனந்தமும் பொங்கித் ததும்பிப் பூரணமாய் நிறைந்திருத்தலாலன்றோ, இந்த ஜிலு ஜிலுப்பும் இந்த தளதளப்பும் இந்த மினு மினுப்பும் இந்த பளபளப்பும் இந்த இளைப்பிலும் எண்ணலாகாக் களைப்பிலும் எழுந்து விளங்குகின்றன, 'ஏகமாய்ப்' பிரகாசிக்கின்றன! இவன் திருடன் என்று நான் எண்ணவேமாட்டேன்! இவன் கள்ளனென்று கருதவேமாட்டேன்! இவன் மோசக்காரனென்று மொழியவேமாட்டேன்!" என்று அரசன் வேறு சில வேலை பார்ப்பது போலேயே, ஆறு நிமிஷம் அயர்ந்து யோசித்தான்! மட்டப்பலகை சொல்வது சரி யென்றும், மற்ற கான்ஸ்டேபில்கள் சொன்னது பிசகென்றும், இளவயதுடைய இங்கித ரூபன் உயர்வை நோக்கியே † உத்தமத்தேவன் பாம்பு ரூபமாய்ச்சென்று பாவிகளைக் கொன்றானென்றும் ஒரு கோடி யுண்மை அரசனுக்கு ஒரு நிமிஷத்தில் புலப்பட்டது! ஆனாலும், வெளிக்குக்காட்டினால், விபரீத எண்ணங்கள் ஜனங்களுக் குண்டாகக் கூடுமென்னும் அபிப்பிராயத்தால், அவைகளைக் காட்டிக்கொடாது கண்டிப்பாய்ப் பேசப்போனால் நாவையிழுத்துப் பேச்சை அடக்குகிறது, உள்ளேயெழுந்த உணர்வுப் பெருக்கம்! ஆகையால் மெள்ள மெள்ளத் தள்ளித்தள்ளாடி மேதினியரசன் பேசத்தொடங்கினான்:

"அப்பா! நீயார்! உன் பெயரென்ன? எங்கிருந்தும் வருகின்றாய்?"

"ஐயா, மஹாராஜாவே! நான் ஒரு வியாபாரி, என்பெயர் மதுரேசன்! ஆனந்த நகரத்தில் அழகாய் வியாபாரஞ் செய்துகொண்டிருந்து, நஷ்டத்தாலே நாணயமிழந்து, பின்னர் ஊரூராய்த்திரிந்து சில்லரை வியாபாரம் சிறுகச்சிறுகச் செய்துகொண்டுவருகின்றேன். வந்த பாதையில் வழிதடுமாறி சிந்தை நொந்து காட்டினுட்புகுந்து களைப்புமேமிகுந்து நான் மெதுவாய் வந்து கொண்டிருந்த சமயத்

* செல் = மேகம்.—கருமையைக் காட்டுகின்றது † கடவுள்.

தில், தங்களுடைய ஏவலாளர் தடை செய்து பிடித்து வந்தனர்! இதுதான் எனக்குத்தெரியும்! தாங்கள் எப்படிச்செய்யவேண்டுமென்று தங்கள் மனதிற்குப்படுகின்றதோ, அப்படியே தாங்கள் ஆக்ஷேபணையின்றிச் செய்யலாம்! இறைவன்விட்ட வழிப்படிக்கும் தாங்கள் இட்ட கட்டளைப்படிக்கும், வணங்கி நடந்துகொள்ள மிகவும் விருப்ப முடையேனு யிருக்கின்றேன்" என்று மதுரேசன் என்னும் பெயர் பூண்ட மனமோஹன மாணிக்கம் விரைவாய்ப் பதில் கூறினள்.

அப்படிப் பேசும்பொழுது ஆன்மாவின் உண்மைத்தோற்றம் அப்படியப்படியே வெளியாய்க்கொண் டிருந்தது! உண்மைப் பெருக்கு ஊற்றின் சுரப்புப்போலத் தன்னையுந் தெரியாது தாராளமாய்த் தோன்றிக்கொண் டிருந்தது! இந்தத் தோற்றங்கண்ட இரும்புவி அரசன் வானை நோக்கி வாயைத்திறந்தான்! ஹா என்று பார்த்தான், அப்படி யிப்படி விழித்தான்! இவள் பேசும்பொழுதே ஈசன் பேச்சு இங்கே வந்ததோ என்று ஏங்கி அயர்ந்து, * வீங்கிய தன் பேச்சை வாங்கியே கொண்டான் உள்ளே! நாக்கும் நடுங்கிற்று, பேச்சும் உறங்கிற்று! விழித்தவன் விழித்தே யிருந்தான்! நின்றவர் நின்றே யிருந்தார்!

இஃதென்ன ஆச்சரியம்! மனமோஹன மாணிக்கம் சொன்னதெல்லாம் பொய்யாயிருக்க, ஆத்துமாவின் உண்மைத்தோற்றம் அப்படியப்படியே வெளியாய்க்கொண்டிருந்ததென்று எப்படி சொல்லக்கூடும்! மனமோஹன மாணிக்கம் உள்ளம் வந்து ஒருவர்க்கும் துன்பஞ்செய்யாள்! தருமமென்பது அவளிடத்தில் தானம் வாங்கிக்கொண்டு போகல்வேண்டும்! தன் கடமையைத் தான் தக்கபடி நிறைவேற்றிக்கொண்டே, பூவும் வருந்தாது புல்லும் புலம்பாது ஈயும் சாகாது எறும்பும் நோகாது என்னும்படி, உயிர்க்கு யாதும் உதுயர் நேரிடாது உத்தம நடக்கையில் சித்தம் பதித்தவள் மனமோஹன மாணிக்கம்! குழந்தைகளுக்கு வெல்லச்சொப்பில் நல்ல மருந்து கொடுப்பதுபோலேயும், அகண்ட பிரம்மாகாரத்தை ஆறங்குல விக்ரஹத்தில் அடக்கி விட்டதாய் அனைவர்க்கும் காட்டுவதுபோலேயும், நல்லதை நினைத்து நன்றாயறிந்தவள், பொய்யுலகத்திற்குப் பொய்கூறி மெய்யை நாட்டி மேன்மையை விளக்க வந்தனள். இதுபற்றித்தான் திருவள்ளுவரும்,

---

* வீங்கிய=வாய் விட்டு வெளிவரும் சமயத்திலிருந்த.

"பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்"

என்று ஒப்பிலா மொழியால் உறுதி கூறினர்! அதனல் ஒவ்வொருவரும் தப்பபிப்பிராயங்கொண்டு 'ஊர்ப்பட்ட' பொய்யை ஒரே மட்டாய்ச் சொல்லவேண்டுமென்று எண்ணுதலாகாது! திருமங்கையாழ்வார் திருடினர், சிறுத்தொண்ட நாயனர் சிசுவதைசெய்தார் என்று மற்றேரும் அப்படிச்செய்ய மனந்துணியலாமா? அப்படித்துணிந்தால் அதைப்போல் அகாததுன்பம் விளைப்பது அவனியில் வேறென்றுங்கிடையாது! தேவதாம்ஸம் பெற்றவர்கள், அல்லது அதற்குச் சிறிதுகுறைந்தும் அரிய தன்மையை அற்புதமாய் அடைந்தவர்கள், காலத்தையோர்ந்து இடம்பொருள் தேர்ந்து, விளைவன ஆய்ந்து, நன்மையைக்கோரி மெய்மையினின்றும் வழுவின பொய்மை புகன்றனரென்றால், அது மெய்மையாகுமேயன்றி பொய்மையாகவே யாகாது! அவரும் சிறிது அசாக்கிரதையால் தவறுவிளைத்தனரேல், அபராதப்பட்டே அழிந்தொழிவர். அவர்கதி அத்தன்மைத்தாக, கேவலம் மனிதர், குண்டு சட்டியில் குதிரை யோட்டுபவர், விசாலமான பார்வையில்லாது, தற்கால நோக்கத்தைக்கொண்டு தப்பபிப்பிராயந்தாங்கி, பொய் சொல்லியும் தீயது விளைத்தும் * நோயது செய்வாராயின், அவர்கள் கதி அதோகதிதான், அவர்கள் பாடு அரும்பாடுதான்!

மேற்சொன்ன நியாயத்திற் கிணங்க, மனமோஹன மாணிக்கம் தேவ அறிவுடையவளாய், மனிதர் சாதாரண அறிவிற்கும் மாண்புடைய தன்மையளாய் விளங்கி இடம் பொருள் காலம் என்பவைகளை இனிதின் அறிந்து, அதர்மம் என்பதை அடியோடே அகற்றிய சத்தியஸ்வரூப அரிச்சந்திரனைக்காட்டிலும் நித்யதர்ம நிரந்த சத்யவதியாய் விளங்கினவளானபடியால், அவள் பேசினது ‡ அறநெறியுடையதேயாகும். இது பற்றித்தான் * இரும் புகழ் படைத்த பெருந்தகை யரசனும் உண்மையை நிதரிசனமாய்க்கண்டு உளம் வெதும்பலானன்.

பின்னர் ஒருவாறு தேறி, "திருடனென்று பிடிக்கப்பட்டுவந்த தீரபுருஷா! நீ இங்குவந்து யாதாயினும் எக்காரணத்தைப்பற்றியா

---

* நோயது=வருத்தம்

‡ அறநெறி=தருமவழி. * இரும்=பெரிய.

யினும் எடுத்துப்போனதுண்டா?" என்று அரசன் பேசமுடியாது அமைதியோடு கேட்டனன்.

"மஹாராஜா! நான் ஒன்றும் அப்படிச்செய்யவில்லை! தங்களுக்குச் சந்தேகமிருந்தால், தக்கபடி, போலீஸ்காரரைக்கொண்டு கேஸை ருஜுப்படுத்தி, மோசக்காரன், திருடன், என்று தீர்மானப் படுத்தி என்னைத் தண்டித்து விடலாம். வேறு நான் என்ன விளம் பக்கூடும்!" என்று மனமோஹன மாணிக்கம் நிதானமாய்ப்பேசி, ராஜ பார்வையில் ரம்யமுற்றிருந்தாள்!

* * *

இதோ! இரண்டு சேவகர்கள் இரைக்க இரைக்க ஓடிப் 'பரக் கப்பரக்க' வருகின்றார்கள்! "மஹாப்பிரபோ, சடாமுடி தரித்துத் தண்டகமண்டலதாரியாய்த் தபோதனர் வருகின்றார்!" என்று சேவகர், கூச்சலிட்டு அரசன் குரைகழல் பணிந்தனர்! "மஹாப்பிரபு வந்தனரா வந்தனரா!" என்று மன்னர் மன்னன் சிம்மாதனம் விட்டுத் தரையிலிழிந்து எதிரேயோடி, பாதம்பணிந்து போதமுணர்ந்து,

ஆசையெனு மலைபடியா தல்லலெனுங்
　கடலுழலா தவனி யெல்லாம்
நேசமெனும் நிலாப்பரப்ப நியதியெனும்
　நெடுங்கோடே நீட்ட வெண்ணிப்
பாசமறுத் தேசலொறுத் தின்பமெனும்
　பக்குவப்புத் தமுதந் தன்னை
ஈசனவன் மகிழ்ந்திடத்தா னெல்லார்க்கு
　மிறைத்தனையே யிசையின் மிக்கோய்!

அறநெறியா மதுவானோய் மறநெறியா
　மாந்தர்க்குன் மகிமை காட்டிப்
புறநெறியிற் செலவொட்டாப் புண்ணியனே
　கண்ணியனே புனித னானோய்
உறவினனே நண்பினனே உண்மையனே
　உறுதவனே யுலக மெல்லாம்
கறகறவென் றுட்டவல்ல கடுந்தவனே
　கருணையனே கடவுள் போல்வாய்.

பெரியவனே பீடளிப்பாய் புண்ணியனே
புகழளிப்பாய் பேதுற் ருர்க்கு
முரியவனே உரமளிப்பாய் உற்றவனே
உரையளிப்பாய் ஊர லெந்தும்
அரியவனே அருளளிப்பாய் ஆதவனே
ஒளியளிப்பாய் அருளே யான
சரியவனே நலமளிப்பாய் தவமுனியே
நிலையளிப்பாய் சரியா மெல்லாம்!

என்று பாமாலைபாடி முனிவரர் பதம் பணிந்து, பக்திச்சாமரையால் பலதரம் விசிறி "ஸ்வாமிகளே உள்ளே எழுந்தருளுங்கள்" என்று முனிபுங்கவரை உள்ளே அழைத்துச்சென்று உயர்ந்த * அரியாசனத்தில் உன்னதமாய் அமர்த்தினன்!

உடனே முனிஸ்ரேஷ்டர், ஆங்கிருந்த அனைவரையும் குளிரக் கடாக்ஷித்து,

"இவர் யாவர் எதிரே நிற்கின்றவர்? முகத்தைப்பார்த்தால் பால் வடிகிறது! இளைப்பைப்பார்த்தால் வெகு அதிகமாயிருக்கிறது!" என்று கேட்டார்.

அரசன் "தபோநிதே! நம் அரண்மனையில் கணக்கு வழக்கில்லாமல் அதிக கொள்ளைபோயிருக்கிறது! இதுவரையில் எவரும் இவ்வித தைரியங்கொண்டு இங்கேவந்து இப்படிப்பட்டவேலை செய்ததுகிடையாது! நமது போலீஸ் வீரர்கள் நாலு பக்கங்களிலுஞ் சென்று இவனைத்தேடிப்பிடித்து இழுத்துக்கொண்டு வந்தார்கள்! விசாரணைக்காக இங்கு நிற்கிறுன். வேறொன்றும் விசேஷமில்லை." என்று ரிஷீஸ்வரரிடம் வணக்கத்தோடு கூறினன்.

கேட்ட முனிவர் பார்த்தார் முகத்தை! சற்றுநேரம் நிமிர்ந்து வானத்தைப் பார்த்தார்! சிறிதுபோது குனிந்து தரையைநோக்கினார்! கண்ணைக் கொஞ்சம்மூடி, மனனம் சிறிது நாடி "பகவத்கடாக்ஷம், கிருபாவிசேஷம்" என்று கூறிக் கண்ணை விழித்து, உலகத்தைப் பழித்து, உத்தமமான தமது வீணையைக் கைத்தலந்தேந்தி, "ஐயன் பெருமையை யாவர் சொல்லத்தரம்! எங்கும் பரந்து, எங்கும் விளங்கி, எங்கெங்கும் தனது கருணையமுதத்தைக் கணக்கில்லாமல் பொழிந்து எல்லா உயிர்களுக்கும் இல்லாமை நீங்கி இன்பம் உண்

* அரியாசனம்=சிம்மாசனம்.

டாக இணையற்ற அருள் புரியும் ஈசன் கருணையல்லவா இவனை என்னிடம் இழுத்து வந்துவிட்டது! ஹே! பரமதயாளோ! ஹே! பக்தவத்ஸலா! ஹே! தீனபந்தோ! ஹே! ஸ்ரீய: பதே! உன்கருணையை என்னவென்று சொல்லுவேன், உன் மகிமையை யாதென்று புகலுவேன், உன் இரக்கத்தை யாதெனக்கூறுவேன்! ஓடிப்போகும் குழந்தையை நாடிப்போகும் தாயைப்போலவும், வாடிப்போகும் பயிரைத் தேடிப்போகும் மழையைப்போலவும், உலகக் கலக்கத்தில் உழன்று சுழன்று உன்மத்தம் பிடித்து உன்னை விடுத்து, விளக்கையேந்திக்கொண்டே கிணற்றில் விழப்போகுமவரைக் கிருபையோடே காப்பாற்றக் கிருபை வைத்தனையே! விஷத்தைக் குடிக்க விரைந்து செல்கையில், அந்தக் கிண்ணத்தை அப்படியே தட்டி விட்டு அமிர்தத்தைத் தூக்கி அளவாகக் கொடுத்தனையே! உன் அன்பை யாதெனப்புகலுவேன்! உன் அருளை யாதெனச்சொல்லுவேன்!

ஈஸ்வர கிருபாசல மஹிமா
திவ்யகர்ணாம்ருத சுகமா
மனோலய ஸேவிதஸ்வரூபம்
ஆனந்தாம்ருத திவ்யரூபம்
ஸஜ்ஜன ஸ்ரீ ஹ்ருதயாரவிந்தம்
ஸர்வேஸ்வரப்ரீதி சம்பந்தம்
ஈஸ்வரக்ருபாசல மஹிமா
திவ்யகர்ணாம்ருத சுகமா"

என்று பகவானைத் துதித்துப் பாடி மறுபடியும் யோசனையி லமுழ்ந்தினர். இதைப் பார்த்திருந்த அரசன், முனிபுங்கவரது இணையடி பணிந்து,

"யதிராஜா, தவராஜா, தாங்கள் யாதோ விசேஷம் இச்சிறுவனிடத்தில் கண்டதாய்த் தெரிகிறது! தயவுசெய்து இவனைப்பற்றி எனக்குத் தெரிவிக்கவேண்டும்! தேனில் விழுந்த ஈயைப்போலேயும், பேனால் வருந்திய தலையைப்போலேயும், ஒன்றுந்தோன்றாது உளந்தடுமாறும் எனக்கு உபதேசம் செய்யல்வேண்டும்! அரண்மனைக்கொள்ளையால் அனேகர் கவலைப்பட்டனர்! உற்ற திருடனைச் சித்திரவதைசெய்து உயிர்போக்க வேண்டுமென்று ஊராரனைவரும் ஒரே கருத்தாயெண்ணுகின்றனர்.........என்று சொல்லுவதற்குள்,

"ஹா ஹா! தயாராயிருக்கின்றேன்! நியாயமாய்த்தோன்றினால் நியாயமே செய்யுங்கள்! என்னைக்கண்டு இரக்கங்கொண்டு அநியாயம்

செய்து அதர்மம் விளைக்காதீர்கள்!" என்று மதுரேசனுகிற மனமோஹன மாணிக்கம் ராஜதீரத்தோடு ரம்யமாய்ச்சொன்னுள் !

"தம்பிபொறு, தம்பிபொறு! பொறுமை கடலினும் பெரிது!" என்று ரிஷீஸ்வரர் மதுரேசனைப் பேசாது நிறுத்தி, அரசனை நோக்கி,

ஹே! ராஜா! நான் சொல்லும் பக்ஷத்தில், உனக்கும், இங்கு வந்திருப்போ ரெல்லாருக்கும் ஊரிலுள்ள ஏனையோருக்கும் நியாய மென்றே படுமல்லவா?" என்று கேட்டார்.

"ஆம் ஆம்! தடை யென்ன! ஆக்ஷேபமென்ன! தர்மப்பிரபோ அதற்கென்ன சந்தேகம்! த்ரிகால ஞானியாகிய தங்கள் இஷ்டப்படியே நடக்கட்டும்!" என்று அங்கிருந்தோ ரனைவரும் ஒரே மொழியாய் உள்ளக்கருத்தை உவப்போடு தெரிவித்தனர்.

"அப்படியானுல், அரசனே, இவனைவிடுவித்து, இப்போதே வேண்டுமான இனிய உணவளித்து என்னுடன் அனுப்புதல் வேண்டும்! இவனைச் சாமானியனுகவா கருதிவிட்டீர்கள்! இவனைப்பற்றி நான் பின்னுல் தெரிவிக்கிறேன். இப்போது நானும் சொல்ல மாட்டேன்! நீங்களும் என்னைக் கேட்கக்கூடாது!" என்று ரிஷிபுங்கவர் முடிவான உரையை முறையாகச் சொல்லிவிட்டார்.

"அப்படியே! அப்படியே யாகட்டும்! அவ்வண்ணமே நடக்கட்டும்!" என்று அனைவரும் கரகோஷ மிட்டார்கள்.

மனமோஹன மாணிக்கம் இதேது என்று சிறிது யோசித்து "மஹான் நம் நிலைமை தெரிந்து மரியாதையைக் காப்பாற்ற மனமுவந்தனர் போலும்" என்று தானும் தைரிய மடைந்து தர்மத்தைத் துதித்துக் கொண்டிருந்தாள்.

"அப்படியானுல் ஸ்நான பானுதிகளுக்கு ஏற்பாடாகலாமே!" என்முன் அரசன்!

"ஸ்நானம் முதலியவைகளுக்கு இப்போது நேரமுமில்லை, சௌகரியமும் படாது! இளைப்பு தீரவும் களைப்பு நீங்கவும், ஆகாரம் மாத்திரம் கொடுத்தால் ஸ்நானம் முதலியன ஆஸ்ரமத்தில் ஏற்பாடு செய்து விடுகிறேன்" என்று ரிஷீஸ்வரர் கூறினர்.

மனமோஹன மாணிக்கத்திற்கு இப்போது உண்டான ஆச்சரியத்திற்கு அளவென்பதே யில்லை. ஐயன் செயலென்று அற்புதனைத் துதித்திருந்தாள்.

உணவானதும், முனிவரும் மனமோஹன மாணிக்கமாகிற மதுரேசனும் புறப்பட்டார்கள். அரசன் பல்லக்கொன்றைத்தந்து, ஆட்களையனுப்பி ஆஸ்ரமம் வரைக்கும் விட்டுவரும்படி ஏற்பாடு செய்தனன்.

இஃதல்லாமலும், ஞாபகார்த்தமாக, ‡ கம்பியில்லாது தந்தி பேசும் யந்திரங்கள் மூன்று கொடுத்து * ரிஷிஸ்ரேஷ்டரைப்பணிந்து, மதுரேசனைவாழ்த்தி வரங்கொடுத்து, அரசன் மகிழ்வோடு அவர்களை யனுப்பினன்.

---

‡ கம்பியில்லாது தந்தி பேசும் யந்திரங்கள் என்பது—Wireless Tleegraphic apparatus.

* ரிஷிஸ்ரேஷ்டர், முனிபுங்கவர் முதலியபதங்கள் ஒருவரையே குறிக்கின்றன.

# இருபத்திரண்டாவது அத்தியாயம்.

ஜகன்மோஹன சிங்காரம். துணையேற்படுதல்.

"ஹிஹிஹி!" என்று இளித்துக்கொண்டு, ஜகன்மோஹன சிங்காரத்தண்டை ஜகஜ்ஜோதியாய் வருகிறான், குருவியைவாயில் கடித்த கோரராக்ஷதன்! பார்த்ததும் அவளுக்குப் பயங்கரமாயிருந்த போதிலும், உள்ளத்தை அவள் உறுதிப்படுத்திக்கொண்டு, சந்தோஷப்படுவதுபோல் சரசஸஞ் செய்தாள்!

"அடீ கண்ணே! அருமைப் பொண்ணே! தீவாளி அண்ணெக்குக் கண்ணாலம் வைச்சுகோ கூடாதுண்ணு மாரியாத்தா சொல்லி ஊருக்குப்போனு! நீ சீக்குரம் என்னெக் கண்ணாலம் பண்ணிக்கணும் என்னுசொல்றே?" என்று ப்ரம்ஹ ராக்ஷதன் பரிவோடே கேட்டான்.

"தீவாளி அண்ணெக்குக் கண்ணாலம் வைச்சுகிறது எங்கொவூட்டுலே வயக்கம்! அப்புடிக் கண்ணாலம் அண்ணெக்கு வைச்சுகுறது உங்கவூட்டுலே வயக்கம் இல்லாகிட்டிபோனு ரெண்டு நாமுன்னே வைச்சுகுறதானே!" என்று ஜகன்மோஹன சிங்காரம் வெகு ஜாக்கிரதையாய் பேசினுள்.

"ஹோ ஹோ ஹோ! பொண்ணே! உனுக்கு ராச்சசாள் பாசை நண்ணு புடிச்சுபோச்சு, நண்ணு புடிச்சுபோச்சு! அத்தனெ நாள் தாமஷம் பண்ணக்கூடாது! சீக்கிரம் இன்னும் ரெண்டுநாளிலெ கண்ணாலம் வைச்சுகுனு நண்ணு இருக்கும்! மாரியாத்தா பொரசங்கம் பண்ணுளே! அவபேச்செதட்டி நடந்தா அவளுக்கு வந்துடும் அதிகமா கோவம்! அத்தொட்டு பொண்ணே! கண்ணாலம் இன்னும் ரெண்டுநாளிலே வைச்சுகொதான் ஒணும்!" என்று பிரம்மராக்ஷதன் இரைந்து பரிந்து இளிச்சப்பல்லாலே குருவியை விட்டு ஈனத்தனமாய் மானமில்லாது கேட்டான்.

"பொர்ம ராச்சசா! நான் பேசுறது தான் நண்ணுயிருக்குது இண்ணு சொல்றேயே! உன்னெக் கட்டிக்கொ என்னு கசக்குறது! எனுக்கு அதுரொம்ப இஸ்டம் தான்! ஆனல் வருற தீவாளிக்கு பத்து நாளெக்கு முன்னே கண்ணாலம் பண்ணிகுனு, நானும் செத்து பூடுவனும், என்னெக் கண்ணாலம் பண்ணிக்கிறவனும் செத்துப் பூடுவானும்! இந்தமாதிரி இருக்கிறது என்தன் சங்குதி! ஆதுலாலே,

பொர்ம ராச்சசா, நீ ஒண்ணுக்கும் அவெசாப்படாதே. அத்துமிச்சிப்போவாதே" என்றாள் ஜகன்மோஹன சிங்காரம்.

இதற்குள்ளாக என்ன என்னவென்று இரைந்து, "ஆர் அத்துமிச்சுப்போறது? அது என்ன அப்புடி கொறெவாபேசுறெயே பொண்ணே? நானா அத்துமிச்சுப்போறாது!" என்று ஆர்ப்பரித்துக் கேட்டான் அகோர ராக்ஷதன்!

"அடே முண்டமே!"

"என்னா என்னா!"

"முண்டம் என்றால் மனுசாள் பாசையிலே தாமரை இண்ணு அர்த்தம்! ஒலக்கணமா பேசுறவங்கோ அதை முண்டகம் இண்ணு சொல்லுவாங்க! நானா பாதி மனுசாள் பாசெயவுட்டு, பாதி ராச்சச பாசையெத் தொட்டு இருக்குறதாலே, சாதாரண மனுசாள் சொல்ற மாதிரி 'முண்டம்' இண்ணு சொன்னேன்! அப்படியிண்ணா ஆசை மேலே தாமரையே இண்ணு சொல்லுறது ஆவும்!" என்று உள்ளே சிரித்துக்கொண்டே முகத்தில் சிரிக்காமலே வினோதப்பேச்சை விவேகமாய்ப்பேசினாள் ஜகன்மோஹன சிங்காரம்!

"ஹா! அப்புடியானா நானா தாமரையா! பேஷ்! நண்ணாயிருக்குது, நண்ணாயிருக்குது! தாமரையா நான்! தாமரை! தாமரைக்கொடி! தாமரைப்பூ! நானா தாமரைப்பூ! அல்லல்ல! நான் தாமரைப்பூ அல்ல! நான் தாமரைக்கொடி! நான் தாமரையா! எந்த தாமரை! குளத்திலேயிருக்கிறதே கொடி கொடியா, எலெ எலெயா, பூபூவா அந்த தாமரையா! நீ ரொம்ப புத்திசாலி! கொளத்துத் தாமரெதானே" என்றான் குட்டிச்சுவரான மட்டி ராக்ஷதன்!

"சே! அது கெட்டுதே! கொடி கொடியா பூபூவா கொளத்திலேயிருக்குதே அந்த தாமரையையா சொல்லுவேன்! சே! அது கெட்டுதே!"

"ஆனா, பொண்ணே பின்னெ எது?"

"கொளத்து தாமரெயல்ல; ஆகாஸதாமரெ!"

"பேஷ்! பேஷ்! ரொம்ப சரி ரொம்ப சரி. ரொம்ப சந்தோசம் ரொம்ப சந்தோஸம்! ஆகாஸதாமரெயா! அப்புடி சொல்லு அப்புடி சொல்லு! நான் என்னா சாதாரண மனுசனா! சாதாரண ராச்சசனா! நான் பிர்ம ராச்சசன், பொம்மராச்சசனாச்சே! என்னெ கொண்டு

போய் கொளத்துத்தாமரை யெண்ணு சொல்லுவாங்க! ஆகாஷதாமரெ யெண்ணு சொன்னுதான் அயகா இருக்கும்! நீ ரொம்ப புத்திசாலி நீ ரொம்ப புத்திசாலி! ஆகாஷதாமரெ ஆகாஷதாமரெ ரொம்ப நண்ணு யிருக்குது ரொம்ப நண்ணு யிருக்குது!" என்று தலையாட்டித் தாளம் போட்டான் தறிதலே ராக்ஷதன்!

"பாத்தெயா பிம்மராச்சசா! இது தான் மனுசாள் பேச்சோடு ராச்சசாள் பேச்செயும் கலந்தா பேஷாயிருக்கும் இண்ணு தெரியுதா!" என்றுள் ஜகன்மோஹன சிங்காரம்!

"அதுக்கென்ன ஆச்சேபனே! அத்தொட்டுதானே நீ எனுக்கு மணித்தக் காளிகாய் மாதிரி இருந்தபோதிலும்" என்று பிரம்மராக்ஷதன் சொல்வதற்குள்,

ஜகன்மோஹன சிங்காரம், தானே, வாக்கியத்தை முடிக்க எண்ணி, "நீ கண்ணுல பூசினிக்காபோலே இருந்தாலும் கண்ணுலம் முடிக்கொணும் இண்றது" என்று பூர்த்திசெய்தாள்.

"பேஷ் பேஷ்! கண்ணுல பூசனிக்கா! பேஷ்! முன்னே தாமரெ, ஊங், ஆகாஷதாமரெ, ஆகாஷதாமரெ, இப்போ கண்ணுல பூசினிக்கா! கண்ணுல பூசினிக்கா! கண்ணுலம் பண்ணிக்குற பூசினிக்கா, கண்ணுலம் பண்ணிக்கொபோற பூசினிக்கா, பேஷ் பேஷ்! தமாஷ் தமாஷ்! இன்னும் என்னுமோ என்னெ திட்டுறமாதிரி சொன்னேயே! என்ன அது! ஆங் ஆங்! அத்துமிச்சுபோனே! என்ன அது! அப்புடி இண்ணு என்ன?" என்று ஆச்சரியமாய் வாயைத்திறந்து, கண்ணை மேல் நோக்கிக் கைகளை விரித்துக் கழுதையாய்க் கேட்டான் கடைகெட்ட ராக்ஷதன்!

"அத்துமிச்சுப்போனே இண்ணு அர்த்த மாவலெயா உனுக்கு!" என்று ஹாஸ்யக்குரலோடும் சிரித்த உதட்டோடும் இமைத்த கண்ணோடும் இனிமையாய்க் கேட்டாள் ஜகன்மோஹன சிங்காரம்!

"என்ன என்றே?" என்றுன் ராக்ஷதன்!

"அத்தமிச்சு என்றுல், சூரியன் மறைந்த பின் தானே பள்ளியறைக்குப்போவது! அதான், அத்துமிச்சுபோனே இண்ணேன்!" என்றுள் ஜகன்மோஹன சிங்காரம்!

"பேஷ் பேஷ்! வெகு பேஷ்! பலே பேஷ்! நீ ரொம்ப புத்திசாலி, நீ ரொம்ப யுத்திசாலி! உன்னுண்டே பேசிகினே இருந்தா இப்புடி தான் பொயுதுபோறதே தெரியாதெயே பூடுது! கண்ண

லம் தீவாளிக்கு பத்து நாளெக்கு முன்னேயே பண்ணிகிறு நீயும் செத்து பூடுவே, கண்ணாலம் பண்ணிகிறவனும் செத்து பூடுவான் இண்ணு என்னென்னுமோ சொன்னேயே அதென்ன?" என்று ஆலோசனைபடிந்த முகத்தோடே, பார்வையைப்பூமியிலே பொருத்திப் பரிதாபமாய்க் கேட்டான் பிரம்மராக்ஷதன்.

"அப்படிதான் ஜோஸியம், அதான், ஜாதகம், பாத்து சொன்னுங்க! அத்தொட்டுதான் எனுக்கு பயம்!" என்று கிலியடைந்தவள் போல் கண்ணை மருள மருள விழித்து மாயமாய்ப்பேசினுள் ஜகன் மோஹன சிங்காரம்!

"சரி சரி! நானும் செத்து நீயும் எறந்து அதுனலே என்ன பொரயோஜனம்? நானு மாரியாத்தாளுக்கு சொல்லி, தீவாளி அண்ணைக்கு அல்லக்கிட்டிப்போனு ரெண்டு மூணு நாளெக்கு முன்னே கண்ணாலம் வைச்சிகொ சொல்லி சொல்லிடுறேன்! ஓனுக்கு இங்கே பேசிக்குனு இருக்க மனுசப்பொண்ணு தொணே ஒணுமா, ராச்சசப் பொண்ணு தொணே ஒணுமா! சொல்லு!" என்முன் ராக்ஷதன்!

"மனுசப்பொண்ணு இருந்தா அனுப்புங்க! கண்ணாலம் மனுசாள் வயக்கம் எப்புடி யெப்புடி யெப்புடியோ அப்புடி அப்புடி அப்புடி யப்புடியே செய்துட சொன்னிங்களே! மனுசப்பொண்ணு அனுப்பினிங்கண்ணு கண்ணாலத்துக்கு வேண்டிய ஏப்பாடுங்களெல்லாம் அவளெ வெச்சுகினே செய்துடலாம். என்ன சொல்றிங்கோ!" என்முள் ஜகன்மோஹன சிங்காரம்!

"ஹா பேஷ்! ஐந்து நிமிசத்தில் அனுப்பி விடுகிறேன்." என்று ஆடி ஓடிச்சென்முன் அகாதராக்ஷதன்!

* * *

கால்மணி நேரத்திற்குள், காற்றைப்போல் பறந்து, ஓடிவந்தாள் உத்தம ரூபமுடைய உயர்தரமாது ஒருத்தி! அலங்காரத்தைக்குடித்து அவள் முகம் ஆனந்தப்பட்டுக்கொண்டிருந்தது! * நெற்றி நடுவில் உற்று விளங்கும் அத்தனுகிய கடவுளைக் காண ஏணி போட்டதுபோல் இயைந்த மூக்கு இன்பம் விளைத்துக்கொண்டிருந்தது! இவ்வாறு உபமானங்கூறுவது இசைந்த தாகுமேயன்றி கோட்டைச்சுவரென்முவது, நின்ற நெடுமரமென்முவது, வருகின்ற மாதரசியின் வனப்புள்ள மூக்கிற்கு உபமானங்கூறுவது உபேக்ஷ

* சந்தனப்பொட்டிடுமிடம் கடவுளிருப்பிடமென்பது சம்ப்ரதாயம்.

யே யாகுமென்று உத்தமியாகிய ஜகன்மோஹன சிங்காரத்திற்குச் சித்தத்தில் நன்றாய்ப் புலப்பட்டு விட்டது! தமயந்தி முகத்தை வார்ப்பதற்குப் பிரமதேவன் சந்திரனிலிருந்து ஒரு கரண்டிமொண்டு கொண்டானென்றும் நிலாவில் களங்கம் காண்பது அந்த சந்திரன் வழியாய் ஆகாயம் தெரிவது என்றும் அதிவீரராம பாண்டியர் அழகாய்க்கூறினர்! இப்பொழுது ஒயிலாய் எதிரேவரும் பெண்ணரசியின் முகத்தைப் படைக்கும்போது, குறைவாய்த் தோன்றிய அழகின் உருக்கைப் பிரமதேவர் நிலாவில் ஊற்றி நிறைத்து விட்டார் என்று நாம் இரண்டுதரம் சொல்லுகிறோம்! அதனால்தான் நிலாவில் சந்து மிகாமல் நிற்க, ஒழுங்காய் வானத்தில் உலாவி வருகின்றது என்று ஜகன்மோஹன சிங்காரம் மஹா ஆச்சரியப்பட்டு,

"அம்மா! வாருங்கள்! உங்கள் பெயரென்ன கூறுங்கள்! இப்படி என்னருகே உட்காருங்கள்! இந்தக்காட்டிலும் இந்த மலையிலும் இந்தக்குகையிலும் சுந்தர மனிதர் சுகமாய் வாழுகிறார்களோ என்று ஆச்சரியம் எனக்கு அதிகமாக உண்டாகின்றது!" எனச் செப்பினள்!

"அம்மா! என் பெயர் அதிரூப சுந்தரி! என் தகப்பனர் பெயர் அதி மனமோஹன சந்தன மஹாராஜா. நந்தனவனத்தில் தனியே நறுமலர் கொய்துகொண் டிருக்கும்போது எங்கேயோ சென்றுகொண்டிருந்த இந்த ராக்ஷதன் என்னைத்தூக்கி எடுத்து வந்தானிங்கே! தப்பிப்போகவழி காணாது தவித்துக் கடைசியாய் அவனுக்கடங்கிக் காலந்தள்ளிக்கொண் டிருக்கும்போது ஒருவர்பின் னொருவராய் எத்தனையோ பெயரைப் பிடித்துவந்து வைத்திருக்கிறனிந்தக்குகையில்! அம்மா நீயும் இங்குவந்து அகப்பட்டுக் கொண்டாயே! உன்னைப்பார்த்தாலெனக்குக் * கண்ண நீர் பெருகுகின்றதே!" என்று அதிரூப சுந்தரி மிக அழுகோடு சொன்னள்.

"அம்மா! உன்னை விடவா நான்! இந்த இளவயதில், சுந்தரமென்பது சொகுசாடும் சமயத்தில் இந்தப்பாவியிடம் அகப்பட்டு இடர்ப்பட்டாயே! தலைவிதி யென்பதற்கு முன் எவர் மதிதான் என்ன செய்யும்! என்று ஜகன்மோஹன சிங்காரம், கண்ணில் பரிதாபம் எண்ண முடியாத வளவு ததும்பித் தயங்க வெதும்பி வெதும்பி விசனமாய்ப்பேசினள்!

---

* கண்ணநீர் = கண்ணீர்.

“அம்மா நீ, இந்த பிரம்மராக்ஷதனைச் சீக்கிரத்தில் கல்யாணம் செய்து கொள்ளக் கருத்து உண்டாகும்படி கற்பிக்க எனக்கு வற்புறுத்தி யனுப்பினான் அவன்! அதனால் தான் உள்ளே திட்டிக் கொண்டு முகத்தை மலர்த்திக்கொண்டு இங்கே வந்தேன் நான்!” என்றாள் அதிரூப சுந்தரி!

“அம்மா, நீ வந்தது எனக்கு மிக்க சந்தோஷம்! இன்னும் யாராவது வந்திருந்தால் எனக்கு இவ்வளவு ஆறுதலிராது! இத்தனை பேரிருக்கும்போது நீ வந்தது என்னுடைய அதிர்ஷ்டமே! ஏது, அம்மா, இங்கு வந்தது நீ! இத்தனைபேரிருக்கும்போது அவர்களெல்லாரையும் விட்டு உன்னை மாத்திரம் இங்கு * உவந்து போகச் சொன்னது என் அதிர்ஷ்டமா? ஏதேனும் வேறு காரணமிருக்கின்றதா?” என்று ஜகன்மோஹன சிங்காரம், சிறிது தலையை அசைத்துக் கண்ணை நெற்றிக்கு மேலே நிமிர நோக்கி அதிரூப சுந்தரியை அழகாகக்கேட்டாள்.

“அம்மா நான் கெட்டது கெட்டுவிட்டேன்! கெட்டபால் நல்ல பாலாகாது! கேடுகெட்ட புத்தி மாறுபடாது! என் கதி இந்தக்கதியான போதிலும், இவன் செய்யும் அக்கிரமங்கள் எனக்குச்சிறிதும் சரிப்படுகிறதில்லை! மாட்டைத் தின்பான் மனிதரைத்தின்பான், மாரியாத்தா கிழவி உபதேசத்தை மஹா நன்றாய்க் கேட்டான்! ஊரை யாளும் அரசகுமாரிகளை ஓடெடுக்கச்செய்து ஓட்டி விட்டான் எத்தனையோ பேரை! பட்டபஸ்திரீ யாக்குகிறே னென்று பாசாங்கு செய்து எத்தனையோ பேரைப் பத்து நாள் சென்றதும் பரதேசிகளாக்கிவிட்டான், பண்டாரங்களாய்த் தீர்த்துவிட்டான்! அடுத்த குகையில் அனேகம் பெயரை வாடவைத்து வேடிக்கை பார்க்கிறான் மூடராக்ஷதன்! இவனை நெருங்குவாரில்லை, இவனைக் கொல்லுவாரில்லை! என்கதியும் மற்ற ஏழைப்பெண்கள் கதிதான் ஆய்விட்டது! ஆனபோதிலும் நான் காலாகாலத்திற் செய்யும் சாகஸத்தாலும், அவன் வருகிறவேளையில் ஆடிச்செய்யும் நாடகவேஷத்தாலும், அபிமானம் சிறிது என்னிடம் அமர்த்தி, நம்பிக்கை யென்பதை என்னிடம் நாட்டி, அந்தப்பாவி ராக்ஷதன், அதிகமாய் என்னை முகச்சுளிப்பில்லாமல் அகக்களிப்போடு அன்பு பாராட்டுவது வழக்கம். நீ யென்னமோ, அவனுக்கு லேசாய் அடங்காது கல்யாண நாளைக் காலந்தள்ளி வைத்துக்கொண்டதால், என்னை

* உவந்து = விரும்பி.

யனுப்பிச் சொல்லச்சொன்னான் அவனுக்காக! அதைப்பற்றித்தான் நான் இங்குவர நேர்ந்தது! உன்னைப்போல் அழகினளை ஒருநாளும் கண்டதேயில்லை! சாக்கடைநாய்க்குச் சர்க்கரைப் பொங்கலை அமிசை செய்விப்பது போல் உன்னையா கொண்டுபோய் உன்மத்தனிடம் கொடுப்பது." என்று சாமாரியாய்ப் பேச்சைப் பெருமாரியாய்ப் பொழிந்தாள் அதிரூப சுந்தரி.

"அம்மா! வந்தனம்" என்று ஜகன்மோஹன சிங்காரம், சிறிது உதட்டை அசைத்து ஒரு நிமிஷம் யோசித்து, "அவனைக்கொன்று விடுதற்கு வழி ஒன்றும் உங்களுக்குத் தோன்ற வில்லையா! இத்தனை நாளாய் எத்தனையோ பேரிருந்தும் ஒரு வழியும் உங்களுக்குத்தோன் றாது தலைவிதிக்கு விட்டீர்களே? என்ன ஆச்சரியமாயிருக்கிறது!" என்று உள்ளங்கையால் உதட்டை மூடி மெள்ளப்பேசி மேனி வாடிக்கொண்டிருந்தாள்.

"அம்மா! உன் பெயரென்ன?" என்றாள் அதிரூபசுந்தரி.

"என் பெயர் ஜகன்மோஹன சிங்காரம்!"

"இப்போதுதான் இருவரும் சேர்ந்து ஒருவழி யாக்கவேண் டும்!"

"பக்குவமாய் நடந்தால் பழமாகிறது."

"உண்மைக் குத்தாரமாய்ச் சத்தியத்திற்குப் பொதுவாய் நீ நடப்பாயானால், நாமிருவரும் வேலைமுடித்து நானில முழுதையும் நன்றாய்க் காப்பாற்றிவிடலாம்!"

"அப்படியே செய்யலாம்! என்னை நம்பமாட்டாயா!"

"உன்னை நம்பாமலென்ன! உன்னைப் பார்த்தால், ஒரேமனதாய் நோக்கினால், சத்தியமென்பது மரமாய்ப்பெருத்து உத்தமப்பழ மாய் உச்சியிற் பழுத்தது என்னலாம்போ லிருக்கின்றதே! உன்னை நம்ப யாதுதடை?"

ஜகன்:—ஆனால் நீ என்னை நம்புவாயா?

**அதிரூ**:—நீ என்னை விரும்புவாயா?

ஜகன்:—விரும்பித்தான் சொல்லுகிறேன்!

**அதிரூ**:—அப்போது அவனைக் கட்டாயம் வெல்லுகிறேன்!

**ஜகன்**:—பேச்சு விடாதே!

**அதிரூ**:—மூச்சு விடாதே!

ஜகன்:—யாராஞலும் சரி, சொல்லக்கூடாது!

அதிரு:—எவராஞலும் சரி, ஜபம் ஒடாது!

ஜகன்:—ஒருவர் மாத்திரம் இருக்கிருர் அவரால் காரியமாகும்.

அதிரு:—ஒருவர்க்குத் தெரிந்தால் உலகம் அறிந்து போகும்

ஜகன்.—அவர் அப்படி யல்ல!

அதிரு'—ஆனல் அவரைச்சொல்ல.

ஜகன்:—அவர் பெரிய ரிஷி!

அதிரு:—ஆனல் இல்லே பழி!

ஜகன்:—அவரை உளவாய் வைத்துக் கொள்ளலாம்.

அதிரு:—அவரால் காரியம் நடத்திக்கொள்ளலாம்.

ஜகன்:—எப்போ வருவாரோ!

அதிரு:—எது சொல்வாரோ!

ஜகன்:—வரம் தருவாரோ!

அதிரு:—அருள் புரிவாரோ!

ஜகன்:—அதிருக்கட்டும், இவன் உளவென்ன?

அதிரு:—ஆகட்டும், உன்னிடம் களவென்ன?

ஜகன்:—ஆத்திரம் பொங்கிடுதே பக் பக்!

அதிரு:—அவசரப்படாதே கப்சிப்!

# இருபத்து மூன்றாவது அத்தியாயம்.



மதுரேசனென்று வேடம் பூண்ட மனமோஹன மாணிக்கமும், 'சத்யமேவஜயதி' என்று தங்கனாம் பூண்ட காருண்யரிஷியும் பல்லக்கில் உட்கார்ந்து மெல்ல மெல்லக் காட்டிற்கு மகிழ்ந்து மகிழ்ந்து செல்கிறார்கள்! ஆபத்து ஒருவாறு விலகினதே, ஐயன்கருணை அபாரமாய்க் காண்பித்தனரே என்று மனமோஹன மாணிக்கம் ஆனந்தங் கொண்டது அவ்வளவிவ்வளவன்று! காற்று வண்டியில் வைத்து காட்டில் விடப்பட்டும், ஆகப்போகிற பலியினின்றும் அரிதாய்த் தப்பிவிட்டாள்! பின்னர் மதுரைவீரனைப்பழித்த மன்றொரு சாமியை முதலை விழுங்க அதினின்றும் பிழைத்து விட்டாள்! போலீஸார் பிடித்தார்கள், அவர்களைப்பாம்பு கடித்தது! பாவிகளொழிய, மட்டப்பலகை யென்னும் நல்லவன் வந்து நலமாய்ச்சார, அரசன் சபையில் வந்து அங்கே தவிக்க, முனீஸ்வரர் வந்து முறையாய்க்கொண்டு போகிறார்! தவஸ்ரேஷ்டர் முக்காலமு முணர்ந்த முனிநாத னென்று நன்றாய் மனதில் பலமாய்ப்பட்டுவிட்டது! தன் நிலைமை தெரிந்தே தன்னைக் காப்பாற்றவும், * தாரணிக்கு நன்மை விளைக்கவும் தரும சிந்தை கொண்டே தவமுனிவர் அழைத்துக்கொண்டு ஆனந்தமாய்ப் போகிறாரென்று அவளுக்கு நன்றாய் விளங்கியது! ஆதலால் இப்போது அவளுக்குண்டான களிப்பை யாதெனப்புகலலாம்! கர்னூல் கடப்பையில் வெய்யிலால் அவஸ்தைப்பட்டவன்மேல் பெங்களூர் காற்று ஆனந்த சஞ்சீவியை அகமகிழப் பெய்தால், போகிற உயிரும் எப்படிமேவி ஒளிருமோ, அப்படியே மனமோஹன மாணிக்கத்திற்கு என்றுமில்லாத மகிழ்ச்சி அன்று வந்து நேர்ந்தது!

இவள் மகிழ்ச்சி இப்படியாக, அவர் மனம் எப்படியிருந்தது என்று ஐந்து நிமிஷமாவது சிந்தித்துச் செல்லலாம். அவர் யாரென்றால் அருந்தவ மிகச்செய்த பெருந்தவமுனிவர்! ஜகன்மோஹனசிங்காரத்தைக் காப்பாற்றத் தவத்தையும்விட்டுத் தன்னையுந்துறந்து, கால கதியும், தலைவிதியும், தத்தம்மதியும் கர்மநிதியும் † செல்லும் வழிக்குச் சேவகம் அவர் செய்துகொண் டிருக்கிறார்!

---

* தாரணி=உலகம்.

† இயற்கைவழிக்கும், கர்மஞ்செலுத்தும் காலத்திற்கும், எதிர்ப்படாது அவைவழியே சென்று நன்மைவிளைக்க நாடுகின்றார்—என்பது பொருள்.

மனமோஹன மாணிக்கத்தை அவர் கண்டதும், அவள் சமாசாரம் அனைத்தையும் ஞானபலத்தால் அறிந்துகொண்டு, முனிவரர், ஏதும் பேசாது முகத்தைப்பார்க்கத், தேவத்தன்மை, ஆங்கே திருத்தமாய் ஜொலித்துக்கொண் டிருக்கக்கண்டார்! ஹா ஹா கவிதா சாதுர்யமும் கம்பீர விசேஷமும் சங்கித சிங்காரமும் சத்துவ குணமேன்மையும் தேவகணப்ரபாவமும் தேஜோமயானந்தமும் எல்லாம் ஒன்று சேர்ந்து * நவரத்ன எஸ்ஸன்ஸ் நன்றாய் ஜொலிக்கின்றதே என்று முனிவர்கொண்ட ஆனந்தம் மொழியவே முடியாது!

வீட்டுக்குப்போய் சமாசாரம் விளக்கலாம், அதுவரைக்கும் அலங்கார விஷயங்களையும் சிங்காரப்பேச்சுகளையும் தத்துவமேன்மைகளையும் உத்தமச் சொற்களையும் உரையாடிக்கொண்டே உள மகிழ்ந்து போகலாமென்று உத்தமமுனிவர் சித்தம் கொண்டனர்!

"ஹே! ராஜகுமாரா, நீ இப்படிப்பட்ட காட்டை எப்போதும் பார்த்திருக்க மாட்டாயல்லவா?" என்று தவமுனிவர் அதரக்கனியில் மெதுவுச் சிரிப்பை மெள்ளக்கொண்டு உள்ளங்கனிந்து உவந்து கேட்டனர்.

"ஸ்வாமி! நான் இவ்வளவு அந்தகாரமான இருண்டகாட்டை என்றுங் கண்டதில்லை! நான் இதற்கு முன் பார்த்தகாடு இதில் கால் பங்குகூட பயங்கரமில்லை!" என்று மனமோஹன மாணிக்கம் புன்சிரிப்போடு இன்மொழி கலந்து இதமாய்ப் பேசினாள்!

இதைக்கேட்ட ரிஷிஸ்ரேஷ்டர், "பிள்ளாய்! உனக்கு ஏதாவது உள்ளத்தில் பயம் தோன்றுகின்றதோ! நீ யாதொன்றுக்கும் நிமிஷ நேரமாயினும் அஞ்சவேண்டுவதில்லை! உனக்குக் கெடுதி வந்தபின் உயிர்வைத்திருப்பேனென்று மாத்திரம் நினைக்காதே." என்று தைரியங் கூறித் தலையசக்கினர்.

"ஸ்வாமி! தங்கள் வார்த்தையைச் சிரமேற் கொண்டு அரசனும் மற்றையோரும் ஆனந்த மடைந்து அப்படியே நடந்திருக்க, நான் தங்களை நம்பாவிட்டால் நாசமடைந்தல்லவா போவேன்! பெரியோரை வருத்தினவன் பீடழிந்து போகானு! ஊணை வெறுத்து உலகத்தைப் பழித்து மாதரை விரும்பாது பொன்னைத் தேடாது,

---

* எஸ்ஸன்ஸ்=திராவகம்.—நவரத்னங்களை யெல்லாம் உருக்கிச் சுண்ட வைத்த ஒளியான துளி.

எல்லாம் இறைவன் எல்லாம் ஈசன், நன்மையே முடிவு, தீமையே மறைவு என்று அவைகளைக்கடிந்த தத்துவ முடிவின் தணிந்த பழமாயிற்றே தாங்கள்...'' என்று தத்துவக்காட்டில் கவிமாரிபொழிகிறாள் மனமோஹன மாணிக்கம்! ஹா வென்று வாய் திறந்து, 'தவஞ்செய்த பலன் தன்னியன் பெற்றேன்; பெற்றேன் பெற்றேன் இன்று தான் பெற்றேன்! தவப்பயன் பெற்றேன், கவிப்பழம்பெற்றேன்!' என்று முனீஸ்வரர் ஆனந்த மடைந்து முகத்தைப்பார்த்திருக்க, மனமோஹன மாணிக்கம் மேலும் சொல்வாளாயினள்.

"ஹே! க்ருபாசலநிதே! இந்தக்காட்டில் வந்தக்கோரமும் எவ்வளவுதான் எப்படி யெப்படி யிருந்தபோதிலும், தங்களுடைய பெரிய தவத்தைக்கண்டு, * மாரிகாலத்தில் ஓடும் பறவைகளைப் போலே, கொடுமையும் குரூரமும் அடிபெயர்ந்து அப்படியே போயினவே! தவமாகிற நெருப்பின் முன்னே புலியாகிற கொடுமை நலிசெய்ய முடியாது நாலுகாதமோடாதா! சிங்கம் பறக்காதா சீறல் தொலையாதா! பாவமே பறக்கும்போது, விலங்குகள் தானா கலங்குதல் செய்யும்? தீமையே தூசானல், கர்மமே மண்ணானல், திருட்டு நரியும் முரட்டுப் பன்றியும், கறுப்புக் கரடியும், கல்லாம் யானையும் என்ன செய்ய முடியும், ஏது செய்யக்கூடும்? உண்மையில், இங்கே, உல்லாஸக்காற் றடிக்கின்றதே தவிர வருத்தம் செய்யும் திருட்டு மிருகங்களும், கோபஞ்செய்யும் கொடிய பறவைகளும், ஒன்றுங்காணோம் ஒரு பேச்சுமில்லை! எல்லாம் தவப்பயனே எல்லாம் மனநிலையே, எல்லாம் யோகச்செயலே, எல்லாம் உண்மைப்பொருளே! தத்துவம் பழுத்த * சித்த கமலத்தின் முன் சங்கடமென்பது எங்கிருந்து வரும்? ஏழையைக்காக்க எழுந்தருளிய பெருமானே, பாவத்திருந்தும் கைதூக்கிக் கர்மத்திருந்தும் கரையேற்ற வல்ல தாங்கள், காட்டில் என்னை விட்டு, வாட்டஞ் செய்யவா போகிறீர்கள்! முழுதுமென்னைக் காத்து முன்னுக்குக் கொண்டுவரவேண்டும் முனிவர் பெருமானே!

உன்னைவிட எனக்கியாரே
உதவிசெய வல்லவர்கள்!
கன்னலொடு கனிபாகோ
கற்கண்டோ கவிரஸமோ!

---

* மழைகாலத்திற்கு முன்னே குளிர்பொறுக்க முடியாது தேசம்விட்டுத் தேசத்திற்கு ஒரு ஜாதிப்பக்ஷிகள் பறந்து செல்வதுண்டு. இவைகட்குத் தேசாந்தரிப்பறவைகள் என்று பெயர்.

இன்னமுதோ செழுந்தேனோ
நீ யியம்பு மின்மொழிகள்!
மின்னலென வொளிர்ந்தாலு
மேதினியில் நிலைத்திடுங்காண்! (க)

வெங்கானத் தடுபுலிகள்
வேறுவேறா யோடினவே!
செங்கானத் துறுசிங்கம்
சிதைந்தெங்கோ போயினவே!
பைங்கானத் தெழுபாம்பும்
பயந்தெங்கோ பதுங்கினவே!
நுங்கானத் துறுவவெலாம்
நும்பெருமை தெரியாவோ! (உ)

வானகமே வையகமே
மாமுனிவன் தவம்பாரீர்!
போனகமே பதமென்பீர்
புண்ணியன்றன் திறம்பாரீர்!
நானகமே கண்டாற்குக்
கானகமே நடுங்குவதால்!
ஊனகமே நினைத்திருந்தா
லுடலகமே பிடுங்குவதால்! (ங)

பசிகாணேன் துயர்காணேன்
பாவிநெஞ்சப் புண்காணேன்!
நிசிகாணேன் நோய்காணேன்
நீண்டமனப் பேய்காணேன்!
அசிகாணேன் உசிகாணேன்
ஆறுதலே கண்டேனால்!
நசிகாணேன் புசிகாணேன்
நாதனையே கண்டேனால்! (ச)

ஆனந்தத் தெள்ளமுதே
அன்பனெற்குத் தந்திடுவாய்!
வானந்தங் காட்டிடுவாய்
வனஜனெற்குத் தந்திடுவாய்!

ஊனந்தந் தெரித்திடுவாய்
உளத்தானைத் தந்திடுவாய்!
கோனந்தங் குறித்திடுவாய்
கொழுநனெற்குத் தந்திடுவாய்! (௫)
கொஞ்சுகிளி கூவினகாண்
கோமுனியி னருட்டிறங்காண்!
மிஞ்சுகுயில் பாடினகாண்
மேவரியான் தவப்பலன்காண்!
அஞ்சறிந்தா யாதரிப்பாய்
அற்புதனே கண்திறப்பாய்!
விஞ்சறிந்தார் துஞ்சறிந்தால்
வீறுலகம் பிழைத்திடுமோ! (௬)

---

அண்டம் வெடித்தனவா லாபத்தும்
வந்தனவா லென்செய்கோயான்!
கண்டம் கறுத்தனவால் கடவுளரு
முறங்கினரா லென்செய்கோயான்!
பிண்டம் பெருத்தனவால் பீடுலகம்
மதித்திலதா லென்செய்கோயான்!
தண்டம் பிடித்தவனால் தருமமெலாம்
நிலைத்திடவா லென்செய்கோயான்!" (௭)

இந்தப்படியாக மனமோஹன மாணிக்கம் எந்தப்படியாலும் சொல்ல முடியாத பக்திப்பெருக்காலும் கவி வளத்தாலும் முனிவரர் மீது பாமாலை பாடிக்கொண்டு, அவர் புகழையே பேசியும் அவர்தம் பெருமையையே புகழ்ந்தும் போய்க்கொண்டிருந்தாள். கடவுளே எதிர் தோன்றினும் கவிந்திருக்காது மனம்! ரிஷீஸ்வருடைய மனம், மனமோஹன மாணிக்கத்தின் சாதுர்யத்தில் லயித்துச் சாம்ப்ராஜ்ய மடைந்துவிட்டது! கேட்டகாது கேட்டே யிருந்தது, பார்த்த கண் பார்த்தே யிருந்தது, பொங்கிய மனம் புளகித்தே யிருந்தது! தேகம் வேறு, மனம் வேறு, ஆத்துமாவேறு என்று அந்த நிமிஷம் அவரது சிந்தையிற் படவேயில்லை! இந்தவண்ணம் எந்தவிதத்தாலும் சொல்லமுடியாதபடி, ஆனந்தமடைந்து கொண்டே ஆஸ்ரமத்திற்கு வந்து சேர்ந்தார்கள்.

ஆஸ்ரமத்திற்கு வந்ததும், அருந்தவ முனிவர் மனமோஹன மாணிக்கத்தை நோக்கி,

"அம்மணி, உன் பெயர் மனமோஹன மாணிக்கம் அல்லவா?" என்று உதட்டில் சிரிப்பு உவப்பாய்த் தோன்ற மெள்ளக்கேட்டு மெதுவாய் நோக்கினர்.

"ஆம்! ஸ்வாமி" என்று கூறி ஒன்றுந் தோன்றாது ஒருநிமிஷம் ஆச்சரியத்தாலே கட்டுப்பட்டு அப்படியே நின்று விட்டாள் அழகான மனமோஹன மாணிக்கம்!

உடனே, மனமோஹனமாணிக்கம், சற்று நிதானித்து, "குருநாதா, நவபோதா, தங்களுக்குத் தெரியாதது தாரணியில் யாதுளது! என் சமாசாரம் எல்லாம் தங்களுக்குத் தெரிந்தே யிருக்கும். நான் சொல்லவேண்டுவது ஏதுமிராது எனவே நிச்சயமா யெண்ணுகிறேன்" என்று மனமோஹனமாணிக்கம், தலையைச் சிறிது குனிந்து வெட்கந்தோன்றும் முகத்தாமரை காட்டி, வினயப்பேச்சை விண்ணப்பஞ்செய்து கொண்டாள்.

"அம்மணி! ஐயன் அனுக்ரஹத்தாலே, எல்லாச்சமாசாரமும் எனக்குத்தெரியவருகிறது! நீ ஒன்றுக்கும் பயப்படவேண்டாம்!" என்று ரிஷீஸ்வரர் சொல்லி, உள்ளே யிருந்த ரிஷிபத்தினியையும் ரிஷி கன்னிகைகளையும் கூப்பிட்டு, மனமோஹன மாணிக்கத்தின் சங்கதிகளனைத்தையும் சவிஸ்தாரமாய்ச்சொல்லி, அவளுக்கு ஸ்நானஞ்செய்வித்து அன்னபானாதிகள் அளிக்கும்படி ஆஜ்ஞாபித்தனர்.

ரிஷி பத்னியும் ரிஷி கன்னிகைகளும், மனமோஹன மாணிக்கத்திற்கு, ராஜோபசாரஞ்செய்து, ஸ்நானஞ்செய்வித்து, பட்டாடை யுடுத்திப் புலியாசனத்திருத்தினர்கள்.

பின்னர், ரிஷீஸ்வரரும் ஆங்கு எழுந்தருளி, மனமோஹன மாணிக்கத்தின் பக்கத்தில் மகிழ்வோடு உட்கார்ந்து, இருவருமாகப் போஜனம் இனிதின் உண்டார்கள். போஜனமானதும், முனிவரர் மனமுவந்து,

"அம்மணி! உன் அறிவைக்கண்டும் உன் ஞானத்தைப்பார்த்தும் அளவில்லாதபடி ஆச்சரியப்பட்டேன்! உன் தந்தை தாயார் அங்கே உளங்கலங்கிக்கொண் டிருக்கிறார்கள்! உன் கணவன் எங்கேயோ மனம் வருந்திக்கொண் டிருக்கின்றான். அருமைக்கண்மணி, எப்போது உன் தந்தை வீட்டிற்கு ஏகலாமென்று உனக்கு எண்ணமிருக்கின்றது?" என்று கண்ணில் சிறிது கவலைவருத்த, ஆழ்ந்து பார்க்கும் அபிப்பிராயத்தோடு கேட்டார்.

"ஸ்வாமி! தங்களுக்குத் தெரியாததா! என்னைச் சோதிக்கும்படி என் அபிப்பிராயத்தைக் கேட்கிறீர்களே தவிர வேறன்று. அன்பனை விட்டு அப்பனகத்திற்கு எப்படிச் செல்லக்கூடும்? தந்தைக்கு மேல், கடவுளுக்கு மேல், தங்களையடுத்த எனக்குத் தாரணியில் யாது குறைவரும்? ஆதலால், தாங்களே என்னைக் காப்பாற்றித் தாங்களே என்னைக் கரையேற்றித் தாங்களே எனக்குக் கருணை புரிதல் வேண்டும்! இல்லையேல் நான் இருந்தும் பயனில்லை! செத்தாலாவது சிவலோகஞ்சேரலாம்" என்று சிந்தை வருந்தி, முகஞ் சிவந்து, கண்கலங்கி, உதடு துடித்து மனமோஹன மாணிக்கம் மஹா வருத்தத்தோடு கூறினாள்.

"அம்மா, நீ ஒன்றக்கும் வருந்தாதே! எல்லாம் பகவான் இனிமையாக முடித்து விடுவார்! நீ மனது கலங்காதே உன்னால் ஒரு காரியம் உடனே ஆகவேண்டியிருக்கின்றது. அதற்காகத்தான் உன்னை ஐயன் கொண்டுவந்து சேர்த்தார்!" என்று முனிவர் கூறினார்.

"அஃதென்ன?" என்றாள் மனமோஹன மாணிக்கம்.

ரிஷி:—அங்கு ஒரு ராக்ஷத னிருக்கிறான்!

மன:—அவன் என்ன செய்கிறான்?

ரிஷி:—அவன் ஒருபெண்ணைப் பிடித்துப் போனான்!

மன:—ஆனால் அவன் கெட்டே போனான்!

ரிஷி:—அவள் ராஜாபெண்: மெத்த நல்லவள்!

மன:—பாவம் என்போல் துக்கப்பட்டவள்!

ரிஷி:—ராக்ஷதனைக் கொல்ல வேண்டும்!

மன:—அதற்கு என்னசெய்ய வேண்டும்?

ரிஷி:—நீ தான் அதற்குத் தக்கவள்!

மன:—நான் பெண்: அதைரியத்தில் மிக்கவள்!

ரிஷி:—மறுபடியும் ஆண்பிள்ளை வேஷம் போட்டால் சரி!

மன:—இன்னொருதரமா! என்செய்வேன் ஹரி! ஹரி!

ரிஷி:—அம்மா! பயப்படாதே, சொன்னபடி கேள்!

மன:—என்ன தடை! பணிந்தேனுமது தாள்!

ரிஷி:—தயாராய் விட்டாயா? புறப்படு போகலாம்!

மன:—இதோ ஆய்விட்டது: வாருங்கள் ஏகலாம்!

---

# இருபத்துநான்காவது அத்தியாயம்.

ப்ரபுதாஸ். பேய்க்கோலம்!

அற்புத முதலியாரும் ப்ரபுதாஸனும் வீட்டை விட்டுப் புறப்பட்டு வெகு நாளாயின. காட்டைக் கடந்தார் மலையைக் கடந்தார் ஆற்றைக்கடந்தார் அருவியைக் கடந்தார்! ஒரு நாள் காலை பழம் பறிக்கச் சென்று வழிதப்பினர் இருவோரும்! ப்ரபுதாஸ் மனம்மிக வருந்தி, அவஸ்தை என்பதே தெரியாத 'அப்பா எங்கே சென்று என்ன கதியாயினரோ என்று கண்ணுக்குப் பட்ட வழியில் கடுக நடந்துகொண் டிருந்தான்!

* * *

அதோ! ஆகாயத்தை அளாவிய மலையில் பச்சென்று விளக்கு பளிச்சென்று தோன்றுகிறது! அந்த விளக்கு இருந்திருந்து அசைகிறது, பொறுத்துப் பொறுத்துக் கலங்குகிறது! என்ன ஆச்சர்யம்! அதோ! ஒரு சிகப்பு விளக்கு அந்தப்புறம் அசைந்து காண்கிறது! இதோ, இந்தப்புறம் ஒரு ஊதா விளக்கு ஜோராய்த்தெரிகிறதே! ஹா ஹா! அந்தப்புறம் மஞ்சள் விளக்கு ஒன்று! இந்தப்பக்கம் வெள்ளை விளக்குத் துள்ளித் துள்ளிக்காண்கிறது! கொள்ளிவாய்ப் பிசாசுகள் கொள்ளையான வர்ணங்களாய்க் குலாவிக் குலாவியாடுகின்றனவோ, அல்லது தனக்குக் கண்ணும் மனமும் தடுமாறிப்போயினவோ என்று ப்ரபுதாஸனுக்கு ஒன்றுந் தோன்றாது ஒரு நிமிஷம் யோசித்தான்! எல்லா விளக்குகளும் உல்லாஸமாய்ச் சேர்ந்து ஒன்றின்பின் னொன்றாக ஆடிப் பாடி நகர்ந்துநகர்ந்து அசைந்து அசைந்து வந்துகொண் டிருப்பதாய்த் தெரிகிறது! ப்ரபுதாஸனுக்கு ஆச்சரியம் ஒரு பக்கம், அவஸ்தை ஒருபக்கம், பயம் ஒருபக்கம், பசி ஒரு பக்கம்! என்ன செய்வான்! உற்று நிதானித்தான்! மெள்ள மெள்ள விளக்குகளும் துள்ளித் துள்ளி வருகின்றன! மலையினின்றும் இறங்கி மைதானத்தில் வந்து விட்டன! தன்னிடமாக விளக்குகள் தாவிவருவதைக் கண்ட ப்ரபுதாஸ் பெருங்கிலி கொண்டான், நடுங்கினான் மனத்தில்! பூதமா, பேயா, வர்னப் பிசாசுகளா, விளக்குத் தேவதைகளா, என்று அவன் உள்ளே நடுங்கிய நடுக்கம் உள்ளே தெரியும், உண்மைத் தேவனுக்குத் தெரியும்! நகர்ந்து கொண்டே நாட்டியமாடிக்கொண்டே, எல்லா விளக்குகளும் உல்லாஸமாகத் தோன்றி ப்ரபுதாஸ் நிற்கும் பக்கமாகவே

ப்ரபலமாய் வருகின்றனவென்று ப்ரபுதாஸுக்கு நன்கு தோன்றி விட்டது!

இப்பொழுது பின்னுக்குப் பின்னாலே, புற்றிலிருந்து ஈசல் புறப்படுமோபோலே, வர்ன விளக்குகள் எண்ணிக்கை யில்லாமல் எத்தனை எத்தனையோ வந்து கொண்டே விநோதம் தந்து கொண்டேயிருக்கின்றன!

"ஓ ஹோ! இங்கு நின்று இளித்துக்கொண்டிருந்தால் இப்போதே ஆபத்து தப்பாதே வந்து சேரும்!" என்று ப்ரபுதாஸ் நினைத்து சுற்றிப்பார்த்தான்! வரிசையாக ஆலமரங்கள் நெருக்கமாக அடைத்துக்கொண்டிருந்தன! பெரிய மரத்திலேறி மறைந்துகொண் டிருப்பதே மாண்புடையதாகு மென்று ஒரு மரத்தின் உச்சியிலேறி உடம்பை இலைகளால் மறைத்து, ப்ரபுதாஸ், உயிரைப்பிடித்திருப்பது போலேயே, மரத்தைப்பிடித்திருந்தான்!

ஆயிற்று! விளக்குகள் நூற்றுக்கணக்காய் விரைந்து வருகின்றன! மேளம் தாளம் மிருதங்கம் நாகசுரம் ராகச்சந்தடி கோரமாய்க் கேட்கின்றது! பக் பக் என்று மார்பில் டப் டப் என்று பயத்தாலே யடித்துக்கொண்டிருக்க, ப்ரபுதாஸ் கிளையைப் பிடித்துக்கொண்டு பலமாய் உட்கார்ந்திருக்கிறான்! ஆயிற்று, விளக்குகள் வருகின்றன! அனேகம் வருகின்றன! கறுத்த நிறத்துக்காட்டுப்பேய்கள் குதித்துக்கூவிக்கொண்டும் கோஷ்டம் செய்து கொண்டும் ஆயிரக்கணக்காய் ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் அனர்த்தம் செய்து கொண்டு வருகின்றன! கறுத்த முகங்களும், சுருண்ட மயிர்களும், சிவந்த கண்களும், சிங்கப்பற்களும், ஆவென்ற வாயும் ஜோவென்ற மூக்கும், வர்னம் பூசிய உதடும், கரிவழிந்த உடம்பும், நரம்பு மாலையும், எலும்பு நகைகளும்—அடே யப்பா அவர்களைப் பார்த்தால் பீமசேனனும் பிதிர்கலங்கிப்போவான்!

நான்கு காட்டுப்பேய்கள் நல்ல சப்தஞ் செய்யும் தப்பட்டைகளைக் கையில் வைத்துக்கொண்டு,

---

### பாட்டு.

ஆலங்காடு வேலங்காடு
அயகு நிறைஞ்ச நல்லகாடு
எங்கபொண்ணு இளிச்சமூஞ்சி
கறுத்த கண்ணு

செவத்த பிள்ளெக்கு கண்ணாலம்
செம்மையாய்ப் பண்ணு
ஆலங்காடு வேலங்காடு
அயகு நிறைஞ்ச நல்லகாடு
மோளம் தாளம் பேயு பூதம்
வெளக்கு தளுக்கு வேணகாதம்
முறுக்கு உண்டை ருசிக்கும் நல்ல மூசுண்டை
மூணுமாசம் ரொம்பசோறு
வேணகறியும் திண்ணலாம்
ஆலங்காடு வேலங்காடு
அயகு நிறைஞ்ச நல்லகாடு"

என்று பற்பல ஆபாஸப்பாட்டுகளைப் பாடிக்கொண்டு முன்னே சென்றன! வேறு சில பேய்கள், தாம் தகஜெணு என்று அந்த மில்லாமல் அவலக்ஷண ஆட்டங்களை ஆடிக்கொண்டுபோயின. கறுத்த பேய்கள் கூட்டம் கணக்கிலெழுத முடியாது. தப்பட்டை வாத்திய மும், எக்காள முழக்கமும், கொம்பு ஊதுவதும் கோல் விளையாடு வதும், வந்த ஜனங்களுக்கு சந்தனங் கொடுப்பதுபோல், வாகான பேய்களுக்குச் சாராயத்தை ஊற்றுவதும், குடித்துக் கொக்கரி கொட்டி ஒருவர் தோள்மேல் ஒருவர் நின்று கொடியாடிக் கெட்டிக் காரத்தனங்காட்டுவதும், கரணங்கள் போட்டு, சக்கரபாணங்கள் போல் சுற்றித் தட்டென்று எழுந்து தலைமேல் நிற்பதும், முதலான எல்லாக் கோலங்களையும் 'வெகு ஆலாகோலங்களையும் கண்ணாரக் கண்டு, கம்மென்றிருந்தான் கலக்கமும் திகிலும் காபராவும் கொண்ட ப்ரபுதாஸ்!

ஆயிற்று! ஊர்க்கோலக்கூட்டம் ஒவ்வொரு அடியாய் ஒற்றி ஒற்றி நகர்ந்துகொண் டிருக்கின்றது! கல்யாணப்பிள்ளை வருகிற தென்றும் பேய்ப்பெண்ணுக்கும் ராஜா பிள்ளைக்கும் கல்யாணமென் றும் அங்கு நடக்கும் விர்த்தாந்தங்களால் அழகாக அறிந்து கொண்டான் ப்ரபுதாஸ்.

கல்யாணப்பிள்ளை வருகிற சமயத்தில் 'காபரா' அதிகம்! ஆட் டமும் கூட்டமும், பாட்டும் கோஷ்டமும் அதிகமாய்க் கொண்டி ருக்கின்றது! நெருக்கி நெருக்கிக் காட்டுப்பேய்கள் எள்ளுபோட் டாலும் எள்ளுவிழாதபடி, அதிக கூட்டமாய் கோஷ்டஞ் செய்து கொண்டு வர, நடுவே ஒரு குதிரைமேல், கல்யாணப்பிள்ளை தாழும்

பூச் சூடி தாழம்பாய் மூடி, உற்று உற்றுப் பார்த்துச் சுற்றிச்சுற்றி விழித்து உட்கார்ந்திருக்கிறுன்!

உற்றுப்பார்த்தான் ப்ரபுதாஸ்! வேறுயாருமில்லே, கல்யாணப் பிள்ளே வனஜாஸனன்! இலேயோடே இலேயாயிருந்து இத்தனேயும் பார்த்திருந்த ப்ரபுதாஸுக்கு மனம் புண்ணுகி, சொல்ல முடியாத துயரம் எல்லேயில்லாமற் பெருகி விட்டது! "ஐயோ பாவம்! எங்கிருந்த வனஜாஸனன் இங்கு வந்து, என்னென்ன பாடுகள் படுகிறுன்! எதிர் பாராது இங்கே வந்து எத்தனே கோரத்தை நாம் உற்று நோக்க நேரிட்டு விட்டது! எப்படியானுலும் இப்பொழுது நாம் இவனேத் தப்புவித்துக்கொண்டு போகா விடில், மெத்த கஷ்டப் பட்டு மேனி வாடி ஹானி யடைந்து, மானங்கெட்டு ஈன நிலேக்கு வந்து விடுவான்!" என்று ப்ரபுதாஸ் என்னென்னவோ தனக்குள்ளேயே பேசிக்கொண்டு ஊர்க்கோலம் மெல்ல ஒரு * 'பர்லாங்' தூரம் ஒற்றிப்போனபின், மெதுவாய் மரத்தினின்று மிறங்கி ப்ரபுதாஸ் மெல்ல மூச்சு விட்டு மெல்ல நடக்கத்தொடங்கினுன். உள்ளே தோன்றிய பயம் பின்னே தள்ள, வனஜாஸனனேக் காக்க வேண்டுமென்னு மாசை முன்னே தள்ள, ஊசலாடிக்கொண்டே அவன் வீசி நடந்தான்!

அப்பொழுது இரவு பனிரண்டு மணி யிருக்கலாம்! காட்டில் இந்தக்கோஷ்டம் காதடைத்துப்போகிறது! ஆகாயத்தில் சந்திரன் வெள்ளே மேகங்களினுல் விநோதமாய் மூடப்பட்டு, அரிய குணத்தினுேர் பெரியவர்களேக் கண்டபோது, அடக்கித் தங்களே அழகாய்க் காட்டிக்கொள்வது போல், மழுங்கிப் பிரகாசித்து மஹத்துவம் செய்துகொண்டிருக்கிறுன்! ஊர்க்கோலம் மெதுவாய் ஒரு மைல் போனதும், ஓலேப்பந்தல் மேலே பரப்பிய ஒய்யார ‡ மணவறை ஒழுங்காகக் காணப்பட்டது! சற்று சமீபத்தில், பத்திரமாக ஓரிடத்தில் பதுங்கிக்கொண்டான் ப்ரபுதாஸ்! என்ன வேடிக்கை நடக்கிறது பார்க்கலாம், என்ன விதமாய் வனஜாஸனனே இட்டுச் செல்வது நிதானிக்கலாம் என்று, ப்ரபுதாஸ், மிகச்சாக்ரதையோடு ஏமாருமல் விழித்துக்கொண்டிருந்தான்!

'ஆச்சுது! கண்ணுலத்துக்கு ஆரம்பிங்கடா' என்றுன் காட்டுப் பேய்களின் கண்யம் பெற்ற தலேவன்! வர்ன விளக்குகளே உடனே

* பர்லாங்=ஒரு மைலின் எட்டி லொருபாகம்.

‡ மணவறை=கல்யாணகூடம்.

வரிசை வரிசையாக வைத்து, கறுப்பு மூஞ்சி கல்யாணப்பெண்ணை யும் அழுத முகத்து வனஜாஸனனையும் மணையிலுட்கார வைத்து, கொட்டினார் மேளம், தட்டினார் தாளம்!

கல்யாண வாசலிலே, காட்டுப்பேயொன்று, இடுப்பில் சிறிய இலைத்துணியொன்றும் தலையில் நரித்தோல் பாகையும், முதுகில் நாய்த்தோல் குட்டையும் போட்டுக்கொண்டு,

"எங்க பலியெ ஏத்துகோ முனீசுரா
எங்க பூசையெ எடுத்துகோ சனீசுரா
கோழி யெடுத்துக்கோ காட்டேரி
குருவி திண்ணுடு வீட்டேரி
ஆடு பலி கொடுக்கிறேன் அயுமூஞ்சி
எருமை பலி கொடுக்கிறேன் பெருமூஞ்சி
வீரனிருளன் காட்டேரி
வெறியன் நொண்டி சாமுண்டி
தூரித்தூண்டி நல்லண்ணன்
தொட்டியைச்சின்னன் பெத்தண்ணன்
மாறு முனியன் சங்கிலியும்
மாடன் கறுப்பன் பாவாடை"

என்று துர்த்தேவதைகட்கெல்லாம் பூஜை அர்த்தராத்திரியில் ஒரு பேய் போட்டுக்கொண்டிருந்தது.

சற்று நேரத்துக்கெல்லாம், மெத்தக்கறுத்த மூதேவிப்பேய் ஒன்று, "மோளம் தாளம் ஆங் ஆங் "என்று கத்தினது! டம் டம் தப தப என்று மேளம் அடித்தார்கள்; பட பட தட தட என்று தப்பட்டை கொட்டினார்கள். கண் கண் என்று தாளமும் ஜல் ஜல் என்று ஜால்ரும், தகிட தக தக என்று ஆட்டமும், ஹா ஹீ ஹோ ஹோ என்று கோஷ்டமும் மிகுத்துக் * குரைகடல் போலொ லித்தன!

மூர்க்கப்பேயொன்று முன்னே வந்து, வனஜாஸனனை உற்று நோக்கி,

"கட்டு! தாலியை!" என்று முறைத்துப்பேசினது!

---

*குரைகடல் போலொலித்தன = தரைக்கின்ற சமுத்திரம்போலே சப் தித்தன

தாழம் ஓலையைத்தடவி விழித்து, வனஜாஸனன், உள்ளே அழுது ஒன்றுந்தோன்றாமல் திகைத்து ஒரு நிமிஷம் நிதானித் தான்.

இதற்குள், மூர்க்கப்பேயானது, சுருக்குச் சவுக்கால் கருக் கென்றடிக்க, வனஜாஸனன் ஓவென்று வாய் விட்டழுது,

"என்ன செப்பச் சொல்றே?" என்று மிக்க எரிவந்தத்தோடு கேட்டான்.

"என்னவா செய்யச் சொல்றே! எத்தனை தரம் உனுக்கு சொ ன்னாலும் மூக்காலயுதுகுனு மொரோவென்னு கத்துறே! ஆவுட்டம் சொல்றேன்! அடிமே லடி அடிச்சா அம்மியும் நவுந்து போவும்?" என்று மூர்க்சப்பேய் தீர்க்ககோபத்தோடு மறுபடியும் சவுக்காலே மாறி மாறி யடித்தது!

"ஆங் ஆங்! என்ன செய்யவேண்டும்! எனக்கொன்றுந் தெரிய வில்லையே!" என்று மொரோ வென்று கத்தி மூக்காலே அழுதான் வனஜாஸனன்!

"கட்டேன் தாலியெ" என்று கல்யாணப்பெண் குந்திக்கிளறி நகத்தாலே நோண்டிவிட்டது வனஜாஸனன் காலையும் முதுகையும்! ரத்தப்பிரவாகம் பெருக்கெடுத்துத் தாழம்பாயைப் பாழும்பாயாக்கி விட்டது!

"எது தாலி?" யென்று கேட்டான் வனஜாஸனன்.

"மொறத்திலே பலகாரை முயுச்சிகினு இருக்குதே! அதைத் தான் எடுத்து அயகு பொண்ணு கயுத்திலே கட்டு" என்று கோரப் பேய் ஒன்று குறுக்கே சொல்லிற்று.

"அப்படியே யாகட்டும், அடியேன் தாஸன்!" என்று தாலி யைக்கட்டித் தவித்து விழித்தான், தப்பிப்போக வழி தெரியாத * தௌர்ப்பாக்கியனான தம்பி வனஜாஸனன்!

"ஆச்சுது கல்யாணம்! முடிஞ்சுது சுபம்! ஆட்டுகெறி யிந்தாங்கோ! நரி பச்சடி நாகிச்சடி எல்லாம் சாப்பிடுங்க சாப்பிடுங்க!" என்று பிரசாதம் விநியோகஞ்செய்து எல்லோரையும் கிளப்பி யெழுத்துக் கொண்டு போய் விட்டது எரிந்த மூஞ்சிக் கரிந்த பிசாசு ஒன்று!

"கண்ணாலப்பிள்ளெயும் கண்ணாலப்பொண்ணும் இங்கே ராத் திரிக்கும் நாளெக்கும் இருக்கப்போறாங்கோ! பத்திரம் நீ கத்தியை

* தௌர்ப்பாக்கியன் = துர்ப்பாக்கியன், துரதிர்ஷ்டக்காரன்.

யுருவிக்காத்துக்கொண்டிரு" என்று ஜாக்கிரதைப்பேய் ஒன்று ஜரூராய்த் திட்டஞ்செய்தது.

உடனே எல்லாப்பேய்களும் எழுந்து அல்லோல கல்லோலமாய் ஆடியோடி அத்தமித்துப்போயின! காவற் பேயும் கால்மணி நேரம் காத்திருப்பதுபோல் 'ஜாலவித்தை' செய்து, பாயைப் போட்டுப் படுத்துறங்கிற்று! வந்தான் ப்ரபுதாஸ்! எடுத்தான் சத்தியை! கொன்றான் காவலாளியை! உள்ளே சென்று உற்று நோக்குகின்றான் ப்ரபுதாஸ்!

மூட்டுப்பூச்சியை நசுக்குகிறவன்போல் மூலையில் உட்கார்ந்திருக்கிறான் வனஜாஸனன்!

"வாயில்லையா உனுக்கு பேச! நீ ரொம்ப அயகு இன்னு, நானு காட்டுபேயுண்ணு கசுக்குதோ உனுக்கு" என்று காட்டுப்பேயான கல்யாணப்பெண் கன்னத்தில் ஒரு குத்து நகத்தாலே குத்தவும் ரத்தம் பெருகி, வனஜாஸனன் முகத்திற்கு வர்னம் பூசுகிறது!

இல்லை யில்லை யென்றான் என்ன செய்வதெனத் தோன்றாது, வனஜாஸனன்.

"இல்லெ யில்லெ யிண்றெயே! இளிச்சுக்குனு பேசுரத்துக்கு என்ன கேடு!" என்று காட்டுப்பேய், வீட்டுப்பேய்கள் சீமந்தத்துக்கு * மூக்கைப் பிழிவது பேருக்கானால், உண்மையாக மூக்கைப்பிடுங்கி ஆழாக்கு ரத்தத்தை † அட்லோன்ஸாக உறிஞ்சு விட்டது!

இனிப்பொறுக்க மனந்தாளாது, இரக்கத்தோடு ப்ரபுதாஸ், உள்ளே வந்து, "அத்தான் குட்நைட், அழகான மாப்பிளே குட்நைட்!" என்று கூறி எதிரே நின்றான்.

பார்த்து வனஜாஸனனுக்குப் பதில் சொல்ல ஒன்றுந்தோன்றவில்லை! கிணற்றில் விழப்போகும்போது, ‡ கேசவன் பிரசன்னமானதுபோல், ஆபத்து விளைந்து அவஸ்தைப்படுஞ்சமயத்தில், அத்தான் வந்து ஒத்துக்கொண்டானே யென்று ஆச்சரியம் ஒரு பக்கமும், தான் இருக்குஞ் ஸ்திதி கேலிக்கு இடமாகிறதே யென்று

---

* மூக்கு பிழிவது=சீமந்தத்தில் பெண்கள் செய்யும் ஒருவித சடங்கு.
† அட்ஒன்ஸாக=ஒரே சமயத்தில்.
‡ கடவுளின் ஒரு பெயர்.

வெட்கம் ஒரு பக்கமும் வனஜாஸனனுக்கு நேரிட்டு வருத்தத்தை யுண்டாக்கி விட்டன!

"* குட்னைட் அத்தான்! வெட்கப்படாதே! நான் பேய், இந்த வேஷம் போட்டு வந்தேனென்று எண்ணாதே! வாய் திறந்து பேசினால் வந்த ஸ்ரமத்துக்குக் கொஞ்சம் பரிகாரமாயிருக்கும். ஆதலால் தயவு செய்து என்ன செய்ய வேண்டுமோ சொல்லு நாம் இன்னும் காலஹரணம் இங்கே செய்திருக்கக்கூடாது. எழுந்திரு" என்று அதிக அவசரத்தோடு பேசி ஆர்ப்பாட்டம் செய்தான் ப்ரபுதாஸ்!

இதற்குள்ளாக, காட்டுப்பேயான கல்யாணப்பெண் கோவித்து எழுந்து "யாரடா அவன் இங்கே வந்து எாட்டெதனம் பண்றுயே! இப்படி யெல்லாம் பண்ணெ யிண்ணு எல்லாரும் சேந்து பலகாரம் பண்ணிடுவாங்க! ஹா ஹா!" என்று அதட்டி என்னென்னவோ பேசிற்று!

"அப்படியா சமாசாரம்! எழுந்திரு, வனஜாஸனனு! பிடித்துக் கட்டு இந்தப்பேயை!" என்றான் ப்ரபுதாஸ்!

"நீ யிண்ணு என்னெக் கண்ணாலம் பண்ணிக்கொ" என்றது காட்டுப்பேய்!

"முடியாது நாங்கள் போகிறோம்." என்றான் ப்ரபுதாஸ்!

எகிறி இரண்டு பேரையும் சேர்த்து இரண்டு பிடுங்கு வாயால் பிடுங்கி இரண்டு படி ரத்தம் எடுத்து விட்டது காட்டுப்பேய்!

"இனி பார்த்தாகாது!" என்றான் ப்ரபுதாஸ்!

"செய்வதைச்செய்!" என்றான் வனஜாஸனன்!

"வைத்தது மறுபடியும் இரண்டு பேரையும் இரண்டறை காரங்கொண்ட காட்டுப்பேய்!

பிடிக்கப்போனார்கள், கடித்தது, அதட்டப்போனார்கள், அறைந்தது! நல்ல பேச்சைச் சொன்னார்கள், நாயாய்ப்பிடுங்கிற்று!

"ஹா! பேசாதே!" என்றான் ப்ரபுதாஸ்! அறைந்தது ஒரு அறை! "அப்பா" என்றான் ப்ரபுதாஸ்! "கொல்லுவேன்!" என்று வனஜாஸனன் எழுந்தான்! குத்தித்து ஒரு குத்து! திப்பிரமை

---

* குட்னைட்=ஆங்கிலம் பயின்றோர் இராவேளையில் சந்திக்கும்போது சொல்லும் வந்தனப்பேச்சு.

கொண்டு வனஜாஸனன் எப்படி யென்று குப்புற விழுந்து, எமலோகஞ்சென்று எழுந்து உட்கார்ந்தான்!

இப்படி பேசுகிறவர்களுக்கு உதை. அப்படி திரும்புகிறவர்களுக்கு அறை, தும்பினால் குத்து, இருமினால் மொத்து!! இத்தன்மையான கதியில் அர்த்த ராத்திரிப்போதில் அத்தானும் அத்தானும் மூலே மூலேயில் நின்று முழித்துக்கொண்டிருக்கிறார்கள்!

திப்பிரமை கொண்டு நிற்கும் தீர புருஷர்களிரண்டு பேரையும் பார்த்து, விக்கிட விக்கிடக் கொக்கரி கொட்டிக் கக்கிட கக்கிட நகைத்தெதிர் நின்று காட்டுப்பேய் சொல்லிற்று:

"பத்து மனுசாள் பலம்மொத்துப்பேயொண்ணிடம் விசித்திரமாய்க்காணும்! நூறு மனுசாள் பலம் சூரத்துக்காரப்பேயிடம் சுருக்காகக்காணலாம்! எட்டு நூறு மனுசாள் பலம் பெட்டைப்பேயொண்ணிடம் தோன்றும்! பத்திரம்' பெட்டைப் பேயெண்ணு கெட்டிக்காரத்தனம் பண்ணுதிங்கோ பத்திரம் பத்திரம்!" என்று கல்யாணப்பெண்ணும் காட்டுப்பேய், பாயசம் என்று நினைத்துச் சாராயத்தை எடுத்து ஆவேஸத்தில் மிக்க அதிகமாய்க்குடித்து விட்டது! உடனே மயக்கம் தலைக்கேறி மண்மிசை விழுந்தது! கண்ட இரண்டு கொடி வீரரும், தாம்புக்கயிறெடுத்து, கழுத்துக் குச்சுருக்கிட்டுக் காட்டுப்பேயைத் தூலத்தில் மாட்டி,

"உஞ்சலாடு பேயே
உறக்கங்கொள்ளு பேயே
தப்பிப்பிழைத்தோம் பேயே
தலைகாட்டமாட்டோம் பேயே
ஆறுமாசம் செல்லும் பேயே
அறையின் நோவுபோக பேயே
போனரத்தம் நினைத்தால் பேயே
பிழைப்ப தரிது பேயே
உதையும் குத்தும் பேயே
ஒரு நாளும் கண்டறியோம் பேயே
மதுரை வீரசாமி பேயே
மயக்கம் உனக்கு வைத்தான் பேயே
ஓடிப்போகிறோம் பேயே
வாடிச் செத்துபோ நீ பேயே
கல்யாணம் வந்தது போதும் பேயே
கருமாந்திரத்துக்கு வரவே மாட்டோம் பேயே."

என்று ஆத்திரம் தீர இருவோரும் ஆறுதல் கூச்சலிட்டு, அப்பா என்று வெளியே வந்தார்கள்! வனஜாஸனன் போட்டிருந்த தாழம் பாயை வாங்கி எறிந்து விட்டு, ப்ரபுதாஸ் தான் வைத்திருந்த நல்ல துணி ஒன்றை நலமாகக்கொடுத்து அவன் அதனைத்தரிக்கும்படி ஏற்பாடு செய்து, சுற்றி உலாத்திச் சோதித்துப் பார்த்ததில் ஊர்க் கோலத்திற்கு வந்த குதிரைகள் ஒன்பது அங்கே ஒரு வரிசை யாய்க் கட்டப்பட்டிருந்தன! அவைகளில் இரண்டு குதிரையை அவிழ்த்து, வனஜாஸனனும் ப்ரபுதாஸும் அவைகள் மீது ஆரோ கணித்து, வாயுவேகம் மனோ வேகமாய் அந்த இடத்தை விட்டு அப்புறம்போகப் புறப்பட்டனர்கள்.

சற்று தூரம் போனதும், வனஜாஸனன் ப்ரபுதாஸை நோக்கி,

"அத்தான், நான் உனக்கு என்ன பிரதி யுபகாரஞ் செய்யப் போகிறேன்! எல்லையில்லாத இடரினின்றும் தப்புவித்து என்னை ஈடேற்றினையே! அதிருக்கட்டும், நீ இங்கு எப்படிவந்தாய்? என்னை எப்படிக்கண்டு பிடித்தாய்? நினைக்க நினைக்க எனக்கு ஆச்சரியம் அலை யெறிந்து கொண்டு வருகிறதே" என்று இருட்டில் தெரி யாமற்போன போதிலும் முகத்தைச்சிறிது மலர்த்தி கொண்டு ஆத் திரம் காட்டி அவசரமாய்க்கேட்டான்!

"அதிருக்கட்டும் அத்தான்! முதலில் உன் சங்கதி யனைத்தை யும் ஒன்று விடாமற் சொல்! பிறகு என் சங்கதிகளனைத்தையும் பிழையில்லாமற் சொல்லுகிறேன்" என்றான் ப்ரபுதாஸ்.

அதன் மீது வனஜாஸனன் தன் சங்கதிகளனைத்தையும் சாங் கோபாங்கமாய்ச்சொல்லி. மாரியாத்தாளைக் கொன்ற பிறகு, காட் டில் வழி தெரியாது சில நாள் அலைந்துகொண் டிருக்கும்போது, காட்டுப்பேய்கள் தன்னை வந்து பிடித்து இல்லாத நிர்ப்பந்தம் செய்து தான் மிக்க அழகாயிருப்பதால், காட்டுப்பேய் ராஜன் பெண்ணுக்கு தன்னைக்கடுக மணஞ்செய்து விட்டால், அழகான குழந்தைகள் அற்புதமாய்ப் பிறக்கு மென்று, தன்னைப்பலவந்த மா கக்கொண்டு வந்து தவிக்கச்செய்து விட்டன வென்றும், தன் பல மும் தன் சாகஸமும் அவைகளிடம் யாதும் பயன படாது போ யின வென்றும் எல்லாக் கதையையும் வனஜாஸனன் எடுத்துக் கூறினான்.

இதைக்கேட்ட ப்ரபுதாஸ், மனம் மிக வருந்தி, ஆச்சர்யத்தாலும், மறுபடியும் எங்கு வந்து பிடித்துக்கொள்ளப் போகின்றனவோ என்னும் அதைரியத்தாலும் நெஞ்சங்கலக்குண்டு, நினைக்க முடியாத திகில் கொண்டு, தன் சமாசாரங்களைத் தாராளமாய்ச் சொல்லிக்கொண்டே போகிறான், வெளிச்சந்தோன்றிச் சூரியனும் வெளியே வந்து விட்டான், குதிரைகளும் பறந்து கொண்டே போகின்றன, காடும் மலையும் மைதானமும் வளர்ந்து கொண்டே யிருக்கின்றன!

---

# இருபத்தைந்தாவது அத்தியாயம்.

மஹாரிஷி — ஜகன் மோஹன சிங்காரம்.
மனமோஹன மாணிக்கம். — அதிரூப சுந்தரி.

மனமோஹன மாணிக்கமும் மஹாரிஷியும் நடந்து கொண்டே போகிறார்கள்! பொழுது சாயு மிடத்தில் சற்றுத்தூங்குவதும், மறு நாள் உதயத்தில் சளையாமல் வழி நடக்கத்தொடங்குவதும், அகப் பட்ட இடத்தில் ஆகாரம் கொள்வதும், சரிப்பட்ட இடத்தில் சய னித்திருப்பதும், இப்படியாக வழியில் இடருறாமலே சென்று கொண்டிருக்கிறார்கள்!

ஒரு நாள் காலை நாலரை மணி யிருக்கும்! இருண்ட வானத்தில் வெள்ளி உருண்டு வருவது போல் வெளிச்சம் தோன்றிப் பளிச் சென்று பொழுது விடிகிறது!

நக்ஷத்திரங்கள் மறைகின்றன, பக்ஷிகள் சப்திக்கின்றன! உள்ள மரங்கள் உயிர் பெற்றன போலும், அவற்றிலுள்ள ஒவ்வொரு இலை யும் ஆனந்த மடைவது போலும், கூண்டுப்பறவைகள் கூச்சலிடு கின்றன! பிரளய காலத்திலே இல்லாததுபோ லிருந்த இயற்கை யரசி, இருக்கிறேன் இருக்கிறேன் என்பதுபோலத் * தருக்களின் ஒலியும், பறவைகளின் பாட்டும், காற்றின் கீதமும், அருவியின் நாதமும், ஆற்றின் பிரவாகமும் அருமையாய் விளங்குகின்றன! உலகத்தைச்சோதிக்க உத்தமனுக்குக் கடவுள் ஊர்க்கோலம் வரு வது போல் சூரியன் தோன்றிச் சுடர் பரப்பத் தொடங்குகிறான்! பகவானுக்கு முன் பாண வேடிக்கை போல், செம்பொன்னுருகிச் சிறப்பாய் பரவிச் சீர்த்தியுற்ற வானத்தைக் கீர்த்தியுறச் செய்தது! ஆற்றில் நின்று அனுஷ்டானஞ்செய்து, அருந்தவர்கள் ஜபித்து ஆரா தனை செய்யக், காக்கைகளும் பருந்துகளும், கொக்குகளும் குருவிக ளும் வேடிக்கை பார்க்க விநோதமாய்ப் பறந்து காச் மூச் என்று கூச் சலிட, மனிதர்களும் மிருகங்களும் வகை வகையா யோடி வண்மை விளக்க, வானம்பாடி பாடிச்செல்ல, மைனாக்களும் குயில்களும் மாகீதம் சொல்லி மனதைக்களிப்பிக்க, நெருப்புக்கோழிகள் சுருக் காயோட, சிறப்பு மயில்கள் சிங்காரமாயாட, வானமுகடாம் வாகா

* தரு=மரம்

னவிமானத்தில் * தீனசரண்யனுய்த் தினகரன் தோன்றினன்! பொன்னை உருக்கிப் புவனத்தில் ஊற்றினது போல், மலையும் பிரகாசித்தது மரமும் ஒளி கொண்டது! பச்சை இலைமேலும், பார மலைமேலும், செம்புத்தளிர் மேலும் மஞ்சள் துளிர் மேலும், நீலச்செடி மேலும், கோலக்கொடி மேலும், எங்கு பார்த்தாலும் தங்கம் ஊற்றியது போல் சிங்காரத்தோற்றம் அங்கே யுண்டாக, அதனைப்பார்க்க ஆயிரங்கண் வேண்டும்! பூவரசமரங்கள் புஷ்பித்திருந்தது, மங்களகரத்தை வாரி மகிழ்ச்சி யோடு கொடுப்பதுபோலிருக்கிறது! ஏ! பூவரசே! உன்னை மெச்ச நாவரசே வரவேண்டும்! நோயைப்போக்கும் நுட்பம் பெற்றதோடு, மங்களகரத்தை வாரி நீ இங்கிதமாய்க் கொடுப்பதாலன்றோ, பூவரசு என்னும் புண்ணியப்பெயர் பெற்றனை! புண்ணியம் பெற்றனை, பூவரசே, கண்ணியம் பெற்றனை நீ! மணத்தைக்கொடுக்கும் மல்லிகைப்பூவும் மரியாதை பெறாத மனிதர்போல் நிற்க, பூக்குடலை விரித்துப் பூக்களைக் கொட்டுவதுபோல், மஞ்சள் பூவை மனதாரக்காட்டி மங்களகரத்தை மஹா உதாரத்தோடே கொட்டுவே னென்று * கொற்றவன் செய்யும் கொடைபோல் நிற்பதாலன்றோ, ஏ, பூவரசே, உனக்குப் பூவரசனென்று பெயர் வந்தது! அலங்கார நிறமும் சிங்காரச்சிகப்பும், வன்னப்பெருமை வகை வகையாய் விளங்கும் மரத்திற்கு, அரசமரமென அரிய பெயரைத் தந்து, பூவாலே நீ புனிதம் கொடுப்பதால், பூவரசனென்னும் புண்ணியப்பெயரைப் புவியிற் பெற்றனை!

அரச மரங்களையும் ஆலமரங்களையும் பார்த்துக்கொண்டே ஒரு வேலமரத்தடியி லுட்கார்ந்து வீணையை மீட்டத்தொடங்கினர் ரிஷீஸ்வரர்!

"என்ன! ஸ்வாமிகளுக்கு இன்று வீணைமேல் கிருபை உண்டாய் விட்டது!" என்று புன்னகை செய்து நன்னயமாய்க்கேட்டாள் நல்ல குணம் படைத்த நளினவதியாகிய மனமோஹன மாணிக்கம்.

"அம்மா எனக்கு அனேக நாளாய் சங்கீதத்தில் பிரியம் உண்டு. சங்கீத ஞானமில்லாதவன் சண்டாளத் தனத்திற்கு அஞ்சாத நெஞ்

---

* தீனசரண்யன்=ஏழைகள் சரணமடையத்தக்கவன்.

* கொற்றவன் செய்யும் கொடை=சரியான மன்னன் தருமம் எப்படித்தாராளமாய்ச் செய்வானே, அப்படியே மங்களகரத்தைத் தங்குதடையில்லாமல் மனதாரத்தருவது, பூவரசு என்று அலங்காரப்பொருள்.

சுபடைத்தவனுவர்ன்! சங்கராபரணத்தின் இங்கிதமும், பைரவிரா கத்தின் கௌரவமும், காம்போதி யிசையின் கனிவுப்பெருக்கமும் தோடிராகத்தின் ஆடம்பர வைபவமும், இன்னும் மற்ற ராகங்களில் உள்ள நலங்களும் உள்ளுக்குள்ளே யுணர்ந்து உருகி யுருகி நெஞ் சங்கனிந்து ஆனந்த மடைந்து அல்லலைப் போக்காதவன் கள்ளத் தனம் மிகுந்து காதகச்செயல் விளைப்பா னென்பதில் யாது தடை! அதிருக்கட்டும். இப்போது நான் இசை பாடத்தொடங்குவதற்கு இயைந்த காரணமிருக்கின்றது!" என்று ரிஷிஸ்ரேஷ்டர் நிதான மாய்ச் சொன்னர்.

"அஃது யாது என்று அடியேன் தெரிதலாகாதோ?" என்று கண்ணும் கையும் திருவடிபடியக் கர்ணாமிர்தம் பொழிவது போல் சொர்ணுமிர்தப் பேச்சைச் சொகுசாய்ப் பேசினுள் மனமோஹன மாணிக்கம்!

"அம்மணி! வேறு காரியம் யாதிருக்கப்போகின்றது! நாம் வந்த காரியம் வாகாய் நடை பெறுவதற்குத்தான் இந்தக்காரியம் நான் எடுத்துக்கொண்டது இப்போது!" என்று தவஸ்ரேஷ்டர் நெற்றி யைச்சிறிது நெளித்து, வாயை மெல்லக்குவித்து, கையை வீணை மேல் கவித்து, சுற்றி யுள்ள மலையை உற்று மெல்லப்பார்த்து சுற்றி யொருதரம் சுழன்று, உட்கார்ந்து மெல்ல ஒரு சுற்று சுற்றி, எழுந் துமெதுவாய் சுழன்று பார்த்து,

"அம்மணி! சந்தடி செய்யாது சாக்கிரதையாய்ப்பார்த்து, மெல்லடி நடந்து, கல்லடி படாமல், மெதுவாக வருவாய்! இப் பொழுது நான் பாடுவேன்! உள்ளே யிருந்தும் அந்தப்பாடல் உளங் களிக்க வருமாயின், யாரு மில்லை அங்கே, தாராளமாய்ப்போகலா மென்று அர்த்தம்! இல்லா விட்டால், உள்ளே ராக்ஷதப்பேய்கள் கோஷம்போடுகின்றன என்று நினைக்க வேண்டும். அப்போது உள்ளே போகலாகாது என்று சூசனை! இதே நாங்கள் முன் செய் திருக்கிற ஏற்பாடு!" என்று ரிஷீஸ்வரர் சொல்லி விட்டு,

"ஸர்வம் பிரம்ஹ மயம் ஜகது
ஸகலம் விக்ஞான மயம்
கேவல சிந்தா விமோசன தீரம்
கர்மா வஸ்தா நிவாரணஸாரம்
ஸர்வம் பிரம்ஹ மயம் ஜகது
ஸகலம் விக்ஞான மயம்"

என்று வீணைமேல் கையாடிக்கொண்டே, தன்யாஸி ராகம் பாடிக்கொண்டே முன்னும் பின்னுமாக அவர், முடுக்காக உலாவி வருகிறார்! கூடவே மனமோஹன மாணிக்கமாகிற மதுரேஸனும் உலாவி வருகிறான்!

சற்று நேரத்திற்கெல்லாம், சங்கீதமே பதில் சொல்லுவது போல்,

ஸர்வம் ப்ரம்ஹ மயம் ஜகது
ஸகலம் விக்ஞான மயம்.
கேவல சிந்தா விமோசன தீரம்
கர்மா வஸ்தா நிவாரண ஸாரம்
ஸர்வம் ப்ரம்ஹ மயம் ஜகது
ஸகலம் விக்ஞான மயம்.

என்று மோஹன ராகத்தில் முறையாக யாரோ குகைக்குள்ளே பாடுவது போல் கேட்டது! ஹா ஹா! அந்தக்குரலின் அழகைக்கேட்டு, சங்கீதத்தில் வல்ல சிங்காரவதியாகிய மனமோஹன மாணிக்கமே அகம் நிறைய மகிழ்வுற்றுளென்றால், யாரால் சொல்ல முடியும் அதன் பெருமை!

உடனே மஹாரிஷியும் மனமோஹன மாணிக்கமும் உள்ளே நுழைந்தார்கள்! தாயைக்கண்ட பசுவைப்போன்று ஜகன்மோஹன சிங்காரம், அவர்களைக்கண்டு மிகவும் ஆனந்தமடைந்து, உட்காரச் சொல்லி உபசரித்தாள். அப்போது மஹாரிஷி, அங்கே சாந்தஸ்வரூபியாய் அடுத்து நின்றிருப்பவர் யாவரென்றுகேட்க அந்தம்மாள் பெயர் அதிரூப சுந்தரி யென்றும், அந்தம்மாள் தகப்பனார் பெயர் அதிமனமோஹன சந்தனமஹாராஜா என்றும் கூறி, அவர்களுடைய விர்த்தாந்தம் அனைத்தையும் ஜகன்மோஹன சிங்காரம் ஆதிமுதல்ந்தமாகக் கூறினாள்.

அதன்பிறகு தபோஸ்ரேஷ்டர் தம்மிடம் காணப்படுபவர் மதுரேசனென்னும் மஹா வீரரென்றும், அவரால் தான் அகாத ராக்ஷதன் ஆபத்துக்கு வரவேண்டிய தென்றும் தெரிவித்து, இனி நடக்கவேண்டியவைகட்கு எப்படி ஆரம்பஞ் செய்வது என்று ஜகன் மோஹன சிங்காரத்தை ஜாக்கிரதையோடு கேட்டார்.

"ஸ்வாமி, தங்கட்குத் தெரியாதது யானென்ன சொல்லப்போகின்றேன். முக்காலமும் தெரிந்த முனிவரர் தாங்களிருக்கும்போது,

முன்னும் பின்னும் தெரியாது முக்காலடி தூரமும் முற்றுமுணராத மூடத்தன்மை பொருந்திய நான் ஏது சொல்லலாகும்?" என்று பக்தி முகத்தில் * பரிணமித்தோடவும் பணிவென்பது தோற்றத்தில் படிந்தே நிற்கவும் வினயத்தோடு சொல்லி விண்ணப்பஞ் செய்துகொண்டாள் ஜகன் மோஹன சிங்காரம்.

"அப்படியா! நாம் அதிரூப சுந்தரியை ஆலோசித்தே எந்தக் காரியத்தையும் செய்வது மிகுந்த யுக்தமாகும்." என்று முனிவர் சிறிது புன்னகையோடே சிங்காரச் செல்வியாகும் அதிரூப சுந்தரியை நோக்கி, அவளுடன் என்ன சொல்லுகிருளென்று அதிக கவனமாய்க் கேட்டார்.

"தபோநிதே! தங்களுக்குத் தெரியாதது நானென்னசொல்லப் போகின்றேன்! ஆயினும் உலக ஒழுங்கிற்குக் கோபுரந்தாங்கிப் பதுமைகளை வைத்துக் கோபுரம் கட்டவேண்டுமென்று தாங்கள் திருவுள்ளம்பற்றி யிருக்கிறீர்களென்று எனக்குத் தோன்றுகின்றபடியால், அப்படியே செய்ய எனக்கு ஆக்ஷேபனையே யில்லை." என்று அதிரூப சுந்தரி அமைதியோடு சொன்னாள்.

"அம்மணி, இந்த ராக்ஷதனை எங்குமில்லாது ஒழித்துவிட வேண்டுமென்றால் எப்படிச் செய்யமுடியும்! அவனுடைய விர்த்தாந்தமென்ன? அவனுடைய ரகசியமென்ன? அவனை எப்படி வெல்லமுடியும்? பாவம், நீயும் அவனால் மஹா கஷ்டம் அனுபவித்து, மஹா சமத்காரமாய் அவனைப் பக்குப்படுத்தி வைத்திருக்கிறாய்போல் தெரிகிறதே! உனக்கும், பிறர்க்கும் ஊனம் செய்ய ஏனென்று காத்திருக்கும் எரிமூஞ்சி ராக்ஷதனை எமனுலகத்திற்கு அனுப்பிவிடவேண்டுமென்று எனக்கு எண்ண மிருக்கின்றது. ஆதல்பற்றி உனக்குத் தெரிந்தவரை உளவை எங்களுக்கும் சொல்லிவிடுவாயாயின், மன்னவரும் மெச்சும் மஹாதீரனை மதுரேசனைக் கொண்டு, காரியமனைத்தையும் காலத்தில் முடிக்கலாம்." என்று மஹாரிஷி வெகு மனப்பிரீதியோடு கூறினர்.

இதைக்கேட்ட அதிரூப சுந்தரி, அப்படியும் இப்படியும் பார்த்து, "தபோநிதே! இந்த அரக்கன் எந்த விதத்தாலும் சாகாதவன். எத்தனையோ பேர் இவனை எப்படி யெப்படியோ கொல்லப் பார்த்தும் ஏதும் சாயாமற் போயிற்று, இவனும் சாகாமற்போனான்! மலைக்கல்லை எடுத்து மார்மீதிற்போட்டும், கல்லுக்கு ஊனம் நேர்ந்த

---

* பரிணமித்து = பெருகி.

தேயன்றி உடலுக்குவருத்தம் உண்டாகவேயில்லை." என்று சிறிது போது கண்கள் சுழன்று கலக்கத்தைக் காட்டவும், உதடு குவிந்து உள்ளத்தின் அச்சத்தை ஒருவாறு விளக்கவும் உண்மை கூறி ஒரு நிமிஷம் நிதானித்தாள்.

"அம்மணி! எப்படியிருந்தாலும் இதற்கு நீதான் இயைந்தபடி செய்தல் வேண்டும். வேறு வழி எப்படி?" என்று ரிஷீஸ்வரர் ஆச்சரியத்தோடு சிறிது நகைத்து அவசரந்தோன்ற அதிரூபசுந்தரியைக் கேட்டார்.

அதன்மீது சிறிது ஆலோசனை செய்து அதிரூப சுந்தரிசொல்வாளாயினள்:

"ஸ்வாமிகளே! நாம் இப்பொழுது இவ்விஷயத்தைப்பற்றி இரண்டு நிமிஷம் கூட வளர்த்திப் பேசுதலாகாது! ஏனென்றால், ராக்ஷதன் எந்த நிமிஷத்திலாயினும் வந்தே விடுவான்! அவனுக்குப் பிடுங்கித் தின்பதிலும் உதிரம் குடிப்பதிலும் மதுரம் அதிகம் மனதாரவுண்டு. அதுபற்றித் தான், மாரியாத்தாளாகிற மாயக்கிழவி ராக்ஷதனை எழுப்பும்போதெல்லாம், நரம்பு மாலையை வாசனைகாட்டி, எலும்பை மூக்கண்டை வைத்து மோப்பம் காட்டித் தூக்கம்போக்குவது வழக்கம்.

இப்பொழுது நாம் இத்தனைபேர் இங்கே இருப்பதைப் பார்த்தால், எடுத்தே விழுங்கிவிடுவான் எல்லாரையும் சேர்த்து! அவனை என்ன அடித்தாலும் பிராணன் நீங்காது, ஆவி போகாது! அவனுக்குத் துணையாய் நேர்ந்த ஆகாப்பாவி ராக்ஷதர்கள் ஆயிரம் பேருக்கு அதிகமாகவேயிருக்கின்றனர்! கொஞ்சம் சந்தடி, சிறிது சந்தேகம் ஏற்பட்டுவிடுமாயின் எல்லாரும் சேர்ந்து, ஈட்டி, உலக்கை, கத்தி, சூலம், வில், அம்பு எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு, சின்னபின்னமாகச் சிதற்வடித்து, வந்த பேர்களை வாயிற்போட்டுக்கொண்டு போய்விடுவார்கள். ஆகையினால் இதற்கு நாம் செய்யவேண்டிய யுக்தி ஒன்றுளது. அஃது யாதெனின், ஒரு தக்க உலகாளும் ராஜாவின் சைன்ய ஒத்தாசை பெறவேண்டும்! தற்போது இங்கு தங்களோடு வந்திருக்கும் தைர்ய புருஷரைச் சேனைத்தலைவராக நியமித்து இந்த ராக்ஷதர்களை இயமனுலகத்திற்கு அனுப்பவேண்டும். அதுவும் முதலில் இந்த பிரம்மராக்ஷதனை பிஸ்மல்லா செய்துவிட்ட பின்னால் தான் சரிவர முடியும். இல்லாவிட்டால் எவ்வளவு

பெரிய சேனை வந்தபோதிலும் எடுத்தே விழுங்கி விடுவான் இந்தப் பாவி!" என்று பலவாறாக அதிரூப சுந்தரி சொல்லி அருமூச்சும் பெருமூச்சும் விட்டு ஆயாசந்தீரப் பேச்சை நிறுத்தினாள்.

இதற்குள்ளாக ஜகன்மோஹன சிங்காரம் என்னென்னவோ நினைத்து ஏக்கங் கொண்டு ரிஷீஸ்வரரை நோக்கி, "ஸ்வாமி தங்களுக்கு இஃது நடக்குமென்று தோன்றுகிறதா? எனக்கு ஒன்றும் விளங்கவில்லை; ஏதும் தோன்றவில்லை!" யென்று சொல்லி, முகத்தை முக்கால் பங்கு சுருக்கிக் கொண்டு, ஒன்றுந் தோன்றாமல் ஓயாது சிந்தித்துக்கொண் டிருந்தாள்.

ரிஷீஸ்வரர், அதிரூப சுந்தரியை நோக்கி, "அம்மா, முதலில் அந்த ராக்ஷதனை அடியோடே ஒழித்துவிட்டால் தான் எதுவும் பயன்படுமென்று தோன்றுகிறது. அதற்கு என்ன செய்யவேண்டும்? அதற்கு யாது உபாயம்?" என்று ஆலோசனைக்குறிப்பை அரவிந்த முகத்தில் காட்டி, அமைதியும் கவனமும் அருமையாய் விளக்கி, அருந்தவர் கேட்டார்.

"அதற்கும் வழியுளது என்று நினைக்கின்றேன்" என்றாள் அதிரூப சுந்தரி!

"அது தான் யாதெனக் கேட்கிறேன்." என்றார் அருந்தவஞ் செய்த பெருந்தவ முனிவர்.

"சரி சரி." என்றாள் ஜகன்மோஹன சிங்காரம்.

ஒன்றுந் தோன்றாது விழித்தாள் மனமோஹன மாணிக்கம்!

"சொல் அம்மா!" என்றார் மறுபடியும் ரிஷீஸ்வரர்.

"அடுத்த காட்டில் வேடனிருக்கிறான்!" என்று நிதானித்தாள் அதிரூப சுந்தரி!

"அவன் பெயரென்ன?" என்றார் ரிஷி!

"அந்தக் காட்டில் எங்கிருக்கிறது அந்த வேடன்?" என்றாள் ஜகன்மோஹன சிங்காரம்!

"அவன் என்ன செய்கிறது?" என்றாள் மனமோஹன மாணிக்கம்.

"அந்த வேடன் பெயர் ஆருத்திரா தரிசனம்! அவன் வேட்டையாடி அகப்பட்ட மிருகத்தை அடித்துக்கொன்றுண்பது! அதுவே அவன் ஜீவனம்! அந்த காட்டில் அக்கினி மூலையில் குடிசை

யொன்று போட்டுக் குடித்தனம் செய்கிறான் அவன்!" என்று கூறினாள் எந்தப் பக்கமும் பார்த்து, எதிரொன்றில்லா அதிரூபசுந்தரி!

"அவனிடம் என்ன விசேஷம்?" என்றார் தவமுனிவர்.

"அவன் நல்லவனா கெட்டவனா?" என்றாள் ஜகன் மோஹன சிங்காரம்.

"அவனால் காரியம்போ லிருக்கிறது!" என்றாள் மனமோஹன மாணிக்கம்.

"ஆம், சற்று அவசரப்படாதேயுங்கள்! அவன் கெட்டவனென்னமோ கெட்டவன் தான். இந்த ராக்ஷதனோடு இணைபிரியாச் சிநேகிதனா யிருந்து, ஏதோ வருத்தம் இவர்க்குள்ளுண்டாக, ராக்ஷதனைக் கொல்வதாய்க் கங்கணம் பூண்டு, தாக்ஷண்ய மின்றித் தீக்ஷண்யம் காட்டி, கறுவிக்கொண்டே ஓர் நாள் நழுவிக் கொண்டான். அவன் மறுபடியும் இங்கு வருகிறதேயில்லை. அவனுக்கு இவன் பலஹீனமெல்லாம் அதிக நன்றாய்த் தெரியும்! அவனைச் சரிப்படுத்தித் தான் இவனைச் சரிப்படுத்தவேண்டும்!" என்று அதிரூபசுந்தரி அதிசாக்கிரதையாய்ச் சொன்னாள்.

"அப்படியே செய்யலாம்!" என்றார் ரிஷிபுங்கவர்.

"எடுத்த காரியத்தை முடித்தேதீரவேண்டும்!" என்றாள் மனமோஹன மாணிக்கம்.

"அல்ப சொல்பமான காரியமாய்க் காணோமே! ஐயன் அருள், ஸ்வாமிகள் கிருபை, என் அதிர்ஷ்டம்! எப்படி யெப்படி நடக்கிறதோ அப்படி அப்படி நடந்தே தான் தீரும்!" என்று மனம் வருந்தி முகங்கரிந்து மூச்சைப்பிடித்துப் பேச்சைப் பேசினாள் முக்கால் பிராணன்போன ஜகன்மோஹன சிங்காரம்!

மறுபடியும், அவள், "ஐயோ, நான் செத்துப்போகக் கூடத் துணிந்தேனே! ஆனந்தவாரிதியை அகங்களித்துண்ட அற்புதத்தவ முனிவர்க்காகவும், அதிக தைரியஞ்சொன்ன அதிரூபசுந்தரிக்காகவுமல்லவா, ஆவிதுறப்பதைப் பாவி நிறுத்தினேன்! என்னவோ, நடந்தால் நடக்கட்டும், இல்லா விட்டால், பாவி என்னுயிர் பறக்கட்டும்! பாவிகையில் அகப்படாது ஆவிபோனால், அதுவே, சாம்ப்ராஜ்யம்பெற்று, அஷ்டைஸ்வர்யம் படைத்ததுபோ லாகும்!" என்று சொல்லிக்கொண்டே, விக்கிக்கொண்டே, கண்ணில் நீரை ஆறாய்ப் பெருக்கிக்கொண்டே, புலம்பிக்கொண்டே, வெதும்பிக்கொண்டே,

கேவிக்கோண்டே, மயக்கத்தால் கையைத் தாவிக்கொண்டே ஆ வென்று அரற்றிக்கொண்டிருந்தாள்.

"அம்மா பயப்படாதே! காரியத்தை முடித்தே தீருகிறேன்!" என்றார் தவமுனிவர்.

"ஸ்வாமிகள் கிருபையிருக்கும்போது கவலைப்படுவானேன், உயிரை விடுவானேன்! நான் உன்னைக் காப்பாற்றாது விட்டால், வீரனு, சூரனு, தீரனு, நேசனு, மதுரேசனு!" என்று தைர்யம்புகன் றாள் மனமோஹன மாணிக்கம்.

"ஆய்விட்டது! அம்மா எழுந்திரு!" என்றாள் அதிரூப சுந்தரி.

இவர்களெல்லாரும் இப்படிச்சொல்ல எழுந்து உட்கார்ந்தாள் இணையில்லா ஜகன்மோஹன சிங்காரம்.

"ஆம், எல்லாம் சரிதான்! நமக்கு அப்போதைக்கப்போது சமா சாரங்கள் தெரிந்து கொண்டிருக்க வேண்டுமே! அதற்கென்ன செ ய்வது!" என்றாள் அதிரூப சுந்தரி!

"அதற்காகத் தான் கொண்டுவந்தேன் அரிய மூன்று தந்திச் சாமான்களை! அவைகளில் ஒன்று உங்களிடத்தில் இருக்கட்டும்; மற்ற இரண்டும் எம் இருவரிடத்திலும் இருக்கட்டும். இவைகளைத் தக்கபடி நாம் உபயோகித்துக்கொள்வோமாளுல் அவசரசமாசாரங் களை அப்போதப்போதே தெரிந்துகொள்ளலாம்! நாங்கள்போய் வருகிறோம்." என்று ரிஷீஸ்வரர் சொல்லிவிட்டு மனமோஹன மா ணிக்கத்தை அழைத்துக்கொண்டு வெளியே போய்விட்டார்.

---

# இருபத்தாறுவது அத்தியாயம்.

| | |
|---|---|
| ஆடம்பராசாரி முதலியோர்! | சத்திரத்தில் அனர்த்தம்! |

ஆஹா! எதிரே தோன்றுகிறது அது என்ன வீடா, மடமா, சத்திரமா, சாவடியா? அகன்ற திண்ணையும் ஆவென்ற வாயிலும், பரந்த வாசலும் விரிந்த கூடமும், நீண்ட வழிகளும் நிமிர்ந்த கூரையும், உயர்ந்த சுவர்களும் ஒரு புறம் மெத்தையும்—ஆஹா! இஃது யாதா யிருக்கலாம்! சரி சரி! தெரிகிறது! அந்தப்பக்கத்தில் பலகையொன்று அழகாகக் கட்டப்பட்டிருக்கின்றது! இருவர் மூவர் வந்துகொண்டும், இருவர் மூவர் வாயைக்கழுவிக்கொண்டும் இருவர் மூவர் போய்க்கொண்டும், இருவர் மூவர் பேசிக்கொண்டும்—இப்படியாக அங்கே இமைப்பொழுதும் ஓயாமல் இருப்பதால் அது ஒரு பெரிய சத்திரம் என்று அனைவரும் தெரிந்துகொள்ளலாம்!

அந்த சமயம் அரிய புலவர்கள் இருவர், சுண்ணும்புச்சோற்றைச் சொகுசாய்த்தின்று, வயிற்றைத்தடவி முகத்தைச்சுளித்து வாயிற்படியண்டை நின்றார்கள்! சத்திரத்து ஐயர்களாகிய சுப்பய்யர், சூரய்யர் என்கிற இருவோரும், சுருக்காய் வந்து கருக்காய் பணம் கேட்க, இரட்டைப்புலவர்கள் "ஸ்வாமிகளே, ஒரு காசும் கொடோம்! வரய்க்கு வழங்காத சோற்றைப்போட்டு, மொட்டைப் பார்ப்பாத்தி நெய்வார்ப்பது என்று சொல்வார்களே, அந்த மாதிரி கைக்கு வராமலே நெய்யை விட்டு, காரக்குழம்பும் கரித்துவையலும் போட்டுக் கால் ரூபாய் வேண்டு மென்று வீண் வழக்கு போடுகிறீர்களே! இந்த இழவு அல்லாமலும், இரண்டணா கொடுத்து இரண்டு காசுக்கும் உதவாத இளிச்ச மூஞ்சி உப்புமாவை எரிந்த வயிற்றில் தின்றுத் தொலைத்தோமே! ஆனாலும், இப்படியா மோசம் செய்து காசைப்பறிக்கிறது! ஹா! உப்புமா! அழகான உப்புமா! அதற்கு இரண்டணா! நாங்கள் அந்த உப்புமாவை நானிலத்திற் கண்டதில்லை: பல்லைப்பிடித்துக்கொண்டது, வாயில் ஒட்டிக்கொண்டது, வயிற்றில் படிந்து விட்டது. கொஞ்சம் அதிக தூரம் சென்றாலும், சிறிது அஸஹ்யமாய்க்காட்டினாலும், அதன் பெருமையைச் சொல்லுகிறோம், ஐயர்களே, சற்று அவசரப்படாது கேளுங்கள்!

நல்லவிந்த உப்புமாவை நானிலத்திற் கண்டதில்லை
பல்லைப் பிடித்துமே பாழாக்கும்—நல்லாய்கேள்
கொல்லைக்குப் போனாலுங் கொஞ்சத்தில் வாராது
இல்லையென்று லென்ன பிழை?

என்று தான் அதைப்பற்றிப் பாடவேண்டி யிருக்கிறது! அதிருக் கட்டும்! ஹா! அந்த சேமைக்கிழங்கு சமைத்துப்போட்டீர்களே! ஹா! அது என்ன சேமைக்கிழங்கு! கல்லும் கெட்டது, மரமுங் கெட்டது! அப்படி வேகாத கிழங்கை அடியோம் தலையில் தொலைத்து, இலையில் ஒழித்து, ஆகாத்தியத்தோடு ஆர்ப்பாடஞ்செய்து ஏகாதிபத்தியமாய்ப் பணத்தை எடு என்கிறீர்களே!

சேமைக் கிழங்கதனைச் சேமித்து வைத்திருந்தீர்
பூமிக்குட் சென்றே புதையெடுத்தீர்—ஓமக்
கனலிலே யொன்றரைநாள் வெந்திடினு மந்த
அனலின்வச மாகாது காண்.

என்று தான் அதைப்பற்றிப் பாடித்தொலைய வேண்டும்!

அது போனாற் போகின்றது! போதும் போதாததற்கு ஊறுகாய் கொண்டு வந்து உள்மெரிய வைத்தீர்களே! ஹா! அது என்ன ஊறுகாய், அது என்ன உளறுபடிக்காய்! சாறு என்பதே சாஸ்திரத்திலும் அதிற் கிடைக்காதே! வாயிற்குச் சற்றும் ருசி கொடாது, தேகத்திற்குச் சிறிதும் நலம் கொடாது, நாயின் தோல் போல் நலம் கெட்டபின் வாயினில் வைத்து மகிழ்வ தெதற்காக?

ஊறுகா யொன்றுண்டா லூரதனிற் கேட்டதில்லை
சாறெல்லாம் வற்றிச் சருகழிந்து—நாற்றமாய்
நாயின் சருமமே நன்றென்ன வானதற்பின்
வாயினில் வைத்து மகிழ்.

என்பதே அதற்குச் சரியாக அமைந்த சாத்துக்கவி!

அதிருக்கட்டும், சுப்பய்யரே, சுண்டைக்காயய்யரே, சுடுமூஞ்சி ஐயரே, உம் சோற்றுக்கு ஒரு காசும் நாம் கொடோம்" என்று மேற் சொன்ன இரண்டு புலவர்களும் சண்டை பிடித்தார்கள்! அதன் மீது சுப்பையரும் சூரையரும் 'அப்படியானால் செருப்படி கொடுப்போம் ஹா ஹி!' என்று ஆர்ப்பாடஞ்செய்ய, சுண்டைக்காய் ஐயரும், எகிறிக்குதித்துக் கோப நெருப்பைக் கோரமாய்வீச, அங்கே வீதி முழுதும் வெகு அல்லோல கல்லோலமாய் அமளி குமளி

மிருந்து அனர்த்தமாயிருந்தது! பெரிய கும்பல் சேர்ந்து, பெரிய சண்டை விளைந்துகொண் டிருந்தது! மெதுவாய் வாய்ச்சண்டை வளர்ந்து கைச்சண்டைக்கு வந்து தப் திப் என்று உதையும் குத் தும் அறையும் அடியும் அதிகமாய் விட்டன! கும்பு சேர்ந்த ஜனங் கள் வம்பை விலக்க வழி தேடாது, வாயைத்திறந்து ஆ என்று பார்த்திருந்தார்கள்!

இந்த சமயம், "ஹோ ஐயமாரே, அழுமூஞ்சி சாமிகளே! வாங் கள் ஐயா சீக்கிரம்! வயிற்றிலே பசி கிள்ளிக்கொண்டு, அவசரத்திற்கு உதவும் என்று அவசரமாய் வந்து சேர்ந்தால், ஆகாத்தியஞ்செய்து கொண்டு வீணான சண்டையை வினையாகப்பெருக்குகிறீர்களே! ஹா! விடிந்தது! இப்படி நீங்கள் சண்டை போட்டுக்கொண்டிருந் தால், எப்படி வியாபாரம் என்ன விதமாய் நடக்கிறது? வயிற்றி லெரிந்து வந்த நாங்கள் வானத்தைப்பார்த்து, ஓடவேண்டியது தான் போ லிருக்கிறதே! வெகு அழகாயிருக்கிறது! மிக நன்றாயிருக் கிறது! எங்கள் பசியும் ஆறி விட்டது, உங்கள் வியாபாரமும் விடிந் துவிட்டது! வாரும் ஐயா வாரும் சண்டை போதும் ஐயா போதும்!" என்று கும்பின் நடுவில் வம்பர் நால்வர் புகுந்து சண்டை விலக்கி சமாதானஞ்செய்ய முயன்றார்கள்.

இவர்கள் தாம் ஆடம்பராசாரி, இங்கித முதலியார், அப்பளா சாரி, ஆமவடை ஆசாரி என்பவர்கள். இவர்கள் நால்வரும் இரைச்ச லிட்டதைக்கேட்ட சத்திரத்துப்பிராமணர்கள் சித்தம் நிதானித்து,

"என்ன ஐயா, எங்கள் இழவு எங்களுக்கு, உங்கள் இழவு உங் களுக்கு! எந்நேரம் பார்த்தாலும் எம்மோடு சண்டையும் சச்சரவும் தொல்லையும் சள்ளையும் வம்பும் வாதும் வந்து கொண்டிருக்கிறதே தவிர வேறொன்றும் காணோம்! என்ன ஐயாவேணும்! சொல்லும் ஐயா சொல்லும்!" என்று சுப்பையர் ஒரு புறமும் சூரைய்யர் ஒரு புறமும் சுண்டைக்காய் ஐயர் ஒரு பக்கமும் வண்டைக்காய் ஐயர் ஒரு பக்கமும் கத்திக்கதறிக் கொண்டு வந்தார்கள்.

"பசியெடுக்கிறது, வாருமையா சோறு போடும் என்றால் இன் னும் வதறிக்கொண்டும் கதறிக்கொண்டும் நின்று கொண்டிருக்கி றீரே! எம்மாலாகாது, உம்முடன் பேச! வருகிறீரா, அல்லது நாங் கள் வேறே எந்த சத்திரத்திற்காவது போகவா?" என்று இங்கித முதலியார் இரைந்து கதறினர்.

"ஐயா கோபித்துக்கொள்ளாதேயும்! நீர் தானே அந்தத்தெரு தாசிவீட்டில் கோடி கோடியாய்க் கொட்டிக்கொடுத்தீரே! உம்முடைய முடுக்கு ஒரு நாளும் போகாதுபோ லிருக்கிறது! அனைவரும் உள்ளே வாருங்கள்." என்று சுப்பய்யர் சொல்லிவிட்டுச் சுண்டைக் காய் ஐயரைச் சோறுபோடச்சொல்லிச் சாடை காட்டினர்.

சுண்டைக்காய் ஐயர் உருண்டு கொண்டே, நால்வரையும் அழைத்துப்போய், நடு கூடத்திலும் ஒரு வீட்டிலும் நாலு இலை போட்டுச் சோறு பரிமாறினர்.

ஆடம்பராசாரியார், சுண்டைக்காய் ஐயர் உருளுவதையும் ஓடுவதையும் ஒரு நிமிஷம் ஜாடையாய் நிதானித்து கக்கிட கக்கிட நகைத்து, "ஸ்வாமி! தாங்கள் சுண்டைக்காய் ஐயராயிற்றே! சுண்டைக்காய் விரலில் சோறு போட்டு, நெய்வார்த்தால், எங்கள் வயிறு நிறைந்து ஏப்பம் வந்து விடுமோ! நன்றாயிருக்கிறது நாலஞ்சாப் பாடு! அந்த வண்டைக்காய் ஐயரையும் வழுதலங்காய் ஐயரையுமாவது கூப்பிட்டால், நிகளக்கையில் சுலபமாகவாவது வரும்!" என்று கூறினர்.

இதற்குள்ளாக, நகைத்து, இங்கித முதலியார் "ஓய் சுண்டைக்காய் ஐயரே, கூப்பிடும், அந்த வண்டைக்காய் ஐயரையும் வழுதலங்காய் ஐயரையும்! சூரையரைக்கூப்பிட்டு * சூபர்விஷன் செய்யச்சொல்லும்! சுப்பையரைக்கூப்பிட்டு சோறு தோண்டச்சொல்லும்! சுப்பையரும் சூரையரும் சண்டைக்குப்போய் விட்டு, வண்டைக்காய் ஐயரும் வழுதலங்காய் ஐயரும் வாயைத்திறந்து கொண்டிருந்தால், சுண்டைக்காய் கையிலிருந்து மணித்தக்காளிக்காய் சோறும் ஒரு துளி நெய்யும் தானே வரும்! நானும் அத்தானும் கொஞ்சம் சாப்பிடப்பட்டவர்கள்; ஒழிகிறது என்றிருந்தாலும், அத்தான் நண்பர்கள் அதோ ஆமவடையாசாரியும் அப்பளாசாரியும் போக்யமாய் அமிசை செய்பவர்களாயிற்றே! † ததியாராதனம் அவர்களுக்குச்சரியாய் இருந்தால்தானே நன்றா யிருக்கும்" என்று கூச்சலிடவே,

"வந்து விட்டோம்! வந்து விட்டோம்! கோபம் செய்யாதீர்கள், எழுந்து போகாதீர்கள்" என்று சுப்பையரும் சூரையரும் சுண்டைக்

* சூபர் விஷன் = மேற்பார்வை.

† ததியாராதனம் = சாப்பாடு—(பிராமண பரிபாஷை)

காய் ஐயரும் வண்டைக்காய் ஐயரும், வழுதலங்காய் ஐயரும் புடலங்காய் ஐயரும், எல்லோருமாக ஓடி வந்து, கையில் கொஞ்சம் வந்தும் காபரா அதிகம் செய்து, சாதம் பரிமாறிக்கொண்டிருந்தார்கள்.

"கொத்தவால் சாவடியில் சத்தரிக்காய் அகப்படவே யில்லை, அரிசியின் விலை அதிகமாய் விட்டது, நெய் கிடைப்பது துர்லபமாய் விட்டது, ஊர்ப்பிரதேசங்களிலிருந்து உருளைக்கிழங்கு வராமலிருப்பதால், ஒரு ரூபாய்க்கு ஒரு கிழங்கு அகப்படுவதுகூட அருபொருளாய் விட்டது! தயிர் சொல்லுகிறீர்களோ, தங்கம் பட்டபாடுதான்! முதலியாரே, போங்கள், நாங்கள் படுகிறபாடு நாய் படுகிற பாடுதான்! இத்தனை கொடுத்து வாங்கியும், எத்தனை பேர் காசு கொடாது, எடுத்துக் கொண்டே வாயிற் போட்டுக்கொண்டே ஓடிப் போகிறார்கள்! இத்தனை நாழிகை சண்டையாயும் அத்தனை படித்த பாழும் புலவர்கள், பாட்டைப்பாடி விட்டு ஓட்டம் பிடித்தார்கள்! என்னமோ எங்கள் கஷ்டத்தைப்பார்த்துக் காசு கொடும்!" என்று எல்லா ஐயர்களும் ஒன்றாய்ச்சேர்ந்து பொல்லாக்கூச்சலிட்டுக் குல்லாப்போட்டுக்கொண் டிருந்தார்கள். என்ன பேசினாலும் சொட்டு நெய்தான், பொட்டு மோர்தான்! அகப்பட்டது போது மென்று ஆடம்பராசாரியும் இங்கித முதலியாரும், சாப்பிடத்தொடங்கினார்கள்!

ஆமவடையாசாரியும் அப்பளாசாரியும், சாதத்தைக்கல்க்கச் சங்கடப்பட்டு, உள்ளே ஒரு அறையில் ஒதுங்கி உட்கார்ந்தவர்கள்,

"ப்ரஸாதம் ஸ்வல்பமாத்ர மிருப்பதால், ஹஸ்த லாகவத்திற்கு ஸாத்திய மன்னு!" * என்று அவதிப்பட்டுக்கொண் டிருந்தார்கள்! இதைக்கேட்ட ஆடம்பராசாரியும் இங்கித முதலியாரும், பொங்கிச்சிரித்து, மறுபடியும் அடக்கி,

"ஸ்வாமிகளுக்கன்னே! யாத்ரா ப்ரதேஸத்திலே அசந்தர்ப்பம் அனேகம்! தேவா, அடியோமாலே உண்டான அபராதத்தை க்ஷமிக்கவேண்டும்!" என்று அவர்களுக்குக் காணமலே சிரித்து, விண்ணப்பஞ்செய்து கொண்டார்கள்!

"ஹா ஹர! ஸ்ரீயːபதி ஸ்ரீயːபதி! நேக்கு அந்த மாதிரி அபிப்பிராய மில்லவே யில்லை! தேவாசுகிர்த ரூபேண க்ருஹம் போய்ச்சேர

---

* சாதம் கொஞ்ச மிருப்பதால் கையால் பிசையச் சாத்தியப்படவில்லை யென்பதற்கு பரிபாஷை.

வேண்டுமென்று பிரார்த்தனேயே தவிர வேறின்னு' ஸ்வல்பநாள் உப வாசத்தாலே பாதகமில்லே.'' என்று ஆமவடையாசாரியும் அப்பளா சாரியும் சமாளித்துக்கொண்டார்கள்.

இந்த ஆர்ப்பாடங்களுக்கு இடையில் எல்லோரும் இலேயி லிருந்த சாதத்தில் இரண்டு பிடி யெடுத்துச் சாப்பிடத் தொடங்கி, பசி அபிவிர்த்தியாய்க்கொண் டிருக்கிற பரிதாப வேளேயில், எழுந் தது கூச்சல் தெருவாயிலண்டை!

"ஹா ஹா! ஆடம்பராசாரியே! ஐயா, வந்தாரா! ஐயரே பார்த் தீரா? அவர் தான் வந்தாரே! அவர்தான் நின்ருரே! அவர் தான் போனுரே! அவர் தான் உள்ளே, வெளியே, அங்கே, இங்கே, எங்கே, எப்படி, எவ்விதம்! என்னமாய் ஐயரே! ஏதாய் ஸ்வாமி! அவர்தான்! ஆடம்பராசாரிதான்! கூட இருந்தார்களே, ஓடி வந்தார்களே! அங் கே வந்தாரே, கும்பில் நுழைந்தாரே, அப்படி வந்தாரே, இப்படி போனுரே, என்னமோ சொன்னுரே, ஏதோ நின்ருரே! அவர் தான் ஆடம்பராசாரி! ஆடம்பராசாரீஇஇ! ஆடம்பராசாரீஇஇஇஇஇ! அத் தானே அத்தானேஎஎஎஎ! அத்தானே எஎஎஎஎ! அத்தானேஎஎஎ, ஆடம்பராசாரீஇஇஇஇ!'' என்று பைத்தியக்காரன் கத்துவது போல் பாரக்கதறல் அபாரமாய்ப்போட்டார்!

வாயிற்போட்ட இரண்டு உண்டைகளேயும் வழியாய் விழுங்க வும் நாழிகாணுது, இலேயிலிருந்த சாதத்தை 'ஏகாம்பரேஸ்வரா!' என்று விட்டு எழுந்து வந்தார்கள் தெருவிற்கு!

வந்தார்கள், பார்த்தார்கள், அற்புத முதலியாரைக்கண்டார்கள்!!

ப்ரமை பிடித்ததுபோல் நின்ற ஆடம்பராசாரியை, "அத்தான் அத்தான்'' என்று வந்து கட்டிக்கொண்டார், கவலே கொண்ட அற் புத முதலியார்!

"அத்தான்! எப்படி! ஏதாய்! எங்கிருந்து வந்தீர்கள்! ஹா என்ன ஆச்சர்யம்! என்ன விநோதம்! எப்படிப்பார்த்தீர்கள்? எப் படிக்கண்டு பிடித்தீர்கள்! என்ன! ஏது! ஹா ஹா! அதிசயமாயிருக் கிறதே! அற்புதமாயிருக்கிறதே!" என்று ஆடம்பராசாரி மிக்க ஆச் சரியப்பட்டார்!

"அற்புதமாயிருக்கிறதென்கிறீர்களே, அத்தான்! அற்புதர் தா னே அவர், அற்புத முதலியார் தானே அவர் பேர்!'' என்று இளித் துக்கொண்டே சொன்னுர் இங்கித முதலியார்!

"அடேடே அடேடே! இவரைப்பார்க்கவில்லையே நான் இத்தனை நாழிகையாயும்! எங்கிருந்து புறப்பட்டார் இங்கித முதலியார்! அடேடே! அடேடே! என்ன கண்கள் கூட மோசம் செய்து கடுகே மறைந்து விடுகின்றனவே! கண்களா இவைகள்! கண்கள் அல்ல புண்கள்! அத்தான், எல்லாவற்றிற்கு மேலும் இங்கித முதலியாரை இன்று கண்டு பிடித்தது என்றுமில்லாத விநோதத்தை இன்று தருகின்றதே! ஹா ஹா! இவர் எப்படி வந்தார், எப்படி விட்டார், ஏதானுர், இன்ஸால்வென்ட் ஆனுர், தாசி வீட்டுக்கு வாரிக்கொடுத்தாரோ, தெருவில் நின்று திகைத்து விழித்தாரோ, உம்மை வழியில் நின்று கண்டு பிடித்தாரோ, பிடிவாதத்தை விட்டாரோ, படுமோசத்தைத் தொலைத்தாரோ, பாவிகள் ஸ்நேகிதத்தைப் பறக்கடித்தாரோ, பெண் சாதி பிள்ளையை வாரிக்காற்றில் தூறி விட்டாரோ! ஹா என்ன ஹா என்ன!" என்று பைத்தியக்காரனைப்போல் அற்புத முதலியார் அரற்றிக்கொண்டிருந்தார்.

"போங்கள் ப்ரதர் போங்கள்! நாலுபேரெதிரில் நகைக்கப்பண்ணுகிறீர்கள் என்னை! உங்கள் சமாசாரம் எங்களுக்குத்தெரியாதோ! ஊரார் பணத்திற்குப் பேயாய்ப் பறந்து, உள்ள பணத்தை மெள்ள மறைத்து, நீங்கள் மாத்திரம் தின்று, நீங்கள் மாத்திரம் முகர்ந்து, நீங்கள் மாத்திரம் பொங்கி, யாருக்கும் ஒன்றையும் பேருக்கும் காட்டாது, ஜாலவித்தை செய்து, அந்தப்பேரை மறைத்துக் கொள்ள, அப்படி இப்படி ஒரு நாளைக்கு பூச்சி மந்திரம் காட்டுவது போல் புதுமை காட்டி, நானும் பரமதயாளக்கொக்கு என்று நாலு பெயருக்கு மெய்ப்பித்து, போங்கள் ப்ரதர் போங்கள், கிட்டியதை யெல்லாம் பெட்டியில் வைத்துப் பூட்டுவதும், அகப்பட்டதை யெல்லாம் முன்தானையில் அழுத்தமாய் முடிந்து கொள்வதும் தரையில் கிடப்பதை அறையில் வைத்து அடக்கிக்கொள்வதும்—செத்தால் சிவ சிவ என்று விடுகிறதும், அழுதால் ஹர ஹர என்று விடுகிறதும், வேஷங்கள் போடுவதும், விஷங்கள் செய்வதும், வினைகள் விளைப்பதும், மௌனஞ்சாதிப்பதும் போங்கள் ப்ரதர் போங்கள்—நீங்கள் செய்வது போல் நாங்கள் செய்யவே மாட்டோம்! தாசி வீட்டுக்குப் போனாலும் தாக்ஷண்யம் எங்களிடம் உண்டு! காசைப் பாழாக்கினாலும் கபட எண்ணம் எங்களிடமில்லை! என்னைக்கேலி பண்ணுகிறீர்களே, ப்ரதர்! உங்கள் சமாசாரத்தை உளமுவந்து யோசியுங்கள்!" என்று ஆத்திரத்தோடு இங்கித

முதலியார் நேத்திரம் விளக்கி, அற்புத முதலியாருக்கு * அறநெறி புகன்றார்.

"ஆடம்பராசாரி அத்தான் பார்த்தீர்களா! ப்ரதர் என்ன சொல்லுகிறார்! அவர் செய்கிறது சரியாம், நான் செய்கிறது பிசகாம்! என்னவேடிக்கை அத்தான் இந்த ப்ரதர் சொல்வது!" என்று அற்புத முதலியார் ஆடம்பராசாரியை மத்யஸ்தத்திற்கு அழைத்து மனம் சலித்துக் கொண்டார்!

"அத்தான்! நீங்கள் சொன்னதும் சரிதான்! இந்த அத்தான் சொன்னதும் சரிதான்!" என்றார் ஆடம்பராசாரி!

"என்ன? எப்படி?" என்றார் இங்கித முதலியார்!

"அறுந்த விரலுக்கும் அத்தான் சுண்ணும்பு தருவதில்லையே தாங்கள்! அதைத்தான் சொன்னார் அத்தான்." என்று ஆடம்பராசாரி பசியையும் மறந்து ஹஹ்ஹஹ் என்று நகைத்து ஆர்ப்பாடஞ் செய்தார்.

அப்பளாசாரியும் ஆமவடையாசாரியும் 'ஸ்வல்ப ப்ரஸாத'த்தையும் 'ஸ்வல்ப ததியாராதன'த்தையும் இலையாழ்வாருக்கு அமிசை செய்து விட்டு, வயிறு தோய, நாமம் கலைய, உருவம்மாற, உள்ளம் வருந்த, பூநூல் புரள, வெளியே வந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள்!

வரண்ட ஆசாமிகளாகிய மூவரும் வள வள வென்று வாயாடிக்கொண்டிருக்க, ஸதா அப்பம் நெய்யில் தோய்ந்து கொண்டிருப்பதுபோல், எந்நேரமும், ப்ரஸாதத்திலும், தோசைப்பொடி யாழ்வானிலும், வடைப்பொடி நம்பியிலும், சந்தனத்திலும், தாம்பூலத்திலும், மடைப்பள்ளிப் புகையிலும், வியர்வைப் பெருக்கிலும், தோய்ந்து தோய்ந்து பருத்துத்தடித்துக் கொழுத்துத்தழைத்த பிராமணர்கள்கூட, பிஞ்சு கத்தரிக்காய் பாணுவில் வறுந்ததுபோல், வற்றி வதங்கிச் சுண்டி சுண்ணும்பாவதென்றால் என்ன கஷ்ட சாத்தியம்! ஆனபோதிலும், உண்மைக்காகவும், சத்தியத்திற்காகவும், சிலருக்கு வந்த கெட்ட பேரை மாற்றி நல்ல புகழை நாட்டுதற்கும் அப்பளாசாரியும் ஆமவடையாசாரியும் உளம் வருந்தி உடம்பு கசங்கினது மெத்த பரிதாபம்! அடுப்பங்கரை ஐயங்காரர்களானாலும், ஆபீஸ் ஐயங்காரர்களிடமும் காணரிய அரிய குணத்தையும் பெரிய

* அறநெறி = தரும வழி.

தன்மையையும் அவர்கள் விளக்கின அழகை யாவரால் சொல்லத்தரம்!

"சரி! அதிருக்கட்டும், வீண்பேச்சையும் வம்பு வார்த்தையையும் சொல்லிக்கொண்டே நாள் பொழுது நன்றாய்ப்பறக்கின்றது வயிறு பசிக்கின்றது, தலையுடைக்கின்றது! அத்தான் அற்புத முதலியாரே, நீங்கள் எங்கே நின்றும் இங்கு வந்தீர்கள்? என்னை எப்படி இங்கே கண்டீர்கள்? எல்லா விர்த்தாந்தங்களையும் சவிஸ்தாரமாய்ச் சொல்ல வேண்டும்." என்று ஆடம்பராசாரி மிக்க ஆத்திரமாய்க்கேட்டார்.

அதன் மீது, நடந்த சங்கதிகளை அற்புத முதலியார் ஆதியோடந்தமாய்த்தெரிவிக்க, இங்கித முதலியாரும் ஆடம்பராசாரியும் தங்கள் தங்கள் சங்கதிகளைச்சொல்லி, எல்லோருமாக ஒவ்வொருவரையும் நினைத்து ஒரு மணி நேரம் அழுது தொலைத்தார்கள்!

உள்ளே போய்ப் பார்த்தார்கள்! இங்கித முதலியார் இலையை எறும்பு சுற்றிக்கொண்டது! ஆடம்பராசாரியார் இலையில் ஆனமட்டும் தின்றுகொண் டிருந்தது அடுப்பங்கரைப்பூனை! ஐயங்கார்கள் இலைகளை நாயங்கார்கள் * சமர்ப்பித்துக்கொண்டன!

பார்த்தார்கள் அனைவோரும்! வெளியே வந்து வயிறெரிந்தார்கள்! "ஐயோ! பாழும் ஊரிற்கு வந்து பட்டினி கிடக்கவும் சண்டை போடவுமே சரியாக இருக்கிறதே! ஓடிப்போகலாமென்றாலும் கோர்ட்டு சம்மன் குறுக்கே வந்து நிற்கின்றதே! என்ன செய்வோம்!" என்று வருத்தங்கொண்டு சத்திரத்து பிராமணர்களைச் சாதம் இருக்கிறதா வென்று கேட்டால், பத்து ரூபாய் கொடுத்தாலும் பற்று என்பது கிடைக்கவே கிடைக்காது என்றும் சாப்பிட்டானதற்கு கூப்பிட்டு ஒரு ரூபாய் கொடுத்து விடவேண்டுமென்றும் கொக்கரித்துக் கோஷம் போட்டார்கள்!

அற்புத முதலியார் அரையிலிருந்த ஒரு சவானை அழுத்திச் சொருகிக்கொண்டார்! இளிச்சவாய் இங்கித முதலியார் மூன்று பைகளைக்கொட்டி, ஒவ்வொன்றிலுமிருந்த சில்லரைக்காசுகளையும் செம்பு நாணயங்களையும் சேர்த்து ஒரு காசு குறைய ஒரு ரூபாய் சரிப்படுத்திச் சுப்பையரிடம் கொடுத்து ஒரு காசுக்காக மன்னிப்பு

---

* நாய்கள் என்பதை இங்கு விளையாட்டாய் நாயங்கார்களென உபயோகப்படுத்தி யிருக்கிறது.

கேட்டுக்கொண்டதோடும், சாப்பிடாது போனதற்காக, ஒரு காசும் வேண்டுமென்று வற்புறுத்தாதிருக்க வேண்டிக்கொண்டார்.

சுப்பையயர் முகத்தைச்சுளித்துக்கொண்டு போனார்; சூரையர் அது எப்படி யாகும் என்று கறுவிக்கொண்டு சண்டை பிடிக்கச்சமயம் அது தான் என்று தண்டெடு தடியெடு எனச்சொல்லிக்கொண்டு அடுப்பங்கரையிற் சென்று அனர்த்தப்படுத்திக்கொண்டிருக்கிறார்.

அதை யெல்லாம் பார்த்த ஆமவடையாசாரியும், அப்பளாசாரியும் "எல்லோரும் வாருங்கள், பிக்ஷையெடுத்து நாங்கள் குக்ஷிக்கு வழி சொல்லுகிறோம்! இந்தப்பாவி பசக ஆற்றுக்கு இனிமேல் வரவேபடாது வீணாய் வந்த கோர்ட்டு கேஸு தானாய் விலகு மட்டும் இங்கிருந்து தானே அப்புறம் தாண்டவேண்டும்." என்று சொல்லி அனைவரையும் கடை வீதியாய் அழைத்துப்போனார்கள்.

# இருபத்தேழாவது அத்தியாயம்.

ஆருத்திராதரிசனம்! உளவுகூறல்!

காலைப்பொழுது நாலு மணி யிருக்கும்! காகம் கத்துகின்றன! கிளிகள் கூவுகின்றன! மந்த மாருதக்காற்று மலயமாருதம்பாடுவது போல் சில்லென்று வீசிச்சிந்தை களிப்பிக்கின்றது! எழுந்தார் ரிஷீஸ்வரர்! எழுப்பினர் மனமோஹன மாணிக்கத்தை!

"அம்மணி, காலை வேளை என்ன கம்பீரமாயிருக்கின்றது பார்! ஆகாயத்துப்பறவைகள் ஆனந்த கீதத்தை அழகாகப்பாடுவதும், இயற்கைக்கருணை அமிர்தக்காற்றை இருந்திருந்து வீசுவதும் என்ன அற்புதமாயிருக்கின்றதுபார்! கல்விக்களஞ்சியமே, கவிதாசாதுர்யமே, சங்கீத வித்யாபுளகாங்கித சமர்த்தியே, உன்னுடைய கவித்திறத்தாலும் சங்கீத மேன்மையாலும் சற்றுப்போது சந்தோஷிக்கச்சித்தந்தோன்றுகின்றது! ஏதோ, நல்ல பாட்டை இனிய ராகத்தில் இசைத்துச் சொல்லுவாய் பார்ப்போம்!" என்று தபோஸ்ரேஷ்டர் அவாவோடு கேட்டனர்.

உடனே மனமோஹன மாணிக்கம், எழுந்து உட்கார்ந்து, அப்படியும் இப்படியும் ஆகாயத்தைப்பார்த்தாள்! நக்ஷத்திரங்களைக்கண்டாள்! சுற்றி யுள்ள மரங்களை உற்றுப்பார்த்தாள்! காலைக்காற்று மேலே பட்டதும், அமிர்தத்தைத்தூவி ஆனந்த முண்டாக்கினதுபோலிருந்தது!

மஹா ரிஷியை நோக்கி மனமோஹன மாணிக்கம் சொல்வாளாயினள்:

"ஸ்வாமி, என்னைப்பெற்ற ஏந்தல் போன்றவரே! இந்த அடவியிலெனக்கு ஏதும் துயரம் நேராதபடி இவ்வளவு சாக்கிரதையாய்க் காப்பாற்றும் எந்தையிர்க்கு நான் என்ன கைமாறு செய்யப்போகின்றேன்! இஃது என்ன காடென்றால் காடா? நினைத்தால் நெஞ்சங்கலங்குகின்றது, நினைத்தால் ஆனந்தந்தருகின்றது! பார்த்தால் பகீரென்கிறது! பார்த்தால் பச்சென்று மனதிற்குப் பண்பைத்தருகின்றது!

நல்லது மிருக்கின்றது! கெட்டதும் அதோடே கிளைத்துத் தழைக்கின்றது! அபாயம் காண்கின்றது, ஆனந்தம் அடுத்து நிற்

கின்றது! இந்தத்தோட்டத்தின் இயல்பை என்ன வென்று ஏழையேன் சொல்லுவேன்!

அஞ்சிறைய புள்ளினந்தா னருகு நட மாடும்
ஆர்வலர்த மின்மொழிக ளற்புதநீளை நீடும்
விஞ்சுகிளி கொஞ்சுமொழி வீணையினைப் பழிக்கும்
வீறுபுலி போடுமொலி வானகத்தைக் கிழிக்கும்
நஞ்சுநிறை நற்பாம்பு நாலுபுறமோடும்
நளினவன்னம் நாடுமிங்கே மயிலினமு மாடும்
மஞ்சுநிறை முழவொலியுங் குயிற்குரலுந் தோயும்
மந்தியொடு மந்திமரங் கிளையெல்லாம் பாயும்

ஸ்வாமி! நற்கருமமே யுருவெடுத்து வந்தாற்போன்ற நற்றவனே, பெருந்தவனே! நல்லவனே. அருந்தவனே! இந்தக்காட்டினி லென்னைக்காத்த இறையவனே, மறையவனே! இன்னு முள்ள துயரத்தை இக்கணமே யகற்றி என்னைக்காத்த லுன்னுடைய கடன்.

வாளுளின் நெடுந்துயரம்
மனதையெலாம் வருத்தினதால்
ஆளுள னன்பென்னை
அவதியுறப் பண்ணினதால்
கோளுகப் பிடுங்கேனும்
குளிர்ந்தெனக்கே தோன்றிடுமோல்
ஆளுளன் விட்டகன்ற
தையோநான் தாளேனல்!
அன்பாள னென்னைவிட்ட
தநதோநான் தரிக்கேனல்! (1)

முன்னுளின் கொடுந்தொழிலே
முனைந்தென்னை வருத்தினதோ
அந்நாளின் தவப்பயனே
ஐயஉன்னைப் பொருத்தினதோ
என்னுதன் போயினுன்
என்னுலே தாங்குவதோ
பொன்னுத னென்றுநான்
கண்ணுரக் காண்பதுவோ!
புகழ்நாத னென்றுநான்
புளகமுறக் காண்பதுவோ! (2)

ஐயோநான் மெய்தரிக்கேன்
அச்சோநான் செயலறியேன்
பொய்யோநான் சொல்வதெலாம்
புண்ணியனே வகையறியேன்
மையோவெனுங் குழலான்
மாயமாய்ப் போயினனால்
ஐயோநா னென்செய்கேன்
அந்தோநான் சாகேனால்!
அச்சோநா னென்செய்கேன்
அக்கோநான் சாகேனால்! (3)

அன்பொடெனை யாதரித்தான்
அகமகிழக் காதலித்தான்
பொன்முத்தம் பூணளித்தான்
மின்முத்தம் மிகவளித்தான்
என்முத்த மெங்கென்றான்
இசைமுத்த மினிதுடையான்
தன்முற்றம் தாண்டினன்கொல்
தனியாக நின்றனனால்!
தானெங்கோ ஏகினன்கொல்
தனியாக நின்றனனால்! (4)

அங்கொருவன் சென்றனனால்
ஐயநீ தருதல் வேண்டும்
இங்கொருத்தி வருந்தினளால்
ஈசனே காத்தல் வேண்டும்
பங்கொருத்தி நடுங்கின்றேன்
பரமனே யருளல் வேண்டும்
சங்கடம் போக்கவேண்டும்
ஸ்வாமியே சரண மையா"

என்று மனமோஹன மாணிக்கம் பாடிக்கொண்டும், தனது துன்பத்தைச் சொல்லிக்கொண்டும், தன் கணவனை நினைந்து கொண்டும் உட்கார்ந்துகொண் டிருந்தாள்! முனிவாரும் மனமோஹன மாணிக்கத்தின் மஹாசாதுர்யத்தால் மதிமயங்கி, அவருடைய கஷ்டத்தால் மனம் வருந்தி ஏது செய்வதெனத் தோன்றாது, மௌனஞ்சாதித்து சமாதியில் உட்கார்ந்திருப்பதுபோல் சற்று நேரம் அயர்ந்திருந்தார்.

இந்த சமயம் டக் டக், கடக்கடக் என்று தந்தி சமாசாரம் இருந்தாற்போலிருந்து வந்து விட்டது! மனமோஹனமாணிக்கமும் மஹாரிஷியும், ஜகன்மோஹனசிங்காரமும் அதிரூப சுந்தரியும் தந்திவித்தையில் மிகுந்த தேர்ச்சியடைந்து விட்டார்கள்! இருந்தாற்போலிருந்து இந்தவேளை காலையில் தந்திசமாசாரம் வந்த சங்கதி இன்னதெனத்தெரிய வில்லையே, அம்மா மனமோஹன மாணிக்கம், எழுந்திரு! அதென்ன வென்று பார்" என முனிவரர் ஆஜ்ஞாபித்தார். ஆச்சர்யத்தால் விழித்த அழகிய மனமோஹனமாணிக்கம், உடனே எழுந்து தந்திப்பெட்டியண்டைத் தாராளமாய்ப்போய், செய்யவேண்டியதைச்செய்து, சமாசார மென்ன வென்று நிதானித்துப்பார்த்ததில், "இனிமேல் ஒரு நிமிஷமும் தாமதிக்கக்கூடாது. பிரம்மராக்ஷஸன் கல்யாணம் ஒரு வாரத்திலேயே முடித்துவிட வேண்டு மென்று தீர்மானமாய்ச்சொல்லிவிட்டான்! தீபாவளி வரைக்கும் காத்திருக்கவும் ஆகாது என்று திருத்தமாய்ச்சொல்லிவிட்டான்! இன்னும் ஒரு வாரத்தில் கல்யாணம் நடவாது போயிற்றுயின் ஜகன்மோஹன சிங்காரத்தையும் அதிரூபசுந்தரியையும் இரண்டுபேரையும் குண்டுச்சட்டியில் குழம்பு வைத்து விடுகிறதென்று முடிவான பேச்சை மூர்க்கமாய்ச்சொல்லிவிட்டான்! ஆதலால், என்னையும் அதிரூப சுந்தரியையும் காப்பாற்றுவது தங்கள் கருத்தாயின், உடனே ஏற்பாடு செய்யுங்கள்! ஒரு நிமிஷமும் தாமதித்தல் ஆகாது! இல்லாவிட்டால் தெரிவித்து விடுங்கள்! குண்டு சட்டியில் குழம்பாவதை விட குளத்தில் விழுந்து சடத்தைத்தொலைப்பது உத்தமம்! உடனே பதிலுக்கு எதிர் பார்க்கிறேன்." என்று தந்தி சமாசாரம் ஜகன்மோஹன சிங்காரம் அனுப்பினதெனத் தெரிய வந்தது!

இதை யறிந்த ரிஷீஸ்வரருக்கும் மனமோஹனமாணிக்கத்திற்கும் உண்டான துக்கம் இவ்வள வவ்வள வன்று! "கொஞ்சமாவது காலதாமதம் இருக்கிறதே, இதற்குள்ளாக நாம் செய்ய வேண்டிய எல்லா வேலைகளையும் எப்படியாவது முடிக்கலாமே என்று நினைத்திருந்தால் 'ஐந்து நிமிஷத்தில் ஆகாயத்தை முட்டு அல்லாவிடில் கழுத்தை வெட்டிக் கழுகுக்குப் போடுவேன்' என்று அரசன் எவனோ ஆஜ்ஞாபிக்கிறதாமே, அம்மாதிரி இந்தக்கணமே எந்த வேலையும் செய்து முடிக்க வேண்டு மென்று இடிந்து தலைமேல் விழுந்ததே!" என இருவோரும் தேனில் விழுந்த ஈயைப் போல் திகைத்து விழித்தார்கள்!

உடனே, தவமுனிவர், மனமோஹனமாணிக்கத்தைப்பார்த்து, "அம்மா, நாம் காலதாமதம் செய்தலாகாது, நீ மதுரேசன் வேஷம் போட்டுக்கொள்! இப்போதே நாம் புறப்பட்டு, இருண்ட கானகத்தில்வாசஞ்செய்யும் சுருண்ட மயிர் வேடனைக்கண்டு, பிரம்மராக்ஷதனுடைய உளவெல்லாமறிந்து உயிரைப்போக்கப் பிரயத்தனப்படவேண்டும். இல்லாவிட்டால் இத்தனை நாள் பட்ட கஷ்டமும் மெத்தவிருதாவாய்ப் போய்விடும்! ஆனாலும் அதற்கு முன் தந்தி சமாசாரம் ஜகன்மோஹன சிங்காரத்துக்கு அனுப்பி ஜாக்கிரதை சொன்னபிறகே நாம் புறப்படவேண்டும்" என்று கூறினார்.

இவ்வாறு ரிஷீஸ்வரர் சொன்னதும், தந்திச்சமாசாரம் கொடுப்பதற்குச் சிந்தை கொண்டு, மனமோஹனமாணிக்கம் தந்திச்சாமானிடத்தில் வந்து உட்கார்ந்து ஐந்து நிமிஷம் ஆச்சர்யங் கொண்டு யோசிக்கத்தொடங்கினாள்!

"ஆஹா! என்ன அற்புதமான யந்திர விநோதங்கள்! முதலில் ரயில்வண்டியேற்படுத்தி முப்பதுநிமிஷத்தில் முப்பதுமைல் தாண்ட முறைப்படுத்தினார்கள்? எலெக்ட்ரிக் சக்திஎன்கிற மின்சாரசத்தியின் வன்மையால், தந்திசமாசாரங்கள் ஐந்து நிமிஷத்தில் ஆயிரக்கணக்கான மைலுக்கப்பாலும் ஆச்சர்யமாய்ச் செல்ல அமைத்தார்கள்! ஆனால்அப்போது, கால்கள்நாட்டிக் கம்பிகள்பூட்டித் தந்திசமாசாரம் தாவிச்சென்று கொண்டிருந்தது. கால்கள் விழுவதாலும் கம்பிகள் அறுவதாலும் கணக்கற்ற அசந்தர்ப்பங்கள் எல்லையற்று விளைந்து கொண்டிருக்கின்றனவென்று, இப்போது கால் நடாமலும் கம்பியில்லாமலும் எங்கெங்கு சமாசாரம் எப்படியெப்படி சென்று கொண்டிருக்கின்றது! நாம் இப்போது வழக்கத்தால் தந்தி சமாசாரம் என்று சொன்ன போதிலும் தந்தி யில்லாமலே தான் மின் சாரச்சங்கதி,பொன்போல் பறந்து செல்கின்றது! பேச்சைப்பிடித்துப் பெட்டியிலடைத்தார்—போனக்ராப் க்ராமபோன் முதலிய வாத்தியங்களேற்பட்டன! என்ன விந்தை, சீமையில் ஒருவன் பாடினால் வஸிலோனில் அதைக்கேட்க முடிவதும், இன்று பாடிய பாட்டை, பேசிய பேச்சை, இரண்டாயிர வருஷங்களுக்குப் பிறகும் இன்பத்தோடு கேட்டு அன்பு பூண்டிருக்கலாவதும் என்ன அருமையான செயல்கள்! கப்பலிற் போவது போதாதென்று, காற்றிற் பறக்கக் கற்பனைகள் ஏற்பட்டதும், மனதின் வலிவைக்கண்டு பிடித்துக் கணக்கற்ற விநோதங்கள் காசினியிலுண்டாக்க அறிவைச்செலுத்தி

ஆனந்தப்படுவதும், மனிதருடைய அபூர்வசக்தி மாநிலத்தில் எங்கே நிற்குமென்பதைக் காட்டாதுநின்று * கவின் விளக்கின்றன.

இதற்குள்ளாக, "அம்மா, தாமதஞ் செய்யாதே! சீக்கிரம் தந்தி சமாசாரந் தெரிவித்துவிடு" என்றார் ரிஷீஸ்வரர்! "என்ன பதில் தெரிவிக்கிறது?" என்று யோசனை பதிந்த முகத்தோடு, கண்ணை ஒருகணம் இமிட்டாது விழித்து, மனமோஹன மாணிக்கம் மஹா ரிஷியைக் கேட்டாள்.

"அம்மா! பதிலா! என்ன தெரிவிக்கிறது! ஈசனெப்படி விட்டாலும் இப்போது தைரியந்தானே நாம் தப்பாது சொல்லவேண்டுவது! 'ஆகட்டும்! ஒன்றும் அதைரியப்படாதே, சற்றும் மனங்கலங்காதே, நாங்கள் வருவதற்குமுன் அவசரப்படாதே! எப்படியும் உன்னை ஈசனருள்கொண்டு எவ்விதத்திலாயினும் காப்பற்ற ஏதுந்தடையின்று! ஆதலால் அவசரப்படவேண்டாம், தைரியத்தோடிரு' என்று தந்தி சமாசாரம் தைரியத்தோடு தெரிவி! ஆயிற்று நாழிகை! அம்மணி சீக்கிரம் புறப்படுவாய்!" என்று ரிஷீஸ்வரர் அவசரத்தோடு கூறினர்.

உடனே மனமோஹன மாணிக்கம், "இதோ ஆய்விட்டது" என்று சொல்லி கடக், கடக் என்று யந்திரத்திடத்துத் தந்திரஞ் செய்து சுந்தரமாயெழுந்து சொகுசாய்ப் புறப்பட்டு விட்டாள்!

* * *

ரிஷீஸ்வரரும் மனமோஹன மாணிக்கமும் வேடன் தங்கும் காட்டருகில் வேகமாய் வருகிறார்கள்!

கஷ்டமான வழியில் கஷ்டத்தோடு அடிவைத்து, முள்ளைத் தாண்டியும், முன்னும் பின்னும் பார்த்தும், புதரைக்கடந்தும், புலி சிங்கங்களுக்குத் தப்பியும் வெகு கஷ்டத்தோடு வேகமாயும் சென்றுகொண் டிருக்கிறார்கள்!

இதோ! வந்துவிட்டார்கள்! அதோதெரிகிறது ஆனந்தகரமான வேடனுடைய அழகிய குடிசை! செந்நாயும் மரநாயும் சங்கிலிநாயும் பிடுங்குணி நாயும், வீட்டுவாயிலண்டை வீராவேசமாய்க் குலைக்கின்றன, குதிக்கின்றன! கிட்டிப்போகிறவர்கள் மீது எட்டிவிழுந்து எகிறிப்பிடுங்குமென்று எப்படிப்பட்டவர்களுக்கும் கிலி என்னென்ன மாயோ உண்டாய்க்கொண்டிருக்கும்! மீனும் மாமிசமும் ஏனை

* கவின்=அழகு.

தானே என்று அங்கே எங்குபார்த்தாலும் இறைக்கப்பட்டிருக்கின்றன! அவற்றைக்கொக்குகளும் குருவிகளும் கோழிகளும் நாரைகளும் எக்காலத்தும் தின்று ஏப்பம் விட்டுக்கொண்டிருக்கவும், அவலக்ஷணமென்பது தவஞ்செய்து பெருத்து அங்கேதோன்றிச் சிங்காரம் விளக்கிறது என்று சொல்லும்படி, சேறும் தண்ணீரும், இறைச்சியும் புலாலும், சுரைக்கொடிகளும் பூசனிக்கொடிகளும், பாழும் பறைச்சேரியும் ஒன்றோடொன்று சேர்ந்து ஒருமிக்கத் துர்க்கந்தத்தைத் தருமக்கைபோடு தாராளமாய்க் கொடுக்கவும், மனம்பொறுது மஹாரிஷியும் மனமோஹனமாணிக்கமும் மூக்கைப் பிடித்து முன்னே செல்வாராயினர். பின்னிழுத்த காலையும் முன்னிழுத்துவைத்து, பின்னிடைந்தால், ஜகன்மோஹன சிங்காரம் பின்னமடைந்துபோவாளே அப்புறம் என்னசெய்தும் என்ன பிரயோசனம் என்று, அவலக்ஷணத்தையும் சகித்து, மூக்கு அழுகிப்போவதையும் பொறுத்து,

"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரா ரவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயினார்"

என்று மூதுரையாகிய நீதிமொழி ஓதியுள்ள பிரகாரம், முனிவரும் மனமோஹன மாணிக்கமும், தளராத ஊக்கத்துடனும் சலியாத உள்ளத்துடனும் மெள்ள நடந்து குள்ளக் குடிசையண்டை மெள்ளவந்து சேர்ந்தார்கள்!

நாய்கள் குரைத்தன, நச்சுக்குழந்தைகள் ஓல மிட்டன!

"யார் அங்கே?" என்று ராக்ஷதக் குரலைப்போட்டு ராக்ஷத வேடன் திடும்மென வெளிவந்து திடும்மென நின்றனன்!

ராக்ஷத வேடனைப்பார்த்த தீக்ஷை முனிக்கு உள்ளத்தில் சிறிது 'உதைப்பு' நேரிட்டிருந்தபோதிலும், மேலுக்கு அதைக் காட்டாது மெதுவாய்ச் சமாளித்துக்கொண்டு,

"ஸர்வ மங்களானிபவந்து! வேடப்பா, உனக்கு என்றும் உறுதியுண்டாகக்கடவது! வேட்டை யாடுவதில் நாட்டமிருக்கும்போது வேண்டிய மிருகராசிகள் சர்வசுலபமாய் உன்னிடம் சடுதியில் சேரக்கடவது! தேகபலம் உண்டாக, தேகாரோக்யம் உண்டாக, தீவிர புத்தி உண்டாக, தேவதாபக்தி உண்டாக, சர்வ மங்களானிபவந்து!

இந்த அமங்களங்களெல்லாம் இந்தக்கணமே யொழிந்து, மங்கள கரங்களெல்லாம் இங்கிதத்தோடு உன்னிடம் இமைப்பொழுதில் உண்டாகக்கடவது! வேடப்பா! நீ மஹா புத்திமான், நீ வெகு யோக்கியவான், சாத்வீக குணமும் சாந்த சித்தமும் உனக்குச் சதா உண்டாகக்கடவது!" என்றார் மஹாரிஷி!

* "ததாஸ்து!" என்றாள் மனமோஹன மாணிக்கம்!

"உனக்கு நன்மையேதவிர ஒருநாளும் தீமை உண்டாகாதிருக்க!"

"ததாஸ்து!"

"எங்களைப்போன்ற ஏழைகளிடம் இரக்கமே யுண்டாக!"

"ததாஸ்து!"

"சத்தியத்திற்கே நீ சந்ததமும் பாடுபட்டுச் சதானந்தத்தில் மூழ்கியிருக்க!"

"ததாஸ்து!"

"உனக்குக் கோபமே உண்டாகாதிருக்க!"

"ததாஸ்து!"

† "ஆனால், துஷ்ட நிக்ரஹ சிஷ்டபரிபாலனத்திற்குக் கோபம் உண்டாயே தீர!"

"ததாஸ்து!"

"நல்ல காரியத்திற்கு நீ நன்றாக உதவி செய்க!"

"ததாஸ்து!"

"எங்கள் காரியத்திற்கும் இடையூறு செய்யாது முடித்துக் கொடுக்க!"

"ததாஸ்து!"

"நீ நல்லவனாகுக!"

"ததாஸ்து!"

"கெட்டவர்க்குக் கெட்டவனாகுக!"

"ததாஸ்து!

"சுத்தபோஜனமும் அசுத்த நிவாரணமும் சுகமாய் உனக்கு உண்டாக!"

"ததாஸ்து!"

---

* ததாஸ்து = அப்படியே யாகக்கடவது.

† துஷ்டர்களைத் தண்டித்தலும், யோக்கியர்களைக் காப்பாற்றலும்.

குரூரச் செயலும் கோரச்சேர்க்கையும் கோடி கொடுத்தாலும் நாடாதொழிக!"

"ததாஸ்து!"

"நல்லவனாகுக!"

"ததாஸ்து"

"நலமுள்ளவனாகுக!"

"ததாஸ்து!"

"உதவி செய்பவனாகுக!"

"ததாஸ்து!"

இப்படி, முனீஸ்வரர் ஆசி கூறவும்,'ததாஸ்து' என்று மதுரேசன் வேடம் பூண்ட மனமோஹன மாணிக்கம் ஆமோதித்துப் பேசி அன்பின் வடிவாய் நிற்கவும், எதிரேதோன்றிய வேடனுக்கு ஏதுஞ் சொல்லத்தோன்றாது பிரேதம்போல் நின்றான்! அவனுடைய மூர்க்கத்தனமும் முன்கோபமும் ஆதவனைக்கண்ட பனிபோலே ஆறுகாதம் அகன்றோடின! மந்திரத்தால் கட்டப்பட்ட மாயப் பாம்புபோல, கோபமும் துறந்து கொடுமையும் விட்டு, யாது செய்வது ஏது கூறுவது என்று எதுவும் தோன்றாது திகைப்புற்று, எதிரே நின்று இரண்டு நிமிஷம் என்னென்னவோ யோசித்து, வேடன், முனிநாதனை நோக்கி,

"சாமி எங்கிருந்து வாறீங்கோ நீங்க! ரொம்ப ரொம்ப நல்லவுங்கபோலேயிருக்குதே! உங்க பக்கத்திலே அயகா நிக்குறாரே அவர் யார்? எதுக்காக வந்திங்கோ! என்னாலே எதாவது காரியம் ஆவுணும் இண்ணு சொல்லுங்கோ! நானு அதெசெய்து முடிக்கிறத்துக்கு யாதும் தடையில்லே! ஆனா நீங்க இப்பொ எனக்கு உபதேசம் பண்ணிட்டெங்களே, அதுக்கப்புறம் நானு ஒண்ணும் கெட்ட வேலே செய்யமாட்டேன்! மீனு திண்ணமாட்டேன், பேனுகுத்த மாட்டேன்! அவலக்ஷணமாய் வீட்டெ அசிங்கிமிசமும் வச்சுகினு இருக்கமாட்டேன்! நல்லவனா இருப்பேன்! இத்தினை நாளுபோலே கெட்டபேரு எடுக்கமாட்டேன்! வேட்டைகூட ஆடமாட்டேன்! நல்லவனா பூட்டேன், நல்லவனா பூட்டேன்! நீங்க சொல்றவேலே நல்ல வேலேயா தானே இருக்கும்! என்னா ஆவுணும் உங்களுக்கு! ஏது ஆவுணும் உங்களுக்கு சொல்லுங்க சொல்லுங்க" என்று வேடன் வெகு அவசரப்பேச்சால் ஆத்திரங்காட்டிக் கேட்டான்!

"தம்பி வேடப்பா, நாங்கள் சொல்லுகிறபடி நடப்பாயல்லவா?" என்றார் ரிஷீஸ்வரர்

"ஆம்! நல்லாதா யிருந்தால்—"

"அந்த மலையில் இருக்கிறானே அகாதராக்ஷதன்!"

"ஆங் ஆங்—அவன் என்ன?

"அவனைப்பற்றிய காரியந்தான் நாங்கள் வந்தது!"

"அவன் மஹா துன்மார்க்கனாயிற்றே!"

"ஆம் அவன் ஒரு பெண்ணைத் தூக்கிக்கொண்டுவந்து விட்டான்! அவனைக் கொலைசெய்து விட்டாலொழிய அவளைக் கொடுக்க மாட்டான் அவன்!"

"அது கெட்டதொழிலல்லவோ?"

"அவன் கெட்டவனல்லவோ?"

"ஆதலால் அவனைக்கொல்லவோ?"

"அதற்கென்ன நான் சொல்லவோ!"

"கெட்ட செயல் கூடாதென்றீரே?"

"துஷ்ட சம்ஹாரம் நல்லதென்றேனே!"

"ஆனால் சரி ஆனால் சரி!"

"அப்போது ஒத்துக்கொண்டாய் வெகுசரி!"

இதுயார் கூடவந்திருக்கிறாரே?"

"அவர் ராஜ புத்திரன் மதுரேசன் என்பாரே!"

"இவர்கையால் காரியம் ஆகவேண்டும்!"

அதற்குத்தான் அவரைக் கடவுள் அளித்திருக்கவேண்டும்!"

இவ்வாறு முனிபுங்கவர் இசைத்துக்கொண் டிருக்கும்போதே, ‡ தரிசன வேதியால் * தாம்பிரம் பொன்னாகுமென்று தத்துவ சாஸ்திரிகள் சொல்லியிருப்பதுபோல், முனிஸ்ரேஷ்டரது முறையான பேச்சின் வளத்தாலும், தர்மத்தின் பலத்தாலும், வேடராஜன் மாறுபட்டான்! கெட்டகுணம் மாறிற்று, நல்லகுணம் நலமாகத்தோன்றியது! உத்தமனானான், சத்தியனானான்! உறுதியான அவனுடைய உள்ளமாகிற நிலத்தில், உத்தமமென்கிற செடி முளைத்துச் சத்தியமென்கிற பழம்பழுத்தது! கோரம் ஒய்ந்தது கொடுமை மாய்ந்தது! அசுத்தம் பறந்தது, அதர்மம் இறந்தது! நல்லதை ஒழித்துக்கெட்டதைச் சொல்லேனென்றான்! ஆனந்தத்தை விலக்கி ஆபாஸத்தைக்

---

* தாம்பிரம்=செம்பு.

‡ பார்த்தமாத்திரத்தில் உருவம் மாற்றுவது.

கொள்ளேனென்றான்! கொள்ளேன் பிறர்பொருளைக் கொல்லேன் பிறருயிரை, அள்ளேன் பிறருடைமை ஆகேன் கெட்டவனாய் என்று ஒரு கணத்தில் அவன் மனம் உத்தமவழிப்பட்டது! பேச்சும் நாணயமடைந்தது, செயலும் நல்வழிப்பட்டது! காட்டு நிலத்தில், கண்டிராதபூ, சொல்லமுடியாத மணத்துடன், எல்லையில்லாத இன்பந் தந்து, எதிர்பாராத வேளையில், எழுந்து மலர்ந்த ஆச்சர்யம் எவரால் சொல்லத் தரம்!

இவ்வாறு உத்தமனான இணையில்லாத வேடனிடம், எல்லாச் சமாசாரத்தையும் எடுத்திறைத்தார் முனிபுங்கவர்! அதன் மீது வேடன் ஆலோசனைசெய்து, "ஸ்வாமி, அந்த ராக்ஷதனும் நானும் அன்னியோன்னிய சினேகிதர்களாயிருந்தவர்கள்! எங்களுக்குள் விரோதம் நேரிட்டு, எப்படியாயினும் அவனை எமனுலகத்திற்கு அனுப்பவேண்டுமென்று எண்ணிக்கொண்டிருந்தேன்! தங்கள் திவ்யதேஜஸைப் பார்த்தது முதல், தங்கள் ஆசீர்வாதத்தை நான் அடைந்தது முதல், பேச்சும் ஒழுங்கடைந்தது, கெட்ட எண்ணங்களும் கேடுகெட்டு நாடு விட்டு நாற் காதம் ஓடிவிட்டன! இப்பொழுது தங்கள் காரியத்திற்காகவும் தர்மத்தை நிலை நிறுத்துவதற்காகவும் தலையிடுகிறேனேயொழிய வேறில்லை!" என்று கூறினான்.

இந்தப்படி வேடன் சொன்னமொழிகளை, வீணையின் நாதம் போல், ஆனந்த நாதத்துடன் கேட்ட அருந்தவ முனிவர்,

"அப்பா! வேடராஜாவே! நீ சொன்னது மிகவும் சரிதான்! எவ்வழியானாலும் நீ நல்வழிப்பட்டது என்னுடைய மனதிற்கு இனியில்லாத இன்பத்தைத் தருகின்றது! ஆனந்தம் பொங்குகின்றது, ரோமங்கள் சிலிர்க்கின்றன! ஒன்பதாயிரம் வருஷம் ஒருமிக்க நின்று மூச்சைப் பிடித்துப் பேச்சையொடுக்கி, காலைத்தூக்கிக் கால்மேல் போட்டு, கையைத்தூக்கி வானத்தில் நீட்டி, அரஹரசம்போ அரிஹரி கிருஷ்ணா, என்று கண்ணை விழித்து, ஏறிட்டு வானத்தை வீறிட்டுப்பார்த்து, எங்கே கோபம் எதிர்ப்பட்டார்க்கு சாபம் என்று தவஞ்செய்து தடுமாறிப்போவதில் என்ன பலன்? அப்படி ஒருவன் அவதிப்பட்டு, ஒன்பதாயிரம் வருஷம் ஓரே மூச்சாய்த் தவஞ்செய்து உருமாறிப்போவதைவிட ஒரு ஆத்துமாவை உண்மை நெறியில் உய்யச்செய்வது உத்தமமான செயலாகும்! அதுவே தவப்பலன், அதுவே தத்துவப்பழம், அதுவே தங்க ஒளி! இதுதெரியா இருடிகள் சிலபேர், 'விற்' என்று பறந்து, விஸ்வாமித்ர ரிஷியாய்த்

தோன்றி, தவத்தின் பலனுய்க் கோபத்தையடைந்து, பேசினுல், 'பிடிசாபம்', சொன்னுல், 'எரி சாம்பலாய்,' என்று அனர்த்தம் விளைப்பது அருந்தவமாகாது! ஏ! வேட ராஜனே, நீ இப்போது நிதானமாய் வந்து, நீசத்தனத்தைத் துறந்து நியாய வழியில் நடக்க நேரிட்டதைப் பற்றி எனக்குண்டான சந்தோஷம் ஈசனுக்கே தெரியும்! என் தவம் இன்றுதான் பலித்தது! என் கடவுள் இன்றுதான் கண் பார்த்தார்." என்று மஹாரிஷி ஒரு பிரசங்கம் செய்து உள்ளத்தை உறுதியாக்கினுர்.

இதையெல்லாம் காது கொடுத்துக் கவனமாய்க்கேட்டிருந்த வேடன், போத குருவின் பாதமலர் பணிந்து,

"நாதா, குருநாதா, ஏழையைக்காத்து நல்வழிதிருப்பிய நற்றவராகிய தங்களுக்கு நானென்ன கைம்மாறு செய்யப்போகின்றேன்! நாழிகையாக நாழிகையாக, வேலேயும் கஷ்டமாகும்! இப்பொழுதே நாம் செய்யவேண்டியதைத் தப்பில்லாமல் செய்து தையலே விடுவிக்க வேண்டும்! அந்த ராக்ஷதனே வெல்லுதற்கு யாராலுமாகாது! இல்லாவிட்டால் எப்போதோ அவனே எமனுலகிற் கனுப்பியிருப்பேன்! ஆனுலும் அவனேக்கொல்ல ஒருவழி மாத்திரம் உளத்திற் படுகின்றது! அதனேச்சற்று அமைதியோடு கேளுங்கள்! அந்த ராக்ஷதனுக்கு அதிக பலமிருந்தபோதிலும் ஒரு விஷயத்தில் மாத்திரம் உளக்கலக்கமுண்டு! அதாவது, ஷாப்பின் சாராயம் அகப்பட்டால், கோப்பை கோப்பையாய் ஊற்றி அவன் குடித்துவிடுவான்! அது விஷயத்தில் அவனுக்கு உண்டாயிருக்கும் அவாவை நான் அவ்வள விவ்வளவென்று சொல்ல முடியாது! அவனிடமிருக்கும் வேலேக்காரர்களில், ஆருத்திரா தரிசன மென்கிற என்னேப்போலவே, அவனிடத்தில் தீர்க்கக்ஷாத்திரம் கொண்ட போக்கிரிப்பையனெருவன் வேலேக்காரனுக அமர்ந்து வேலேதீர்த்து விடவேண்டுமென்று நேரம்பார்த்துக் கொண்டிருக்கிறுன்! அவன் என்னிடம் வந்து அவனே ராக்ஷதன் அடித்ததும் உதைத்ததும் அவன் மனேவியைத் தூக்கிக்கொண்டு போய் வேறெந்த மலேயிலோ வைத்துக்கொண்டு தனக்குவாதனே விளேத்ததும் ராமாயணமாய்ச் சொல்லி மொரோவென்று மூக்காலழுதுகொண் டிருக்கிறுன்! அது சமாசாரம் ராக்ஷதனுக்குத்தெரியாது. ஏனென்றுல் அந்த வேலேக்காரன் அவற்றையெல்லாம் மனதில்வைத்துக் கொள்ளாதவன்போல் அகமகிழ்ந்து முகமலர்ந்து ஆனந்தமாய் வேஷங்காட்டி அற்புதமாய் வேலேசெய்துகொண்

டிருப்பான்! பிரம்மராக்ஷதனுக்கு கள்ளு மாத்திரம் கணக்கில்லாமல் அகப்படுமேயொழிய, ஷாப்பில் விற்கும் பிராந்தி, விஸ்கி, முதலிய உயர்ந்த சாராயங்கள் சுலபத்தில் அகப்படுகிறதில்லை. தப்பித்தவறி ஒரு நாளைக்கு புட்டி புட்டியாய் அகப்பட்டு விட்டால், அத்தனை புட்டிகளையும் அரைக்கணத்தில் குடித்து விட்டுத் தன்னை மறந்து ஆனந்தத் தாண்டவ மாடிக்கொண்டிருப்பான்! இதைக் கவனித்தவர்கள் வேறு எவருமில்லை! அந்த சமயங்களில் சுந்தரப்பெண்கள் யாராவது சொகுசாய் எதிரேவந்து நின்றால், காலில் விழுவான் கும்பிடுவான், குளத்தில் விழச்சொன்னாலும் கொண்டாட்டம் போட்டுத் திண்டாட்டமாடி விழுந்து இறக்க வீராவேசமாய்ப்போவான்! கத்தியைக் கையில் கொடுத்துத் தலையைவாங்கு என்று மயக்கதியக்கத்தில் மதிகலங்கி நிற்பான்!

அந்தமாதிரி ஷாப்பு சாராயம் புட்டி புட்டியாய் நாளைக்குள்ளாக சீக்கிரம் நான் சேகரித்து விடுகிறேன்! எதிரே நின்று அவனை மயக்கி கத்தியை வாங்கிக் கழுத்தையரிய உத்தமியான இந்த மாதரசியே உறுதியாகத் துணியவேண்டும்!" என்று ஆருத்திராதரிசனம் ஆச்சரியப்படும்படி சொன்னான்!

"யார் யார் இந்த மாதரசியா?" என்றார் தவமுனிவர்!

"ஆம் ஆம்!" என்றான் ஆருத்திரா தரிசனம்!

"இவர் மதுரேசனல்லவோ! மாதரசியென்கிறாயே!" என்றார் ரிஷீஸ்வரர்!

விழித்துத்திகைத்து வியர்த்து விதிர் விதிர்த்து,

"இதேதடா! பிள்ளையார் பிடிக்கப்போய்க் குரங்காய் முடிந்ததே!" என்று ஒன்றுஞ் சொல்லமுடியாது ஒரு நாழிகை பரியந்தம் திப்பிரமபிடித்த மனமோஹன மாணிக்கம் திடுக்கிட்ட வண்ணம் மரத்திற் சாய்ந்து மௌனமாயிருந்தாள்!

"ஸ்வாமி என்னை மன்னிக்கவேண்டும்! எனக்குத்தெரியும் இந்தம்மாளை! கொங்கு தேசத் தரசனிடம் வேட்டைத் தொழிலுக்காகச் சில நாள் வேலைசெய்து கொண்டிருந்தவன் நான்! அப்போது இந்தம்மாளை உப்பரிகைமேல் பார்த்திருக்கிறேன்! என்னமோ காலகதி இப்படி வரும்படி நேர்ந்ததுபோலிருக்கிறது!" என்று ஆருத்திரா தரிசனம் சொல்லவே, அதற்கப்புறம் எதையும் ஒளித்தலாகாது என்று அருந்தவமுனிவர் நடந்த சமாசாரங்களெல்லாவற்றையும் ஆதியோடந்தமாகத் தெரிவித்தனர்.

34

ஆருத்திராதரிசனமாகிற வேடுவன் அன்று தங்குவதற்கு அவர்களுக்குவேண்டிய ஏற்பாடுகளெல்லாவற்றையுஞ் செய்து, தான் முன் சொன்னபடி ராக்ஷதனைக்கொன்று ஜகன்மோஹன சிங்காரத்தைச் சிறை மீட்டுவரச் சித்தஞ்செய்து கொண்டிருந்தான்.

## இருபத்தெட்டாவது அத்தியாயம்.

கேரள அரசன்! கோர்ட்டு நடக்கை!
தளகர்த்தர்தடபிடல்! ஆச்சர்யமான சந்திப்பு!

சூர தீரர்கள் சுந்தரமாய்க் கட்டியங்கூறச் சொகுஸாய் வந்து கொலுவில் உட்கார்ந்தான், கேரள தேசத்தின் கீர்த்தியுற்ற அரசன்! உணர்வுள்ள மந்திரி ஓடிவந்து, வெகு அவசரமாய் ஒருகடிதத்தை அரசனுக்குக் காட்டினன்.

"மந்திரீ, கடிதம் யாரிடத்திலிருந்து வந்தது?" என்று அரசன் கேட்டான்!

"மஹாராஜா, கடிதம் அன்று; தந்தி" என மந்திரி கூறினன்.

"ஹா! தந்தியா? யாரிடமிருந்து?" எனச்சிறிது கலக்கத்தோடும் சிறிது அவசரத்தோடும் அரசன் கேட்டனன்.

"தவமுனிவரிடமிருந்து!" என்று மந்திரி கூறினன்.

"என்ன விசேஷம் ?"

"ஒரு பெரிய சைன்யம் வேண்டுமாம்!"

"ஸ்வாமிகட்குச் சைன்யமேதுக்கு! ஆனாலும் பெரிய மஹான் அவர்! ஏதோ ஒரு காரணத்தை முன்னிட்டுத்தான் அவர் கேட்டிருக்கக் கூடும்!" என்று அரசன் சொல்லுவதற்குள் மந்திரி,

"மஹாராஜா, எல்லா விவரங்களையும் மஹாரிஷி தெரிவித்திருக்கிறரே தவிர தெரிவிக்காமற் போகவில்லை. ஆனால் அவைகளைத் தங்களிடம் அந்தரங்கத்தில் சொல்லவேண்டியிருக்கிறது" என்று விண்ணப்பித்தான்.

அதன்மீது அரசர் பிரான், கொலுவை விட்டெழுந்து தனியே ஓரறைக்குட்சென்று, எல்லாச் சங்கதிகளையும் இயல்பா யெடுத்து இறைவனுக்குக் கூறவும், அரசன் யோசித்து அப்படியேயாகுக என்று அமைச்சனுக்குக் கட்டளையிட்டனன்!

மந்திரி சென்றான், அரசன் வந்தான், கொலுவில் உட்கார்ந்தான், குழப்பம் நேரிட்டிருக்கிறது! யாதெனப்பார்த்தான், ஏதுந் தெரியவில்லை! ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கிறார்கள், விழிக்கிறார்கள், திகைக்கிறார்கள்! முன்னே செல்லுகிறார்கள், ஏதோ சொல்

லுகிறார்கள், எதற்காகவோ பதை பதைக்கிறார்கள் துடிதுடிக்கிறார்கள்! வெளியில் வந்தாரிரண்டொருவர்! உள்ள குழப்பத்தாலேயே வெளியில் வரப்பயந்து உள்ளேயே நின்று உளங்கலங்குகின்றார் சில்லோர்!

கோட்டை வெளியில் கொடிகள் சிகப்பு நிறமுடையவை அங்கு மிங்கும் அழகாய்ப் பறக்கின்றன! தளகர்த்தர் ரணகர்த்தர், சேனைத்தலைவர் ஆனைத்தலைவர், நிற்பதும் நடப்பதும் குனிவதும் நிமிர்வதும், சைகைகள் காட்டிச் சாடைகள் செய்வதும், கையைக் காட்டுவதும் தலையையாட்டுவதும் கொடிகளை நீட்டுவதும், ஆடுவதும் ஓடுவதுமாக 'அமர்க்கள' மென்பதுபோலேயே அமர்க்களமாயிருக்கின்றது! அரசனுக்கும் ஒன்றுந் தெரியவில்லை யாருக்கும் ஒன்றுந்தெரியவில்லை! இப்படி விழித்துக்கொண் டிருக்கும்போதே இரண்டுபேர் சிகப்புக்கொடி பிடித்துவர, இணையற்ற தளகர்த்தன் * இறைவன் முன்னேவந்து இணையடி பணிந்தனன்!

"என்ன! ஏது! சமாசாரமென்ன? சங்கதியென்ன?" என்றான் அரசன்.

"மஹாராஜா! சிலபேர் நம்ராஜ்யத்தைக் கைவசப்படுத்த, மாறுவேடம் பூண்டு தாறுமாறாய்த்திரிந்து ஜாடைகண்டு ஜரூராய்ச்செல்ல வந்திருக்கிறார்களென்று வதந்தி பரவிற்று! அதனால் ராணுவ ஆயத்தங்களை அட்டியில்லாமலே செய்துகொண்டு தங்களிடம் சமாசாரத்தைத் தெரிவிக்க தைரியத்தோடே வந்தேன்!" என்று தளகர்த்தன் இரைக்க இரைக்கப் பதில் கூறினான்.

"ஹா! நம் ராஜ்யத்தைக் கைப்பற்ற †'ராஸ்கல்' எவன் வருகிறவன்! எவரெவர்கள் மீது சந்தேகம் ஏற்பட்டிருக்கின்றதோ அவர்களையெல்லாம் பிடித்து அழைத்துக்கொண்டுவா! வராவிட்டால் முன்கட்டு பின்கட்டு கட்டி முன்னே பிடித்துவா!" என்று அரசன் ஆஜ்ஞாபித்தான்!

"அப்படியே!" என்று அவசரமாய்த் தளகர்த்தன் சென்றனன்!

ஜனங்களுக்கு இப்போது ஜன்மித்த ஆச்சரியந்தனக்கு அளவே சொல்லமுடியாது! யாதொரு காரணமுமில்லாமல் ஏதொரு எச்

---

* **இறைவன் = அரசன்.**

† **ராஸ்கல் = ஓர் ஆங்கில வசைமொழி.**

சரிக்கையு மில்லாமல், எதிரிகள் வருவதற்கு ஏற்பட்ட காரணங்கள் எவை என்று ஒவ்வொருவர் மனத்திலும் ஓயாக் கவலையும் தீரா ஆச்சரியமும் நேராய் விளைந்து நிலைவைவருத்தின! குடிகளுக்குக் கவலை ஒருபங்கென்றால், கொற்றவனுக்கு வருத்தம் கோடிபங்கன்று நேரிட்டிருக்கும்! ஒன்றுஞ் சொல்லமுடியாது, உணர்வு கலங்கி நினைவு மறந்து, நெடுந்தூரம் யோசித்து, நிமிஷநேரத்தை நெடு நேரமாகப் பாவித்து, அரசன் சிம்மாதனத்திலே சும்மா உட்கார்ந்திருந்தான்!

ஆயிற்று! ஹாஹூ அதோ இதோ என்று கலக்கமும் குழப்பமும் மறுபடியும் பொங்கின! பொங்கின ததும்பின! 'புதியன கண்டபோது விடுவரோ புதுமை பார்ப்பார்' என்று கம்பநாடர் கூறியநற்கிணங்க, திகிலோடு திடும்பிரவேசமும், எதிர்பாராதது எதிரே வருவதும், கஷ்டங் கொடுப்பதானாலும், ஆச்சர்யத்தோடு அகமகிழ்ச்சி தருவதல்லவா? ஆதலால் அங்கிருந்தோ ரொவ்வொருவரும் எல்லாருக்கும் மேல் அரசனும் சொல்லமுடியாத ஆச்சரியத்தை வெல்லமுடியாது விழித்தார்கள்!

வந்தது சிகப்புக்கொடி! கத்தியை யுருவிய சிப்பாய்கள் பத்துப்பெயர் முன்னேயும் பத்துப்பெயர் பின்னேயும் பாராகொடுத்து வர, நாலுபெயர் ஒவ்வொருவரையும் நன்றாகப்பிடித்துக்கொண்டு, மூன்றுபெயரை அரசனுக்கு முன்னாகக் கொடுவந்தார்கள்! கொடுவந்தார்கள் கோரமாயுலுக்கிக் கோபமாய் நிறுத்தினார்கள்!

அரசன் சிறிதுநேரம் அவர்களை யுற்றுப்பார்த்து, அவர்கள் உளவு காணவந்த அரசகுமாரர்களென்று * அகத்தில் தீர்மானமாயறிந்து, அவர்களை நோக்கிச் சொல்வானாயினான்:

“மைந்தர்களே! நீங்களேன் இவ்விடம் வந்தீர்கள்? அழகைப் படைத்து அறிவைப்பெற்று நல்லவழியில் நடப்பதை விட்டு, ஆகாதவழியில் காலைவைத்து ஆபத்துக்குள்ளாயினமை அருவருக்கத்தக்கதாயிருக்கிறது! யாராயினும் சரி, தகாதவழியாய் வந்து ஊருக்குள் நுழைந்து உளவு கண்டுபோக வருவாராயின், அவர்களைச் சிறைச்சாலையில் அப்பொழுதே பிடித்துவைக்கவேண்டுமென்றும், அதற்கு மேலும் அவர்கள் சந்தேகம் வரும்படி நடப்பாராயின், பீரங்கி வாயில்வைத்துப் பிராணனை வாங்கிவிட வேண்டுமென்றும் எங்கள் சட்டம் ஏற்படுத்தியிருக்கின்றது!”

---

* அகம் = மணம்.

இவ்வாறு அரசன் இயம்பும்போது, அங்கிருந்தோர் அனைவரும் வாயைத்திறந்து யாதொன்றும் பேசிலர்! கைதிகளாகிய மூவரும் கண்ணிய அரசன் தன் * கழலிணை பணிந்து,

"பெருமானே, நாங்கள் வியாபார விஷயமாய் நானா தேசங்களிலும் சஞ்சரித்து வருகின்றோமே தவிர, ராஜகாரியத்தைப்பற்றி யாதொன்றுஞ் செய்ய வரவில்லை! எந்த காரணத்தாலே இந்த வீரர்களுக்குச் சந்தேகம் வந்ததோ ஸ்வாமிக்கே தெரியும்!" என்று மிக்க வணக்கத்தோடுகூறித் திக்குநோக்கித் தெண்டன் சமர்ப்பித்தார்கள்.

இதுகேட்ட தளகர்த்தன் இயம்புவான்: "எம்மைக்காக்கும் எந்தையீர்! இவர்களைப்பார்த்தால் இராஜ குமாரர்களென்று கூற முடியுமேயன்றி, மற்றப்பேச்செல்லாம் வெற்றுப் பேச்சாயே முடியும்! அரசகுமாரர்கள் அவனி சுற்றி ஆச்சர்யம் பார்க்கவேண்டியதாயின், தக்க ஏற்பாடுசெய்து மிக்க கௌரவத்தோடு வந்துபோவதைவிட்டு வீணான சந்தேகத்திற்கும் விருதாவான கஷ்டங்களுக்கும் ஆளாக நின்று அவதியேன் படவேண்டும்! மஹாராஜா, தங்கள் நகரத்தில், தாகத்திற்காக இன்று காலை இவர்கள் பட்டபாடு ஈஸ்வரனுக்குத் தான் தெரியும்! காபியென்று நாலுதெரு சுற்றினார்கள், டீயென்று ஐந்து வீதி அடுத்து வலம் வந்தார்கள்! ஸோடா, லெமனேட் கிடைக்காமல் வாடி வதங்கி ஓடியலைந்தார்கள்! கடைசியாக ஒரு கடைகெட்ட கடையண்டைவந்து, சாக்கடைத் தண்ணீருக்கும் சங்கடப்பட்டுப்போன மூத்திரச் சோடாவுக்கு முக்கால் மணி நேரம் காத்து, செத்து சுண்ணும்பாய், இவ்வளவு கஷ்டம் ஏன் படவேண்டும்? அரசிளங்குமாரர்கள் வந்தால், அரசருக்கு முன்னாடி சமாசாரம் முறையாய்த் தெரிவித்தாராயின், ஆனையோடும் சேனையோடும் படைகளோடும் பரிஜனத்தோடும் எதிர்சென்றழைத்து 'இனியில்லாத' மரியாதைசெய்ய எத்தனையோ பெயர் காத்துக்கொண்டிருக்கிறோம். அதை யெல்லாம் விட்டு, அனர்த்த வழியைத் தொடர்ந்ததே, இவர்கள், உளவு கண்டுபிடித்து ஊறு செய்யவந்தவர்களென்பதை நன்கு புலப்படுத்தும். ஆதலால், மஹாராஜா, இவர்கள் மீது யாதொரு இரக்கமும் காட்டாது சிறைச்சாலையிலடைத்து விடுவதே சிறந்த காரியம்!" என்று கூறினான்.

இந்த சமயம் மந்திரி யொருவன் மஹாமுடுக்கோடெழுந்து "மஹாராஜா, இப்பொழுதே பாருங்கள் இவர்கள் விழிக்கிறதும்,

* கழலிணை—வீரகண்டையணிந்த இருபாதங்கள்.

இவர்கள் திகைக்கிறதும்! எனக்கு வாஸ்தவமாய் ஏற்பட்டு விட்டது சந்தேகம்! தளகர்த்தன் சொன்ன மாதிரி தண்டனை செய்து விடுவதே தருமான காரியம்!" என்றான்.

அரசனும் சரி யென்று ஆக்ஞாபித்து, "திங்கட்கிழமை கோர்ட்டில் திருத்தமாய் விசாரணை தீரும் வரைக்கும் இம்மூவரையும் சிறைச்சாலையில் வைத்துச் செம்மையாய்க் காத்துக்கொண்டிருங்கள்! இவர்கள் யாரோ எங்கிருந்து வந்தார்களோ எல்லா விவரமும் ஏற்படு மப்போது!" என்று கூறினன்!

அப்படியே யாகட்டுமென்று, கைதிகளான மூவரையும் காபந்தாய்ப்பிடித்துச்சென்றார்கள், காவலாளர்கள்!

* * *

அதோ தெரிகிறதே அது தான் கோர்ட்டு! அழகான தோட்டத்தில் அலங்காரமாயமைத்த சிங்கார பங்களாவே சிறப்பான நியாயஸ்தலம்! அங்கே நூற்றுக்கணக்கான ஜனங்கள் ஊற்றுச் சுரப்பாய் ஓடிக்கொண்டிருக்கிறார்கள்! மணியோ காலை ஒன்பது தான் ஆனது! ஒன்பது மணிக்கே ஊர்க்கோலமாயிருந்தால் நியாயாதிபதி வருகிற பதினொரு மணிக்கு நீச்சு நிலையில்லாமல் தானே பேச்சுப்பெருத்துப் பெருமிதமாயிருக்கும்! பெயர் நியாயஸ்தலமேயொழிய, அங்கே கணக்கற்ற அநியாய வர்த்தர்களும், ஆகாஸப்புளுகர்களும், தகல்பாஜித்தம்பிரான்களும், தறிதலைக்கழுதைகளும் சுற்றிவந்து சுழல் செய்யும் ஸ்தானமாக மெத்த அநியாயம் பெருத்து அத்தனையும் புழுத்த அத்திப்பழம்போலே அவ்விடம் விளங்கிற்று.

அங்கே, இப்போது, அண்டப்புளுகனொருவன், அவன் தலையைத்தட்டி ஆறு பையும், இவன் பையைத்தட்டி எட்டு பையும் சம்பாதித்து, எதிரே விளங்கும் அழுமூஞ்சிக் காபிஹோட்டலில் அரை கப் * காபியும் அரை தொன்னை உப்புமாவும் சாப்பிட்டு, ஆறுபைக்குக்கடன் அவனிடம் சொல்லி விட்டு, வாயைத்துடைத்து மீசையை முறுக்கி, ஏமாந்த சோணகிரி எவனகப்படுவானோ வென்று எப்பக்கமும் பார்த்துக்கொண்டு சற்று நேரம் நின்றான்! அந்தச் சமயம் ஆகாஸப்புளுகன் அங்கே ஜரூராய் எதிர்ப்பட்டு, ஹா ஹா என்று ஐந்து நிமிஷம் சிரித்து, "ஹல்லோ அண்டப்புளுகரே! ஏது ப்ரதர் இவ்வளவு காலையில் தப்புப்பத்திரங்களை யெல்லாம் கக்கத்தில் வைத்துக்கொண்டு மிக்க ஜாக்கிரதையாய் நிற்க நேரிட்டது

* கப்=சொம்பு.

இன்று? காபிஹோட்டல் சென்று கப் காபியாவது சாப்பிட்டீர்களா, அரையணவாவது அந்த * ப்ராமினுக்குக் கடன் சொல்லி விட்டீர்களா?" என்று மீசையை முறுக்கிக்கொண்டு பேச ஆரம்பித்தார்!

இதற்குள்ளாக, அண்டப்புளுகர், ஹோ ஹோ என்று கூவி "அல்லோ, மைடியர் ஆகாசப்புளுகரே! நான் சீக்கிரம் வந்து விட்டேனென்று சொல்லி, தாம் என்றுமில்லாத துரிதத்தோடு இன்று வந்து சேர்ந்தது! அரை கப் காபிதான் சாப்பிட்டேன், அரை தொன்னை உப்புமா சாப்பிட்டு ஐந்து நிமிஷம் தான் ஆனது! இதற்குள்ளாக எங்குமில்லாதபசி எப்படியோ வந்து விட்டது! டர்டி காபியும் டாமேஜ் உப்புமாவும் வொர்த்லெஸ் பிராமனும்! காபிஹோடல்கள், பிரதர், முன்போல் இப்போது முறையாக நடப்பதில்லை! † டர்டி திங்க்ஸ்! ஐ ஆம் நாட் பே எ ஸிங்கில்பை டுதட் ப்ளடிமான்! ஆறுபைகடனென்று அவன் சொன்னாலும் அறுபது கோர்ட்டிற்குப் போய் அரைக்காசும் கடனில்லையென்று ஆணையிட்டு வரமாட்டேனு! ஹா என்னிடமா அந்த ஹம்பக் நடக்கும்!" என்று அரைமணி நேரம் பேசினர்.

"தடிஸ்குட் தடிஸ்குட்! இந்த பெல்லோஸுக்கெல்லாம் அப்படித்தான் செய்யவேண்டும்! ஒருவேளை நாளைக்குக் கொடுக்கமாட்டேனென்றால் என்ன செய்கிறது!" என்று ஆகாசப்புளுகர் சற்று நிதானித்துப்பேசினர்.

"வெல், ப்ரதர், ஆகாசப்புளுகரே, தறிதலைப்ரதரைவிட்டு கடையைப் பிய்த்துக் காக்கைக்குப்போட்டுவிடச் சொல்கிறது! க்ரிமினல் கேஸ்வந்தால் தலை மறைந்து விடுகிறது, சிவில்கேஸ் வந்தால் பொய் சொல்லிவிடுகிறது! தப்பித்தவறி அகப்பட்டுக்கொண்டால் ஜெயிலுக்குப்போய் வந்து விடுகிறது! நம் ‡ ப்ரொபெஷன் நம்மை விட்டு எப்போதும் போகாது!" என்று அண்டப்புளுகர் அட்டகாசஞ் செய்துகொண் டிருந்தார்.

"அதிருக்கட்டும் ப்ரதர்! அதோ வருகிறார்கள் பாருங்கள், நாட்டுப்புறத்தான் ஒருவன், வரட்டி வண்டிக்காரன் ஒருவன், இளிச்ச

---

* ப்ராமின் = பிராமணன்.

† உபயோகமில்லாத வஸ்துக்கள். அந்த பையனுக்கு ஒருபைகூட கொடுக்கமாட்டேன்.

‡ வேலை.

வாயான் ஒருவன், புளியோரை ஒன்று, பெருந்திண்டி ஒன்று! ஹா ஹா! நமக்கு நல்லகோஸ் இருக்கிறது! அதோ பாருங்கள், கூப்பிடு தூரத்தில் வருகிறார்கள்! நன்றாய்ப் பாருங்கள், ப்ரதர், நன்றாய்ப் பாருங்கள்" என்று ஆகாஸப்புளுகர் மெத்த ஆவேஸத்தோடு சொன்னார்.

"ஆமாம்! ப்ரதர்! பேஷ்! அங்கே வரும்போதே அழகாய்த்தெரிந்து, பேரும்வைத்து நாமகரணமும் செய்து விட்டீர்களே தாங்கள்! அனுபவம் தங்களுக்கு அதிகமாயில்லாவிடினும், வாசனை கண்டு பிடிப்பதில் மோப்பம் அதிகம்! அவர்கள் யாதோ ஓர் கேஸைப்பற்றித்தான் வருகிறார்கள்போல் காண்கிறது! மிகவும் அவஸ்தைப்பட்டிருக்கிறார்கள் போலும் தோன்றுகின்றது! நல்லது, இந்தக் கேஸுக்கு நாமிருவரும் இருந்து வந்த காசுக்கு வட்டமில்லையென்று அகப்பட்ட மட்டிலும் அடித்துக்கொண்டுபோக வேண்டியது!" என்று அண்டப்புளுகர் அதிகமாய்ப் பிரசங்கஞ் செய்தார்!

"கையிலிருப்பதைக் காகம் அடிப்பதுபோல்!" என்றார் ஆகாஸப்புளுகர்!

"ஆட்டுக்கறியைக் கெத்தை பிடுங்குவதுபோல்!" என்றார் அண்டப்புளுகர்!

இந்த சமயத்தில் வந்தார்கள் ஐவரும்! சோறில்லாமல், கஞ்சியில்லாமல், வாடி வதங்கி நாகரீகம்போய் நாட்டுப்புறத்தான்போலாய் விட்ட ஆடம்பராசாரியும், எல்லாமிழந்து இளித்துத்தோன்றிய இங்கித முதலியாரும், அலுப்பினால் வருந்தி, இங்கிதமுதலியார் 'டோஸினால்' எதுவும் சொல்லமுடியாது ஏக்கங்கொண்டு, உள்ளகாசும் ஓடிப்போகுமோ என்று ஒன்பது சுற்றுத்தலைகுட்டையின் உள்ளே முடிந்து உறுதிகொண்டு, உயிர்போனாலும் காசைக்கொடேன், என்று ஒன்பது மணங்குத் தலைகுட்டையை ஒரே பாரமாய்த்தாங்கி, ஆனாலுங்கொள்ளை! வரட்டி வண்டிக்காரனைப்போல் தோன்றிய அற்புத முதலியாரும், ஒருமாதமாய்ச் சாப்பிடாது அதிவாசமாயிருந்த போதிலும், முன்சாப்பிட்ட உணவு இன்னும் கரையாது உடம்பில் தங்கி உக்ராணமாயிருப்பது ஒரு சிறிதும் போகாது, புளியோரை போலொரு ஐயங்காரும், பெருந்திண்டியென்று சொல்லும்படி மற்றொரு ஐயங்காரும்—ஆக எல்லோரும் அங்கேவந்து நாழிகையிருப்பதால் நாழிகை நேரமாயினும் உட்கார்ந்திருக்கலாமென்று துணியைவிரித்துத் தரையைப் பார்த்தார்கள்!

இந்த சமயம், சொக்குப்பொடிக்காரர் பக்குவமாய்வந்து, ஜாலஞ்செய்து கோலஞ்செய்வது என்று சொல்வார்களே, அதைப்போல், ஆகாஸப்புளுகரும் அண்டப்புளுகரும் நீண்ட கும்பிடை நெடுகப்போட்டார்கள்!

"ஐயா, தாங்கள் எந்த ஊரோ, எந்த நாடோ, என்ன வேலையோ, ஏது சமாசாரமோ?" என்று ஆகாஸப்புளுகரும் அண்டப்புளுகரும் ஆஷாடபூதிப்பேச்சை அழகாய்ப் பேசினார்கள்.

"ஐயா, நாங்கள் தொலை தூரத்தினின்றும் வருகிறோம்! இங்கு எங்களைப்பற்றிய ஒரு கேஸ் இன்று விசாரணைக்கு வருகிறது! அதைப்பற்றி இங்குவந்தோம். அனேகநாளாக வெவ்வேறு அசந்தர்ப்பங்களால் நாங்கள் அவஸ்தைப்பட்டது அனேகம் உண்டு, அஃது எவருக்குந் தெரியாது, ஐயனுக்குத்தான் தெரியும்! அதுபற்றி இளைப்புதீர அரைமணி சாவகாசமாவது இங்கு உட்கார்ந்து எழுந்துபோகலாமென்று சுற்றிப்பார்த்தோமே தவிர மற்றப்படியொன்றுமில்லை" என்று ஐவரும் சொல்லி அஸ் உஸ் என்று ஆயாசந்தீர அவ்விடத்தில் உட்கார்ந்தார்கள்.

இதற்குள்ளாக, அண்டப்புளுகரும் ஆகாஸப்புளுகரும், சுருசுருப்பென்பதை ஜோராகக்காட்டி,

"நீங்கள் வெகு நல்லவர்களாய்த் தோன்றுகிறது. உங்கள் கேஸ் என்ன கேஸ்? க்ரிமினல் கேஸா, ஸிவில்கேஸா, அஸ்ஸால்டா, அப்டக்ஷனு, மர்டரா, தெப்டா, வாரன்டா, டிஸ்ட்ரஸா, வில்லா, ப்ரொபேட்டா, என்னகேஸ்? ஸிவில் கேஸா, க்ரிமினல்கேஸா, இன்ஜங்க்ஷன்கேஸா, ஈஸ்மென்ட் கேஸா, டிபமேஷன் கேஸா, டீல் ஷூட் கேஸா, நாமினல் கேஸா, நாமினடிவ்கேஸா, பொஸஷன் கேஸா, பொஸெஸிவ் கேஸா, அப்ஜக்ஷன்கேஸா, அப்ஜெக்டிவ் கேஸா, என்னகேஸ்?" என்று அரை நகைப்பு நகைத்து ஆயிரம் கேஸை அரை நிமிஷத்தில் அடுக்கி விட்டார்கள்! கோர்ட்டு விவகாரமென்பதைக் கொஞ்சமேனுமறியாது கோமாளிகள் போன்றிருந்த குருட்டு மனிதர்களாகிய ஐவரும், அடுக்கிய கேஸைக்கேட்டு ஆச்சரியமடைந்து, "ஐயா, உங்களுக்கு அதிக அனுபவம் உண்டுபோல் தோன்றுகிறது! எங்களுக்கு ஊர் விவகாரமும் தெரியாது, கோர்ட்டு விவகாரமுந் தெரியாது. என்ன ஆகுமோ இந்த கேஸ்! இதோ இருக்கிறாரே, இங்கித முதலியார்! இவருக்கும் சில தாசிகளுக்கும் இம்மியளவு உண்டான சண்டையை இப்படி வளர்த்தி விட்டார்கள் இந்த போலீஸ்காரர்கள்! நாங்கள் சாட்சிக்கு வந்தவர்கள் மூவர்;

இன்னொருவர் நடுவீதியேவந்து எங்களிடம் சேர்ந்தவர் !" என்று ஐவரும் சொல்லி ஆவென்று வாயைத் திறந்திருந்தார்கள்.

"சரி! உங்களுக்கு யாதொரு விவகாரமும் தெரியவில்லையே, இப்படி நாட்டுப்புறத்து * மாட்பெல்லோஸ் போலவும், † பீபில்ஸ் பார்க் மன்கீஸ்போலவும், ஒன்றுந் தெரியாது விழித்துக்கொண்டிருந்தால், ஒவ்வொருவருக்கும் தப்பாது ஒன்பது மாதக் கடுங்காவல் துள்ளத்துடிக்கப் பதைக்கப் பதைக்கத் தண்டனையாய் விடு மென்பதில் சந்தேகம் யாதிருக்கின்றது? வக்கீல்கள் யாரை ஏற்பாடு செய்திருக்கிறீர்கள் ?" என்று அண்டப்புளுகரும் ஆகாஸப்புளுகரும் இடுப்பில் கையைவைத்து, மீசையை முறுக்கி டம்பங்கள் காட்டிடல்டம்பர் கேள்வி கேட்டார்கள்.

"வக்கீல்கள் யாரும் வகையாய்த் தெரியவில்லையே! என்னசெய்கின்றது!" என்று பசப்பிப்பசப்பி விழித்துத்திகைத்து வானத்தைப் பார்த்து ஐவரும் வயிறு கலங்கினார்கள்.

"ஹோ! ‡ யூஸ்லெஸ்! வக்கீலில்லாது கேஸை வாரி யிறைக்கப் போகிறீர்களோ! சரிபாபம்! உங்களுக்கு ஜன்மச்சனி உட்கார்ந்து கொண்டிருக்கிறான்போ லிருக்கிறது! உங்களைப்பார்த்தால் உளம் நிறையப்பரிதாபம் ஒரு கணத்தில் உண்டாகின்றது! வேண்டுமானால் உங்கள் கேஸைக்காக எங்கள் வேலையெல்லாம் விட்டு உருப்படியாக்க ஒருவாறு தோன்றுகின்றது! எங்கள் ஒத்தாசை உங்களுக்குச் சம்மதமா ?" என்று இரண்டு புளுகரும் இளித்துப்பேசினார்கள்.

"ஐயா வந்தனம்! உங்களுக்கு நாங்கள் என்ன கைம்மாறு செய்யப்போகிறோம்!" என்றார் ஆடம்பராசாரி!

"எப்படியாவது எங்களைக் காப்பாற்றவேண்டும்!" என்றார் இங்கித முதலியார்!

"கூடிய வரையிலும் காரியத்தைச் சீக்கிரத்திலும் அதிக செலவில்லாமலும் முடிக்கவேண்டும்! அதே எங்கள் பிரார்த்தனை! என்னிடத்தில் ஒருகாசு கூட இல்லையே! என்ன செய்வேன்" என்றார் அற்புத முதலியார்!

"ரொம்பா நியாயஸ்தல நிபுணத்வ சாலிகளாகக் காணப்படுகின்றீர்கள். சேனை அனுபவயுக்தமாய் வார்த்தையாடுறீர்கள்! ஸ்ரீய: பதியே

* மாட்பெல்லோஸ்=பைத்தியக்காரர்கள்.

† பீபில்ஸ்பார்க் மன்கீஸ்=ஜனங்களது சிரங்காரத்தோட்டக்குரங்குகள்.

‡ யூஸ்லெஸ்=பிரயோஜன மில்லை.

இவளை இந்த ஸ்தலத்துக்கு ஏள்ளப்பண்ணிக் கொண்டுவந்தான் போல் தோண்ணுது" என்று ஆமவடையாசாரியும் அப்பளாசாரியும் பேசினார்கள். ஆமோதித்து மறுபடியும் அனைவரும் ஏகோபித்து,

"எந்த வக்கீலை ஏற்பாடு செய்யப்போகிறீர்கள்?" என்று கேட்டார்கள்.

"குள்ள முதலியாரை வைக்கலாமா?" என்று சற்றுயோசனையைச் சித்தத்தில் காட்டி, அண்டப்புளுகர் ஆகாஸப்புளுகரைக் கேட்டார்.

"குள்ள முதலியாருக்குக் கோபம் அதிகமே தவிர காரியத்தில் ஒன்றும் வீரிய மில்லை!" என்றார் ஆகாஸப்புளுகர்!

"கொறுக்கு வலி நாயுடோ?"

"கொறுக்கு வலி நாயுடு கையையும் காலையும் அவலக்ஷணமாகப் பலதரம் ஆட்டி நீட்டி, ஆ ஊ என்று பேசுவாரே தவிர 'பாயன்டில்' அவரால் பலனில்லை?"

"அழுமூஞ்சி ஐயங்கார் ?"

"அழுமூஞ்சி ஐயங்கார் அடுப்பங்கரை அம்மாள் கேஸுக்கு உதவுவாரே தவிர இதற்கு ஸ்வாரஸ்யமில்லை!"

"அம்மை முகத்தையர், சங்கடேஸ்வர சாஸ்திரி, வாக்குண்டான் பிள்ளை, ஐம்பதுபோளி ஆவாஹனராவ், * டையபிடிஸ் வக்கீல், † ட்ரௌஸர்லெஸ் லாயர், பிரசாத மூட்டை பிச்சைகாரஸொலிஸிடர் இவர்கள் எப்படி ?"

"என்ன? இவர்களாலெல்லாம் இந்த கேஸ் எப்படி நடைபெறும்? இவர்களுக்குக் கத்தரிக்காய்க்கும் போதுமான காசு வருமோ என்னமோ அதுவே பெருஞ்சந்தேகமா யிருக்கின்றதே! பெரிய வக்கீல்களைத் தான் பெருமையாய் இதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.?"

"‡ டாகெடிவ் ஐயரை டம்பமாய் வைக்கலாமா ?"

"§ தடீஸ் ரைட்! தடீஸ் ரைட் !!"

" அவர் என்ன கேட்பார் ?"

---

* டையபிடீஸ்=நீர்ரோகம். † ட்ரௌஸர்லெஸ்=நிஜாரில்லாத.

‡ டாகெடிவ்—வாயாடி. § தடீஸ்ரைட்—அது சரி.

"ஐம்பது ரூபாய்க்குக் குறைந்து அவர் எடுப்பதே இல்லை கேஸை."

"ஐயா, கேஸ்காரர்களே, ஐம்பது ரூபாய் வக்கீலுக்கு வேண்டும்! முப்பது ரூபாய் செலவுக்கு வேண்டும்! வாய்க்கரிசி போட அப்போது அப்போது சில்லரை அரைரூபாய் கால்ரூபாய் அவிழ்த்துக்கொண்டே யிருக்கவேண்டும்! இதற்கு சம்மதமானால் எடுக்கிறோம் கேஸை! இன்னும் அரைமணிதான் இருக்கிறது, இதற்குள்ளாகப் போகவேண்டும்; வக்கீலைப் பார்க்கவேண்டும், எங்கிருந்தாலும் பிடிக்கவேண்டும், பேரம் முடிக்கவேண்டும், பேசவேண்டும் * இன்ஸ்ட்ரக்ட் செய்யவேண்டும், எழுதவேண்டும், எகிறவேண்டும், ஓடவேண்டும், பாடவேண்டும், வண்டிவேண்டும், வகாலத்துவேண்டும், வயிறு நிறைய சோறுவேண்டும், பத்திரம் வேண்டும், சாக்ஷி வேண்டும், வாய்க்கரிசி பால் மாறாமல் வழியெல்லாம் போடவேண்டும், பிடிபிடி நமசிவாயம் அடி யடி தோறும் வைக்கவேண்டும்! அரைமணி நேரத்தில் இத்தனை வேலை எப்படியாகும்! எடுங்கள், கொடுங்கள்! ஆச்சே நாழியாச்சே ஜட்ஜ்வரும் வேளையாச்சே! துறை கெட்டுப்போகும், கேஸ் கெட்டுப்போகும், எல்லாம் வீணாய்ப்போகும் ஹா ஹா எடுங்கள் கொடுங்கள்!" என்று அனர்த்தம் செய்து ஆர்ப்பாடஞ் செய்தார்கள் அண்டப்புளுகரும் ஆகாசப் புளுகரும்!

"ஐயா, அதெல்லாம் சரிதான்! வாய்க்கரிசியாவதென்ன, அடியடி தோறும் பிடிபிடி நமசிவாயம் என்பதென்ன?" என்றார் ஏதும் தெரியாத இங்கித முதலியார்.

"சரி! நாழிகையாகிறதென்றால் நாலுஜாமம் யோசிக்கிறீர்களே. காகிதம் வேண்டும் காபிவேண்டுமென்று எத்தனைதரம் கேட்டாலும் ஒன்றும் கேளாத செவிட்டுப் பொம்மைபோல் சேவகன் நிற்பான், வாயில்லாத ஊமைபோல் கிளர்க் விழிப்பான்! ரிகார்ட் கீபர் இப்படித் திரும்பிக் கொள்வான்! ரெவினியூ க்ளர்க் வேலை முடித்துத்தான் பேச முடியும் என்று தொந்தரை செய்வான்! இன்னொருவன் வேலை யதிகமென்று எரிந்துவிழுந்து ஒவ்வொன்றாய்த் தானே ஆகவேண்டும் உனக்கு மாத்திரம் பறக்குதோ கொடி என்பான்! சேவகன் சீறிவிழுவான்! அட்டெண்டர் சிரித்து அப்படித் திரும்பிக் கொள்வான்! அவசரமாய்க் கேட்டால், உத்தரவாயிற்றா, சாங்ஷன் ஆயிற்றா, யார் உத்தரவு, எவர்கள் தாகீது, உன் அவசரம் என்ன

---

* இன்ஸ்ட்ரக்ட்=கேஸ் விவரம் போதிக்க.

அவசரம், அங்கே சற்றுவிழுந்துகிட என்பார்கள்! இப்படிப்பட்ட சில்லரை ஆசாமிகட்கு சில்லரை கொடுப்பதே வாய்க்காசு கொடுப்பது என்பதும் அடியடிதோறும் பிடிபிடி நமசிவாயம் என்பதும் ஸ்வர்ன புஷ்பம் சமர்ப்பிப்பது என்று சொல்லுவதும்! இப்படிச் செய்து விட்டால் எப்படிப்பட்ட காரியமும் இரண்டு நிமிஷத்தில் ஆய்விடும்! அப்போது உத்தரவுவேண்டாம், தாகிது வேண்டாம், ஒன்றும் வேண்டாம், எதுவும் வேண்டாம்! மற்றகாகிதங்களின் தலைமேலே நம்முடைய காகிதம் நலமாக உட்கார்ந்து நாட்டியமாடும்! முன்னது பின்னதாகும், பின்னது முன்னதாகும்! கடைசியில் நாம் போனாலும், காகிதம் என்னமோ தலைமேலே கண்ணியமாய் விடும்! இத்தனையும் செய்யும் இயல்புள்ளதைத்தான் வாய்க்கரிசி யென்று சொல்வார்கள்! என்ன இன்னும் வீண்பேச்சுப் பேசிக்கொண்டிருந்தால் எப்படியாகிறது? எடுங்கள் ரூபாயைக் கொடுங்கள் உடனே! இஷ்டமிருந்தால் கொடுங்கள், இல்லாவிட்டால் நடங்கள்! இருபத்தைந்து நிமிஷம் தானே இன்னும் இருக்கிறது!" என்று ஒத்தாசைப் புருஷர்கள் உரத்திக்கத்தினார்கள்.

"ஐயா மன்னியுங்கள் ஐயா பொறுங்கள்" என்று இப்படி விழித்தார்கள் அப்படி விழித்தார்கள்—கடைசியாக இங்கித முதலியார் கேஸுக்கென்று இருநூறு ரூபாய் தயார்செய் திருந்ததில் நூறு ரூபாய் கொடுத்து நூறு கும்பிடு போட்டார்கள்! அற்புத முதலியார் கூடவேபோக ஆறு அடி எடுத்துவைத்தார்! அப்படிப்பார்த்தார், இப்படிப்பார்த்தார், கோர்ட்டு கட்டிடம் ரங்கநாதன் சன்னிதிபோல் சுற்றிச்சுற்றி வளைந்து முன்னும்பின்னும் அறையும் ஹாலும்மேலும் கீழும் மெத்தையும் மேடையும் வழியும் வாயிலும் கும்பும் கூச்சலும் எங்கு பார்த்தாலும் சார்ஜென்டும் சேவகரும்—கலவரம் மிகுந்து கணக்குக் கடங்காதிருக்கவே, உள்ளே நுழைந்தார்கள், எங்கோ போனார்கள், எப்படியோ மறைந்தார்கள் அண்டப்புளுகரும் ஆகாஸப்புளுகரும்! அற்புத முதலியார் ஒன்றுந்தோன்றாது மூசுண்டைக் கடையில் முக்காலணு தோற்றவர்போல், அவமானமடைந்து தலைகுட்டை ரூபாயைச் சாக்கிரதையாய்ப் பார்த்து, மற்றவரிடம் வந்து, மனவருத்தப் பட்டுக்கொண் டிருந்தார்!

எல்லாரும் சேர்ந்து இளிச்சவாயர்களாய்த் தோன்றிக் காக்கைகளாய்ச்சுற்றி நாக்கும் வரண்டு, மூக்கும் வடிந்து, தலையும் அவிழ்ந்து, தாடியும் பறந்து, சூருவளிக் காற்றில் சுக்லாம்பரதரமையர்

வீடு வீடாய் நுழைந்து நோன்புகும்பிட ஓடி யோடிப் பறப்பது போல், ஆடியோடி அலைந்துகொண் டிருந்தார்கள்!

*　　　*　　　*

அதோ என்ன அங்கே ஒருவண்டி அழகாகவந்து கொண்டிருக்கிறதேயென்று அனைவரும் மிக்க ஆச்சர்யத்தோடு பார்த்துக் கொண்டிருந்தார்கள். சாதாரண வண்டிகள்போலல்லாது ஏதோ ஒரு விசேஷத்தோற்றம் அந்த வண்டியிடம் அமைந்திருக்கிறது என்று ஜனங்கள் பார்க்கும் பார்வையாலும், வண்டியைச்சுற்றி வாகான சிப்பாய்கள் கத்தியையுருவிக் காத்துக்கொண்டு வருவதாலும் மெத்த நன்றாய்ச் சித்தத்தில் படுகின்றது! ஆடம்பராசாரி முதலானவர்களும் தங்கள் 'ஆட்ட பாட்ட அல்லோல கல்லோல'த்தினின்றும் சற்றுத் திரும்பி வண்டியை உற்றுப் பார்த்தார்கள்!

இருண்ட வண்டியில் இரண்டு குதிரைகள் கட்டி இதோ வந்துவிட்டது! காவலாளிகள் சுருக்காய்க் கதவைத்திறந்தார்கள்! உள்ளேயிருந்து உயிரோடே வந்தார்கள் உத்தமரான இருவர்! யாவரவர்கள்! யார் வந்தது, யார், யார்? என்று மெத்த நிதானத்தோடே உற்றுநோக்கி உறுதியாய்ப் பார்த்தார்கள் ஆடம்பராசாரியும் அத்தான்களும்!

பார்த்தார்கள், நிதானித்தார்கள், யோசித்தார்கள், மறுபடியும் உற்று மஹா நிதானமாய்க் கவனித்தார்கள்! வேறுயாருமில்லை, வனஜாஸனன், ப்ரபுதாஸ் இவர்கள் தான் வண்டியிலிருந்து இறங்கினவர்கள்! யார், வனஜாஸனன் ப்ரபுதாஸா? நன்றாய்ப்பார்க்கலாம் என்று மீண்டும் பார்த்தார்கள்! வனஜாஸனன், ப்ரபுதாஸ்!

இதற்குள்ளாக ஆடம்பராசாரிக்கும் அற்புத முதலியாருக்கும் இருதய ஓட்டம் இப்படியாயிற்றென்று சொல்ல எப்படியுமாகாது! 'ஹா! வனஜாஸனனு ப்ரபுதாஸா! ஹா ஹா! அப்பா', என்று கத்திக் கதறித் தரையில் விழுந்து மெத்த மயக்கத்தாலே சித்தம் மறந்துவிட்டார்கள்!

"அப்பா அண்ணு ஹா ஹா!" என்று பதறிக் கதறி, ப்ரபுதாஸும் வனஜாஸனனும் தம்மை மறந்து தாவிவரத் தொடங்கிஞர்கள்!

"ஹா ஹா! இடம் பெயரக்கூடாது, அடியெடுத்து வைக்கக் கூடாது" என்று கண்டிப்பான உத்தரவு செய்தார்கள் காவலாளிகள்!

"ஹா ஹா! ஐயோ ஐயோ!" என்று கத்தினர்கள் வனஜாஸனனும் ப்ரபுதாஸனும்!

"வாயைத்திறக்கக்கூடாது! வாயைத்திறந்தால், வந்தது அனர்த்தம்!" என்று அதிக நிர்ப்பந்தஞ்செய்து ஆஜ்ஞை செய்தார்கள், அதிகப் பிரசங்கிக் காவலாளர்கள்!

தீர்த்தம் கொண்டுவா ஆமவடை ஆசாரி ஓடினர்; வைத்தியரை அழைத்துவா அப்பளாசாரி ஓடினர்.

இங்கித முதலியார் இருதுடைகள் மீதும் இருவர்தலையும் வைத்துக்கொண்டு, ஒன்றுந் தோன்ருது ஓயாது விழித்துக்கொண்டிருக்கிருர்!

தெருவெல்லாம் எங்கு பார்த்தாலும் எள்ளு விழ முடியாதபடி ஜனங்கள் சேர்ந்து கலங்கலாய் விட்டது!

இந்த சமயம் வந்தார் நியாயாதிபதி!

"இவர்களும் ஏதோ இந்த ராஜத்துரோக கேஸில் சம்பந்தப்பட்டிருக்கிறப்போலிருக்கிறது! அனைவரையும் ஜெயிலுக்கு அழைத்துக்கொண்டுபோய் வைத்தியரைக்கொண்டு சிகிச்சை செய்யுங்கள்! பிறகு யோசிக்கலாம்!" என்று நியாயாதிபதி உத்தரவு செய்தனர்.

# இருபத்தொன்பதாவது அத்தியாயம்.

மனமோஹன மாணிக்கம் மற்றையோர் — பிரம்மராக்ஷதன் இறந்து போதல்.

**கா**லைச் சூரியன் கடுமையாய்ப் புறப்பட்டான்! வேலை அதிக முண்டென்று வீராவேசங் காட்டுவதுபோல் சூராவேசத்தோடு சுருக்காய்த்தோன்றிச் சூட்டைக்காட்டி வாட்டம் விளைத்தான்! இலையுங் காய்ந்து பூவும் கரிந்து, பறவைகளும் அடங்கி பாட்டுகளும் ஒடுங்கி, நாதகீதம் ஏதும் காணுது எங்கும் ஒருவித இளைப்பேதோன்றிற்று! * அற்றைநாள் காற்றென்பது கடுகளவும் இல்லை, மனோரம்யமென்பது பேருக்கும் கிடையாது, உற்சாகமென்பது உதாரணத்திற்கும் கிட்டாது! ஹா! இயற்கை மாதரசிக்கு இயைந்த வருத்தம் ஏது என்பது யாதும் தோன்ருது, எங்கிருந்தார்க்கும் சங்கட உணர்ச்சி சதாதோன்றிக் கொண்டிருந்தது! மைனுக் குருவிகளின் மகிமையான பேச்சும், குயிற் கூட்டங்களின் ஓயில் நிறைந்த உன்னதப் பாட்டுகளும், தாளமென்பது தானத்திற்குக் காத்திருக்கிறதென்னும்படி, மயில்கள் செய்யும் மாநடப்பெருமையும், கிளிகள் பேசும் கீர்த்திப்பெருக்கமும் எங்கோ மறைந்து எப்படியோ ஆயின! ஒன்றுங்காணேம் ஏதுங்காணேம்! ஆனந்தமென்பது அடியோடே மறைந்தது, உன்னதமென்பது உயிரே நீங்கியது! காலைத்தோற்றத்தில்கடூரமென்பது காண்கிறதேயன்றி இன்பமென்பது இம்மியளவுமில்லவே யில்லை !

அங்கிருந்தார்க்கு மாத்திரம் அவ்விதம் புலப்பட்டதா, ஏனையோர்க்கும் அவ்வாறு தோற்றம் விளைந்ததா என்று யோசிக்கும் போது, அங்கிருந்தார்க்கே அஃது அதிகம் தோன்றியதென்று அவசியம் ஏற்படுகிறது! எல்லாவற்றிற்கும் மனம் தான் மூலகாரணம்! மனத்தை வசப்படுத்துவாய், எல்லாவற்றையும் வசப்படுத்தினுய்! உலகமெல்லாம் ஒருமிக்க ஆண்டாலும், மனதை ஓட விட்டாயானுல், சிந்தையென்பது சந்ததமும் துன்பமே கொடுக்கும்! ஆசையென்பதற்கு அளவில்லை, எல்லையில்லை! ஆசையையடக்கித் திருப்தியைப் பூணுவாய், அஃதே எல்லாவற்றிற்கும் மேலான இணையில்லா ஆட்சியாகும்! மனதை வசப்படுத்தினேர்க்கு, நரகத்திலிருந்தாலும்

---

* அற்றை நாள்=அன்றையதினம்.

அதுவே மோக்ஷமாகும்; மனதை வழிப்படுத்தாது மாண்பற்றிருப்பவர்க்கு, எல்லையில்லாச் சுகத்திலிருந்தாலும் இயம்ப வொண்ணாக் கவலையையே எப்போதும் விளைத்துக்கொண்டிருக்கும்! உள்ளக் குகையில் ஒருசேர வெழுந்து, நாலுபுறமும் ஆலாகோலஞ்செய்து, மோதியடிக்கும் ஊதைக்காற்று, சுற்றியடிக்கும் சூறாவளி, கவலை பெருக்கும் காதகப்புயல், கொண்டல் கொண்டலாய்ப் புகை விட்டு குப் குப்பென்று † 'மப்பிட்டு', கோரம் விளைக்கும் காரக்கனல்—இவ்விதமாக மனதில் எவ்விதமாயும் இன்னல் விளைக்கும் சன்னல் பின்னலான சஞ்சலமென்ன, சம்சயமென்ன, கோபமென்ன தாபமென்ன, ஆசையென்ன ஆத்திரமென்ன, பொறாமையென்ன பொங்கிப்பறத்தலென்ன—இவைகளிட மிருந்து தப்ப எவரால் முடியும்! ஒருவன் என்ன அந்தஸ்திலிருந்தாலும், என்ன ஆஸ்தியுடைவனாயிருந்தாலும், சித்தத்தை வசப்படுத்தச் சக்தியில்லாதவனாயிருந்தால், அவனை விடத்தரித்திரவானில்லை, அவனைப் பார்க்கிலும் துரதிர்ஷ்டக்காரன் அகிலத்தில் கிடையான்! ஆகல் பற்றி, மனதை வசப்படுத்தினோனுக்கு எல்லாம் சுகமே, எல்லாம் ஆனந்தமே, எங்கு பார்த்தாலும் இங்கிதமே, எங்கு கண்டாலும் இன்பப் பெருக்கே--எதுவும் வைகுண்டமே எதுவும் கைலாஸமே! அவன் புழுக்கள் நடுவிலிருந்தாலும் பூக்கள் நடுவிலிருப்பதாய்த் தோன்றும், கஷ்டத்தில் மூடியிருந்தாலும் அஷ்டைஸ்வர்யத்தில் அகங்களித்திருப்பதாய் விளங்கும்!

ஆனால் இம்மாதிரி அல்லல் மனதை அடக்கியாள யாவராலாகும்! அது அற்ப சொற்பமான காரியமன்று! அது கண்டார் அது கண்டார்! அதுகண்டார் ஆனந்தங்கொண்டார்! கட்டையோடு கைலாஸம் போனார், தேகத்தோடே திருநாட்டுக்கேகினார், ஜீவன் முத்தியைத் திருத்தமாயடைந்தார் என்று சொல்லக் கூடியவர்கள் அவரே! இஃது லேசான காரியமா, இஃது சுலபமான சாம்ப்ராஜ்யமா? இதைப் பெறத்தான் இருடிகளும் முனிவர்களும், இந்திராதி தேவர்களும் சந்திராதி அண்டங்களும் உலகத்தோற்றத்தில் உருண்டு கொண்டிருக்கின்றனர்!

ஆனால், இந்த அமைதியைப்பெறுவது இன்று நாளையில் இயலாத காரியமாயிருந்தாலும், ஒவ்வொருவரும் இதற்குத்தான் இறுதியான முயற்சி செய்தல்வேண்டும்! தப்பித்தவறித் தடுமாறி திசை

† மப்பிட்டு=மேகம் போலாய்.

மாறித் தரையில் விழுந்து தத்தளித்தொழிந்தாலும் ஆயிரஞ் சென்மத்திற்குப் பிறகாவது ஐயனைக்காணலாம், அறநெறி யடையலாம் என்னும் நம்பிக்கை எக்காலத்தும் அவர்களுக்குண்டு! அதுவே கோடிபொன், அதுவே கோகனகபதம், அதுவே அஷ்டைஸ்வர்யம், அதுவே ஆனந்த முதிர்ச்சி!

விழுவாரைக்கண்டு பழிக்கக்கூடாது, தவறுவாரைக்கண்டு சிரித்தலாகாது! நல்வழி பிடித்தார்க்கு நாசமென்பது கிடையவே கிடையாது! நெருப்பிற் பட்டு நீறுகிப்போனலும், சாம்பரினின்றும், * பீனிக்ஸ் பறவையைப்போல், சாயுஜ்ய பதத்தில் அவர்கள் தோன்றித் துலங்குவார்கள்!

மஹாரிஷியும் மனமோஹன மாணிக்கமும் தத்துவப்பயற்சியில் தலைதுளிர்த் திருந்தவர்களானபோதிலும், அன்று நாள் அவர்கள் மனதில் அலக்கழித்த கஷ்டங்களால், ஏற்கவே கருகி ஏறுமாறுயிருந்த இயற்கைத்தோற்றம் இன்னும் கருமையாய் இருண்டு காட்டியது! ஆனபோதிலும் அவர்கள் வேலையில் அதிக ஊற்றத்தோடு நடந்து வந்தார்கள்!

* * *

பயங்கர மலையில் பாவிராக்ஷதன் ஹாஹா என்று ஆர்ப்பாடஞ் செய்துகொண் டிருக்கிறன்! அந்த சமயம் ஆள்காட்டி வேலைக்காரன் அவனுக் கெதிரில் வந்து, "அடியேன் தாஸன்" என்று உள்ளே சிரிப்பும் உதட்டில் மறைப்புமாக ஒரு நிமிஷம் ஒரு தூணருகில் நின்றன்.

"அடே! கண்ணாலம் இன்னும் ரெண்டு மூணுநாள் தானே இருக்குது! என்ன ஏப்பாடுசெய்தே! சாமான் வாங்கினயா, சங்கடப்பட்டு நிண்ணயா! என்ன சமாசாரம், ஏதுசமாசாரம்?" என்று பிரம்மராக்ஷதன் இடிக்குரலில் இரைந்து கேட்டான்.

"ஆயிபோச்சு எல்லாக்காரியமும்! ஆன ஒரு சமாசாரம் அதுக்கு முன்னே சொல்லவேண்டியிருக்குது" என்றன் எத்துக்கார வேலைக்காரன்.

"அது என்னது?" என்று ஆச்சரியத்தோடே கேட்டான் அகாதராக்ஷதன்!

---

* பீனிக்ஸ்=மேனாட்டுக்கட்டுக்கதைப்பறவை: எரிந்து மறுபடி சாம்பரினின்று உயிரோடெழுவது.

"சொல்லபயமாயிருக்குதே" என்றான் வேஷம்போட்டு வினை செய்யும் வேலைக்காரன்.

"ஒண்ணுக்கும் பயப்படாதே! சும்மா சொல்!" என்றான் பிரம்மராக்ஷதன்.

"ஆ ஊங் ஊங்." என்று அரை நிமிஷம் அப்படியும் இப்படியும் விழித்தான் ஆகாவழி வேலைக்காரன்!

"அடே! முட்டாளே. மூதேவியே! யாதொண்ணுக்கும் நீ எதொண்ணுக்கும் பயப்படவே வேண்டாம்! நான் இருக்குற எடத்திலே பயமென்றது என்னாத்துக்குடா உனுக்கு! காக்காவந்தா கடிச்சுடுறேன், மனுசாவந்தா முயுங்கிடுறேன், புலிவந்தா புடிச்சுடுறேன், கிலிவந்தா ஒட்டிடுறேன், பேயுவந்தா பூதம்வந்தா, ராச்சசாள் வந்தா பிசாசுங்கவந்தா அவுங்க எல்லாம் வந்தா அவுங்க எல்லாம் நம்ப கூட்டாளிங்கோ! அடே முட்டாளே, நீ எண்டா பயப்புடுறே! சொல்லுடா சொல்லுடா! நாழியில்லேடா, வேளையில்லடா! கண்ணுலம் ரெண்டு நாதானேடா இருக்குது! ஏண்டா முயிக்கிறே, ஏண்டா வியிக்கிறே!" என்று பிரம்மராக்ஷதன், வாயைத்திறந்து, முண்டைக் கண்ணை முழுதும் திறந்து, மூக்கைப்பெருக்கி, நாக்கை யகட்டி அவசரப்படுத்தி ஆத்திரமாய்க் கேட்டான்.

"யாரு மில்லெங்கோ! ஆருத்திராதரிசனம் இங்கே வருறதா சொன்னானுங்கோ" என்று வேலைக்காரன் விழித்து விழித்துக் கூறினான்.

"ஆருத்திராதரிசனமா! அவன் ஏண்டா இங்கே வந்தான்! ஹா! கொண்ணுடமாட்டெனா! ஹா மெண்ணுட மாட்டனா! ஹா ஹூ" என்று அரக்கன் கத்தினான்!

"இன்னம் வரலெ, வாருதா சொன்னான் என்னுண்டே!" என்றான் வேலைக்காரன்.

"இங்கே ஏண்டா வருறான்! இங்கேவந்தா இண்ணே பூட்டாண்டா! கண்ணுலப் பூசினிக்கா கொயம்பு கண்ணுலத்துக்குப் பண்ணிடலாம் அவனெப்போட்டு." என்று கூறி, உள்ளுக்குள்ளே என்னென்னவோ நினைத்து ஓயாது யோசித்துக்கொண் டிருந்தான் ஒழுங்கில்லா ராக்ஷதன்.

"இல்லே இல்லே தான் செய்ததெல்லாம் தப்பு இண்ணு வருத்தப்பட்டு, சினேகம் பண்ணிக்கணும் இண்ணு சொல்லி இப்போ

வருறதா சொன்னான்" என்று வேலைக்காரன் வினயத்தோடு பேசினான்.

"போறான்போ! அவன் சினேகம் யாருக்கு ஒணும்! அவனாலே நமக்கென்ன ஆவ ஒணும்! வாணும் வாணும் வவுற்றெரிச்சல் சினேகம்!" என்று ராக்ஷதன் வேண்டே வெறுப்பாய்க் கூறினான்.

"இல்லெ இல்லெ! கண்ணாலத்துக்கு இன்னும் ஒரு பொண்ணு ப்ரெஜன்ட் செய்யப்போறான் அவன்!"

"இன்னும் ஒரு பொண்ணா?"

"ஆயாம்!"

"அவ நண்ணா இருப்பாளோ?"

"ரொம்ப அயகா இருப்பா"

"இவளைக் காட்டிலும் அயகோ?"

"பத்து பங்கு அயகு! மெத்த ஜிலு ஜிலுப்பு மெத்த மினு மினுப்பு!"

"மத்தாப்புபோலே இருப்பாளோ?"

"நெலாவைப்போலே இருப்பா!"

"சின்ன வயசோ கெழவயசோ?"

"பதினாலு வயசு பால குமாரியாச்சே!"

"இந்த கண்ணாலம் ஏப்பாடு பண்ணியிருக்குதே. அவளை அப்புறம் கண்ணாலம் பண்ணிக்குறதா? ஒண்ணும் தெரியலெயே!"

"ஆருத்திராதரிசனம் சொல்றான்—இப்போ நாம்ப சமாதானம் ஆய்பூட்டா அந்த அயகான பொண்ணெக் கொண்ணாந்து, இந்த அயகான பொண்ணெ ஒரு பக்கமும் அந்த அயகான பொண்ணெ இன்னொரு பக்கமும் வைச்சி, சாமிக்கு ரெண்டுபக்கம் பொம்மெ வைச்சி, ஒண்ணு பொண்டாட்டி ஒண்ணு கூத்தியாரு இண்ணு சொல்லி தெருவெல்லாம் திரிஞ்சி ஊக்கோலம் வருறாங்களே, அந்த மாதிரிஉங்குளுக்கு ரெண்டுபக்கமும்ரெண்டுவைச்சி ஒருமுட்டாகண்ணாலம் பண்ணிடுறது, ஊக்கோலம் வந்துடுறது இண்ணு ஆருத்திராதரிசனம் ரொம்ப ஆசையா இருக்குறான்!" என்று வேலைக்காரன் வேண்டிய மட்டிலும் கூறினான்!

"அப்படியா சமாசாரம்! ஆனுசீக்கிரம் அழைச்சுகுனுவா ஆருத்திராதரிசனத்தை" என்று ராக்ஷதன் ஊக்கம் மிகுத்து உத்தரவளித்தான்.

*　　　*　　　*

அக்குளில் ஒருபுட்டியும், கையில் ஒரு புட்டியும் எடுத்துக்கொண்டு, ஆருத்திராதரிசனம் அதிக அவசரமாய், ராக்ஷதன் குகைக்குள் ஓடியே வருகிறுன்! வந்தான் உள்ளே, பார்த்தான் அரக்கனை !

"ஹா ஹா! புட்டியெ முன்னே எடுத்துக்குனு வந்தெதபோலேயிருக்குது! பொண்ணே அப்புறம் கொண்டுகுனு வருவெ போலெயிருக்குது! வேடராஜா என்னுமேலே பழெயகோபத்தெ வைக்காதே! பொண்ணு அயகாயிருக்கும் போலேயிருக்குது! புட்டி அதுக்குமேலே சொகுசாயிருக்கும் போலேயிருக்குது! எதோ எடு புட்டியெ! எதோ கொடு புட்டியெ!" என்று ராக்ஷதன் ஆத்திரத்தோடே சொல்லி அவசரத்தோடே புட்டியெவாங்கி அப்படியே உள்ளுக்கு அரைத்துளியும் விடாமல், ஆற்று நீரையெல்லாம் குண்டோதரன் ஆவாஹனம்செய்ததுபோல், ஆகாத்தியமாய்ச் செலுத்திவிட்டான்!

"வேடா, என்தோயா! என்னருசிக்குதடா, என்ன ஜோராயிருக்குதடா, என்ன ஜம்மென்னிருக்குதடா! எங்கடா வாங்காந்தே இதே! எங்கிருந்துடா கொண்ணுந்தே இதே! பொண்ணு எப்போடா வருரு! நானு ஒரு அயகு பொண்ணு பாத்துவைச்சா, நீ அதுக்குமேலே அயகு கொண்ணுந்தேயாமே! என்னுடா ஏப்பாடு பண்ணே? சொல்லுடா சொல்லுடா!" என்று பிம்மராக்ஷதன் பேதாளக்குரலில் கேட்டான்.

"அடோராச்சசா, என்தோயா! ரெண்டுபேரெயும் ஒண்ணு உக்காரவைச்சி கண்ணுலம் பண்ணிடலாம்! நாளநண்ணெக்கு கண்ணுலம்! நாளேக்கு விருந்து வைச்சுடலாம்! அப்போ இந்த பொண்ணு அந்த பொண்ணு நீ நானு இந்த வேலெக்காரன் அதிரூப சுந்தரி இவங்க மாத்திரம் தான் இங்கே இருக்கணும்! அந்தவிருந்துக்கு வேறேயாரும் இங்கே வரக்கூடாது! அப்புடி உத்தரவு பண்ணிடு. ஆனு ஒண்ணு சொல்றேன் கேளு! ஒருகெயவன், தாடிவுட்ட கெயவன்—அவன் மாத்திரம் கூடவருவான்" என்று ஆருத்திராதரிசனம் ஆச்சர்யந் தோன்றச் சொன்னான்.

"கெயவன்! தாடி கெயவன்! யாரு அவன்! எங்கிருந்து வருருன்? இங்கே ஏன் அவன் வரணும்? ஏதாவது மோசம் வரப்போவுது! பத்துரம் பத்துரம்!" என்ருன் பிரம்மராக்ஷதன்!

"பிரம்ம ராச்சஸா! என்தோயா, நீ அதுக்கில்லாம் ஒண்ணுத்துக்கும் பயப்படதேவலே! அந்த கெயவன்தான் ரொம்பரொம்ப மாசாலக்கெயவன்! வாசாலக்கெயவன்! அவன்தான் அந்த அயகான பொண்ணெ சொகுசாபுடிச்சுகுனுவந்துட்டான்! அவன்தான் அவளெ பக்குவம் பண்ணிவைச்சிருக்குருன்! அந்த கெயவனெ அயெச்சுகுனுவாராமே போனல் எந்தகாரியமும் எள்ளளவும் ஆவாது! விருந்து நாளெக்கு ஏப்பாடு பண்ணிடு! ஆரெயும்வரவாணும் இண்ணு சொல்லி பத்துரம் பத்துரம்!" என்று ஆருத்திரா தரிசனம் ஆஷாடபூதிப் பேச்சை அழகாகப் பேசினன்.

"அப்படியே தயார் செய்யுறேன்! நீ நாளெக்கு காத்தாலே பத்து மணிக்கெல்லாம் அல்லோரெயும் அயெச்சுகுனு வந்துடு" என்ருன் பிரம்ம ராக்ஷதன்!

"நான் எல்லத்தெயும் தயார் செய்துடுறேன்! நீங்கபோயி எல்லாரும் வந்துடுங்க!" என்ருன் வேலைதீர்க்க எண்ணங்கொண்ட வேலைக்காரன்!

*　　　　*　　　　*

கோரமாய் நேற்று விளங்கிய கொடிய சூரியன், இன்று கொடுமையற்றுக் குளிர்ச்சியாய்த் தோன்றுகிருன்! அமிர்த சஞ்சீவிக் காற்று அதிகாலையில் வீசுகின்றது! அன்பனைப் பார்த்து அகமகிழ்ந்து காதலியானவள் ஆனந்த முகத்தை அப்படியிப்படி அசைப்பது போல், காற்றின் சொகுஸில் கண்ணியப் பூவை அசைத்து நகைத்து ஆனந்தத்தோடு இன்பமுறுகின்றன எண்ணிறந்த பூஞ்செடிகள்! மல்லிகையானந்தம் மன்மதனுக்குத் தெரியும், முல்லையின் ஆனந்தம் முகுந்தனுக்குத் தெரியும்! ரோஜா அசைந்து தாமரையோடு பேசிற்று, தாமரை அதற்குச் சாமரைவீசிச் சந்தோஷம் விளைத்தது! உயிரற்றசெடிகளுக்கும் உணர்வு விளைந்து, ஊக்கமற்ற மரங்களிலும் பழங்கள் பழுத்து, ஆனந்தமில்லாத மரங்களிலும் அழகுப் பூக்கள் ஆச்சர்யமாய்ப் பூத்து, ஒருநாட் பனியில், ஒரு காலைக் காற்றில், வற்றிய மரங்களும் பச்சென்று தோன்றின, வதங்கிய செடிகளும் வளம்பெற்றெழுந்தன!

அப்போது, அங்கே சுற்றியுள்ள மலைகளிலும் குன்றுகளிலும், அற்புதப் பசுநிறம் ஆனந்தம் விளைத்துச் சொல்ல முடியாத அழகைச் சுந்தரமாய்க் கொடுத்துக்கொண்டிருக்க, அம்மலைகளின் மீதும் அழகிய செடிகளின் மீதும் இன்பத்தைத்தரும் இந்திரதனுசு எல்லா நிறங்களையும் உல்லாஸமாய்த்தாங்கி, ஆதிசேடன் மீது சோதித் திருமால் சொகுசாய்ப் படுத்துக்கொண் டிருப்பதுபோல், சுந்தரமாய்த்தோன்றிச் சுயம் பிரகாஸமாய் விளங்கிற்று' மலைகளின் மீது இந்திரதனுசு மஹா சொகுஸாய்ப் படுத்திருப்பதைக் கண்டாரெவரே காதலியாதிருப்பார்! அழகே இப்போது அவதாரமாயிருக்கிறதென்பதை அழகு வில்லாலே ஆகாயதேவதை அறிகுறி போட்டது என்றுதான் அதைச் சொல்லவேண்டியிருக்கும்!

அவ்வளவு அழகும் அவ்வளவு ஆனந்தமும் அவ்வளவு அற்புதமும் வாய்ந்த அந்த இடத்தில், மனமோஹன மாணிக்கமும் மஹாரிஷியும், ஆருத்திராதரிசனமாகிற அரியவேடனும், சூர சம்மாரத்திற்கு ஆயத்தஞ் செய்கிறார்கள்! ஊக்கத்துடன் காரியத்தை உறுதியுடன் ஏற்பதாலே, நேற்றிருந்த கலக்கம்போய்ப் பூத்துப்புளகித்து, நெஞ்சம், பொங்கி வழிந்தது! வீராவேஸம் விளைந்த காலையில், எலும்புருக்கி நோயாளியும் குலுங்கி யெழுந்து குத்துச் சண்டையால் மெத்த ஹானி விளைப்பானென்பது மேதினியோரறிந்த விஷயமே! அதற்கேற்றதுபோல் இயற்கைச் சுகமும் இன்று குதித்து இன்பந் தந்துகொண்டிருப்பதால், மனமோஹன மாணிக்கத்திற்கும் மற்றுள்ளோர்க்கும் ஆவேஸமும் ஆனந்தமும் அதிகரித்து வந்தன!

மதுரேஸன் வேஷத்தை மாற்றி, சில நிமிஷத்தில், மனமோஹன மாணிக்கம் மனமோஹன மாணிக்கமேயானாள்! அருந்தவரிஷி, ஹா என்று வாயைத்திறந்து அக்கோ என்று ஆச்சரியப்பட்டார்! 'அம்மாளை இப்படிப்பார்த்து அனேக' நாளாய்விட்டது!' என்று உள்ளுக்குள்ளே சந்தோஷம் வேடராஜன் உடலுருகக்கொண்டுவிட்டான்! பூத்தமரங்கள் இரண்டாந்தரம் புஷ்பித்துவிட்டன! பச்சையும் மறுபடி பச்சையானது, மஞ்சளும் மேன்மேலும் மங்களகரமானது! செடிகளில் தங்கிய சிங்காரக் கிள்ளைகள் ஓடிவந்து ஒன்பது பேச்சுப்பேசின! வண்டுகள் ரீங்காரஞ்செய்து வண்மையான ஸ்ருதி சேர்க்க, குயில்கள் மனமுவந்து கோகிலத்வனியில் கோமள ராகங்கள் பாடின! அன்னம்வந்து அழகான நடையைத் தெரிந்துகொண்டு

அப்பாற்போயின! மயில்கள் ஆடி மனதுக்குத் திருப்தியின்றி மயங்கியே நின்றன!

இந்த சமயம் எல்லோரும் புறப்பட்டார்கள் எடுத்தவேலையை முடிப்பதற்கு! மனமோஹன மாணிக்கத்தின் மனதில் என்னென்னவோ யோசனை எழுந்தாடி யுலாவிவந்தன! இந்தக்காரியத்தை எப்படி முடிக்கப்போகிறோமென்கிற ஏக்கமானது அவள் சிந்தையை விட்டகலவேயில்லை! என்ன தைரியம் எப்படிக்கொண்டபோதிலும், என்ன உறுதி எவ்வாறடைந்தபோதிலும், உள்ளச் சஞ்சலம் உள்ளுக்குள்ளே உதயமாய் விட்டது! "ஏ! ஜகதீஸா, ஏ! பரமதயாளா! ஏ! ஜோதிஸ்வரூபி! ஏ! ஸ்வயம் பிரகாஸமே! இந்தக்கோரத்தொழிலில் என்னைக் கொடுபோய் எப்படியோ நுழைத்து விட்டனையே! என்னைக்காப்பது உன்னுடைய கடன், என்னைக்கரை யேற்றுவது உன்னுடைய பாரம், என்னை ஈடேற்றுவது உன்னுடைய பொறுப்பு! அகதிக்குத் தெய்வமேதுணை, எவருமற்றூர்க்கு ஈசனே துணை! உல்லாஸப்பூக்களோடும் சல்லாபப் பறவைகளோடும் சிங்காரகானத்திலும், வித்யாவல்லபத்திலும் சித்தஞ்செலுத்திய என்னை, சற்றுநாழிகையாயினுங் கொலைத்தொழிலைச்செய்து கோரம் விளையென்று திருவருள் சுரந்தது பெருநகைப்புக் கிடமாகின்றதேயன்றி வேறன்றே! எவ்வழி விட்டாலும், ஈசனே, நல்வழி நீ தான் காட்டல் வேண்டும்! நல்வழி காட்டவேண்டும், நல்வினை யாக்கவேண்டும்! சூரியனைக் கண்ட பனிபோலே, உன்னைக்கண்ட ஒல்லை வினைகள் தொல்லையுற்றுத் தொலைதூரமோடாவா, பாவம் பறக்காதா, பயமென்பது சாகாதா! எல்லாம் உன் அருள், ஈசனே, எல்லாம் உன் செயல்; எல்லாம் உன்கிருபை, இறைவனே, எல்லாம் உன்கருணை; எல்லாம் உன் ஆட்டம், எந்தாய், எல்லாம் உன் சித்தம்!

என்னைக் காப்பா யென்னையா
  ஏழை யுன்றன் சரணையா
அன்னை தந்தை நீயரசே
  ஆருமில்லை யெனக்கரசே
பொன்னைப் பணியைப் போக்கினாலும்
  பொன்னைப் பணியைத் தூக்கினாலும்
என்னை யாட்டங் காட்டாதே
  ஏழை யென்னை வாட்டாதே (க)

கொலையைச் செய்யக் குறித்தனையால்
குறித்த வலிவைத் தந்திடவால்
மலையைத் தூக்க எலியலவோ
மன்னு நானோர் பெண்ணலவோ
அலையைத் தடுக்க யாவர்தரம்
அன்பா கொடுப்பா யானவரம்
சிலையைக் காணே னென்னவிது
செல்வ தெங்கோ வென்னவிது!"

என்று மனமோஹன மாணிக்கம் எந்தையை நினைத்தும் ஈசனைப் பஜித்தும், தன் கஷ்டத்தைச் சிந்தித்தும் ஆகவேண்டிய வேலையை ஆலோசித்தும் சென்றுகொண் டிருக்கிறாள்! மஹாரிஷியும் வேடராஜனும் கூடவேசென்றுகொண் டிருக்கிறார்கள்!

* * *

பயங்கரக் குகையில் வெகு நன்றாய் ஏற்பாடுகள் மிக அழகாய்ச் செய்யப்பட்டன! கல் நாற்காலிகள் ஐந்தாறு சுற்றிலும் போடப்பட்டு, நடுவே ஒரு மேஜையும் எதிரே ஒரு நாற்காலியும் இணையாகப்போடப்பட்டு இணையில்லாதபடி இயைத்து வைத்திருந்தன!

"மணியைப் பாருடா!" என்றான் மஹாப்பிரபுவான மன்னுருசாமி ராக்ஷதன்!

"பத்தாய் விட்டது" என்றான் ஆனவனாகவேயிருந்து ஆகாத்தியம் விளைக்கும் ஆகாவழி வேலைக்காரன்!

"பத்தாய் விட்டதே! இன்னும் ஏன் வரலே!" என்றான் கோர ராக்ஷதன்.

"என்னமோ தெரியலேயே" என்றான் தீர வேலைக்காரன்!

உடனே அந்த வேலைக்காரன் அப்படி ஓடி இப்படிவந்து, இப்படி நடந்து அப்படிச்சென்று, அப்புறம்வந்து,

"எஸமானே எஸமானே! இதோ வந்துட்டாங்க இதோ வந்துட்டாங்க!" என்று ஓய்ச்சலின்றிக் கூச்சலிட்டான்!

அப்போது ராக்ஷதனுக்கு ஆனந்தம்பொங்கி, அகக்களிப்பெழுந்து, உச்சிமுதல் உள்ளங்கால்வரை ஓரே சந்தோஷம் ஓட்டமாய்ப் பாவிற்று! "ஒரு பெண்ணைக் கல்யாணம் உவந்து செய்து

கொள்ள எல்லா ஏற்பாடும் சல்லாபமாய் நடந்துகொண்டிருக்கும் போது, இன்னொரு பெண், இவளுக்குமேல் அழகானபெண், எனக்குத்தேடிவந்து இஷ்டத்தோடு கொடுக்கிறானே இந்த வேடனைக் காட்டிலும் எந்த மனிதன் எனக்கு உரிமையான நண்பன்'' என்று ராக்ஷதன் கூறி எதிர்வந்து அனைவருக்கும் நமஸ்காரஞ்செய்து அழைத்துக்கொண்டுபோனான் உள்ளே! உள்ளேபோனதும் உட்கார்ந்தார்கள் எல்லோரும்!

மேஜை மீது வித விதமான சாராய புட்டிகள் விபரீதமாய் வைக்கப்பட்டிருந்தன! அந்தப்பக்கம் ஆபாஸ உணவுகள் அவலக்ஷணச் சட்டிகளில் அடுக்கடுக்காய் வைக்கப்பட்டிருந்தன! இந்தப்பக்கம் ஒவ்வொருவர் மேஜை மீதும் ஒழுங் கொழுங்கான கிண்ணங்களும் அழகழகான டம்ளர்களும் நிறம் நிறமாகவைக்கப்பட் டிருந்தன!

இதற்குள்ளாக அதிரூப சுந்தரியும் ஜகன்மோஹன சிங்காரமும் அழகு உடைகளை அலங்காரமாக உடுத்தி, உடம்பு இளைத்திருந்தபோதிலும் முகத்தில் மினுக்கைத் தளுக்காய்க்காட்டி, அவர்க்கென்றமைத்த ஆசனங்களில், உட்கார்ந்து சும்மா உற்றுப் பார்த்திருந்தார்கள்!

வேடனும் அங்குள்ள வேலைக்காரனும் கண்களால் பேசிக் கலகலவென்று சிரித்தார்கள்!

உடனே ஆருத்திரா தரிசனமென்கிற வேடன் ஆத்திரத்தோடே யெழுந்து, பிரம்மராக்ஷதனை நோக்கி,

"என் நண்பா, என்தோயா, இத்தினை நாளு விரோதத்தெயும் சற்று கூட நினைக்கக்கூடாது இனிமேலே! இந்த பொண் பெயர் மதனவல்லி! நாளைக்கு அந்த பொண்ணோடு கூடவே இந்த பொண்ணுக்கும் தாலிகட்டித் தடுமாறிப் போகவேணும்.'' என்று கூறினான்.

"ஆமாம் அந்த பொண்ணுக்கு இஸ்டந் தானா! கேளு'' என்றான் பிரம்மராக்ஷஸன்.

"என்னம்மா சொல்லுறே! உன்னு இஸ்டத்தெ சொல்லு'' என்று வேடன் சொன்னான்!

"இஷ்டமில்லாமல் தானா இங்கு வந்தேன்! எனக்கு இந்த வைபோகம் எப்படிக் கிடைக்கும்?'' என்றாள் மனமோஹன மாணிக்கம்.

"தாதா! நீங்க என்ன சொல்றீங்கோ" என்றான் ரிஷியைநோக்கி வேலைக்காரன்!

"ததாஸ்து!" என்றார் மஹாரிஷி! ஜகன்மோஹன சிங்காரமும் அதிரூப சுந்தரியுங்கூட உள்ளுக்குள்ளே சிரித்து உதட்டிலும் பல்லிலும் ஒளித்து, அந்த ஏற்பாடு அமைதியுடையதென்றும் தாம் அங்கு தனியாய் வாசஞ்செய்வதைக் காட்டிலும் அழகான பெண்ணொருத்தி அருகிலிருப்பது தமக்கு மிக்க திருப்தி உண்டு பண்ணுகிறதென்றும் தெரிவித்தார்கள்!

அதற்குப்பின் ஆகவேண்டியதுயாது என்று யோசிக்கும் போது,

"ஏ! நம்பா தோயா! உன்பரிஜனங்களையும் உன் ராச்சசப்பேயுங்களையும் அல்லாரெயும் அனுப்புட்டியா?" என்று ஆருத்திரா தரிசனம் வெகு அக்கரையாய்க் கேட்டான்.

"ஆய் விட்டது!"

"இனிமேல் விருந்தாகவேணும்! நாளைக்கு கண்ணாலமாச்சே! இப்போ விருந்து பண்ணிட்டா, நாளைக்கு கண்ணாலம் பண்ணுடலாம்! நாங்களும் இனிமேலே போவசரிப்படாது! இங்கே தானே இருக்கப்போறோம்!" என்று வேடராஜன் ஆடம்பரமாய்க் கூறினான்.

"ஆம்!" என்றான் சனியன் பிடித்த சங்கட ராக்ஷதன்!

உடனே வேலைக்காரன் ஆடினான், ஓடினான், கறியைக்கொடுத்தான் ராக்ஷதனுக்கு, பழத்தைக் கொடுத்தான் மற்றவர்க்கு! பாலைக் கொடுத்தான் மற்றவர்க்கு, சாராயத்தைக் கொடுத்தான் சாகப்போகிற ராக்ஷதனுக்கு! மோரைக்கொடுத்தான் அங்குள்ள பிறருக்கு, வேகச்சாராயம் 'ஏகமாய்க்' கொடுத்தான் வீண்வம்புசெய்த விழலனை ராக்ஷதனுக்கு! நீரைக்கொடுத்தான் மற்றவர்க்கு, நெருப்புச் சாராயத்தை ஊற்றிக்கொடுத்தான் ஊரைக்கெடுத்த பாவிராக்ஷதனுக்கு!

குடிக்கக் குடிக்க ராக்ஷதனுக்கு வெறிமிகுந்து, தன்னை மறந்து, தம் திம் என்று குதிக்க ஆரம்பித்தான்! பின்னாலிருந்து வேலைக்காரன் சிரிக்கிறான்! முன்னாலிருந்து வேடன் விழிக்கிறான்! அனைவரும் பார்த்து அஸ்தியில் சுரமாகி மேலுக்குக் காட்டாமல் மினுக்கையே காட்டிக்கொண்டிருக்கிறார்கள்! ரிஷியும், ஒன்றுஞ் சொல்லாமல், "மௌனங் கலகநாஸ்தி" என்று மோனவிரதத்தை ஊனமில்

லாது பூண்டு "சுத்தப்பிரம்ம பராத்பராம்" என்று உள்ளுக்குள்ளேயே சொல்லி உருப்போட்டுக் கொண்டிருக்கிறார்!

ஆயிற்று! ராக்ஷதனுக்கு மயக்கம் தீக்ஷண்யமா யேறுகிறது! தம் திம் என்று குதிக்கிறான்; தப்பட்டையைக் கையில் வைத்துக் கொண்டு தகதெந்தினா கொட்டுகிறான்!

தகதெந்தினா தகதெந்தினா
தப்பட்டெகொட்டுறேன் தகதெந்தினா!
தகதெந்தினா தகதெந்தினா
தாளங்கொட்டுறேன் தகதெந்தினா
என்னு தோயன் சாராயம்
எனுக்குத் தெரியுது பூராயம்
தகதெந்தினா தகதெந்தினா
தப்பட்டெ கொட்டுறேன் தகதெந்தினா
நாளெக்குக் கண்ணாலம்
நண்ணாபோடு சாராயம்
தகதெந்தினா தகதெந்தினா
தப்பட்டெ கொட்டுறேன் தகதெந்தினா

என்று கண்டபடி படி காகமாய்க்கத்திக் கோர ராக்ஷதன் ஆரவாரஞ்செய்துகொண் டிருக்கிறான்!

இந்த சமயம் கண்ணைச் சிமிட்டினான் காட்டு வேடன்!

எழுந்தாள் மனமோஹன மாணிக்கம்!

"இந்த ராக்ஷதன் என்னிடம் உண்மையாயிருப்பான் என்று நம்பிக்கை எனக்கெப்படி உண்டாகும்?" என்று மனமோஹன மாணிக்கம் கனவேகமாய்க் கேட்டாள்.

வேலைக்காரன், கத்தியை ராக்ஷதனெதிரில் வேண்டுமென்றே காட்டினான்!

"பொண்ணே! என்னா சொன்னே, இந்தக் கத்தியாலே கொந்திப்போடு என்னை! நான் அப்புறம் உனுக்கு நம்பிக்கையோடே இருக்குறேன்.

தகதெந்தினா தகதெந்தினா
தப்பட்டெ கொட்டுறேன் தகதெந்தினா
தலெயெ வாங்கிடு தகதெந்தினா
தயாரா கண்ணாலத்துக்கு வந்துடுறேன் தகதெந்தினா
தகதெந்தினா தகதெந்தினா
தப்பட்டெ கொட்டுறேன் தகதெந்தினா

வாங்கு என்னு தலெயெ! கண்ணாலத்துக்கு வந்துடறன் சீக்கிரம்.'' என்று ராக்ஷதன் ஆடித் தலையைக் குனிந்து குனிந்து தையலிடம் வருகிறான்.

"இது தான் சமயம்! இப்போது தான் உயிர் தப்பாதுபோகும்! போட்டு விடு இருதுண்டாய்!'' என்று வேடன் சைகை செய்தான்!

எடுத்தாள் கத்தியை! போட்டாள் ராக்ஷதன் கழுத்தில்! விழுந்தான் பாவி இருதுண்டாய்!

சேனைகள் வந்தன! ராக்ஷதர்களைக் கொன்றன! அனைவரும் பல்லக்கில் அழகாகப் புறப்பட்டு விட்டார்கள்!

# முப்பதாவது அத்தியாயம்.

கேரளதேசம் அரசன்
ப்ரபுதாஸ் ஆடம்பராசாரியும்
வனஜாஸனன்! அனைவோரும்!

காலையிலெழுந்து வேலையெல்லா முடித்துக் கொலுவில் வந்து, கொற்றமன்னன், கேரளதேசத்துக் கீர்த்தியுற்ற அரசன், மந்திரிகளைக்கொண்டு மதியூகமான காரியங்களை வெகு அவசரத்தோடு நடாத்திக்கொண்டிருக்கும்போது, சேவகர்கள் ஓடிவந்துகோர்ட்டில் நடந்த விஷயங்களையும், ராஜத்துரோகக்குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் வேறு சிலரைச் சந்தித்ததையும், விளைந்த அகாதங்களையும் முறையிட்டுச் சொன்னார்கள்!

அதன் மீது * அறநெறிவழாது அன்பே வடிவமான அரசர் பிரான், அந்தக்கேஸைக் கோர்ட்டில் விசாரிக்கவேண்டிய தில்லையென்றும், தானே அதனைக் கவனித்துத் தக்கபடி செய்வதாயும் உத்தரவுசெய்து அனைவரையும் உடனே அழைத்துவரச் சொல்லினன்.

ஓடிவந்த சேவகர்கள் ஓடிச்சென்றார்கள்! உத்தரவைக்காட்டி உடனே எல்லோரையும் இழுத்துவந்தார்கள்! வந்தார்கள், அரசன் எதிரே அரைநிஷம் நின்றார்கள்! சிம்மாதனத்திருந்த அரசன் ஒரு குதி குதித்துத் தரையில் நடந்து, "தன்னியனானேன், தன்னியனானேன்!" என்று ஆடம்பராசாரியைக் கட்டிக்கொண்டு, ஐயோவென்று † அலமந்து, காலகதியுங் கோலஞ்செய்ததே என்று அழுதழுது விக்கி விக்கி அரைமணிநேரம் ஆறுதல் சொன்னர்! அங்கிருந்தார் அனேகருக்கு, ஒன்றுந் தோன்றவில்லை, யாதுந் தெரியவில்லை! அப்புறம் மன்னன் அனைவரையும்பற்றி விசாரித்தறிந்து, அந்தோ என்று பரிதாபப்பட்டு, அனைவர்க்கும் உடம்புதேற்றி, அத்தனை நாள் பட்டகஷ்டமும் அரை நிமிஷத்தில் அகன்றுவிடும்படி செய்து, கொலு மண்டபத்தில் மந்திரிகள் புடைசூழ, பிரதானிகளும் தானாதிபதிகளும் சேனாதிபதிகளும் செங்கோல் பக்கத்தில் சிறப்பாய் நிற்க,

* அறநெறிவழாத = தருமவழி பிசகாத.

† அலமந்து = வருந்தி.

அரியாதனத்திருந்து அனைவருக்கும் பின்வருமாறு அறைவானு யினன்:

"என் மந்திரிகளே, மற்றுமுள்ளோரே, பிரஜைகளே, பேரறி வாளரே! எல்லாருங்கேளுங்கள், நான்முன் அஸ்வமேதயாகமொன்று செய்தேன். அந்தசமயம் ஆடம்பராசாரியின் அரியதந்தையானவர் வீராவேசத்தோடு கோராவேசங்காட்டி, என்னை யெதிர்த்து, என் னுடன் சண்டையிட்டு, எனக்குச் சொல்லமுடியாத † இன்னல் விளைத்ததால், எனக்கும் கோபம்மீறி கொடுமைசெய்ய மனதிற்கு வந்து போராட்டத்தோடு ஏழாட்டங் காட்டி இவர்களை வருத்தி இவர்கள் தேசத்தைக் கைப்பற்றிக்கோண்டேன்! இப்பொழுது பழையராஜாவின் பேரனாகிய இந்த வனஜாஸனனைப் பார்க்கும் போது என்வயிறெல்லாம் பற்றிக்கொள்கிறது! தங்கத்தொட்டிலில் தாவிப்படுத்து, வைரப்பொம்மைகளை விளையாட்டுக்கு வைத்திருக்க வேண்டிய சிறியவயதினின்றும் சிரமப்பட்டு, இந்த சிறுவன் இன் னும் கஷ்டப்படுவதென்றால் என்னால் தாங்க எப்படியும் ஆகவில்லை!

ஆதல்பற்றி இவர்கள் தேசத்தை இன்றே தானமாக இவர்களு க்குக் கொடுத்து விடுகிறேன்! எனக்குக் குழந்தை யில்லாததால், எனக்குப் பின்னால் என்னுடைய சொந்த ராஜ்யத்திற்கும் வன ஜாஸனனே உரியவனாவான்! இதை நீங்களெல்லாரும் அறியக் கடவது!"

இவ்வாறு சொல்லிவிட்டு இறைவன், வனஜாஸனனுக்கு உத் தரவளித்து, ராஜமோதிரத்தைக் கையில்போட்டான்! அங்கிருந்தோ ரெல்லோரும் ஆனந்த சாகரத்திலழுந்திக் கரகோஷம் சிரக்கம்பஞ் செய்தார்கள். பிறகு மன்னர்மன்னன், வனஜாஸனனை வாரியணைத்து,

"அப்பா, என் அருமருந்தே! நீபட்ட கஷ்டம் நெஞ்சை வருத் துகின்றது! நான் அக்காலத்தில் அவ்வளவு கரேமுடையவனாயில்லா திருந்தால் உனக்கிவ்வளவுகஷ்டம் உண்டாயே யிராது! சென்றதைப் பற்றிச்சிந்தை வருந்துவது என்ன பிரயோசனம் எடுத்துக்கொடுக் கும்! உங்களுடைய ராஜ்யத்தை உங்களிடமே ஒப்புவித்து விட் டேன்! எனக்குப் பின்னால் என்ராஜ்யமும் உனக்குத்தான் சேரும்! உன்னைப் பார்க்கும்போதே உள்ளக்காதல் நின்னை விரும்பிற்று! இந்த ராஜ்யங்களை எள்ளளவும் பழுதுறாமல் நன்றாய் ஆளுவாய்

† இன்னல் = வருத்தம்.

என்று நம்பிக்கை யென்னமோ எனக்குண்டு! ஆனாலும் ஒன்றிரண்டு வார்த்தைகள் உறுதியாக நானிப்போது நவிலவேண்டியிருக்கின்றது! நாம் வசிக்கும் நாடு, தமிழ் நாடு, நம்பாஷையோ தமிழ்ப்பாஷை' நாட்டைப் புரப்பது நாடுறைவோர் கடமையல்லவா? நாடு க்ஷேமப்படவேண்டுமானால், பாஷை வழிப்படவேண்டுவது பரம அவசியமாகும்! ஆதல்பற்றி, நம் தமிழ் நாடு நலமுற்றோங்க வேண்டுமானால், நம் தமிழ்ப்பாஷை நலமுற்று விளங்கவேண்டும்' அதாவது, நமக்குச் சரியான தேசாபிமானம் வழியாக எப்போ துண்டாகுமென்றால், சரியான பாஷாபிமானம் முறையாக எப்போது நிலைக்கிறதோ அப்போது தான் அழகாக நாடு மோங்கும், தேசமும் செழிக்கும் பிரஜைகளும் பிரபல முறுவார்கள்! பாஷாபிமான மில்லாது தேசாபிமானம் காட்டுவது, அஸ்திவாரமில்லாது சுவரெழுப்புதல் போலாகும்! ஆதலால், முதலாவது, தேசாபிமானத்தையும் அதற்கு மூல காரணமாகப் பாஷாபிமானத்தையும் உணரச்செய்தல் முக்கியமாய் உன்னுடைய முதன்மையான கடமையாகின்றது! குடிகளும் பாஷாபிமானமாகிற குணமுடையவர்களா யிராவிடின், ஒன்றுமே நன்மை எதுவுமே கிட்டாது! வனஜாஸனா! நீ இதை நிலையாகப்பற்றிக் கொள்! எவனொருவன் தேசாபிமானமும் பாஷாபிமானமும் இல்லாதிருக்கின்றானோ, அவன் சண்டாளரிற் சண்டாளன், அறுந்த விரலுக்கும் சுண்ணாம்புகொடாத அகங்காரி! எவனொருவன் தன் தேசம் தன்பாஷை இவைகளை உன்னத நிலைக்குக்கொண்டுவர உளம் திரும்பாதிருக்கின்றானோ, அவன் காதகத்தலைவன், பாதகப் புலையன், படுசோம்பேறிகளிற் பாழடைந்த பாவிப்பயல்! எவன் தன் பாஷையை முன்னுக்குக்கொண்டுவர முயலாதிருக்கின்றானோ, எவன் நன்றாயிருப்பதைக் கண்டு நகைமுகம் கொள்ளாது பகைமுகங் கொண்டு, ஊறு சொல்லித் தூறு செய்கின்றானோ, எவன் தாயைப் பழிப்பது போல் தன் பாஷையைப் பழித்து, புஸ்தகத்தை நாடாது வயிற்றை மாத்திரம் பார்த்துக்கொள்கின்றானோ, எவன் உண்டியே உடையே, ஜம்பமே செருப்பே, பணமே நகையே, மோசமே ஆஸ்தியே என்று கம்பனை மறந்து, மேல் செய்வதைத் துறந்து, எல்லாம் வற்றலிலும் எல்லாம் ஊறுகாயிலும் எல்லாம் பண்டத்திலும் பலகாரத்திலும் எல்லாம் வண்டியிலும் படாடோபத்திலும் அடங்கு மென்று தப்பெண்ணங்கொண்டு தன் பாஷையை மறக்கின்றானோ அவன் மடையரிலுங் கடையன், மண்ணானபின் மலைப்பாம்பாகப் பிறப்பவன், மஹா சண்டாளன், மஹா துரோகி, மஹா பாபி, மஹா நீசன்!

ஆதலால், சுருங்கச் சொல்லுமிடத்து, எல்லாக்கருமத்திலும் முதற் கருமம் பாஷாபிவிர்த்தியேயாகும், எல்லாத் தருமத்திலும் முதல் தருமம் பாஷாபி விர்த்தியேயாகும்!

இந்தத் தருமத்தை, முதல் தனியறத்தை, இடைவிடாது பரி பாலித்து இன்பம் விளைப்பாய் என்றே, வனஜாஸனா, உனக்கு இந் தப் பட்டத்தை உண்மையில் நான் தருகின்றேன்! பெற்றுக்கொள்!" என்று அரசன் செங்கோலொன்றையும் சிறப்பான வைரமுடியொன் றையும் வரிசையாகத் தந்தனன்!

ராஜதுரோக குற்றத்திற்காக, வழியே செல்வானொருவன் வன ஜாஸனனோடு பிடிபட்டிருந்தவனும் விடு பட்டான்!

வனஜாஸனன் முதலானவர்களிடம் வணக்கமாய் விடைபெ ற்று அவனும் சென்று அரைமணிநேர மாயிற்று!

அனைவரும்,வீட்டை விட்டுப்புறப்பட்டு அனேக நாளாயிற்றே, அங்குசென்று அனைத்தையும் பார்த்துச் சரிப்படுத்திக்கொண்டு, அப்புறம் பட்டம்பூண்டு அரசாளலாமென்று மன்னன் பாதமலர் பணிந்து எல்லாச் சங்கதிகளையும் எதுவும் விடாமலவனிடம் கூறி வண்டிகளிலும் குதிரைகளிலுமேறி, வழியே செல்வாராயினர்!

# முப்பத்தோராவது அத்தியாயம்.

அனைவரும் வீடுசேர்தல்! துக்க சம்பவம்!

ஊரைச்சுற்றின உற்ருரெல்லாரும், அதாவது, ஆடம்பராசாரியும் அற்புத முதலியாரும், ப்ரபுதாஸனும் வனஜாஸனனும், இங்கிதமுத லியாரும், ததியாராதன ஸ்வாமிகளாகிய அப்பளாசாரி ஆமவடை யாசாரி இவர்களோடு கூட அலங்கார பட்டணத்திற்கு அழகாய் வந்துகொண் டிருக்கிருர்கள்! அல்லாசாமித் தெருவென்பது அற் புத முதலியார் வீதியின் பெயரென்பது இதை வாசிப்போருடைய ஞாபகத்திலிருக்குமென்றே நம்புகிறேம்!

அந்த அல்லாசாமித்தெருவில் அந்த கோடியண்டை நின்று பார்க்கும்போது, அற்புத முதலியார் வீட்டில் யாதொரு சந்தடியுங் காணேம்! நல்லம்மாளிடம் பொல்லாப்பு பேசுவதற்கு நாலு பெயர் வந்து கொண்டிருப்பதும், முத்தம்மாளிடம் மூசுண்டை பேரங்கள் செய்ய மூன்று நிமிஷத்துக் கொருமுறை முப்பதுபெயர் வந்து கொண்டிருப்பதும் ஏதொன்றும் காணேம், யாதொன்றும் இல்லை! காலை மணி ஆறே முக்காலுக்கு ஐந்து நிமிஷம் தானிருக்கும்! சதா விவகாரங்களும் சதா வியாபாரங்களும் எந்நேரமும் வீண் வெறுப் புகளும் வெறும் சலிப்புகளும் வம்புச்சண்டைகளும் வல்லிடி வழக் குகளும் நடக்கும் இடத்தில் ஒருபுறமாய்ச் சாற்றிய ஜன்னல் ஒரு புறமாயே சாற்றி இருக்கவும், தெருவில் ஒருவரும் சாஸ்திரத்திற் கும் காணுது சந்தடியடங்கி யிருக்கவும் பார்த்து அனைவருக்கும் உண்மையில் அஸ்தியில் பயமுண்டாய் விட்டது! அற்புத முதலி யாரைக்கண்டு அனுதினமும் "நாலு கண்ணர் வந்தார் பராக், சாமி க்கு மூன்றுகண், இவருக்கு நாலு கண்பராக்" என்றுகேலி செய்யும் இளைய சிறுவர்கள்; அனேக நாளாய் காணுதிருந்து, அப்போது தான் தோன்றிய அற்புத முதலியாரைப்பார்த்து, ஆத்திரத்தோடே கும்புகூடி அனைவருமாகக் கையைத்தட்டி, "அற்புத முதலியார் வந்து விட்டார் பராக், சாமிக்கு மூணுகண், இவர்க்கு நாலு கண் பராக்!" என்று ஒப்ச்சலொழிவின்றிக் கூச்சலிட்டுக் கொக்கரித்தார் கள்!

அனைவரும் வீட்டை நெருங்குகிற சமயம், கையில் ஒரு தோ ற்பையைத் தாங்கி, ஒருவர் சுமார் ஒரு நிமிஷம் தெருத்திண்ணையில்

நிற்க, நல்லம்மாள் ஓடிவந்து ஒருபேச்சைக்கேட்க, அங்கு நின்றவர் அரைப்பேச்சைப் பதில் கூறி அப்படியே இறங்கி அவசரமாய்ப் போய் விட்டார்!

இப்படித் திரும்பினாள் நல்லம்மாள், எல்லோரையும் எதிர் கொண்டாள் நல்லம்மாள்!

"பாவிகளே! மனஞ்சலிக்க ஊர்சுற்றி மண்ணாய்ப்போனீர்களா? என்னகேடு, இப்போது தான் ஏன் வந்தீர்கள்? நீங்கள் தான் வந்தீர்களே! கூட தோடு * யாரு? தெண்டசோற்று ராமர் ரெண்டு பேரைக்கூட அழைத்துவந்தால், கூடை சோற்றை யார் கொட்டி வடிக்கிறது!" என்று முகத்தைச்சுளித்து மூன்று ஜாடு ஜாடி, வெந்து வந்தவர்களுக்கு நல்லம்மாள் வெல்கம் † கூறினாள்.

"சும்மா இரம்மா சும்மா இரு! கிட்டவந்து விட்டார்கள் கேட்கப்போகிறது!" என்று கையமர்த்திச் சற்று கலபை அடக்கினார் அற்புத முதலியார்!

முத்தம்மாள் அப்போது தான் முறுக்கு சாப்பிடுவதை முடித்து விட்டு,

எல்லாம் வந்து விட்டார்களே! இதோ அண்ணாத்தை வந்து விட்டார், அதோ இங்கித முதலியார் அத்தான் வந்துவிட்டார், இவர் வந்துவிட்டார், அவர் வந்து விட்டார், பையன்வந்து விட்டான், அதோ அதோ மருமகப்பிள்ளை வந்துவிட்டார்! அடே பையா, பலகாரம் மறுபடியும் வெகுவாக வேண்டியிருக்கும்! ஒவ்வொருவர்க்கும் தனித்தனி ஐந்து பலம்மிட்டாய் கணக்குப் பார்த்துத் தனித்தனி பொட்லம் தயார் செய்து விடவேண்டியது! எனக்கு மாத்திரம் பத்துபலம் மிட்டாய் ஒரு பொட்லம் போதும், பத்திரம், அதற்கு அதிகமாய் வாங்கப்போகிறாய்!" என்று முத்தம்மாள் பலகாரத்திற்கு முக்கியமான ஏற்பாடுகள் செய்துகொண் டிருந்தாள்!

அனைவரும் வந்தார்கள், உள்ளே நுழைந்தார்கள்! இப்படிப் பார்த்தார்கள், அப்படிப் பார்த்தார்கள்! ஒருவரும் இல்லை, யாதொரு சந்தடியுங் கிடையாது! சற்று நேரத்தில், உள்ளேயிருந்து பாரிஜாதம் ஒருவாறு முகத்தைவைத்துக்கொண்டு, வாசலுக்குவந்து எல்லோர்க்குமாக ஒரு கும்பிடு இயைந்தபடி போட்டுவிட்டு, அண்ணாத்தையை அழைத்துக்கொண்டு அடுப்பங்கரைக்குப் போய்விட்டாள்!

* தோடு=துணை. (தெலுங்கு பதம்).

† வெல்கம்=நல்வரவு.

"எங்கே கண்மணி? எங்கே கண்மணி?" என்று அற்புத முதலியாரும் ப்ரபுதாஸனும் ஆவலுடனே கேட்டார்கள்!

"கண்மணிக்குத் தான் கஷ்டமாயிருக்கிறது! இருபது நாளாய் சுரங்கண்டு, இருமலும் க்ஷயமும் எங்குமில்லாதபடி இன்னல் விளைத்து, பாயும் படுக்கையும் வைத்தியரும் கையுமாக வாதனைப்பட்டுக் கொண்டிருக்கிறது! எங்கள் யாருக்கும் இராத்தூக்க மில்லை: பகற்றூக்கமில்லை! வைத்தியரைக் கேட்டால், 'எப்படியாகுமோ ஏதாகுமோ என்னுலானது யான் பார்க்கிறேன், கடவுளிருக்கிறுர்' என்று திடமாய்ச் சொல்லாமல் சந்தேகத்தில் விட்டு சங்கடப்படுத்துகிறுர். என்னசெய்வது, ஈஸ்வரன் செயல்!" என்று முத்தம்மாள் மொரோ வென்றழுது விட்டாள்.

"அப்படியா!" என்று கட்டினதுணியோடும் கழற்ருத சொக்காயோடும் அற்புத முதலியாரும் ப்ரபுதாஸனும், "ஐயோ ஐயோ அம்மா அம்மா அம்மா" வென்று மெத்தைமேலோடி கண்மணி படுத்திருந்த அறையின் கண்ணுடி ஜன்னலில் மெள்ளப்பார்த்து மெதுவாக நிதானித்தார்கள்.

பின்னுகவே ஆடம்பராசாரியும் ஓடிச்சென்று ஒரு புறம் நோக்கினுர்.

கண்மணி அப்போது தான் தூக்கத்திலிருந்து கண் விழித்து இப்படிப்பார்த்து அப்படிப்பார்த்து "யாரங்கே?" என்று மெதுவான குரலில் ஒருதரம் கேட்டு ஓயாத சப்தத்தோடு ஒருமணி நேரம் இருமினுள்.

"அம்மா நாங்கள் தான், அம்மா நாங்கள் தான்" என்று மூவரும் ஓடி முன்னே உட்கார்ந்தார்கள்.

அற்புத முதலியார் "அம்மா உடம்பு என்னமாயிருக்கிறது? அதுகெட்டது, மலைபோல்வந்த சங்கடம் பனிபோல் நீங்கி விடும்! நாங்களும் வந்துவிட்டோம் இனிமேலொன்று மிராது' எல்லாம் சரியாய் விடும்! பயப்படாதே!" என்று தைரியங்கூறி அவள் கையை அருமையாய்த் தடவிக்கொடுத்தார்.

ப்ரபுதாஸ், காலண்டையுட்கார்ந்து "அம்மணி, கண்மணி, உனக்கு என்னவேண்டும்சொல் ஒன்றுக்கும் பயப்படாதே! வைத்தியம் உனக்குத் திருப்திகரமாக இருக்கிறதா? என்ன வேண்டுமோ

சொல், எதுவேண்டுமோகேள்!" என்று காலைப்பிடித்துக்கொண்டு ஈயை ஓட்டிக்கொண்டிருந்தான்.

ஆடம்பராசாரிக்குச் சொல்லமுடியாத துக்கம் பொறுக்க முடியாது விளைந்து, கைகுட்டையை யெடுத்துக் கண்ணைத்துடைத்து, "என் கண்ணே, நாங்கள் தான் ஊரைச்சுற்றி உருக்குலைந்து வந்தோமே, அதோடு போகக்கூடாதா அஷ்டமத்துச்சனி! உன்னையும் பிடித்து இப்படி வாட்டவேண்டுமா? ஒரு பேச்சு பேசுவது முன் பத்து இருமல் ஒருமிக்க வந்து, ஒன்றுஞ் சொல்லவொட்டாது வருத்தஞ் செய்து வாயாட்டங் கொட்டுகிறதே" என்று விசிறியொன்றைக் கையில் வைத்துக்கொண்டு முகத்துண்டை விசிறிக்கொண்டிருந்தார்.

இந்தத் தடபிடலை எப்படியோ தெரிந்துகொண்டு ஆமவடையாசாரியும் அப்பளாசாரியும், மெத்தைமேல் வந்து சற்று நிதானித்து,

"நன்னாயிருக்கு ஸ்ரீய: பதி செயல்! யாத்ரா பிடிதரானவர்களுக்கு ஸ்ரமபரிகாரார்த்தம் கன்னிகா ஜாட்யம் ஸம்பவித்ததாக்கும்! நன்னாயிருக்கு நன்னாயிருக்கு! க்ரஹ சாரம் க்ரஹ சாரம்! ஸ்ரீய: பதி ஒன்னும் நோக்கு கெடுதிவர வொட்டான்." என்று சொல்லிவிட்டு, தெருத்திண்ணையில் குந்தி ஸஹஸ்ர நாமத்தை ஜபித்துக்கொண்டிருக்கிறார்கள்.

"எப்படி யிருக்குதம்மா?" என்றார் அலைச்சல் பட்டுச் சலித்த அற்புத முதலியார்

"என்னமா யிருக்குதம்மா?" என்றான் ப்ரபுதாஸ்!

"என்னவேண்டும் சொல்லம்மா" என்றார் ஆடம்பராசாரி!

அப்போது ஒருதரம் அவசரமாகச் சொல்லவந்து, ஆ என்று வாயைத் திறப்பதற்குள் ஆயிரம் இருமல் வந்து சொல்ல முடியாமல் தொந்தரை விளைத்தது!

பிறகு, "உங்கள் சமாசாரங்களைச் சொல்லுங்கள்! வனஜாஸன அத்தானுக்கு உண்மையாக கல்யாணம் நிறைவேறி யிருந்தால் நல்லதென்று நினைக்கிறேன்! கல்யாணம் ஆய்விட்டதல்லவா?" என்று கண்மணி கேட்டாள்.

"கல்யாணம் ஆய்விட்டது! அத்தான் சுகமாய்த்தானிருக்கிறார்! ஒரு கல்யாணத்திற்கு இரண்டு கல்யாணம் ஆய்விட்டது; கல்யா

ணம் ஆய்விட்டது, மூலையிலுட்கார்ந்து மூட்டுப் பூச்சியை நசுக்கிக் கொண்டிருந்தார். அந்த சமயம் நான் போய் அவரைக்கண்டு பிடித்தேன், அத்தானைக் கேலிசெய்தேன், அழைத்துக் கொண்டுவந்தேன்." என்று ப்ரபுதாஸ் ஏளனமாய்ச் சொன்னான்.

இதைக்கேட்ட கண்மணி, ஒருதரம் நகைத்து, ஒருதரம் இரும்பி, ஒரு அவுன்ஸ் பால்சாப்பிட்டு, மறுபடி ஒருதரம் நகைத்து,

"அண்ணாத்தை! அந்தக் கதையெல்லாம் எனக்குச் சொல்லுங்கள்! அப்புறம் மற்றதும்பேசலாம்" என்று கண்மணி கேட்டு, கதைக்காக ஆவலுடன் காத்துக்கொண் டிருந்தாள்!

அதன் மீது, எல்லாச்சங்கதிகளையும் பிரபுதாஸ் இல்லாத சிங்காரத்தோடு கண்மணிக்கு எடுத்துக் கூறினான்.

இதை யெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த கண்மணி அழவேண்டிய இடத்தில் அழுதும், சிரிக்கவேண்டிய இடத்தில் சிரித்தும் ஆனபிறகு, முகத்தில் ஒருவாறு சுகத்துவம் விளங்க,

"சரி! எல்லா அவஸ்தைபட்டும், என்னமோ வந்து சேர்ந்தீர்கள் ஒருவழியாய்! இன்னும் அக்காள் *சங்கதியும் ஜகன்மோஹன சிங்காரம் அம்மாள் சங்கதியும் தான் இன்னவென்று ஏற்படவில்லை! கடவுள் அவர்களைக் காப்பாற்றுவாரே தவிர கைவிட மாட்டாரென்பதே எனது நம்பிக்கை! எனக்கு உடம்பு மிகவும் பலஹீனமாய்த்தானிருக்கிறது! நீங்களெல்லாம் போய்ச் சாப்பிட்டு, வனஜாஸனன் அத்தான் (அவர்களுக்குத்தான் கல்யாணம் ஆய்விட்டதே! இப்பொழுது என்னிடம் சாதாரணமாய்ப் பேசிக்கொண்டிருந்தாலென்ன?) அந்த அத்தான், நீங்கள் அனைவோரும், அம்மாள், அத்தை எல்லோரும் என்னிடமே இருக்கவேண்டும்! எனக்கு உடம்பு குணமாகுமென்னும் நம்பிக்கை எனக்கில்லை!" என்று சொல்வதற்குள்,

"அம்மா அம்மா அப்படி சொல்லாதே! உடம்பு சீக்கிரத்தில் சுகப்பட்டு விடும். நீ அதைரியத்தைவைக்காதே!" என்று அனைவோரும் ஏகோபித்துச் சொன்னார்கள்.

"எனக்கு அதைரியமொன்றுமில்லை. இன்னும் யாரும் சாப்பிடவில்லைபோலிருக்கிறதே! சாப்பிட்டு வாருங்கள் பேசிக்கொண்டிருக்கலாம்!" என்று கண்மணி சொல்லிக்கொண்டிருக்கும்போதே,

---

* அக்காள் என்றது மனமோஹன மாணிக்கத்தை.

"இதோ வந்துவிட்டார், வந்துவிட்டார்!" என்று முத்தம்மாள் மெத்தைப்படியேறி முறுக்கைமென்று விழுங்கிக்கொண்டே முன்னாடி நோடீஸ் முறையாகக் கொடுத்தாள்.

"யார் வந்தது யார் வந்தது!" என்று சொல்லி எழுந்தார்கள் அனைவரும்!

"வைத்தியர் வைத்தியர்" என்றாள் முத்தம்மாள்!

"சற்று முன்னேவந்து போனாரே" என்றார் ஆடம்பராசாரி!

"அவர் இங்கிலீஷ் வைத்தியர்; இவர் சுதேசவைத்தியர்!" என்றாள் முத்தம்மாள்!

"எத்தனை வைத்தியரென்று அற்புத முதலியார் மூக்காலழுது முக்கிக்கொண்டிருந்தார்!

இதற்குள்ளாக வந்துவிட்டார் இந்திரஜால மஹேந்திரசால இரும்பு விழுங்கி ஈயத்தால் செரிப்பித்துக்கொண்ட இணையில்லா வைத்தியர்! இந்தப்பட்டப் பெயர்பூண்ட அந்த சுதேஸ வைத்தியர் ஆர்ப்பாட்டமென்பது அவ்வள விவ்வளவன்று! பட்டப்பெயர் 'நெட்டநெடுக' வெகு நிகளமானதாயிருத்தலாலே, சாதாரண ஜனங்கள் சிலர் அவரை 'இரும்பு விழுங்கி' யென்றும் இலக்கணம் தெரியாத வேறு சிலர், 'ஈயசெருப்பி' என்றும் சுருக்கமாகக் கூறுவார்கள்! அவருக்கு வயது ஐம்பதும் நாலுமாக இருக்கலாம்! கறுத்த நிறமும், வெளுத்த மீசையும், கன்னத்தில் கிருதாவும், சீட்டிப்பாகை சிரத்திலும், சிகப்புச் சால்வை சிங்காரமாய்த்தோளிலும், கையில் தடியும், கக்ஷத்தில் பையும், வாயில் ஈயத்துக்கு ஒத்தாசையாக வெற்றிலைப்பாக்கும் கொண்டு தள்ளித்தள்ளாடி மெள்ள நடந்து நாலு பக்கமும் நன்றாய்ப் பார்த்து, தன் வயதிற்குமேல் தன்னைக் கிழவனாகக் காட்டிக்கொள்வார்! பால்ய ஜோஸ்யன் விர்த்தாப்பிய வைத்தியன் விசேஷமாய் விரும்பப் படுவர்களென்று உலகப்பிரசித்தியாயிருப்பதற் கிணங்க தாமும் எவ்வளவு வயதான கிழவராகக் காட்டிக்கொள்ளுகிறாரோ, அவ்வளவிற் கவ்வளவும் தமக்கு மதிப்பு அதிகப்படுமென்று அவர் அவ்வாறு நடப்பது வழக்கமாயிருந்தது! உட்காரும்போது, 'சங்கரமஹாதேவ' என்பதும் பணத்தை அடித்துக் கொண்டு போகும்போது, 'ஸ்வாமி ரக்ஷிக்க!' என்பதும், அந்தந்த சமயத்திற்கேற்ற ஆஷாடபூதிப்பேச்சைப் பேசுவதும் அவருக்கு இபற்கை! பிராணன் போவதற்குப் பத்து நிமிஷம் இருக்கும்போதும் ஆசைகாட்டிக் காசையடித்துக் கொண்டுபோவது அவருக்குச்

சுபாவமாயமைந்திருந்தது! "வெங்காயக்குடி ஜமீன்தாராகிய வினை தீர்த்த முதலியார் ஆயிரம் வராகன் செலவிட்டு, அவருக்காக முடித்த அண்டபகிரண்ட கண்ட பேரண்டக் குளிகையில் அரை உரை போட்ட மாத்திரத்தில், அனேத்தாகும் ஜன்னியும் அக்கணமே பறந்து விடும். ஒரு உரைக்கு நூறு ரூபாயாகும். இதற்கு அரை உரைபோதும்! ஐம்பது ரூபாய் கொடுத்தால் அரை உரை கிடைக்கும்! இந்த சமயம் தப்பினல் எந்த சமயமும் உதவாது! நான் அந்த குளிகையை அல்ப சொல்பமானவர்களுக்குத் தருவதில்லை. நூறு ஆயிரம் கொடுப்பவர்களுக்கு ஊறுகாய்ச் சாற்றில் ஒரு சொட்டு கொடுப்பதுபோல் தருவது வழக்கம். அதிலேயே ஆயிரத்தெண்ணூறு வாய்வுகளும், எண்பத்தெண்ணுயிரம் பித்தங்களும், இருபத்தேழாயிரத்து முந்நூற்று முக்கால் சீதளங்களும் ஓட்டம் பிடிக்க, வந்த எமன் வாட்டம் பிடிப்பான்." என்று ஆயிரம் பேச்சுப் பேசி ஐம்பது ரூபாயை அடித்துக்கொண்டு அண்டை வீட்டருகில் போகும்போதே ஆத்துமா போய்விடும். அப்படிப்பட்ட அசகாய சூரர், இப்போது நாம் கூறும் இந்திர ஜால மஹேந்திரஜால இரும்பு விழுங்கி ஈயத்தால் செரிப்பி இணையில்லா வயித்தியர்!

இவர் வந்ததும், எல்லோரையும் பார்த்து, எப்போது வந்தார்களென்று எல்லாவற்றையும் விசாரித்து, சங்கரா மஹாதேவா என்று தரையில் உட்கார்ந்து, கண்மணி கையைப்பார்த்து, நான்கொடுத்த காளகண்ட அவிழ்தத்தில் நால்பங்கு சீதளம் காலில் இறங்கிப்போயிற்று! இதற்காக முந்நூற்றறுபது வாகடங்களையும், எண்ணூற்றெழுபது சாஸ்திரங்களையும் சிக்கறுத்துப் பார்த்த பின்னரே, சிந்தை தெளிவாயிற்று! அதுகெட்டது! இந்த நோய் எனக்கு எம்மாத்திரம்! வரவா செலவா? செத்துப்போய் விட்டானென்று ஒருவனை எடுத்துப்போட்டு விட்டார் தெருவில்! போனேன் நான், எடுத்தேன் பெட்டியை, உரைத்தேன் மாத்திரையைக் கொடுத்தேன் உள்ளுக்கு! இப்படித் திரும்பினன் அப்படித் திரும்பினன், எழுந்து உலாவினன் ஏழு நாளில்! ஆதலால் நீங்கள் கொஞ்சமும் பயப்படாது ஐந்து பத்துரூபாய் அடுக்காக எடுத்துக் கொடுப்பீர்களானல், ஐந்து நாளையில் சவுக்கியப்படுத்துவேன்! யோசனை செய்யுங்கள், நான்போய் நாளைக்கு வருகிறேன்!" என்றுசொல்லி கிழவைத்தியர் எழுந்து தெருவிற்குப்போய் விட்டார்!

அனைவரும் எழுந்து அடுப்பங்கரைப் பக்கத்திலுள்ள ஹாலின் கண் உட்கார்ந்து, வேண்டா வெறுப்பாய்ச் சாப்பிட்டு, விரைவிலெழுந்து வெளியேவந்தார்கள்! அப்பளாசாரிக்கும் ஆமவடையாசாரிக்கும் அழுமூஞ்சி ஸ்வாமிகள் வீட்டில் ஆராதனம் நடந்தது!

"ஸ்வாமிகளே! என்னமாயிருந்தது ததியாராதனம்?" என்றான் ப்ரபுதாஸ்!

"நேக்கு பாதகமில்லை! நேக்கு பாதகமில்லை! போக்யமாயிருந்தது போக்யமாயிருந்தது! ஸ்வாமிகள் தான் ஸ்வல்பமாத்ரம் திருமுக மண்டலம் அக்னிஜ்வாலை வீசுறு! மற்றப்படி பாதகமில்லை மற்றப்படி பாதகமில்லை! ஜாட்யத்தைப்பாருங்க!" என்று பிராமணர்களொவ்வொருவரும் பிரீதியாகச் சொன்னார்கள்!

கண்மணிக்கு வரவர நோயதிகரிக்கிறது! இருமலும் முற்றி மயக்கமும் அதிகரித்து, ஒரு அவுன்ஸ்பாலும் ஒரு காலத்திற் சாப்பிடுவது வெகு கஷ்டமாய் முடிந்தது! ஒரு ராத்திரியெல்லாம், நல்லம்மாள் முத்தம்மாள் பாரிஜாதம் இவர்கள் ஒவ்வொருவராய் மாற்றிமாற்றிக் காவல்காத்துக்கொண் டிருந்தார்கள்! பொழுது விடிந்து, இப்போது ஏழுமணியாயும், சூரிய கிரணங்கள் ஜன்னல் சந்தில் கம்பி கம்பியாய் நுழைந்து பொழுது விடிந்ததென்பதைப் பழுதில்லாமல் காட்டவும் இன்னும் தூங்கிக்கொண்டு இளைப்புற்றிருக்கிறார்கள்! இங்கித முதலியார் மெதுவாய்ச்சென்று, "அம்மா நல்லம்மா முத்தம்மா!" என்று மெதுவான குரலில் மெள்ளக் கூப்பிட்டார்!

"ஆங்" என்று குரல் கொடுத்தது, நோயாளியாகிய கண்மணி!

அதன் மீது அனைவரும் எழுப்பப் பட்டார்கள், கதவுகள் திறக்கப்பட்டன, ஜமக்காளங்கள் விரிக்கப்பட்டன! அனைவரும் காபி சாப்பிட்டு அருகில் வந்து உட்கார்ந்தார்கள்!

"அப்பா, எனக்கு ராத்திரி இருந்த இருமலும் வந்தரத்தமும் இவ்வளவென்று கணக்கிட எவ்வளவேனும் இயலாது! நான்பிழைப்பேனென்று நம்பிக்கை எள்ளளவும் இல்லவேயில்லை! இந்த அத்தான் வனஜாஸனன் என்னைக் கட்டிக் கொள்ளா திருந்தது அதிக உத்தமந்தான்!" என்றாள் கண்மணி!

இதைக்கேட்ட வனஜாஸனனுக்கு, எங்குமில்லாத துக்கம் எப்படியோ விளைந்து விட்டது! மொரோ என்று அழுது கைகுட்டை

யாற் கண்ணைத்துடைத்து மூக்கைச்சிந்தி சுவரில் சாய்ந்து தன்னையு மறந்து தவஞ் செய்பவன்போல் ஓய்ந்து விட்டான்!

"அத்தான்! நீங்கள் வருத்தப்படவேண்டியதில்லை! உண்மையைத்தான் நான் சொல்லுகிறேன்! உங்களுடைய அழகுக்கும் என்னுடைய அவலக்ஷணத்திற்கும் எப்படிச்சரிப்படும்! அது தெரியாமல் இவர்களெல்லாம் அவ்வித ஏற்பாடு செய்யத்துணிந்தது அறியாமையே யன்றி வேறன்று! அழகில்லாமை மாத்திரமன்று, பூர்வ ஜன்ம பாபவிசேஷத்தாலே அவலக்ஷணமும் கோரஸ்வரூபமுமே என்னிடம் குடிகொண்டு விட்டது! அஃது எப்படியானாலும் ஆகட்டும்! நீங்கள் அந்த விஷயங்களையெல்லாம் நினைத்து அவதிப்பட வேண்டாம்! என்னுடன் கூடவேயிருந்து என்னை எடுத்துப்போட்டு விட்டு அப்பாற் போகவேண்டியது! ஒருவேளை நான் அழகாயும் நல்லவளாயும் மறுஜன்மத்திற் பிறப்பேனானால், அப்பொழுதாவது உங்களை நான் கல்யாணஞ்செய்து கொள்ளாமல் ஒருபொழுதும் விடப்போவதில்லை!" என்று கண்மணி இருமி இருமிச் சிரித்தாள்!

அவள் சிரித்தாள், மற்றவர்களெல்லாரும் அழுதார்கள்! அறையின் முழுவதும் அழுகை கோஷ்டமே அதிகமாய் விட்டது! கண்மணி தவிர, ஒருவர் பாக்கியில்லாமல் ஓயாது அழுது விட்டார்கள்! ஒருவர் முகத்தைத்திறந்து, ஒருவர் மற்றொருவரைப்பார்க்க ஒன்பது நிமிஷமாயிற்று!

மறுபடியும் கண்மணி, சற்று இருமிச் சற்று நிதானித்து, "என் அழுகிறீர்கள் இப்படி! எத்தனை நாளைக்கு உயிரோடிருந்தாலும் எமனுக்கு ஒருநாள் இரையாகவேண்டுவதுதானே! நெருப்பாற்றின் மீது மயிர்ப்பாலம் போன்றது இவ்வாழ்க்கை! அதன் மீது நடந்து செல்வோர் ஆபத்தையும், நிச்சய மின்மையையும் சற்றேனு முணராது, அகம்பாவமடைந்து ஆணியடித்துக்கொண்டு ஆயிரமாண்டு வாழ்வோமென நினைத்து அப்புறமும் சாவுண்டென்பதையே அகத்தில் வைக்காது கர்வங்கொண்டு காலங்கழிக்கிறார்கள்! எனக்கு அப்படிப்பட்ட இறுமாப்பு ஏதொன்றும் கிடையாது! முன் சிலதுர்க்குணங்கள் அம்மா பழக்கத்தாலும் அப்பா ஆதரிப்பாலும் அத்தை சுள்ளாப்பாலும் என் பூர்வகர்மத்தாலும் வேரூன்றி விகற்பஞ் செய்துகொண்டிருந்தன! அவைகளை இப்போது அறவே ஒழித்தேன்! நல்லவளானேன், நல்லதே செய்வேன், நல்லவளாகவும் அழகானவளாகவுமே பிறப்பேன்! இறப்பைப்பற்றி இப்போது பயமேயில்லை! எல்லையில்லாத அழகைப்படைத்து மறுஜன்மத்தில் எங்கு மில்லாத

வனஜாஸன அத்தானையே வண்மையாக நான் கல்யாணஞ் செய்து கொள்வேன்! அத்தான், இந்த ஜன்மத்தில் எனக்கு உங்கள்மேல் ஏதும்கோபம் நேரவே நேராது! அப்பாவும் அம்மாளும், என் மீது கோபிக்கா திருக்கவேண்டும், நல்லவர்களென்கிற பேரை நலமாகப் பெறவேண்டு மென்பதே என் கோரிக்கை! ஆடம்பராசாரி மாமா ஆர்ப்பாடத்திற்கு அதிகம் செலவழித்தாலும், அத்தையும் அவ்வளவு கோபத்தையும் தீக்ஷண்யத்தையும் கொடியிற் கட்டிப் பறக்க விடலாகாது என்று கோடிவந்தனஞ் செய்து கும்பிட்டுக் கேட்டுக் கொள்ளுகிறேன்! எனக்கென்னமோ காலமாய் விட்டது! நீங்கள் இனிமேலாவது வீண் சங்கடங்களுக் காளாகாது, நீண்ட நாள் வாழ் வீர்களென்னும் கோரிக்கையோடு தான் இந்தச் சங்கதியை எடுத்துரைப்பது நான்! முதலில் உங்களுடைய துர் நடத்தையாலும் துர்ச்சகவாசத்தாலும், நானும் ஏறுமாருகத் தாறுமாறுகள் செய்திருந்த போதிலும் இந்தநோயே எனக்கு இயைந்த உண்மையை எடுத்தோதிற்று! நல்லவளானேன், நல்லகதிக்குப் போகப்போகிறேன்! என்னைப்பற்றிய கவலை எள்ளளவும் உங்களுக்கு வேண்டியதில்லை! பிரபுதாஸ் அண்ணுத்தைக்குப் பாரிஜாதத்தை மணம் செய்துவிடவேண்டுமென்பது எனது கோரிக்கை! அதில் ஒரு கஷ்டமுமில்லை! இருவரும் சம்மதப்பட்டே யிருக்கிறுர்கள்! நானிருந்து பார்ப்பதற் கில்லாவிடினும், நீங்களாவது சீக்கிரம் முடித்துக் கண் குளிரப் பாருங்கள்" என்று கண்மணி எல்லாக் கோரிக்கைகளையும் இயல்பாய்ச் சொல்லி இருமி இருமி இனிச் சமாளிப்பதெப்படி யென்ருய் விட்டது!

கண்மணி பேசும்பொழுதும் பேசியான பிறகும், அங்கே யிருந்த அனைவரும் கண்ணீர் விட்டு அழுதுகொண்டே யிருந்தார்கள்! கண்மணி அனைவர்க்கும் தைரியஞ்சொல்லி, சாப்பிட்டு வரும்படியாய் ஏற்பாடு செய்தனுப்பினுள்!

அனைவரும் சாப்பிடப்போவதும் மறுபடியும் வந்து கண்மணியிடம் காவல் காத்துக்கொண்டு காலங்கழிப்பதுமாக இருந்தார்கள்! வரவரக்கண்மணிக்கு நோயதிகரித்து மரணவேளை மஹா சமீபத்தில் வந்து விட்டது! ஆங்கில வைத்தியர் வந்தார், ஆகாயத்தையும் பூமியையும் உற்றுப்பார்த்துக் கையையுங் கடிகாரத்தையுஞ் சற்றுப் பார்த்து, வாட்டம் என்பது நாட்டத்தில் தோன்ற, அற்புத முதலியாரை அழைத்துக்கொண்டுபோய் அனைவரும் சீக்கிரம்

சாப்பிட்டாக வேண்டுமென்றும் இன்னும் அரைமணி நேரத்தில் இறந்து விடுவாள் கண்மணி யென்றும் இயம்பிவிட்டுச் சென்றார்!

இரும்பு விழுங்கி ஈயச்செரிப்பி இணையில்லா வைத்தியர் அப்போது மறுபடியும் வந்து அறையிலிருந்த ஐம்பது ரூபாயை மாத்திரை செய்ய அடித்துக்கொண்டு அப்படியே போய்விட்டார்!

பேசினதற்கு ஐந்தும் தும்மினதற்கு ஆறுமாகப் பில் போட்டு அப்போதே மொத்தம் சேர்த்து அனுப்பி விட்டார் ஆங்கில வைத்தியர்!

அனைவரும் சுற்றி யிருக்க, யாதொரு வருத்தமுமில்லாமல், உள்ளுக்குள்ளே யடங்கி ஒரு மணி நேரத்தில் உயிர் துறந்தாள் கண்மணி! அங்கிருந்தோர் வருத்தம் யாராலுஞ் சொல்ல முடியாது! விழுந்தார்கள், எழுந்தார்கள், அழுதார்கள், அலறினார்கள், துடித்தார்கள், பதைத்தார்கள், அறைந்து கொண்டார்கள், மோதிக் கொண்டார்கள்!

வீட்டில் ஆவது பெருங்கோஷ்டமானால், வெளியாருக்கு உத்தரவு சொல்வது இனியாரால் முடியும்? என்ன கஷ்டம் வந்தபோதிலும், என்ன இளைப்பு நேர்ந்தபோதிலும், நல்லம்மாளும் முத்தம்மாளும் வல்லவர்களாகவே அதற்கும் வக்கணையோடே காணப்பட்டார்கள்! தெருவிலே போய்க்கொண்டிருந்த தீ மூஞ்சிம்மாளும் அவளோடே மருமகள்மேல் ஆயிரம் குற்றஞ் சொல்லிக்கொண் டிருந்த அதிகப் பிரசங்கியம்மாளும் அழுகைக்குரலைக்கேட்ட மாத்திரத்தில் உள்ளேசென்று ஒரு குதி குதித்து, தரைக்கும் தூலத்திற்கும் தம் திம்மென்று எகிறியிறங்கிக்கொண் டிருக்கிறார்கள்! வீட்டார் செத்தால் நாட்டார்க்கு வேடிக்கை நம் ஊர் நடக்கை! விசனப்படுவோரையும் இழுத்து வீணுக்குவந்தோர் மார்மேலடித்துக்கொள்வது மஹா சங்கடத்தைத் தருவதாயிருக்கின்றது! நம் ஊர் முட்டாள் ஸ்த்ரீகளுக்கு அழுகையென்றால் ஆனந்தம், வக்கணை பாடுவது வாழைப்பழம் விழுங்குவது, குதித்துப்பாடுவது, பால் (Ball) கச்சேரியாடுவது! வேறு காலத்தில் விளையாட்டுக் கிடமில்லையென்று சாவுகாலத்தில் ஜோராய்க்குதிப்பதும் நீராப்பக்கரைவதும், வட்டமிட்டு ஸர்க்கிலாய் * வாசல் முழுதும் சுற்றிக் கோரப் பாட்டைக் கொடுமையாய்ப் பாடுவதும் என்ன விபரீதம்! உண்மைச் சாவாளிகள் உளங் கலங்கி உடல் வருந்தி பிராணனிருக்குமோ பிராணன் போகுமோ

* ஸர்க்கில்=ஸம்பூரணச்சுற்று.

என்று ஈனஸ்திதியிலிருந்துகொண் டிருக்கும்போதும், வழியே தோன்றிய வழுதலங்காய் அம்மாளும், சந்திலிருந்து குதித்த சண்டைக்காரம்மாளும், ஊர்ச்சண்டையை விலைக்கு வாங்கிய ஊமத்தையம்மாளும், நாலுபேர் கலகத்திற்கு நான் தான் அதிதேவதையென்று ஒரு கலகத்தை ஒன்பது கலகமாக்கிய உறைப்புப்பேச் சம்மாளும், உடம்புவளையாது உயரமாய் நிற்கும் நீண்ட நெடுமரத்தம்மாளும், குனிந்துக்கோணி வளைந்துதோன்றிய வாழைமரத்தம்மாளும், காரப்பேச்சம்மாளும் கலகப்பேச்சம்மாளும் கோரப்பேச்சம்மாளும் கொடுமைப் பேச்சம்மாளும், குளிர்ந்த கொள்ளிபோல் மலர்ந்து பேசி மஹிமை விளக்கும் மகிமைத்தாயம்மாளும், கடுகுமுகத் தம்மாளும் கடுகு ரோகணியம்மாளும், சுக்குதிப்பிலி சுருக்கிடுமம்மாளும், மிளகு மிளகாய்போல் எரிவந்தம் விளக்கும் ஏறுமாறம்மாளும், நாரதம்மாளும் தூர்வாஸம்மாளும், விஸ்வாமித்ரம்மாளும் வீண்பேச்சம்மாளும், துரோபதையம்மாளும் துலுக்கானத்தம்மாளும், காளியம்மாளும் கூளியம்மாளும் கணக்கு வழக்கில்லாத அம்மாளும் தாமாகவேவந்து விசனக்காரரை விருதுக்குக்கூறி அழுகைக்குச் சவாலிட்டு ஆர்ப்பாட்டமாய்ப்பாடி, குதித்தலுக்குத் தொடங்கிக் கூடவேயிழுத்தால், கைகாலோய்ந்தவர்கள் கைலாஸம் போவாரென்பதில் யாதுதடை? ஆனால் 'பழக்கங் கொடியதுபார் பாறையினைக்கோழி கிழிக்கும்' என்னும் பழமொழிப்படி, சக்தியில்லாதவர்களுக்கும் வழக்கத்தால் விருப்பம் உண்டாவதும் சகஜமே!

இங்கு கண்மணி யிறந்ததும், நல்லம்மாளும் முத்தம்மாளும் நாலாயிரம் பேரானாலும் நன்றாகப்பாடி முதலாக'ப்ரைஸ்' வாங்குவதே சரியான காரியமென்று ஊக்க அழுகையை உறுதியாகப் பிடித்தார்கள்!

வாசலெல்லாம் சுற்றி வளைந்து கொண்டார்கள் எல்லோரும்! கையோடு கையை முதுகாலே சேர்த்து, சாவகாஸப்பாட்டை முதலில் சாவதானமாய்ப்பாடினார்கள்! இதில் ஒருவர்க்கொருவர் போட்டி! 'சாதாவக்கணை அவள் பாடினாள், நான் கல்லிழைத்த ஒப்பாரி நன்றாய்ப்பாடினேன்!' என்று சற்றுப்பொறுத்து ஜம்பமாய்ச்சொல்லிக்கொண்டாள் ஜம்புல்காரி யொருத்தி! இப்படி வளைந்து நின்று வாசலில் பாடுவது, முதலாவது, சாவகாஸப்பாட்டென்று முறையாகச்சொல்லப்படும். சாவகாஸப்பாட்டென்பது, அவசர மில்லாமல் ஆலாபனை செய்து, செத்தவருடைய சிங்காரப்பேச்சையும்,

பிரதாபப்புகழையும், சரித்திரப்போக்காய் சாஹித்யத்தோடு பாடுவது! இந்தப்பாட்டை இப்போது பாடினுரெல்லாரும்!

பொன்னுக்கொடத்துக்குப் பொட்டிட்டுப் பார்க்கணுமோ
மின்னும் ஒளிக்கு மினுக்கு செய்து பார்க்கணுமோ
ஹ ஹ ஹ ஹ ஹ ஹ ஹ
அத்தை யிண்ணு கூப்பிட்டே அங்கமெல்லாம் உருவுச்சே
மாமியிண்ணு கூப்பிட்டே மனசெல்லாம் மயங்கிச்சே
ஹ ஹ ஹ ஹ ஹ ஹ ஹா

என்று இவ்விதமாக முதலில் சாவகாஸப் பாட்டைச் சாவதானமாய்ப் பாடி வாசலைச்சுற்றி வக்கணை சொன்னுர்கள்! இது மயிரிழவு என்றும் பெயர் பெறும்' தீபாவளித் தலைமுழுகியபின் திருத்தமாய் தலைமயி ராற்றிக்கொள்வதுபோல, தலைமயிரை விரித்துக்கொண்டும் தலைமயிரைச் சிக்கறுத்துக்கொண்டும் சுற்றிக்கொண்டும் உட்கார்ந்து கொண்டும் அழுவதானமையால் அந்தப்பெயரை இந்த அழுகை ஏற்றுக்கொண்டது! இதற்குப்பின் 'மாரடிப்பு' என்பது மற்றொரு வித அழுகை! அல்லாசாமிப் பண்டிகை அஷ்டமதினத்தில் திருவல்லிக்கேணியில் அடித்துக் கொள்வதுபோல், வந்தார் போனுரெல்லாரும் கையைத்தூரநீட்டிக் கிட்டவரும்போது மெத்தென்று வைத்துக்கொள்ள, சொந்தக்காரர் மாத்திரம் தப் திப் என்று மாரையுடைத்துக் கொண்டுஅவசரமாய்க் காலந்தள்ளி ஆத்திரமாய்ப்பாடுவது மாரடிப்பு என்று பெயர் பெறும். முதல் பாட்டு ஆலாபனையானுல், இரண்டாவதைக் கீர்த்தனையென்று சொல்லலாம்!

## பாட்டு.

அப்படியிண்ணு சொன்னெயே
ஆவட்டு மெண்ணெயே
நகையைப் பார்த்தெயே
மோராவைக் கேட்டெயே
ஜிலேப்பி திண்ணேயே
ஜம்புனு பண்ணெயே
எப்படியம்மா இருப்பேன்
என்னமாடி அம்மா பொழைப்பேன்

ஹா ஹா தம் திம் என்று மாரிலடித்துக்கொண்டார்கள் அனைவோரும்!

வேளாள அழுகை யென்று வேறென்றுண்டு. அது தான் தூலத்திற்கும் தரைக்கும் குதித்துக் கொக்கரிப்பது. 'அழாதவள் சோதா, அழுதவள் பாதர்! குதிக்காவிட்டால் குரங்கு, குதித்துப் பாடினால் கோமேதகம்.' என்று அவர்களுக்குள் பெரிய அபிப்பிராய முண்டாய் விட்டது! அந்த விதமாகவும், அனைவரும் அழுது தொலைத்தார்கள் இங்கேயும்!

முன்னையும் ம் ம் ம்
பின்னையும் ம் ம் ம்
வண்டியிலும் ம் ம் ம்
கோச்சிலும் ம் ம் ம்
பைநிறைய.........
காசுவைச்சி.........
காதுநிறைய.........
நகைபோட்டு......

இந்தப்பாட்டில் தாளம் அறுந்துவிழும்! அடித்துப்போட்ட தாளம் ஆகாஸத்தைக் கலக்கி விடும்!

ஆர்ப்பாட்டமெல்லாம் ஆனபிறகு, வந்தவர்கள் அழுவதை வாகாய் நிறுத்திவிட, சொந்தக்காரர்கள் தங்கள் சொந்தத்தை வந்தவர்களுக்கு எண்பிக்குமாறு, ஏகாந்த சேவையாக, ஆலாபனை செய்து பிரலாபனை செய்வார்கள்! இதற்கு 'மறுபடியும் நின்ற துக்கம்' என்று பெயர்! இதனால்தான் சொந்தக்காரரின் அழுகைச்சாமர்த்தியம் அழகாகத் தெரிந்து கொள்ளலாம்! அழுகைப் பரீக்ஷையில் கடைசிக் கேள்வி, கடினமான கேள்வி, இதுதான்! இதைப்பிடித்துத்தான் அண்டை வீட்டம்மாள் அபிப்பிராயங் கொடுப்பதும் எதிர் வீட்டம்மாள் பொறுமைப் படுவதும்!

எல்லா ஆர்ப்பாட்டமுமாயிற்று, கண்மணியும் தகனமாயிற்று, சுருக்காகக்காரியம் முடித்து சுபஸ்வீகாரணமும் செய்துவிட்டார்கள்!

# முப்பத்திரண்டாவது அத்தியாயம்.

முடிவுச்சந்தி மங்களப் பாட்டு

அற்பசி மாதத்தின் நிலவு அழகாயிருக்கிறது! * சாத்கால வருணையில் சந்திரவர்ணனை மெகு சுந்தர முடையது! வானத்தில் இடைவிடாது மேகங்கள் வெளுத்து நெருங்க, வெள்ளைச்சந்திரன் விண்ணில் பிரகாசிப்பது, தோய்ந்த எருமைத்தயிரின் நடுவில் வெண்ணெ மொத்தை விளங்குகின்றது போலாகும்! வாடைக்காற்று சாடியடிக்கின்றது, அந்தரமரங்கள் ஆடியலைகின்றன! இலைகள் உதிர்கின்றன, பூக்கள் பறக்கின்றன! பொன்போற் பொலிந்து, கொன்றைப் பூக்கள் குலாவியிருக்கின்றன! மழைகாலத்தில் மல்லிகைப் பூக்காணுது, மங்களகரங் காட்டும் மஞ்சள் சாமந்தி மலிந்து கிடக்கின்றன!

அழகைப் பார்த்துக்கொண்டே ஆனந்தப் பட்டுக்கொண்டே, அற்புத முதலியாரும் ஆடம்பராசாரியும், இங்கித முதலியாரும் இரண்டு ஐயங்கார்களும், வீதியில் உலாவி வீண்வார்த்தை பேசிக் கொண்டிருந்தார்கள்!

"ஐயன் விட்ட செயலுக்கு யாரென்ன செய்யலாம்! நடந்தது நடந்துபோய் விட்டது, நாமென்ன செய்யலாம்! இனியாக வேண்டிய காரியங்களுக்கு இப்போதே ஏற்பாடு செய்தல் நலமெனத் தோன்றுகின்றது!" என்றுர் இங்கித முதலியார்!

"இன்னும் என்ன ஏற்பாடு இருக்கின்றது!" என்று அரை வெறுப்பாய் அற்புத முதலியார் பேசினுர்.

"ப்ரதர், நீங்கள் அப்படி வருத்தப்படலாகாது ப்ரதர்! எல்லாம் ஈசன் விட்டசெயல்! நடந்தது நடந்து போயிற்று! ப்ரபுதாஸனுக்கும் பாரிஜாதத்திற்கும் திருமணம் முடிக்கவேண்டியது உரிய கடமையாயிருக்கின்றது" என்றுர் இங்கித முதலியார்.

"ஆமாம் ப்ரதர்! அத்தான் என்ன சொல்வாரோ!" என்றுர் அற்புத முதலியார்.

"அற்பசி மாதமாயிருக்கின்றதே!" என்றுர் ஆடம்பராசாரி!

---

* சாத்காலம்=மழைகாலம்.

"அதற்குப் பாதகமில்லை! அற்பசி கார்த்திகைகளில் கல்யாணம் நடக்கிறதில்லையா! பெரும்பாலும் கல்யாணங்கள் சித்திரை வைகாசிகளில் நடந்து விட்டாலும், அசந்தர்ப்பங்களால் தடைபட்டுக் கொண்டிருந்த விவாகங்கள் அற்பசி கார்த்திகைகளில் நடப்பதை நாம் கண்டதில்லையா! ஆதலால், இந்த விஷயத்தில் அந்த ஆக்ஷேபனை வேண்டுவதில்லை." என்றார் இங்கித முதலியார்.

"உங்களுக் கெல்லாம் இஷ்டமிருக்கும் பக்ஷத்தில் எனக்கும் ஒன்றும் ஆக்ஷேபனையில்லை" என்று சொல்லி விட்டார் ஆடம்பராசாரி!

"பெண்ணுக்கும் பிள்ளைக்கும் கூட சம்மதியிருக்கிற தென்பதை நான் தெரிந்துகொண்டேன்! அத்தானும் உத்தரவு அகமகிழ்ந்து கொடுத்து விட்டார்! ஆதலால், ப்ரதர் அற்புதமுதலியார் தான் உடனே ஆகவேண்டிய ஏற்பாடுகளை அவசரத்தோடு முடித்தல் வேண்டும்! எனக்கென்ன வேலைகொடுத்தாலும் கணத்தில் முடிக்கக் காத்துக்கொண்டிருக்கிறேன்" என்று இளித்துக்கொண்டே சொன்னார் இங்கித முதலியார்!

"எல்லாம் நீங்கள் தான் ஏற்பாடு செய்யவேண்டும் ப்ரதர்! என்ன செலவாகிறதோ எடுத்துக்கொடுக்கக் காத்துக்கொண்டிருக்கிறேன்! வேறு விஷயம் என்னை ஒன்றும் கேட்காதீர்கள்" என்று சொல்லி விட்டார் ஈனத்தனத்தில் இருபங்கு நீங்கி அகங்களித்திருந்த அற்புத முதலியார்!

ஆயிற்று! கல்யாணத்திற்கு வேண்டிய கம்பீரமான ஏற்பாடுகள் கணக்கு வழக்கில்லாமல் நடந்து விட்டன! முகூர்த்ததினத்தில் பூரணசந்திரன்போல் பொன்னொளி பரப்பி மின்னிக்கொண்டிருக்கிறாள் யாருமிணையில்லாத பாரிஜாதம்! உண்மையான உதாரகுணத்திலும், மேதக்க பார்வையின் மேலான தோற்றத்திலும் ப்ரபுதாஸனுக்குச் சமானம் பிரபஞ்சத்திற் கிடையாது! இந்த கல்யாணம் இருவர்க்கும் முடிந்தது இயற்கைசெய்த இனிய பாக்கியமே என்று ஒவ்வொருவரும் பேசி உளம் மகிழ்ந்துகொண்டிருந்தார்கள். முதலில் பெண்ணுக்கு இஷ்டமில்லையாம்; பிறகு கல்யாணப் பிள்ளையின் பெருமையையும் மேன்மையையுங் கண்டு, மனதை மாற்றி மணம் புரியவிரும்பினாள் மாதரசியாகிய பாரிஜாதம் என்று ஊரெங்கணும் பேசி உளங்களித்துக்கொண்டிருந்தார்கள். இரண்டை நினைத்ததிற்கு ஒன்றாயினும் தன்னெண்ணப்படியே தலைக்கட்டிற்று என்று நல்லம்மாளுக்கு

மனமகிழ்ச்சி நலமாக நேரிட்டிருந்தபோதிலும், வெளிக்கு மாத்திரம் இளுப்பிக்கொண்டே, "என்னமோ! நான் நினைத்தது ஒன்று, நடந்தது ஒன்று! அந்த தறிதலைப்பையன் அடங்கி ஒடுங்கி சொன்னபடி கேட்டிருந்தால், இந்தப்படி கண்மணிக்கு எந்தசாவும் வந்தேயிருக்காது! தலைவிரித்தாடினான், அலங்கோலமாயிற்று!" என்று நல்லம்மாள் வனஜாஸனனை நாவாரத் தூற்றிக்கொண்டிருந்தாள்!

"அம்மா நீ ஏன் வெறுத்துக்கொள்ளுகிறாய்! கண்மணி பாவம் கண்மணி தொலைத்துக்கொண்டு போனது! அண்ணாத்தை சங்கதிக்கும் அதற்கும் ஏன் முடிபோடுகிறாய்! அண்ணாத்தை நாட்டைச் சம்பாதித்து, மஹா ராஜா·வாகவந்து சேர்ந்தார்களே! அதற்கென்ன சொல்லுகிறாய்! நீயுந்தானே அதை அனுபவிக்கப் போகிறாய்? ஏன் வீணாக வருத்தப்படுகிறாய்! சுள்ளாப்புப் பேச்சைச் சும்மா பேசிக்கொண்டிருந்தால், அண்ணாத்தை கேட்கின் மனவருத்த மடைவார்கள்!" என்று பாரிஜாதம் கோபித்து நல்லம்மாளுக்கு நன்மை கூறினாள்!

எல்லாச் சிங்காரிப்பும் அனைத்தாகும் அலங்கரிப்பும் இங்கித முதலியார் ஏற்பாட்டாலும் அற்புத முதலியார் செலவாலும் அழகாக முடிந்து ஆனந்தகரமாக விளங்கின! அவ்வூரிலுள்ள ஜமீன்தாரர்களும் மிராசுதாரர்களும், உத்யோகஸ்தரும் பெரிய மனிதரும் வித்யாவல்லபர்களும் கவிதாஸ்ரேஷ்டர்களும் திருமண மண்டபத்தில் திருத்தமா யுட்கார்ந்தார்கள்!

கல்யாணப் பிள்ளையையும் கல்யாணப் பெண்ணையும் திருமண வாசலில் பெருமிதமாயுட்காரவைத்து, கெத்தைப் புரோகிதர்கள் ஹோமம் வளர்த்திக்கொண்டிருக்கிறார்கள்! "சூர்யக்ரஹாய நம:, சூர்யக்ரஹ அதிதேவதாய நம:, சூர்யக்ரஹப்ரதிதேவதாய நம:; சந்திரக்ரஹாய நம:, சந்திரக்ரஹ அதிதேவதாய நம:, சந்திரக்ரஹப்ரதிதேவதாய நம; சனீஸ்வரக்ரஹாய நம:, சனீஸ்வரக்ரஹ அதிதேவதாயநம:, சனீஸ்வரக்ரஹ ப்ரதிதேவதாய நம:" என்று காகங்களாய்க் கத்தி குடங்களாய் நெய்யை ஊற்றிக்கொண்டிருக்கும்போது, தெருவில் எழுந்தது பெரிய கூக்குரல்! கத்தின பிராமணாள் கப்பென்றடங்கினார்கள்; உட்கார்ந்து சிசிறிக்கொண்டிருந்தவர்கள் ஓடிவந்து தெருவில் நின்றார்கள்! ஆடம்பராசாரியும் அற்புத முதலியாரும் இங்கித முதலியாரும் இரண்டு பிராமணார்களும், கல்யாணம்

பார்க்கவந்த கனவான்களெல்லாரும் தெருவில்வந்து திகைத்து நின்ருர்கள்! இதற்குள் பத்துப்பெயர் எங்கிருந்தோ ஓடிவந்து,

"ஆடம்பராசாரியாரே, அற்புத முதலியாரே, என்ன வென்று சொல்வோம் இந்த சங்கடத்தை! அதோ பாருங்கள் அந்தமைதானத்தின் வழியாக! செந்தூள் கருந்தூள் ஆகாயமட்டும் எழும்புகிறது, ஆகாத்தியம் விளைக்கும் ராணுவக்கூட்டங்கள் குதிரைக்கூட்டங்கள் கோபாவேசத்தோடு ஓடிவருவதாலென்று ஏற்படுகிறது. நேற்று இருபதுமைலுக்கப்பால் கூடாரமடித்து அவர்கள் கூட்டங் கூடியிருந்தார்களாம்! அங்கிருந்துவந்த சிலர் ஆடம்பராசாரிக்கு ராஜ்யங் கொடுத்த அரசன் மறுபடியுங் கலகக்காரர் பேச்சைக்கேட்டுக் காணிகூட கொடாது கைதிகளாக அனைவரையும் பிடித்துக்கொண்டு போவதற்குச் சைனியத்தோடு கேரளராஜன் வருகிருனென்று வதந்திவந்தது! இஃது என்ன அகாதமோ, என்னகாலக் கொடுமையோ ஒன்றுந் தெரியவில்லையே!" என்று கவலையோடு கூறிக் காத்துக்கொண்டிருந்தார்கள்!

ஆடம்பராசாரியும் அற்புத முதலியாரும் ஆணும் பெண்ணும் அடங்கலும் கல்யாணவீடு முழுதும் பட்டபாடு பரமனுக்குத்தான் தெரியும்! கல்யாணவீடு கலவை வீடாய் விட்டது!

இப்படி அல்லோல கல்லோலம் எங்கு பார்த்தாலும் இடர் விளைத்துக்கொண்டிருக்கும்போது, வந்தன சேனைகள், முழங்கின பேரிகை! ஜனக்கூட்டமும் சிப்பாய்க் கூட்டமும் எங்கு பார்த்தாலும் நெருங்கி எங்குமில்லாத கலவரத்தை என்றுமில்லாதபடி இயற்றி விட்டன! கலவரமும் கூச்சலும் 'காபரா'வும் கலக்கமும் ஓய்வதற்கு ஒருமணி நேரமாயிற்று! அதன் பிறகு வந்தவர்களின்னுரென்று வண்மையாகத் தெரிந்தது!

பிரம்மராக்ஷத னிறந்த பிறகு அனைவரும் கேரள தேசத்தரசனிடம் வந்து, ராக்ஷதரைக் கொல்வதற்கு அவன் சேனையனுப்பிய உண்மை அன்பிற்கு உண்மைவந்தனம் செலுத்தினுர்கள். கேரள தேசத்தரசனிடம் வனஜாஸனன் முதலியவர்கள் எல்லாச் சமாசாரங்களையும் ஒன்று கூட ஒளியாமல் கூறியிருந்தார்களானதால், கேரளராஜன் எல்லா விவரங்களையும் தெரிந்துகொண்டு, மனமோஹன மாணிக்கம் முதலானவர்களுக்கு நடந்த விஷயங்களை யெல்லாம் நான்கு நாழிகை கூற, அதன் பிறகு எல்லோருமாய்ப் புறப்பட்டு கொங்குதேசஞ்சென்று மனமோஹன மாணிக்கம் தகப்பனுராகிய

குலசேகரப்பிரானுக்கு ஆதியோடந்தமாக அவைவற்றையும் தெரிவித்து ஆறுதல் செய்து, எல்லோருமாகப் புறப்பட்டு அலங்காரபட்டணத்திற்கு அவசரத்தோடுவந்து சேர்ந்தார்கள் என்னும் சங்கதி தெரிய இரண்டு மணி நேரமாய் விட்டது!

இதன் பிறகு எல்லோரும், ஒன்று சேர்ந்து, கல்யாணத்தைக் கண்யத்தோடு நடத்தினார்கள்! மனமோஹன மாணிக்கமே எல்லா மரியாதைகளையும் மிக்க மகிழ்ச்சியோடே வந்தவர்களுக்குத் தந்தருளினாள்!

அடுத்தாற்போலே, வனஜாஸனனுக்கு, அபிஷேகஞ் செய்வித்து அரசுரிமை கொடுத்தருள, இரண்டரசர்களும் எல்லாருமாக யோசித்து ஆனந்த நகரத்திலே ஆச்சர்யப் பந்தலமைத்து, நல்ல தினத்தில் நல்ல நாழிகையில், பட்டாபிஷேகஞ் செய்து கேரளராஜன் கூறியபடி, வனஜாஸனன் பழைய ராஜ்யத்தைத்தற்போது ஆண்டுகொண்டிருக்க வேண்டுமெனவும், கேரளராஜனுக்குப் பிறகு அவன் சுயதேசத்தையும் வனஜாஸனனே வண்மையாக ஆண்டு கொண்டிருக்கவேண்டுமெனவும் பகிரங்கப் படுத்தினார்கள்.

மனமோஹன மாணிக்கத்தின் தந்தையாராகிய குலசேகரப் பிரானும் தன் ராஜ்யத்தின் ஒருபெரும் பாகத்தைத் தன் மகளுக்காகத்தந்து அதையும் வனஜாஸனன் ஆண்டு வரவேண்டுமெனவும் ஆசி கூறினான்!

வனஜாஸனனும் மனமோஹன மாணிக்கமும் நவரத்னச் சிம்மாதனத்தில் நன்றாக உட்கார்ந்த நலத்தையும் அழகையும் நாகரீகத்தையும் சிங்காரத்தையும் கண்டு, வந்த ஜனங்கள் வாழ்த்துப்பாடி, "ஆஹா! அழகென்றால் இஃதன்றோ அழகு! ஆகாயத்தில் பௌர்னமியன்று ஒரு சந்திரனைக் காண்கிறோம்! இங்கு நாம் எந்நாளும் ஒரே ரீதியாக இரண்டு சந்திரர்களை இடை விடாமற் காண்கிறோம், என்ன ஆச்சர்யம்!" என்று இதயங்களித்தார்கள்.

பட்டாபிஷேக மானதும் மஹாராஜாவாகிற வனஜாஸனன், தன் மைத்துனனாகிய ப்ரபுதாஸை பிரதான மந்திரியாக அமைத்துக் கொண்டதுமன்றி, சத்தியத்திற்காகப் பாடுபட்ட அப்பளாசாரி ஆமவடை ஆசாரி இருவர்களுக்கும் பெரிய ஜாகீர்கள் தந்தருளினான்!

இங்கித முதலியார் விளையாட்டாகவே எழுந்து, "ஸ்வாமீ, ப்ர ஸாதம் ஸ்வல்பமாத்ர மிருப்பதாலே ஹஸ்தலாகவத்திற்கு ஸாத்திய மன்னு என்று அவஸ்தைப் பட்டீர்களே! இனிப்ரஸாதம் சால விசேஷமாகக் கிடைக்கும்! பயப்படாதீர்கள்!" என்றுகூறி எல்லா ரையும் சிரிக்கவைத்தார்.

இங்கித முதலியார் ஸ்ருங்கார நடத்தையை மாத்திரம் வைத்துக்கொண்டு, தகாதநடக்கையை அறவே ஒழித்து விட்டு, ஜகன் மோஹன சிங்காரத்தோடு இனிய விதமாக இல்வாழ்க்கை நடாத்து வாராயினர்!

பட்டாபிஷேகமான பின்னர் வனஜாஸனன் தனது பிரஜைகளையெல்லாம் ஒரு கூட்டம் சேர்ப்பித்து, தமிழ்ப்பாஷையை விர்த்தி செய்யவேண்டும் விதத்தைப்பற்றி வெகுவாய் உபந்யஸித்தான்:

"எனது பிரஜைகளே! நீங்கள் உங்களுடைய சொந்த பாஷை யாகிய செந்தமிழை உன்னத நிலைக்குக்கொண்டுவந்து உயர்வு படுத்துதல்வேண்டும்! உங்கள் பாஷையையும் உங்கள் இலக்கியத்தையும் உன்னத நிலைக்குக்கொண்டுவர ஊக்கசப்பீரேல், வேறெந்தச் சீர் திருத்தமும் பேருக்காயினும் நடவாது! அறிவுவளரா விட்டால், அடுத்தவை இன்னவென்றும் ஆகாதவை இன்னவென்றும் யாருக்குத்தான் தெரியவரும்! ஆகையால் இலக்கியத்தை அழகாக வளரச் செய்வதே அனைவருடைய கடமையாகின்றது! நம்பாஷை தமிழ்! அத்தமிழ் அற்பசொற்பமானதன்று! அமிழ்தினு மினிய தமிழ் மொழி! அஃது,

கண்டென வினிக்குமொழி கம்பன்சொல் சிறக்குமொழி
காதலித்தோர் மனத்தை யெல்லாம்
விண்டென வுருக்குமொழி வீறுடனே பெருக்குமொழி
வில்லிபுத்தூர்க் கோதை மொழியே
உண்டென வுணர்த்துமொழி மூவர்மொழி நால்வர் மொழி
குருகூர னுரைத்த மொழியோ
பண்டெனமெய்ப் பழுத்தவர்க்கு வேதாந்தப் பழங்காட்டிப்
பரகதியி னுய்க்கு மொழியே

இந்த தமிழ்மொழியை எந்த விதமாக வளர்ப்பதென்று இந்த நூலாசிரியராகிய பக்தவத்ஸலம், பி. ஏ. என்பார் மாட்சிமை தங்கிய மஹா சக்ரவர்த்தியாரது சென்னைக் கலாசாலையில் மஹாப்பிரசங்க

மொன்று மாண்புடன் செய்ததில், ஏற்றவழிகளை எடுத்துக் காட்டினர்!

'செந்தமிழ்ப் புதுவள நந்தனவனவியல்' என்னும் அந்த அரிய பிரசங்கத்தில் உரியவழிகளை உண்மையாய்க் காட்டியிருப்பதை ஒவ்வொருவரும் உய்த்துணர்தல் வேண்டும்! செந்தமிழிலக்கியம் ஏற்கவே சுந்தர நந்தவனமாகச் சொகுசாயிருக்கின்றது! அதில் பஞ்சகாவியங்கள் ஐந்து விருக்ஷங்களாகவும், கம்பராமாயணம் ஓர் ஆலவிருக்ஷமாகவும், வேறு காவியங்கள் வெவ்வேறு செடிகளாகவும் பற்பல விதமாக வர்ணிக்கப்பட்டிருக்கின்றன!

இன்னும் இப்போது காணப்படும் நவீன ஸைன்ஸ் புத்தகங்களும், நவீன இலக்கியங்களும், சரித்திரப் புத்தகங்களும், தத்துவ ஆராய்ச்சிகளும் தமிழ்ப்பாஷையில் தலைகாட்டுமாயின், அந்தத்தோட்டம் அழகினுயர்ந்து, மயில்கள் ஒருபுறம் ஆடவும், குயில்கள் ஒரு புறம் பாடவும், மைனுக்குருவிகளும் நைடிங் கேல்களும், இனிய குரலால் மதுரம் பயக்கவும், கௌஸ்லிப்புகளும் டாப்போடில்களும், லிலிக்களும் ரோஜாக்களுமாக நமது பூங்கா ஓங்குவதைக்கண்டு அனைவர் மனத்திலும் ஆனந்த முண்டாகுமென்று அவர் கூறினர்.

இன்னொரு உபந்யாஸத்தில் இந்த கிரந்த கர்த்தாவே, தர்மங்களெல்லாவற்றிலும் கல்வித்தர்மமே கனம்பெற்றதாகும், கண்தெரிய வைப்பதே கண்ணியமானதென்று அபிப்பிராயங் கூறி, அவ்வாறு செய்வீர்களாயின் அறமென்பது அழகடையும், அப்போது தருமத்தடாகத்தில் தங்கத்தாமரைபூத்து, தருமவிருக்ஷத்தில் தங்கப் பழம் பழுத்து தருமக்கோபுரத்தில் தங்கக் கலசமும் நடுவே நவரத்னக்கலசமும் நன்ருக விளங்கும் என்று கூறினர்!

ஆதல் பற்றி, நீங்களனைவரும் சொந்த பாஷையை ஆதரித்து, சொந்த இலக்கியத்தைச் சந்ததமும் விர்த்தி செய்யுங்கள்—அஃதே எல்லா நன்மைகளையும் விளைக்கும், அதனலே தான் எல்லாப் பெருமைகளும் உண்டாகும், அதைப்பற்றித்தான் எல்லாச் சீர்திருத்தங்களும் செம்மையாய் வேரூன்றும்" என்று வனஜாஸன மஹாராஜா வெகு ஜனசமூகங்களுக்கும் விண்ணப்பஞ்செய்து கொண்டார்.

* * *

ஒரு நாள் உன்னதமான உப்பரிகைமேல், பன்னகசயனன் படுத்திருப்பதுபோல், ஆடம்பராசாரி, அழகான சோபாவில் அலங்

காரமாய்ப் படுத்துக்கொண்டிருந்தார்! நல்லம்மாள் ஒருபுறம் நல்ல குணத்தோடு நின்று கொண்டிருந்தாள்!

ஆடம்பராசாரி, முகத்தைத் தடவி, மீசையை முறுக்கி,

"நல்லு! நான் கேட்பதற்குப் பதில் சொல்லு, உன் மருமகளை ஊரெல்லாம் புகழ்கின்றார்களே! உன் மருமகள் என்னமாயிருக்கிறாள்?" என்று கேட்டார்.

"இருக்கிறாள்!" என்று வெறுப்பாகச் சொன்னாள் நல்லம்மாள்!

"'இருக்கிறாளா'? இந்தயோகம் கிடைத்தும் 'இருக்கிறாளா?' இன்னும் ஒருத்தி என்னமாய்த் தானிருப்பாள்? ஹா ஹா ஹா!"

மனமோஹன மாணிக்கம்

முற்றுப்பெற்றது.

---

## மங்களப்பாட்டு.

திருவளர் தென்மொழி தினம்வளர் மென்மொழி
திண்ணிய நன்மொழியே
உருவளர் பாடல்க ளுரம்வளர் நாடக
முத்தம நாவலுமே
கருவள ரிருண்மனக் கசடறு நன்மனக்
கடிமண நூல்களுமே
மருவளர் தமிழ்மொழி மன்னிட வளர்மொழி மங்களமே
மாண்புறு பெருமொழி மன்னவ ரருமொழி மங்களமே.

---

இங்கிதந் தனக்கு மங்களம் இசையி னொலிக்கு மங்களம்
பொங்குநற் றமிழ்க்கு மங்களம் பூவினற் புகழ்க்கு மங்களம்
தங்குநூ லிதற்கு மங்களம் தாவுசீ ரதற்கு மங்களம்
அங்கைசே ருரைக்கு மங்களம் ஆர்வங்கொண் டவர்க்கு
மங்களம்

S. JOSEPH'S
CHAMPION
REEF
TAMIL NOVELS ...ARY